# மெஹர் பிரபு

## (MEHER PRABHU)

**இக்கால அவதார புருஷரின் வருகை**

**(ADVENT OF THE AVATAR)**

# மெஹர் பாபாவின் வாழ்க்கை வரலாறு

## (MEHER BABA'S LIFE HISTORY)

## குறுகிய தமிழாக்கம்

**(TAMIL TRANSLATION - ABRIDGED)**

## தொகுப்பு ஒன்று

## (VOLUME ONE)

**1894 - 1923**

# இறைவனின் அன்பளிப்பு

இடம், காலம், பொருள் இவற்றை இறைவனன்றி வேறு யாரறிவர்? எது, எங்கு, எப்படி, எப்போது நடக்கவேண்டுமோ அதை நடத்துபவனும் அவனே! தனிப்பட்ட மனிதனால் முடிவது கையளவாக இருந்தாலும் கடவுளின் கருணையால் நிகழ்வது கடலளவு. இருந்தும் அனைத்தையும் தனிமனிதன் செய்வதுபோலத் தோற்றமளிக்கச் செய்வது மாயையின் கைவண்ணம்; இதுவே, இந்த இறை நாடகத்திற்கு இறைவன் எழுதிய திரை, கதை, வசனம்.

மெஹர் பாபாவின் வரலாற்றுத் தொகுப்புக்கு உயிரூட்டம் அளித்தவர் அவரே என்றாலும், உருவாக்கம் தந்த நூலாசிரியர், அவருடைய நெருங்கிய மண்டலியில் ஒருவரான,

ஸ்ரீ பாவ் கல்சூரி.

இந்தி மொழியில் கவிதை வடிவில் உருவகம் கொடுக்கப்பட்ட வரலாறு, உரைநடை பாணியில், ஆங்கிலத்தில் ஆக்கம் தந்தவர், மெஹர் பாபாவின் அரவணைப்பில் இருந்த,

ஸ்ரீ ஃபெராம் ஒர்க்கிங்பாக்ஸ்வாலா.

மொத்தத்தில் ஏறக்குறைய 6000 பக்கங்கள், 20 தொகுப்புகள். இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து ஆங்கிலத்தில் வெளியிட்டவர்,


ஸ்ரீ லாறன்ஸ் ரைட்டர்.

இந்த வரலாற்றுத் தொகுப்பு, நாளடைவில், பல மொழிகளில் முழுமையாக அல்லது குறுகிய வடிவில் வெளிவந்துள்ளன. தமிழ் மக்களுக்கும் இது ஒரு பொக்கிஷமாக அமைய வேண்டும் என்ற ஆர்வத்தில் சமர்ப்பணம் செய்பவர்:

**தமிழாக்கம் & புத்தக வடிவமைப்பு:**
கு. ராதாகிருஷ்ணன்
வேலம்மாள் ராதாகிருஷ்ணன்
முகேஷ் சிவகுமார்
நித்யகலா நிர்மல்
பூனா, ஜூலை 2020
✉ vela.radhakrishnan@gmail.com
✆ +91 9225631113

REV:03/22.11.2024

# நூலாசிரியரின் அர்ப்பணிப்பு



எனது பிரியமான தந்தையே,

என் உடைந்த பேனாவால் வரைந்த இந்த தெய்வீக விளையாட்டின் கதை, நம்பிக்கையின் அழகான மலர்களாக வழிந்தோடும் கண்ணீருடன் உங்கள் இனிமையான புன்னகைக்கு அர்ப்பணிக்கப்படுகிறது.

அனைத்தையும் உள்ளடக்கிய ஒருவருக்கு எதைத்தான் கொடுக்க முடியும்? அவருக்கென இல்லாதது எதுவும் இல்லை.

ஆனால், பரிபூரணத்தில் ‘ஒன்றுமில்லாத ஒன்று’ ஓர் அங்கமாக இல்லையா?

அவருக்காக என் இன்பத்தை நான் துறக்க முடிந்தால் அனைத்தும் அர்ப்பணிக்கப்படும்.

இல்லையேல் ஒன்றுமில்லை!

பாவ் கல்சூரி
மெஹராஸாத், 1971

# இறைவனைத் தேடும் உள்ளங்களுக்கு ஓர் உதவிக்கரம்

நீங்கள் கடவுளைத் தேடுவதானால் இதைத் தொடரலாம்; மாறாக, மாயாஜால சக்திகள் அல்லது லௌகீகத்தை நாடுவதானால் இந்தப் புத்தகத்தை மூடிவிடலாம். கடவுளைத் தேடும் உண்மையான பிரியனுக்குத் தேவையான ஒன்று ஞானம்; இறை ஞானம். இது அறிவுக்கும், ஒன்றை உலக வழியில் நியாயப்படுத்தும் முறைக்கும் அப்பாற்பட்டது. '**கடவுள் பேசுகிறார்**' **(**GOD SPEAKS**)** என்ற மெஹர் பாபாவின் புத்தகத்தில், அவர் வழங்கும் கடவுளைக் குறித்த சாராம்சம்:

**"கடவுளை விளக்க முடியாது. கடவுளைக் குறித்து வாதிட முடியாது. அவரைத் தத்துவ கோட்பாடுகளால் எடுத்துரைக்கவோ அல்லது விவாதித்துப் புரிந்திடவோ முடியாது; கடவுளாக வாழ மட்டும்தான் முடியும்.**

**"இருப்பினும், இங்கே கூறப்படும் கடவுளைப் பற்றிய விளக்கங்கள் அனைத்தும், மனித மனத்தின் கொந்தளிப்பைத் தணிப்பதாக இருந்தாலும், இன்னும் பல வார்த்தைகளும் விளக்கங்களும் தேவைப்படுகின்றன, ஏனெனில் உண்மைப்பொருளை உணர்ந்து, தெய்வீகத்தை அடைவதுதான் உண்மை.**

**"அளவிறுதியற்ற, நிலையான பரம்பொருளை அறிவுபூர்வமாக புரிந்துகொள்வது மட்டும் இப்பூவுலகில் வாழும் தனி மனிதனின் குறிக்கோள் ஆகாது, ஏனெனில், உண்மைப்பொருளை ஒருபோதும் புரிந்துகொள்ள முடியாது; அது அறிந்து, உணர்ந்து அனுபவிக்க வேண்டிய ஒன்று. எனவே, பரம்பொருளை உணர்ந்து, மனித உருவில் 'நானே கடவுள்' என்ற நிலையை அடைவதே இறுதி இலக்காகும்."**

மெஹர் பாபாவின் அன்றாட வாழ்க்கை, அவரது பயணங்கள் மற்றும் உலகின் பலதரப்பட்ட மக்களோடு அவர் ஆற்றிய பணிகள் அனைத்தும் மனித மனங்களின் கொந்தளிப்பைத் தணிக்கும் வார்த்தைகளாகவும், விளக்கங்களாகவும் பிரதிபலிக்கின்றன. மெஹர் பாபாவின் வாழ்க்கை வரலாற்றின் ஒவ்வொரு நிகழ்வும், ஏதோ ஒரு வகையில் மானிடனின் வாழ்க்கைப்பாடமாக அமையும் மகிமையை அதனுள் அடக்கியுள்ளது. கடவுள் அவதார புருஷராக இம்மண்ணில் உருவெடுத்து வாழ்ந்த இக்காலகட்டம் மானிட வாழ்வின் பொற்காலம் எனக் கூறலாம்.

மனித மனதின் மகத்தான, மிகப்பெரிய சிந்தனை கடவுள். அவரை அறிந்து, உணர்ந்து அவரோடு ஒன்றிணைவது மனிதனின் இறுதி இலக்கு. இதை நோக்கி மானிடனின் கைகளைப் பற்றிக்கொண்டு, ஆன்மீகப் பாதையில் வழிநடத்திச் செல்லும் **இக்கலியுக வரதன் மெஹர் பாபா** இவ்வாறு கூறினார்:

**“உங்கள் அனைவரையும், நெய்யை உண்ண வைத்து, கோட்டும் காலுறையும் அணிந்த வண்ணம், கடவுளை அடைய வைப்பேன்!”**

வாருங்கள் இந்த வரலாறு காணாத வரலாற்று புத்தகத்தில் பயணம் செய்வோம்…

அன்பின் சமர்ப்பணம்.

# முன்னுரை…

# வழங்குபவர்
# க. வீரமணி, பொது மேலாளர் (ஓய்வு), டாடா மோட்டர்ஸ்

மெஹர் பாபாவின் வாழ்க்கை வரலாறு, தனிமனிதனை ஆன்மீகப் பாதையில் வழிநடத்தும் வாழ்க்கை பாடங்கள். மதம் எதுவாயினும் மனிதனை சரியான பாதையில் திசைதிருப்பும் உண்மை நிகழ்வுகள். இப்படி ஒரு தொகுப்பு அனைவருக்கும் ஒரு பொக்கிஷமாக விளங்கும் என்பதால், அன்றாட நிகழ்வுகளைக் குறிப்பெடுத்து அதனைக் கோர்வையாக புத்தக வடிவில் உருவாக்கம் தரும் அடிப்படை பணியை மெஹர் பாபா, அவருடைய நெருங்கிய சீடருக்கு அளித்தார். ஏறக்குறைய 6000 பக்கங்கள் கொண்ட தொகுப்புகளை உருவாக்குவது, மெஹர் பாபா உள்ளளவில் வழங்கும் உதவியின்றி சாத்தியம் ஆகாது.

எதுவாயினும், இவ்வாறு வெளிவந்த வரலாற்று நிகழ்வுகளைப் படித்து, புரிந்து பயனடைய ஒரு பாக்கியம், ஒரு பிராப்தம், சுருக்கமாகச் சொன்னால் இறைவனின் கருணை மிகவும் இன்றியமையாதது.

மெஹர் பாபா கூறியதற்கிணங்க கடவுள் 700-1400 வருடங்களுக்கு ஒரு முறை, மனித உருவில் மக்களிடையே அவதார புருஷராக பிறவி எடுத்து, மக்களுக்கு மனித பிறவியின் உண்மையான குறிக்கோளையும் அதனை அடையும் வழியையும் எடுத்துக் காட்டுகிறார். அதன்படி, இதற்கு முன்னதாக, ஸொராஸ்டர், ராம், கிருஷ்ணா, புத்தர், ஏசுநாதர், முஹமது நபி அனைவரும் மனித உருவெடுத்து, அவதார புருஷர்களாக, மக்களுக்கு, அந்தந்த காலகட்டத்தில் போதனைகளை வழங்கி, வழிநடத்திச் சென்றனர். இந்த வரிசையில், மெஹர் பாபா இப்போது, இக்கலியுகத்தில் அவதரித்துள்ளார். போதிய அறிவுரைகளை ஏற்கனவே போதித்துவிட்டதால், இந்த அவதார காலகட்டத்தில் மௌனம் கடைப்பிடித்து, மானிடனின் இதயங்களில் இறையன்பை வெளிப்படுத்தும் முறையில் வாழ்ந்து காட்டினார். இவ்வாறு, 1925, ஜூலை 10ஆம் நாள் தொடங்கிய மௌனத்தை, ஏறக்குறைய 44 வருடங்கள், மெஹர் பாபா அவரது பௌதீக உடலை துறப்பதுவரை தொடர்ந்து, தனது அன்பை வெளிப்படுத்தினார்.

“நீங்களும் நானும் கடவுள், ஆனால் நான் கடவுள் என்பதை நான் அறிவேன், அதுபோல நீங்களும் கடவுள் என்ற அறிவை உங்களுக்கு வழங்கவே நான் உங்கள் மத்தியில் வந்துள்ளேன்” என்று மெஹர் பாபா எடுத்துரைத்தார். எல்லா மனிதர்களின் குறிக்கோளும் முடிவில் கடவுளை அடைவதே! அதற்காக மக்கள் பல பிறவிகள் எடுக்கவேண்டும். முடிவில், சத்குரு அல்லது அவதார புருஷரின் உதவியோடு கடவுள் நிலையை அடைய வேண்டும். அதுவே மனித பிறவியின் நோக்கமும், இறுதி இலக்கும் ஆகும்.

சாதாரண மனிதர்களில் ஒரு சிலர் இறைநிலையை அடைந்த பின்பு, மனித உணர்வோடு இப்பூவுலகில் சத்குருவாக வாழ்ந்து, உலக நடப்புகளை

கவனிப்பதோடு, மக்களுக்கு அறிவுரைகளையும் வழங்குகிறார்கள். கடவுள், அவதார புருஷரராக, மனித உருவில் வந்து, மக்களிடையே வாழ்ந்து, அடுத்த 700-1400 வருடங்களுக்கு வேண்டிய அனைத்தையும் திட்டமிட்டு நிலைநாட்டுகிறார். இவ்வுலகில் எப்போதும், எந்த நிமிடத்திலும் ஐந்து சத்குருக்கள் வாழ்கிறார்கள் என்ற ஆன்மீக ரகசியத்தை உலகத்திற்கு முதன்முதலாக எடுத்துரைத்தவர் மெஹர் பாபா.

மேலும், அவதார புருஷர் இவ்வுலகில் வருவதற்கு காரணமாக இருப்பவர்கள் இந்த ஐந்து சத்குருக்களே. இந்த அவதார காலகட்டத்தில் வாழ்ந்த ஐந்து சத்குருக்கள், ஹஸ்ரத் பாபாஜான், நாராயண் மஹாராஜ், தாஜூதீன் பாபா, ஷிர்டி சாய் பாபா, மற்றும் உபாஸனி மஹாராஜ் ஆவர்.

மேர்வான், மெஹர் பாபாவின் குழந்தை பருவ பெயர், சிறு வயதிலிருந்து ஒரு தனிப்பட்ட குணம் படைத்தவனாகவும், சிறந்த ஆன்மீக ஞானம் உடையவனாகவும் காணப்பட்டு, தன் நெருங்கிய நண்பர்களுக்கு இவ்வாறு விளக்கமளித்தான்:

“ஒவ்வோர் ஆத்மாவும் இவ்வுலகில் குறுகிய காலத்திற்கே இருக்கும். நம் நேரம் வரும்போது இவ்வுலகைவிட்டு வெறுங்கையோடுதான் செல்வோம். எந்த நேரத்தில் நாம் தொடரும் பயணத்திலிருந்து பிரிந்து செல்வோம் என்று எவருக்கும் தெரியாது. ஆனால், இன்று அல்லது நாளை நமக்குப் பிரியமான அனைத்தையும் விட்டுச் செல்லவேண்டும்.

“இது தெரிந்தும், இவ்வுலகம் மற்றும் அதிலுள்ள தனக்குச் சொந்தமான எல்லாவற்றிலும் ஆசைப் படுவதும், எப்படியாவது அதைக் கட்டிக்காப்பதும் முட்டாள்தனமாகும்.

“எனவே, இந்தக் குறுகிய வாழ்வில் நாம் ஸொராஸ்டரின் போதனைகளைப் பின்பற்றி நல்லவராக வாழ்வதில்தான் அர்த்தமுள்ளது. நம் மதக்கோட்பாடாகிய ‘நல்ல சிந்தனைகள், நல்ல வார்த்தைகள், நற்செயல்கள்’ இவைகளை ஒழுங்காகச் செயல் படுத்தினால் வாழ்வில் வெற்றிகாண முடியும். மேலும் இவ்வுலக சமாச்சாரங்களிலிருந்து விலகியிருந்தால் வாழ்க்கை வித்தியாசமானதாகவும், சிறப்பாகவும் இருக்கும்.”

மேர்வானின் பள்ளிக்கூட பருவம் முடிந்து, கல்லூரியில் பயிலும் வேளையில் நடந்த அந்த சம்பவம்தான் அவரை அவதார புருஷர் என்ற நிலைக்கு கொண்டுவந்தது.

1914ஆம் ஆண்டு, முதலாவது சத்குரு, ஹஸ்ரத் பாபாஜான் மேர்வானை அழைத்து, அணைத்து நெற்றியில் பதித்த முத்தம் அவருக்கு இறை இன்பத்தை அளித்து ‘நான் கடவுள்’ என்ற நிலையை உணரச்செய்தது.

அடுத்த சிலமாதங்களில் சத்குரு நாராயண் மஹாராஜை சந்தித்த வேளையில், மஹாராஜ் அவரது இருக்கையில் மேர்வானை உடன்

அமரச்செய்து, மாலை அணிவித்து, மாம்பழ ரசம் அருந்த செய்தார். இருவருக்குமிடையே என்ன நடந்தது என்பதை இறைவனே அறிவார்.

அதற்குப் பிறகு, மூன்றாவது சத்குருவான தாஜூதீன் பாபா மேர்வானை அன்போடு அழைத்து, ரோஜா மலர்களை மேர்வான் மீது வீசிய வண்ணம், 'சொர்க்கத்தின் ரோஜா' என்று கூறி அனுப்பி வைத்தார்.

ஷிர்டி சாய் பாபா, அனைத்து சீடர்களின் முன்னிலையில் '**பர்வர்திகார்**' என மூன்று முறை உரத்த குரலில் பறைசாற்றி, தெய்வீக சக்தியை மேர்வானுக்கு வழங்கினார்.

இறுதியாக, ஐந்தாவது சத்குரு உபாஸனி மஹாராஜ், மேர்வானை கல்லால் அறைந்து வரவேற்றது, அந்தக் கல் மேர்வானின் நெற்றியை பாபாஜான் முத்தம் பதித்த அதே இடத்தில் தாக்கி, ரத்தம் சிந்த வைத்தது. இதன் மூலம் மஹாராஜ் இறை ஞானத்தை வழங்கும் பணியைத் தொடங்கினார். அடுத்த ஏழுவருடங்கள் மேர்வான் பெரும்பாலும் மஹாராஜூடன் இருந்தார். 1922 ஜனவரி மாதத்தில், முழு இறைஞானத்தையும் அடைந்து, உலகப்பொறுப்பை ஏற்று, அவதார புருஷராகப் பணிபுரியும் காலகட்டத்தில், மஹாராஜ் “மேர்வான் நீ ஆதிசக்தி” என்று பறைசாற்றி அனுப்பி வைத்தார். இவ்வாறு மேர்வான், மெஹர் பாபாவாக அவரது அவதார பணியைத் 1922 ஜனவரியில் தொடங்கினார்.

முக்கியமான அடுத்தக்கட்ட பணியாக மெஹர் பாபா, தனது வட்டத்து சீடர்களை ஒருங்கிணைத்து, முதன் முதலாக பூனாவில் அமைக்கப்பட்ட குடிலிலும், அதன் பின்னர் ஓராண்டு காலம் மும்பையில் அமைந்த 'மன்ஸில் எ மீம்' பங்களாவிலும் வாழ்ந்து வந்தார். இது முக்கியமாக மண்டலியின் பயிற்சி மையமாக அமைந்தது. இறுதியில் மெஹர் பாபா அவரது அவதார பணியைத் தொடங்க ஆயத்தமானார்.

மிக்க சுவாரஸ்யமான வாழ்க்கை வரலாறு; அதீத ஆர்வத்தைத் தூண்டும் வாழ்க்கை சம்பவங்கள்; ஆச்சரியமூட்டும் அளவுக்கு அற்புதமான நிகழ்வுகள். இது ஆரம்பம்தான். இன்னும் பல பக்கங்கள், பல அத்தியாயங்கள், தொகுப்புகள் - இறைவனின் நாடக மேடையில் நடக்கும் திருவிளையாடல்கள்.

மெஹர் பாபாவின் வரலாற்றுப் புத்தகம் தமிழ் மொழியில் வருவதற்குத் தூண்டுதலாக இருந்த என்னுடைய உள்ளார்ந்த ஆசைகளுக்கு இணக்கம் தெரிவிக்கும் முறையில் எனது நீண்டகால நண்பர் ராதாகிருஷ்ணன் இந்தப் பணியை ஏற்று செவ்வனே செய்து வருகிறார். இது மெஹர் பாபாவின் விருப்பம் நிறைவேறும் வகையில் அமைந்துள்ளது என்பதை நான் இதன் மூலம் உறுதிப்படுத்தக் கடமைபட்டுள்ளேன்.

இது பயணத்தின் தொடக்கம்தான், இன்னும் பல்லாயிரம் பக்கங்கள் பயணிக்க வேண்டும். மெஹர் பாபாவின் அன்பும், ஆதரவும், ஆசிகளும் நம் அனைவரிடமும் நிலைத்திருக்க எம்பெருமானை பிரார்த்தனை செய்வோம்.

## வழங்குபவர்
## எம். தனபால், முதன்மை மேலாளர் (ஓய்வு), கனரா வங்கி

இந்த பாரத பூமி புனிதமும், புண்ணியமுமானதாகும். பல அவதாரங்களும், இறை மனிதர்களும், புண்ணிய புருஷர்களும் பல்வேறு காலகட்டங்களில் தொன்று தொட்டு தோன்றிய வண்ணம் இருக்கிறார்கள். அப்படி, பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில், மஹாராஷ்டிராவில் பிறந்த அவதார புருஷர், மெஹர் பாபா ஆவார். கிட்டத்தட்ட இருபதாம் நூற்றாண்டின் இறுதிவரை (1894--1969) எழுபத்தைந்து ஆண்டு வாழ்ந்த அவர் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் இறைப்பணி ஆற்றிய புனிதர். அவர் ஒரு கருணைக்கடல். அளவிட முடியாத அன்பின் அவதாரம். அவரது வாழ்க்கை வரலாறு அனைவரையும் சென்றடைய வேண்டும் என்ற உயரிய நோக்கத்திற்காக, தமிழில் எழுதப்பட்ட முதல் முயற்சியே இந்தப் புத்தகம். ஸ்ரீ பாவ்கல்சூரி என்பவர் இந்தி மொழியில் எழுதிய மெஹர் பாபாவின் வரலாறு இப்போது, இப்புத்தகத்தின் ஆசிரியர் திரு. ராதாகிருஷ்ணன் அவர்களால் தமிழாக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ராதாகிருஷ்ணன் அவர்களை முப்பதாண்டுகளுக்கும் மேலாக நான் அறிவேன். மெஹர் பாபாவின் மேல் அவருக்கிருக்கும் பக்தி அலாதியானதும், பரிசுத்தமானதும் ஆகும். பாபாவின் வரலாறு, அவரது போதனைகள், பாபா எழுதிய புத்தகங்கள் அனைத்தையும் படித்தறிந்தவர். டெல்கோ, பூனா நிறுவனத்தில் பொதுமேலாளராக பணிபுரிந்து கொண்டே மெஹர் பாபாவின் புகழ் பரப்பும் பணியில் தன்னை வெகுவாக ஈடுபடுத்திக் கொண்டவர். பணி ஓய்வு பெற்ற பிறகு, பாபாவின் அவதார வாழ்க்கை நோக்கங்களையும், நிகழ்வுகளையும், போதனைகளையும் உள்ளடக்கிய ஒரு நூல் தமிழில் இதுவரை இல்லாத காரணத்தினால், தணியாத தாகம் கொண்டு, மெஹர் பாபாவின் ஆக்ஞையால் உந்தப்பட்டு எடுத்துக் கொண்ட முயற்சிகளின் பலனாக, இந்தப் புத்தகத்தின் முதல் தொகுப்பு, நமது கரங்களில் இப்போது தவழ்கிறது.

தமிழாக்கம் எனினும் அது தனித்துவமாக இருந்திட வேண்டும் என்று அவர் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டது, இந்த வாழ்க்கை வரலாற்றை வாசிக்கும் போது நமக்குப் புலனாகிறது.

இறைவனைத் தேடும் உள்ளங்களுக்கு இப்புத்தகம் ஒரு வழிகாட்டி என்பதை ஆசிரியர் ஆரம்பத்திலேயே கூறி விடுகிறார். சாதாரண மனிதனாக இருந்து கொண்டே, தன்னை உணர்ந்து, மற்றவர்களின் மீது அன்பு கொண்டும், இறைவனை நம்பிக்கையுடன் நேசித்தும், அவருடன் ஒன்றுபடுவதுதான்,

மனிதன் கடவுளாக மாறுவதற்கு வழி என்ற பாபாவின் போதனையை ஏற்பவர்களுக்கு, இந்தப் புத்தகம் வழிகாட்டுகிறது. மாயாஜால அற்புதங்கள் எதனையும் நிகழ்த்தாத அவதாரம் மெஹர் பாபா. காலத்திற்கேற்ப கருத்துக்களைச் சொல்லி, மனிதன் நல்லவனாகவும், பண்பட்ட இதயம் படைத்தவனாகவும் மாறி, இறைவனை உணர்ந்து, இறைவனாவதற்கு வழிகள் என்ன என்பதை போதித்தவர். மெஹர் பாபாவின் அவதாரம் எந்த அசுரனையும் வதம் செய்வதற்காக ஏற்பட்டதல்ல. மனிதனுக்குள் இருக்கின்ற அசுர குணங்களை ஒழித்து, நற்குணங்களையும், அன்பையும் விதைத்து, அவன் தன்னை உணர்வதற்காக நல்வழிப்படுத்தியவர். கடவுளுடன் ஒன்றுபடுவது எப்படி என்பதை உணர்த்திய அவதார புருஷர். எந்த வித மதக் கோட்பாடுகளும், சடங்குகளும் இல்லாமலேயே மனிதன் கடவுளாக மாற வழிகாட்டியவர். உண்மையான சந்தோஷம், பிறரை சந்தோஷப்படுத்துவதில் தான் உள்ளது என்பதே அவரது முக்கிய போதனை.

இந்த முதல் தொகுப்பு, மெஹர் பாபாவின் பெற்றோர்கள் பற்றியும், பாபாவின் பிறப்பு, அவரது இளமைப் பருவம், ஐந்து சத்குருக்கள், அவர்கள் மேர்வான் எனப் பெயரிடப்பட்டவரை அடையாளம் கண்டு ஆசீர்வதித்து, அவருள் இறையுணர்வு ஏற்படுத்தியதையும், பின்னாளில் மேர்வான், மெஹர் பாபாவாக உருவான விதத்தையும், பாபாவின் பல்வேறு வாழ்க்கை நிகழ்வுகளையும், பாபாவின் ஆரம்பகால இறைப்பணிகள், மண்டலி எனப்பட்ட அவரது சீடர்கள் உருவான விதம், இவைகளைப் பற்றியெல்லாம் கோர்வையாக நேர்த்தியுடன், மூலப்புத்தகத்தின் சுவை குன்றாது மொழி பெயர்த்து, தமிழாக்கம் செய்தவிதம் சிறப்புக்குரியது. இப்புத்தகம் திரு. ராதாகிருஷ்ணன் அவர்களது முதல் முயற்சி என்பதையே நம்பமுடியவில்லை. பல புத்தகங்களை தமிழாக்கம் செய்த அனுபவம் போன்று அவரது எழுத்துக்கள் மிளிர்கின்றன. அது மெஹர் பாபாவின் கருணையின்றி சாத்தியமில்லை.

அவதார் மெஹர் பாபா அன்பின் மஹாசமுத்திரம். பிரபஞ்சத்தின் அடையாளமாக வாழ்ந்த அவரது வாழ்க்கை வரலாற்றை தமிழாக்கம் செய்வதென்பது, எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை அடையும் இமாலய சாதனையைப் போன்றதாகும். எனது நண்பர் திரு. ராதாகிருஷ்ணன் அவர்களது துணிவு, இந்த இலக்கை நோக்கி பயணித்ததன் அடையாளமே இந்த வாழ்க்கை வரலாறு புத்தகத்தின் முதல் தொகுப்பாகும். அவதார் மெஹர் பாபாவின் அருள், அவரை வழிநடத்தி பாபாவின் வாழ்க்கை வரலாற்றின் மற்ற தொகுப்புகளும் தமிழாக்கம் செய்யப்பட்டு, இந்த இமாலய சாதனையை வெற்றி கொள்ள வைக்கும் என்பதில் எனக்கு ஐயம் ஏதுமில்லை.

வாருங்கள். ஒரு அலாதியான ஆன்மீக அனுபவத்தை அடைய உங்களை தயார்படுத்திக் கொள்ளுங்கள்.

# நிகழ்வுகளின் காலவரிசை

**1894**
- பிப்ரவரி 25, மேர்வானின் (மெஹர் பாபாவின்) பிறப்பு
- தந்தை ஷெரியார் (1853 - 1932), தாயார் ஷிரீன் (1877 - 1943)

**1913**
- ஹஸ்ரத் பாபாஜான் (1790 - 1930) - மேர்வானின் முதல் சந்திப்பு
- மேர்வானின் இறை உணர்வு

**1915**
- சத்குரு நாராயண் மஹாராஜ் (1885 - 1945) - மேர்வானின் முதல் சந்திப்பு

**1915**
- ஹஸ்ரத் தாஜுதீன் பாபா (1861 - 1926) - மேர்வானின் முதல் சந்திப்பு

**1915**
- சத்குரு சாய் பாபா - ஷிர்டி (1838 - 1918) - மேர்வானின் முதல் சந்திப்பு - சாய் பாபா, மேர்வானை 'பர்வர்திகார்' என்று பறை சாற்றியது

**1915**
- சத்குரு உபாஸனி மஹாராஜ் (1870 - 1941) - மேர்வானின் முதல் சந்திப்பு

**1920**
- ஸையத் ஸாஹேபின் நாஸிக் இல்லத்தில் பூனா மண்டலியின் முன்னிலையில் 'மெஹர் பாபா' என்ற பெயர் சூட்டப்பட்டது

**1922**
- ஜனவரி, உபாஸனி மஹாராஜ் மேர்வானை 'ஆதிசக்தி' (அவதார புருஷர்) என்று பறை சாற்றியது

**1922**
- ஜனவரி 27 - மே 21: அவதார புருஷரின் ஆரம்ப கால வாழ்க்கை - பூனா, ஃபெர்குஸன் கல்லூரி அருகில் அமைந்த குடில்

**1922**
- மே 21 - 29: மெஹர் பாபா 45 மண்டலியுடன் மும்பையை நோக்கி நடைபயணம்

**1922**
- 1922, ஜூன் 6 - 1923, ஏப்ரல் 19: மன்ஸில்-ஏ-மீம் - ஆரம்ப கால பயிற்சி மையம்

**1923**
- தொடரும்...

# பொருளடக்கம்

சத்குருக்கள்........................................................................ 3

ஹஸ்ரத் பாபாஜான், மாமன்னர்............................................... 6

நாராயண் மஹாராஜ், இதயத்தின் அதிபதி...................... 9

தாஜுதீன் பாபா, தீர்க்கதரிசியின் மகுடம்......................... 13

சாய் பாபா, இறையடியார்.......................................................... 15

உபாஸனி மஹாராஜ், யோகிகளின் அரசன் ................. 20

ஷெரியார் & ஷிரீன் - மெஹர் பாபாவின் தந்தையும் தாயும்................................................................................................. 25

மேர்வானின் இறையுணர்வு.................................................... 46

சீடர்களின் வட்ட உருவாக்கம்............................................... 137

மன்ஸில்-எ-மீம், ஆரம்பகால பயிற்சி மையம்........... 169













# சத்குருக்கள்

**(Perfect Masters)**

1954ஆம் ஆண்டு மெஹர் பாபா கூறியதாவது:

**உலகில் மிகப்பெரிய மனம் கவர்ந்த கள்வர்கள் யாரெனில், அவரவர் காலகட்டத்தில் வாழும் ஐந்து சத்குருக்கள் ஆவர்.**

**அவர்கள், அடிக்கடி, மக்களின் இதயங்களைக் திருடுகின்றனர், அவ்வப்போது என்னையும் திருடி உங்கள் மத்தியில் கொண்டு வருகின்றனர்.**

**நானும்** (அவதார புருஷனாக) **அப்படியே ஆகிவிடுகிறேன்; ஒவ்வொரு முறையும், இந்த ஐந்து சத்குருக்களே அதற்கு வழிவகுக்கின்றனர்.**

**நான், எங்கு, எப்போது மனித ரூபத்தில் பிறந்தாலும்,** (பாரசீகம், இந்தியா, நேபாளம், இஸ்ரேல், அரேபியா...) **அதற்கு இந்த ஐந்து சத்குருக்கள் மட்டுமே காரணம்.**

**நான் எனது விருப்பப்படி வருவதில்லை.**

**எப்போதும் இந்த ஐந்து சத்குருக்கள், என்னை மனித ரூபத்தில், அந்தந்த அவதார காலகட்டத்தில் பூமிக்குக் கொண்டு வருகின்றனர்.**

**பிரபஞ்சத்தின் திறவுகோல் இந்த ஐவரிடம் இருக்கும்; பிரபஞ்சம் எண்ணிலடங்கா உலகங்களை உள்ளடக்கும்.**

**மனிதன் கடவுளாக முடியும் - அவ்வாறு கடவுளாகும் மனிதன், சத்குருவாக முடியும். நான் இவ்வுலகில், மனிதனாகத் தோற்றமளிப்பதற்கு, இவ்வைந்து சத்குருக்களே காரணம்.**

**அவர்கள் என்னை இவ்வுலகிற்குக் கொணர்ந்து, 'எல்லாமும் நானே' என்ற அனுபவத்தை எனக்கு வழங்குகின்றனர். அவ்வேளையில், 'நானே கடவுள்; எல்லாம் நானே' என்று உங்களுக்கு நான் கூறுகிறேன்.**

**இறைநிலையின் அடிப்படை தன்மை என்னவெனில் - அளவிறுதியற்ற ஞானம், சக்தி, ஆனந்தம், அவற்றை வார்த்தைகளால் விவரிக்க முடியாது.**

**அது, அந்த மேன்மையான இறைநிலையை அடைந்து, உணர்வோர்க்கு மட்டுமே புலப்படும்; இறைநிலை என்பது, மனதிற்கு அப்பாற்பட்டது.**

**அந்த ஐந்து சத்குருக்கள் யாரெனில், ஒரே காலத்தில் வாழும் ஐந்து சாதாரண மனிதர்களே ஆவர். அவர்கள் இறைநிலையை அடைவது மட்டுமின்றி, அடைந்த பின்பு, சாதாரண மனித உணர்வோடு மறுபடியும் உலகில் வருகின்றனர், வாழ்கின்றனர்.**

**இப்படி அவர்கள் எய்திய இந்த இறை உணர்வோடு, ஆழ்மன** (MENTAL), **சூட்சும** (பிராணம் - SUBTLE) **மற்றும் பௌதீக உணர்வுகளை (**PHYSICAL CONSCIOUSNESS) **உள்ளடக்கியவர்களாக இருக்கின்றனர்.**

**இவ்வாறு இறைநிலையை எய்திய ஐந்து சத்குருக்கள் இல்லாமல், உலகம் ஒருபோதும் இராது.**

ஐந்து சத்குருக்களும், தோற்றத்தில் மாறுபட்டிருந்தாலும், எப்பொழுதும் ஒரே கடவுளாக இருகின்றனர்; ஏனெனில், ஒவ்வொருவருக்கும், இறைநிலையை எய்திய உயர்வான அனுபவம் ஒன்றாகவே இருக்கும்.

என்றாலும், வெளியுலகைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு சத்குருவும் வித்தியாசமான - அதாவது அவரவர்க்கு உகந்த தனி இயல்பு, விருப்பு, வெறுப்பு, இயற்கைத் தன்மை, பழக்கவழக்கம், பிறரை அணுகும் முறை - இது போன்ற தனித்தன்மை உடையவராக இருகின்றனர்.

**மேற்கூறிய ஐந்து சத்குருக்கள்:**

**பாபாஜான் (**BABAJAN**)**

**நாராயண் மஹாராஜ் (**NARAYAN MAHARAJ**)**

**தாஜுதீன் பாபா (**TAJUDIN BABA**)**

**சாய் பாபா (**SAIBABA**)**

**உபாஸனி மஹாராஜ் (**UPASANI MAHARAJ**)**

இந்த ஐவரும் இணைந்த மொத்த உருவமே நான் - அவதார புருஷன்.

இவர்கள் ஐவரும் என்னை, இப்பூவுலகிற்குக் கொண்டு வந்தனர்; நான் இப்போது எப்படி உள்ளேனோ அதற்கு இவர்களே காரணம்.

நான் இவ்வைந்து சத்குருக்களின் தனிப்பட்ட குணங்களால் அமைந்தவன்; என்னுடைய அவதார நிலை இவர்களின் நிலைகளை உள்ளடக்கியதாகும்.

எனவே, ஐந்து சத்குருக்களின் குணாதிசயங்களும் என்னிடமுள்ளன.



ஹஸ்ரத் பாபாஜான்

# ஹஸ்ரத் பாபாஜான், மாமன்னர்

**(Hazrat Babajan, The Emperor)**

“பிரபஞ்சத்தை உருவாக்கியது நானே! பிரபஞ்சத்திலுள்ள அனைத்திற்கும் மூலப்பொருளும் நானே!” என்று பாபாஜான் பறைசாற்றியபோது, அதைக் கேட்ட வெறித்தனம் பிடித்த பலூச்சி படைவீரர்கள், அவரை உயிருடன் புதைத்தனர். ஏறக்குறைய பத்து ஆண்டுகளுக்குப் பின்னர், அவர்களில் ஒருவர் பூனா நகரில், பாபாஜான் ஒரு வேப்பமரத்தின் கீழ் அமர்ந்து, மக்களுக்கு தரிசனம் வழங்கியதைப் பார்த்ததும், அத்தனை வீரர்களும் தாம் செய்த மிகப்பெரிய தவறை உணர்ந்து, பாபாஜானின் பாதங்களைத் தொழுது மன்னிப்புக் கோரினர்.

குழந்தையில் அவர் பெயர் ‘குல்ருக்’ (ரோஜா போன்ற முகம்); பலூச்சிஸ்தான் நாட்டில் வாழ்ந்த ஒரு ராஜ குடும்பத்தில் (1790-1800க்கும் இடையில்) பிறந்தவர்; மிக்க அழகு; ஆனால் முற்றிலும் உலகப் பற்றற்று வாழ்ந்தார்; இளமையிலேயே குரான் அவருக்கு அத்துப்படி. இவர், முந்தைய பிறவியில் பஸ்ரா (BUSRAH, ஈராக்) என்ற நகரில் வாழ்ந்த ஒரு புகழ் பெற்ற துறவி - ரபியா - என்று சரித்திரம் சொல்கிறது.

பருவமடைந்ததும், பெற்றோர் திருமணத்திற்காக வற்புறுத்தவே, அவர் வீட்டைவிட்டு வெளியேறினார். கடவுள் மீதான தணியாத ஏக்கத்தில், வெவ்வேறு இடங்களில் அலைந்து திரிந்து, இறுதி**யில்** ஓர் இந்து சத்குருவை சந்திக்க நேர்ந்தது. அவர் உதவியால் தன்னுடைய முப்பதாவது வயதில், கடவுள் நிலையை அடைந்த பின்பு, சாதாரண மனித உணர்வையும் அடையப் பெற்றார். இவ்வாறு, அக்காலத்தின் ஐந்து சத்குருக்களில் முதல் சத்குரு இவரே.

இரண்டு முறை புனித ஹஜ் பயணம் மேற்கொண்டு, முஹமது நபியின் சமாதியை தரிசனம் செய்து வந்தார். அதற்குப் பிறகு மும்பை, நாசிக் போன்ற நகரங்களில் தங்கியிருந்தார்.

1905ஆம் வருடம் பூனா வந்தபோது அவருடைய வயது சுமார் 110. சார்பாவ்டியில் ஒரு வேப்ப மரத்தின் கீழ் தனது உறைவிடத்தை அமைத்துக்கொண்டார்.

மேர்வான் (மெஹர் பாபாவின் சிறுவயது பெயர்) பள்ளிக்கூடம் செல்லும் வழியில்தான் பாபாஜானின் இருப்பிடம் இருந்தது. மேர்வான் எப்பொழுதும் அவரைப் பார்த்து, பணிவுடன் வணங்குவது வழக்கம்.

1913ஆம் வருடம் ஒரு நாள் மேர்வான் கல்லூரியிலிருந்து சைக்கிளில் வந்து கொண்டிருந்த வேளையில், பாபாஜான் அவரை ‘என் அன்பு மகனே!’ என அழைத்து, அரவணைத்து அவருடைய நெற்றியில் ஆழமாக ஒரு முத்தத்தைப் பதித்தார். கண்களில் கண்ணீர் ததும்ப ‘ஒரு நாள் எனது மகன் வருவான்....

வந்து, இவ்வுலகை ஆட்டிப்படைப்பான்’ என அப்போது அவர் கூறியதை எவராலும் புரிந்துகொள்ள முடியவில்லை.

இதுதான் அந்த அற்புதமான நேரம்; மேர்வான் தனது இறைநிலையை அடைந்து, மனித உணர்வுகளை இழக்க ஆரம்பித்தார்.

மேர்வானின் தாயார் ஷிரீனுக்கு எதுவும் புரியவில்லை; தந்தை ஷெரியார்க்குத் தெரியும் என்ன நடந்தது என்று!

இறுதியில், பாபாஜான் 1930ஆம் ஆண்டு தனது பணியை முடித்துவிட்டு, ஏறக்குறைய 140 வயதில் உடலைத் துறந்தார்.


ஓ பாபாஜான்! உங்களுக்கு எங்கள் இதயங்கனிந்த அன்பு வணக்கங்கள். உங்களுடைய அற்புதமான முத்தம், இவ்வுலகத்திற்கு விழிப்புணர்வை வழங்க வந்த மெஹர் பாபாவை விழிக்கச் செய்தது. உருவமில்லா இறைவனின் முகத்திரையை விலக்கி, அவரைப் பேரின்பத்தில் மூழ்கச் செய்தீர்கள்.




பாபாஜானின் இறுதி ஊர்வலம்



நாராயண் மஹாராஜ்
அவருடைய பக்தர்களுடன்







நாராயண் மஹாராஜ்

# நாராயண் மஹாராஜ், இதயத்தின் அதிபதி
**(Narayan Maharaj)**

உலகின் பார்வையில் அவன் ஓர் அனாதை; ஆனால் பிரபஞ்சத்தின் மஹாராஜன். இவன் பெயரில் மட்டும் நாராயணன் அல்ல; நிஜத்தில் இறைநிலையை எய்திய 'நாராயணன்.'

1885ஆம் ஆண்டு நாராயண், பெற்றோருக்கு நீண்ட காலமாகக் குழந்தை பாக்கியம் இல்லாமல், தவமிருந்து பெற்ற குழந்தை. உண்மையாக நாராயணனே வந்து பிறந்ததாக குடும்பம் ஆனந்தத்தில் திளைத்தது. அந்த சந்தோஷம் நீண்ட நாட்கள் நிலைக்காமல், ஏழு வயதிலேயே நாராயண் தனது பெற்றோரை இழந்தான். எல்லாம் இறைவன் வகுத்த வழி. நாராயண் உறவினரோடு வாழவேண்டும் என விதி.

சிறுவயதிலேயே இறை பற்று மிக்கவர். பிஜாப்பூர் நகரில் ஒரு நாள் தனது நண்பர்களுடன் மலை மீது ஏறி, அங்கிருந்த குகை ஒன்றில் நுழைந்தார். நண்பர்கள் அனைவரும் பயத்தில் வெளியே வர, நாராயண் குகைக்குள் சென்று, பல நாட்கள் அங்கேயே இருந்து, இறுதியில், யோகி ஒருவர் தியானத்தில் அமர்ந்திருப்பதைக் கண்டு, அவர் எதிரே மண்டியிட்டு அமர்ந்தார். அந்த யோகி கண்திறந்து அவரை ஒரு முறை பார்த்துவிட்டு மறுபடியும் தியானத்தில் ஆழ்ந்தார். நாராயண் குகையில் நடந்ததைப் பிறகு தனது நண்பர்களுக்கு எடுத்துரைத்தார்.

இறைவனைப் பற்றிய சிந்தனை அவரை உலக வாழ்க்கையை வாழ அனுமதிக்கவில்லை; பாட்டியிடம் எதுவும் கூறாமல், நாராயண் தனது ஒன்பதாவது வயதில் தலைமறைவானார். காடு, மலை, மற்றும் வறண்ட இடங்களிலெல்லாம் கடவுளைத் தேடி, நினைவிழந்த நிலையில், உணவு, நீர் எதுவும் உட்கொள்ளாமல், பைத்தியம் போல் (நிஜத்தில் இறை-பைத்தியம்) அலைந்து திரிந்தார். தனது உயிர் போகும் நிலையில் தண்ணீரை நாடி அலைந்தபோது, திடீரெனக் குதிரையில் வந்த ஒருவர், தண்ணீர் இருக்கும் இடத்தைக் கூறிவிட்டு மறைந்து விட்டார். [பாபா இதுபோன்ற சம்பவங்களை விளக்கும் போது, தேவதை (ANGEL), தேவதூதன் (ARCHANGEL) இதுபோன்ற சூழ்நிலையில் வந்து உதவுவது உண்டு' என்று கூறியுள்ளார்.] நாராயண் அங்குச் சென்று, அங்கிருந்த ஒரு சிறிய நீரோடையில் தனது தாகத்தைத் தணித்துக் கொண்டார்.

இவ்வாறு பல ஆண்டுகள் அலைந்து திரிந்த பிறகு, கங்காபூர் நகரில் அர்வி எனும் கிராமத்தை வந்தடைந்தார். அப்போது அங்கு வாழ்ந்த ஒரு குழந்தையில்லா தம்பதியர் (திரிம்பக் ராவ் - லட்சுமி) அவரைத் தங்கள் குழந்தை போல வளர்த்து வந்தனர். லட்சுமி ஒரு நாள், அவரது கனவில் 'இந்த சிறுவன் கடவுள்' என்ற குரல் கேட்டு மகிழ்ச்சியடைந்தார். ஊர் மக்களும் அவரைக் கடவுளாக ஏற்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

காலங்கள் கடந்தன. நாராயணனால் அங்கே இருக்க முடியவில்லை. கடவுளின் நாதம் அவரை பாடாய் படுத்தியது. ஒரு நாள், அங்கிருந்த (துறவிகள் வாழும்) மடத்தினருகே மயங்கி விழுந்தார். திடீரென ஒரு பெரியவர் அருகே வந்து குரல் கொடுக்க, மயக்கம் தெளிந்த நிலையில் நாராயண் அவரை உற்று நோக்கினார். இதுவே இறைவன் அருள். இதுவே சரியான தருணம். வந்தவரை தனது குருநாதரென அடையாளம் கண்டுகொண்டார் நாராயண். அந்தப் பெரியவர் அவரை அன்புடன் அணைத்து, 'என் மகனே! பசியாக இருக்கிறேன், ஊருக்குள் சென்று ஏதேனும் வாங்கி வா' எனக் கட்டளையிடவே நாராயணனும் உடனே சென்று, யாசித்துத் திரும்பி வந்தபோது, குருநாதர் அங்கே இல்லை. குருநாதரை நினைத்து மூன்று நாட்கள் கதறினார். 'நீங்கள் வந்தால்தான் நான் உண்ணுவேன்' என்று கூறி மன்றாடிய வேளையில், குருநாதர் அவர் முன்னால் தோன்றினார். நாராயண் வாங்கி வந்த உணவில் சிறிதளவை அவர் வாயிலிட்டு, மீதியை நாராயணனிடம் உண்ணுமாறுக் கூறினார். நாராயண் முதல் உருண்டையை வாயிலிட்டதும், ஏதோ இனம் புரியாத மாற்றத்தைத் தன்னுள் உணர்ந்தார். அந்தச் செயல், நாராயணனை இறைநிலைக்குக் கொண்டுச் சென்றது. அவர் முன் நின்ற குருநாதர் தத்தாத்ரேயராகக் (பிரம்மா, விஷ்ணு, மஹேஷ் - இவர்களின் ஒன்றிணைந்த மூன்று முகங்களும் ஆறு கரங்களும் கொண்ட கடவுளின் தோற்றம்) காட்சியளித்த அடுத்த கணமே, இறைநிலையை அடைந்தார் நாராயண்.

இந்த சம்பவம் நாராயணை - ஒரு சத்குருவாக மாற வழிவகுத்தது. இவர் மெஹர் பாபாவின் ஐந்து சத்குருக்களில் ஒருவர்.

இறுதியில் பூனா நகருக்கு அருகிலமைந்த 'கேட்காவ்ம்' என்ற கிராமத்தில், 1903ஆம் ஆண்டு, அவரது இருப்பிடத்தை அமைத்தார். அவர் ஓர் அரசனைப் போலத் தோற்றமளித்தார் - நடை, உடை, பாவனை அனைத்தும் அவ்வாறே இருந்தது; இது அவருடைய தனித்தன்மை. அவர் நாராயண் மஹாராஜ் என்று மக்களால் அன்பாக அழைக்கப்பட்டார்.

1915, ஏப்ரல் மாதத்தில், மேர்வான், பாபாஜானின் முதல் சந்திப்பிற்குப் பிறகு, (ஏதோ ஒரு சக்தி அவரை ஈர்ப்பது போன்ற உணர்வில்) தன்னுடைய இரண்டாவது சத்குருவை சந்திக்கச் சென்றார்.

நாராயண் மஹாராஜ் அவரது அவையில் தரிசனம் வழங்கி வந்த வேளையில், திடீரென ஒரு பளிச்சிடும் வெளிச்சம் அங்கிருந்த அனைவரையும் மெய்ச்சிலிர்க்க வைத்தது; திரும்பிப் பார்த்தபோது, மேர்வான் கிழிந்த சட்டையுடன், வித்தியாசமான தோற்றத்தில் சுய நினைவை இழந்தவர் போல, வாசலில் நின்றுகொண்டிருந்தார்.


நாராயண் மஹாராஜ், அனைவரையும் உடனே அங்கிருந்து புறப்படுமாறு கூறி, அவர்தம் சிம்மாசனத்திலிருந்து எழுந்து, வாசல்வரைச் சென்று, மேர்வானின் கையைப் பற்றிய வண்ணம் அழைத்து வந்து, தமது இருக்கையில் மேர்வானையும் அமர வைத்து, அவரது கழுத்திலிருந்த மலர்மாலையை

மேர்வானுக்கு அணிவித்தார். மேலும், மாம்பழ ரசம் எடுத்துவரக் கூறி, அதை மேர்வானுக்கு அளித்தார். மாம்பழ ரசத்தை அருந்தியதும் மேர்வான், மஹாராஜை வணங்கி விடைபெற்றுச் சென்றார். 'என்ன பரிமாறிக்கொண்டனர்' என்பது இறைவனுக்கே வெளிச்சம். (மெஹர் பாபா இதைக் குறித்து விளக்கமளித்துள்ளார். அவர் ஐந்து சத்குருக்களையும் இவ்வாறு நேரடியாக சந்திக்க வேண்டியது அவசியம். பாபாஜான் எல்லையில்லா ஆனந்தத்தை அளித்து, முகத்திரையை விலக்கி, 'நான் கடவுள்' என்ற நிலையை உணரச் செய்தது போல், இதர சத்குருக்களும் வெவ்வேறு ஆன்மீக சிறப்புரிமைகளை வழங்கி அவதார புருஷராகச் செயல்பட வழிவகுத்தனர்.)

1945 செப்டம்பர் மாதம் கேட்காவ்மிலிருந்து பெங்களூர் சென்றபோது நாராயண் மஹாராஜ் அங்கே தனது உடலைத் துறந்தார்.

ஓ நாராயண் மஹாராஜ்! நீங்கள் ஆதிபகவனுக்கு மலர்மாலை அணிவித்து, சிம்மாசனத்தில் அமர வைத்து, உலகைக் காக்கும் பணியை மேர்வானுக்கு அளித்தீர்கள். நாங்கள் உங்களை வணங்குகிறோம்.


தாஜுதீன் பாபா


தாஜுதீன் பாபா

# தாஜுதீன் பாபா, தீர்க்கதரிசியின் மகுடம்
**(Tajuddin Baba)**

சத்குருக்கள் தங்களை நடத்தும் வழிகளும் முறைகளும் வேறு. சாதாரண மக்களுக்கு அது வியப்பாக இருக்கும்; எல்லோராலும் அதைப் புரிந்துகொள்ளவும் இயலாது; பலருக்கு அவர்களின் உண்மை நிலை தெரியாது.

1861ஆம் ஆண்டு, நாக்பூர் நகருக்கு அருகிலமைந்த காம்டி என்ற கிராமத்தில் பிறந்தார், தாஜுதீன் என்றழைக்கப்பட்டார். தாஜ் என்றால் மகுடம்; இளம் வயதில் தாஜுதீன் தனது பெற்றோரை இழந்து வாழ்ந்தார்.

18ஆவது வயதில், பள்ளியில் படித்துக் கொண்டிருந்த வேளையில், ஒரு நாள், 'வஸ்ரத் அப்துல்லா ஷா' என்ற புகழ்பெற்ற சாது, தாஜுதீன் பயின்றுவந்த பள்ளிக்குச் சென்று 'இந்த சிறுவன் இங்கு ஏன் படிக்க வேண்டும்? எல்லா இறை ஞானமும் அவனிடம் ஏற்கனவே உள்ளது' எனக் கூறி, ஒரு ரொட்டித் துண்டில் பாதியை அவர் உண்டு, மறுபாதியை தாஜுதீனுக்குக் கொடுத்து, 'குறைவாக சாப்பிடு; குறைவாகத் தூங்கு; குறைவாகப் பேசு' என அறிவுரையை வழங்கிய அடுத்த கணமே, தன்னுள் ஓர் அற்புதமான மாற்றத்தை உணர்ந்த தாஜுதீன், அந்த ஆனந்த நிலையில் மூன்று நாட்கள் இருந்தார். உள்ளளவில் பலவிதமான மாற்றங்கள், படிப்பில் ஆர்வமில்லை, நண்பர்களோடு சேர்வதுமில்லை. ஹாஃபீஸின் (HAFIZ) போதனைகளைப் படிக்கத் தொடங்கினார்.

1879ஆம் ஆண்டு அவர் ஆங்கிலேய ராணுவத்தில் இணைந்தபோது, சூழ்நிலைகள் அவரைத் தனது குருவான 'ஹஸ்ரத் தாவூத் கிஸ்தி'யை சந்திக்க வழிவகுத்தது. குருநாதர், அவரிடம் தனக்காக, தேநீர் தயார் செய்து எடுத்துவர உத்தரவிட்டார். தாஜுதீன் உடனே, அவரது ராணுவ விடுதிக்குச் சென்று, தேநீர் எடுத்து வந்தார். குருநாதர், அதில் பாதியை அருந்திவிட்டு, மறுபாதியைத் தாஜுதீனிடம் அருந்தக் கொடுத்தார். அருந்திய அதே கணத்தில் தாஜுதீன் அவருடைய சாதாரண மனித உணர்வை இழந்து, 'நான் கடவுள்' என்ற நிலையை எய்தினார்.

அடுத்த பத்தாண்டுகள், சுய நினைவின்றி, காம்டி நகரில் ஒரு பைத்தியம் போல் அலைந்து திரிந்தார். 1893ஆம் வருடம் தனது குருநாதரின் அனுக்கிரகத்தால் சாதாரண மனித உணர்வையும் அடைந்து சத்குருவானார்.

அவருடைய 31ஆவது வயதில் நடந்த ஒரு சம்பவம்: ஒரு முறை ஆங்கிலேய பெண்மணிகள் 'கேளிக்கை விடுதி'யின் வெளியே அமர்ந்து, மது அருந்தி மகிழ்ச்சி ஆரவாரம் செய்து கொண்டிருந்தனர். திடீரென ஒருவன், அரை நிர்வாணத்தில் அவர்களருகில் வருவதைக் கண்டு மிகவும் சீற்றமடைந்து, பைத்தியம் எனப் பட்டம் கட்டி, காவல்துறை அதிகாரிகளான தங்கள் கணவர்மாரிடம் முறையிட்டு, பைத்தியக்கார சிறையில் அடைத்தனர். நிஜமாகவே பைத்தியமா? இல்லை நாடகமா? இவர் வேறு எவருமில்லை; தாஜுதீன் பாபா. அவரே வேடமிட்டு ஆடிய திருவிளையாடல். தன்னுடைய

ஆன்மீகப் பணிகளைச் செய்வதற்கு உகந்த அமைதியான இடம் சிறை என்பதை உணர்ந்து, அவர் போட்ட வேடம்தான் இது. தாஜுதீனுக்குத் தெரியும், தான் பைத்தியமல்ல, தன்னைச் சுற்றியுள்ள உலகம்தான் பைத்தியம் என்று. அவர் சிறையில் அடைக்கப்பட்ட அந்த நாளிலிருந்து மக்கள் கூட்டம், அவருடைய தரிசனத்திற்காக அலைமோதியது.

தரிசனத்திற்காக அடிக்கடி அங்கு வந்த பக்தர்களில் ஒருவர், ராஜா ரகுஜிராவ் போஸ்லே, அந்த ஊரின் ஒரு பகுதிக்கு மன்னர். இந்து மதத்தைச் சார்ந்தவராயினும், தாஜுதீன் மீது அளவற்ற பற்றுள்ளவர். எப்படியேனும், அவரைச் சிறையிலிருந்து மீட்க வேண்டும் என்ற எண்ணத்தில், அதிகாரிகளிடம் சென்று, முறையிட்டு, வேண்டிய பணத்தைச் செலுத்தி, சிறையிலிருந்து விடுவித்து, அவரது அரண்மனைக்கு அழைத்து வந்தார். அப்போது தாஜுதீனுக்கு 47 வயது. அங்கு சில மாதங்கள் தங்கி, அதற்குப் பிறகு வாக்கி ஷரீஃப் எனும் இடத்தில் இறுதியாகத் தன் இருப்பிடத்தை அமைத்தார்.


1915ஆம் வருடம், ஒரு நாள், தாஜுதீன் வாக்கி ஷரீஃபில் பக்தர்களுக்கு தரிசனம் வழங்கிக் கொண்டிருந்தார். அன்று அவர் மிகுந்த சீற்றத்துடன் காணப்பட்டார் [சத்குருக்களில் இரண்டு வகை உள்ளனர்; ஒருவர் 'ஜமாலி' (சாந்தம்); மற்றொருவர் ஜலாலி (சீற்றம்) வகை; தாஜுதீன் 'ஜலாலி' வகையைச் சார்ந்தவர்.]

அந்த நாள், மேர்வான் தனது நண்பர் ஒருவருடன் (இது அவருடைய மூன்றாவது சத்குரு), ஏற்கனவே பாபாஜான் மற்றும் நாராயண் மஹாராஜ் அவர்களை சந்தித்த பின்னர் - இப்போது தாஜுதீனை சந்திக்க வந்தார்.

தாஜுதீன் பாபா, மேர்வானைக் கண்டதும் மகிழ்ச்சியுடன் எழுந்து, அவரை வரவேற்க வாசல் வரை சென்றார். அதைப் பார்த்துக்கொண்டிருந்த பக்தர்களுக்கு அளப்பரிய ஆச்சரியம். கையிலிருந்த ரோஜா மலர்களை மேர்வானை நோக்கி அங்குமிங்கும் அசைத்த வண்ணம் அவரை 'சொர்க்கத்தின் ரோஜா' என்றழைத்தார். மேர்வான் உடனே அவரை வணங்கி, திரும்பிச் சென்றார். வெளியளவில் நடந்தது இவ்வளவுதான். இதில் அடங்கியுள்ள ஆன்மீக முக்கியத்துவம், சாதாரண மனிதர்களால் புரிந்துகொள்ள முடியாத ஒன்று!

தாஜுதீன் அவரது கடைசி நாட்களை ராஜா ரகுஜிராவ் போஸ்லே அரண்மனையில் கழித்தார். 1926ஆம் வருடம் அங்கேயே தனது உடலைத் துறந்தார்.

ஓ தாஜுதீன் பாபா! நீங்கள் ஒரு ஹஸ்ரத்! ஒரு சத்குரு! நீங்கள் எங்கள் மேர்வான் மீது பூமழையைப் பொழிந்தீர்கள்; மகுடத்தைச் சூட்டினீர்கள். நாங்கள் உங்களுக்குத் தலை வணங்குகிறோம்.





சாய் பாபா



சாய் பாபா அவருடைய
பக்தர்களுடன்



சாய் பாபாவின்
லெண்டி யாத்திரை

# சாய் பாபா, இறையடியார்

**(Sai Baba of Shirdi)**

'ஏழையின் காப்பாளன் அல்லா; அவனன்றி வேறொன்றுமில்லை; அவன் பெயர் ஒன்றே நிரந்தரமானது; அவனே எங்கும் நிறைந்தவன்' என்று ஷிர்டி கிராமத்தில் ஓயாமல் குரல் கொடுத்துக் கொண்டிருந்தார் பைத்தியக்கார தோற்றத்தில் ஒருவர்; ஊர், பெயர் தெரியாத ஏழை; எந்நேரமும் குழல்வழி புகை ஊதும் பழக்கம்; ஆனால் ஆயிரக்கணக்கான மக்கள் அவரைப் பணிவுடன் தொழுதனர்.

இது என்ன மர்மம்? வந்தவர்களிடமிருந்து பணத்தைப் பறிப்பதும், அதை ஏழைகளுக்கு அள்ளிக் கொடுப்பதும் நித்திய செயல்; ஆண்டியாக மக்கள் முன் தோன்றுவார்; ஒன்றும் அறியாத சாது போல், உடையின்றி ஒரு குழந்தை அருகில் நின்றால் கூட 'ஆணா, பெண்ணா?' என்று கேட்கும் அளவுக்கு வெகுளித்தனம். முதல் உலகப் போரை நடத்தியவர் என்று கூறினால் நம்ப முடியுமா?

ஆனால் அதுதான் உண்மை; ஐந்து சத்குருக்களின் தலைவர் (குதுப்); மேர்வானை, மெஹர் பாபாவாக, அவதார புருஷராக உலகுக்குத் தந்த ஐந்து சத்குருக்களில் முதன்மையானவர்; மேர்வானை 'பர்வர்திகார்' (எல்லாம் வல்ல இறைவன்) என்று உலகுக்குப் பறைசாற்றி, முதல் உலகப் போரை நடத்தி முடித்து 1918ஆம் ஆண்டு அவரது உடலைத் துறந்தார்.

சாய் பாபாவின் பிறப்பைப் பற்றிய எந்த ஆதாரமுமில்லை; குலம், கோத்திரம், மதம், ஜாதி எதுவும் தெரியாது; 1838ஆம் ஆண்டில் பிறந்ததாக ஒரு சிறிய குறிப்பு உள்ளது. சிறு வயதிலேயே தனது தந்தையை இழந்ததாகவும், முதல் ஐந்தாண்டுகள் தனது தாயுடன் யாசித்து வாழ்ந்ததாகவும் சொல்லப்படுகிறது.

இறைவனே அவரை எப்படியெல்லாம் வழி நடத்துகிறார் பாருங்கள்! இதையெல்லாம் எப்படி அறிந்து புரிந்து கொள்வது?

இறுதியில், தாயும் சேயும், ஷேர்வாடி கிராமத்தில் கண்பார்வையற்ற, கோபால் ராவ் தேஷ்முக் எனும் ஆன்மீக குருநாதர் ஒருவரின் இல்லத்தை வந்தடைந்தனர். இறைவன் செயலை என்னென்பது? அவர், இவர்களை எதிர்நோக்கிக் காத்திருந்தாராம். ஐந்து வயது சிறுவனை அணைத்து, அவர்களை அங்கேயே தங்க வைத்தார். அன்றிலிருந்து சாய், குரு கோபால் ராவின் சகவாசத்தில் வளர்ந்து வந்தார்.

12 வயதில், சாய் தனது தாயையும் இழந்தார். அதற்குப் பிறகு, பல வருடங்கள் குருவும் சீடனும் சேர்ந்து வாழ்ந்தனர். கோபால் ராவின் இதர சீடர்கள், பொறாமையில் சாயியைக் கொலை செய்யவும் திட்டமிட்டனர். ஒரு நாள் இரவில், இருவரும் தூங்கிக் கொண்டிருந்தபோது, சீடனொருவன் ஒரு

பாறாங்கல்லை எடுத்து சாயியின் தலையை நோக்கி வீசியது, குருநாதரைத் தாக்கிக் காயப்படுத்தியது. அடுத்த ஓரிரு நாட்களில் அந்தக் கொலைகார சீடன், மாயமாக உயிரிழந்தான். இதைப் பார்த்த இதர சீடர்கள் மன்னிப்புக் கோரி, உயிர்ப்பிச்சைக் கேட்டனர். கோபால் ராவ், சாயியை அழைத்து காதில் ஏதோ கிசுகிசுக்கவும், சாய் தனது குருவின் பாதமிருந்த இடத்திலிருந்து மண்ணை எடுத்து, உயிரிழந்த சீடன் மீது வீசினார். சிறிது நேரத்தில் பிரிந்த உயிர் திரும்பி வரவே, அனைவரும் சாயியின் மகிமையை உணர்ந்தனர்.

கோபால் ராவ், அவரது இறுதி காலம், விரைவில் வரவிருப்பதை அனைவருக்கும் தெரிவித்தார். சாய் தமது சீடர்களில் முதன்மையானவர் என்பதையும் புரிய வைத்தார். பின்னர் ஒரு நாள், கோபால் ராவ், அவர் அணியும் வேட்டி ஒன்றை சாயியிடம் கொடுத்தார். அதுவே, கடைசியாக, குருநாதர் அவருடைய சிறப்புரிமைகளை (சக்திகளை), சாயியிடம் ஒப்படைத்ததற்கான அடையாளம். ஓரிரு நாட்களில் குருநாதர் உடலைத் துறந்தார். சாய் அவரது குருநாதர் அன்பாக அளித்த வேட்டியை உடலில் அணியும், சட்டை மற்றும் தலைப்பாகையாக மாற்றிக்கொண்டார். (நாம் சாய் பாபாவை சாதாரணமாக இந்த உடையில்தான் பார்க்கிறோம்). சில நாட்களில் சாய் தனது சுய நினைவை இழந்து, இறைநிலையை எய்தினார்.

அங்கிருந்து சாய் அருகாமையில் ஒரு காட்டிற்குள் சென்றார். பலவிதமான அற்புதங்கள் நடந்ததாகக் கூறப்படுகிறது. ஷிர்டி கிராமத்தில் வாழ்ந்த சாந்த் பாட்டீல் என்பவர், சாயியின் மகிமையை உணர்ந்து, அங்கு அழைத்து வந்தார். வரும் வழியில், கண்டோபா கோயிலிலிருந்த பகத் எனும் ஓர் இந்து சாது, சாய் பாபாவைக் கடவுள் என அடையாளம் கண்டு, ‘சாய் பாபா’ என அழைத்து வரவேற்றார். (அன்றிலிருந்து அவர் பெயர் சாய் பாபா என்றாயிற்று. அதுவரையிலும் அவருக்குப் பெயரே கிடையாது).

சாய் பாபா தனக்காக, தகரத்தாலான சிறிய அறை ஒன்றை அமைத்து அதிலே வாழ்ந்து வந்தார். அவரது கடைசி காலம் வரை ஊரெங்கும் சென்று, ஐந்து வீடுகளிலிருந்து ரொட்டி வாங்கி, பாதியை உண்டு, மீதியைப் பிறருக்குக் கொடுப்பது வழக்கம்.

1886ஆம் ஆண்டு சாய் பாபா, கடுமையான ஆஸ்த்துமா நோயால் அவதிப்பட்டார். அப்போது அவர், “என்னுடைய உடலை மூன்று நாட்கள் பாதுகாப்பாக வைத்திருங்கள்; நான் உயிருடன் திரும்பி வந்தால் சரி; இல்லையேல், மூன்றாவது நாள் என் உடலைப் புதைத்து, மேலே இரண்டு கொடிகளைப் பறக்கவிடுங்கள்” என்று தனது சீடர்களுக்கு அறிவுறுத்தி, சமாதி நிலைக்குச் சென்றார். மூன்று நாட்களுக்குப் பிறகு, சாய் தமது பழைய நிலைக்கு வந்தார். (சத்குருக்களுக்கு இது சகஜம்; தன்னுடைய ஆன்மீகப் பணிகளுக்காக இது போன்ற செயல்களில் ஈடுபடுவது வழக்கம்).

அவருடைய சீடர்களில் ஒருவரான 'பரா பாபா' என்பவருக்குத் தினமும் நூறு ரூபாய் வழங்கி, அந்தப் பணத்தில் நாளெல்லாம் அவர் விரும்பிய விதவிதமான உணவு பண்டங்களை வரவழைத்து உண்ணச் செய்தார். சாய் பாபா, அதே வேளையில் ஊரெங்கும் சென்று ரொட்டி வாங்கி உண்டார். இதைக் குறித்து, சாய் பாபா ஒரு முறை விளக்கமளித்தார்: "நான் இங்கு வருபவர்களிடமிருந்து வாங்கும் பணத்தால் அவர்களின் மனப்படிவங்களை, 'பரா பாபா'வுக்குள் மாற்றிவிடுகிறேன்; இதனால், பணம் கொடுத்தவர்கள் பயனடைகிறார்கள். இவ்வளவு மனப்படிவங்களையும் தன்னுள் அடக்கி பிறருக்காகத் துன்பப்பட்ட பரா பாபா, இறுதியில் முக்தி நிலையை எய்தினார்." இது சத்குருக்களின் பணிகளில் ஒன்று.

1910ஆம் வருடம் குரு கோபால் ராவின் நினைவில், சாய் பாபா அருகிலிருந்த மசூதியை ஒட்டி கோயிலொன்றை எழுப்பினார். இது இந்து மற்றும் முஸ்லிம்கள் சேர்ந்து வாழும் நோக்கத்துடன் கட்டப்பட்டது என்று கூறப்படுகிறது. சில நேரங்களில் சாய் பாபா குரானையும், பகவத்கீதை, ராமாயணம் போன்ற இதிகாசங்களை வாசிக்கச் சொல்வதும் வழக்கமாக நிகழ்ந்தது. இவர் மிகவும் வித்தியாசமான சத்குரு; 'அனைத்து மதங்களும் ஒன்று' எனும் கருத்தை மக்களுக்கு வலியுறுத்தினார்.

இவ்வாறு, சாய் பாபா மக்களிடையே உயர்ந்த ஓர் ஆன்மீக குரு நாதராகத் திகழ்ந்தார். "நான்தான் உங்களை என்பால் ஈர்க்கிறேன்; நீங்களாக எவரும் இங்கே வருவதில்லை; என்னுடைய குருநாதர் எல்லோருக்கும் அள்ளி வழங்குமாறு கூறியிருக்கிறார்; ஆனால் நீங்களோ உண்மையான புதையலை எடுத்துச் செல்லாமல், காசு, பணம் என்று கேட்கிறீர்கள்" எனக் கூறிவந்தார்.

'**முதல் உலகப்போரை நடத்தியவர் சாய் பாபா**' என்று மெஹர் பாபா கூறியுள்ளார். அவ்வேளையில் மசூதியிலிருந்து அவர் கோயிலுக்குச் செல்லும் வழியில் தீப்பொறிகள் பறந்ததை மக்கள் கண்டு ஆச்சரியமடைந்தனர்.

1915ஆம் ஆண்டு மேர்வான் தனது நண்பனுடன் ஷிர்டிக்குச் சென்றார். சாய் பாபா, மேர்வானின் நான்காவது சத்குரு ஆவார். அந்த நாள், சாய் பாபா சீடர்களுடன் 'லெண்டி' ஊர்வலம் சென்ற வேளையில், அவரது பார்வை மேர்வான் மீது விழுந்தது. உடனே உரத்த குரலில் 'பர்வர்திகார்' என்று மூன்று முறை அழைத்தார். அங்கிருந்த கூட்டம் ஆச்சரியத்தில் அங்குமிங்கும் நோக்கியது. சாய் பாபாவின் சீடர்களும் அதிர்ச்சியில் ஆழ்ந்தனர். மேர்வான், சாய் பாபாவை வணங்கி உடனே புறப்பட்டார்.


1918 அக்டோபர் 15ஆம் தேதி தஸரா தினத்தன்று, முதல் உலகப்போர் நிறைவடைந்ததும் சாய் பாபா அவரது உடலைத் துறந்தார்.

பெயரில்லா இறைவனே! உன்னை மக்கள் 'சாய்' என்று அழைத்தனர்! உருவமில்லா இறைவனுக்கு, அவருக்கே உரிய சிறப்புரிமைகளை வழங்கி

உலகில் அவதார புருஷராகக் கொண்டுவந்தீர்கள்! உங்களுக்கு நாங்கள் என்ன கைமாறு செய்யப் போகிறோம் சாய் மஹாராஜ்?



உபாஸனி மஹாராஜ்




உபாஸனி மஹாராஜ்

# உபாஸனி மஹாராஜ், யோகிகளின் அரசன்

**(Upasani Maharaj of Sakori)**

சாய் பாபாவிற்கு மட்டுமே தெரியும் அவர் யாரென்று. அவரைப் போல் உலகில் வேறு எவருமில்லை. அவருடைய அந்தஸ்து இறைவனுக்கே வெளிச்சம்! அவரை ஒரு புறமும், உலகை மறுபுறமும் வைத்தால், உபாஸனி உயர்ந்து நிற்பார். இது சாய் பாபாவின் வாக்கு.

1870ஆம் ஆண்டு நாசிக் நகரில் பிறந்தார். பெயர் காஷிநாத். தந்தை கோவிந்த் சாஸ்திரி, ஆன்மீகத்தில் அதீத பற்று மிக்கவர். தாயார் ருக்மணி. சாதாரண குடும்பம். காஷிநாத் வாழ்க்கையில் பற்றில்லாமல், கடவுளையும் கண்டுகொள்ள முடியாமல் வெறுப்படைந்து, வாழ விருப்பமின்றி, அருகிலமைந்த போர் காட் (BHOR GHAT) மலையில் ஒரு குகைக்குள் உணவு, நீர் எதுவும் உட்கொள்ளாமல் தவமிருந்தார். ஆனால், அவர் ஷிர்டி சாய் பாபாவின் கண்காணிப்பில் பாதுகாப்பாக இருந்தது அவருக்குத் தெரியாது. அதைத் தெரிந்து கொள்ளும் சரியான தருணம் இன்னும் வரவில்லை.

25 வயதில் ஸாங்க்ளி (SANGLI) நகரில் ஹோமியோபதி மருத்துவராக இருந்தார். எவ்வளவோ முயன்றும் வாழ்வில் எந்த ஈடுபாடும் இல்லாத நிலையில் அமைதியிழந்து காணப்பட்டார்.

அப்போது ஒரு முறை சத்குரு நாராயண் மஹாராஜ் நாக்பூர் வருவதாகக் கேள்விப்பட்டு, அவரை தரிசனம் செய்ய காஷிநாத் அங்குச் சென்றார். அங்கிருந்தவர்கள் ஆச்சரியப்படும் விதத்தில் மஹாராஜ் காஷிநாத்தை அழைத்தார். காலில் விழுந்த அவரை எழும்புமாறு கூறி, தனது கழுத்திலிருந்த பூமாலையை அவருக்கு அணிவித்தார். என்னே இறைவனின் கருணை! எல்லாமே அவன் அமைத்த வழி! காஷிநாத் இனம் புரியாத மகிழ்ச்சியில் திரும்பிச் சென்றார்.

இறைவன் தன்னுள் ஒளிர்வதை உணர்ந்த காஷிநாத், 1911ஆம் ஆண்டு மறுபடியும் நாராயண் மஹாராஜை சந்திக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் மும்பைக்குச் சென்றார். இம்முறை நடந்ததோ இன்னும் ஓர் ஆச்சரியமான சம்பவம். ஒருவன் கடவுள் நிலையை அடைவதற்கான ஆயத்தத்தை அடைந்த அடுத்த கணமே, கடவுள் அவனை நாடி வருகிறார். சத்குரு நாராயண் மஹாராஜ், காஷிநாத்தை அன்புடன் வரவேற்று, அரவணைத்து, வெற்றிலை பாக்கு அடங்கிய சிறிய பொட்டலம் ஒன்றைக் கொடுத்து சாப்பிட வைத்தார். அதன் பின்னர் “இன்று நான் உங்களுடைய நிறத்தை, அகமும் புறமும் மாற்றி விட்டேன்! மிஞ்சுவது எதுவுமில்லை! இனி நாம் சந்திக்கவோ பேசவோ தேவையுமில்லை! நம் விவகாரம் முடிந்துவிட்டது!” என்று கூற, காஷிநாத் ஆச்சரியமாக, “இனிநான் உங்களை எப்போது சந்திப்பேன்?” எனக் கேட்டார். அதற்கு நாராயண் மஹாராஜ், “உங்களைப் பார்க்க நானே வருவேன்;

வரும்போது நான் உங்களுடன் எப்பொழுதும் இருப்பேன்" என்று பதில் கூறி, காஷிநாத்தை அனுப்பி வைத்தார்.

ஷிர்டி சாய் பாபாதான் இவருக்கு சத்குரு என்கிற மகிமையை வழங்கக் கூடியவர் என்று காஷிநாத்திற்குத் தெரியாது. காஷிநாத் ஓர் இந்து பிராமணர்; சாய் பாபாவை முஸல்மான் என்று எண்ணி அவரை தரிசனம் செய்யாமல், வாய்ப்புகளைத் தவிர்த்து வந்தார். கடவுளுக்கு மதம், ஜாதி, குலம் என்றெல்லாம் ஒன்றுமில்லை என்பதை இன்னும் காஷிநாத் புரிந்து கொள்ளவில்லை. இதைத்தான் அந்த 'சரியான நேரம்' என்பது! ஒருவரின் மனதிலிருக்கும் இறுதியான துல்லிய மனப்படிவங்களும் அழிந்தால்தான் அவர் கடவுளாக முடியும். இது ஆன்மீக நியதி.

இறுதியாக, ஷிர்டி சாய் பாபாவை சந்திக்கும் தருணம் நெருங்கவே, யோகி குல்கர்ணி என்பவர் காஷிநாத்தை, சாய் பாபாவிடம் அனுப்பி வைத்தார். சாய் பாபா, காஷிநாத்தின் வருகைக்காகக் காத்திருந்தார். அவர் சாய் பாபாவிற்கு மிகவும் பிரியமானவர். 1911ஆம் ஆண்டு காஷிநாத், சாய் பாபாவை சந்தித்து தரிசனம் செய்து விடைபெறும் வேளையில், சாய் அவரிடம், "என்ன அவசரம்? இங்கே நீங்கள் என்னுடனே இருக்கலாம்; அது உங்களுக்கு நல்லது" என்றார். முக்கியமான வேலை இருப்பதாகக் கூறி காஷிநாத் புறப்படும் போது சாய், "நீங்கள் விரும்பினால் போகலாம்; ஆனால் எட்டு நாட்களில் திரும்பி வாருங்கள்" என்றார். "நான் எட்டு நாட்களில் திரும்பி வருவதைக் குறித்து உறுதியாகக் கூற முடியாது" என்று காஷிநாத் பதிலளித்துப் புறப்பட ஆயத்தமானார். அதற்கு சாய் பாபா, "சரி! நான் என்ன செய்ய முடியும் என்று பார்க்கிறேன்" என்று மறைமுகமாகக் கூறினார். 'என்னே இறைவனின் திருவிளையாடல்! காஷிநாத்திற்கு அந்த நிலையிலும் ஒரு சிறு அகங்காரம்; அதுவும்தான் அழிய வேண்டுமே!'

காஷிநாத் திரும்பி வந்தபின், சூழ்நிலைகள் அவரை மறுபடியும் சரியாக எட்டாவது நாள் ஷிர்டிக்கு அழைத்து வந்தது. இறைவன் அமைத்த வழி, வேறு என்ன சொல்வது?

சாய் பாபா, காஷிநாத்தை அன்புடன் வரவேற்று, அருகிலுள்ள கண்டோபா கோயிலில் தங்க வைத்து, எதுவும் உண்ணாமல் தியானம் செய்யுமாறு அறிவுறுத்தினார். இந்தக் கோயிலில் இருந்த வேளையில்தான், மக்கள் உபாஸனி மஹாராஜ் என்று அவருக்குப் பெயர் சூட்டினர். "நான் கடவுள்" என்ற உணர்வை, உண்மை நிலையை அவருக்கு அளித்தவர் சாய் பாபா. அடுத்த மூன்று வருடங்களில் அவர் சாதாரண மனித உணர்வுகளை அடைந்து, சத்குரு உபாஸனி மஹாராஜ் என்ற நிலையை எய்தினார்.

உபாஸனி மஹாராஜை நோக்கி மேர்வான் வந்தபோது, அவர் அருகிலிருந்த கல் ஒன்றை எடுத்து மேர்வானை நோக்கி எறிய, அது மேர்வானின் நெற்றியில், பாபாஜான் முத்தமளித்த அதே இடத்தைக் காயப்படுத்தியது.

இந்தச் செயல்தான் மேர்வான் தன்னுடைய சாதாரண மனித உணர்வுகளைத் திரும்பப் பெற உதவியது. 1915ஆம் ஆண்டு சத்குரு உபாஸனி மஹாராஜ் அவரது இருப்பிடத்தை ஸாக்கோரிக்கு மாற்றினார்.

அடுத்த ஏழு வருடங்கள் மேர்வான், பெரும்பாலும் உபாஸனி மஹாராஜுடன் இருந்து, தனது மனித உணர்வை முற்றிலுமாகத் திரும்பப் பெற்றார்..

1922 ஜனவரி மாதம், உபாஸனி மஹாராஜ் அவருடைய சீடர்கள் மற்றும் மேர்வானின் நண்பர்களை அழைத்து, “நான் என்னுடைய திறவுகோலை மேர்வானுக்குக் கொடுத்துவிட்டேன்; என்னிடமிருந்த அனைத்தையும் தந்துவிட்டேன்” எனக் கூறி, “மேர்வான்! நீ ஆதிசக்தி” என்று இரு கரங்களாலும் மேர்வானை வணங்கி கண்ணீர் வடித்தார்; மேர்வான் உடனே அவரது கரங்களைப் பற்றி வணங்கிவிட்டு, அருகில் நின்ற குதிரை வண்டியில் புறப்பட்டுச் சென்றார்.

மேர்வான் ஸாக்கோரியிலிருந்து சென்ற பின்பு, மஹாராஜ் தன்னைத்தானே ஒரு சிறிய மூங்கில் கூண்டில் அடைத்து வைத்து தவமிருந்தார். ஏறக்குறைய 20 வருடங்கள் கடந்தன.

1941, டிசம்பர் மாதத்தில் பூனா மற்றும் அவர் பிறந்த ஊரான ஸத்னாவுக்கு விஜயம் செய்தார். அவ்வேளையில் மஹாராஜ் ஒருவரையும் அடிபணிந்து வணங்க அனுமதிக்கவில்லை.

1941, டிசம்பர் 24ஆம் நாள் சத்குரு உபாஸனி மஹாராஜ் இரவில் தூங்கும் வேளையில் மாரடைப்பால் உயிரைத் துறந்தார்.

ஓ உபாஸனி மஹாராஜ்! நாங்கள் உங்களுக்குத் தலை வணங்குகிறோம்! வரும்காலம் உங்கள் பெயரைச் சொல்லி வணங்கும்! ஆதிபகவனை நீங்கள் பூமியில் கொண்டு வந்து, இக்காலத்தின் கண்ணீரைத் துடைக்க, அவருக்கு இறை ஞானத்தை அளித்தீர்கள்! நாங்கள் உங்களை நன்றியுடன் வணங்குகிறோம்!



மெஹர் பாபாவின் தந்தை,
ஷெரியார் ஈரானி

மெஹர்
பாபாவின்
தாயார்,
ஷிரீன்மாய்





# ஷெரியார் & ஷிரீன் - மெஹர் பாபாவின் தந்தையும் தாயும்

**(Shahryar & Shireen – Meher Baba's Father & Mother)**

காலச்சக்கரம் சுழலும்போது உலகில் பலவிதமான மாற்றங்கள் உருவாகும். கடவுளின் திட்டங்களும், வடிவமைப்புகளும், மனிதனின் மூலமாக மாற்றங்களைக் கொண்டு வரும். 7000 வருடங்களுக்கு முன்பு, தீர்க்கதரிசியாக வந்த ஸொராஸ்டர் (PROPHET ZORASTER) பெர்ஸியாவில் (இப்போது ஈரான்) பிறந்தார். அவரைப் பின்பற்றும் பாரசீகர்களை ஈரானி என்பர்.

18ஆம் நூற்றாண்டில் ஈரான், முஸ்லிம் அதிகாரத்தின் கீழ் வந்தபோது, ஈரானியர்கள் அங்கு வாழ முடியாத நிலையில், அனைவரும் அயல்நாடுகளுக்குச் சென்று குடியேறினர். பலர் இந்தியாவில் குஜராத், மஹாராஷ்டிரா பகுதிகளில் வந்து அடைக்கலமாயினர்.

என்ன ஒரு பிராப்தம்! கடவுள் நம் மண்ணில் பிறந்து நம்முடன் வாழ்வதாகத் திட்டம்! இதைவிட முக்கியமான நிகழ்வு வேறு என்னவாக இருக்க முடியும்?

மெஹர் பாபாவின் தந்தை 'ஷெரியார்' (SHERIAR) 1853ஆம் வருடம் ஈரானின் 'கொராம்ஷா' (KHORRAMSHAH) கிராமத்திலும், தாயார் 'ஷிரீன்' - SHIREEN (ஷிரீன் என்றால் இனிமை என்று பொருள்) 1877ஆம் ஆண்டு மும்பையிலும் பிறந்தனர்.

ஷெரியார், அவரது தந்தையுடன் பார்சி கல்லறையில் அவருக்கு உதவியாக இருந்தார். பிணங்களைப் பார்த்து அவர் உள்ளத்தில் எழுந்த வைராக்கிய சிந்தனைகள் படிப்படியாக அவரை, கடவுளை நோக்கி, காந்தம் போல் ஈர்த்துச் சென்றன. படிப்பறிவு இல்லாதபோதும், ஸொராஸ்டரின் 'அவெஸ்தா' (AVESTA), ஹஃபீஸின் 'திவான்' (DIVAN OF HAFIZ) இவைகளில் மிகுந்த ஆர்வம் காட்டினார். எப்போதும் கடவுள் சிந்தனையில் இருந்தார். மாறாக, தாயார் ஷிரீன் உலக வாழ்க்கையில் அதீத ஈடுபாடுள்ளவர். என்ன அற்புதம்! அவதார புருஷரை ஈன்றெடுக்கும் பொறுப்பு - ஒரு புறம் கடவுள், மறுபுறம் மாய உலகம் - இதுதான் அவதார புருஷரின் உண்மை நிலை.

ஷெரியார், தனது 12ஆம் வயதில் கொராம்ஷா கிராமத்திலிருந்து புறப்பட்டு, கடவுளைக் காணும் ஏக்கத்தில், 'எஸ்தான், எஸ்தான் (YEZDAN) என உச்சரித்துக்கொண்டே காடு, மலை, பாலைவனம் எங்கும் அலைந்து திரிந்து, தன்னைப் பெரும் சிரமத்திற்கு உள்ளாக்கிக் கொண்டார். தன்னம்பிக்கையும், மன தைரியமும் அவரைக் கடவுளை நோக்கிக் காந்தம் போல் ஈர்த்துச் சென்றது.

1873ஆம் ஆண்டு தனது சகோதரருடன் இந்தியா வந்து, குஜராத்தில் குடியேறினார். பல தொழில்களில் தன்னை ஈடுபடுத்த முயற்சித்த ஷெரியார்,

எதிலும் பற்றில்லாமல் மறுபடியும் கடவுளை நாடி, காடு, பாலைவனம் என அலைந்தார். ஷெரியார் ஒரு மிகச் சிறந்த, அற்புதமான மனிதர். எண்ணத்திலும், செயலிலும் மிகவும் தூய்மையானவர்.

1884ஆம் ஆண்டு குஜராத்தில் ஓர் அடர்ந்த வனப்பகுதியில், 'சில்லா-நாஷினி' (CHILLA-NASHINI, ஒரு வட்டம் வரைந்து அதனுள் உண்ணாமல், அருந்தாமல் 40 நாட்கள் கடவுளை நினைத்துத் தவமிருந்தால், தவத்தின் இறுதியில் கடவுளைக் காண முடியும் என்ற ஒரு நம்பிக்கை) என்ற தவத்தை மேற்கொண்டார். 30 நாட்களுக்குப் பின்னர் அவரால் தொடர முடியாத நிலையில், தாகத்தோடு வட்டத்திற்கு வெளியே வந்து, அருகிலிருந்த ஏரிக்கரையில் மயங்கி விழுந்தார். அப்போது அங்கே "நீ யாரைத் தேடி அலைகிறாயோ, நீ யாரைக் காண விரும்புகிறாயோ, அவரை அடையப்பெறுவது இப்போது உன் விதியில் இல்லை; உனக்குப் பிறக்கும் குழந்தை, அதை அடைவான்; அந்த மஹான் வழியாக நீ விரும்பியதை அடைவாய்" என்ற குரல் கேட்டுக் கண் விழித்தார். "இது எப்படி? எனக்கு மனைவி இல்லை; குழந்தையும் இல்லை; எப்படி ஒரு குடும்பம்?" என்று தனக்குள்ளே பேசிக் கொண்டு ஷெரியார் நடந்தார்.

இறுதியில், விதி அவரை பூனாவில் வாழ்ந்த அவரது சகோதரி பிரோஜாவின் (PIROJA) இல்லத்திற்கு அழைத்து வந்தது. தன் உடன் பிறந்த தம்பி, கடைசியாகத் தன்னோடு வந்து இணைந்ததை எண்ணி பிரோஜா மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார்.

என்ன ஓர் அமைப்பு! என்ன ஓர் இறை நாடகம் பாருங்கள்! தாயார் ஷிரீன், பிரோஜாவின் வீட்டருகில் வாழ்ந்த கோலண்டூன் (GOLANDOON) எனும் நெருங்கிய தோழியின் மகள்; அப்போது அவள் ஏழு வயது சிறுமி; பள்ளியில் பயின்று வந்தாள்.

பிரோஜாவுக்குத் தனது தம்பி ஷெரியார் பூனா வந்தது, இழந்த ஒன்றை அடைந்தது போல், அளவிலா சந்தோஷம். ஏதேனும் தொழில் அல்லது வேலை செய்து, பார்சி பெண்ணை மணந்து குடும்ப வாழ்க்கை வாழவேண்டும் என்று பிரோஜா அடிக்கடி, தம்பியிடம் கூறி வந்தார்.

கடவுள் அவரிடம் கூறியதன் முழு அர்த்தமும் புரியாமல் ஷெரியார் அதை நினைத்துக் கவலைப்பட்டார். ஏனெனில் அவர் இதயம் இன்னும் கடவுளையே எண்ணி 'பிரியமுள்ள எஸ்தான்! உன் விருப்பம்தான் என்ன?' என்று கேட்டுத் தவித்தது.

1883ஆம் வருடம் (வயது 29) ஒரு நாள் ஷெரியார் மிகவும் கவலையுடன் காணப்பட்டார். பிரோஜா தம்பியிடம், 'உனக்கு என்னவாயிற்று?' என்று கேட்க, ஷெரியார் 'எனது மனம் சரியில்லை; நான் இங்கிருந்து உடனே சென்றாக வேண்டும்' என்றார். ஒன்றும் புரியாத பிரோஜா, 'இங்கிருந்து போகாதே! நீ இப்படி சன்னியாசியாக அலைவதில் எனக்கு விருப்பமில்லை; தயவு செய்து

நான் சொல்வது போல் ஒரு திருமணம் செய்துகொண்டு, சந்தோஷமாக இங்கே இரு' என்று மன்றாடினார். ஷெரியார் அதற்கு 'எனக்கு அந்த மாதிரியான வாழ்க்கையில் சற்றும் விருப்பமில்லை; திருமணத்தைப் பற்றி இனி எதுவும் பேசக்கூடாது' என்று உறுதியாகக் கூறிவிட்டார்.

பிரோஜா அழுது கண்ணீர் விட்டுக் கெஞ்சினார். இதைப் பார்த்த ஷெரியார், 'இதுபோன்றப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கத்தில்', இதுவே சரியான தருணம் என்று நினைத்து, அந்த வழியாக பள்ளிக்குச் சென்றுகொண்டிருந்த, பக்கத்து வீட்டு ஷிரீன் என்று அழைக்கப்பட்ட சிறுமியைக் காண்பித்து, "சரி, நான் திருமணம் செய்து கொள்வதானால், அதோ பள்ளிக்கூடம் செல்லும் அந்த சிறுமியைத்தான் மணம் செய்வேன்" என்று பிரோஜாவிடம், விளையாட்டாக, நடக்க முடியாத சம்பவம் என நினைத்து, அவ்வாறு கூறினார்.

பிரோஜா அதைக் கேட்ட சந்தோஷத்தில், கோலண்டூண் (ஷிரீனின் தாயார்) வீட்டிற்குச் சென்று, விபரங்களை எடுத்துக் கூறி ஷிரீனை ஷெரியார்க்குப் பெண் கேட்டார்; கோலண்டூனுக்கு ஷெரியார் மீது அளப்பரிய பிரியம்; சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்த வண்ணம் இருந்து, 'சரி' என்று சம்மதம் தெரிவித்தார். ஷிரீனின் தந்தையார் இத்திருமணத்தில் விருப்பம் காட்டவில்லை. கடவுள் எப்படி விளையாடுகிறார் பாருங்கள்!

பிரோஜா அளவிலா சந்தோஷத்தில் இந்தச் செய்தியைத் தம்பிக்குத் தெரிவித்தார். ஷெரியார்க்கு எதுவும் செய்ய முடியாத நிலை. கடவுளின் விருப்பம் என ஏற்றுக் கொண்டார். உடன் பிறந்த சகோதரிக்கு அளித்த வாக்குறுதியை ஏற்று மணம் செய்ய சம்மதம் தெரிவித்தார்.

இவ்வாறு 1892ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. அப்போது ஷிரீனுக்கு 14 வயது, ஷெரியார்க்கு 39 வயது. திருமணமான போது ஷெரியார் ஷிரீனுக்கு, பெர்ஸியன் மொழி மற்றும் ஹஃபீஸின் திவான் போன்றவற்றைக் கற்றுத் தந்தார்.

முதல் குழந்தையை ஷிரீன் 1893ஆம் ஆண்டு ஈன்றெடுத்தார்; ஜாம்ஷெட் (JAMSHED) என்று பெயர்.

இரண்டாவது குழந்தைதான் 'மேர்வான்' (MERWAN) என்று அழைக்கப்பட்டு 'மெஹர் பாபா'வாக இவ்வுலகிற்கு வந்தவர். இவ்வாறு மெஹர் பாபா பிப்ரவரி 25ஆம் நாள் 1894ஆம் வருடம், ஒரு சாதாரண குழந்தையாக இம்மண்ணில் பிறந்தார்.

எவ்வளவு அழகான, அற்புதமான நாடக மேடை இந்த உலகம்! உலகத்தை விழிக்கச் செய்து, அடுத்த 700 ஆண்டுகள் வாழ வழிவகுக்கும் அவதார புருஷர் நடமாடும் மேடை இது!

இந்தியாவில், பூனாவை மையமாக வைத்து, அருகாமையில் அமர்ந்து, கதை, வசனம், இயக்கம் அனைத்தையும் சுவாரஸ்யமாக அமைக்கும் ஐந்து சத்குருக்கள்!

இந்த அத்தியாயத்தின் முதல் பாகமாக, அவதார புருஷர் கருவாக ஷிரீனின் வயிற்றில் உருவெடுக்கும் தருணம்!

இம்முறை ஷிரீனுக்கு ஓர் இனம்புரியாத உணர்ச்சி, மகிழ்ச்சியூட்டும் கனவுகள், அவருள் தோன்றிய சில நிகழ்வுகள் ஏதோவொரு வகையில் ஷிரீனை ஆனந்தத்தில் ஆழ்த்தின.

கடவுளால் நிர்ணயிக்கப்பட்ட, கடவுளை ஈன்றெடுக்கும் தகுதியை அடையப்பெற்ற ஷெரியார்-ஷிரீன் இருவரும் உன்னதமானவர்கள், கருணை மிக்கவர்கள், கடவுளை அடையும் பாக்கியம் படைத்தவர்கள் என்றால் மிகையாகாது.

ஷிரீன், தாய்மையின் மகத்துவத்தைப் புரிந்து கொள்ளாத ஓர் இளம்பெண். வெட்கத்தில் தனது முதல் குழந்தையைக் கண்டுகொள்ளாமல் சகோதரி டவ்லாவின் (DOWLA) கண்காணிப்பில் வளரச் செய்தார்.

ஷெரியார் குடும்பம், அப்போது 'போப்லா ஹவுஸ்', பட்லர் வீதி, பூனாவில் வாழ்ந்து வந்தது.

ஷிரீனுக்கு அவ்வப்போது கனவுகள்: 'உயர்ந்த அந்தஸ்தும், சிறப்பும் மிக்க சூரியனைப் போன்ற தோற்றத்தில் ஒருவர் அலங்காரத் தேரில் வருகையில், மிதமான ஒளி உலகெங்கும் பரவுகிறது. ஒரு சிலர் தேரை இழுத்துவர, பலர் ஊர்வலமாக வருகின்றனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் அவரையே பார்த்த வண்ணம் இருக்கின்றனர்' என்று தனது தாயாருக்குக் கனவில் வந்ததை விளக்கினார். தாயார் 'இது ஒரு நல்ல சகுனம்; அந்த மாதிரி ஒரு குழந்தை உனக்குப் பிறக்கும்' என்று விளக்கிச் சொன்னார். ஷெரியார்க்குத் தெரியும் இது ஒரு தெய்வக் குழந்தை என்று. இறைவனின் குரல் அவரது செவிகளில் ஒலித்துக் கொண்டேயிருந்தது.

1894ஆம் ஆண்டு பிப்ரவரி 25 அதிகாலையில், ஷிரீன், டேவிட் ஸஸூன் (DAVID SASSOON) மருத்துவமனையில் இரண்டாவது குழந்தையை ஈன்றெடுத்தார். ஸொராஸ்டிரியன் நாள்காட்டிப்படி மெஹர் (சூரியன்) மாதத்தில் பிறந்ததால் 'மேர்வான்' (MERWAN) என்று பெயர். அன்பாக 'மெரோக்' (MEROG) என்று அழைத்தனர்.

ஷிரீன், மேர்வானைத் தன்னுடைய முதல் குழந்தையாகவே கருதினார். போப்லா ஹவுஸில் பெற்றோர், குழந்தையுடன் வாழ்ந்து வந்த சில மாதங்களுக்குப் பிறகு, ஷிரீன் கண்ட வேறொரு கனவு: "நான் வீட்டு வாசலில் மெரோகுடன் நின்று கொண்டிருந்தேன்; அருகிலிருந்த கிணற்றிலிருந்து ஒரு சிறிய, அழகிய பெண் உருவம் - இந்து தேவதைப் போலத் தோற்றம் - வெளியே வந்தது; அவளுடைய அலங்கார பச்சை நிற புடவையும், வளையல்களையும் பார்த்து, பிரமித்துப் போனேன். நெற்றியில் பல்வேறு நிறங்களில் வரையப்பட்ட மல்லிகைப்பூ வடிவங்கள் - பூ, கற்பூரம், எண்ணெய், அகர்பத்தி இவைகளடங்கிய தட்டைக் கையில் ஏந்திய வண்ணம் நின்று கொண்டிருந்தாள்.

“நான் அசையாமல் ஆச்சரியத்தில் பார்த்துக் கொண்டிருந்த போது, அவளது கையை நீட்டி ‘உனது பையனை என்னிடம் கொடு… உனது பையனை என்னிடம் கொடு…’ என்றாள்.

“அச்சத்தில் நான் மெரோகை இறுக அணைத்ததும் எனது கனவு கலைந்தது. மெரோக் பக்கத்தில் தூங்கிக் கொண்டிருந்ததைப் பார்த்து மனம் ஆறுதல் அடைந்தது.”

அந்த சம்பவத்திற்குப் பின்னர், ஏதோ ஒன்று மேர்வானை எப்போதும் அழைப்பது போல் ஓர் எண்ணம்.

ஷிரீனின் தந்தை தொராப்ஜி (DORABJI) அவரது கோபத்தை மறந்து, மெரோக் மீதுள்ள அளப்பரிய பாசத்தில், ஷெரியார் மீது மதிப்பும், மரியாதையும் காட்டத் தொடங்கினார். தொராப்ஜி, ஷெரியார் வீட்டுக்கு அவரது பேரக் குழந்தையின் தாமரை போன்ற முகத்தைப் பார்ப்பதற்காக வருவது வழக்கம். அவர் மேர்வானின் அழகான தெய்வீகத் தோற்றத்திற்கு அடிபணிந்தார். மேர்வானும், தாத்தா தன்னுடனிருப்பதை விரும்பினான். இவ்வாறு மேர்வான் ஆரம்ப நாட்களிலிருந்தே அனைவரையும் ஆனந்த வெள்ளத்தில் தத்தளிக்க வைத்தான்.

மேர்வான் சாதாரண குழந்தைகளைப் போலல்லாமல் மிகவும் வழக்கத்திற்கு மாறாகத் தென்பட்டான். குறும்புத்தனத்திலும் சிறந்து விளங்கினான். ஒரு முறை ஷிரீன் மேர்வானை, வெளியே நின்ற மரத்தின் கீழ் தூங்க வைத்துவிட்டு, வீட்டிற்குள் சென்று, திரும்பி வந்தபோது ‘மேர்வான் ஒரு நாகப்பாம்புடன் மகிழ்ச்சியாக விளையாடிக் கொண்டிருந்தான்; பீதியடைந்த ஷரீன் கதறி, பாம்பைத் தள்ளிவிட்டு, மெரோக் என அள்ளி அணைத்தார். அருகில் இருந்தவர்கள் ‘மேர்வானின் எதிர்காலம் மிகவும் மேன்மையாக இருக்கும்’ என்று சொல்லி ஷிரீனை ஆறுதல் படுத்தினர்.

தாயார், தொல்லை தாங்காமல் அடிக்கடி அவனைக் கட்டில் காலோடு சேர்த்துக் கட்டி வைத்தார். தந்தை ஷெரியார் உடனே வந்து அவனை விடுவித்து விளையாடச் செய்வது வழக்கம். மெரோக் அருமையான புன்முறுவலுடன் தந்தையை நோக்கினான்.

மேர்வான் பேச ஆரம்பித்த போது, தாயை ‘மெமோ’ (MEMO) என்றும், தந்தையை ‘போபோ’ (BOBO) என்றும் அழைத்தான்; அவர்கள் வாழ்நாள் முழுவதும் அப்படியே அழைக்கப்பட்டனர்.

மேர்வானின் முகம் மிக அழகாகவும், கவர்ச்சியாகவும் இருந்தது. அக்கம் பக்கத்தில் அனைவருக்கும் செல்லப்பிள்ளையாக வளர்ந்து வந்தான். தங்க நிறத்தில் அடர்த்தியான தலைமுடி. ஷிரீன் அதை வெட்டாமல் அப்படியே வளர்த்து வந்தார். குறும்புகள் செய்தால் தாயார், மேர்வானைக் கண்டித்து அறைவதுண்டு. ஆனால் ஷெரியார் தெய்வக் குழந்தை என அவருக்குத் தெரிந்ததால் மெரோகை, பக்தி கலந்த அன்போடு கவனித்து வந்தார்.

ஐந்து வயதில் மேர்வான் சிறுவர் பள்ளியில் சேர்க்கப்பட்டான் - குஜராத்தி மற்றும் கணித பாடங்களைக் கற்றுக் கொண்டான். படிப்பில் படுபுத்திசாலியாக இருந்தாலும் கணிதம் அவருக்கு ஒரு தலைவலி. தந்தையிடம் வந்து புகார் செய்வது வழக்கம். ஒரு முறை கணித வகுப்பில் அதிர்ச்சி தரும் ஓர் அனுபவம்: கணித வகுப்பில் பாடம் கற்றுக் கொண்டிருந்த வேளையில், மேர்வானின் வகுப்பாசிரியர் அவன் மயக்கமாக இருந்ததை கவனித்து, முகத்தில் தண்ணீரைத் தெளித்து, விழிக்க வைத்தார். அந்த அருமையான அனுபவத்திலிருந்து மீண்டுவர மேர்வான் விரும்பவில்லை. வீட்டிற்கு வந்த மேர்வான் "**நான் பிரகாசமான சிறு சிறு புள்ளிகள் நிரம்பிய வட்டங்களையும், அவைகளிலிருந்து சூரியன், சந்திரன், மற்றும் நட்சத்திரங்கள் வெளிவருவதையும் பார்த்தேன்**" என்று ஷெரியாரிடம் கூறினான். இவ்வாறு மேர்வானின் பள்ளி வாழ்க்கை தொடர்ந்தது.

ஒரு நாள் மேர்வான் சாக்லேட் வாங்க விரும்பி, தனது தந்தையின் சட்டைப் பையிலிருந்து ஒரு நாணயத்தைத் திருடினான். பக்கத்துக் கடைக்குச் சென்று சாக்லேட் வாங்கிவிட்டு, காசு கொடுத்தபோது, அது செல்லாக்காசு என்று கூறி, கடைக்காரர் சாக்லேட்டைத் திருப்பிக் கேட்டார். மேர்வான் தந்தையிடம் வந்து நடந்ததைச் சொல்லி, நல்ல நாணயம் தருமாறு கேட்டான். ஷெரியார் உடனே "ஓஹோ! அவனுக்குச் செல்லும் காசு தேவையா?" எனக் கேட்டுவிட்டு இன்னொரு நாணயத்தைக் கொடுத்தார். மேர்வான் மேலும் கீழும் பார்த்துவிட்டு "**போபோ! இந்த நாணயத்திலும் கால்களைக் காணோமே! இது எப்படிச் செல்லும்?**" என்று வெகுளித்தனமாகக் கேட்டான். ஷெரியார் விழுந்து விழுந்து சிரித்தார்.

இப்படி, அடிக்கடி மேர்வான் சில்லறைக் காசுகளை எடுத்து ஏழைகளுக்கும், பிச்சைக்காரர்களுக்கும் கொடுப்பதுண்டு. ஒரு நாள் ஷெரியாரும், ஷிரீனும் தூரத்திலிருந்து கவனிக்கும்போது, மேர்வான் ஒரு நாற்காலியில் ஏறி, ஷெரியார் சட்டைப்பையிலிருந்து காசுகளை எடுத்தான். ஷிரீன் அருகில் வந்து "டேய் திருடா! என்ன செய்கிறாய்?" என்று சாதாரண உலகத்துத் தாய்மார்கள் கேட்பது போலக் கேட்டார். உடனே மேர்வான், "**போபோ! நான் திருடனா?**" என்று கேட்டதற்கு, "இல்லை மெரோக்! நீ திருடனல்ல; திருடர்கள் ஏழைகளுக்குத் தரமாட்டார்கள்" என்று ஷெரியார் சிரித்துக் கொண்டே பதிலளித்தார்.

இதுபோல, சமையல் அறையிலிருந்து இனிப்புப் பண்டங்களை எடுத்து வெளியில் அனைவருக்கும் கொடுத்து வந்தான். தாயார் கேட்கும்போது "**மெமோ! உனக்குத்தான் தெரியுமே நான் பருப்பும், சாதமும்தான் விரும்பி சாப்பிடுவேன் என்று!**" பொய்யின் எந்த சாயலும் இல்லாமல் பதிலளித்தான். (பொய்ப் பேசுவது தவறு என்பதை சிறு வயதிலிருந்தே புரிந்து கொண்டான்).

ஒரு பார்சி தம்பதியினர் வீட்டின் அருகில் ஓர் அங்காடியை நடத்தி வந்தனர். அந்தப் பெண்மணிக்கு மேர்வான் மீது அப்படி ஒரு பிரியம். அவன் பிறரோடு பகிர்ந்து கொள்ளும் பொருட்களைத் தாராளமாக அள்ளிக் கொடுத்தார். இந்த விஷயம் கணவனுக்குத் தெரியவந்து கண்டித்தபோது, மேர்வானை அங்காடியின் பின்புறம் வரச்சொல்லிக் கொடுத்து வந்தார். மேர்வான் அனைத்தையும் ஏழைகளுக்கு வாரி வழங்குவது அவ்வப்போது நடக்கும் காட்சி.

மேர்வானுக்கு பல நண்பர்கள் இருந்தனர். அவனுடைய இயற்கையான அன்பும், குணமும் அனைவரையும் காந்தம் போல் ஈர்த்தது. மேர்வானின் மிகவும் நெருக்கமான நண்பர்கள் ‘அப்துல் கனி முன்ஸிஃப்’ (ABDUL GHANI MUNSIFF), ‘கொடாதத் ஈரானி’ (KHODADAD IRANI), ‘பெய்லி’ (BAILY) மற்றும் பலர். (இவர்கள் மெஹர் பாபாவின் சீடர்களாக வந்து இணையும் விதி படைத்தவர்கள்).

ஒரு முறை மேர்வான் தனது நண்பர்களுடன் இருந்தபோது, வியாபாரி ஒருவன், தன்னுடைய தள்ளுவண்டியில், ஆணியில் வளையம் போட்டு ஆடும் விளையாட்டைக் கொண்டு சென்றான். அவர்களிடம் நான்கு அணா (25 சென்ட்) இருந்தது. மேர்வானின் நண்பர்கள் விளையாடி, மேலும் பணம் சம்பாதிக்க விரும்பினர். அதற்கு மேர்வான் **“இதுபோன்ற சூதாட்டங்களில் ஈடுபடுவது நல்லது அல்ல”** என்று எடுத்துக் கூறினான். நண்பர்கள் அதற்கு செவி மடுக்காமல், நான்கு அணா கொடுத்து வளையங்கள் வாங்கி விளையாடினர். அத்தனை வளையங்களையும் இழந்து, கடைசியில் ஒன்றே ஒன்று மீதமிருந்தபோது, மேர்வானின் துணையை நாடினர். மேர்வானும் உடனே விளையாடி, வெற்றிபெற்று இழந்த பணத்தை மீட்டுத் தந்தான். அந்த சிறு வயதிலேயே வாழ்க்கை பாடங்களைக் கற்றுத் தரும் அளவுக்குத் திறமை வாய்ந்தவனாக இருந்தான்.

மேர்வானின் நண்பன் பெய்லி எழுதிய தனது வாழ்க்கை வரலாற்றில் அவரைப் பற்றி எழுதியதைப் பார்ப்போம்:

‘மேர்வான் பிறருக்கு நன்மை செய்யும் நற்குணம் படைத்தவன். நண்பர்களுக்கு அவன் மீது அளப்பரிய பற்று. அவன் எப்பொழுதும் எங்களுக்குத் தலைவன். எல்லோரையும் நேசிப்பவன். எங்களிடையே என்ன பிரச்சினை வந்தாலும் அதை சுமூகமாகத் தீர்த்து வைத்தான். ஒரு நாள் கூட அவன் வராமலிருந்தால் வீடு சென்று விசாரித்தோம். நடத்தையில் மிகவும் எளிமையானவன். கர்வம் என்பது ஓர் இம்மியளவும் கிடையாது. திமிர் என்றால் என்னவென்றே தெரியாது. சிறு வயதிலிருந்தே நேர்மையும், தாராள குணமும் படைத்தவன். தனது துன்பங்களைவிடப் பிறரின் துன்பங்களில் அக்கறை அதிகம். குடும்ப கௌரவம், பெயர், புகழ் என்ற எண்ணமே இல்லாதவன். தூய்மையான எண்ணம் படைத்தவன்; பெண்களை அணுகுவதில் மிகுந்த தயக்கம்.

காயமடைந்த பறவைகள், விலங்குகள் மீது மேர்வானுக்கு இரக்கம் அதிகம். அவன் வீட்டில் ஒரு சிட்டுக்குருவி உயிரிழந்து இருந்ததை எடுத்து, பிரார்த்தனை மற்றும் விசேஷ மரியாதையுடன் அடக்கம் செய்தான்.

எப்பொழுதும் மகிழ்ச்சியாகவும், உற்சாகமாகவும் காணப்பட்டான். பிறரிடம் குறை காண்பது அறவே பிடிக்காது, '**ஏதோ ஒரு வகையில் எல்லோரும் நல்லவரே**!' என்ற கருத்து மொழி கூறினான். எளிமையும், ஒளிவு மறைவும் இல்லாதவர்களை மட்டுமே நண்பர்களாய் ஏற்றுக் கொண்டான். அக்கம் பக்கம் வாழும் முரட்டு குணம் படைத்தவர்கள் ஏதேனும் சொன்னால் கூட அதற்கு செவி மடுப்பதில்லை.

அவனது நன்னடத்தையில் குறை ஒன்றும் கிடையாது - குறை என்று சொல்வதானால் - தனது வருத்தம், கஷ்டம் என்பதைப் பிறருடன் பகிர்ந்து கொள்வதே கிடையாது; தன்னுள்ளே வைத்து சிரமப்படுவான். உடல் நலமில்லாமல் இருந்தாலும் வெளியே சொல்லாமல், கஷ்டங்களை அமைதியாக அனுபவிப்பது வழக்கம்.'

1902ஆம் ஆண்டு, மேர்வானுக்கு 7 வயது, அவன் வீட்டுக்கு அருகாமையில் திறந்த வெளியில் நடந்து சென்று கொண்டிருந்தான். திடீரென, கூட்டங்கூட்டமாக பல எருமை மாடுகள் மேர்வானை நோக்கி வேகமாகப் பாய்ந்து வந்தன. தாயார் ஷிரீன் வீட்டிலிருந்து தயக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார். ஒன்றும் செய்ய முடியாத சூழ்நிலை. எருமைகளின் கூட்டத்தில் மேர்வான் என்னவானான் என்று தெரியாது. மேர்வான் தெய்வக் குழந்தை. ஐந்து சத்குருக்களின் கண்காணிப்பில் வளர்ந்து வந்த குழந்தை. அவனை எவராலும் எதுவும் செய்ய முடியாது. ஓரிரு மாடுகள் மேர்வானை சூழ்ந்து பாதுகாக்க, இதர மாடுகள் பாய்ந்து சென்றுவிட்டன. மேர்வான் பத்திரமாகத் தன்வழியில் சென்றான். அக்கம் பக்கத்தில் பார்த்துக் கொண்டு நின்றவர்கள் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர்.

தனது ஒன்பதாவது வயதில், மேர்வான் 'பூனா கேம்ப் அரசு ஆங்கிலப் பள்ளி'யில் (CAMP GOVERNMENT ENGLISH SCHOOL, POONA) சேர்க்கப்பட்டான். அனைவருக்கும் மேர்வானை மிகவும் பிடிக்கும். அங்கே அவனுடைய பழைய நண்பர்கள் இருப்பதைக் கண்டு மிக்க மகிழ்ச்சி அடைந்தான். மேர்வான் எல்லோர் மத்தியிலும் மிகவும் பிரபலமாக இருந்ததால் ஒரு சில மாணவர்கள் பொறாமைப்பட்டனர். மேர்வானின் உயிர்த்தோழன் பெய்லியின் சகோதரன் ஹோமி (HOMI) மேர்வானுக்கு முதல் எதிரி ஆனான்.

ஒரு முறை பள்ளியில் ஹாக்கி விளையாட்டில், ஹோமி எதிர் அணியின் தலைவராக இருந்தான். மேர்வான் மிகவும் சிறப்பாக ஆடி எதிரணியைத் தோற்கடித்த போது, ஹோமி, ஆத்திரத்தில், கடைசி நிமிட ஆட்டத்தில் மேர்வானின் முழங்காலில் தாக்கிக் காயப்படுத்தினான். மேர்வான் கோபமோ, வருத்தமோ அடையாமல் '**சரி**, **பரவாயில்லை**' என்று சொல்வது

போல ஹோமியைப் பார்த்துப் புன்னகைத்தான். அந்த நிமிடத்திலிருந்து ஹோமி வெளியளவில் எதிரி போலத் தோன்றினாலும், தனக்குள்ளே மிகுந்ததொரு மரியாதையை வளர்த்து வந்தான்.

மேர்வான் விளையாட்டில் முதலிடம் வகித்து ஏராளமான பரிசுகளை வென்றாலும், அவற்றைத் தன் அணியிலுள்ள அத்தனை நண்பர்களோடும் பகிர்ந்து கொண்டான்.

சிறு பருவத்திலிருந்தே எதிலும் ஒழுங்காக இருப்பதும், படிப்பு, விளையாட்டு, பிரார்த்தனை அனைத்திற்கும் தனித்தனி நேரம் ஒதுக்கிக் கடைப்பிடிப்பதும் வழக்கம். மேர்வான் சிறப்பான குரல்வளம் மிக்கவன். தினமும் அதிகாலையில் பிரார்த்தனை மற்றும் அவெஸ்தாவிலிருந்து (பார்சிகளின் புனித நூல்) பாடல்கள் பாடுவதை அக்கம் பக்கம் உள்ளவர்கள் தினமும் கேட்டு மகிழ்வதுண்டு. பார்சி அக்யாரிக்குச் (அக்னி கோவில்) சென்று தொழுது வருவது வழக்கம்.

1904ஆம் வருடம், மேர்வான், ஜாம்ஷெட் (பெரிய சகோதரன்) இருவருக்கும் புனிதநூல் சடங்கு, பூனா அக்யாரியில் நடைபெற்றது. மேர்வானுக்கு, மதச்சடங்கு சம்பிரதாயங்களில் நம்பிக்கை இல்லையெனினும், தனது பெற்றோரின் விருப்பத்திற்கு இணங்கி அதில் பங்கெடுத்து, விழா எப்போது நிறைவுறும் என எதிர்பார்த்து, 'அவஸ்தா'வை வேகமாகப் புரட்டிக் கொண்டிருந்தான்.

மேர்வானுக்கு வயது 12. இந்த சிறு வயதிலேயே சிறந்த ஆன்மீக ஞானம் உடையவனாகக் காணப்பட்டான். தன்னுடைய நெருங்கிய நண்பர்களுக்கு ஒரு முறை இவ்வாறு விளக்கமளித்தான்:

**"ஒவ்வோர் ஆத்மாவும் இவ்வுலகில் குறுகிய காலத்திற்கே இருக்கும். நமது நேரம் வரும் வேளையில், இவ்வுலகைவிட்டு வெறுங்கையோடுதான் செல்வோம். எந்த நேரத்தில் நாம் தொடரும் பயணத்திலிருந்து பிரிந்து செல்வோம் என்று எவருக்கும் தெரியாது. ஆனால் இன்று அல்லது நாளை நமக்குப் பிரியமான எல்லாவற்றையும் விட்டுச் செல்லவேண்டும்.**

**"இது தெரிந்தும், இவ்வுலகம் மற்றும் அதிலடங்கிய நமக்குச் சொந்தமான அனைத்திலும் ஆசை காட்டுவதும், எப்படியேனும் அதைக் கட்டிக்காப்பதும் முட்டாள்தனமாகும்.**

**"எனவே, இந்தக் குறுகிய வாழ்வில் நாம் ஸொராஸ்டரின் போதனைகளைப் பின்பற்றி நல்லவர்களாக வாழ்வதில்தான் அர்த்தமுள்ளது. நமது மதக்கோட்பாடாகிய 'நல்ல சிந்தனைகள், நல்ல வார்த்தைகள், நற்செயல்கள்' இவற்றை ஒழுங்காகக் கடைப்பிடித்தால் வாழ்வில் வெற்றிகாண முடியும். மேலும் இவ்வுலக**

**சமாச்சாரங்களிலிருந்து விலகியிருந்தால் வாழ்க்கை வித்தியாசமானதாகவும், சிறப்பாகவும் இருக்கும்.**"

தந்தை ஷெரியார், துறவியாக, இறைவனைத் தேடி அலைந்தபோது அடையப்பெற்ற அனுபவங்களால், மேர்வானைப் புரிந்துகொண்டு, அவர் மீது அளப்பரிய அன்பும், மரியாதையும் வைத்திருந்தார். அவரது நெருங்கிய நண்பர்களிடம் 'எனது மகன் மெரோக் கடவுள் என்று நான் நம்புகிறேன். ஆகையால் அவனுடைய எதிர்காலம் கடவுள் கையில்தான் உள்ளது. அவனுடைய விதியை கடவுளே நிர்ணயிப்பார்' என்று கூறினார்.

மேர்வான், வாழ்க்கையில் சாதாரணமாகத் தென்பட்டாலும், இறைவாக்கும், இறைகீதமும் அவனுள்ளே ஒலித்துக்கொண்டுதான் இருந்தன. அவனுடைய இணக்கமான உறவு, சுற்றியுள்ள அனைவரையும், அவரவர் துன்பங்களை மறந்து, ஆனந்தமாக இருக்கச் செய்யும். பிறரின் பார்வையில் மேர்வான்:

ஒரு சிறந்த மாணவன்.... நல்ல விளையாட்டு வீரன்... பண்பும், மரியாதையும் உடைய சிறுவன்... ஓர் உயர்ந்த, பின்பற்றத் தகுதி வாய்ந்தவன்... அருமையான பாடகன் சிறந்த சிந்தனையாளன்... ஏழைகளுக்கு அள்ளி வழங்குபவன்... ஏழை எளிய மக்களிடம் மிகவும் இரக்கமுள்ளவன்... உயர்ந்த நன்னெறிவாதி... தூய்மையான சிந்தனை படைத்தவன்... நல்ல கவிஞன்... மாசற்ற மனம் படைத்தவன்... யதார்த்தவாதி... எல்லாவற்றிற்கும் மேலாக மென்மையான இதயம் படைத்தவன்.

அனைவரும் அவனைப் பாராட்டினர். அதற்கு உண்மையான காரணம், அவனுள்ளே எதிரொலிக்கும் இறைகீதம் என்பது தந்தை ஷெரியாரைத் தவிர வேறு எவருக்கும் தெரியாது.

மேர்வானுக்கு நண்பர்களும், அக்கம் பக்கம் பழக்கமானவர்களும் பலர் இருந்தனர். படித்தவர்கள், பணம் படைத்தவர்கள் மட்டுந்தான் உயர்ந்த நிலையில் இருக்கவேண்டும் என்ற எண்ணம் மேர்வானுக்கு அறவே கிடையாது. தனக்கு, பிறர் தரும் மரியாதையைப் பொருட்படுத்துவதுமில்லை. இவரைவிட பணக்கார குடும்பங்களில் பிறந்த பெரியவர்கள் கூட மேர்வானுக்குப் பெருமதிப்பு அளித்தனர். சொல்லப்போனால் மேர்வானை அனைவரும் பக்தியுடன் போற்றினர். சிறுவயதிலேயே '**தற்பெருமை நிறைந்தவர்களைக் கடவுள் ஏற்றுக் கொள்வதில்லை**' என்பதை நண்பர்களிடையே வலியுறுத்தினான். மேர்வான் தனது தந்தையின் இயல்பான நல்ல குணங்களைக் கொண்டவன் என்றும் கூறுவார்கள்.


மேர்வானின் நெருங்கிய நண்பன் பெய்லியோடு பழகுவதை, தாயார் ஷிரீன் விரும்பவில்லை. இதை ஷிரீன் பலமுறை மேர்வானுக்குக் கூறியும், மேர்வான் பெய்லியை விட்டு விலகியதேயில்லை. இந்த சூழ்நிலையில் இருவரும் இரவில் சந்தித்து வந்தனர் (மேர்வான் நல்லவர்களை, நல்ல

ஆத்மாக்களை அடையாளம் கண்டுகொள்ளும் யுக்தியை, உள்ளுணர்வை அப்போதே அடையப் பெற்றிருந்தான்).

மேர்வான் அவ்வப்போது இரவில் சந்திரன் மற்றும் நட்சத்திரங்களை வெகுநேரம், தன்னை மறந்து உற்றுநோக்கிக் கொண்டிருப்பது பழக்கம். இரவில் நண்பர்களும் கூடவே இருப்பதுண்டு. பெய்லி 'நீ என்ன பார்த்துக் கொண்டிருக்கிறாய்?' என்று கேட்டால், அதற்கு மேர்வான் "**நான் ஜாம்ஷெட் மன்னனின் அரச சபையைப் பார்த்தேன்**; **மயில் சிம்மாசனத்தைப் பார்த்தேன்**" என பதிலளித்து சிரித்தது, பெய்லியின் கோபத்தைத் தூண்டுவதாக இருந்தது.

மேலும் ஒரு முக்கியமான சம்பவம்: மேர்வான் அடிக்கடி பெய்லிக்கு ஆவி, பேய் இவற்றைப் பற்றிய விளக்கங்கள் அளிப்பதுண்டு. உடலைத் துறந்த ஆத்மாக்கள் மீது [ஒருவர் அவரது பௌதீக (PHYSICAL) உடலைத் துறக்கும்போது, ஆத்மா, சூட்சும மற்றும் ஆழ் மன உடல்களுடன் (SUBTLE & MENTAL BODIES), ஆவியாக, அடுத்தப் பிறவி எடுப்பதுவரை உலகில் உலாவும்] மேர்வானுக்கு அதிக நாட்டமுண்டு. ஒரு முறை பெய்லிக்கு இவ்வாறு விளக்கினா**ன்**: "**எல்லா ஆவிகளும் தீய தன்மை உள்ளதல்ல. சில ஆவிகள் மிகவும் நல்லவை. நல்ல ஆவிகள், நல்ல பக்தியுள்ள மனிதர்களின் பார்வைக்குத்தான் தெரியும்**." மேர்வான், தன**து** தந்தை ஷெரியாரின் அனுபவத்தை எடுத்துக் கூறினான்: "**எனது தந்தை அவருடைய சிறுவயதில் பார்சிகளின் இடுகாடுகளுக்குச் செல்வதுண்டு. அப்போது அங்கே ஏராளமான ஆவிகளை அடிக்கடி பார்த்திருக்கிறார்; பார்த்து பயந்ததில்லை; அவை எந்தத் தீங்கும் இழைத்ததுமில்லை. ஆவிகள் உருவத்தில் மனிதர்களைப் போலத் தோற்றமளிக்கும். தீய ஆவிகளின் கால்கள் திரும்பி, விரல்கள் பின்பக்கம் இருக்கும். மேலும் மனித உடலை துறந்த ஆத்மாக்கள் இடுகாட்டில் கூடி சந்திப்பதுண்டு**." மேர்வான் இரவு நேரங்களில் தனியாக அங்குச் செல்வது வழக்கம். பெய்லிக்கும் ஆவிகளைப் பார்த்த அனுபவம் உண்டு. பெய்லி, மேர்வானின் இவ்விதமான தீரச் செயல்களைக் கண்டு மிகவும் வியப்படைந்தான். 'கடவுளின் படைப்பில் இதுவும் அவர் உலகம்தான்!' மேர்வான் இவ்வாறு தனிமையைத் தேடி பல மணி நேரங்கள் அங்கே இருந்து வந்தான்.

மேர்வானின் சகோதரன் ஜாம்ஷெட் தனது பெரிய தாயார் டவ்லாவுடன் பூனாவின் அருகில் அமைந்த லோனவாலாவில் வாழ்ந்து வந்தான். மேர்வான் அவ்வப்போது அங்குச் செல்வது வழக்கம். தனது பெரிய தந்தை நடத்திவந்த ஹோட்டலுக்குச் சென்று, மேர்வான் அவருக்கு உதவியாக இருந்து வந்தான். மேர்வான் அங்குச் செல்லும் போதெல்லாம், அப்பகுதியில் வாழ்ந்த இரண்டு சித்தர்கள் (மஸ்துகள்) அங்கு வருவதும், ஒருவர் உள்ளே சென்று மேர்வானுடனும், மற்றொருவர் வெளியே அமர்ந்திருப்பதும் வழக்கம். இவர்கள் மேர்வானின் உண்மை நிலையை அறிந்தவர்கள். அவர் மகிமையைத் தெரிந்தவர்கள்.



ஸெயின்ட் வின்ஸென்ட் மேல்நிலை பள்ளி - 1910
கிரிக்கெட் அணியுடன் மேர்வான்

மேர்வானுக்கு வயது 15. அவருக்குப் பிறகு பெஹராம் (BEHERAM), ஜால் (JAL) என்று இரண்டு சகோதரர்கள். குடும்பத்தில், ஏற்கனவே நாம் பார்த்தது போல, ஷெரியார் ஓர் ஆன்மீக ஞானி, தாயார் ஷிரீன் ஓர் உலகப்பெண்மணி. உண்மைப்பொருள், மாயை இவற்றினிடையே நடக்கும் போராட்டத்தின் காரணமாக, ஷிரீன் தனது கடைசி பையன் ஜால் என்பவனை உளவாளியாகப் பயன்படுத்தினார். மேர்வானின் நடைமுறையைக் கண்காணித்து அவ்வப்போது தாயாருக்குச் சொல்வது ஜாலின் வேலை. மேர்வானுடைய போக்கு உலக நடவடிக்கைகளுக்கு மாறாக இருப்பதை கவனித்த தாயார் ஷிரீன், அவனை உலக வழிக்குக் கொண்டு வருவதில் தீவிரமாக இருந்தார்.

1909ஆம் ஆண்டு, மேர்வான் ஸெயின்ட் வின்ஸென்ட் மேல்நிலை பள்ளியில் (ST. VINCENT'S HIGH SCHOOL) சேர்க்கப்பட்டான். புதிய பள்ளிக்கூடம், புதிய முதல்வர், ஆசிரியர்கள். பள்ளி முதல்வர் மேர்வானிடம் ஏதோவொரு வித்தியாசமான தனித்தன்மை இருப்பதை உணர்ந்து அவன் மீது மதிப்பும், மரியாதையும் காட்டினார். மேர்வான் பள்ளியிலுள்ள பெரும்பாலானோர் உள்ளங்களில் இடம்பிடித்தான்.

படிப்பிலும், விளையாட்டிலும் மிகவும் திறமைசாலியாக இருந்தான். விரும்பி விளையாடுவது கிரிக்கெட். சிறந்த விக்கட் கீப்பராகவும், ஆட்டக்காரராகவும் திகழ்ந்தான். பூனாவில், கிரிக்கெட் விளையாட்டில் அதுவரை தவறாமல் முதல் நிலையில் இருந்த 'நியூ இங்கிலீஷ் பள்ளி'யை (NEW ENGLISH SCHOOL) முதல்முறையாக வீழ்த்தி, கோப்பைகள் வென்றது இன்றும் பள்ளியின் சரித்திரத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

மேர்வான் படிப்பில் முதல் மாணவனாக இருந்தபோது, பலரும் அவனை, சந்தேகத்துடன் பார்த்தனர். தேர்வுகளில் புத்தகங்களைப் பார்த்து எழுதியதாகப் பொய்ப் புகார் செய்தனர். ஒரு முறை ஆசிரியர் ஒருவர் சந்தேகத்தில் அவனை அடித்துக் கண்டித்தார். ஆனால் அதைப் பொய் என்று தெரிந்துகொண்ட ஆசிரியர், மேர்வானிடம் மன்னிப்புக் கோரினார். அதற்கு மேர்வான், "**பரவாயில்லை. அதில் என்ன இருக்கிறது? நான் அதை அப்போதே மன்னித்து, மறந்துவிட்டேன்**" என்றான். "**எதையும் மனதில் வைத்துக் கொள்ளாமல், மன்னித்து, மறந்து, பின்னர் அதை இறைவனிடம் விட்டு விடுவதுதான் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு அடித்தளம்**."

மேர்வானுக்கு இஸ்லாமிய சத்குரு 'ஹஃபீஸ்' (HAFIZ) என்பவரின் கவிதைகள் என்றால் அலாதி ஆசை. தந்தை ஷெரியாரை வாசிக்கச் சொல்லிக் கேட்பதுண்டு. தானாகப் படிப்பதில்லை. ஷெரியார் வாசித்ததை அப்படியே வார்த்தைக்கு வார்த்தைத் தவறாமல் எடுத்துரைத்தான். சத்குருக்கள் 'ஸந்த் துக்காராம்' (SANT TUKARAM) மற்றும் 'ஸ்வாமி ராம்தாஸ்' (SWAMY RAMDAS) எழுதிய பஜனை பாடல்களைத் தனது குரலில் அருமையாகப் பாடினான். பகவத்கீதை, ராமாயணம் அனைத்தும் அத்துப்படி. ஸூஃபி குருநாதரான 'ஜலாலுதீன் ரூமி'யின்

(JALADUDDIN RUMI) பொன் மொழிகளை (அவன் அதை இந்த வாழ்க்கையில் கற்றுக் கொள்ளாத போதும்) எடுத்துக்காட்டாகக் கூறுவது வழக்கம்.

மேர்வான் வேறு மதங்களைச் சார்ந்த ஆன்மீகப் புத்தகங்களைப் படிப்பதுண்டு. காதல் கதைகள் அல்லது நாவல்கள் படித்தது கிடையாது. ஸெக்ஸ்டன் பிளேக் (SEXTON BLAKE), ஷெர்லாக் ஹோம்ஸ் (SHERLOCK HOLMES) மற்றும் ஸொராப்ஜி தேசாயின் (SORABJI DESAI) குஜராத்தி இலக்கியங்களையும் விரும்பிப் படித்தான். ஸெயின்ட் வின்ஸென்ட் பள்ளியில் படித்தபோது, சர் வால்டர் ஸ்காட் (SIR WALTER SCOTT), வில்லியம் ஷேக்ஸ்பியர் (WILLIAM SHAKESPEARE), வில்லியம் வேர்ட்ஸ்வொர்த் (WILLIAM WORDSWORTH) மற்றும் பெர்சி பெஷ் ஷெல்லி (PERCY BYSSHE SHELLEY) இவர்களின் படைப்புகளில் அதிக ஆர்வம் காட்டினான்.

மேர்வான் குஜராத்தி, உருது, ஹிந்தி, மற்றும் பெர்ஸியன் மொழிகளில் கவிதைகள் எழுதி வந்தான் - பொருள் எப்போதும் ஆன்மீகம் சம்பந்தப்பட்டதாகவே இருந்தது. இந்தச் சிறிய வயதிலும் மனிதனால் புரிந்துகொள்ள முடியாத, விந்தையான விவேகம் படைத்தவனாக இருந்தான். 'ஹுமா' (HUMA - ஒரு பறவை இனம்) என்ற புனைபெயரில் அருமையான கவிதைகள் எழுதினான். மேர்வானின் நண்பன் பெய்லி இந்தக் கவிதைகளை ஸொராப்ஜி தேசாய் (SORABJI DESAI) அவர்களுக்கு அனுப்பி வைத்தான். அவரும் கவிதைகளின் ஆழமான ஆன்மீகக் கருத்துக்களைப் புரிந்துகொண்டு தனது பத்திரிகையில் வெளியிடத் தொடங்கினார். அக்கவிதைகள் மக்களின் ஆர்வத்தைத் தூண்டவே, மும்பையிலும் பிரபலமானது. மேர்வான் பெய்லியுடன் மும்பையிலுள்ள மியூசிக் ஸ்டோர் ஒன்றில் சென்றபோது மேர்வான் எழுதிய 'பணம்…அதோ…பணம்..' என்னும் பாடல் அழகாக இசைத்துக் கொண்டிருந்ததைக் கேட்டு மகிழ்ந்தனர்.

ஷெரியாருக்கு அறிமுகமான ஐரோப்பிய ஜோதிடர் பிரவுன், (BROWN) மேர்வானுடைய எதிர்காலத்தைக் கணிக்கும் நோக்கத்தில் ஷெரியாரை வற்புறுத்தினார். மேர்வான் அவருக்கு அறிமுகமான நாளிலிருந்தே இந்த ஆசை இருந்தது.

மேர்வானுக்கு இதுபோன்ற மறைவியல் விஞ்ஞானத்தில் ஈடுபாடில்லை. இருந்தாலும் தந்தை ஷெரியார் வற்புறுத்தியதால், இருவரும் ஒரு நாள் ஜோதிடர் பிரவுனை சந்தித்தனர். முதலில் மேர்வானின் கைரேகைகளை ஆராய்ந்தார். சாதாரணமாகப் பத்து நிமிடங்கள் எடுக்கும்; இவர் ஒரு மணி நேரமாகப் பார்த்து, பல புத்தகங்களைப் புரட்டிய பின்னர், இறுதியில் 'எதிர்காலத்தில், இந்த சிறுவன் ஒரு மிகச்சிறந்த தத்துவஞானியாக வருவான்' எனக் கூறி முடித்தார்.

பிரவுனின் எதிர்கால கணிப்பு, மேர்வான் மற்றும் அவர் தந்தை ஷெரியாரிடம் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. மேர்வான், எதிர்கால

கணிப்புகளை எதிர்த்ததோடு, இதுபோன்ற விஷயங்களைப் பற்றிப் பேச மறுத்து வந்தான். நாளடைவில் குடும்பத்திலுள்ள அனைவரும் இதை மறந்துவிட்டனர்.

ஆனால் இன்னுமொரு ஜோதிடர் மேர்வானின் எதிர்காலத்தைக் குறித்து எழுதிக் கொடுத்தக் குறிப்பு ஏறக்குறைய சரியாக அமைந்ததைப் பார்க்கலாம்: “இந்த சிறுவனின் பிறந்த நேர கிரகங்களின் அமைப்பைப் பொறுத்தவரை, இவன் மிகப்பெரிய அளவில் நன்மைகள் செய்யக் கூடியவன். சுறுசுறுப்பும், கடின உழைப்பும் உள்ளவன். உலகெங்கும் பேரும், புகழும் அடைவான்.”

“இவனுக்கு இறை பக்தி மிகவும் அதிகம். எதிர்காலத்தில் உலகப்பொருட்கள் மீது பற்றில்லாத சூழ்நிலை உருவாகும். அப்போது அவன் பெரிய யோகி ஆவான். உலகம் அவனை வணங்கித் துதிக்கும். அவனுடைய பார்வை மற்றும் அதிகாரத்தின் கீழ் வருபவர்கள், மிகவும் நன்மை அடைவார்கள். ஏனெனில் அவன் அந்த அற்புதமான தனித்தன்மையும், ஈர்க்கும் சக்தியும் உள்ளவன். முத்தாய்ப்பாகச் சொன்னால், மனித இனத்திற்கு மாபெரும் நன்மைகள் செய்வான்.”

மேற்கூறியதைக் கேட்ட ஷிரீன் ஒன்றும் புரியாமல் திகைப்பில் ஆழ்ந்தார். ஆனால் ஷெரியாருக்குத் தனது மகனின் எதிர்காலத்தைப் பற்றி நன்கு தெரியும். கவலை ஏதுமில்லாமல் அந்த நாளை எதிர்நோக்கியிருந்தார்.

மேர்வான், ஸெயின்ட் வின்ஸென்ட் பள்ளிக்கூடம் சென்ற பிறகு, தனது பழைய நண்பர்களை அடிக்கடி பார்க்க முடியாமலாயிற்று. எனவே, ‘காஸ்மோபாலிட்டன் கிளப்’ (COSMOPOLITAN CLUB) ஒன்றை, ஹஸ்ரத் பாபாஜான் வாழ்ந்து வந்த சார்பாவ்டி என்ற இடத்தில் நிறுவினான். வேறு வேறு மதங்களைச் சார்ந்த இளைஞர்கள் அதில் அங்கம் வகித்தனர். வாடகை மற்றும் அத்தியாவசிய பொருட்களுக்குத் தேவையான மாதக் கட்டணம் வசூலிக்கப்பட்டது. ஒரு பொருளாளரும், செயலாளரும் நியமிக்கப்பட்டனர். மேர்வான் தலைவராக இருந்தார். அனைத்து செலவுகள் மற்றும் ரசீதுகளில் மிக்க கவனம் செலுத்தினான். சதுரங்கம், செக்கர்ஸ், சீட்டு போன்ற விளையாட்டுகள் விளையாடப்பட்டன. தினசரி, வார, மாத பத்திரிகைகளும் வரவழைக்கப்பட்டன. தத்துவம், மதம் சம்மந்தப்பட்ட புத்தகங்கள் ஒரு நூலகர் கண்காணிப்பில் இருந்தன.

மேர்வான், தலைவர் என்ற முறையில் ஆறு சட்டதிட்டங்களை வகுத்தான்.

1. **அநாகரீகமான வார்த்தைகளை உபயோகிக்கக்கூடாது.**
2. **மது அருந்துதல் ஆகாது.**
3. **கிளப்பிற்குள் சூதாட்டத்திற்குத் தடை.**
4. **சண்டை சச்சரவுகள் ஆகாது.**
5. **மத அடிப்படையில் ஒருவர் இன்னொருவரைவிட உயர்ந்தவர் என்ற எண்ணம் ஆகாது.**

6. **உறுப்பினர்களின் நோக்கம், எல்லோரிடமும் அன்பாக இருந்து, ஒற்றுமை மற்றும் சகோதரத்துவத்தைப் பாதுகாப்பது ஆகும்.**

மேர்வான், அனைவரும் எல்லா சட்டதிட்டங்களையும் ஒழுங்காகக் கடைப்பிடிப்பதில் கண்டிப்பாக இருந்தான். வாரத்தில் இரண்டு நாட்கள், உறுப்பினர்கள், ஆன்மீகத்தைப் பற்றிப் பேசவேண்டும். அனைவரும் இதை சுவாரஸ்யமாக ரசித்தனர்.

ஒவ்வொரு முறை கூடும்போதும், மேர்வான், தலைவர் எனும் முறையில், அன்றைய நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்தான். உறுப்பினர்கள் அல்லாதவர்களும் விருந்தினராகப் பங்கெடுத்தனர். பெண்கள் கலந்துகொள்ள அனுமதியில்லை. புதிய உறுப்பினர்கள் இணையும்போது எவ்விதமான ஆயத்தமும் இல்லாமல் பேச வேண்டும். பலரின் அப்பாவித்தனமான தவறுகள், எல்லோருக்கும் ஒரு நல்ல பொழுதுபோக்காக அமைந்தது. மேர்வான் பேசவரும்போது அனைவரும் அமைதியாக, ஆர்வத்துடன் கவனித்தனர். இவ்வாறு காஸ்மோபாலிட்டன் கிளப் இறைவனின் விருப்பங்களைப் பிரதிபலிக்கும் ஓர் அமைப்பாக, இந்தக் காலத்தில் மக்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கு அப்போதே ஓர் எடுத்துக்காட்டாக அமைந்தது.

காஸ்மோபாலிட்டன் கிளப் அமைந்த அதே இடத்தில், ராம்நாத் (RAMNATH) என்பவர் வாழ்ந்து வந்தார். மேர்வானுடன் அறிமுகமான பின்னர், அவரும் கிளப்பில் ஒரு உறுப்பினராக இணைந்தார். மேர்வானை முதன்முதலில் சந்தித்ததிலிருந்து, அவரை அறியாமலேயே மேர்வான் மீது அளவற்றப் பற்று உருவானது. மேர்வானுடன் எப்பொழுதும் இருக்கும் நோக்கத்திலேயே உறுப்பினரானார்.

ராம்நாத் பௌத்தமதத்தைச் சார்ந்தவர்; மேர்வானின் வயது. மேர்வானைப் பற்றிய எண்ணங்கள் அவர் இதயத்தை உலுக்கி எடுத்தது. இதைத்தான் முற்பிறவியின் ஆழமான தொடர்பு என்பது. இவ்வாறு இருவரும் உண்மையான, நெருங்கிய நண்பர்களாயினர். இரவு வேளைகளில் இருவரும் தனிமையைத் தேடி தூரத்து இடங்களுக்குச் சென்று ஆன்மீக விஷயங்களைப் பகிர்ந்து கொள்வது வழக்கம்.

ஒரு நாள் ராம்நாத், கௌதம புத்தரின் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகத்தை (புத்த பகவான்) மேர்வானிடம் காண்பித்தார். மேர்வான் கைவிரல்களால் புத்தகத்தைப் புரட்ட, ஒரு குறிப்பிட்ட பக்கம் திறந்தது. அதில் புத்தரின் வாக்கு ஒன்று, '**நான் பூமியில் மறுபடியும் வரும்போது, என்னை மைத்திரேயா** (MAITREYA) - **இரக்கமுள்ள இறைவன்** (THE MERCIFUL ONE) **என்று அழைப்பர்**' என இருந்தது.

அதைப் படித்த அக்கணமே, மேர்வானுக்கு '**நானே அந்த இரக்கமுள்ள இறைவன்**' என ஆழ் மனதில் தோன்றியது. அப்படியே அதிலிருந்த புத்தரின்

சித்திரத்தை உற்று நோக்கினான். '**நானே புத்தா**' என்பதைத் தெளிவாக உணர்ந்தான்.

மேர்வான் உடனே, '**நான் உண்மையிலேயே புத்தரா?**' என்று தனக்குத்தானே கேட்டுக்கொண்டதற்கு, '**ஆம், நீயே புத்தா!**' என்ற '**இறை வாக்கு**' அவனுக்கு நம்பிக்கையை ஊட்டியது.

மேர்வான், ராம்நாத்துடன் தனிமையில் இருந்தபோது ஒரு நாள்: "**ராம்நாத், உனக்கு பௌத்த மதத்தில் இவ்வளவு ஈடுபாடு இருப்பதால், நீ ரங்கூன் சென்று, இன்னும் பல விஷயங்களைக் கற்றுக் கொள்ளலாம்**" என்றான். ராம்நாத், மேர்வான் என்ன சொன்னாலும் அது நன்மைக்கே என்ற எண்ணத்தில், உடனே ரங்கூன் புறப்பட்டார். அங்குச் சென்ற சிலநாட்களில், ராம்நாத் உடல் நலக்குறைவால் மிகவும் அவதிப்படவே, பூனாவுக்குத் திரும்பி வந்து, மேர்வானின் துணையோடு சிகிச்சைப் பெற்றார். உடல்நிலையில் எந்த விதமான முன்னேற்றமும் இல்லாமல் மரணப்படுக்கையில் வீழ்ந்து, கடைசியில் மேர்வானின் மடி மீது தலை வைத்து உயிர் துறந்தார்.

ஒவ்வொருவரும் உலகில் தனக்கென நிர்ணயிக்கப்பட்ட செயலை செய்துமுடிக்க வேண்டியது அவசியம். ராம்நாத் அவருடைய பங்கை மேர்வானுடன், அவ்வளவு குறுகிய காலத்தில் செய்யவேண்டும் என்பது அவர் விதி.

மேர்வான் மிகவும் பண்புள்ள இளைஞனாக விளங்கினான். அது அவனுடைய இரக்கம் நிறைந்த செயல்களில் வெளிப்பட்டன. காஸ்மோபாலிட்டன் கிளப்பிலிருந்து, பூனாவிலுள்ள ஏழைகளுக்கு உதவுவதற்காக ஒரு திட்டம் வகுத்தான். 17 பேர் அடங்கிய ஒரு குழு; அதற்கு 'இரகசிய 17' (SECRET 17) என்று பெயர் சூட்டி, செயல்படத் தொடங்கினான். மேர்வானின் வசதிவாய்ந்த நண்பர்களும் உதவி செய்ய முன்வந்தனர். இதற்காக, பணப்பெட்டகம் ஒன்றைத் திறந்து, சாவியை மேர்வான் தன்வசம் வைத்திருந்தான். மேர்வான் அவருடைய அத்தியாவசிய தேவைகளிலும் சிக்கனத்தைக் கடைப்பிடித்து இதற்காகச் செலவிட்டான். இப்படி ஏழைகளுக்குத் தொண்டு செய்தனர் - ஏழைக் குடும்பங்கள், ஊனமுற்றோர், மற்றும் நோயுற்றவர்களை மருத்துவமனையில் சேர்த்து, சிகிச்சைக்கு வழி செய்தனர்.

இவ்வாறு காஸ்மோபாலிட்டன் கிளப், 'இரகசிய 17' குழு ஓரிரு வருடங்கள் செயல்பட்டது. மேர்வான் மெட்ரிகுலேஷன் தேர்வுக்காகத் தயார் செய்ய வேண்டிய நிலையில், கிளப்பிலிருந்து விலகவேண்டிய கட்டாயம். அப்படியே இதர உறுப்பினர்களும் விலகிச்செல்ல, கிளப் மூடப்பட்டது. மேர்வான், இவ்வாறு, உயர்ந்த குறிக்கோளுடன் தன்னலமற்ற சேவைக்காக அந்த இளம் வயதிலேயே அடித்தளம் அமைத்தான்.

1911ஆம் ஆண்டு மேர்வான் மெட்ரிகுலேஷன் (MATRICULATION) தேர்வில் வெற்றி பெற்று, பூனா டெக்கன் கல்லூரியில் (POONA DECCAN COLLEGE)

மேற்படிப்பைத் தொடர்ந்தான். இது பூனாவிலுள்ள மிகச்சிறந்த கல்லூரிகளில் ஒன்று. இங்கு, போட்கிளப் மற்றும் விளையாட்டுகளுக்குச் சிறந்த வசதிகளும் இருந்தன. பல்வேறு மதங்களைச் சார்ந்த மாணவர்கள் 'ஒருங்கிணைந்த மாணவர் அமைப்பு' ஒன்றை ஆரம்பித்தனர். இப்படி மேர்வான் பல மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குப் பிரியமானவனாக இருந்தான். இயற்கையாகத் தன்னைத் தேடிவந்த தலைவர் பொறுப்பை ஏற்று, எல்லோராலும் பாராட்டப்பட்டான். ஆனால் மேர்வான், பாராட்டுகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவன்.

கல்லூரியில், நண்பர்களுடன், ஒரு நாடகக் குழுவையும் அமைத்து, சிறப்பாக நடத்தி, அதில் வரும் பணத்தை ஏழைகளின் சேவைக்காகப் பயன்படுத்தினான்.

மேர்வான் பஜன், கீர்த்தனைகளை விரும்பி, ரசிப்பது பழக்கம். ஒரு முறை காட்கே மஹாராஜ் (GADGE MAHARAJ), மஹாராஷ்டிரா மாநிலத்திலுள்ள பண்டர்பூர் விட்டல் கோயிலிலிருந்து பூனாவில் நிகழ்த்திய கீர்த்தனைகளை, மேர்வான் மிகவும் விரும்பி ரசித்தான். காட்கே மஹாராஜ் ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டிருந்த உண்மையான யோகி, பின்பு மெஹர் பாபாவின் தொடர்பில் வருவதைக் காணலாம்.

மேர்வான், ஒரு வருடப் படிப்பை முடித்துவிட்டு, அதே கல்லூரியில் இரண்டாம் வருட வகுப்பில் இணைந்தான். இப்படி மேர்வானின் கல்லூரி வாழ்க்கைத் தொடர்ந்தது.



காட்கே மஹாராஜ்





மேர்வானின்
பள்ளிப்பருவம்





மேர்வானின் இறை நிலை- **1913**



# மேர்வானின் இறையுணர்வு

**(Merwan's Realization of His Soul)**

1912ஆம் வருடம், 17 வயதில், கல்லூரியில் பயின்று வந்த வேளையில், ஒரு நாள் மேர்வான் வீட்டின் வெளியே அமர்ந்திருந்தார். திடீரென அவரது அகப்பார்வை திறந்து, ஓர் இறை ஒளியை மிகத்தெளிவாகப் பார்க்க நேர்ந்த அந்த கணத்தில், தனது உடல் உணர்வுகளை இழந்து, இறை இன்பத்தில் மூழ்கினார்.

அப்போது அவ்வழியே வந்த, பெரிய தாயார் டவ்லா, மேர்வான் ஒரு விசித்திரமான நிலையில் இருப்பதைக் கண்டு, அழைத்தபோது எந்த நினைவும் இல்லாமல், அவர் வந்ததையும் கண்டுகொள்ளாமல், மேர்வான் இருந்ததைப் பார்த்து, தாயார் ஷிரீனுக்குக் குரல் கொடுத்தார். ஷிரீன், மெரோக்… மெரோக்.. என்று உரத்த குரலில் அழைத்து, தட்டி எழுப்ப முயற்சித்தார்.

மேர்வானின் கண்ணிமைகள் படபடத்தன. தாயார், தன்முன் நின்றுகொண்டிருந்ததைப் பார்த்து, '**மெமோ, தயவுசெய்து… என்னைப் பற்றிக் கவலைப் படாதீர்கள்**' என்று முணுமுணுத்தார். வியப்பில் ஆழ்ந்திருந்த மேர்வான் சில நிமிடங்களில், தானிருந்த இடத்திலிருந்து எழுந்தார். ஷிரீன் ஏதோ சாதாரண மயக்கநிலை, சரியாகிவிடும் என்று எண்ணினார்.

அந்த இறை ஒளியை அனுபவித்த பின்பு, தனக்குள்ளே ஏதோ மிகப்பெரிய மாற்றத்தையும், தான் பிறரிடமிருந்து மாறுபட்டவர் என்பதையும் உணர்ந்தார். இப்படி ஒரு வித்தியாசமான உணர்வுநிலை இருந்தபோதிலும், இன்னமும் ஆன்மீகத் தனித்துவத்தை அவரால் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை.

மேர்வான் கல்லூரிக்குச் சைக்கிளில் செல்வது பழக்கம். 1913ஆம் ஆண்டின் வசந்தகாலத்தில் கடைசித் தேர்வுக்காக, படிப்பில் கவனம் செலுத்தினார். ஆனால், இவ்வேளையில் நிகழ்ந்த ஒரு முக்கியமான சம்பவம்தான், 19 வயதான மேர்வானின் வாழ்வில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது.

மேர்வானுக்கு இறையுணர்வை வழங்கும் அந்த மாபெரும் பொறுப்புடன், ஐந்து சத்குருக்களும் தக்க தருணத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தனர்.

மேர்வான் டெக்கன் கல்லூரிக்கு சைக்கிளில் சென்றுகொண்டிருந்த வேளையில், ஹஸ்ரத் பாபாஜான் அமர்ந்திருந்த சார்பாவ்டி என்ற இடத்தில் மக்கள் கூட்டம் நிரம்பியிருந்ததை கவனித்தார். சாதாரணமாக மேர்வான், பாபாஜான் இருக்கும் இடத்தில் அவ்வளவு கவனம் செலுத்துவதில்லை - ஏனெனில், அந்த இடத்தில் வாழும் முஹமதியர்கள் பாபாஜானை ஒரு சாதாரண துறவி என்றே கருதினார்கள். அவரைக் காவல் காக்கும் பட்டான் ராணுவ வீரர்கள் அருகில் செல்ல எவரையும் அனுமதிப்பதில்லை. பிச்சைக்காரர்கள்

கூட்டம் அங்குக் குவியும் காசுகளைத் திருடிச்செல்ல முற்றுகையிடுவது வழக்கம். மேலும் வழிப்போக்கர்கள் பாபாஜானைப் பைத்தியம் அல்லது சூனியக்காரி என்றே கருதினார்கள். ஆமாம்! சத்குருவாக மாறி, உலகத்தையே ஆட்டிப்படைக்கும் சூனியக்காரி!

மே மாதத்தில் ஒரு நாள், மேர்வான் அந்த வழியாக, சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது, தற்செயலாக, பாபாஜான் இருந்த திசையை நோக்கிய அதேவேளையில், பாபாஜானும் மேர்வானைப் பார்த்து 'இங்கே வா' என்று தலையசைத்து அழைத்தார். மேர்வான் மரியாதையின் நிமித்தம், சைக்கிளிலிருந்து இறங்கி பாபாஜானை நோக்கி நடந்தார். இருவர் கண்களும் சந்தித்தன. தன்னை சந்தித்ததில் பாபாஜானுக்கு மட்டற்ற மகிழ்ச்சி என்பதை மேர்வான் புரிந்துகொண்டார்.

பாபாஜான், இவ்வளவு காலமாக, இந்த நேரத்திற்காகத்தான் ஆவலுடன் காத்திருந்தார். மேர்வானும் ஏதோ ஒரு காந்தசக்தி தன்னை ஈர்ப்பது போல் அருகில் சென்றார். பாபாஜான் அவரது இருக்கையிலிருந்து எழுந்து வந்து, இருகரங்களையும் விரித்து, மேர்வானை 'இழந்த குழந்தையைத் திரும்பப் பெற்ற தாயைப் போல்' அள்ளி அணைத்துக் கொண்டார். சுருக்கங்கள் நிறைந்த முகம், கண்களில் நீர் ததும்ப பாபாஜான், '**எனதருமை மகனே**!... **எனதருமை மகனே**!...' என மீண்டும் மீண்டும் கூறினார்.

அவதார புருஷனின் வருகை, இந்தத் தருணத்திற்காகத்தான் காத்திருந்தது. இறுதியில் பாபாஜானின் அருமை மகன் வந்துவிட்டார். இக்காலத்தின் 'கண்ணீர்', ஹஸ்ரத் பாபாஜானின் கண்ணீரோடு கலந்தது. 'என் அருமை மகனே!' என்ற பாபாஜானின் அழைப்பின் எதிரொலி, இறுதியில் மானிடரின் ஆழ் இதயத்தைத் தொட்டு ஆனந்தத்தை அனுபவிக்கச் செய்யும்.

மேர்வான், அமைதியாக, அசையாமல் சிலை போல நின்றுகொண்டிருந்தார். பாபாஜான் அரவணைத்த அந்த கணத்திலிருந்து மேர்வான் உடலில் மின்சாரம் பாய்ந்தது போல் ஓர் உணர்வு. தலைமுதல் கால்வரை வேக அலைகள் பாய்வது போல் ஓர் அனுபவம். விவரிக்க முடியாத நிலை. தனிப்பட்ட விழிப்புணர்வு, ஆனந்தக்கடலோடு இணைவது போல் ஓர் அனுபவம் ஏற்பட்டது.

மயக்க நிலையில் மேர்வான் இருந்தாலும், மிகச்சிறிய அளவிலான தன்னுணர்வு அவரை வீட்டிற்கு அழைத்துச் சென்றது; பாபாஜானின் சந்திப்பு உள்ளளவில் அளப்பரிய மாற்றத்தை ஏற்படுத்தினாலும், வெளித்தோற்றத்தில் சாதாரணமாகக் காணப்பட்டார்.

படிப்படியாக, மேர்வான் படிப்பு மற்றும் விளையாட்டின் மீதான ஆர்வத்தை இழந்தார். வாரங்கள், மாதங்கள் கழிந்தன. மேர்வான் தனிமையையே விரும்பினார். எதிலுமே ஆர்வம் காட்டவில்லை. எதிலெல்லாம் சிறந்து மேம்பட்டு விளங்கினாரோ, அனைத்திலும் தோல்வியை சந்தித்தார். எதிலும் கவனம் செலுத்த இயலாமல், குடும்பத்தில் உள்ளவர்கள், ஆசிரியர்,

நண்பர்கள் எவரிடமும் தனது நிலையைப் பற்றி எடுத்துச்சொல்ல முடியாமலும் தவித்தார்.

மேர்வானின் வாழ்க்கையில் இந்த ஆதிகால பெண்மணி ஹஸ்ரத் பாபாஜான் அவர்களைத் தவிர, பிற அனைத்தும் வெறுமையாகவே தோன்றியது. ஒன்றே ஒன்றை மட்டும் தவறாமல் செய்து வந்தார் - அந்த சம்பவம் நடந்த நாளிலிருந்து (மே 1913) அடுத்த ஏழு மாதங்கள் தினமும் மாலையில் பாபாஜான் அருகிலேயே, சில நேரங்களில் இரவெல்லாம், மேர்வான் அமர்ந்திருப்பதை வழக்கமாகக் கொண்டார்.

பாபாஜான், ஒரு சத்குருவாக இருந்தாலும், சுற்றுப்புற சூழ்நிலைகள் அவர் ஒரு புனித பெண்மணி என்ற நினைப்பைத் தருவதில்லை. கடவுள் வாழ்வது இப்படித்தான். புரிந்துகொள்ள முடியாத ஒரு புதிராகவே இருப்பார். அவர்களின் உண்மை நிலையை அறியும் தகுதி வாய்ந்தவர்கள் ஏதோவொரு வழியில் அறிந்து கொள்வர்.

காதலுக்கு கண்ணில்லை என்பர். ஆனால் அது நல்லது, தீயது இரண்டிற்கும் அப்பாற்பட்டது. இருவரும் (மேர்வான், ஹஸ்ரத் பாபாஜான்) தெய்வீக காதல் உணர்வால் பிணைக்கப்பட்டவர்கள். இவ்வாறு, மேர்வான் மாலை நேரத்தில், தினமும் தவறாமல், பாபாஜான் அருகே சென்று அமர்ந்திருப்பது வழக்கமாகி விட்டது. பாபாஜானைப் பற்றி ஊர் கூறுவதையெல்லாம் காதில் வாங்காமல், அவர் அருகிலேயே அமர்ந்திருந்தார். பாபாஜானின் அந்த அரவணைப்பு, மேர்வானை இறை வாழ்வில் வாழ வழிவகுத்தது.

“உலகத்தில் அவருக்கு வழங்க எதுவுமில்லை. உலகமும் அவருக்கு எதுவுமே இல்லை. கடவுள் ஒருவரே உளதாயிருக்கிறார். ‘நானே கடவுள்’ என்பதை உணரப் போகிறார்.”

மேர்வான் பாபாஜானுடன் அமர்ந்திருந்த வேளையில் ஒரு வார்த்தைக்கூடப் பேசிக்கொள்வதில்லை.

ஒரு நாள் இரவு, ஜனவரி 1914, மேர்வான் விடைபெறும் வேளையில், பாபாஜானின் கரங்களைத் தனது கைகளிலேந்தி முத்தமிட்டார். பதிலாக, பாபாஜான் மேர்வானின் முகத்தை அவரது கைகளில் ஏந்திக்கொண்டார். இதுதான் அந்த சரியான நேரம். பாபாஜான் அப்போது மேர்வானின் முகத்தைப் பிடித்து, அவர் கண்களில் ஆழமாக உற்றுநோக்கி, நெற்றியின் நடுவில், அன்போடு முத்தமளித்தார். உடனே தனது சீடர்கள் பக்கம் திரும்பி, “இவன், என் அருமை மகன். ஒரு நாள் இந்த உலகை ஆட்சி புரிவான். மானிடர்கள் அவனால் மிகவும் பயனடைவர்” என்று பறை சாற்றினார்.

மேர்வான் அங்கேயே நின்று கொண்டிருந்தார். பாபாஜான் முத்தம் அளித்ததும், உணர்வில்லாத ஜடம் போல மாறிவிட்டார். மனதின் பிடிப்பை இழந்தார். இருப்பினும், எப்படியோ இரவு 11 மணி அளவில், இயந்திரம் போல் அசைந்து, வீடு வந்து படுக்கையில் வீழ்ந்தார்.

உருவமில்லா இறைவன், தனது தெய்வீகத் தன்மையைத் திரைபோட்டு மூடி, குழந்தையாக உருவெடுத்து, தக்க சமயத்தில், ஐந்து சத்குருக்களின் உதவியால், முதலில் திரையை விலக்கி, இறை ஞானம் அடையப்பெற்று, 'நான் கடவுள்' என்ற நிலையை எய்தி, அவதார புருஷராக, உலக சேவையில் தன்னை அர்ப்பணம் செய்கிறார். இப்போது பாபாஜான் கொடுத்த முத்தத்தால், அசாதாரணமான இறை அனுபவத்தோடு மேர்வானை மூடியிருந்த திரையும் விலக்கப்பட்டது.

கட்டிலில் சாய்ந்த மேர்வான், பத்தே நிமிடத்தில், முதன் முதலில் (மே 1913), பாபாஜான் அணைத்தபோது அடைந்த அனுபவத்தை மீண்டும் உணர்ந்தார். ஆனால் இப்போது அது ஆயிரம் மடங்காயிற்று. பல்லாயிரக்கணக்கான மின்சக்திக்கு சமமான இறை ஒளியை மறுபடியும் பார்க்க ஆரம்பித்தார் மேர்வான். அவரது சதை, எலும்பு, உடல், மனம் அனைத்தும் உருகுவது போல் ஓர் உணர்வு. உடல் உணர்வை இழந்த அவ்வேளையில், அனைத்துமே ஒரு பிரமாண்டமான வெளிச்சமாக மாறியது.

மேர்வானின் மூச்சுத் திணறியது. பல்லாயிரம் கைகள் அவரது கழுத்தை நெரிப்பது போன்ற உணர்வு. இதயம் நின்றுவிடும் என்ற உணர்வில், 'அவர் எங்கே இருக்கிறார்' என்பது தெரியாமல் அச்சத்தில் காணப்பட்டார்.

மேர்வான், தன்னுடைய தனிப்பட்ட அடையாளமான ஆத்மாவை இழந்ததுதான் இதற்குக் காரணம். மேர்வான் இப்போது, தனித்தன்மைக்கு அப்பாற்பட்டவர், அழிவில்லா நிரந்தர நிலையில் இருக்கும் 'பரமாத்மா' ஆகிவிட்டார்.

அந்தக் காலகட்டத்தில் வாழ்ந்த ஐந்து சத்குருக்களும் மேர்வான் மீதிருந்த திரையை, பாபாஜான் அளித்த முத்தத்தின் வழியாகக் கிழித்து எறிந்தனர். மேர்வான் என்ற தனித்தன்மை இல்லாமலாயிற்று. எல்லையில்லா இறைவனாகி, 'ஓம்' எனும் உருவாக்கு மையத்திற்கும் அப்பாற்பட்டவர் ஆகிவிட்டார். அவருக்கு இப்போது மனித உணர்வே இல்லாமல் ஆயிற்று. இறை உணர்வை அடைந்து, இறைவனாகி விட்டார். காலம், நேரம், உடல், மனம் - இவற்றைப் பற்றிய விழிப்புணர்வை இழந்துவிட்டார். 'நான் கடவுள்... நான் கடவுள்...' என்ற உணர்வு மட்டுமே இருந்தது; வேறு எதுவுமில்லை.

இப்போது நிகழும் மாற்றங்கள் அனைத்தும் உள்ளளவில் நிகழ்பவை. மேர்வான் ஒரு வார்த்தைக்கூட பேசவில்லை. அப்படியொரு நிசப்தம் நிலவியது. குடும்பத்தில் எவருக்கும் அந்த இரவில் என்ன நடந்தது என்றே தெரியாது.

'மெரோக் எங்கே? மெரோக் எங்கே? எவரேனும் அவனைப் பார்த்தீர்களா?' எனக் கேட்டுக்கொண்டே, மேர்வானின் அறைக்குள் நுழைந்த, தாயார் ஷிரீன், 'மெரோக்! எழுந்திரு! நேரமாகிவிட்டது! காலை உணவு தயார்! கல்லூரிக்குச் செல்லவேண்டாமா?' என்று குரல் கொடுத்தார்.

ஷிரீனின் இதயம் படபடத்தது. கட்டிலருகில் சென்று 'மெரோக்.. மெரோக்.. நான் சொல்வதைக் கேட்கிறாயா?' என்று கேட்டுக்கொண்டே அழுதார்.

மேர்வான் எந்த அசைவும் இல்லாமல், முறைத்த கண்களோடு இருந்ததைப் பார்த்து, தாயார் ஸ்தம்பித்துப் போய் பேச முடியாமல் தவித்தார். இன்னும் அருகில் சென்று, 'மெரோக்!... மெரோக்!.. என்னைப்பார்..' என்று அழுது கண்ணீர் வடித்தார். ஆனால் ஒன்று மட்டும் புரிந்தது, மேர்வான் உயிருடன் இருக்கிறான்… ஆனால் கண்களும், உதடுகளும் அசையவில்லை.

மேர்வானின் நிலை பெரும் பதட்டத்தை உருவாக்கியது. கண்கள் திறந்தே இருந்தன. ஆனால் அவை, தாயார் ஷிரீனைப் பார்க்கிறதா? இல்லை… அவை எங்கோ பார்க்கின்றன! அனைத்தையும் கடந்து பார்க்கின்ற ஒரு பார்வை! மேர்வானின் முகம் சாதாரணமாகத் தென்பட்டாலும், உடலில் உயிர் இருந்தது போலத் தெரியவில்லை; இருந்தாலும் உயிரோடிருக்கிறான் என்பதைத் தாயார் புரிந்துகொண்டார். "மெரோக்... மெரோக்... என்னவாயிற்று என் அன்பு மகனே...." எனக் கதறி அழுதார்.

ஷெரியாரைத் தவிர குடும்பத்தில் ஒருவருக்கும் அதுவரை, மேர்வானின் உண்மை நிலை தெரியாது. அதைப் பற்றி அவர் பேசியதும் இல்லை. ஒருவித தெய்வீகப் பார்வையின் சுழற்சியில் அவ்வப்போது இருந்தபோதும், மேர்வான் எவருக்கும் எதையும் சொன்னதில்லை. இருந்தாலும், ஹஸ்ரத் பாபாஜானின் தொடர்பில் வந்த பின்னர், அவருடைய செயலும், நடத்தையும் அசாதாரணமாக இருப்பதை அனைவரும் கவனித்தனர். 'ஏதோ ஒருவிதமான ஈர்ப்பில் பாபாஜானைப் பார்க்கச் செல்கிறான்' என்று கண்டுகொள்ளாமல் இருந்தனர்.

ஆனால் இப்போது, தாயார் ஷிரீன் மிகுந்த குழப்பத்தில் ஆழந்தார். மேர்வானைப் பிடித்து உலுக்கி, படுக்கையில் அமரவைத்தார். உடம்பில் காய்ச்சல், காயம் ஏதாவது இருக்கிறதா என்று பார்த்துவிட்டு, 'மெரோக்! உனக்கு ஒன்றுமில்லை, சரியாகிவிடும்' எனக் கூறிச் சென்றார்.

ஷிரீன், ஷெரியாரிடம் நம்பிக்கை கலந்த குரலில், 'மேர்வான் பேசவில்லை, ஏதோ வருத்தத்தில் இருப்பது போலத் தெரிகிறது. நன்றாகத் தூங்கி ஓய்வெடுக்கட்டும், மாலையில் சரியாகிவிடுவான்' என்றார். ஷெரியாரும் ஆமாம் என்று தலையசைத்தார்.

தாயார் ஷிரீன் மூன்று நாட்களாக எவ்வளவோ முயன்றும், மேர்வான் அதே 'கோமா' போன்ற நிலையிலே இருந்தார். எழுப்பி அமரவைத்தால் அதே நிலையில் அசையாமல் அமர்ந்திருந்தார். குடும்பத்தில் அனைவரும் மிகுந்த கவலைக்கு உள்ளாயினர்.

நான்காவது நாள், திடீரென உடலில் சில அசைவுகள் தென்பட்டன. தானாகவே எழுந்து வீட்டின் கீழ் மாடிக்குச் சென்று, அங்குமிங்கும் நடந்தார். மூன்று நாட்களாகக் கண்கள் மூடாத நிலையிலே இருந்தன. தூக்கமின்றி கண்களில் குழி விழுந்து வெறுமையாகக் காணப்பட்டார். தன்னுடைய பெற்றோர், சகோதரர்களை மட்டும் அணுகினார். பசி, தாகம் எதுவுமில்லை. உடல் தானாகவே தூக்கத்தில் நடப்பவர் போல், இயந்திரத்தனமாக இயங்கியது.

சில நாட்கள் அப்படியே கழிந்தன. தாயார் ஷிரீனுக்கு போதும் போதும் என்றாகிவிட்டது. மிகுந்த கவலையுடன், நிறைய பணம் செலவு செய்து, பூனாவில் சிறந்த மருத்துவர்களை அணுகினர். தூக்கத்துக்காகக் கொடுத்த மருந்தாலும் எந்தப் பலனும் இல்லை. ஷிரீன் ஏதேதோ நினைக்கத் தொடங்கினார். ஆவி, பேய் இவைகளின் பாதிப்பாக இருக்கலாம் என்ற மூடநம்பிக்கையில் சிந்தித்தார்.

அடுத்த ஒன்பது மாதங்களுக்கு, மேர்வான் கண்களை மூடித் தூங்காததால் அவை பளிச்சென்று, வெறுமையாக இருந்தன. ஏதாவது உண்ணக் கொடுத்தால், பல மணி நேரங்கள் அசையாமல், வெறித்துப் பார்த்தபடி இருந்தார். சில வேளைகளில், வீட்டில் அங்குமிங்கும், எவரேனும் தடுத்து நிறுத்துவது வரை நடந்துகொண்டே இருந்தார். ஷிரீன் தனது மகன் இந்த அளவுக்கு மோசமான நிலையில் இருப்பதைக் கண்டு, மூளை குழம்பி விட்டதாக நினைக்கத் தொடங்கினார்.

ஒரு நாள் சுட்டெரிக்கும் வெயிலில் வீட்டை விட்டு வெளியேறி ஏறக்குறைய 15 மைல் தூரம் எங்கெங்கோ நடந்து திரிந்தார். பல மாதங்களாக உணவு எதுவுமே உண்ணாததால், மெலிந்து எலும்புக்கூடாகக் காணப்பட்டார். உண்ண உணவளித்தால் சட்டைப் பைகளிலும், மேசை டிராயர்களிலும் மறைத்து வைத்து, பலமுறை நாய்களுக்கும் கொடுத்துவந்தார்.

மேர்வானின் மகிழ்ச்சிகரமான, பிரகாசமான மனநிலை மாறி, பைத்தியக்காரத் தோற்றத்தில் காணப்பட்டார்.

இவ்வேளையில், மேர்வான் எவருக்கும் தெரியாமல் வீட்டைவிட்டு வெளியேறி, பாபாஜானை சந்திக்கச் செல்வதும் வழக்கமாகிவிட்டது. ஷிரீன், தனது மகன் மேர்வானின் அவல நிலையைக் கண்டு, பொறுமையும், நம்பிக்கையும் இழந்த நிலையில், தாயார் கோலண்டூனையும் அழைத்துக் கொண்டு, ஹஸ்ரத் பாபாஜானை சந்திக்கச் சென்றார். இருவரும் பாபாஜானை அணுகி, வருத்தத்துடன் ‘மேர்வான் உங்களை அடிக்கடி சந்திக்க வருவது எங்களுக்குத் தெரியும், எனது மகனை என்ன செய்தீர்கள்? அவனோடு உங்களுக்கு என்ன வேலை? அவன் ஏன் உங்களை சந்திக்க வேண்டும்? இந்த மாதிரி அவன் எப்போதும் இருந்ததே இல்லை’ என்று கேட்டனர்.

அதற்கு பாபாஜான், இருவரையும் பார்த்து சிரித்துக்கொண்டே, “மேர்வான்…. மேர்வான்… என் அருமை மகன்…. என் அருமை மகன்….” என்றார்.

பாபாஜான் கூறியதைக் கேட்டு எரிச்சலடைந்த ஷிரீன், தாயாரைப் பார்த்து, “என்ன தைரியம் இருந்தால் மெரோகை அவளது மகன் என்று சொல்வாள்?” எனக் கேட்டதும், “மேர்வான்…. இந்த உலகத்தை ஆட்சி புரிவான், இந்த உலகத்தை விழிப்புறச் செய்வான்” என்று பாபாஜான் முணுமுணுத்துக் கொண்டிருந்தார்.

ஷிரீன் உடனே, “நீ என்ன சொல்கிறாய்? என்ன அர்த்தம் அதற்கு?” என்று கேட்டபோது பாபாஜான் விளக்க மறுத்து விட்டார். உடனே பாபாஜான் அந்தப் பேச்சைத் திசை திருப்பி, தாயார் கோலண்டூனைப் பார்த்து அவர்

பெர்ஸியாவில் இருந்தபோது நடந்த கதைகளைப் பேச ஆரம்பித்து, இறுதியில் இருவரும் கண்கலங்கினர். ஷிரீன் பெரிதும் ஏமாற்றமடைந்தார். ஷிரீனுக்கு பாபாஜானை சந்தித்ததில் சிறிதளவும் திருப்தியில்லை. ஆனால் கோலண்டுன் பாபாஜானின் ஆளுமை மற்றும் அன்பான உபசாரத்தைக் கண்டு, பெருமகிழ்ச்சி அடைந்தார்.

முதல் உலகப்போர் 1914, ஜுன் மாதம் ஆரம்பமானது. இவ்வேளையில் மேர்வான் எவரிடமும் பேசுவதில்லை. தனிமையை விரும்பினார். ஒரு முறை வீட்டிலிருந்து வெளியே சென்றவர், பூனாவில் கோண்ட்வா (KONDHWA) கிராமத்தில் அமைந்த ஸொராஷ்டிரர்களின் மயானத்தில் மூன்று நாட்கள் எதுவும் உண்ணாமல், தனிமையில் இருந்துவிட்டு, வீட்டிற்குத் திரும்பி வந்தார். மேர்வான் எங்கோ தொலைந்து விட்டார் என நினைத்தவர்கள் அவரைப் பார்த்ததும் நிம்மதியடைந்தனர்.

எவ்வளவோ முயன்றும், மேர்வான், சாதாரண நிலைக்கு வராததால், பெற்றோர் அவரை மும்பையில் வாழ்ந்த சகோதரன் ஜாம்ஷெட் வீட்டிற்கு, ஏதாவது மாற்றம் வரும் என்ற நம்பிக்கையில் அனுப்பி வைத்தனர். அண்ணன் மகிழ்ச்சியோடு மேர்வானை நன்றாக கவனித்து வந்தார். ஜாம்ஷெட் காலையில் அலுவலகம் செல்லும் வேளையில், மேர்வானும் வெளியே சென்று, சௌபாட்டி கடற்கரையில் இருக்கை ஒன்றில் அமர்ந்து, அலைகள் வீசுவதை பல மணி நேரம் தொடர்ந்து பார்த்துக் கொண்டே இருப்பது வழக்கம். மதிய வேளையில் அருகிலுள்ள விக்டோரியா பூங்கா (VICTORIA GARDEN) சென்று, தனக்கென ஒரு குறிப்பிட்ட இருக்கையில் ஜாம்ஷெட் வருவது வரை அமர்ந்திருப்பதை வழக்கமாகக் கொண்டார்.

பல வாரங்கள் இப்படியே கழிந்தன. ஒரு நாள், பூங்காவில் மேர்வான் அமரும் அந்த வழக்கமான இருக்கையில் பார்சி குடும்பம் ஒன்று - தாய், தந்தை, இளம் வயது மகள் மூவரும் அமர்ந்திருந்தனர். மேர்வான், அவர்களைப் பார்த்ததும், பதட்டத்தில் முன்னும் பின்னும் வேகமாக நடந்தார். மேர்வானின் கண்கள் மூடாமல் திறந்தே இருந்ததால், அந்தப் பெண்ணை முறைத்துப் பார்ப்பதாகத் தவறாகப் புரிந்துகொண்டு, பெண்ணின் தந்தை, கோபத்தில் மேர்வானைக் கன்னத்தில் அறைந்தார். மேர்வானும், சுற்றுப்புறங்களைப் பற்றிய எந்த உணர்வும் இல்லாத நிலையில், அறைந்ததைக் கண்டுகொள்ளாமல் அவரது வேக நடையைத் தொடர்ந்தார். மூவரும் மேர்வானைப் பைத்தியமென நினைத்து அங்கிருந்து சென்றுவிட்டனர். மேர்வான், உடனே அந்த இருக்கையில் அமர்ந்து கொண்டார். மாலையில், வழக்கம் போல ஜாம்ஷெட் வந்ததும் இருவரும் தங்கள் வீட்டிற்குச் சென்றனர்.

1914ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மேர்வான், மும்பையிலிருந்து பூனாவுக்குத் திரும்பி வந்தார். அப்போது ஆட்களையும் இடங்களையும் அடையாளம் கண்டுகொள்ளும் அளவிற்கு உணர்வு திரும்பி இருந்தது.



ஷிரீன்மாயின்
தாயார், கோலண்டுன்



ஜாம்ஷெட்டுடன்
மெர்வான்



பெஹராம்ஜியுடன்
மெர்வான்

கண்ணிமைகளும் ஓரளவு மூடித்திறந்தன. சிறிய அளவில் உணவும் உண்ணத் தொடங்கினார். மேர்வானிடம் தென்பட்ட மாற்றங்கள் அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

மேர்வான், வீட்டின் மேல் மாடியில் அமைந்த ஒரு சிறிய இருட்டறையைத் தனக்கென வைத்துக் கொண்டார். சாதாரண மனித உணர்வைத் திரும்பப் பெறும் நேரத்தில் மேர்வான் பெரும்பாலும் அந்த அறையில் தனியாகவே இருந்து வந்தார். மிக அரிதான சந்தர்ப்பங்களில் நண்பர்களுடன் வெளியே நடக்கச் சென்றார்.

இப்படிப்பட்ட விசித்திரமான நாட்களில், ஒரு நாள் திடீரென மேர்வான், கோவில் ஸ்தலங்களை தரிசனம் செய்ய விரும்பினார். குஜராத் மாநிலத்தில், உத்வாடா (UDWADA) என்ற இடத்தில் பார்சி இனத்தவர்களுக்காக முதல் முறையாக எழுப்பப்பட்ட நெருப்புக் கோயில் உள்ளது. இந்தக் கோயிலில், 7000 ஆண்டுகளுக்கு முன்னர், அவதார புருஷராக வந்த ஸொராஸ்டர் எழுப்பிய தீ விளக்கு இன்றும் எரிந்து கொண்டிருக்கிறது. பார்சி இனத்தவர்கள் 18ஆம் நூற்றாண்டில் இந்தியா வந்தபோது, இந்த அணையா விளக்கையும் எடுத்துவந்து உத்வாடாவில் கோவிலமைத்து விளக்கை எரிய வைத்தனர். இந்துக்களுக்கு பனாரஸ், முஹமதியர்களுக்கு மெக்கா இருப்பது போல், உத்வாடா பார்சி இனத்தவர்களுக்குத் புனிதஸ்தலமாகத் திகழ்கிறது. மேர்வான், சகோதரன் ஜாம்ஷெட் மற்றும் நான்கு நண்பர்களுடன் உத்வாடாவுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

அங்கிருந்த மூன்று நாட்களும், மேர்வான் தினமும் அதிகாலையில் கோயில் சென்று பிரார்த்தனை செய்து வந்தார். கடற்கரையில் நண்பர்களுடன் அமர்ந்து உணவு உண்டார். நண்பர்கள் மீன் போன்ற பலவிதமான உணவுகளை ருசித்தனர். ஆனால் மேர்வான் வெறும் ரொட்டி, உருளைக்கிழங்கு மட்டுமே உண்டார். மதுபானம் அருந்த மேர்வான் எவரையும் அனுமதிக்கவில்லை.

மேர்வான் தனது மதுரமான குரலில் அருமையாகப் பாடினார். அக்கம் பக்கம் இருந்தவர்கள் அனைவரையும் அது காந்தம் போல் ஈர்த்தது. பாடல்களின் கருத்து, மெய்மறந்து பாடிய விதம் அனைவரையும் கவர்ந்தது. அதைக் கேட்டு ரசித்துக் கொண்டிருந்த வயதான ஒருவர், “பாடல்களை மேர்வான் பாடும்போது அவர் முகத்திலிருந்த பிரகாசம், கடவுளைப் பற்றிய ஆழமான கருத்து - இவைகளைப் பார்க்கும்போது இவர் நிச்சயமாக உலகப்புகழ் பெற்ற ஒரு பெரிய மனிதராக வருவார் என நான் நம்புகிறேன்” என்று கூறினார். அருகிலிருந்தவர்கள் அனைவரும் அதைக் கேட்டு, கைத்தட்டி ஆரவாரம் செய்தனர். மேர்வான் வெட்கத்தில் தலைகுனிந்தபடி இருந்தார். அனைவரும் ‘இவர் யார்?’ என்று எண்ணி ஆச்சரியமடைந்தனர்.

உத்வாடாவிலிருந்த மூன்று நாட்களுக்குப் பிறகு, மேர்வான் நண்பர்களுடன் நவ்ஸாரி (NAVSARI), ஸூரத் (SURAT), பரூச் (BHARUCH) மற்றும் மும்பையிலும் சில நாட்கள் இருந்துவிட்டு பூனா திரும்பி வந்தார்.

மேர்வானின் நண்பர்களுக்கு அவரது உண்மையான நிலை என்ன என்பது தெரியாது. குறிப்பாக பெய்லி, முதன் முறையாக, மேர்வான் இதுபோன்ற வெளி உலகை அடையாளம் கண்டுகொள்ளாத நிலையைப் பார்த்து ஆன்மீக ரீதியிலான உள்மாற்றத்தை ஓரளவு புரிந்துகொண்டார். ஆனால் சகோதரர் ஜாம்ஷெட், மேர்வானுடன் பலநாட்கள் இருந்ததால் உண்மை நிலையைப் புரிந்துகொள்ள முடிந்தது.

மேர்வான் அழைத்துச் சென்ற நண்பர்களில் முக்கியமாக பெஹராம்ஜி (BEHRAMJI), கோடு (KHODU), பெய்லி (BAILEY) மூவரும், பிற்காலத்தில் மெஹர் பாபாவின் அவையில் சீடர்களாக அங்கம் வகித்த அதிர்ஷ்டசாலிகள்.

பூனாவுக்குத் திரும்பி வந்த பிறகு மேர்வான் ஏறக்குறைய வெளியளவில் சாதாரண நிலைக்கு வந்தவர் போலத் தென்பட்டார். தாயார் ஷிரீன், மேர்வான் மீதுள்ளப் பாசத்தில், “மெரோக்! ஏதாவது வேலை செய்! நல்ல வேலையாகத் தேடிக்கொள். எனக்குத் தெரியும், நீ மனதளவில் மிகவும் பாதிக்கப்பட்டு, பெரும் சிரமத்திற்கு உள்ளானாய்! ஆனால் இப்போது நீ ஏதாவது நிலையான வேலை, அல்லது உனக்குப் பிடித்தமான தொழிலில் ஈடுபட்டால், நீ பழைய நிலைக்கு வந்துவிடுவாய். எனக்கு உன்மேல் நல்ல நம்பிக்கை உள்ளது” என்று கூறினார் .

நண்பர் பெஹராம்ஜி படிப்பறிவில்லாதவர். மேர்வான் மீது அளவுகடந்த மரியாதையும், பாசமும் கொண்டிருந்தார். மேர்வான் அவருக்குப் பெர்ஸியன் மொழி கற்றுக் கொடுத்து, கடைசியில் ஹாஃபீஸின் திவானை படிக்கச் செய்தார். இதைப் பார்த்த ஷிரீன், மேர்வானை எப்படியாவது பழைய நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற எண்ணத்தில், மேலும் மாணவர்களை மேர்வானிடம் பாடம் கற்றுக்கொள்ள, கட்டாயப்படுத்திச் சேர்த்து வைத்தார். மேர்வானும் தாயார் கூறியதை ஏற்றுக்கொண்டார்.

இவ்வாறு, பெஹராம்ஜி தினமும் மேர்வானிடம் பாடம் கற்று வந்தார். அவருக்கு மேர்வானுடன் இருப்பதைத் தவிர வேறு எதிலும் ஆர்வமில்லை. இறுதியில் மேர்வான், கடவுளைப் பற்றிய விஷயங்களையும் - ஆன்மீகப் பாதை, குருநாதரின் தேவை, மற்றும் ஆன்மீக விளக்கங்களையும் அவருடன் பகிர்ந்து கொண்டார். மேர்வான் பூனாவை விட்டு வெளியே செல்லும் வேளையில், பெஹராம்ஜியைத் தன்னுடன் அழைத்துச் செல்வது வழக்கமாகிவிட்டது. பெஹராம்ஜியும் அதையே விரும்பினார்.

1915ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், மேர்வான், பெஹராம்ஜியிடம், “**நான் ஒரு முக்கியமான பயணமாக வெளியே செல்ல உள்ளேன். திரும்பி வர நீண்ட காலம் ஆகலாம். நான் ஒரு சன்னியாசி வாழ்க்கை வாழ முடிவு செய்துள்ளேன். என்னைப் பற்றிய விபரங்கள் உங்களுக்குத் தெரியாமல் போகலாம். ஆனால் உங்களை வரச்சொல்லி நான் எழுதும்போது, நீங்கள் உடனே, நான் எங்கிருந்தாலும் என்னிடம் வரவேண்டும்**” என்று கூறினார்.

இதைக் கேட்டு, பெஹராம்ஜி மிகவும் அதிர்ச்சிக்குள்ளானார். மேர்வான் எங்குச் சென்றாலும் அவருடனே இருக்க விரும்பினார்.

அதே நாள் இரவில் மேர்வான் ரயிலில் ரயிச்சூர் புறப்பட்டார். வழியில் அவர், உள்ளார்ந்த இறை உணர்வுகளின் அழைப்பிற்குக் கட்டுப்பட்டு, பூனாவிலிருந்து முப்பது மைல் தொலைவில் அமைந்த கேட்காவ்ம் (KEDGAON) எனும் கிராமத்தில் இறங்கி, அங்கிருந்து ஏழு மைல் தொலைவில், சத்குரு நாராயண் மஹாராஜ் (SADGURU NARAYAN MAHARAJ) வாழ்ந்து வந்த ஆஷ்ரமத்தை நோக்கி நடந்தார்.

அவ்வேளையில், நாராயண் மஹாராஜ் அவரது அவையில் தரிசனம் வழங்கிக் கொண்டிருந்தார். திடீரென ஓர் ஒளி அங்கிருந்த அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது. திரும்பிப் பார்த்தபோது, மேர்வான் கிழிந்த சட்டையுடன், வித்தியாசமான தோற்றத்தில் சுய நினைவு இல்லாதவர் போல, வாசலில் நின்று கொண்டிருந்தார்.

நாராயண் மஹாராஜ், உடனே அனைவரையும் அங்கிருந்து புறப்படச் சொல்லி, அவரது சிம்மாசனத்திலிருந்து எழுந்து, வாசல்வரைச் சென்று, மேர்வானின் கையைப் பற்றிய வண்ணம் அழைத்து வந்து, அவரது இருக்கையில் அருகில் அமர வைத்து, அவரது கழுத்திலிருந்த பூமாலையை மேர்வானுக்கு அணிவித்தார். மேலும் மாம்பழ ரசம் எடுத்துவரக் கூறி, மேர்வானுக்கு அதைக் கொடுத்தார். மாம்பழ ரசத்தைப் பருகிய மறுகணமே மேர்வான், மஹாராஜை வணங்கி விடைபெற்றுச் சென்றார். 'என்ன பரிமாறிக் கொண்டனர்' என்பது இறைவனுக்கே வெளிச்சம்.

அதே நாள் இரவில் பூனா திரும்பி வந்தார். பெஹராம்ஜிக்கு ஒரே ஆச்சரியம் - மேர்வானைப் பார்த்த சந்தோஷம்.

நாம் வாழும் இந்தக் காலகட்டத்தில், இதுபோன்ற ஓர் அற்புத நிகழ்ச்சியை, அவதார புருஷர் மீது சத்குருக்கள் கொண்டிருக்கும் ஆழமான அன்பை நாம் பார்க்க முடிவதே ஒரு பாக்கியம்.

மேர்வான், சத்குரு நாராயண் மஹாராஜை சந்தித்தது, அவருக்குக் கடவுளின் மகிமையை மேலும் உணரச் செய்தது. பேரொளி மற்றும் பேரின்பம் மேர்வானை மயக்கத்தில் ஆழ்த்தி இருந்தாலும், அவருடைய இறை ஒளியும், இறை இன்பமும் இப்போது பிறரைத் திகைப்பில் ஆழ்த்தின.

சத்குரு நாராயண் மஹாராஜை சந்தித்த சில நாட்களில், மேர்வான் நண்பர்களுடன் மும்பை, ஔரங்காபாத் நகரங்களுக்குச் சென்று, அந்த இடங்களுக்கு, அப்போது ஆன்மீகப் பொறுப்பாளர்களாக இருந்த சித்தர்களை சந்தித்தார். சித்தர்கள் ஒன்றிலிருந்து ஆறாவது ஆன்மீகத் தளங்களில் நிலைகொண்டிருக்கும் சக்திவாய்ந்த ஆத்மாக்கள்.

மேர்வான், அதற்குப் பிறகு பெஹராம்ஜியுடன் நாக்பூர் (NAGPUR) நகருக்குச் சென்றார். நாக்பூர், ஐந்து சத்குருக்களில் ஒருவரான தாஜுதீன் பாபா

(TAJUDDIN BABA) வாழ்ந்த இடம். இது மேர்வான் அவரது மூன்றாவது சத்குருவை சந்திக்கும் நிகழ்ச்சியாகும்.

மேர்வான் அங்குச் சென்ற வேளையில், தாஜுதீன் வாக்கி ஷரீஃபில் பக்தர்களுக்கு தரிசனம் வழங்கிக் கொண்டிருந்தார். அன்று அவர் மிகவும் சீற்றமான மனநிலையில் காணப்பட்டார். ஆனால், தாஜூதீன், மேர்வானைக் கண்டதும் மகிழ்ச்சியுடன் எழுந்து, அவரை வரவேற்க வாசல் வரை சென்றார். அதைப் பார்த்த அனைத்து பக்தர்களுக்கும் ஒரே ஆச்சரியம். கையிலிருந்த ரோஜாப்பூக்களை மேர்வான் முகத்திலும், உடலிலும் வருடிய வண்ணம் அவரை, ‘சொர்க்கத்தின் ரோஜா’ என்றழைத்தார்.

தாஜுதீன் இறுதியில் மேர்வானை, ‘சென்று வா’ என்று விடையளித்தாற் போல ரோஜாமலரை அசைத்தார். அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. மேர்வான் உடனே அவரை வணங்கி, திரும்பிச் சென்றார். வெளியளவில் நடந்தது இவ்வளவுதான். ஆனால் அதில் அடங்கியுள்ள ஆன்மீக முக்கியத்துவத்தை, சாதாரண மக்களால் புரிந்துகொள்ள முடியாது. இருவரின் சந்திப்பில் நிலவிய அந்த மௌனம் ஆழமானதாக இருந்தது. காலம் இந்த சந்திப்பின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளும். அது வானமும் கடலும் ஒன்றாய் இணைந்த ஆன்மீக சந்திப்பாகும். அப்போது தோன்றிய அமைதி இப்பூவுலகையும், சொர்க்கத்தையும் ஆக்கிரமித்தது. மேர்வான் கடவுள் நிலையைத் தன்னுள் அடக்கி, உலக உணர்வை அடைந்து கொண்டிருந்தார்.

பூனா வந்தடைந்த மேர்வான், அவருடைய மற்றுமொரு நெருங்கிய நண்பர் கோடு (KHODU) என்பவரை சந்தித்தார். மேர்வானைவிட வயதில் பெரியவர். நல்ல வாட்டசாட்டமான உடம்பு. மேர்வானின் உண்மை நிலை அவருக்கு அப்போது தெரியாது. மேர்வானை மிகவும் நேசித்தார். உலகில் மேர்வான் மட்டுமே உண்மையான நண்பன் என்று கருதினார். ஆசையோடு மேர்வானை லங்கோட்டி நண்பன் என்று அழைத்தார். பெரும்பாலும் தோழமையின் காரணமாக இருவரும் விளையாட்டுத்தனமாக இருந்தனர்.

ஒரு முறை மேர்வான் கோடுவின் வீட்டிற்குச் சென்றபோது, அங்கு அவரில்லை; மனைவி நாஜா மேர்வானை அமரச் சொன்னபோது, மேர்வான் உண்ண ஏதேனும் வேண்டுமெனக் கேட்டார். நாஜா கொடுத்த உணவை மேர்வான் வேகவேகமாக உண்டார். கோடு திரும்பி வந்ததும், மேர்வானைப் பார்த்த மகிழ்ச்சியில் இறுக்கமாகக் கட்டியணைத்தார்.

மேர்வான் உடனே அவரை எச்சரித்தார், “**கோடு! என்னோடு குஸ்தி போடுவதை நிறுத்திவிடு. என்னை இப்படி முரட்டுத்தனமாகப் பிடிக்காதே!**” மேலும் மறைமுகமாக, “**நான் இப்போது பழைய மேர்வான் அல்ல**” என்று எச்சரித்தார்.

ஏதோ மேர்வான் வேடிக்கையாகக் கூறுவதாக நினைத்து, “அப்படியா! நீ அந்த மேர்வான் இல்லையென்றால், வேறு யார்? இந்த மேர்வான் யாரென்று நான் பார்க்கிறேன்” எனக் கூறிக்கொண்டே மேர்வானைத் தூக்கித் தரையில்

வீழ்த்தத் தயாரானார். (அப்போது மேர்வான் மிகவும் மெலிந்து எலும்புக்கூடாகக் காணப்பட்டார்). கோடு, மேர்வானின் கைகளைப் பிடிக்க முயன்றபோது, மேர்வான் சாதாரணமாக ஒரு கையை நீட்டித் தடுத்து மெதுவாகத் தள்ளி விட்டார். அவ்வளவுதான், கோடு சுழன்றடித்துக் கீழே விழுந்தார்.

மேர்வானின் சக்தியைக் கண்டு 'கொடு' அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடைந்தார். மேர்வான் அதைக் கோபத்தில் செய்யவில்லை; நல்லெண்ணத்தில் கோடுவிற்குக் கை கொடுத்து உதவினார். இருவரும் ஒன்றாக அமர்ந்து பேசத் தொடங்கினர். மேர்வான் இப்போது ஒரு சாதாரண மனிதனல்ல என்பதை, கோடு புரிந்துகொண்டார். மிகுந்த மரியாதையுடன் மேர்வானைப் பார்க்க ஆரம்பித்தார். இருவரும் அடிக்கடி சந்தித்தனர். மேர்வான், ஹஸ்ரத் பாபாஜானைப் பற்றிய விஷயங்களை கோடுவுக்கு எடுத்துரைத்தது, அவர் மனதில் ஆழமாகப் பதிந்தன. மேர்வான், பாபாஜானிடம் செல்லும் போதெல்லாம் தானும் கூடவே செல்வதும், இருவரும் பாபாஜான் அருகில் இரவெல்லாம் அமர்ந்திருப்பதும் வழக்கமாகிவிட்டது. கோடுவின் மனதில் மேர்வானுக்கென ஒரு தனி இடம் உருவானது.

மேர்வான், அவருடைய மூன்றாவது சத்குரு தாஜுதீன் பாபாவை சந்தித்து திரும்பி வந்த பின்பு, தினமும் ஹஸ்ரத் பாபாஜானுடன் பல மணி நேரங்கள் அமர்ந்திருப்பது வழக்கமாயிற்று.

அடுத்த சில மாதங்களில், ஹஸ்ரத் பாபாஜான் அடிக்கடி மேர்வானிடம், "மகனே! நீ தேடும் புதையல் மற்றும் அந்தப் புதையலின் திறவுகோல் என்னிடமில்லை! அதை உனக்குத் தரவேண்டியவர் நானல்ல! அந்தப் புதையல் உனக்குத்தான் - உனக்கு மட்டும்தான் - அதில் சந்தேகம் எதுவுமில்லை, அந்தப் புதையல் உனக்கே! ஆனால், மகனே, அதற்கான திறவுகோல் உன்னிடம் வேண்டும்.... அதை நீ பெற்றுக்கொள்ள வேண்டும்!" என்று கூறினார். பாபாஜான் இவ்வண்ணம் ரகசிய முறையில் பேசுவது வழக்கம்; அத்தனை தெளிவாக இருக்காது. ஒரு நாள் இரவு மிகவும் தெளிவான குரலில், "அந்தப் புதையலை நீ அடைய வேண்டிய தருணம் நெருங்கி விட்டது! மகனே, திறவுகோல் அங்கேதான் இருக்கிறது. எனவே ஷிர்டிக்குச் சென்று வா! அங்கே புனிதமான சாய் இருக்கிறார்! அவரைச் சென்று பார்! அவரிடமிருந்து அந்தத் திறவுகோலைப் பெற்றுக்கொள்." என்று பாபாஜான் மேர்வானிடம் கூறினார்.

சில நாட்களுக்குப் பிறகு, மேர்வான், கோடுவிடம், "**சென்ற சில மாதங்களாக, எனது வயிற்றில் அபார வலி இருந்து வருகிறது. அது தீர்ந்த பாடில்லை, என்ன செய்வது என்றும் தெரியவில்லை**" எனக் கூறினார்.

கொடு, சாய் பாபாவைச் சுற்றி நிகழும் அற்புதங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தார். பாபாஜான் மேர்வானிடம் கூறியதையும் நினைவில் கொண்டு, "நண்பா! நீ என்னோடு சாய் பாபாவிடம் வந்தால், ஒருவேளை உனது வலி மறைந்துவிடும். எல்லா நோய்களையும் சாய் பாபா குணப்படுத்துவதாகக்

கேள்விப்படுகிறேன். அற்புதங்கள் அங்கே தினமும் நடக்குமாம்! வா, நாம் சென்று அந்தப் புனித சாயியைப் பார்க்கலாம்!" என்று மேர்வானிடம் கூறினார்.

மேர்வான் அதற்கு சரியென இணங்கவே, இருவரும் ஷிர்டியை நோக்கிப் புறப்பட்டனர்.

மேர்வான், கோடு இருவரும் ஷிர்டியை நெருங்கியதும், கிராமத்தில் உள்ளவர்கள் இருவரையும் உள்ளே அனுமதிக்கவில்லை. கோடு உடனே, "நாங்கள் சாய் பாபாவைப் பார்க்க வந்துள்ளோம்; எங்களைப் போகவிடுங்கள்" என்றதும், "நீங்கள் சாய் பாபாவைப் பார்க்க முடியாது! எவரும் பார்க்க முடியாது! சாயியின் கட்டளைப்படி இன்று எவரும் தரிசனம் செய்ய முடியாது. நீங்கள் எங்கிருந்து வந்தீர்களோ அங்கே திரும்பிச் செல்லுங்கள்" என்று உரத்த குரலில் கூறினார்கள்.

மேர்வான் உடனே கோடுவிடம், "**நாம் சற்று பொறுமையோடு காத்திருக்கலாம்**" என்று அருகிலிருந்த பெரிய மரத்தைச் சுட்டிக்காட்டி, "**இன்றிரவை இங்கேயே கழிக்கலாம்**" என்றார். குளிர்காலம்; கோடுவுக்குக் குளிரின் கொடுமை தாங்க முடியவில்லை. ஆனால் அதை மேர்வான் கண்டுகொள்ளாமல் இருந்தார்.

மறுநாள் காலையிலும் அவர்களை உள்ளே அனுமதிக்க மறுத்தனர். அன்று மதியம் இருவரையும் வரக்கூறி அழைப்பு வந்தது, "சாய் பாபா உங்கள் இருவரையும் அழைக்கிறார். அவர் இருக்கும் மசூதிக்குச் செல்லுங்கள். அவர் இன்னும் சீற்றமாகவே இருக்கிறார். கவனமாகச் செல்லுங்கள்" என்று கூறினர்.

சாய் பாபாவிற்கு அப்போது வயது 77. வெண்பனி போல தாடியும், தலை முடியும்; வெள்ளை நிற ஜிப்பா அணிந்துகொண்டு மசூதியில் அமர்ந்திருந்தவர், கோடுவைச் சுட்டிக்காட்டி, 'நான் அவனை மட்டும் பார்க்க வேண்டும்' என்றார்.

கோடு உடனே பதற்றத்துடன் அருகில் சென்றதும், சாய் பாபா அவர் முதுகில் வேகமாக அறை ஒன்றைக் கொடுத்தார். சில கணங்களுக்கு மூச்சு அடைத்தது போல் உணர்ந்து, திகைப்படைந்த கோடுவிடம் சாய் பாபா, "உன் நண்பன் யார்? அவனுக்கு என்ன வேண்டும்?" என்று விசாரித்தார்.

"அவர் பெயர் மேர்வான்.... மேர்வான் ஷெரியார் ஈரானி. அவர் மிகவும் பக்தியுள்ளவர். உங்கள் தரிசனத்திற்காக ஏங்குகிறார். பூனாவில் வாழும் பாபாஜான் உங்களைப்பற்றிக் கூறினார்கள்!" என்றார் கோடு.

அதைக் கேட்டதும் சாயியின் கண்களில் தீப்பொறிகள் பறந்தன. "அது முடியாது! என்னைப் பார்க்க அனுமதிக்க மாட்டேன்! அவனை வரவிடமாட்டேன்!" என்று சாய் பாபா கத்தினார்.

மேர்வானின் நண்பன் கோடு, சாய் பாபாவின் முன்னே நின்று கொண்டிருந்தார். சாய் பாபா உடனே கோடுவைப் பார்த்து, "உன்னிடம் இருக்கும் பணத்தைக் கொடு! அத்தனையும் கொடு!" என்றதும் தன்னிடமிருந்த எல்லா பணத்தையும் கொடுத்துவிட்டார்; "இப்போது போய் உன் நண்பனிடம் கூறு, நான் அவனைப் பார்க்க மாட்டேன் என்று! அவன் என்னிடம் வர முடியாது" என்றதும், கோடு, மேர்வானிடம் சென்று நடந்ததை எடுத்துரைத்தார். அதற்கு மேர்வான்,

**“இல்லை! சற்று காத்திருப்போம்! நான் அவரைப் பார்த்தாக வேண்டும். நிச்சயமாகப் பார்ப்பேன்!”** என்றார்.

சிறிது நேரத்திற்குப் பிறகு, சாய் பாபா அவருடைய வழக்கமான லெண்டி ஊர்வலத்தில் (அருகாமையில் இருந்த இன்னுமோர் இடத்திற்குச் சென்று, தன்னுடைய காலைக்கடனை முடிப்பது வழக்கம் - இது அவருடைய ஆன்மீகப் பணிகளில் ஒரு முக்கிய அம்சமாகக் கருதப்பட்டது) மேள தாளத்துடன் மகிழ்ச்சிகரமாக, ஆனால் ஆழ்ந்த மரியாதையுடன் வந்து கொண்டிருந்தார். கோடு கூறியதற்கு எதிர்மாறாக, சாய் பாபா பெருமகிழ்ச்சியுடன் காணப்பட்டார். இந்த சத்குருக்களை என்னவென்று சொல்வது! ஆயிரம் முகங்கள், ஆயிரம் குணங்கள், புரிந்துகொள்வதே கடினம். சாய் பாபா அருகாமையில் வந்தபோது மேர்வான் சாஷ்டாங்கமாக அவர் காலடியில் விழுந்து வணங்கினார். சாய் பாபா சில வினாடிகள் மேர்வானை உற்று நோக்கி, ஆழ் இதயத்திலிருந்து வரும் ஆழமான உரத்த குரலில் ‘பர்வர்திகார்’ (PARVARDIGAR) என்று அழைத்தார் - அதாவது ‘காக்கும் கடவுள்’ என்று அனைவருக்கும் பறைசாற்றினார்.

சாய் பாபாவின் கண்களில் அப்படி ஒரு பிரகாசம். அடக்க முடியாத ஆனந்தத்தில் ‘பர்வர்திகார்’ என்ற புனித வார்த்தையை அவர் மொழிந்தது, அருகில் இருந்தவர்களுக்கு எதுவும் புலப்படாமல் ஆச்சரியமாக இருந்தாலும், மேர்வானுக்கு அந்த வார்த்தை முடிவில்லா சக்தியை வழங்கியது.

மேர்வான் ‘அளவிறுதியற்ற சக்தி வாய்ந்த கடவுள்’ என்பதை சாய் பாபா உறுதிப்படுத்தினார். மேர்வானால் மட்டும்தான் அதைப் புரிந்துகொள்ள முடிந்தது.

‘பர்வர்திகார்’ என்ற இறை வாக்கைக் கேட்ட ஆனந்தத்தில், மேர்வான் எழுந்ததும், சாய் பாபா, தலை தாழ்த்தி, இரு கரங்களையும் கூப்பி மேர்வானை வணங்கினார். மறுபடியும் அதே குரலில் ‘பர்வர்திகார்’ என்று அழைத்து, ‘அந்த வழியே செல்லுங்கள்’ என்று சைகை மூலம் சொல்லிக்கொண்டே நடந்து சென்றார். கொடுவும், மேர்வானும் இன்னொரு வழியில் செல்ல, சாய் பாபா, மறுபடியும் மூன்றாவது முறையாக, மேர்வானை நோக்கி, அதே குரலில் ‘பர்வர்திகார்’ என்று அழைத்தார். சாய் பாபாவின் இந்தப் பறைசாற்றல், நம்மை இக்காலத்தில் மேர்வானை, ஆதிபகவனாக வணங்க வழி வகுத்தது.

இந்த அபூர்வமான சம்பவத்தைப் பார்த்துக் கொண்டிருந்த சாய் பாபாவின் சீடர்களும், பக்தர்களும் என்ன நடக்கிறது என்று ஒன்றும் புரியாமல் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர்.

மேர்வான், நண்பன் கோடுவுடன் சென்ற அந்தப் பாதை அவர்களை அருகிலிருந்த வேறொரு கோயில் பக்கம் அழைத்துச் சென்றது. கண்டோபா கோயில் என்று அழைக்கப்படும் அங்கே, மேர்வானின் ஐந்தாவது சத்குரு உபாஸனி மஹாராஜ் வாழ்ந்து வந்தார். என்ன ஓர் அற்புதமான அமைப்பு; எல்லாமே தானே இயங்குவது போல் - ஐந்து சத்குருக்களும் திட்டமிட்டு

மேர்வானை ‘அவதார புருஷன்’ என்ற நிலைக்கு கொண்டுவரும் காட்சி! என்ன இறை நாடகம் பாருங்கள்!

உபாஸனி மஹாராஜ் கண்டோபா கோயிலின் வெளி வாசற்படியில் மேர்வானை எதிர்பார்த்துக் காத்திருந்தது போலத் தோன்றியது. உடலை ஒரு சிறிய கோணித்துண்டால் மறைத்திருந்தார். சத்குருவின் அடுத்த திருவிளையாடலைப் பார்ப்போம்! மேர்வான் கோயிலை நெருங்கும் வேளையில், உபாஸனி அருகிலிருந்த ஒரு கல்லைக் கையிலெடுத்து, எழுந்து, அவரது முழு சக்தியுடன் மேர்வானை நோக்கி வீசினார். அந்தக் கல் மேர்வானை நெற்றியில், பாபாஜான் முத்தம் அளித்த அதே இடத்தில் தாக்கியது.

மேர்வானின் நெற்றியிலிருந்து வழிந்த இரத்தம் பூமியில் விழுந்தது. ஆதி பகவன், இக்காலத்தில், முதன்முதலாக சிந்திய இரத்தம்! மஹாராஜ் வீசிய கல்லின் தாக்கம் மேர்வானின் நெற்றியில் நிரந்தர வடுவை ஏற்படுத்தியது. கற்களுக்கு ஆன்மீகத்தில் சிறப்பான அர்த்தமுண்டு. அவை இப்பூவுலகின் திட (பௌதீக) உணர்வைப் பிரதிநிதித்துவமாகக் கொண்டு விளங்கும். மேர்வானின் நெற்றி வடு இவ்வுலக உணர்வைத் திரும்ப அடைவதற்கான அடையாளம். அந்த கணத்திலிருந்து, ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, மேர்வான் மறுபடியும் இவ்வுலகைப் பார்க்க ஆரம்பித்தார். ஆனால் முழுமையான உலக உணர்வை அடைய ஏழாண்டுகள், சத்குரு உபாஸனி மஹாராஜின் கண்காணிப்பில் மேர்வான் இருந்தார்.

மேர்வான், நெற்றியிலிருந்து வழிந்த இரத்தக் காயத்தோடு, பயத்தில் ஓடிவிடாமல், மஹாராஜை நோக்கி நடந்தார். இருவரும் ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டனர். கண்களில் நீர்வழிய உபாஸனி மஹாராஜ் நெற்றியில் காயம்பட்ட இடத்தை முத்தமிட்டார். மேர்வானை மட்டும் அழைத்துக் கொண்டு, தேளும் பாம்பும் வாழும் அவரது அறைக்குள் சென்றார். அதே வேளையில், கோடு நடந்ததைப் பார்த்த அதிர்ச்சியில் வெளியே நின்று கொண்டிருந்தார். கோடுவுக்கு நடந்தது எதுவும் புரியவில்லை. சாய் பாபாவின் பர்வர்திகார் என்ற பறைசாற்றல், அதைத் தொடர்ந்து மஹாராஜ் கல்லால் தாக்கிய சம்பவம், இதையெல்லாம் நினைத்து, நண்பர் கோடு எதுவும் செய்ய இயலாத நிலையில் வெளியே காத்திருந்தார்.

கொடு, மேர்வானின் தாயார் ஷிரீனுக்கு என்ன பதில் கூறுவது, மேர்வானுக்கு அந்தக் காயத்தால் என்னவாயிற்று என்ற சிந்தனையில் ஆழ்ந்தார்.

கண்டோபா கோயிலின் சுற்றுப்புற சூழ்நிலைகள் உள்ளே எவரும் நுழைய முடியாதபடி தடையாக இருந்தன. கோவிலின் உள்ளே நடந்ததைத் தெரிந்துகொள்ள வழியில்லாமல், மேலும் ஒரு நாள், இரவு கடந்தது. இரண்டு நாட்களுக்குப் பிறகு, காலை வேளையில் மேர்வான் மஹாராஜுடன் வெளியே வந்தார். கோடு, மேர்வானைப் பார்த்து, பெருமூச்சு விட்டவண்ணம், ‘மேர்வான்

உயிரோடு இருக்கிறார்' என்ற எண்ணத்தில் மகிழ்ச்சியடைந்தார். ஆனால் நெற்றி வடு மிகவும் ஆழமாக இருந்ததைப் பார்த்துக் கவலைப்பட்டார்.

உடனே, உபாஸனி மஹாராஜ், கோடுவிடம், "உன்னுடைய நண்பனை கவனித்துக்கொள். பூனா சென்று சேரும்வரை, பத்திரமாகப் பார்த்துக்கொள்" என்று கூறி அனுப்பி வைத்தார்.

கோடு தன்வசம் இருந்த எல்லா பணத்தையும் சாய் பாபாவிடம் கொடுத்து விட்டதால் மேர்வானிடம் பணம் இருப்பதைப் பார்த்து நிம்மதி அடைந்தார். வழியில் மேர்வானின் காயத்திற்குக் கட்டிட்டு, மருந்தும் வாங்கி, வீட்டிற்கு அழைத்துச் சென்றார். தாயார் ஷிரீனிடம் மேர்வான் கீழே விழுந்து காயம் ஏற்பட்டது என்று சொல்லி சமாளித்தார்.

மேர்வான் பூனாவுக்குத் திரும்பிவந்த பிறகு, ஹஸ்ரத் பாபாஜானைத் தினமும் சந்தித்து பல மணிநேரம் அவருடன் இருந்தார். வேறொருவர் அவரது உடலைத் தொட பாபாஜான் அனுமதிப்பது அபூர்வம். அவருடைய பாதங்களைத் தொட்டு வணங்குவது, கைகளில் முத்தமிடுவது போன்றவை வழக்கமாக நடந்தாலும், மேர்வானிடம் அவர் உடலை வருடி, அழுத்திவிடச் சொல்வதுண்டு. போதும் என்று பாபாஜான் முணுமுணுக்கும் வேளை மேர்வானிடம், '**சென்று வா**' என கூறி விடையளிப்பதாக அர்த்தம். அவ்வேளையில் அவரது கைகள் தசை பிடித்து விரல்கள் அசைக்க முடியாமலிருக்கும்.

வீடுசென்று மேர்வான் படுக்கையில் சாய்ந்தால் கண்கள் இன்னமும் திறந்தபடியே இருக்கும். காலை நான்கு மணிக்கெல்லாம் எழுந்து விடுவது வழக்கம். பூனா நகரம் விழிக்கும் முன்பே தன்னுடைய இனிமையான குரலில் ஸொராஷ்டிரியன் மொனாஜாத் (பிரார்த்தனை) பாடுவதை பழக்கமாகக் கொண்டார். அவர் இல்லத்தில் அனைவரும், அக்கம் பக்கம் இருப்பவர்களும் மேர்வான் பாடுவதை மிகவும் ரசித்துக் கேட்டனர். ஆழ் இதயத்திலிருந்து உணர்ச்சியுடன் பாடுவது மிகச் சிறப்பாக இருந்தது.

மேர்வான், சாதாரண மனித உணர்வுகளை அடைந்துவரும் இவ்வேளையில், இரண்டு முறை உண்ணத் தொடங்கினார். காலை வேளையில் தேநீர், காஃபி ஏதேனும் பருகி வந்தார். தாயார் ஷிரீன், இந்த அளவுக்கு மேர்வானிடம் ஏற்பட்ட மாற்றத்தைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார்.

மாதம் ஒரு முறை ஓரிரு நாட்கள் ஷிர்டி சென்று சாய் பாபாவை சந்தித்துவிட்டு கண்டோபா கோயிலில் உபாஸனி மஹாராஜுடன் இருந்து வந்தார். பெஹராம்ஜி அல்லது கோடு இருவரில் ஒருவர் மேர்வானுடன் செல்வதுண்டு. ஆனால் மேர்வான் தனியாகவே மஹாராஜுடன் இருந்தார்.

இவ்வாறு, மேர்வான் செல்லும் வேளைகளில், இந்து சத்குரு உபாஸனி மஹாராஜ், ஸொராஸ்டரின் வாழ்க்கைப் பற்றி விளக்கமாக உரை வழங்கினார். உண்மையான ஆன்மீக மார்க்கம், மதம், குலம், ஜாதி இவைகளுக்கு அப்பாற்பட்டது. மெஹர் பாபாவின் ஐந்து சத்குருக்களில் - பாபாஜான், தாஜுதீன்

பாபா இருவரும் முஸ்லிம் வழியிலும், நாராயண் மஹாராஜ் மற்றும் உபாஸனி மஹாராஜ் இந்து குடும்பங்களிலும் பிறந்தவர்கள். ஷிர்டி சாய் பாபா எந்த மதம் என்றே தெரியாத நிலையில் ஐவரும் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற அடிப்படையில் வாழ வழிவகுத்தனர்.

மேர்வான், சத்குரு உபாஸனி மஹாராஜை சந்திக்கச் செல்லும் வேளைகளில், தாயார் ஷிரீன் அதற்குத் தடையாக இருந்து, வீண் வம்பு செய்வதாக எண்ணி அவரிடம் எதுவும் சொல்வதில்லை. ஆனால் சித்தி பிரோஜா, கணவர் ருஸ்தம் இருவரிடம் எல்லா உண்மைகளையும் சொல்லி வந்தார். தினமும் அவர்கள் வீட்டிற்குச் செல்வதுண்டு. இருவரும் மேர்வானை பெரிதும் நேசித்தனர்.

தாயார் ஷிரீனுக்கு ஆதி என்று ஒரு சிறிய குழந்தை இருந்ததால் மேர்வான் தனது நண்பர்களுடன் வீட்டிற்கு வருவதை தாயார் விரும்பவில்லை. இது மேர்வானுக்கு இன்னும் சௌகரியமாக அமைந்தது. நண்பர்களை, சித்தி பிரோஜா (PIROJA) வீட்டிற்கு அழைத்து வந்து, இந்து, முஸ்லிம் சத்குருக்களின் கதைகள் சொல்வதும், கிரிக்கெட் விளையாடுவதும் தினமும் நடக்கும் சம்பவங்கள். பிரோஜாவும், மேர்வான் தன்னுடனிருப்பதைப் பெரிதும் விரும்பினார். ஷிர்டிக்குச் செல்லும் விஷயம் பிரோஜாவைத் தவிர வேறு எவருக்கும் தெரியாது. ஷிர்டியிலிருந்து திரும்பி வந்ததும் சித்தி பிரோஜாவை முதலில் சந்தித்து, உபாஸனி மஹாராஜ் வழங்கிய பிரசாதத்தைத் தருவதே அவரது முதல் வேலை; அவ்வளவு பிரியம்.

ஒரு முறை, மேர்வான், மும்பைக்குச் செல்வதாக தாயார் ஷிரீனிடம் கூறிச் சென்றார். ஷிரீனுக்கு சந்தேகம். தங்கை பிரோஜாவிடம் கேட்டபோது அவர் தனக்கு எதுவும் தெரியாது எனக் கூறிவிட்டார். மேர்வானின் தம்பி ஜால் பேருந்து நிலையம் சென்று பார்த்தபோது மேர்வான் மும்பைக்குப் பேருந்தில் செல்லவில்லை என்பது ஊர்ஜிதமானது. தாயார் ஷிரீன், மேர்வானும் தங்கையும் உண்மையைத் தன்னிடமிருந்து மறைத்ததாக எண்ணிக் கவலைப்பட்டார்.

மேர்வான், ஷிர்டிக்குச் சென்று திரும்பி வந்ததும், தாயார் ஷிரீன் மிகவும் கண்டித்தார்: “மெரோக்! உனக்கு நான் நூறாவது முறையாகச் சொல்கிறேன், ஒரு வேலை பார்த்து அதில் திடமாக இரு என்று! உன் எதிர்காலத்தைப் பற்றிக் கொஞ்சம் நினைத்துப்பார்! உனது வாழ்க்கைக்காக எப்படி சம்பாதிப்பது என்று சிந்தித்துப்பார்! திருமணம் செய்துகொள்! சித்தர்கள் மற்றும் புனிதமானவர்களிடம் சென்று உன் காலத்தை வீணாக்காதே! நான் சொல்வது புரிகிறதா?”

இது சாதாரண உலக தாய்மார்களின் வாய்ப்பாடு. மேர்வான் இதற்கெல்லாம் அப்பாற்பட்டவர் என்பதை ஷிரீனால் புரிந்துகொள்ள முடியவில்லை.

1916ஆம் ஆண்டு, முதல் உலகப் போர் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. தாயார் ஷிரீனின் தொந்தரவை சகித்துக்கொள்ள முடியாமல், மேர்வான், அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கத்தில், **“நான் ராணுவத்தில் சேர முடிவு செய்துள்ளேன். நான் போரில் பங்கெடுக்கப் போகிறேன்!”** என்றார்.

அதைக் கேட்ட ஷிரீன், கவலையுடன், “இல்லை… இல்லை மெரோக், நீ போரில் பங்கெடுக்கக் கூடாது. பரவாயில்லை இங்கே பூனாவில் வீட்டிலே இருந்துகொள்” என்று அவசரப்பட்டுக் கூறினார். இந்தத் தந்திரமான செயல் சில நாட்கள் வேலை செய்தது; மேர்வான் அமைதியாக இருக்க வழிவகுத்தது.

பிரோஜா (PIROJA), ருஸ்தம் (RUSTOM) இருவருக்கும் இரண்டு குழந்தைகள் - மகன் அஸ்பந்தியார் (ASPANDIAR), புனைபெயர் பெண்டு (PENDU), மகள் நாஜா (NAJA) - முழுக் குடும்பமும், உறவு என்ற அடிப்படையின்றி, மேர்வானின் மீது மிகுந்த பக்தி மிக்கவர்களாக இருந்தனர். மேர்வான் அவர்களுக்குத் தன்னுடைய தெய்வீக தன்மையை வெளிப்படையாகக் காண்பித்தார்.


நாஜா, பெண்டு இருவருக்கும் மேர்வான் மீது அப்படி ஓர் அலாதி பிரியம். பெண்டு ஒரு முறை பேரார்வத்துடன் “மேர்வான், ஸொராஸ்டராக இருந்திருந்தால் எவ்வளவு அற்புதமாக இருந்திருக்கும்! நாம் தீர்க்கதரிசி ஸொராஸ்டரைப் பார்த்ததில்லை. மேர்வான் அவரைப் போல் எவ்வளவு அன்புள்ளம் படைத்தவராக இருக்கிறார்! எவ்வளவு அழகாகப் பிரார்த்தனைகளைப் பாடுகிறார்! எவ்வளவு அருமையான இயற்கைகுணம்! அவர் ஸொராஸ்டராக இருக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறேன்” எனக் கூறினார்.

சில மாதங்களுக்குப் பிறகு, பிரோஜா, ருஸ்தம் இருவரும் நல்ல வாய்ப்பாக அமைந்த தொழிலொன்றைச் செய்யும் நோக்கத்துடன் கல்கத்தா சென்றனர். மேர்வானுக்கும் அது நல்ல மாறுதலாக இருக்கும் என எண்ணி, பெற்றோர் அவரையும் அனுப்பி வைத்தனர்.


மேர்வானுக்குப் புதிய சூழ்நிலை பிடிக்கவில்லை. பிரோஜா எவ்வளவோ முயன்றும், மேர்வான் பூனா நண்பர்களையே நினைத்துக் கொண்டிருந்தார்.

கவாஸ் கட்டாவ் (CAVAS KHATAO) என்பவர் கல்கத்தாவில் ஒரு சினிமா கம்பெனி நடத்தி வந்தார். மேர்வானை ஒரு முறை சந்தித்த அவர், மேர்வான் மீது ஏதோ இனம்புரியாத ஈர்ப்பை உணர்ந்தார். மேர்வானை எப்படியாவது தன்னோடு இருக்கச் செய்யும் நோக்கத்துடன், மேலாளர் பதவியை அவருக்குத் தருவதாக வாக்குக் கொடுத்தார். ஆனால் மேர்வானுக்கு அதில் எந்த நாட்டமும் இல்லாமல், மறுத்துவிட்டு பூனா திரும்பி வந்தார்.

ருஸ்தம் இந்தச் செய்தியை ஷிரீனுக்குத் தெரிவிக்க, மேர்வான் பூனா வந்ததும், ஷிரீனின் தாக்குதலுக்கு ஆளானார். ‘மேர்வான் அவனது எதிர்காலத்தை வீணடிப்பதாகவும், இந்த மாதிரி வாய்ப்புகளைத் தவற விடுவது சரியில்லை’ என்றும் கூறி, கட்டாயப்படுத்தி, வேறு வழியில்லாமல் கல்கத்தாவில் மேலாளர் வேலையை ஏற்றுக் கொள்ளும்படிச் செய்தார்.



நாஜா, பெண்டு, கோர்ஷெத்,
ஜாம்ஷெட், டவ்லா,
பெய்லி



சகோதரர் ஜால்

கட்டாவ் சினிமா கம்பெனியில் மேர்வான் மேலாளராகச் சேர்ந்த பின்பு, முதல் வேலையாக, கல்கத்தாவிலிருந்து வட இந்தியாவில் லாஹூருக்கு நடிகர்களோடு சென்றார்.

மேர்வான் வெகு தொலைவில் இருந்தாலும் பூனா நண்பர்களை மறக்க முடியவில்லை. குறிப்பாக பெஹராம்ஜி - அவருடன் அடிக்கடி தொடர்பில் இருந்தார். ஒரு முறை பெஹராம்ஜிக்கு எழுதிய கடிதத்தில் மேர்வான்:

**பிரியமான பெஹராம்ஜி**,

**சூழ்நிலைகள் என்னை, நான் விரும்பாததைச் செய்ய கட்டாயப் படுத்துகின்றன. எனக்குப் பிடிக்காத உணவுகளை உண்ண வேண்டிய நிலைமை. விருப்பமில்லாத உடைகளை அணிய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன். அட...கடவுளே! உலகத்தில் எத்தனை சிக்கல்கள்; எவ்வளவு அடிமைத்தனம்!**' இவ்வாறு எழுதியிருந்தார்.

மேர்வான், அவருடைய மேலாளர் பதவியில் பெரிய அந்தஸ்துள்ள தொழிலதிபர் போல சட்டை, காலுறை, டை அணிந்து, பெரிய ஹோட்டல்களில் தங்கி, உணவருந்துவது மேர்வானின் இயற்கை குணத்திற்கு முற்றிலும் மாறாக இருந்தது. கடவுளின் செயலைப் பாருங்கள்! இதுவும் நிலைக்காமல் ஆகிவிட்டது! சில வாரங்களில், மேர்வானின் அதிபர் கவாஸ் கட்டாவ் திடீரெனக் காலமானார். அத்துடன் சினிமா தொழிலும் முடிவுக்கு வந்தது. மேர்வானுக்கு இது வசதியாக அமைந்தது. இம்முறை, தாயார் ஷிரீனுக்கும் எதுவும் சொல்ல முடியாத சூழ்நிலை.

ஷிர்டி சாய் பாபா, சத்குரு உபாஸனி மஹாராஜ் இருவரையும் சந்தித்த நாளிலிருந்து, மேர்வான் ஒரு கடுமையான பழக்கத்தைக் கையாண்டார். அடுத்த ஏழாண்டுகள், அவர் உலக உணர்வைத் திரும்பப் பெறுவது வரை அதைத் தொடர்ந்தார். தினமும் மேர்வான் அவரது அறையில் தனியாக மணிக்கணக்காக, தனது நெற்றியைக் கல்லில் அறைந்து வந்தார். சில நேரங்களில் பார்சிகளின் கல்லறைக்குச் சென்று, மரத்தின் கீழ் அமர்ந்து, அதை ஒரு சடங்கு போல வழக்கமாகச் செய்துவந்தார் - நெற்றியை வேகமாக அறைவதும் கடைசியில் இரத்தக் காயங்களுடன் மயங்கி விழுவதும் தினமும் நடக்கும் நிகழ்ச்சி. மயக்கத்திலிருந்து எழுந்து, காயங்களைத் துடைத்து, வெளியே தெரியாமல் தலைப்பாகை அணிந்து மறைத்து வைத்தார். மேர்வானின் நண்பர்களுக்கு இது தெரியும், ஆனால் வீட்டில் எவருக்கும் தெரியாமல் சமாளித்து வந்தனர்.

'நான் கடவுள்' எனும் உயர்வான இறை உணர்வு நிலையிலிருந்து, 'நான் மனிதன்' எனும் சாதாரண மனித உணர்வு நிலையை அடைவது அவ்வளவு சுலபமல்ல. கற்பனைக்கு எட்டாத அளவுக்குத் துயரங்களை அனுபவிக்க வேண்டும். மேர்வான் 'தனது நெற்றியைக் கல்லில் அறையும் செயல், அந்த நேரத்தில் அவருக்கு நிவாரணம் அளிப்பது போல்' இருந்ததாகக் கூறி ஒரு முறை இவ்வாறு விளக்கினார்: "**தொடர்ந்து தலையைக் கல்லில் அறைவது**

**ஒன்றுதான், நான் கடவுள் நிலையிலிருந்து சாதாரண உலக உணர்வுநிலைக்கு வரும் வேளையில், வலி போக்கும் நிவாரணியாக இருக்கும். இவ்வாறு தலையை அறையும் நேரத்தில் கிடைக்கும் நிவாரணத்தை, களைத்துப்போன ஒருவர் சூடான தேநீர் அருந்தும் போது கிடைக்கும் சுகத்தோடு ஒப்பிடலாம்.”**

மேர்வான் லாஹூர் சென்று பூனா திரும்பி வந்தபோது, தந்தை ஷெரியார் உடல் நலமின்றி மும்பை மருத்துவ மனையில் அறுவை சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். தந்தையார் நடத்தி வந்த ‘ஷெரியார் க:ஃபே’யை (SHERIAR CAFÉ) கவனிக்கும் பொறுப்பை மேர்வான் ஏற்றுக் கொண்டார். எல்லா வேலைகளையும் தனியாக கவனித்து வந்தார்.

அந்த நாட்களில், 1917ஆம் வருடம், மேர்வான் கவிதை மற்றும் ‘கஸல்’ எழுதுவதில் அதிக கவனம் செலுத்தினார். உணவகத்தை நடத்துவதில் கவனமாக இருந்தாலும், காசு மீது கருத்தில்லாமல் இருந்தார். அவர் எழுதிய கவிதைகள் அனைத்தும் ‘ஹுமா’ (HUMA) என்ற புனைபெயரில் இருந்தது.

ஷெரியார் மருத்துவ மனையிலிருந்து திரும்பி வந்தபோது, மேர்வான் தனது கவிதைகளை, தந்தையுடன் பகிர்ந்து கொண்டார். அவரும், மேர்வானின் உண்மை நிலையைத் தெரிந்து மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

சில நாட்களுக்குப் பின்னர் 1917ஆம் வருடம், ஷெரியார் அவருடைய க:ஃபேயை மூடிவிட்டு, பூனா ‘ஸச்சாபிர் வீதி’யில் (SACHAPIR STREET), ஒரு மதுபானக்கடையைத் தொடங்கினார். மேர்வான் புதிய தொழிலிலும் தொடர்ந்து உதவி செய்தார். எந்தத் தயக்கமும் இல்லாமல் எல்லா வேலைகளிலும் ஈடுபட்டார். சில நேரங்களில் அங்கு வரும் வாடிக்கையாளர்கள் குடிபோதையில் இருக்கும்போது, மேர்வான் அவர்களுடன் அமர்ந்து, களிப்புடன், துக்காராமின் ஈரடி கவிதைகளை (துக்காராம் ஒரு சத்குரு - அவர் எழுதிய ஈரடி கவிதை மிகவும் புகழ் பெற்றதாகும்) உருக்கமாகப் பாடி வந்தார். அவர்களும் மகிழ்ச்சியாக, கைத்தட்டி ஆரவாரம் செய்து மேர்வானோடு இணைந்து பாடினர். இப்படியாக அந்த மதுபானக்கடை இறைவனின் மாயச் சத்திரமாக மாறியது. அங்கே மேர்வான் அன்பெனும் மதுபானம் மற்றும் ஆனந்த போதையை அள்ளி வழங்கிய காப்பாளனாக இருந்தார். மது போதையும், இறை போதையும் எப்போதுமே ஆச்சரியமளிக்கும். ஸூஃபி (SUFI) பாரம்பரியம் இந்நிலைகளை அருமையாக வர்ணிக்கும்.

மேர்வான், குற்றேவல் பணிகளில் தன்னை ஈடுபடுத்தியது, சாதாரண மனித உணர்வை அடையும்போது அனுபவிக்கும் இடர்பாடுகளுக்கு நிவாரணமாக அமைந்தது.

மேர்வான், இதர நேரங்களில் வாடிக்கையாளர்களை அதிகமாக மது அருந்துவதிலிருந்து தடுத்து, அதனால் வரும் கேடுகளை எடுத்துச் சொல்லி

அருந்தாமலிருக்கவும், சில வாடிக்கையாளர்களுக்கு மது வழங்காமல் மறுக்கவும் செய்தார்.

இதைக் கேள்விப்பட்ட தாயார் ஷிரீன், “மெரோக், நீ உனது தந்தையின் தொழிலில் உதவியாக இருக்கிறாயா? அல்லது மதுபானக்கடையை மூடிவிடத் திட்டமிடுகிறாயா? உனக்கு என்னவாயிற்று? மக்கள் மது அருந்துவதை விட்டுவிட்டால் தொழில் எப்படி உருப்படும்?” என்று கேட்டார்.

ஷிரீனின் கண்டிப்பை தந்தை ஷெரியார் கண்டு கொள்ளவில்லை. சொல்லப்போனால் இது ஷெரியாரின் வாழ்வில் மகத்தான காலம் என்பதில் சந்தேகமில்லை. மேர்வான் தினமும் தந்தையுடன் அமர்ந்து, ஆன்மீக ஞானம் மற்றும் கவிதைகளைப் பகிர்ந்து, இறைவாக்கின் ஆனந்த உணர்வில் இருந்தது, இவையெல்லாம் ஷெரியார்க்கு ஒரு வரப்பிரசாதம்.

வெளி உலகிற்கு மேர்வான் சாதாரணமாகத் தோன்றினாலும், மதுபானக்கடையில் எல்லாவிதமான பணிகளைச் செய்து வந்த வேளையிலும், உலக உணர்வை இன்னும் முழுமையாக அடையவில்லை. அவருள்ளே மலரும் இறைவனின் விருப்பம் தான் அந்தச் செயல்களைச் செய்யத் தூண்டியது. உதாரணமாக, ஒரு நாள் மேர்வான் சைக்கிளில் கடைக்குச் சென்று கொண்டிருந்த போது, அவரை அறியாமல் வேகமாக வெகுதூரம் சென்ற பின்பு திடீரெனத் தவறான வழியில் செல்வதை உணர்ந்து, மறுபடியும் திரும்பி பூனா வந்தடைந்தார்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்த முதலாவது உலகப்போர் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. மேர்வானின் நண்பர் பெய்லி பிரிட்டிஷ் இந்திய கடற்படையில் இணைந்து, இங்கிலாந்து, ஃபிரான்ஸ் போன்ற பல நாடுகளுக்குச் சென்று, அதற்குப் பிறகு பூனா வந்தடைந்தார். பெய்லி இந்தியாவுக்கு வெளியே இருந்த வேளையில், மேர்வானின் தொடர்பில் இருந்தது மட்டுமின்றி, அவர் எழுதிய கடிதங்கள் மற்றும் கவிதைகளை ஒரு முறையல்ல பலமுறை படித்து ஆனந்தமடையும் அளவுக்கு பிரியம். தன்னுடைய அனுபவங்களை மேர்வானுக்கு எடுத்துக் கூறி, அவரையும் ராணுவத்தில் இணையுமாறு வற்புறுத்தினார். மேர்வான் அதில் ஆர்வம் காட்டாமல் இருந்தாலும், தனது நண்பர் மீதுள்ள பாசத்தால், இறுதியில் இணக்கம் தெரிவித்து இராணுவத்தில் இணைந்தார்.

இந்தச் செய்தி, தந்தை ஷெரியாரின் செவிகளை எட்டியதும், அதிர்ச்சியில் அன்றிரவு மேர்வான், பாபாஜானை சந்தித்துவிட்டு வந்தபோது, “மகனே! நான் ஓர் அதிர்ச்சி தரும் செய்தி அறிந்தேன்! ஆமாம், நீ இராணுவத்தில் இணைந்துள்ளாயா?” என்று கேட்டார்.

மேர்வான் பதிலளித்தார்: **“ஆமாம், உண்மை! சில நாட்கள் பெய்லியுடனிருந்து உலகெங்கும் சுற்றி வரலாம் என்ற எண்ணத்தில் இணைந்தேன்.”**

"நான் சொல்வதை கவனமாகக் கேள்!" ஷெரியார் விளக்கினார், "இதுபோன்ற விஷயங்களிலிருந்து நீ விலகி இருக்கவேண்டும்! நாளை நீ இராணுவ அலுவலகம் சென்று உனது பெயரை விலக்கிக்கொள்."

அதற்கு மேர்வான், "**ஒருமுறை பெயர் பதிவு செய்தால் திரும்பப் பெற முடியாது. மேலும் நான் இராணுவத்தில் இணைய விரும்புகிறேன்**" என்று கூறி "**தந்தையே! உங்கள் அனுமதி வேண்டும்; நீங்கள் விரும்பி எனக்கு அனுமதி வழங்க வேண்டும்**" என மன்றாடினார்.

ஷெரியார் பிடிவாதமாக இருந்தார். "இது குறித்து இன்னொரு வார்த்தையை நான் கேட்க விரும்பவில்லை. முட்டாள்தனம், இது போன்ற வேலை உனக்கு ஆகாது மெரோக்! நீ போவதை நான் விரும்பவில்லை - நீ எனது கண் முன்னே இரண்டு மூன்று நாட்கள் இல்லாமலிருந்தால் கூட என்னால் தாங்கிக் கொள்ள முடியாது - மாதங்கள், வருடங்கள், நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. மெரோக்! இத்தகைய வாழ்க்கை உனக்கு உகந்ததல்ல. நாளை நானே இராணுவ அலுவலகத்திற்குச் சென்று உனது பெயரைத் திரும்பப் பெறப் போகிறேன்" என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

தந்தை ஷெரியார் கூறியதை மேர்வான் ஒரு பொருட்டாகக் கருதவில்லை. அவ்வளவு கண்டிப்பாக இருப்பார் என்றும் எதிர்பார்க்கவில்லை; அடுத்த நாள் காலையில் முதல் வேலையாக இராணுவத்தில் பணிபுரிந்த உயர் அதிகாரியை சந்தித்து, மேர்வானின் பெயரை நீக்கிவிட்டார். இதைக் கேள்விப்பட்ட மேர்வான் வருத்தமடைந்தாலும், ஏமாற்றமடைந்ததாகக் காட்டிக்கொள்ளவில்லை. ஆனால் நண்பர் பெய்லி பெரிதும் ஏமாற்றமடைந்தார்.

ஷெரியார், பெய்லியிடமிருந்து இது போன்ற செயல்களில் ஈடுபட மாட்டேன் என்ற உறுதிமொழியைப் பெற்றுக் கொண்டார். இல்லையேல் இனிமேல் மேர்வானை சந்திக்க முடியாது என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார். பெய்லிக்கு மேர்வானின் நட்பு முக்கியம் என்ற நிலையில், ஒப்புதலளித்தார். இருவரின் நட்புறவு பழையபடித் தொடர்ந்தது. பெய்லி மேர்வானைப் பற்றி எழுதியிருந்த ஒரு குறிப்பைப் பார்ப்போம்:

'மேர்வானுக்கு, இனிமையாகக் கவிதை, கட்டுரை எழுதுவது குழந்தைகள் விளையாட்டு போல மிக எளிய செயலாகத் தோன்றும். சிறந்த மனத்திறன் படைத்தவர் - பேனாவைக் கையில் எடுத்ததும் அது தானாகவே எழுதத் தொடங்கும். மேலும், சில நேரங்களில், கண்ணிமைக்கும் பொழுதில் அதைக் கதையாகச் சொல்வதுண்டு. ஒரு முறை நான், மினு எனும் எங்கள் நண்பரின் திருமணத்தில், திருமண வாழ்த்து ஒன்றை எழுதச் சொன்னேன். மேர்வானுக்கு இதிலெல்லாம் நாட்டமில்லாமல் இருந்தாலும், நண்பர் மினுவை மகிழ வைக்கும் எண்ணத்தில் ஓர் அருமையான பாடல் எழுதி, உடனே அவர் அதைப் பாடவும் செய்தார். அந்தப் பாடல் சிறப்பாக அமைந்த விதம் என்னைப் பெரிதும் கவர்ந்தது.'

விடுமுறை முடிந்து பெய்லி அவரது இராணுவ பணியைத் தொடர வேண்டிய நேரம் வந்துவிட்டது. ஆஃப்ரிக்கா (AFRICA) செல்லுமாறு உத்தரவு வந்தது. பெய்லி, ஆஃப்ரிக்கா செல்வதை மேர்வான் விரும்பவில்லை. உத்தரவை மாற்றி வேறு இடத்திற்காகப் பரிந்துரைத்தார். பின்னர், ஏதன் (ADEN) செல்லுமாறு அறிவிப்பு வந்ததையும் மேர்வான் விரும்பவில்லை - இம்முறை பெய்லி செல்வதில் மேர்வானுக்கு உடன்பாடில்லை. ஏதோ இனம்புரியாத தயக்கம்.

நண்பர் பெய்லி, ஏதன் செல்வதற்கு முன்பு, ஹஸ்ரத் பாபாஜானை சந்தித்துவிட்டுச் செல்லுமாறு மேர்வான் வற்புறுத்தினார். அதைத் தொடர்ந்து பெய்லி இந்த சந்திப்பைப் பற்றி எழுதியதைப் பார்ப்போம்:

“நான் பாபாஜானை ஒரு ‘சூனியக்காரி’ என்றே நினைத்தேன். நான் அவரை சற்றும் நம்பாமல் அவமதித்து வந்தேன். மேர்வான் தன்னை அவருடைய சீடர் என்று சொல்வதை நான் விரும்பவில்லை.

“பாபாஜானைப் பார்க்க வேண்டுமென்ற ஆர்வமும் எனக்கில்லை. அதே வேளையில் மேர்வானின் வற்புறுத்தல் எரிச்சலைத் தந்தது. இருந்தாலும் மேர்வான் மனம் வருந்தக்கூடாது என்ற ஒரே காரணத்திற்காக அவரை சந்திக்கச் சென்றேன்.

“அப்போது பாபாஜான் ‘சார் பாவ்டி’யில் (CHAR BAWDI) ஒரு வேப்பமரத்தின் கீழே வாழ்ந்து வந்தார். பாபாஜானின் பாதங்களில் முதலில் தலை வணங்குமாறு மேர்வான் சொன்னபோது நான் கர்வத்தில் முடியாது என மறுத்து, ‘இறைவன் எங்கிருந்தாலும் நான் அவருக்கு மட்டுமே தலைவணங்குவேன்; அவரைத் தவிர என் உடல், மனம் வேறு எவருக்கும் அடிபணியாது’ என்று கூறினேன்.

“என்னுடைய திமிரான பேச்சால் மேர்வான் பெரிதும் மனம் நொந்ததை உணர்ந்தேன். ஆனால் அவர் எதையும் காட்டிக்கொள்ளாமல் எனது விருப்பப்படி நடந்து கொள்ள அனுமதியளித்தார்.

“பாபாஜான் என்னைப் பார்த்ததும், நான் வலது கையைத் தூக்கி ‘சலாம் பாபாஜான்’ என்றேன்.

‘வா! என் மகனே! வா!’ என்று மெதுவாகத் தன் இனிமையான குரலில், அருகில் அமருமாறு அழைத்து, ‘**நீ யார்? எங்கிருந்து வருகிறாய்?**’ என்றார்.

“மேர்வான் இந்தக் கேள்வியை எதிர்பார்த்து என்னிடம் ‘நான் உங்கள் மகனிடமிருந்து வருகிறேன்’ எனக் கூறும்படிச் சொல்லியிருந்தார்.

“அதற்கு பாபாஜான், ‘எனது மகன் கடவுளைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்? நல்லது! நீ கடவுளிடமிருந்து வந்தாய் என்றால், நான் அவரிடம் எனது மகன் வந்து என்னைப் பார்த்துச் சென்றான் என்று சொல்லுகிறேன்!... வேறு ஏதேனும் உள்ளதா?’ என்று கேட்டார்.

“பாபாஜான் கூறியது எதுவும் புரியாமல், நான் கப்பற்படையில் பணிபுரிவதையும், இப்போது ஏதன் செல்ல வேண்டிய செய்தியை எடுத்துச் சொல்லி அனுமதி கோரினேன்.

“நான் கூறியதை மிகுந்த ஆர்வத்துடன் கேட்டுவிட்டு, கண்களை மூடிய வண்ணம், மெதுவாக, ‘ஏதன்! ஏதன்!’ எனப் பலமுறை மொழிந்து, இறுதியில்

கவலை தோய்ந்த கடுமையான குரலில்: 'ஏதன் என்னுடைய நாடு!... அது என்னிடமிருந்து வந்தது, நான் உருவாக்கினேன்!... ஆனால் இன்று அது என்னைக் கேலிச் செய்ய விரும்புகிறது!' என்று சொல்லி முடித்து, மீண்டும் அமைதியான குரலில், 'நல்லது மகனே! நீ போகலாம்! கடவுள் உன்னுடன் இருக்கட்டும்! ஆமாம், மறுபடியும் என்னை எப்போது சந்திப்பாய்?' என வினவினார்.

"அது உங்கள் விருப்பம்; நீங்கள் எப்போது அழைக்கிறீர்களோ அப்போது" என்றேன்.

"எனது பதிலைக் கேட்டு பாபாஜான் சிந்தனையில் ஆழ்ந்தார். பின்னர் என்னை நோக்கி, 'நீ சற்று பொறுமையாக இருக்கவேண்டும்..... ஐந்து வருடங்கள் காத்திருக்க வேண்டும்... 'அவன்' சொல்கிறான் இரண்டு வருடங்கள் என்று! இல்லை! இல்லை! இரண்டு வருடங்கள் நான் அனுமதிக்க மாட்டேன்! ஆகையால் சரியாக ஒன்றரை வருடங்களில் வந்துவிடு.' எனக் கூறிக்கொண்டே தொடர்ந்தார்... எனக்கு அவர் சொன்னது எதுவுமே புரியவில்லை.... 'நான் ஏழு ஆண்டுகள் அங்கே இருந்துவிட்டு இங்கு வந்தேன்.... பலர் என்னோடு சேர்ந்திருந்தனர்..... நான் உன்னோடு இருப்பேன்.... எனது குழந்தையும் என்னுடனே இருக்கும்... நான் உலகத்தோடு இருக்கிறேன்.... கடவுள் என்னுடன் இருக்கிறார்!'

அவ்வாறு கூறிக்கொண்டே தனது இடது கரத்தை நீட்டினார். நான் பெருமதிப்போடு, ஏதோ இரகசிய உணர்வுகளுக்கு அடிபணிந்து, அவர் கையில் முத்தமிட்டேன். உடனே அங்கிருந்து புறப்பட்டு, மேர்வானை சந்தித்து நடந்ததை எடுத்துக் கூறினேன்.

"அதைக்கேட்டு மேர்வான், '**இவர்களைப் போன்ற பெரிய ஞானிகளின் குழப்பமான வார்த்தைகள் நமக்குப் புரியாமல் இருப்பது நல்லது. பாபாஜான் உன்னைப் பற்றிக் குறிப்பிட்டது, ஏதோ நடக்கக்கூடாத சம்பவங்கள் நடக்கவிருப்பதாக நான் நம்புகிறேன்**." மனவருத்தத்தோடு மேர்வான் தொடர்ந்து, "**பெய்லி, உன்னுடைய எதிர்காலம் சிறப்பாக அமையாது என்று எனக்குத் தோன்றுகிறது; பயங்கரமான இடர்பாடுகளை எதிர்கொள்ள வேண்டியது வரும்! கடவுள் உன்னைக் காப்பாராக!**" என்று கூறி முடித்தார்.

பாபாஜான் மற்றும் மேர்வானின் எச்சரிக்கைகளுக்கு நான் அவ்வளவு முக்கியத்துவம் வழங்கவில்லை. அவற்றைப் பற்றி நினைக்கவுமில்லை.

பெய்லி, எதிர்காலத்தில் என்ன காத்திருக்கிறது என்று அறியாமலேயே, மும்பையிலிருந்து கப்பல் மூலம் பயணம் செய்து ஏதன் நாட்டுக்குச் சென்றார்.

சத்குரு உபாஸனி மஹாராஜ், ஷிர்டியிலிருந்து அவரது இருப்பிடத்தை சற்று தொலைவில் அமைந்த 'ஸாக்கோரி' (SAKORI) கிராமத்திற்கு மாற்றினார். மேர்வான் இப்போது அடிக்கடி ஸாக்கோரிக்குச் சென்று வருவது மட்டுமின்றி கடிதங்கள் வழியாகவும் மஹாராஜுடன் தொடர்பு கொள்ளத் தொடங்கினார்.

ஆனால் கடிதத்தில் எழுதிய எதையும் அவர்கள் இருவரைத் தவிர வேறு எவராலும் புரிந்துகொள்ள முடியாது. அவ்வப்போது, கடிதங்களை, பெஹராம்ஜி மூலம் அல்லது வேறு நெருங்கிய நண்பர்கள் - சதாஷிவ் பாட்டீல் (SADASHIV PATIL), ஸையத் ஸாஹேப் (SAYYED SAHEB) வழியாக அனுப்பி வந்தார். பெஹராம்ஜி கடிதத்தில் எழுதியிருந்ததைப் படிக்க முயன்றபோது அது மர்மமாக, மறைபொருள் நிறைந்ததாக இருந்தது. எழுதும் மொழி எளிதாக இருந்தாலும் வாக்கியங்கள் பொருளற்றது போலத் தோன்றியது. தொடர்ந்து மேர்வான் பொட்டலங்களும் அனுப்பி வந்தார். அந்தப் பொட்டலங்களை சித்தி பிரோஜா தயார் செய்து கொடுப்பது வழக்கம். ஆனால் பொட்டலங்கள் கடிதங்களை விட இன்னும் மர்மம் நிறைந்ததாக இருந்தன. உதாரணமாக, ஒரு முறை பொட்டலத்தில் ஊசியும், நூலும் மட்டுமே இருந்தன.

கல்கத்தாவில் சிறிது காலமாக வாழ்ந்துவந்த சித்தி பிரோஜா மற்றும் கணவர் ருஸ்தம் (மாஸாஜி - MASAJI) பூனாவுக்குத் திரும்பி வந்து, மேர்வான் வீட்டிற்கு அருகாமையில் குடிபெயர்ந்தனர். பிரோஜா கடுமையான ஆஸ்த்துமா நோயால் அவதிப்பட்டு படுக்கையில் இருந்தார். மேர்வான் தவறாமல் தினமும் பார்க்க வருவதும், இருவரும் எப்பொழுதும் கடவுள், சத்குருக்கள், மற்றும் சித்தர்களைப் பற்றி பேசிக் கொள்வதும் வழக்கம். சத்குரு உபாஸனி மஹாராஜின் பெருமைகளை எடுத்துச் சொன்னார் மேர்வான். அப்போது பிரோஜா, “மெரோக்! ஸாக்கோரிக்கு என்னை எப்போது அழைத்துச் செல்கிறாய்? நான் ஒரு முறையேனும் மஹாராஜைப் பார்த்தாக வேண்டும்!” என்றார்.

**“கவலை வேண்டாம்; நான் நிச்சயமாக அழைத்துச் செல்வேன்”** என உறுதியளித்தார் மேர்வான்.

பிரோஜாவின் உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாக மாறியது. மேர்வான் அருகில் அமர்ந்து, அவர் கையைப் பற்றிக்கொண்டு, ஸாக்கோரியிலிருந்து எடுத்து வந்த திருநீற்றை நீரில் கலந்து கொடுத்தார், **“இது மஹாராஜின் ‘புனித விளக்கிலிருந்து’ எடுத்து வந்தது; சாப்பிடுங்கள்; நோய் முற்றிலுமாக மறைந்து விடும்”** என்று கூறினார். பிரோஜா அதை அருந்தியதும், மேர்வான், **“உங்களுக்கு ஒன்று தெரியுமா? நாளை நான் உங்களை உபாஸனி மஹாராஜிடம் அழைத்துச் செல்லப் போகிறேன்”** என்றதும், பிரோஜா நன்றி கலந்த அன்புடன் மேர்வானின் கரங்களைப் பற்றிக் கொண்டு புன்முறுவல் செய்தார்.

அடுத்த நாள் பிரோஜா காலமானார். மேர்வான், மாஸாஜியை ஆறுதல் படுத்தினார். ‘**குழந்தைகள் அஸ்பந்தியார்** (பெண்டு), **நாஜா இருவரையும் கவனிக்கும் பொறுப்பு இனிமேல் என்னுடையது. அவர்களைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். அவர்கள் எனக்குச் சொந்தம்**’ இருவரும் தாயை இழந்த வருத்தத்தில் இருந்தபோது மேர்வான், “**நீங்கள் ஏன் அழுது கண்ணீர் விடுகிறீர்கள்? நான்தான் உங்களுக்குத் துணையாக இருக்கிறேனே! நீங்கள், உங்கள் தாயார் இன்னும் சிரமப்படுவதை விரும்புகிறீர்களா? அவர்**

**மறைந்தது, பலவகையில் நல்லது! இப்போது அமைதியாக, மேலுலகில் இருக்கிறார். இது நல்லதில்லையா? நிஜமாகவே மகிழ்ச்சியாக இருக்கிறார். இது எனது வாக்குறுதி"** என்று கூறி, ஆறுதல் படுத்தி இருவரையும் அன்புடன் அணைத்துக் கொண்டார்.

மாஸாஜி, தனது மனைவியின் மறைவுக்குப் பிறகு பூனாவிலிருந்து அஹமதுநகர் சென்று வாழ்ந்தார். அவரது இரண்டு குழந்தைகளும் பெரிய தாயார் டவ்லாவுடன் வாழ்ந்தனர்.

மேர்வான், ஹஸ்ரத் பாபாஜானை அடிக்கடி சந்தித்து வந்ததால், பாபாஜானின் பக்தர்கள் மற்றும் சீடர்கள் மேர்வானைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள விரும்பினர்; அதற்கு பாபாஜான், "அவன் எனது மகன். எனது பிரியமான மகன். நான் பூனாவில் இருப்பதே அவனால்தான்.... ஒரு நாள், அவன் இந்த உலகையே ஆட்டிப்படைப்பான். அவனுடைய பெருமையைப் பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது" என்று விளக்கினார். படிப்படியாக, பாபாஜானின் சீடர்கள் மேர்வானை மிகுந்த மரியாதை மற்றும் பக்தியுடன் நடத்தினர். மேர்வானும் அவருடைய ஆன்மீகப் பெருமைகளைப் பலருக்கு வெளிப்படுத்தினார்.

ஹஸ்ரத் பாபாஜானின் நெருங்கிய சீடர் பாபு உபாலே (BABU UBALE) என்பவர் மேர்வானைப் பற்றிப் பெருமையாகப் பேசப்படும் பல விஷயங்களைக் கேட்டு, பக்தியுடன் அவரை அணுகினார். மேர்வானும் அன்புடன் பேசி, அவரது உள்ளார்ந்த மாட்சிமையை வெளிப்படுத்தினார். உபாலே அவரை மெய்சிலிர்க்க வைத்த அனுபவத்தை பாபாஜானிடம் சென்று விளக்கினார். அதற்கு பாபாஜான், "நான்தான் சொன்னேனே, அவன் எனது மகன் என்று! சொன்னேனா இல்லையா? அவன் யார் என்று உனக்குத் தெரியாது!" என்றார்.

1917, அக்டோபர் மாதத்தில், மேர்வான், சத்குரு உபாஸனி மஹாராஜுடன் சில நாட்கள் இருந்த வேளையில் ஒரு நாள், மஹாராஜ், மேர்வானை ஷிர்டிக்கு அனுப்பி குஸ்தாஜி ஹன்ஸோட்டியா (GUSTADJI HANSOTIA) என்பவரை சந்திக்கச் செய்தார் (குஸ்தாஜி முதலில் ஷிர்டி சாய் பாபாவின் சீடராக இருந்தவர். சாய் பாபா அவரை மஹாராஜிடம் அனுப்பி வைத்தார். இறுதியில் குஸ்தாஜி, மெஹர் பாபாவின் உள்வட்ட சீடர்களில் ஒருவரானார்).

மேர்வானின் தந்தை ஷெரியார், மிகவும் இரக்கமும், தாராள மனப்பான்மையும் மிக்கவர். வயதான பிறகும், ஒரு துறவியின் பொறுமையும் பெருந்தன்மையும் படைத்தவராக விளங்கினார். அவரது தொழிலில் செல்வந்தராக இல்லாமல் இருந்தாலும், வெற்றிகரமாக இருந்தார். ஏழைகளுக்கு என்று பணத்தை ஒதுக்கி வைப்பது மட்டுமின்றி துணிமணிகள் மற்றும் போர்வைகளையும் கொடுத்து வந்தார். துறவியாக அலைந்து திரிந்ததால், தங்க இடமின்றி, ஆங்காங்கே வீதிகளில் இருப்பிடம் அமைத்துத் தவிக்கும் நிலையை நன்கு அறிந்தவர். குளிரால் அல்லல்படும் ஏழைகளுக்கு, அவரது போர்வைகளைத் தந்தார். இவ்வாறு அவ்வப்போது நடக்கும் நிகழ்ச்சிகளைப்

பார்த்து, தாயார் ஷிரீன், "இதுவரை மெரோகின் தந்தை அள்ளி வழங்கிய போர்வைகளை எல்லாம் சேர்த்து வைத்திருந்தால், மதுபானக்கடைக்கு பதிலாக ஒரு பெரிய போர்வை வியாபாரமே செய்திருக்கலாம்" என்று வேடிக்கையாகச் சொன்னதைக் கேட்டு வீட்டில் அனைவரும் சிரித்து மகிழ்ந்தனர்.

1918, பிப்ரவரி 1ஆம் நாள், மேர்வானின் பிரியமான நண்பர் கோடுவின் மனைவி நாஜாவுக்கு தின்ஷா (DINSHA) என்ற பெயரில் ஒரு பையன் பிறந்தான். மேர்வான் மருத்துவமனைக்குச் சென்று குழந்தையைப் பார்த்துவிட்டு, "**எனது முதல் சீடர் பிறந்து விட்டார்**" என்று சாதாரணமாகக் குறிப்பிட்டார். நாஜாவுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால் கோடு, 'மேர்வான் தன்னை முதல் முறையாக ஆன்மீக குரு' என மறைமுகமாகக் குறிப்பிட்டதை உணர்ந்தார்.

வருடங்கள் கடந்தன, தாயார் ஷிரீன் மேர்வானின் மனநோய் மறைந்துவிடும், வாழ்வில் நிலையான ஒரு பொறுப்பைத் தக்கவைப்பார் என்ற நம்பிக்கையை இழக்கவில்லை. மேர்வானின் நண்பர் பெஹராம்ஜி (BEHRAMJI) ஒர் அதிபுத்திசாலியான வியாபாரி என்பதை ஷிரின் அறிவார். பெஹராம்ஜி, மேர்வானோடு இணைந்து புதிய மதுபானக்கடை ஒன்றைத் தொடங்கினால், சிறப்பாக இருக்கும் என்ற எண்ணத்தில் பெஹராம்ஜியிடம் பேசி, ஒரு முதலீட்டுத் தொகையை அவரிடம் கொடுத்தார். பெஹராம்ஜியும் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார். ஆகஸ்ட் 1 அன்று அதற்கு வேண்டிய உரிமத்தைப் பெற்று, இருவரும் பங்குதாரர்கள் என்ற முறையில் ஒரு புதிய மதுபானக்கடையை, 723, கஸ்பா பேட்டில் (KASBA PETH) ஆரம்பித்தனர். (இது மேர்வானுக்கு, தனது ஆன்மீகப் பணியைத் தொடங்க வசதியான அமைப்பாக இருந்தது)

மேர்வான் இந்தத் தொழிலில் மேலும் தீவிரமாக ஈடுபட ஆரம்பித்தார். காலையில் எழுந்ததும் கடையை - பணம் பட்டுவாடா அறையிலிருந்து கழிப்பிடம் வரை - சுத்தம் செய்து, அனைத்தையும், எந்த விதமான குற்றேவல் பணியாக இருந்தாலும், செவ்வனே செய்வது வழக்கம். மேர்வானின் வாடிக்கையாளர்கள் சாதாரணமாக, பொறுப்பில்லாமல் கைவிடப்பட்டவர்கள் மற்றும் பிறரால் மதிக்கப்படாதவர்கள் ஆவர். சில நேரங்களில், குடிபோதையில் முரட்டுத்தனமாகக் கலவரம் செய்து சபிப்பது போலப் பேசினர். அவர்கள் எப்படிப்பட்டவராக இருந்தாலும் மேர்வான் இரக்கமாகப் பேசி, இணக்கமாகக் கையாளும் திறன் படைத்தவர். தனது அன்பால் அவர்களின் வழியை மாற்றி இறுதியில் மது அருந்துவதை நிறுத்தவும் செய்தார்.

ஆனால் மாறாக, பெஹராம்ஜி மது அருந்துபவர்களின் அமளியை சகித்துக் கொள்வதில்லை. அடித்து, திட்டாத நாளேயில்லை. மேர்வான், பங்குதாரர் என்கிற முறையில் எதுவும் சொல்வதில்லை.

என்றாலும், பெஹராம்ஜி கடையில் இல்லாத போது, மேர்வான் மிகவும் மோசமான நபர்களை, தனது உண்மையான அன்பால் கவர்ந்து, அவர்களோடு பலமணி நேரங்கள் அமர்ந்து, செவிமடுக்கும் மனநிலையில் இருக்கும்

வேளையில், '**குறைவாக அருந்த அல்லது மது அருந்தவே கூடாது**' என்ற உபதேசத்தை வழங்கினார். அளவுக்கு அதிகமாக அருந்தும் வேளையில் இல்லை என்று மறுக்கவும் செய்தார்.

இவ்வாறு, மதுபானக்கடை, மது அருந்துபவர்களுக்கு மட்டுமின்றி வழிப்போக்கர்களுக்கும் ஒரு புகலிடமாக அமைந்தது. பிச்சைக்காரர்களும் சாதுக்களும் வரிசையாக வந்தனர். மேர்வான் காசுகளை, கையால் அள்ளி அனைவருக்கும் தானம் செய்வது கண்கொள்ளா காட்சியாக இருந்தது. இதைக் கேள்விப்பட்ட ஏழை மக்கள் திரள்திரளாக அங்கு வந்தனர். பெஹராம்ஜி இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். மேர்வான் அதற்குச் செவிமடுக்காமல் தான் விரும்பியதையே செய்து வந்தார், "**பணம் என்ன பணம்? அதில் நல்லது என்ன இருக்கிறது? நீங்கள் அதை அளவுக்கு அதிகமாக மதிக்கிறீர்கள்!**" என்று மேர்வான் சொன்னபோது பெஹராம்ஜி ஒரு வார்த்தையும் பதில் சொல்லாமல் அமைதியாக இருந்தார்.

படிப்படியாக, மேர்வான் சில வாடிக்கையாளர்களை அளவிலா அன்பாலும், அள்ளி வழங்கும் குணத்தாலும் தயார் நிலைக்குக் கொண்டுவந்து, தன்னை நோக்கி ஈர்த்தார். மதுபானக்கடையில் பணிபுரிவதை மேர்வான் ஓர் இணைப்புத் தளமாக, ஊடகமாகப் பயன்படுத்தினார். மேர்வானின் தொடர்பில் வந்த சில ஆண்களும், பெண்களும் இறுதியில் மெஹர் பாபாவின் நெருங்கிய சீடர்களாகும் பாக்கியத்தை அடையப் பெற்றனர். மதுபானக்கடை, வெளியளவில் ஒரு சாதாரண மதுக்கடை போலத் தோன்றினாலும், உள்ளளவில் இறையன்பைப் பரிமாறிக் கொள்ளும் சத்திரமாகத் திகழ்ந்தது.

இதுபோன்ற குற்றேவல் பணிகளில் மேர்வான் ஈடுபடுவதற்கு இன்னுமொரு காரணமும் இருந்தது. '**நிர்விகல்ப சமாதி**' (NIRVIKALPA SAMADHI) எனும் உயர்வான இறை உணர்வு நிலையிலிருந்து 'ஆழ் மன' (MENTAL) மற்றும் 'சூட்சும' (SUBTLE) தளங்கள் வழியாக சாதாரண உலக உணர்வை அடையும் தருணத்தில், அசாதாரண வேலைகளில் ஈடுபடுவது அவசியம். இது விரைவில் சாதாரண மனித உணர்வை அடைய வழிவகுக்கும்.

மேர்வானின் தந்தை ஷெரியாரை மதிப்பாக ஷெரியார்ஜி என்றும் மேர்வானை மேர்வான்ஜி எனவும் அனைவரும் அழைத்தனர். அவ்வேளையில், 1918ஆம் ஆண்டு, சதாஷிவ் பாட்டீல் (SADASHIV PATIL), ஸையத் ஸாஹேப் (SAYYED SAHEB) என்று அழைக்கப்பட்ட இரண்டு நண்பர்கள் மேர்வான்ஜியின் தொடர்பில் வந்து, மெஹர் பாபாவின் அவையில் முக்கிய அங்கம் வகித்தனர். ஸையத் ஸாஹேப், ஹஸ்ரத் பாபாஜானின் சீடர்களில் ஒருவர், அவரை பாபாஜான், மேர்வான்ஜிக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். தொடர்ந்து மேர்வான்ஜியை அடிக்கடி சந்தித்து மிகவும் நெருக்கமாகி விட்டார்.

சதாஷிவ், மேர்வான்ஜி நடத்தி வந்த மதுபானக்கடையின் உரிமையாளர்; அங்கே மேல் மாடியில் குடியிருந்தார். ஒரு நாள், மேர்வான்ஜி, சதாஷிவ் வீட்டிற்குச் செல்ல நேர்ந்தது. உண்ண ஏதாவது உணவு தேவை என்று

கேட்டபோது, உணவு தயாராகாத நிலையில் சதாஷிவ் தயங்கினார். மேர்வான்ஜி உடனே, எஞ்சியுள்ள பழைய உணவாக இருந்தாலும் பரவாயில்லை எனக் கேட்டு வாங்கி, ருசித்து உண்ட விதம் அவர் இதயத்தை நெகிழச் செய்தது. இறை நாடகத்தை என்னென்பது!

இருவரும் பாபாஜானின் நெருங்கிய பக்தர்களாக இருந்தாலும், ஆரம்பத்தில் சதாஷிவ் மேர்வான்ஜியை ஒரு சாதாரண மதுபானக்கடைக்குச் சொந்தக்காரர் என்றே நினைத்தார். ஆனால் அதற்குப் பின்னர், அவர் மிகவும் வித்தியாசமானவர் என்பதை உணர்ந்தார். சதாஷிவ் பாட்டீல்தான், மேர்வான்ஜிக்கு முதன்முதலில் 'மேர்வான் ஸேட்' (MERWAN SETH) என்று பெயரிட்டு அழைத்தார். (ஸேட் என்றால் மிகுந்த செல்வாக்கும், மரியாதைக்கும் உரியவர்). 1918ஆம் ஆண்டிலிருந்து மேர்வான்ஜியை மேர்வான் ஸேட் என்று அனைவரும் அழைத்தனர்.

மேர்வான் ஸேட், சதாஷிவ் பாட்டீலை ஸையத் ஸாஹேபுக்கு அறிமுகப்படுத்திவைத்த நாளிலிருந்து இருவரும் மேர்வான் ஸேட்டுடன் மிகவும் நெருக்கமாகி விட்டனர். உபாஸனி மஹாராஜ் இறைநிலையை அடைந்த சத்குரு என்பதையும் அறிந்து கொண்டனர்.

மேர்வான் ஸேட், மதியம் மற்றும் இரவு நேரங்களில், தன்னுடைய கடுமையான பழக்கத்தை வீட்டில் தனது அறையில் அல்லது ஏதாவது மறைவான இடங்களில் தொடர்ந்தார். ஒரு நாள் அவரது தலையைக் கல்லில் அறையும்போது, தக்..தக் என்ற சத்தத்தைக் கேட்டு, தாயார் ஷிரீன் மேலறைக்கு விரைந்த போது, அங்கு தான் கண்ட காட்சியை நம்பமுடியாமல், கதறி கூச்சலிட்டார்.

மேர்வானின் முகமெல்லாம் இரத்தம்; அழுதுகொண்டே தாயார், "மெரோக்! உனக்குப் பைத்தியமா? நீ என்ன நிஜமாகவே முழுப்பைத்தியம் ஆகிவிட்டாயா?" என்று கேட்டார்.

மேர்வான், இரத்தத்தை ஒரு துண்டு துணியால் துடைத்துவிட்டு, "**மெமோ! நான் பைத்தியமல்ல; வேறு ஏதாகவோ மாறிவிட்டேன்**" என்றார்.

ஷிரீன் வெறுப்படைந்து, ஷெரியாரை நோக்கி, "பாருங்கள்.. உங்கள் பையனைப் பாருங்கள்..! ஒரு பைத்தியக்கார மனிதனைத் தவிர வேறு யார் இப்படித் தனது தலையைக் கல்லில் அறைந்து காயப்படுத்துவார்?" என்று கேட்டார்.

ஷெரியார் உடனே, மேர்வானின் உண்மை நிலையைத் தெரிந்து, "இல்லை ஷிரீன்! அப்படி இல்லை. மெரோகின் நிலை நீ நினைப்பது போலல்ல; நேர் மாறானது! மெரோக் பைத்தியம் அல்ல! என்னை நம்பு" என்று பதிலளித்தார்.

அதைக் கேட்டு ஷிரீன், "நீங்களும் பைத்தியம்; கடவுளைச் சார்ந்திருக்கும் ஆண்களாகிய நீங்கள் அனைவரும் பைத்தியம்!" என்று கத்தினார். மேர்வானின் இந்த விசித்திரமான நடத்தையைக் கண்டு பெரிதும்

வருந்தி கண்கலங்கினார். மெரோக் நிரந்தரமாகப் பைத்தியமாகிவிட்டார், இனி எதுவும் செய்ய முடியாது என்ற எண்ணத்தில், என்ன செய்வது என்று புரியாமல் அழுது புலம்பினார். 'நீங்கள் எனது மகனின் அருமையான வாழ்க்கையைத் தொலைத்துவிட்டீர்கள்' என்று அத்தனை சத்குருக்களையும் திட்டி சாபமிட்டார்.

சாதாரண உலக தாய்மார்கள் இதுபோன்ற சூழ்நிலைகளில் இப்படி நடந்துகொள்வது இயற்கை.

மேர்வான் ஸேட் சாதாரண உலக உணர்வை அடைந்து வரும் அவ்வேளையில், நெருங்கிய நண்பர்களோடு தினமும் மாலை நேரத்தில் வெளியே நடக்கச் செல்வதும், பக்கத்து இடங்களுக்குச் சுற்றுலா போவதும், கிரிக்கெட் விளையாடுவதையும் வழக்கமாகக் கொண்டார். நண்பர்கள் எவருமே அவரை இதுவரை இறைநிலையை அடைந்தவராக அடையாளம் கண்டுகொள்ளவில்லை. என்றாலும் அசாதாரணமான, தனிச் சிறப்புமிக்க ஒருவர், ஆன்மீகத்தில் மிகவும் நாட்டமுள்ளவர் என்று கருதினர். ஹஸ்ரத் பாபாஜான் மற்றும் சத்குரு உபாஸனி மஹாராஜின் வலுவான சீடர் என்றுதான் நினைத்தார்களே தவிர, துறவி, சித்தர் அல்லது புனித மனிதர் என்று கருதவில்லை. எதுவாக இருந்தாலும், சிறியவர், பெரியவர் அனைவரும் அவரை மதிப்பு, மரியாதையுடன் மேர்வான் ஸேட் என்றே அழைத்தனர்.

மேர்வான் ஸேட் மீதுள்ள நம்பிக்கையில் நண்பர்கள் தனிப்பட்ட பிரச்சினைகளை எடுத்துச் சொல்லி ஆலோசனைக் கேட்பதும், மேர்வான் ஸேட் அறிவுரைகள், ஆன்மீகக் கருத்துக்களை அடிக்கடி விளக்கிச் சொல்வதும் வழக்கம். ஒரு முறை, '**கடவுளும் மதங்களும்**' என்ற பொருளில் அவர் அளித்த விளக்கம் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

**"பொதுவாக மதம் ஒன்றே ஒன்று. காலங்கள் எவ்வளவுதான் கடந்தாலும், அம்மதம் உருவாகக் காரணமாயிருந்த மூலப்பொருளும் தொடர்ச்சியாக வருகின்ற ஒன்று. ஸொராஸ்டிரியன், இந்து, புத்த மதம், கிறிஸ்தவ மதம், இஸ்லாம் போன்ற பலவித கிளைகள் அம்மூலப்பொருளிலிருந்து உருவாயின. இதுபோல் இன்னும் பலமதங்கள் உள்ளன.....**

**"உதாரணமாக, ஒரே குழாயிலிருந்து வரும் தண்ணீரை, பல கொள்கலன்களில் வேறு வேறு தேவைகளுக்காக - துணி துவைக்க, சமையல் செய்ய, குடிநீராகத் தனித்தனியாக நிரப்புகிறோம். ஆனால் மூலப்பொருள், குழாய். அதுபோல், இந்து, இஸ்லாம், ஸொராஸ்டிரியன், கிறிஸ்தவ மதம் அல்லது புத்த மதம் உருவாகக் காரணமாயிருந்த மூலப்பொருள் ஒன்றே - இறைவன்."**

சத்குருக்கள், அவதார புருஷர் இவர்களின் உள்வட்ட சீடர்கள், தானாக வந்து இணையும் விதம் மிகவும் ஆச்சரியமாக இருக்கும். சீடர்கள் அவதார

புருஷரின் உடல் உறுப்புகள் போல், அவருடைய இச்சைகளுக்கு உட்பட்டு இயங்கும் தன்மை படைத்தவர்கள்.

இஸ்லாமிய வகுப்பைச் சார்ந்த முன்ஷி ரஹிம் (MUNSHI RAHIM) என்பவர், அரசு பொதுப்பணி துறையில் சரக்கு அறை காவலராகப் பணிபுரிந்து வந்தார். அண்மையில் மேர்வான் ஸேட்டின் தொடர்பில் வந்த ஸையத் ஸாஹேப், முன்ஷி ரஹிமின் கீழ் பணிபுரிந்து வந்தார்.

ஒரு நாள் மேர்வான் ஸேட் பணி நிமித்தம், முன்ஷி ரஹிம் பணிபுரியும் அலுவலகத்திற்குச் சென்றிருந்த வேளையில், அவரை யார் என்று தெரியாமலே, தோற்றத்தைப் பார்த்த அதிர்ச்சியில், 'யார் இந்த இளம் பையன்?' என்று ஆச்சரியத்தில் ஆழ்ந்தார். மேர்வான் ஸேட் தன்னை அறிமுகப்படுத்தி, வேலையை முடித்துவிட்டுப் புறப்பட்டார். அந்நேரத்திலிருந்து முன்ஷி ரஹிமுக்கு மறுபடியும் மேர்வான் ஸேட்டை சந்திக்க வேண்டும் என்ற பேராவல்.

அதைத் தொடர்ந்து, பின்னர் ஒரு நாள் ஸையத் ஸாஹேப், மேர்வான் ஸேட்டை முன்ஷி ரஹிம் இல்லத்திற்கு வருமாறு அழைத்தார். முன்ஷி ரஹிம், உள்ளளவில், மேர்வான் ஸேட்டை ஆன்மீக ரீதியில் மேல்நிலையை எய்தியவர் என்பதைத் தெளிவாக உணர்ந்து, பூனா ஸஸூன் மருத்துவமனைக்கு (SASOON HOSPITAL) அருகிலிருந்த தனது இல்லத்தை ஆன்மீக நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

அப்போது, முன்ஷி ரஹிமுக்கு வயது 42, மிகுந்த நம்பிக்கையும், பரந்த மனப்பான்மையும் உள்ள எளிய மனம்படைத்த, அடக்கமான மனிதர். முஹமது நபியை பெரிதும் நம்பினார். ஆனால் வைதீக சிந்தனை இல்லாதவர். சமூகத்தில் அனைவருடனும் அன்புடன் பழகுபவர். சீட்டு விளையாடுவதில் அதீத ஆர்வம் உள்ளவர். இருப்பினும் அது ஆன்மீகத்திற்குப் புறம்பானது என நினைத்து மேர்வான் ஸேட்டிடம் சொல்லத் தயங்கினார்.

ஒரு நாள் மேர்வான் ஸேட், "**முன்ஷி, நீங்கள் ஏன் சீட்டு விளையாடுவதில்லை?**" என்று கேட்டதற்கு, தயக்கத்துடன் முன்ஷி, "நான் விளையாடுவது உண்டு; ஆனால் உங்கள் முன்னிலையில் நான் எப்படி...?" என்று தயங்கினார். மேர்வான் ஸேட் அவர் பேச்சைத் தடுத்து, "**சீட்டு விளையாடுவதில் என்ன தவறு? நான் உங்களோடு விளையாடுகிறேன்**" என்றார். முன்ஷியின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

படிப்படியாக, மேர்வான் ஸேட் பிறர் மனங்களில் இருப்பதை அறிந்து கொள்கிறார் என்பதை, முன்ஷி திடமாக நம்பினார். மாலை வேளையில் ஒரு நாள் முன்ஷி மனதில் 'சில நாட்களாக நான் மாமிசமே உண்டு வருகிறேன்; நாளை மீன் உண்ண வேண்டும்; ஆனால் இப்பருவகாலத்தில் மீன் கிடைப்பது அரிதாயிற்றே!' என்று தனக்குள்ளே நினைத்தார். அடுத்த நாள் காலையில், மேர்வான் ஸேட் ஒரு பெரிய மீனைக் கையில் எடுத்துக் கொண்டு, சைக்கிளில்

வருவதைக் கண்டு ஆச்சரியமடைந்தார். மேர்வான் ஸேட் ஒரு வார்த்தைக் கூட பேசாமல், மீனை முன்ஷியின் கையில் கொடுத்துவிட்டு திரும்பிச் சென்றார்.

முன்ஷி ரஹிமின் இருப்பிடம் படிப்படியாக ஓர் ஆன்மீக மையமாக உருவெடுத்தது. மேர்வான் ஸேட்டின் நண்பர்கள் மற்றும் பழக்கமானவர்கள் மாலை வேளையில் அங்கு ஒன்று திரளுவதும், ஹ:ஃபீஸின் திவான்களை ஓரிரு மணி நேரங்கள் வாசிப்பதும், மறைந்திருக்கும் ஆழமான கருத்துக்களை அனைவருக்கும் விளக்கிச் சொல்வதும் வழக்கமாகிவிட்டது. இறுதியில் சீட்டு விளையாடி சிறிய சிறிய பொழுதுபோக்குகளில் ஈடுபடுவதும் அன்றாடம் நிகழும் சம்பவம். முன்ஷி அருமையாக சமைப்பவர்; அவரே சமையல் செய்து அனைவருக்கும் வழங்கினார். அங்கிருந்து மேர்வான் ஸேட், பாபாஜானை சந்திக்கச் செல்வது வழக்கமாக நடந்து வந்தது.

மேர்வான் ஸேட் தனது வியாபாரத்தை, குறிப்பாக கஸ்பா பேட்டில் ஆரம்பித்ததன் காரணம் குறிப்பிடத்தக்கது. கஸ்பா பேட், போயிஸ் (BHOIS) எனப்படும் மீனவர்கள் அதிகமாக வாழ்ந்த இடம். படிப்பறிவில்லாத, எளிமையான வாழ்க்கை வாழ்பவர்கள். அருகிலிருந்த நதியில் மீன்பிடித்துக் காலம் கழிப்பவர்கள். மிக்க தைரியமும், நல்ல இதயமும் படைத்தவர்கள், ஆன்மீக ரீதியில் மேர்வான் ஸேட் மீது அளவுகடந்த பக்தி நிறைந்தவர்கள். இப்படி நாஸரேத்தில் (NAZARETH) வாழ்ந்த ஜீஸஸைப் போல, மேர்வான் ஸேட்டும் தமது ஆரம்பகால பணிகளை, இந்த ஏழை மீனவர்கள் மத்தியில் தொடங்கினார். மதுபானக்கடையை வலையாகப் பயன்படுத்தி அதில் விழும் மீன்களுக்குத் தனது இறைத்தன்மையை வெளிப்படுத்தினார்.

மேர்வான் ஸேட், பெஹராம்ஜி இருவரும் இணைந்து நடத்தி வந்த மதுபானக்கடையை ஒட்டி மேலும் ஓரிடத்தை சதாஷிவ் பாட்டீலிடமிருந்து வாடகைக்கு எடுத்து, மேர்வான் ஸேட்டின் விருப்பப்படி அதை வழிபாட்டு மையமாக உபயோகித்தனர். அவ்வேளையில், சதாஷிவ், மேர்வானுடன் மிகவும் நெருக்கமாக இருந்ததோடு, அவருடைய நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்தி வைத்தார். இவ்வாறு பலர் மேர்வான் ஸேட்டை சந்திப்பதற்காக மதுபானக்கடைக்கு வந்தனர். அருகிலிருந்த வழிபாட்டு மையம், கோவில் போல் உருவெடுத்தது. வெவ்வேறு சத்குருக்களின் ஓவியங்களும் புகைப்படங்களும் சுவற்றை அலங்கரித்தன. சத்குரு உபாஸனி மஹாராஜுக்கு முக்கியமான இடம் தரப்பட்டது. ஆரத்தியும் பூஜைகளும் வழக்கமாக நடைபெற்றன. வியாழன், ஞாயிறு இரண்டு நாட்களும், பொதுமக்களுக்காக, சிறப்பு நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டன.

இவ்வாறு இந்து, முஸ்லிம்கள் அனைவரும் ஒன்றிணைந்து பங்கெடுத்தனர். முஸ்லிம்கள் விரும்பும் கவாலி நிகழ்ச்சிகளில் மேர்வான் ஸேட் டோலக் அடித்துப் பங்கெடுத்தார்.

மதுபானக்கடையைச் சுற்றியுள்ள சூழ்நிலை, போதை தருவதாக இருந்தாலும், அருகாமையில் அமைந்த கோவிலை சுற்றியுள்ள சூழ்நிலைகள் நெருப்புத்தன்மை வாய்ந்ததாக அமைந்தது. அக்கம் பக்கத்தில் வாழும் மக்கள், மேர்வான் ஸேட்டின் இறையன்பால், நிகரற்ற இறை போதையை அனுபவித்தனர். மேர்வான் ஸேட், அப்போது ஓர் அருமையான பேச்சாளர். அவருடைய ஆன்மீக விளக்கங்கள் அனைவரையும் அப்படியே மணிக்கணக்கில் மயங்கவைக்கும்.

ஷிர்டி சாய் பாபா 1918, அக்டோபர் மாதத்தில் அவரது உடலைத் துறந்தார். சத்குரு உபாஸனி மஹாராஜ், சாய் பாபாவின் வாரிசாக ஆன்மீகப் பணிகளைத் தொடர்ந்தபோது, அவர்களோடு வாழ்ந்த **குஸ்தாஜி** என்பவரை மேர்வான் ஸேட்டுடன் இணைந்து சேவை செய்யுமாறு மஹாராஜ் உத்தரவிட்டார். மேர்வான் ஸேட், குஸ்தாஜியை மதுபானக்கடையில் உதவிக்காக வைத்திருந்தாலும், அவரை, இரவு நேரங்களில் ஹஸ்ரத் பாபாஜானுக்கு சேவை செய்வதற்காக அனுப்பி வைத்தார். குஸ்தாஜிக்கு ஓய்வும், தூக்கமும் மிகக்குறைவு. ஏனெனில், பாபாஜான் இரவெல்லாம் தூங்குவதில்லை. அவருடைய தேவைகளை கவனிக்க வேண்டியது அவசியம். மதுபானக்கடையிலிருந்து விறகுகளை எடுத்துவந்து பாபாஜான் குளிர் காய்வதற்காக நெருப்பு வளர்ப்பது வழக்கம்.

சில மாதங்களுக்குப் பிறகு, குஸ்தாஜி, மேர்வான் ஸேட்டிடம், "பாபாஜான் வழிப்போக்கர்கள் செல்லும் பாதையில் அமர்ந்திருப்பதால், அவருக்கு இருப்பிடம் ஒன்று அமைத்துத் தந்தால் சிறப்பாக இருக்கும்" என்றார்.

மேர்வானும் ஒப்புக்கொண்டு, "**முதலில், பாபாஜான் அதற்கு இணங்க வேண்டும்**; **அப்படியானால் ஒரு மரமேடை அமைக்கலாம்**" என்று சொல்லி பாபாஜானிடம் கேட்கக் கூறினார். குஸ்தாஜி, பாபாஜானின் அனுமதியைப் பெற்று மரமேடையைக் கட்டிமுடித்தார். சத்குருக்களுக்கு இதுபோன்ற சொகுசுகளும் சௌகரியங்களும் ஏற்புடையதல்ல; அது மட்டுமின்றி, வசதிகளால் வரும் இன்னல்களை அனுபவிக்கச் செய்து வாழ்க்கைப் பாடங்களைக் கற்றுத் தந்தனர்.

அதைத் தொடர்ந்து ஓரிரு மாதங்களுக்குப் பிறகு, குஸ்தாஜி, மேர்வானிடம், "பாபாஜான் வசதியாக அமர்ந்து, தூங்கி ஓய்வெடுக்க ஒரு மெத்தை வாங்கித் தந்தால் இன்னும் சிறப்பாக இருக்கும்" என்று கூறவே, அதைக் கேட்ட மேர்வான், "**பாபாஜான் இதற்கும் இணக்கம் தெரிவித்தால் வாங்கலாம்**" என்று பதிலளித்தார். பாபாஜானும் 'சரி' என்று சம்மதித்து, "ஆனால் ஒன்று! நான் எங்குச் சென்றாலும் நீ அந்த மெத்தையை என்னோடு எடுத்து வரவேண்டும்" என்று கட்டளையிட்டார்.

பாபாஜானுக்கு இவ்வாறான சிறிய சிறிய வசதிகள் அமைத்துத் தரும் எண்ணத்தில் குஸ்தாஜி மேர்வானிடமிருந்து பணம் பெற்று மெத்தையை

வாங்கினார். ஆனால் நடந்தது என்ன? மெத்தை வாங்கிய அதே இரவில் மழையில் மெத்தை நனைந்தது; பாபாஜான் அன்றிரவு பூனாவிலுள்ளத் தெருக்களில் வலம் வந்தார்; மழை தொடர்ந்து பெய்ததால், மெத்தை நனைந்து ஈரமாகி, தூக்கிச் செல்லக் கடினமாக இருந்தது. நாளடைவில் மெத்தை பயன்படுத்த முடியாமல் வீணானது. இப்படித்தான் சத்குருக்கள் பிறருக்குப் பாடம் புகட்டுவது; சொகுசு வாழ்க்கையில் அவர்களுக்கு நாட்டம் கிடையாது.

குஸ்தாஜி, இப்படி, தன்னலமற்ற சேவைகளில் ஈடுபட்டு, அதற்குப் பிறகு மெஹர் பாபாவின் உள்வட்ட சீடர்களில் ஒருவரானார்.

குஸ்தாஜி இதயப்பூர்வமாக ஓர் உண்மையான துறவி. தனது உடல், உடை அனைத்தையும் அலட்சியப் படுத்தினார். மேர்வான் ஸேட் அவரை மிகவும் நேசித்தார். அவருடைய நகைச்சுவை உணர்வு மேர்வானுக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது.

குஸ்தாஜியின் கதை தனிச்சிறப்பு வாய்ந்தது - மூன்று சத்குருக்கள் - ஷிர்டி சாய் பாபா, உபாஸனி மஹாராஜ், ஹஸ்ரத் பாபாஜான் அவர்களின் நெருங்கிய தொடர்பில் வந்து, சேவை புரிந்த பாக்கியம் பெற்றவர். இறுதியில் மேர்வான் ஸேட்டின் மெய்க்காவலராகவும், நெருங்கிய நண்பராகவும் திகழ்ந்தார். 1890ஆம் ஆண்டு குஜராத்தில் உள்ள ஹன்ஸோட் (HANSOT) கிராமத்தில் பிறந்ததால் குஸ்தாஜி ஹன்ஸோட்டியா (GUSTADJI HANSOTIA) என்ற பெயரால் அழைக்கப்பட்டார். 1905ஆம் ஆண்டு, தனது தந்தையை இழந்த பின்பு, பல வேலைகளில் ஈடுபட்டு எதிலும் நிலையாக இருக்க முடியவில்லை.

1910ஆம் ஆண்டு நாசிக் நகரில் வாழ்ந்த, தனது சகோதரன் வீட்டில் வந்து சேர்ந்தார். இதைத்தான் விதியின் விளையாட்டு என்பது. நாசிக் வந்ததும், முதன் முறையாக ஷிர்டி சாய் பாபாவைப் பற்றிக் கேள்விப்பட்டு, அவ்வப்போது அவரை சந்திக்கச் சென்றார். அவ்வேளையில், மும்பையில் ஒரு புகைப்பட நிலையத்தில் வேலைக்காகச் சேர்ந்தும், அவர் எண்ணமெல்லாம் ஷிர்டி சாய் பாபாவையே நாடியது. மாதம் ஒரு முறை ஷிர்டிக்குச் சென்று மூன்று நான்கு நாட்கள் தங்கி வந்தார். இன்னொரு முறை இருபது நாட்கள் சாய் பாபாவுடன் இருந்தார். ஷிர்டியில் தங்கியிருந்தபோது கண்டோபா கோயிலில் உபாஸனி மஹாராஜை சந்திக்கும் வாய்ப்பும் கிடைத்தது. 1917ஆம் ஆண்டு முதன்முதலில் மேர்வான் ஸேட்டை மும்பையில் சந்தித்தார்.

இப்படி விதி அவரை அவ்வப்போது சத்குருக்களை நோக்கி ஈர்த்துச் சென்றது.

குஸ்தாஜி மும்பையில் இருந்தபோது உடல் நலக்குறைவால் அவரது வேலையை விட வேண்டியதாயிற்று. அப்போது சாய் பாபா, குஸ்தாஜியை ஷிர்டியில் நிரந்தரமாக ஏற்றுக் கொண்டார். உபாஸனி மஹாராஜை, குஸ்தாஜி அவ்வப்போது ஸாக்கோரிக்குச் சென்று பார்த்து வந்தார். ஷிர்டியில் சாய் பாபாவின் ஆணைப்படி குஸ்தாஜி ஆறு மாதங்கள் கடும் விரதத்தை மேற்கொண்டார். சாய் பாபாவிற்கு மிகவும் நெருக்கமானவர். 1918, அக்டோபர் 15ஆம் நாள், சாய் பாபா தனது உடலை துறந்தபோது குஸ்தாஜி உடனிருந்தார்.

சாய் பாபாவின் மறைவுக்குப் பிறகு, குஸ்தாஜி, சத்குரு உபாஸனி மஹாராஜூடன், ஸாக்கோரியில் வாழ்ந்து, இறுதியில், மேர்வான் ஸேட்டுடன் வந்து இணைந்தார்.

1918 டிசம்பர் 15 அன்று மேர்வானுக்கு மனிஜா (MANIJA) என்ற பெயரில் ஒரு தங்கை பிறந்தார். தாயார் ஷிரீன் பூனா ஸஸூன் மருத்துவமனையில் இருந்தபோது, மேர்வான் அடிக்கடி அங்குச் சென்று பார்த்து வந்தார். ஏதாவது பரிசுகளும் எடுத்துச் சென்றார். மேர்வான்தான் குழந்தையை முதன்முதலில் தனது கைகளில் ஏந்தி முத்தம் கொடுத்தார். தங்கை மனிஜா வீட்டிற்கு வந்த பின்பு, மேர்வான் குழந்தையைப் பார்ப்பதற்காகவே வந்து, அருகிலமர்ந்து, தொட்டிலை ஆட்டிவிட்டு, தங்கைக்காகப் பாடவும் செய்தார். மேர்வான் ஸேட், "**மனிஜா மிகவும் அதிர்ஷ்டசாலி; அவள் எனக்கே சொந்தம்**" என்று கூறி வந்தார்.

இதற்கிடையில், மேர்வான் ஸேட்டின் சகோதரர் ஜாம்ஷெட், பூனாவுக்குத் திரும்பி வந்து, தனது குடும்பத்தில் பிறந்து வளர்ந்த கோர்ஷத் - KHORSHED (தாயார் ஷிரீனின் தம்பி, தீன்ஷாவின் மகள்) என்பவரை மணந்து கொண்டார். கோர்ஷத், உண்மையிலே நீண்டகாலமாக மேர்வானைத் திருமணம் செய்துகொள்ள விரும்பினார். மேர்வான் ஸேட்டிற்கு இந்த உண்மை தெரிந்தும், ஜாம்ஷெட் இதற்கு இணங்காத போதும், மேர்வானின் வற்புறுத்தலால் ஜாம்ஷெட் திருமணம் செய்து கொண்டார்.

இவ்வேளையில், அஸ்பந்தியார் அவரது தங்கை நாஜா, மேர்வானின் பெரிய தாய் டவ்லா, கணவர் அனைவரும் மேர்வானின் இறை தன்மையை உணர்ந்து அவரிடம் சரணடைந்தனர். குடும்பத்தில் அனைவருக்கும் மேர்வான் மீது ஆழ்ந்த பற்று. அப்போது ஒரு நாள் அஸ்பந்தியார், டவ்லா இருவரும் உபாஸனி மஹாராஜின் தரிசனத்திற்காக ஸாக்கோரிக்குச் சென்ற வேளையில், மஹாராஜ் அவர்களிடம், "உங்கள் மேர்வான், ஒரு சாதாரண மனிதரல்ல! தீர்க்கதரிசியான ஸொராஸ்டர் அளவுக்கு மேன்மையானவர்" எனக் குறிப்பிட்டார். இதைக் கேட்ட மஹாராஜின் சீடர்களும் மேர்வான் ஸேட் கடவுள் நிலையை அடைந்தவர் என்பதை அடையாளம் கண்டுகொண்டனர்.

மேர்வானின் தந்தை ஷெரியாரின் அண்ணன் குடும்பத்தினர் மும்பையில் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு ஷா (SHAH) என்று ஒரு மகன்; மேர்வான் மீது மிகுந்த பாசமும், பக்தியுமுள்ளவர். எதிர்பாராதவிதமாக, தனது இளம் வயதில் திடீரென, ஷா காலமான செய்தியைக் கேட்டு ஷெரியார் குடும்பம் கவலைக்குள்ளானது. சூழ்நிலைகள் காரணமாக ஷெரியார், ஷிரீன் இருவரும் உடனே மும்பைக்குச் செல்ல முடியாததால், மேர்வானை குடும்பத்தின் சார்பில் சென்று வருமாறு வற்புறுத்தினர். ஷெரியார் அண்ணன் குடும்பத்துடன் மேர்வான் பற்றுள்ளவராக இருந்தாலும், அண்ணன் ஷா மரணமடைந்த செய்தியை அறிந்து எவ்வித சோக உணர்வையும்

வெளிப்படுத்தவில்லை. பிறப்பு, இறப்பு இவைகளின் உண்மை நிலையை அறிந்தவர் ஆகையால், மரண வீட்டில், மேர்வானால் எந்த விதமான துயரத்தையும் வெளிப்படுத்த முடியாது என்று நன்றாகத் தெரியும். ஸொராஸ்டிரிய வழக்கப்படி நான்கு நாட்கள் கடும் துக்கம் அனுசரிக்க வேண்டிய கட்டாயத்தால் மேர்வான் அந்தப் பொறுப்பை ஏற்கும் நிலையில் இல்லை.

இருந்தாலும், மேர்வான் இறுதியாக, பெற்றோருக்கு இணங்கி, மும்பைக்குச் சென்றபோது, அவர் எதிர்பார்த்தது போல, சூழ்நிலைகள் கண்ணீரும், கம்பலையுமாக இருந்தன. எவ்வளவு முயன்றும் அவரால் துயரத்தின் எந்த அடையாளத்தையும் வெளிப்படுத்த முடியவில்லை. இந்த சூழ்நிலையிலிருந்து எப்படி விடுபடுவது என்ற எண்ணம் தீவிரமடையவே, தற்செயலாக, ஒரு சரியான உபாயம் தோன்றியது: வெள்ளைத் துணியால் போர்த்தப்பட்டிருந்த உடலைப் பார்த்ததும், மேர்வான் ஸேட் மயக்கம் வந்தவர் போல் அப்படியே கீழே சாய்ந்து விட்டார் (மாய உலகின் நாடகமேடை; கடவுள் கூட நடிகராக வேண்டிய சூழ்நிலை). மேர்வானின் மயக்க நிலையைப் கண்டு கவலையடைந்த உறவினர்கள் பல்வேறு வழிகளைக் கையாண்டனர். கடைசியில் மேர்வான் அந்த இறுதிச்சடங்கிலிருந்து விடுபட்டார்.

மேர்வானின் பெரிய தந்தை, அவரின் உடல்நிலையைப் பற்றி அறிந்தவர் ஆகையால், மிகவும் கவலைப்பட்டார். உடனே பூனாவுக்குத் திருப்பி, பத்திரமாக அனுப்பி வைத்தார். சாதாரண உலகமக்கள் அறியாமையினால் செய்வது ஒன்று; உண்மையின் இரகசியங்களை அறிந்தவர் செய்யும் முறை மற்றொன்று!

மேர்வான் ஸேட், தன்னுடைய சீடர்களைத் தயார்படுத்தும் முறை, குறிப்பாக அவர்கள் விதியால் ஈர்க்கப்பட்டாலும், மேர்வான் ஸேட்டோடு வந்து இணைந்த விதம் மிகவும் வியப்பாக இருந்தது. அனைத்தும் இயற்கையாக நிகழ்வது போலத் தோன்றியது.

மேர்வானும், பெஹராம்ஜியும் நடத்திய மதுபான வியாபாரத்திலிருந்து வரும் லாபத்தை, ஏழைகளுக்கும், சாது சன்னியாசிகளுக்கும் வாரி வழங்குவதோடு, கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கும் பிரசாதமாகக் கொடுத்தனர்.

ஒரு நாள் மேர்வான் ஸேட் கோயிலில் பிரசாதம் வழங்கிக் கொண்டிருந்த வேளையில் 15 வயது சிறுவன் ஒருவன் அங்கே வந்து, தனது கையை நீட்டியதும், மேர்வான் ஸேட் அவனது பெயரென்ன என்று கேட்க, அந்த சிறுவன், ‘விஷ்ணு நாராயண் டெருக்கர்’ என்றான்.

மேர்வான் ஸேட் விசாரித்தார், **“நீ என்ன செய்கிறாய்?”**

“நான் பள்ளிக்கூடம் செல்கிறேன்” சிறுவன் பதிலளித்தான்.

**“உனது தந்தை எங்கே?”** மேர்வான் ஸேட் கேட்டார்.

“அவர் இப்போது இல்லை” என்றான் சிறுவன்.

மேர்வான் ஸேட் இரக்கத்துடன் அவன் கண்களை உற்றுநோக்கி, "**இந்த நேரத்திலிருந்து நானே உனது தந்தை**" என்றதும், "அதன் அர்த்தம் என்ன மேர்வான் ஸேட்? எனக்கு ஒன்றும் புரியவில்லை" விஷ்ணு வினவினான்.

மேர்வான் ஸேட் புன்முறுவலுடன் அவன் கையில் பிரசாதத்தைக் கொடுத்து, தலையில் கையை வைத்து வாழ்த்தினார். விஷ்ணு திரும்பிச் சென்றுவிட்டான்.

விஷ்ணு கோயிலின் எதிரே அமைந்த வீட்டில் வாழ்ந்து வந்தான். அவன் மேர்வான் ஸேட்டை தரிசனம் செய்துவிட்டுச் சென்ற பின்னர், ஒரு நாள் மேர்வான் அங்குச் சென்றார். விஷ்ணுவின் தாயார், ஆச்சாரமான இந்து பெண்மணி, பெயர் சரஸ்வதி. மேர்வான் ஸேட்டைப் பார்த்ததும், "வாருங்கள் தேவா!" என்று உபசரித்தார். இதைத்தான் ஆண்டாண்டு காலமாக இணைப்பிலிருந்த உறவு என்பது! முதல் அறிமுகம், முதல் பார்வை, இனம் புரியாத ஓர் இணக்கம்.

மேர்வான் ஸேட் நலம் விசாரித்துவிட்டுக் கேட்டார், "**எனக்கென மதிய வேளையில் பருப்பும், சாதமும் தயார் செய்து கொடுப்பீர்களா?**"

சரஸ்வதி உடனே சந்தோஷம் பொங்க, "மிகுந்த மகிழ்ச்சியுடன் செய்வேன் தேவா!" என்றார்.

விஷ்ணுவின் தாயார் சரஸ்வதியை சந்தித்த நாளிலிருந்து, மேர்வான் ஸேட் தினமும் மதிய உணவுக்காக விஷ்ணுவின் வீட்டிற்குச் சென்றார். எவ்வளவு பெரிய ஒரு வாய்ப்பு! வரப்பிரசாதம்! கடவுளே சென்று கேட்டு வாங்கி உண்ணும் அளவுக்குப் புண்ணியம் செய்தவர்கள்.

சில நாட்களுக்குப் பிறகு, மேர்வான் ஸேட் குறிப்பிட்ட நேரத்தில் வராமல், எப்போதேனும் வர ஆரம்பித்தார். "**பசியுடன் இருக்கிறேன், சிறிதளவு உணவு தயார் செய்வீர்களா?**" என்று கேட்டு வாங்கி உண்டார். அந்நாளிலிருந்து சரஸ்வதி எப்பொழுதும் உணவு தயாராக வைத்திருப்பது வழக்கமாகிவிட்டது. மேர்வான் ஸேட் எந்த நேரத்திலும் வரலாம் என்று எண்ணிக் காத்திருந்தார் சரஸ்வதி.

மேர்வான் ஸேட், விஷ்ணுவின் தாயார் சரஸ்வதியை காக்குபாய் (என்றால் அத்தை, தந்தையின் சகோதரி) என்று அன்புடன் அழைக்கத் தொடங்கினார்.

ஒரு முறை காக்குபாய், மேர்வான் ஸேட்டிடம் தனது மகன் விஷ்ணுவைக் குறித்து புகார் செய்தார், "தேவா! எனது மகன் விஷ்ணு தினமும் சினிமா பார்க்கச் செல்வது வழக்கமாகிவிட்டது! மோசமான நண்பர்களுடன் இணைந்து தீய செயல்களில் ஈடுபடுவானோ என்ற அச்சம் எனக்கு! எனது பேச்சைக் கேட்பதில்லை! தேவா! நீங்களாகச் சொல்லி அவனைக் கொஞ்சம் நல்வழிக்குக் கொண்டு வரவேண்டும்."

உடனே மேர்வான் ஸேட் அருகிலிருந்த சினிமா கொட்டகைக்குச் சென்று, விஷ்ணுவைக் கண்டுபிடித்து - அப்போதுதான் சில நண்பர்களுடன்

உள்ளே நுழைய இருந்த அவனை வெளியே இழுத்து வந்து, கன்னத்தில் இரண்டு மூன்று முறை அறைந்தார்.

விஷ்ணு படபடப்பில் ஒன்றும் புரியாமல் திகைத்துப்போய், “மேர்வான் ஸேட், நான் டிக்கெட் என்னுடைய பணத்தில்தான் வாங்கினேன்; நான் ஒன்றும் திருடவில்லை! என்னை ஏன் இப்படி அறைகிறீர்கள்?” என்று கேட்டான்.

**“சினிமாவுக்குச் செல்கிறேன் என்று என்னிடம் சொன்னாயா?”** மேர்வான் ஸேட் கேட்டார் **“நான் உனக்குச் சொன்னேன் அல்லவா நான் உன் தந்தை என்று! ஏன் என்னை கேட்கவில்லை?”**

விஷ்ணு பதில் கூறவில்லை. அந்நேரத்திலிருந்து மேர்வான் ஸேட்டின் அனுமதியில்லாமல் விஷ்ணு எதுவுமே செய்தது இல்லை. காக்குபாய் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

இப்படி, மேர்வான் ஸேட் தன்னுடைய உள் மற்றும் வெளிவட்ட சீடர்களை, ஒவ்வொருவராக, அவருக்கே உரித்தான முறையில், ஆயத்தப் படுத்தினார்.

மெஹர் பாபாவின் அவதார நிர்வாகத்தில் சீடர்களின் பங்கு மிக முக்கியமானது. முற்பிறவிகளில் நீண்டகால தொடர்பிலிருந்து, அவதார புருஷரின் சீடர்களாக வந்து இணையும் தகுதியை அடையப் பெற்றவர்கள். வெளியளவிலான தோற்றத்திலும், ஈடுபடும் தொழிலிலும், அவர்கள் எந்த நிலையில் இருந்தாலும், இறுதியில் சீடர்களாக வந்திணைந்து விரைவில் இறைநிலையை அடையும் பாக்கியம் பெற்றவர்கள்.

மேர்வான் ஸேட்டால் ஈர்க்கப்பட்டு, தன்னை அர்ப்பணம் செய்த இன்னும் ஓர் இளைஞன், அர்ஜுன் ஸுப்பேக்கர் (ARJUN SUPEKAR), இந்து குடும்பத்தில் பிறந்தவர். அப்போது மேர்வான் ஸேட்டின் மதுபானக்கடைக்கு அருகில், சிறிய பெட்டிக்கடையை வைத்துக் காலம் கழித்து வந்தார். மேர்வான் ஸேட் அவருக்கு வழக்கமான வாடிக்கையாளர். அர்ஜுனுடன் நீண்ட நேரம் அமர்ந்து, பல விஷயங்களைப் பரிமாறிக் கொண்டனர்: **“வியாபாரம் எப்படி நடக்கிறது?”, “வேண்டிய வருமானம் வருகிறதா?”, “குடும்பத்தில் எல்லோரும் எப்படி இருக்கிறீர்கள்?”, “உனக்கு எத்தனை குழந்தைகள்?”** இப்படிப் பல விபரங்களையும் தெரிந்து கொண்டார். மேர்வான் ஸேட்டின் உண்மையான ஆர்வமும், அனுதாபமும் அவரின் இதயத்தை நெகிழச் செய்தது. கடைசியில், வாழ்க்கை எப்படியோ சிரமத்துடன் செல்வதை அர்ஜுன் அவருடன் பகிர்ந்து கொண்டார்.

மேர்வான் ஸேட், அர்ஜுனுடன் இருந்தபோது, ஸந்த் துக்காராம், ஸ்வாமி ராம்தாஸ், கபீர் போன்றவர்களின் பாடல்களைப் பாடினார். மேர்வான் ஸேட் சிறந்ததோர் ஆன்மீக ஞானி என்பதை அர்ஜுன் உணர்ந்தார். இறுதியில், அவருடைய குடும்பத்திலுள்ள அனைவரும் மேர்வான் ஸேட்டின் அரவணைப்பில் வந்தனர்.

1919ஆம் ஆண்டு மேர்வான் ஸேட் மும்பைக்குப் பயணம் செய்த அவ்வேளையில், இன்னுமொரு பார்சி இனத்தைச் சார்ந்த, கொடாதத் ஈரானி (KHODADAT IRANI) என்பவர், மேர்வான் ஸேட்டின் வலையில் அகப்பட்டார். மேர்வான் ஸேட் மும்பைக்குச் சென்றதன் காரணமும் இதுவாகத்தான் இருக்க வேண்டும்.

கொடாதத் எப்படியேனும் ஒரு நடிகராக வேண்டும் என்ற ஏக்கத்தில் எல்லா ஸ்டுடியோக்களிலும் தேர்வுக்காகச் சென்றார். வாய்ப்பு எதுவும் கிட்டாத நிலையில் மிகவும் மனம் உடைந்து, இறுதியில் தற்கொலை செய்யும் எண்ணத்தில் ஓரிடத்தில் அமர்ந்திருந்தார். இந்த நேரத்தில்தான் மேர்வான் ஸேட் அந்த இடத்தில் தோன்றினார்.

கடவுளின் பார்வை எங்கும் எப்பொழுதும் இருக்கும். அவர் அனைத்தும் அறிந்தவர். இதுபோன்ற ஒரு சம்பவம் தற்செயலாக நடக்க முடியுமா என சிந்தித்து, புரிந்துகொள்ள வேண்டியது முக்கியம்.

மும்பையில், மேர்வான் ஸேட் சென்று கொண்டிருந்த பாதையில், கொடாதத் அமர்ந்திருந்தார். அவரைப் பார்த்ததும் மேர்வான் ஸேட் அங்கே நின்று விசாரித்தார்: "**மகனே! நீ யார்? நீ ஏன் சோகமாகத் தோன்றுகிறாய்? உன்னைப் பார்த்தால் வாழ்வில் அனைத்து நம்பிக்கையும் இழந்தவன் போல் இருக்கிறாய்!**"

கொடாதத் உடனடியாக எதிர்த்து, "உங்களுக்கு இதிலென்ன இருக்கிறது, சொல்லுங்கள். எதுவாயினும், நீங்கள் யார்?" என்று கேட்டார்.

மேர்வான் ஸேட் சிரித்துக்கொண்டே, "**நான் பூனாவில் ஒரு திரைப்பட தயாரிப்பாளர். மும்பையில் நடிகர்களைத் தேர்ந்தெடுக்கும் பணியின் நிமித்தம் வந்துள்ளேன்! சினிமாவில் நடிக்க விரும்பும் எவரையேனும் உனக்குத் தெரியுமா?**" எனக் கேட்டார்.

மேர்வான் ஸேட் கூறியதைக் கேட்ட அந்த இளைஞனுக்கு அவன் செவிகளை நம்ப முடியவில்லை. உற்சாகத்துடன் எழுந்து, "ஆமாம் சார்! நானே அந்த மாதிரி வேலையை எனக்காகக் கடந்த மூன்று மாதங்களாகத் தேடிக் கொண்டிருக்கிறேன்" என்று பதிலளித்தான். மேர்வான் ஸேட், "**நல்லது, நான் உன்னை எனது குழுவில் இணைத்துக் கொள்கிறேன்; நீ என்னுடன் பூனாவுக்கு வரவேண்டும்**" என்று கூறியதும், கொடாதத் உடனே சம்மதம் தெரிவித்தார்.

மேர்வான் ஸேட், கொடாதத்தை பூனா அழைத்து வந்ததும் அவர், "**நீ என்னுடைய மதுபானக்கடையில் பணிபுரிய வேண்டும். இந்த வேலை தற்காலிகமானது. என்னுடைய திரைப்பட நிறுவனத்தின் உருவாக்கம் அதன் கடைசி கட்டத்தில் உள்ளது. ஆரம்பித்ததும் நீ அதில் சேரலாம்**" என்று சொன்னதை, கொடாதத் மனமுவந்து ஏற்றுக்கொண்டார்.

கஸ்பா பேட்டிலிருந்த மனநிறைவும், மயக்கம் தரும் ஆன்மீக சூழ்நிலைகளும், கொடாதத் நடிகராகும் ஆசையைக் கைவிடச் செய்து, மேர்வான் ஸேட்டுடன் இதர வேலைகளில் கவனம் செலுத்த வழிவகுத்தது.

மேர்வான் ஸேட், சில நாட்களுக்குப் பிறகு, கொடாதத்தை 'நெர்வஸ்' (NERVOUS) என்ற புனைபெயரால் அழைத்தார். ஏனெனில், சின்ன சின்ன விஷயங்களில் மேர்வான் ஸேட் முன்னிலையில் கொடாதத் அமைதியின்றி, பதட்டத்துடன் காணப்பட்டார்.

மேர்வான் ஸேட்டின் நண்பர் பெய்லி கடற்படையில் இணைந்து, ஏதன் நாட்டில் இருந்தபோது அவருடனான தொடர்பு துண்டிக்கப்பட்டது; ஒரு வருடத்திற்குப் பிறகுதான் பெய்லியைப் பற்றிய விஷயங்கள் தெரியவந்தது:

ஏதன் நாட்டில் பெய்லியின் நடத்தை சரியில்லாமல், அலுவலக பணத்தைக் கையாடல் செய்து, ஆடம்பரமான வாழ்க்கை வாழ்ந்து, இறுதியில் குற்றவாளி எனச் சிறையில் அடைக்கப்பட்டார். இரண்டு வருட சிறை தண்டனையை அவருடைய கப்பல் படைத் தலைவர் இரக்கப்பட்டு ஆறு மாதங்களாகக் குறைத்தார். விடுதலைக்குப் பிறகு, வேலை, மரியாதை இரண்டையும் இழந்து, அனைவரின் வெறுப்புக்கும் ஆளானார். பூனாவுக்குத் திரும்பி வருவதைத் தவிர வேறு வழியில்லாமல், வந்தவரை, குடும்பத்தில் அனைவரும் அவமானப்படுத்தி வெறுத்து ஒதுக்கினர். பெய்லியின் தம்பி ஹோமி மட்டுமே அவருடன் பேச்சுவார்த்தை வைத்திருந்தார்.

இந்நிலையில், பெய்லி, தற்கொலை செய்வதைத் தவிர வேறு வழியில்லை என ஹோமியிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

அதே நாளில் ஹோமி, மேர்வான் ஸேட்டை சந்திக்க நேர்ந்தது. மேர்வான் ஸேட் சாதாரணமாக விசாரித்தார், "**பெய்லி, இந்நாட்களில் எங்கே இருக்கிறான்? அவனுக்கு என்னவாயிற்று? நாங்கள் கடிதம் எழுதுவதுண்டு; ஆனால் கடந்த ஓராண்டில் நான் எதுவும் கேள்விப்படவில்லை.**"

"ஆமாம்! உங்களுக்குத் தெரியாதா? சில மாதங்களாக பெய்லி பூனாவில்தான் இருக்கிறார்" என்று ஹோமி எடுத்துரைத்து "நீங்கள் கேள்விப்படவில்லையா? பணமோசடி வழக்கில் அவர் வேலையிலிருந்து விலக்கப்பட்டார்" என்றார்.

மேர்வான் ஸேட் அதிர்ச்சியில், "**இல்லை, இல்லை எதுவும் தெரியாது. நீ போய் உடனே அவனை என்னிடம் அழைத்து வா!**" எனக் கூறி, குதிரை வண்டிக்கான பணமும் கொடுத்து அவசரமாக அனுப்பி வைத்தார்.

ஹோமி வீட்டிற்கு வந்தபோது, பெய்லியின் அறை மூடப்பட்டிருப்பதை கவனித்து, உரத்த குரலில் கத்தினார். ஆனால் பதில் எதுவுமில்லை. கதவை வேகமாகத் தட்டியபோது பெய்லி, "யாராக இருந்தாலும் போய் விடுங்கள்! நான் எவரையும் பார்க்க விரும்பவில்லை" என்று விரக்தியில் பதிலளித்தார்.

ஹோமி திருப்பிக் கத்தினார், "கதவைத் திற! இல்லையேல் நான் உடைக்க வேண்டியது வரும்! மேர்வான் ஸேட், நீ பூனாவுக்குத் திரும்பி வந்த பின்னர், உன்னை சந்திக்கவில்லை என்று பெரிதும் கவலைப்படுகிறார். அவர் உன்னை உடனடியாகப் பார்க்க விரும்புகிறார். அட முட்டாள்! அவர் இன்னும்

உனக்கு நண்பர்! நீ வரவேண்டும். உன்னை உடனடியாக அழைத்து வரக் கூறினார்.”

சிறிது நேரத்திற்கு முன்புதான், பெய்லி விஷம் அருந்தும் ஆயத்தத்தில் இருந்தார். தயக்கத்துடன் விஷத்தை மறைத்துவிட்டு, கதவைத் திறந்ததும் ஹோமி, அண்ணனின் கையைப் பிடித்து இழுத்து, குதிரைவண்டியில் ஏறி இருவரும் சென்றனர்.

பெய்லியும், ஹோமியும் மேர்வானை சந்திக்க வந்தபோது அவர் அங்கு இல்லை. குஸ்தாஜி அவர்களிடம் மேர்வான் ஸேட் அவசரமாக வெளியே சென்றதாகவும், அவர்களை அமரச் செய்யுமாறும் கூறியதைத் தெரிவித்தார்.

அதற்குப் பிறகு நடந்ததை பெய்லி தனது நாட்குறிப்பில் எழுதியிருந்தார்:

“நான் நெடுநேரம் காத்திருக்கவில்லை… பதினைந்து நிமிடங்களில் மேர்வான் ஸேட் வந்ததைக் கண்டேன். அப்போது நான் கடைக்கு வெளியே வீதியில் அங்குமிங்கும் உலாவிக் கொண்டிருந்தேன். என்னைப் பார்த்ததும் அவர் வந்த வேகத்தில், கைகளால் அள்ளி அணைத்து எனது முகத்திலும், கழுத்திலும் முத்தமிட்டார். எனது கண்கள் கலங்கின…”

மேர்வான் ஸேட் பெய்லியைத் தழுவிய விதம், அவரைப் போல நேசிப்பவர் வேறு எவருமில்லை என்பதை உணர வைத்தது. பெய்லி மெய்சிலிர்த்துப் போனார். இதுபோன்ற பாசத்தை அவர் அனுபவித்ததே இல்லை. நண்பர்களும், குடும்பத்தினரும் அவரிடமிருந்து விலகி இருந்தனர். ஆனால் மேர்வான் அதே பாசத்துடன் இருந்தார். பெய்லி அன்பென்றால் என்ன என்பதை மறந்தே போனார். தாங்கமுடியாத தவிப்பில் ஒரு வார்த்தைக் கூட பேசமுடியவில்லை. பெய்லி எதுவும் பேசாமல் மேர்வான் ஸேட்டின் முகத்தையே உற்று நோக்கிய வண்ணம் இருந்தார். மேர்வான் மாறிவிட்டார்; கடைசியாகப் பார்த்ததிலிருந்து, சாதாரண தோற்றத்தில் நன்றாக இருக்கிறார். ஆனால் கண்கள் மட்டும் இன்னும் மயங்கிய நிலையில் இருந்தன.

மேர்வான் ஸேட், நண்பர் பெய்லியை உள்ளே அழைத்துச் சென்று, மதுபானம் வழங்கினார். இருவரும் கடையோரமாக அமர்ந்திருந்ததால், பெய்லி நடந்த அனைத்தையும் மேர்வான் ஸேட்டிடம் கொட்டித் தீர்த்தார்.

பெய்லி, கூறியதையெல்லாம் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த மேர்வான் ஸேட் இறுதியில் அறிவுரை வழங்கினார்: “**கடந்தகாலம் அதன் பாதையில் போகட்டும்! செய்த தவறுகளை எண்ணி வருந்துவானேன்? ஒவ்வொரு மனிதனும் ஏதாவது ஒரு பெரிய தவறை செய்ததுண்டு…. மன்னிக்க கடவுள் இருக்கிறார்**.” மேர்வான் ஸேட்டின் ஆதரவான வார்த்தைகள் பெய்லியின் மனதிலிருந்த பாரத்தை வேரோடு அகற்றின.

“**நடந்ததையெல்லாம் நீ எனக்கு ஏன் எழுதவில்லை?**” மேர்வான் ஸேட் கேட்டார்.

“நான் எழுதினேன்; பல கடிதங்கள் எழுதினேன்; நீதான் பதிலளிக்கவில்லை; மாபெரும் ஆன்மீக ஞானி ஆகிவிட்டதாக நான்

கேள்விப்பட்டேன். நீ பூனாவிலிருந்து வெளியே சென்றிருப்பாய் என நினைத்தேன்" என்றார் பெய்லி.

"**சரி சரி**, **கவலைப்படாதே**! **எல்லாம் எனக்குத் தெரியும்**!" மேர்வான் ஸேட் பதிலளித்தார், "**தவறாமல் தினமும் என்னை வந்துப் பார்க்கவேண்டும்**! **எல்லாம் சரியாகிவிடும்**." பெய்லி அதற்கு சம்மதித்தார்.

மேர்வான் ஸேட்டை சந்தித்தது பெய்லிக்குப் புத்துணர்வைத் தந்தது மட்டுமின்றி, அவர் ஆதரவற்றவரும், ஆற்றலற்றவரும் அல்ல என்பதைப் புரிய வைத்தது. பெய்லியைப் பொறுத்தவரை இது அவருக்கு ஒரு புதுவாழ்வு. தற்கொலை செய்யும் எண்ணத்தை அறவே விட்டுவிட்டார். அடிக்கடி மேர்வான் ஸேட்டை சந்தித்து வந்தார். மறுபடியும், மேர்வான் ஸேட் அவருக்கு உறுதுணையாகவும், அன்பின் உறைவிடமாகவும் திகழ்ந்தார்.

பெய்லி ஏதனிலிருந்து அனுப்பிய கடிதங்களை மேர்வான் ஸேட்டின் தாயார் ஷிரீன் மறைத்து வைத்தது இறுதியில் தெரியவந்தது. பெய்லியின் உண்மை நிலையை அறிந்தால் மேர்வான் உடனே ஏதன் சென்று விடுவார் என அஞ்சினார். அதைத் தாயார் விரும்பாததால் கடிதங்களை மறைத்து வைத்தார் என்பதை வெளிப்படையாக ஒப்புக்கொண்டார். மேர்வான் ஸேட் எதுவும் கூறாமல் மன்னித்துவிட்டார். மன்னிப்பது, கடவுளின் இயற்கை குணம்; உண்மைக்கு எப்போதும் முதலிடம்.

இந்த சம்பவத்திற்குப் பிறகு பெய்லி, ஏதன் செல்வதற்கு முன்பு ஹஸ்ரத் பாபாஜான் சொன்னதை நினைவு கூர்ந்தார்: 'நீ சற்று பொறுமையாக இருக்கவேண்டும்… ஐந்து வருடங்கள் காத்திருக்கவேண்டும்… 'அவன்' சொல்கிறான் இரண்டு வருடங்கள் என்று! இல்லை! இல்லை! இரண்டு வருடங்கள் நான் அனுமதிக்க மாட்டேன்! ஆகையால் சரியாக ஒன்றரை வருடங்களில் வந்துவிடு' என்று பாபாஜான் எடுத்துரைத்ததன் பொருள் பெய்லிக்கு இப்போதுதான் புரிந்தது.

படிப்படியாக, பெய்லி, மேர்வான் ஸேட்டின் உண்மை நிலையைத் தெரிந்து கொண்டார். பெய்லி கோபமும், தாபமும் நிறைந்த இயற்கை குணம் படைத்தவராக இருந்தாலும், மேர்வான் ஸேட் அவருடைய நட்புறவை பெரிதும் விரும்பினார்.

மேர்வான் ஸேட் அடிக்கடி ஸாக்கோரிக்குப் பயணம் செய்த வேளையில், பலரை அவரது தொடர்பில் கொண்டு வந்ததோடு, உபாஸனி மஹாராஜ் அவரைப் பின்பற்றுபவர்களில் பலருக்கு மேர்வான் ஸேட்டின் இறைநிலையை எடுத்துக் கூறினார். அவர்களில் முக்கியமான பெண்மணி குல்மாய் (GULMAI), அஹமதுநகரில் வாழ்ந்துவந்த கான் ஸாஹேபின் (KHAN SAHEB) மனைவி, நான்கு குழந்தைகளுக்குத் தாயார், வயது ஏறக்குறைய 35. கான் ஸாஹேபின் தங்கை குல்னார் (GULNAR), தோல் வியாதியால் பெரிதும் அவதிப்பட்டார். மாஸாஜி (மேர்வானின் சித்தி பிரோஜாவின் கணவர்) மஹாராஜின் மகிமையை எடுத்துக் கூறி, அவரை சந்திக்கும்படி வேண்டினார்.

மஹாராஜை சந்தித்த சில நாட்களில் குல்னாரின் நோய் மாயமாக மறைந்தது. குல்னாரின் அண்ணி குல்மாயும் இவ்வாறு சத்குரு உபாஸனி மஹாராஜின் தொடர்பில் வந்தார். பார்சி இனத்தைச் சார்ந்தவர்கள், சமூக நம்பிக்கைகளுக்கு எதிராக, ஓர் இந்து சத்குருவை நம்பி, பின்பற்றுவது துணிச்சலான சம்பவம்.

இவ்வாறு, குல்மாயின் தங்கை ஸூனாமாசியும் (SOONAMASI) அவர் கணவர் கய்குஷ்ரு மாஸாவும் (KAIKHUSHRU MASA) மஹாராஜின் வட்டத்தில் வந்திணைந்தனர். இவர்கள் அனைவரும் மெஹர் பாபாவின் அவையில் முக்கிய அங்கம் வகிக்கும் பாக்கியத்தை அடையப் பெற்றவர்கள்.

குல்மாய் குடும்ப பிரச்சினைகளால் அடிக்கடி ஸாக்கோரிக்குச் செல்ல முடியாத சூழ்நிலை. ஒரு முறை குல்மாய், ஸாக்கோரி கோவிலில் இருந்த வேளையில், சற்று தூரத்தில், அரசமரத்தின் கீழ் இரண்டு பார்சி இளைஞர்கள் அமர்ந்திருந்தனர். குல்மாய், ஏதோ ஒரு சக்தி அந்த இளைஞர்களை நோக்கி ஈர்ப்பது போல் உணர்ந்து, அருகில் சென்றார். அப்போது வேறொரு பெண்மணி மேர்வான் ஸேட்டைக் காண்பித்து குல்மாயிடம், “அவர் யார் என்று உங்களுக்குத் தெரியுமா?” குல்மாய் தெரியாது எனத் தலையசைக்கவே…

“உங்களுக்கு, பூனாவில் வாழும் ஷெரியார் ஈரானியைத் தெரியுமா?” எனக் கேட்டதும் குல்மாய், “ஆமாம், ஷெரியார் எனது தந்தைக்கு உறவு, எனது திருமணத்திற்கும் வந்திருந்தார்” என்றார்.

“அவர் ஷெரியாரின் இரண்டாவது மகன். அருகில் இருப்பவர் அவர் நண்பர் பெஹராம்ஜி. இருவரும் ஒரு மதுபானக்கடையின் பங்குதாரர்கள். மஹாராஜின் நெருங்கிய பக்தர்கள்” என்றார் அந்தப் பெண்மணி.

அதைக் கேட்ட குல்மாய், “நான் கேள்விப்பட்டேன், ஷெரியாரின் ஒரு மகன் பைத்தியமென்று. அது இவர்தானா?”

“ஆமாம். அவரேதான். அவர் பாடுவதை நீங்கள் கேட்டால் ஆச்சரியப்படுவீர்கள். மிக அருமையான குரல்.”

“நான் அவர் பாடுவதைக் கேட்க வேண்டும். நாம் அவரைப் பிறகு பாடச்சொல்லிக் கேட்கலாம்” என குல்மாய் கூறினார்.

மேர்வான் ஸேட், ஸாக்கோரியில் குல்மாயின் குடும்ப உறவினர்களுடன், சத்குரு உபாஸனி மஹாராஜை சந்தித்தது, மஹாராஜின் கடுமையான தவம் மற்றும் உண்ணாமல் உபவாசம் கடைப்பிடிப்பது குறித்து உரையாடிக் கொண்டிருந்தார்.

அவ்வேளையில், மஹாராஜ் அவர்களை உள்ளே அழைக்க, அனைவரும் குடிலுக்குள் நுழைந்தனர். பணிவுடன் பாதங்களைத் தொட்டு வணங்க, மஹாராஜ், ஊர், குடும்பங்களைப் பற்றி விசாரித்தார். அவர்களின் பதிலைக்கேட்டு மஹாராஜ், “குடும்ப வாழ்க்கை அனைத்தும் பைத்தியக்காரத்தனம்! அடுத்தடுத்து, ஆயுட்காலம் முழுவதும் இப்படி வீணாகிறது. கோதுமை வாங்க வேண்டி ஒருவன் துணிக்கடைக்குச் சென்றால்

என்ன பலன்? அதுபோல், என்னிடம் உள்ளதைத்தான் நீங்கள் அடைய முடியும்" என்றார்.

உபாஸனி மஹாராஜ் ஒவ்வொருவரையும் தனித்தனியாக அழைத்து அவரவர் பிரச்சினைகளை விசாரித்தார். குல்மாய் உள்ளே சென்றதும், மஹாராஜ் வெறும் கோணிப்பையால் உடை அணிந்திருந்ததைப் பார்த்து ஆச்சரியமடைந்தார், ஏனெனில் அதே போன்ற ஒருவரை, சில நாட்களுக்கு முன்பு, தெளிவாகத் தனது கனவில் கண்டார். கடவுள், ஆன்மீகப் பாதை, ஒரு சத்குருவின் இன்றியமையா தேவை போன்றவற்றைப் பற்றி மஹாராஜ் விளக்கியதை, குல்மாய் ஆழ்ந்த கவனத்துடன் கேட்டார். குல்மாய் மனதில் மஹாராஜ் ஒரு தனி இடத்தைப் பிடித்தார். அவர் அருகிலிருப்பதை முழுமனதாக விரும்பினார். ஏதோ நீண்ட காலமாக இழந்த ஒரு நண்பரை மீண்டும் அடையப்பெற்றது போல் ஓர் உணர்வு.

குல்மாய் உடனே, "மஹாராஜ், வேறு எங்கும் இல்லாதது உங்களிடத்தில் இருப்பதை நான் உணர்கிறேன். அதுவே எனக்கு வேண்டும்." என்றார்.

மஹாராஜ், அவர்களை மதிய உணவுக்குப் பிறகு சற்று ஓய்வெடுத்து, மறுபடியும் வருமாறு கூறி அனுப்பினார். குடிசையிலிருந்து வெளியே வந்ததும், அவர்களுக்காகக் காத்திருந்த மேர்வான் ஸேட், அனைவருக்கும் உணவு பொட்டலங்களை வழங்கி, உண்டு, ஓய்வெடுத்த பின்பு மறுபடியும் மஹாராஜிடம் அழைத்துச் செல்வதாகக் கூறினார்.

மேர்வான் ஸேட், மதிய உணவுக்குப் பிறகு, ஹஸ்ரத் பாபாஜான், ஷிர்டி சாய் பாபா இருவரையும் எப்படி சந்தித்தார் என்பதை விளக்கினார். குல்மாயும், அவர் உறவினர்களும் மேர்வான் ஸேட்டிடம், "நீங்கள் அருமையாகப் பாடுவீர்கள் எனக் கேள்விப்பட்டோம். எங்களுக்காக ஒரு பாட்டு பாடுங்கள்" என்று கேட்டுக் கொண்டதும், மேர்வான் ஸேட் இணக்கமாகப் பேச்சை மாற்றி அவர்களை மஹாராஜின் குடிலை நோக்கி அழைத்துச் சென்று, அரசமரத்தின் கீழ் அமர வைத்தார்.

உபாஸனி மஹாராஜ் ஒவ்வொருவரையும் தனித்தனியாக உள்ளே அழைத்தார். குல்மாய் இறுதியாகச் சென்றார். நுழைவாயிலை நெருங்கியதும், ஒரு வகையான முரண்பட்ட உணர்வுகளுக்கு ஆட்பட்டார். தனது மனதிலிருப்பதை மஹாராஜிடம் எப்படி எடுத்துச் சொல்வது எனத் திகைத்தார். வாசலருகில் நின்றுகொண்டிருந்த மேர்வான் ஸேட், குல்மாயிடம், '**அவர் மனதிலும், இதயத்திலும் இருப்பதை மஹாராஜிடம் அப்படியே கொட்டிவிடுமாறு**' வற்புறுத்தினார். குல்மாய், மேர்வான் ஸேட் சொன்னதைக் கேட்டு வியப்படைந்தார். தனது மனதில் அலைமோதும் எண்ணங்கள் மேர்வான் ஸேட்டுக்கு எப்படித் தெரியும் என நினைத்தார். உள்ளே நுழைந்ததும் என்ன சொல்வது எனத் தெரியாமல் திணறினார். சொல்ல முயன்றபோது அழுது கண்ணீர் சிந்தினார்.



ஹஸ்ரத் பாபாஜான்

குல்மாய், அவரது குடும்பத்தில் சந்தோஷம் இல்லாமல் இருந்ததோடு, சமூக புறக்கணிப்பையும் எதிர்த்துப் போராட வேண்டிய சூழ்நிலையில், மேலும் பல சிரமங்களை சந்தித்தார். உடலில் இருந்த கொப்புளங்கள், ஏதாவது நோயாக மாறிவிடுமோ என்று அஞ்சினார். அதனை உபாஸனி மஹாராஜிடம் கூற நினைத்தவர், தயக்கத்தில் குழம்பினார். மஹாராஜ் தலையிலிருந்து கால்வரை குல்மாயை உற்று நோக்கியபோது, தனது நோயைக் குறித்த விபரத்தைத் தெரிவித்தார். உடனே உபாஸனி இது ஒன்றும் பெரிதல்ல, சரியாகிவிடும் என்று உறுதியளித்து, அவரது முக்கிய பெண் சீடரான துர்காபாயை அழைத்து, “இந்தப் பெண்மணி பெருந்துயரத்தில் உள்ளார். அவர் குடும்பத்தில் சந்தோஷம் இல்லாமல் இருப்பதால், உடல் நோயால் அவதிப்படுகிறார். எனக்கு எல்லாமே தெரியுமென்று நீங்கள் அவருக்கு எடுத்துக் கூறுங்கள். எனவே இப்போது அவர் என்னிடம் எதுவும் சொல்லத் தேவையில்லை” என்றார்.

குல்மாய், உடனே மஹாராஜின் பாதங்களில் விழுந்து, அவரது உடல், மனம், சந்ததி, சொத்து, சுகம் அனைத்தையும் அர்ப்பணம் செய்வதாகவும், அவற்றை ஏற்றுக் கொள்ளும் படியும் வேண்டினார். கண்களில் நீர் பெருக, வாழ்வில் எதிர்கொண்ட சிரமங்களை எடுத்துரைத்து, இறுதியாக ஸாக்கோரியில் நிரந்தரமாக வாழ விரும்புவதாக முறையிட்டார்

குல்மாய் அவ்வாறு கூறியதும், மஹாராஜ் நீங்கள் அப்படிச் செய்ய முடியாது என்றார். “உலகப்பற்று இல்லாதவர்கள் சாதாரணமாக, பூஜை, புனஸ்காரங்களைக் கடைப்பிடிப்பது வழக்கம். இது ஒன்றும் அவர்களுக்குப் புதிதல்ல, சுலபமாகச் செய்ய முடியும். ஆனால் உலகில் இருந்து கொண்டு, குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டுக் கொண்டே, இறைவனை நாடி, முற்றிலும் அவனையே நம்பி இருப்பதுதான் மிகச்சிறந்த வழிபாடாகும்.

“இறை பற்றுக்கும், உலக வாழ்வின் பிணைப்புக்கும் இடையேயான சிரமங்கள், இறைவன் மீதான பேரார்வம் மற்றும் குடும்ப கடமைகளைக் கடைப்பிடித்து சமநிலை படுத்துவது, கர்மவினைகளில் எண்ணெய் போலப் பட்டும் படாமலும் இருப்பது - இவை அனைத்தும் உயர்ந்த ஆன்மீக நோக்கமாகிய இறைநிலையை அடையப் பேருதவியாக இருக்கும்.

“உங்களுக்கும் எனக்குமிடையே முற்காலத் தொடர்புகள் உள்ளன. நீங்கள், நமது முற்பிறவிகளில், ஆன்மீக ரீதியில் ஆழமான தொடர்புள்ளவர். வெகுகாலமாக எனது பார்வையில் நீங்கள் இருக்கிறீர்கள். இறுதியாக என்னிடம் வந்துவிட்டீர்கள்.”

மறைமுகமாக மஹாராஜ் மேலும் ஒன்றைக் கூறினார், “உங்கள் ஸொராஸ்டர் (மேர்வான் ஸேட்டைக் குறிப்பிட்டு) இப்போது இங்கே இருக்கிறார். நான் இந்து குடும்பத்தில் பிறந்தாலும், ஸொராஸ்டருடன் மிகவும் நெருக்கமானவன். பார்சி இனத்தைச் சார்ந்தவர்கள் பெருமளவில் என்னிடம் வருவார்கள்.”

உபாஸனி மஹாராஜ் தனது அறிவுரையைத் தொடர்ந்தார்:

“நான் கூறுவதை கவனமாகக் கேளுங்கள்! உங்கள் குடும்பம் மற்றும் கணவரிடம் திரும்பிச் செல்லுங்கள். அஹமதுநகர் மிகவும் அருகாமையில் உள்ளது. நீங்கள் விரும்பினால் உடனடியாக இங்கு வரலாம். தனியாகவும் வரமுடியும். அடிக்கடி என்னைப் பார்க்கவும் வரலாம். இருந்தாலும், இந்தப் பழமையான இடத்தில், இப்போது இருக்கும் உடல்நிலையில், நீண்ட காலம் இங்கே தங்கியிருப்பது நல்லதல்ல. எதை எண்ணியும் கவலைப்பட வேண்டாம். என் அருள் பார்வையில் நீங்கள் எப்பொழுதும் இருப்பீர்கள்.”

குல்மாய், மஹாராஜின் அறிவுரைகளை ஏற்றுக் கொண்டார். மஹாராஜை நன்றியுடன் வணங்கிவிட்டு வெளியே வந்ததும், அரச மரத்தின் கீழ் ஒரு கூட்டம், மேர்வான் ஸேட் கூறுவதை கவனித்துக் கொண்டிருந்தது. ஷிர்டி சாய் பாபா, ஹஸ்ரத் பாபாஜான் மற்றும் ஸாக்கோரியில் ராம் நவமி கொண்டாடிய கதைகளை விளக்கிக் கொண்டிருந்தார். குல்மாயும் அருகில் அமர்ந்து கவனித்தார். சற்று நேரத்தில் மஹாராஜின் குடிலில் நடந்த ஆரத்தியில் அனைவரும் கலந்து கொண்டனர். அங்கே சாய் பாபா, உபாஸனி ஆகியோருடைய புகைப்படங்கள் சுவரை அலங்கரித்தன.

இரவு நெருங்கவே, வந்தவர்கள் அனைவரும் திரும்பிச் செல்ல ஆயத்தமாயினர். மேர்வான் ஸேட்டும், பெஹராம்ஜியும் உடன் சென்றனர். குல்மாயை அழைத்து மேர்வான் ஸேட் புத்தகம் ஒன்றைக் கொடுத்து, வீட்டிற்குச் சென்று படிக்குமாறு கூறினார்.

ரயிலில் பயணம் செய்யும் வேளையில், மேர்வான் ஸேட் அவருடைய இருக்கையில் அமர்ந்த வண்ணம் அருமையாக பாடல் ஒன்றை தனது இனிய குரலில் பாடினார். இவ்வாறு, குல்மாய் மற்றும் உறவினர்களின் வேண்டுகோளை நிறைவு செய்து, வழியில் பேலாபூர் (BELAPUR) என்ற இடத்தில், நாக்பூர் (NAGPUR) செல்வதாகக் கூறி விடைபெற்றார்.

சில நாட்களுக்குப் பிறகு குல்மாய் மறுபடியும் உபாஸனி மஹாராஜை சந்திக்க வந்தபோது மஹாராஜ், “சாய் பாபாவின் மறைவுக்குப் பின்னர், அவருடைய பக்தர்கள் - முஸ்லிம், இந்து அனைவரும் - என்னிடம் வந்து விட்டனர். ஆன்மீக ரீதியில் அவர்களை கவனிக்க வேண்டியது எனது பொறுப்பாகும்” என்றார்.

”பல ஸொராஸ்டிரியர்களும் வருவதுண்டு. பூனாவில் வாழும் பலர் எனக்காக ஒரு கோவிலையும் இங்கே எழுப்பியுள்ளனர். மேர்வான் ஸேட்டும் அவர்களில் ஒருவர்” என்று கூறினார்.

அப்போது, மேர்வான் ஸேட் கிணற்றருகில் தனது பூனா நண்பர் சதாஷிவ் பாட்டீலுடன் நின்று கொண்டிருந்தார். குல்மாய் அருகில் வந்ததும், மேர்வான் ஸேட் அவரிடம் ‘**எப்படி இருக்கிறீர்கள்**’ என்று விசாரித்து, சதாஷிவிடம், “**என்ன இனிமையான குணம் இவர்களுக்கு! எனக்கும் ஒரு தாயார் இருக்கிறார்கள். இவர் எனது தாயாக இருந்திருந்தால் எனது வாழ்க்கை எவ்வளவு வித்தியாசமாக இருந்திருக்கும்!**” என்று கூறியதைக்

கேட்ட குல்மாய், மேர்வான் ஸேட்டை அன்புடன் அரவணைத்தார். அன்று மாலையில் குல்மாய் அஹமதுநகர் திரும்பிச் சென்றார்.

குல்மாய், ஸாக்கோரியில் நிரந்தரமாக வாழ முடியும் என்ற நம்பிக்கையை இழக்கவில்லை. அடுத்த சில ஆண்டுகள், அடிக்கடி ஸாக்கோரிக்குச் சென்று உபாஸனி மஹாராஜை சந்தித்து வந்தார்.

இவ்வேளைகளில், குல்மாய் ஸாக்கோரியில் மேர்வான் ஸேட்டையும் சந்திக்கத் தவறியதில்லை. ஒவ்வொரு சந்திப்பிலும், மேர்வான் ஸேட் தமது இறை தன்மையை குல்மாய்க்கு வெளிப்படுத்தி அவரது இதயத்தை வென்றார். மேர்வான் ஸேட், சத்குரு உபாஸனி மஹாராஜின் ஆன்மீக வாரிசு என்ற நம்பிக்கை குல்மாயின் மனதில் உதயமானது.

ஒரு முறை, குல்மாய் இரண்டு வாரங்கள் ஸாக்கோரியில் மஹாராஜின் கண்காணிப்பில் இருந்தார். அப்போது, கடுமையான சிரமங்கள் மற்றும் பிராயச்சித்தங்களை குல்மாய் தாங்க வேண்டிய சூழ்நிலை உருவானது. மஹாராஜ் சில நேரங்களில் கடுமையாக குல்மாயின் கன்னங்களில் அறையவும் செய்தார். இந்தக் கடினமான சூழ்நிலையை, மேர்வான் ஸேட், விளக்கிக் கூறும் வேளையில், “**சத்குரு உபாஸனி மஹாராஜின் அருள் நிறைந்த பார்வையில், சோதனைகளை சிறப்பாகத் தாங்கிக்கொள்ளும் முதல் பெண்மணியான நீங்கள் உண்மையிலேயே மிகப்பெரிய அதிர்ஷ்டசாலி. சத்குருக்கள் இவ்வண்ணம் அறைவது ஆசீர்வாதமாகும். ஹஸ்ரத் பாபாஜான் அவருடைய பக்தர்களிடம் இவ்வாறு நடந்து கொள்வதை நான் பார்த்திருக்கிறேன்**” என்றார்.

ஸாக்கோரியிலிருந்து குல்மாய் திரும்பிச் செல்வதற்கு முன்பு மஹாராஜ் கூறினார்: “மக்கள் பெரிய, அழகான கோயில்கள் இருக்கும் புனித ஸ்தலங்களை விரும்புவது வழக்கம். எப்பொழுதும் முக்கியமான, செல்வாக்கு உள்ளவர்கள் அங்கே கூடுகின்றனர். சாதாரணமாக இதுதான் இதுபோன்ற இடங்களில் நாம் காணும் காட்சி. ஆனால், உண்மையான அன்பும், பக்தியும் நிறைந்த இதயத்துடன் இந்த வறட்சியான இடத்திற்கு வந்து, முழு மனதுடன் ஒரு குருவின் சேவையில் ஈடுபடுவது, மிகச் சிறப்பு வாய்ந்தது. உத்வாடாவில் என்ன இருக்கிறது? நெருப்புதான், ஆனால் இங்கே இதயத்தில் கொழுந்துவிட்டு எரியும் நெருப்பு உள்ளது. உண்மையான புனித யாத்திரை என்பது ஒரு சத்குருவின் பாதங்களைத் தொழுவதாகும்.”

1919ஆம் வருடம், ஸாக்கோரியில் மேர்வான் ஸேட் பெரியதொரு கோயிலை எழுப்பினார். குல்மாயும் அதற்கு வேண்டிய நிதி உதவிகளை வழங்கினார்.

இவ்வாறு, மேர்வான் ஸேட்டுடன் குல்மாயின் நட்பு ஒவ்வொரு சந்திப்பிலும் அதிகமாகி, மிகவும் ஆழமாக வேரூன்றியது. நாளடைவில் கணவர் கான் ஸாஹேப் (KHAN SAHEB), இரண்டு மகன்கள் ருஸ்தம் (RUSTOM), ஆதி (ADI),

மகள் டாலி (DOLLY) அனைவரும் அவர்களின் வாழ்க்கை, சொத்து சுகங்கள் அனைத்தையும் மேர்வான் ஸேட்டுக்கு அர்ப்பணம் செய்தனர்.

குல்மாய், மேர்வானின் ஆன்மீகத் தாயார் என்றழைக்கப்பட்டார்.

மேர்வான் ஸேட் இறைநிலையை அடைந்து, சாதாரண உலக உணர்வை திரும்பப் பெறும் வேளையில், உடன் பிறந்த தம்பி ஜால் (JAL) மேர்வான் ஸேட்டின் இறைநிலையையும், ஆன்மீக ஆற்றலையும் நம்பாமல், 'மெரோக் ஒரு பைத்தியம்' என்று சொல்லி வந்தார். அதே வேளையில் ஜால், பூனாவிலிருந்து சற்று தொலைவில் அமைந்த, ஹூப்ளி (HOOBLY) என்ற கிராமத்தில் வாழ்ந்து வந்த ஸித்தருத் ஸ்வாமி (SIDHARUTH SWAMY) என்பவரை அவ்வப்போது சென்று தரிசனம் செய்து வந்தார். ஆனால், மேர்வான் ஸேட்டை கடவுள், ஆன்மீக ஞானி என நம்பியவர்களை ஏளனம் செய்தார்.

ஒரு நாள், மேர்வான் ஸேட், தம்பி ஜாலை அழைத்து அவனது கண்களில் உற்று நோக்கி, "**தம்பி! நான் கடவுள்**" என்றதும், ஜால் விழுந்து விழுந்து சிரித்துக்கொண்டே, ஏளனமாக, "நீயா கடவுள்? மெரோக்! நீ வேறுயாருமல்ல, ஒரு பைத்தியம்! எப்படி ஒரு மனிதன் கடவுளாக முடியும்?" என்று கேட்டார்.

"**என்னை நம்பு, என் அருமை தம்பி! நான் உண்மையிலே கடவுள்**" மேர்வான் ஸேட் ஆணித்தரமாகத் தெரிவித்தார்.

ஜால், சற்றும் வெட்கமில்லாமல் பதிலளித்தார், "இது முட்டாள்தனம். நீ சொல்லும் ஒரு வார்த்தையைக் கூட நான் நம்பமாட்டேன், மெரோக்!"

அப்போது, ஜால் சவால் விட்டார், "மெரோக்! நீ கடவுளாக இருந்தால் சக்தி மிக்கவராக இருக்க வேண்டும். நீ கடவுள் என்பதை எனக்கு நிரூபித்துக் காட்டு!" மேர்வான் ஸேட் சவாலை ஏற்றுக் கொண்டு, "**நான், உனது உள்ளங்கையில், எரியும் கரித்துண்டை வைப்பேன், ஆனால் நீ எந்த வலியையும் உணரமாட்டாய். இதற்கு உனது சம்மதம் தேவை**" என்றார்.

ஜால், திமிராக பதிலளித்தார், "எனக்கு சம்மதம், நீ எப்படிப்பட்ட கடவுள் என்பதை நான் பார்க்கிறேன்" எனக் கூறி, "எனது கை எரிந்து, வலியெடுத்தால், உன்னுடைய உண்மையான நிறம், மாயத்தோற்றம் ஒரேயடியாக வெளிவந்துவிடும். அதற்குப் பிறகு 'நான் கடவுள்' எனும் உனது புலம்பல்களைக் கேட்க வேண்டிய தேவை இராது."

மேர்வான் ஸேட் புன்முறுவல் செய்துகொண்டே வீட்டின் உள்ளே சென்று, சமையலறையிலிருந்து எரிந்து கொண்டிருந்த கரித்துண்டை எடுத்து வந்து ஜாலின் உள்ளங்கையில் வைத்ததும், தோல் எரிய ஆரம்பித்தது. ஆனால் ஜால் எந்த வலியையும் உணரவில்லை. அவன் அதை ஆச்சரியத்தில் உற்றுநோக்கிக் கொண்டிருந்தான்.

வீட்டின் முன்பக்கம் நின்றுகொண்டிருந்த தாயார் ஷிரீன், ஏதோ தீய்ந்த வாசனையை நுகர்ந்து விரைந்தோடி வந்தார். அங்கு நிகழ்ந்த காட்சியைக் கண்டுப் பதறினார், "இருவரும் பைத்தியமாகி விட்டீர்களா? என்ன செய்கிறீர்கள்

என்று உங்களுக்குத் தெரிகிறதா?” என்று மேர்வான் ஸேட்டைத் திட்டிவிட்டு, எரியும் கரித்துண்டை எடுக்க முயன்றார், முடியவில்லை. கரித்துண்டு, கையோடு ஒட்டிக்கொண்டிருந்தது. சிரமப்பட்டு எடுத்தபோது உள்ளங்கை சதை முழுவதும் எரிந்துவிட்டது. ஆழமான தீக்காயம். தாயார் ஷிரீன் அருகில் வந்ததும், ஜால் வலியை உணர்ந்து கதறினார். கடுமையான வலியினால் ஜால் மயக்கமானார்.

மேர்வான் ஸேட், தம்பியுடன் மருத்துவமனைக்கு விரைந்தார். பலநாட்கள் ஜால் அங்கே இருக்க வேண்டியதாயிற்று. மேர்வான் ஸேட் அருகிலிருந்து அன்புடன் கவனித்த விதம் தம்பியின் இதயத்தை நெகிழச் செய்தது. இறுதியில் ஜால் ஒப்புக்கொண்டார்: “மெரோக்! என்னுடைய அகந்தையை சுக்குநூறாக்கி விட்டாய்! நீ உண்மையிலே கடவுள்! நான் ஒரு முட்டாள், உன்னை சந்தேகப்பட்டேன். என்னை மன்னித்து விடு அண்ணா!” ஆச்சரியமான ஒரு சம்பவம் என்னவெனில், மேர்வான் ஸேட் அருகில் இருந்தபோது, ஜால் எந்த வலியையும் உணரவில்லை. அவர் அங்கிருந்து நகர்ந்து வெளியே சென்ற வேளையில் பயங்கரமான வலியை அனுபவித்தார்.

ஜால் குணமடைந்து வீட்டிற்கு வந்த பிறகு, மேர்வான் ஸேட் ஒரு நாள் அங்கு வந்து தம்பியின் தைரியத்தையும், எதையும் தாங்கும் சக்தியையும் பெரிதும் பாராட்டினார். அவர் உடனே அவனை அன்புடன் தழுவி, “**ஜால்! நீ இந்த உலகத்தைத் துறந்து, நிரந்தரமாக என்னுடன் வருவாயா?**” என்று கேட்டார். ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு ஜால், அவருடைய விருப்பத்திற்கு இணங்கி, அவரையே பின்பற்றத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார். ஜால், கையில் காயம் குணமடைந்த பின்பு, புதிதாக மேர்வான் ஸேட்டின் தொடர்பில் வருபவர்களிடம், அவரது காயத்தைக் காண்பித்து, நடந்ததை விளக்கி “என்னுடைய சகோதரன் உண்மையிலே கடவுளின் அவதாரம்” என ஆணித்தரமாக எடுத்துரைத்தார்.

1919 நவம்பர் மாதத்தில், சத்குரு உபாஸனி மஹாராஜ், மேர்வான் ஸேட்டின் நண்பர் சதாஷிவ் பாட்டீலைத் தொலைத்தந்தி மூலம் தொடர்பு கொண்டு, மேர்வானோடு ஸாக்கோரிக்கு வருமாறும், அங்கிருந்து மூவரும் உடனே பனாரஸ் (BENARES) நகருக்குச் செல்ல இருப்பதையும் தெரிவித்தார்.

சதாஷிவ் ஸாக்கோரிக்குச் சென்று மஹாராஜிடம் பனாரஸ் செல்வதன் நோக்கம் என்ன என வினவியதற்கு மஹாராஜ், அங்கே, ஷிர்டி சாய் பாபாவின் பக்தர்கள் பெருமளவில் ஒன்று திரள இருப்பதாகவும், சாய் பாபாவே அங்கு வந்து பங்கெடுக்கப் போவதாகவும் தெரிவித்தார்.

சதாஷிவ் ஆச்சரியத்தில் வினவினார், “சாய் பாபா எப்படிப் பங்கெடுக்க முடியும்? அவர்தான் ஓராண்டுக்கு முன்பே தன்னுடலைத் துறந்துவிட்டாரே! உபாஸனி மஹாராஜ் அதற்கு விளக்கம் எதுவும் வழங்காமல், உடனே அங்கிருந்து வேறொரு ரயிலில் தனியாகப் புறப்பட்டுச் சென்றார். பனாரஸில் மூவரும் மஹாதேவ் கோவிலில் தங்கியிருந்தனர். மிகப் பெரிய அக்னி குண்டம்

வளர்ப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பல்லாயிரக்கணக்கான சாய் பாபா பக்தர்களும், மஹாராஜைப் பின்பற்றுபவர்கள் ஏறக்குறைய எழுநூறு பேரும் அங்கு வந்தனர். யாகம் வளர்க்க 101 இந்து பண்டிதர்கள்; மேலும் பிராமணர்கள் சிறப்பு உணவுகளைத் தயார் செய்தனர். மேர்வான் ஸேட், சதாஷிவ் இருவரும் அதை மேற்பார்வையிட்டனர். பெரியதொரு பந்தல் அமைத்து அதன் நடுவில் யாகம் வளர்க்கப்பட்டது. ஷிர்டி சாய் பாபாவின் மிகப்பெரிய சித்திரம் ஒன்றை வைத்து, மலர் மாலைகளால் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. இந்த ஆச்சரியமான காட்சியைக் கண்ட சதாஷிவ், மஹாராஜ் 'சாய் பாபா அதில் பங்கெடுக்கப் போவதாகவும்' கூறியதன் அர்த்தத்தைப் புரிந்துகொண்டார்.

இவ்வாறு தொடர்ந்து 11 நாட்கள் யாகம் நடைபெற்றது. யாகத்தின் இறுதியில் 12ஆம் நாள், அங்கு வந்திருந்த பிராமணர்களுக்கு மிகச் சிறப்பான உணவு வழங்கப்பட்டது. அப்போது அங்கே ஏறக்குறைய 12 ஆயிரம் பிராமணர்கள் ஒன்று திரண்டனர். அனைவருக்கும் உணவு தயார் செய்யப்பட்டிருந்தது. ஆனால் அங்கு வந்த பிராமணர்கள் உணவை உண்ண பந்தலில் அமர்ந்தபோது, சாய் பாபாவின் பெரிய புகைப்படம் அங்கே இருப்பதைக் கண்டு, கூச்சலும் குழப்பமும் செய்தனர்: "நாங்கள் இந்த முஸ்லிம் குருவின் விருந்தில் கலந்து கொள்ள முடியாது. சாய் பாபா ஒரு முஸல்மான்!"

உபாஸனி மஹாராஜ், அவர்களுக்கு எடுத்துக் கூறினார், "நீங்கள் மத பாரபட்ச சிந்தனைகளைக் களைந்து, உணவில் பங்கெடுத்துக் கொள்ளுங்கள்… என்னை நம்புங்கள், சாய் பாபா மத வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டவர். அவர் பிராமணர்களாகிய உங்களுக்கும், முஸ்லிம்களுக்கும் சொந்தமானவர்." உபாஸனி மஹாராஜ் கூறியதை அந்தப் பிராமணர்கள் கேட்க மறுத்துவிட்டனர். யாகத்தை நிகழ்த்திய பண்டிதர்களும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

பனாரஸில் நிலவிய பதட்டமான சூழ்நிலையில் உபாஸனி மஹாராஜ் பண்டிதர்களிடம் உறுதியளித்தார்: "நான் உங்களுக்கு, முதலில் கூறிய ஐந்து ரூபாய்க்கு பதிலாக, பதினைந்து ரூபாய் தருகிறேன். இப்போது உணவில் பங்கெடுத்து, மகிழ்ச்சியாக இருங்கள்."

இருந்தபோதும், அனைத்து பிராமணர்களும் மறுப்புத் தெரிவித்து, "முதலில் சாய் பாபாவின் படத்தை அப்புறப்படுத்துங்கள்! யாகத்தை ஏன் அவருக்கு அர்ப்பணிக்க வேண்டும்? இந்தக் கோயிலில் சாய் பாபாவை ஏன் கௌரவிக்க வேண்டும்? அவருடைய சித்திரத்தை முதலில் அகற்றுங்கள். அப்போதுதான் நாங்கள் விருந்தில் பங்கெடுப்போம். இல்லையேல் இல்லை" என்று திட்டவட்டமாகத் தெரிவித்தனர்.

இந்த அமளி இரண்டு மணிநேரம் தொடர்ந்தது. உபாஸனி மஹாராஜ் எவ்வளவோ எடுத்துக் கூறியும் பிராமணர்கள் இணங்கியபாடில்லை. மஹாராஜ், சாய் பாபாவின் சித்திரத்தை அகற்ற மறுத்துவிட்டார்.

கடைசியில், உபாஸனி அவருடைய பக்தர்கள் அனைவரையும் அழைத்து, கங்கை நதிக்கரைக்குச் சென்று, மத்தளங்கள் முழங்கச் செய்து,

அங்கிருந்த ஏழைகளைத் திரட்டும்படி உத்தரவிட்டார். மேர்வான் ஸேட், சதாஷிவ் மற்றும் நூற்றுக்கணக்கான உபாஸனி பக்தர்கள் ஒன்றிணைந்து, அங்கு வந்த ஏழைகளுக்கு உணவைத் தாராளமாக அள்ளி வழங்கினர். பதினைந்தாயிரம் மக்களுக்கும் மேலானவர்கள் உண்ட பின்னரும் ஏராளமான உணவு மிஞ்சியது.

மஹாராஜ் உடனே, "எஞ்சிய உணவை, கங்கை நதியில் வீசி எறியுங்கள்" என்று உத்தரவிட்டார். வாளி வாளியாக உணவு கங்கை நதியில் கொட்டப்படுவதைக் கண்ட இந்து பண்டிதர்கள் அதிர்ச்சியடைந்தனர். அனைவரும் மஹாராஜை அணுகி மன்னிப்புக் கோரி, "மஹாராஜ், நாங்கள் உண்ணத் தயாராக இருக்கிறோம்! இப்படி உணவை வீணடிக்காதீர்கள்" என்று வேண்டினர்.

மஹாராஜ் கோபத்தில் பதிலளித்தார், "நீங்கள் உங்களை காசியின் பண்டிதர்கள் என்கிறீர்கள்! உங்களை நான் என்ன சொல்ல? காசியில் உங்களுக்கு எதுவுமில்லை! உணவும் எதுவும் மீதமில்லை! நான் உங்களை மன்னிக்கிறேன்! ஆனால் இந்த விருந்தில் நீங்கள் பங்கெடுக்க முடியாது. நீங்கள் முஸ்லிம் என்றழைக்கும் சாய் பாபா தான் உண்மையான பண்டிதர்." மஹாராஜ் கோபத்தில் பண்டிதர்களைத் திருப்பி அனுப்பி வைத்தார். அதே நேரம் தன்னுடைய பக்தர்களுக்குப் பிரியாவிடை அளித்து அனுப்பினார்.

சத்குரு உபாஸனி மஹாராஜ், அதற்குப் பிறகு, மேர்வான் ஸேட், சதாஷிவ் இருவரையும் பூரி, ஜகன்நாத் (PURI JAGANNATH) கோவில் சென்று, தரிசனம் செய்து வருமாறு கூறிவிட்டு, ஸாக்கோரிக்குத் திரும்பிச் சென்றார்.

பூரி, இந்தியாவின் ஒரு முக்கியமான புனிதஸ்தலம்; கிழக்கிந்திய கடற்கரை ஓரத்தில் அமைந்துள்ளது. இங்கே சிறப்பு வாய்ந்த ஜகன்நாத் கோவில் உள்ளது - புனித யாத்திரைக்குப் பிரசித்திபெற்ற இடம் - அப்போது இந்துக்கள் மட்டுமே அனுமதிக்கப் பட்டனர்.

பூரிக்கு வந்ததும், மேர்வான் ஸேட்டும், சதாஷிவ் பாட்டீலும் கோவில் தர்மசாலைக்கு வந்தனர். வழக்கத்திற்கு மாறாக மேர்வான் ஸேட் கால்சட்டையும், தலையில் கைக்குட்டையும் அணிந்திருந்ததைப் பார்த்த பண்டிதர் சதாஷிவிடம், "யார் இந்தப் பையன்? இந்து மதத்தைச் சார்ந்தவராகத் தெரியவில்லையே!" என்று கேட்டதும், சதாஷிவ் தைரியமாக பதிலளித்தார், "அவர் பெயர் 'ஜகத் நாராயண்', இவரும் இந்துதான், என்னுடன் பனாரஸிலிருந்து வருகிறார். நாங்கள் புனித ஸ்தலங்களெல்லாம் சென்று வருகிறோம்." பண்டிதர் வேறு எந்தக் கேள்வியும் எழுப்பாமல், பெயர்களைப் பதிவு செய்து அனுமதித்தார். ஜகத் நாராயண் என்றால் அகில உலகத்திற்கும் இறைவன் என்று அர்த்தம். வந்தவர் யார் என்று பண்டிதருக்கு என்ன தெரியும் - அவர் உண்மையிலேயே 'ஜகத் நாராயணன் - கடவுள்!' அவருடைய தோற்றமே அவரை இந்து அல்ல என்று அடையாளம் காட்டும் நிலையில், அப்பாவி பண்டிதர் மறுக்கவில்லை. கடவுள் அங்கே வந்து தங்கி, பண்டிதர் அளித்த

உணவை உண்டது, பண்டிதரின் பாக்கியமே என்று சொல்லவேண்டும். கடற்கரைக்குச் சென்று, நீராடி, கோவில் தரிசனம் செய்து, கடைசியில் பண்டிதர்களுக்குத் தாராளமாகத் தட்சிணையும் அளித்தனர். அடுத்த நாள் கரக்பூருக்கு (KHARAGPUR) ரயிலில் பயணம் செய்தனர்.

கரக்பூர் நகரில் மேர்வான் ஸேட், சதாஷிவ் இருவரும் உபாஸனி மஹாராஜின் பக்தர்களை சந்தித்தனர். மேலும் மஹாராஜின் சீடர்கள் வாழும் எளிய குடிசைகளுக்கு விஜயம் செய்த பின்னர் அங்கிருந்து புறப்பட்டு நாக்பூர் (NAGPUR) நகருக்கு வந்தனர்.

நாக்பூரில் இருந்தபோது, மேர்வான் ஸேட், சதாஷிவ் பாட்டீலுக்கு இவ்வாறு விளக்கிக் கூறினார்: "**ஹஸ்ரத் தாஜுதீன் பாபாவுடனும் எனக்கு நெருங்கிய தொடர்பு உண்டு. உபாஸனி மஹாராஜின் மூன்று அல்லது நான்கு சீடர்களுடன், நீங்கள் வாக்கி ஷரீஃப் சென்று, தாஜுதீன் பாபாவை சந்திக்க விரும்புகிறேன். செல்லும்போது, பூவும் பழங்களும் எடுத்துச் செல்லுங்கள். என்னுடைய வணக்கத்தை அவருக்குத் தெரிவியுங்கள். நான் அங்குச் செல்லமுடியாத நிலை.**" எதுவாகிலும், சதாஷிவ் மற்றும் நண்பர்கள் வாக்கி ஷரீஃப் சென்றபோது, தாஜுதீன் பாபா அங்கு இல்லை. ஒருமணி நேரத்திற்கு முன்னர் அவர் வெளியே சென்றதை அறிந்து, ஏமாற்றத்தில் திரும்பி வந்து மேர்வான் ஸேட்டிடம் நடந்ததை விளக்கினர்.

அடுத்த நாள், மேர்வான் ஸேட் அவர்களை மறுபடியும் செல்லுமாறு வற்புறுத்தினார், "**நான் கூறுகிறேன், நீங்கள் தாஜூதீன் பாபாவை நிச்சயமாக சந்திக்க வேண்டும். உங்களை நான் இன்றும் வாக்கி ஷரீஃப் அனுப்பி வைக்கிறேன். ஆனால் இம்முறை ஒரு மணி நேரத்திற்கு முன்னரே சென்றால் பார்க்க வாய்ப்பிருக்கும்.**" ஆனால் இன்றும் அதே கதைதான் நடந்தது, தாஜூதீன் பாபாவைப் பார்க்க முடியாத நிலை.

இவ்வாறு, நான்கு நாட்கள் மேர்வான் ஸேட், சதாஷிவ் மற்றும் மஹாராஜின் சீடர்களை, சீக்கிரமாக வாக்கி ஷரீஃப் அனுப்பி வைத்தும், ஒவ்வொருநாளும் தாஜூதீன் பாபாவைப் பார்க்க முடியாமல், ஓரிரு நிமிடங்களில் தவறவிட்டனர். கடைசியாக, சதாஷிவ், மேர்வான் ஸேட்டை அணுகி, மறுபடியும் அவர் வாக்கி ஷரிஃப் செல்வதை விரும்பவில்லை என்று முறையிட்டார் - 18 கிலோமீட்டர் தூரம், சிரமமான குதிரைவண்டி சவாரி. இருந்தாலும், "**நான் உறுதியாகக் கூறுகிறேன், ஐந்தாவது முறையாக இன்று சென்று வாருங்கள். தாஜுதீன் உங்களுக்காகக் காத்திருப்பார்**" என்றார் மேர்வான் ஸேட்.

இம்முறை, தாஜுதீன் பாபாவை வாக்கி ஷரீஃபில் காண நேர்ந்தது. சதாஷிவும், உபாஸனியின் சீடர்களும் அவரைப் பணிந்து வணங்கினர். தாஜுதீன் அவர்களிடம் "கடந்த நான்கு நாட்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளானீர்கள். ஆனால் இன்று நான் உங்களை எதிர்நோக்கி இருந்தேன். நான் ஏன் இங்கு இல்லை என்று உங்களுக்குத் தெரியுமா?" எனக் கேட்டு, தாஜுதீன், உடனே,

மேர்வான் ஸேட்டின் புகைப்படத்தைக் காட்டி விளக்கினார்: "இந்த வானுலகின் ரோஜா, சென்ற நான்கு நாட்களாக என்னை அவரிடம் அழைத்தார். அதே வேளையில் அவர் உங்களை இங்கே அனுப்பி இருக்கிறார்! இன்று அவர் என்னை அழைக்காததால், நான் உங்களை சந்திக்க நேர்ந்தது."

தாஜுதீன் பாபாவை சந்தித்து, மேர்வான் ஸேட், சதாஷிவ் இருவரும் ஸாக்கோரிக்குச் சென்று மஹாராஜைப் பார்த்த பின்னர், ஏறக்குறைய ஒருமாத பயணத்திற்குப் பிறகு பூனா வந்து சேர்ந்தனர்.

சில நாட்கள் கடந்ததும், மேர்வான் ஸேட், சதாஷிவ் இருவரையும் உபாஸனி மஹாராஜ் மறுபடியும் ஸாக்கோரிக்கு வருமாறு அழைத்தார். அங்கிருந்து மூவரும் நாசிக் (NASIK) நகருக்குச் சென்றனர். மஹாராஜ் அவருடைய சீடர்களை உடனழைத்துச் செல்லவில்லை. நாசிக் நகரிலிருந்து மூவரும் அருகிலமைந்த காட்டிற்குள், நான்கு மைல்கள் நடந்து சென்று, மஹாதேவ் கோயிலைச் சென்றடைந்து அன்றிரவு அங்கேயே தங்கினர்.

அடுத்த நாள், உபாஸனி மஹாராஜ், சதாஷிவிடம் உண்ண ஏதாவது வாங்கி வருமாறு அனுப்பி வைத்தார். அதே வேளையில், மஹாராஜ், மேர்வான் ஸேட்டுடன் அமர்ந்து, அவர், சாதாரண உலக உணர்வை அடையப்பெறும் பணியில் ஈடுபட்டார்.

சதாஷிவ் திரும்பி வரும் வேளையில், கும்மிருட்டில் தனியாக, காட்டுப் பாதையில் வரவேண்டியதாயிற்று. "**காடு வழியாக வரும்போது பயந்தீர்களா?**" மஹாராஜ் அவரைக் கேட்டார்.

அதற்கு சதாஷிவ், "ஆமாம். நான் சற்று பயந்தேன்" என பதிலளித்தார்.

மஹாராஜ் உடனே, "நான் உங்களைப் பின்தொடர்ந்து வந்து கொண்டிருந்தேன். எதற்கும் அஞ்ச வேண்டிய தேவையில்லை" என்று விளக்கிய வேளையில், அவருடையத் தோற்றம் முற்றிலுமாக மாறி, பிரகாசமாகத் தென்பட்டார். "நான் கூறுவதை எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள். இந்த முழு உலகத்தையும் மேர்வான் தனது தாளத்திற்கு இசைந்தாற்போல் ஆட்டிவைப்பார்! நீங்கள் அவருடன் இருந்தால், அஞ்சுவதற்கு எதுவுமில்லை" என்று தெரிவித்தார்.

அதே மஹாதேவ் கோவிலில் அன்று தங்கி, மறுநாள், மஹாராஜ் இருவருடன் போர்காட் (BHORGAD) மலையைச் சென்றடைந்து, அங்கிருந்த குகையைக் காண்பித்து, அங்குதான் மஹாராஜ் உணவு எதுவும் உண்ணாமல், தண்ணீர் மட்டுமே அருந்தி, கடவுளின் நாமத்தை இடைவிடாமல் உச்சரித்துக்கொண்டே, ஏறக்குறைய ஒரு வருடம் உபவாசம் மேற்கொண்டு, இறுதியில், ஷிர்டி சாய் பாபாவின் உதவியோடு இறைநிலையை எய்திய சம்பவத்தை இருவருக்கும் விளக்கினார்.

உபாஸனி மஹாராஜ் அந்த முக்கியமான சம்பவத்தை விளக்கிக் கொண்டிருந்த அவ்வேளையில், மேர்வான் ஸேட் அதை ஒரு கவிதையாக

எழுதி, ஹுமா (HUMA) எனும் புனைபெயரில் மஹாராஜுக்கு அர்ப்பணம் செய்தார்:

**ஓ சத்குரு உபாஸனி மஹாராஜ்,**
**நீங்கள் அன்பான ஏக இறைவன்!**
**ஓ சத்குரு உபாஸனி மஹாராஜ்,**
**உங்கள் அன்பு உண்மையின் உறைவிடம்!**
**நீங்கள் கடவுளைக் கண்டுகொள்ளும் வரை**
**உண்ணவும் இல்லை, உறங்கவும் இல்லை.**
**ஓ சத்குரு உபாஸனி மஹாராஜ், நீங்கள்**
**அனைவருக்கும் அன்பான எஸ்தான் அல்லவா!**
**தாழ்மையான (கழிவறை) துப்புரவு தொழிலாளி**
**ஆனதன் மூலம் நீங்கள் மிக உயர்ந்தவரானீர்கள்!**

**ஓ சத்குரு உபாஸனி மஹாராஜ், நீங்கள்**
**நிஜமாகவே ஒப்பற்றவராக மாறினீர்கள்!**
**உங்களுக்கு இருப்பதோ அல்லாவின் முகம்**
**அத்துடன் ராமரின் வடிவம்!**
**ஓ சத்குகுரு உபாஸனி மஹாராஜ், நீங்கள்**
**தெய்வீக ஒளியின் மொத்த உருவம்!**
**நீங்கள் கடவுளின் அவதாரம்; ஒவ்வொரு**
**இதயத்திலும் வீற்றிருக்கும் இறைவன்!**
**ஓ சத்குரு உபாஸனி மஹாராஜ், நீங்கள்**
**இரு உலகங்களின் மாமன்னன்!**
**ஹூமா உங்கள் அன்பில் பைத்தியமாக இருக்கிறான் -**
**உங்கள் காலடியில் ஒரு யாசகன்.**
**ஓ உபாஸனி மஹாராஜ்! உங்கள் இறை அன்பை**
**வழங்குமாறு ஹூமா உங்களைக் கெஞ்சுகிறான்!**

சிறிது நேரம் அந்தக் குகையில் இருந்துவிட்டு, மூவரும் நாசிக் வழியாக ஸாக்கோரிக்கு வந்து சேர்ந்தனர். மேர்வான் ஸேட் ஓரிரு நாட்களுக்குப் பிறகு, சதாஷிவுடன் பூனா வந்தார்.

1920ஆம் வருடம், மேர்வான் ஸேட்டின் தனிப்பட்ட மனித உணர்வு, இவ்வுலகில் மீண்டும் முழுமையாக மீட்கப்படும் தருணம் நெருங்கி வந்தது. இக்காலகட்டத்தில், தீவிர ஆன்மீக ஒருமுகப்படுத்தும் நிலையுடன், கடுந்துயரையும் தாங்க வேண்டிய நிலையில் அவர் இருந்தார். நெற்றியைக் கல்லில் அறையும் பழக்கத்தையும் அவ்வப்போது கையாண்டார். ஒரு புதிய பழக்கமாக, இருள் நிறைந்த அறையில் தன்னை அடைத்துகொண்டு, இரவும் பகலும் உணவும் உண்ணாமல், நீரும் அருந்தாமல் பல நாட்கள் உபவாசம்

மேற்கொண்டார். ஒருவரையும் உள்ளே அனுமதிக்காமல், வெளியே வந்த வேளையில் மிகவும் சோர்ந்து போய், வியர்வையில், ஏதோ கடினமான பணியை முடித்துவிட்டு வருவது போலத் தென்பட்டார்.

ஏற்கனவே குறிப்பிட்டபடி, மேர்வான் ஸேட் இறைநிலையை அடைந்து, அளவிறுதியற்ற ஆனந்தத்தை அனுபவித்த அத்தருணத்தில், சாதாரண உலக உணர்வையும் திரும்பப் பெறுவது அவருடைய ஆன்மீகக் கடமை. இவ்வாறு, உருவமில்லா இறைநிலையிலிருந்து, ஆழ் மனம் மற்றும் சூட்சும (பிராண) உலகின் வழியாக, எண்ணிலடங்கா வடிவங்களைத் தன்னுள் அடக்கும் பௌதீக உலகில் திரும்ப வருவது என்பது அதீத துன்பங்களை அனுபவிப்பதாகும்.

பலவிதமான பொருட்களை உள்ளடக்கிய இவ்வுலகமும், அதன் விவகாரமும், வேண்டுமென்றே உருவாக்கப்பட்ட ஒன்று. பொதுவாக துன்பம், வலி இவைகளைத்தான் அனுபவிக்க முடியும். எனவே, இவ்வுலகில் துன்பத்தை மட்டுமே காணமுடியும். இறைநிலை ஒன்றுதான் இன்பகரமானது.

மனித உணர்வு நிலையில், மேர்வான் ஸேட் தனது ஆன்மீகக் கடமைகளைச் செய்ய வேண்டியிருப்பதால், இவ்வுலகின் பௌதீக அம்சமாக விளங்கும் அனைத்து பொருட்களையும் தமது அனுபவத்திற்குள் கொண்டுவர வேண்டியது இன்றியமையாதது. இந்த சூழ்நிலையில், தாங்க முடியாத துயரத்தை அனுபவித்த வேளையில் ஒரு நாள், துப்புரவு தொழிலாளி பஹதூர் என்பவரை அணுகி, ஒரு வாளி நிறைய மனித மலம் தேவைப்படுவதாக வேண்டினார். பஹதூர் மரியாதையுடன் மறுத்தார். மேர்வான் ஸேட் தான் கேட்டதை வழங்குமாறு பஹதூரை வலியுறுத்தினார். கடைசியில் பஹதூர், தயக்கத்தோடு மேர்வான் ஸேட்டின் வேண்டுதலுக்கு இணக்கம் தெரிவித்தார்.

மேர்வான் ஸேட், மறைவாக அந்த வாளியை எடுத்துக்கொண்டு, பெஹராம்ஜியின் அறைக்குச் சென்று, கதவை மூடிக்கொண்டார். அடுத்த நாள் காலையில் வெளியே வந்தபோது, அவர் உடல் முழுதும் மனித மலத்தினால் நிரம்பியிருந்தது. அது காய்ந்து போய் உடலெல்லாம் பதிந்து, உடல் உறுப்புகளை அசைக்க சிரமமாக இருந்தது. மேர்வான் ஸேட், பெஹராம்ஜி, ஸையத் ஸாஹேப் இருவரையும் குரல் கொடுத்து அழைத்தார். அவர்கள் மேர்வான் ஸேட்டின் பரிதாபகரமான தோற்றத்தைக் கண்டு திகிலுற்றனர். தண்ணீரை சுடவைத்து, இருவரும் வாசனை தைலங்கள் மற்றும் நோய்க்கிருமி எதிர்ப்பு மருந்துகளால், பல மணி நேரம் மேர்வானை நீராட வைத்து, உடலை சுத்தம் செய்தனர். (ஆன்மீகப் பாதையில் பயணம் செய்யும் ஞானிகள் அருவருப்பான சூழ்நிலைகளை விரும்புவதன் காரணம் இதிலிருந்து புரியும்.)

மேர்வான் ஸேட், பஹதூரின் கீழ்ப்படியும் தன்மையைப் பெரிதும் பாராட்டி மகிழ்ந்தார். பஹதூர் நடந்ததை பெஹராம்ஜிக்கு எடுத்துக் கூறினார். இந்தத் தாழ்மையான துப்புரவாளர் பஹதூர் இறுதியில் மேர்வான் ஸேட்டின் நெருக்கமான பக்தராகி விட்டார். நாளடைவில் பஹதூர் கவிதை எழுதும் திறன் பெற்று (இறைவனின் அன்பளிப்பு), பல கவிதைகளை எழுதி, மேர்வான்

ஸேட்டுக்கு அர்ப்பணம் செய்தார். மேர்வான் ஸேட் பெருமகிழ்ச்சி அடைந்தார்.

மேர்வான் ஸேட்டின் இதுபோன்ற அனுபவங்களை, அவருடைய இறை உணர்வுடன் உலக உணர்வையும் மீட்கும் தருணத்தில், அவர் எதிர்கொண்ட இடர்பாடுகளுடன் இணைத்துப் பார்க்கும்போது மட்டுமே புரிந்துகொள்ள முடியும். சத்குருக்கள், உபாஸனி மஹாராஜ் கூட, இதுபோன்ற அனுபவங்களில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர். உலகின் பார்வையில் அவை எப்படித் தோன்றினாலும், சத்குருக்களுக்கு இன்றியமையாதது உண்மை மட்டுமே.

1920ஆம் ஆண்டின் இறுதியில், மேர்வான் ஸேட், ஸையத் ஸாஹேபிடம் கூறினார்: **"எந்தவிதமான தொந்தரவுமில்லாத ஒரு மறைவான இடத்தில் நான் ஏகாந்தவாசம் மேற்கொள்ள விரும்புகிறேன். அதற்கு உகந்த ஓரிடத்தைத் தேடிக் கண்டுகொள்ள முடியுமா?"** ஸையத் ஸாஹேப் பல இடங்களைப் பரிந்துரைத்தும், மேர்வான் ஸேட் எதையும் ஏற்றுக் கொள்ளாமல், இறுதியில், **"மஹாராஜ் ஒரு வருடம் தவமிருந்த, நாசிக் அருகிலமைந்த போர்காட் குகையை நான் மிகவும் விரும்புகிறேன். நீங்கள் என்னுடன் வரவேண்டும்"** என்றதும் ஸையத் அதற்கு ஒப்புக்கொண்டார்.

இரயிலில் நாசிக் சென்று, 'போர்காட்' குகையை நோக்கி இருவரும் நடந்தனர். அந்தக் குகையைக் கண்டுபிடித்து மேர்வான் ஸேட் அதனுள் இருக்க, ஸையத் செங்குத்தான மலையின் கீழ் அமர்ந்திருந்தார். மேர்வான் அங்கு நாற்பது நாட்கள், இரவும் பகலும் இருந்துகொண்டு, கிராமத்திலிருந்து ஸையத் வாங்கிவந்த பால் மட்டும் அருந்தி, ஏகாந்தவாசத்தில் தனது ஆன்மீகப் பணியில் ஈடுபட்டார்.

நாற்பது நாட்களுக்குப் பிறகு, மேர்வான் ஸேட் நாசிக் நகரில் ஸையத் ஸாஹேபின் குடும்ப இல்லத்திற்குச் சென்று, ஸையத் மூலமாக, பூனா நண்பர்கள் சதாஷிவ், பெஹராம்ஜி, குஸ்தாஜி மற்றும் பலரை நாசிக் வருமாறு தொலைத்தந்தி அனுப்பி அழைப்பு விடுத்தார்.

மேர்வான் ஸேட்டின் ஆன்மீக சக்திகள் மற்றும் பண்புகள், ஸையத் ஸாஹேபின் இதயத்தில் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தின. 'மேர்வான் ஸேட்' என்ற பெயர் சாதாரணமாக இருப்பதாகக் கருதினார். பூனா நண்பர்கள் நாசிக் வந்தபோது, மேர்வான் ஸேட் என்ற பெயரை மாற்றும் விருப்பத்தை ஸையத் ஸாஹேப், நண்பர்கள் மத்தியில் வைத்தார். அவர்களிடையே ஒரு மனதாக என்ன பெயர் வைக்கலாம் என்ற வாதம் தொடர்ந்தது. மேர்வான் ஸேட் அந்த வாதத்தை ஆவலோடு கவனித்துப் பூரிப்படைந்தார். (இறைவன் பெயரை இறைவனே நிர்ணயிக்கிறார், அந்த உரிமை அவருக்கு மட்டுமே உள்ளது!)

பல பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டன. எதுவும் பொருத்தமாக அமையவில்லை. ஒருவர் 'மெஹரு பாபா' (மிகவும் பிரசித்தி பெற்றவர்) என்று மொழிந்ததும் ஏற்புடையதாக இல்லை.

இவ்வாறு, நீண்ட நேர விவாதம் மற்றும் ஆழ்ந்த ஆலோசனைக்குப் பிறகு, ஸையத் ஸாஹேப், இறுதியில், **"மெஹர் பாபா"** என்ற பெயரை முன்மொழிந்தார் - **மெஹர் பாபா - என்றால் இரக்கமுள்ள தந்தை என்று பொருள்**. அனைவரும் அந்தப் பெயரை ஒருமனதாக ஏற்றுக்கொண்டனர். அனைவரையும் அங்கு வரவழைத்ததன் நோக்கம் இந்த முக்கியமான பெயர் சூட்டும் நிகழ்ச்சிக்காகத்தான் என்பதை புரிந்து கொண்டனர். 'மேர்வான் ஸேட்'டாகச் சென்றவர், **'மெஹர் பாபா'**வாகத் திரும்பி வந்தார். அந்நாளிலிருந்து **'மெஹர் பாபா'** என்று அனைவராலும் அழைக்கப்பட்டார்.

மெஹர் பாபாவின் சீடர்கள் - சிலர் இயற்கையாக, சிலர் சற்று அறிமுகத்திற்குப் பின்னர், இன்னும் சிலர் சற்று தூண்டுதலுக்குப் பின்னர் - அவருடன் வந்திணையும் விதம் அற்புதமானது, ஏனெனில் சீடர்கள் அவதார புருஷரின் உடல் உறுப்புகளை ஒத்தவர்கள், அவருடைய இச்சைக்கு இணங்கினார் போல் இயங்குபவர்கள்.

மேலும் ஒரு முஸ்லிம் நண்பர் மெஹர் பாபாவின் நெருங்கிய தொடர்பில் வந்தவர் அப்துல் கனி (ABDUL GHANI) ஆவார். அவருடைய குடும்பம் மெஹர் பாபாவின் வீட்டருகில் நெடுங்காலமாக வாழ்ந்து வந்தது. மேர்வானும், கனியும் ஒரே வகுப்பில் கல்லூரி வரை பயின்றவர்கள். நல்ல நண்பர்கள். மேர்வான், ஹஸ்ரத் பாபாஜானின் தொடர்பில் வந்த வேளையில், ஏழு வருடங்கள் அவர்களது தொடர்பு துண்டிக்கப்பட்டது. முஹமது கனி, கல்லூரி முடித்து ஹோமியோபதி டாக்டர் ஆனார். திருமணமாகி, தொழிலுக்காக மும்பையில் குடியேறினார். பல துறைகளில் திறமை வாய்ந்தவராக இருந்ததால், கௌரவ மாஜிஸ்ட்ரேட்டாக நியமிக்கப்பட்டு, அதிகாரபூர்வமாக அப்துல் கனி முன்சிஃப் (ABDUL GHANI NUNSIFF) என்றழைக்கப்பட்டார்.

ஒரு நாள், 1920ஆம் ஆண்டு, முன்ஷி ரஹிம் இல்லத்தில் இதர முஸ்லிம் நண்பர்களை மெஹர் பாபா சந்தித்தார். அப்போது, முன்ஷி ரஹிமின் நண்பர், அப்துல் கனி, தற்செயலாக அங்கு வந்தார். இதைத்தான் விதியின் இரகசிய விளையாட்டு என்பது! தன்னுடைய சிறுபருவ நண்பனைப் பார்த்த மகிழ்ச்சியில் டாக்டர் கனி உரத்த குரலில், "மேர்வான், நீ இங்கேதான் இருக்கிறாயா? நான் நினைத்தேன், இவ்வளவு வருடங்களில் நீ மறைந்து போயிருப்பாய் என்று! உனக்கு என்னவாயிற்று, என் அருமை நண்பனே?" என்று கேட்டார்.

டாக்டர் கனி கூறியதைக் கேட்டு, மெஹர் பாபா புன்முறுவல் செய்தார். எதுவாயினும், டாக்டர் கனி அவ்வாறு நடந்துகொண்டதை இதர நண்பர்கள் ரசிக்கவில்லை. டாக்டர் கனி அங்கிருந்த அனைவரையும் பார்த்து, அவர்கள் அதை விரும்பாததை உணர்ந்து, "இதோ பாருங்கள்! மேர்வான் என்னுடைய பழைய நண்பன்! நாங்கள் ஒரே குழுவில் விளையாடினோம்... ஒரே வகுப்பில் படித்தோம்... ஒரே இடத்தில் வாழ்ந்து வந்தோம்... " எனக் கூறியது செவிடன்

காதுகளில் விழுந்தது போலானது. அனைவரும் அச்சுறுத்தும் பார்வையால் டாக்டர் கனியை முறைத்தனர்.

டாக்டர் கனியின் எதிர்பாராதவிதமான அணுகுமுறை ஒரு தர்மசங்கடமான சூழ்நிலையை உருவாக்கியது.

முன்ஷி ரஹிம், உடனே அலட்சியமாக, “பழைய நண்பர், ஒன்றுக்கும் உதவாத வாடிக்கையாளர்!” என்ற பழமொழியை எடுத்துரைத்தார்.

டாக்டர் கனி தடுமாறினார். அவருடைய மனதில் பல எண்ணங்கள் அலைமோதின. ‘நான் என்ன தவறு செய்தேன்? அவமதிக்கிற அளவுக்கு ஏதாவது சொல்லிவிட்டேனா? இவர்கள் என் உள்நோக்கத்தை ஏன் புரிந்து கொள்ளவில்லை? அனைவரும் மேர்வானுக்கு ஏன் இவ்வளவு மரியாதை தருகிறார்கள்?’ என்று நினைத்தார். மெஹர் பாபா உடனடியாகத் தலையிட்டு, அங்கிருந்த பதட்டமான நிலையைப் போக்கினார். டாக்டர் கனியை அருகில் அமர வைத்து, பழைய பள்ளிப்பருவ கதைகளை நினைவு படுத்தினார்.

இறுதியில், மெஹர் பாபா, “**கனி, பூனாவுக்கு நீ வரும்போது என்னை வந்து பார்க்க வேண்டும். நீ வந்தால் நான் மிக்க மகிழ்ச்சி அடைவேன்**” என்றார்.

சிறிது நேரத்தில், மெஹர் பாபா அங்கிருந்து சென்றுவிட்டார். கூட்டத்திலிருந்த அனைவரும் டாக்டர் கனி மீது புலி போலப் பாய்ந்தனர்: “உனக்குத் தெரியாதா அவர் யார் என்று? அவர் முன்னிலையில் இப்படிப் பேசுவதற்கு உனக்கு என்ன தைரியம்? அவர் ஒரு சாதாரண மனிதரல்ல! அவர் ஒரு சத்குரு! ஹஸ்ரத்! அவருக்கு, ஹஸ்ரத் பாபாஜான் மற்றும் தாஜுதீன் பாபாவுடன் நெருங்கிய தொடர்பு உள்ளது.” மேலும் மெஹர் பாபாவைப் பற்றிய அனைத்து விபரங்களையும் எடுத்துக் கூறினர். டாக்டர் கனி, அவர்களின் விளக்கத்தை முழுமையாகப் புரிந்துகொள்ளாத போதிலும் அனைவரிடமும் மன்னிப்புக் கோரினார்.

இந்த சம்பவத்திற்குப் பிறகு, டாக்டர் கனி அடிக்கடி பூனாவுக்கு வருவதும், மெஹர் பாபாவின் விருப்பப்படி அவரை சந்திக்கவும் செய்தார். சார்பாவ்டியில், ஹஸ்ரத் பாபாஜான் அமர்ந்திருந்த இடத்திற்கு எதிரில் அமைந்த உணவகம் ஒன்றில், மெஹர் பாபா, டாக்டர் கனியை அழைத்துச் சென்று, தேநீர் பருகிக்கொண்டே, அரசியல் மற்றும் கனியின் இதயத்திற்கு நெருக்கமான கேள்விகளைக் கேட்டு, அவர், சுற்றி வளைத்து வழங்கும் பதில்களுக்கு மெஹர் பாபா பொறுமையுடன் செவிமடுத்தார்.

டாக்டர் கனி, இவ்வாறு, மெஹர் பாபாவை அடிக்கடி சந்தித்து வந்தார். அவரை ஓர் ஆன்மீக குரு, ஹஸ்ரத் என்று ஏற்றுக் கொள்ளாமல் இருந்தாலும், அவர் மீதிருந்த ஆழமான நம்பிக்கையால் மாலை நேரங்களில், முன்ஷி ரஹிம் இல்லத்திற்கு வந்து இரவெல்லாம் அங்கு நடக்கும் நிகழ்ச்சிகளில் பங்கெடுத்தார். அனைத்து சீடர்களிலும், டாக்டர் கனி, அதி புத்திசாலியாகத் திகழ்ந்ததால், அவர் ‘சாக்ரட்டீஸ்’ (SOCRATES) என்ற புனைபெயரால் (அளவில் அவ்வளவு பெரிய

தலை) அழைக்கப்பட்டார். இறுதியில் இந்தப் பெரிய தலையும், ஒரு நாள், மெஹர் பாபாவின் பாதங்களில் சரணடையத் தயங்கவில்லை.

அடுத்தடுத்து நடந்த பல சம்பவங்கள் டாக்டர் கனியின் நம்பிக்கையை வலுப்படுத்தின. 1920ஆம் ஆண்டு மெஹர் பாபா, நான்கைந்து நாட்கள் மும்பையில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொள்ள இருந்தார். டாக்டர் கனிக்குத் துணையாக, நண்பர் பெய்லியையும் அழைத்துச் சென்றார். டாக்டர் கனி முதலில் தயங்கினாலும், மெஹர் பாபாவின் வற்புறுத்தலால் அவருடன் செல்ல வேண்டியதாயிற்று.

பருவமழை காலம். பூனாவில் தொடர்ந்து மழை பெய்து, வானம் மூடியிருந்தது. மும்பைக்குச் செல்லும் வழியில் கண்டாலா மலை பள்ளத்தாக்கில் பலத்த மழை பெய்து கொண்டிருந்தது. மூவரும் ரயிலில் மும்பைக்குப் பயணம் செய்தனர். தலைகாவ்ம் (TALEGAON) என்ற இடத்தைக் கடந்ததும், மெஹர் பாபா டாக்டர் கனியிடம் கூறினார், "**நாம் மும்பை சென்றடைவோம் என்று எனக்குத் தோன்றவில்லை**!".

செய்தித்தாளைப் புரட்டிக் கொண்டிருந்த டாக்டர் கனி கிண்டலாக, "நீங்கள் என்ன சொல்ல முயற்சிக்கிறீர்கள்? இதற்கு என்ன அர்த்தம்? ரயிலில் நாம் மும்பையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம்! மும்பை சென்றடையாது என்று கூற, நீங்கள் ஓர் இறை ஞானியாக அல்லது பைத்தியமாக இருக்கவேண்டும்! ஆனால் எனக்குத் தெரியும் நீங்கள் இறை ஞானி அல்ல என்று!" எனக் குறிப்பிட்டார்.

மெஹர் பாபா உடனே, "**கனி, உன்னிடத்தில் ஒரு தீய பழக்கம் என்னவெனில், யார் என்ன சொன்னாலும் உடனே கேலியும் கிண்டலும் செய்வது. இப்போது நான் சொல்வதை கவனமாகக் கேள். நான் நினைப்பது மட்டுமல்ல, நாம் மும்பை சென்று சேரமாட்டோம் என்பதும் நன்றாகத் தெரியும். நான் கூறும் உண்மையை நீ சென்று கண்டுபிடி**" என்றார்.

ஏளனமாக, டாக்டர் கனி, மறுபடியும், "இப்போது சொல்லுங்கள்! நீங்கள் சொல்வது நம்மூவருக்கு மட்டுமா? அல்லது ரயிலில் பயணம் செய்யும் அனைவருக்குமா?" என்று கேட்டார்.

பாபா, சற்று சீற்றத்துடன், "**நான் சொல்வது அனைவருக்கும்! இந்த ரயில் மும்பை சென்று சேராது**" என்று திட்டவட்டமாக அறிவித்தார்.

டாக்டர் கனி உடனே, "ஒருவேளை மும்பைப் போகாது! மாறாக, பெர்ஸியா அல்லது துருக்கிக்குப் போகலாம்" என்று பரிகாச தோரணையில் பதிலளித்தார்.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த பெய்லி, பேச்சில் தலையிட்டு, "ஆனால், பாபா! ரயில் மும்பை செல்லவில்லை என்றால் வேறு எங்குச் செல்லும்?"

அவர்களால் வேறு எதையுமே நினைத்துப் பார்க்க முடியவில்லை.

மெஹர் பாபாவின் வார்த்தைகளைக் கேட்டு, பைத்தியக்காரத்தனம் என்று டாக்டர் கனி எரிந்து விழுந்தார். இதுதான் சாதாரண மனிதமனம்.

டாக்டர் கனியின் காரசாரமான கருத்துக்களைக் கேட்டு, மெஹர் பாபா அமைதியாக இருந்தார். ஆனால் பெய்லி, டாக்டர் கனியிடம், "பாபா இப்படிக் கூறுவதற்கு ஏதாவது முக்கிய காரணம் இருக்கும். இல்லையேல் அவர் ஏன் இவ்வளவு தெள்ளத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும்?"

டாக்டர் கனி மறுபடியும் ஏளனமாக பெய்லியிடம், "நீயும் கூட ஒரு முட்டாள்தான்! தலைகாவ்ம் ரயில் நிலையத்தைத் தாண்டும்போது பாபா தூங்கிக் கொண்டிருந்தார் என்பது உனக்குத் தெரியாதா?"

"நிச்சயமாக இல்லை!" பெய்லி பதிலளித்தார், "அந்த வேளை, பாபா ஆழ்ந்த சிந்தனையில், தியானத்தில் இருந்தார்."

டாக்டர் கனி எரிச்சலுடன், "உன் மண்டையில் களிமண் இல்லாமல் இருந்திருந்தால் உனக்குப் புரிந்திருக்கும். தலைகாவ்ம் ரயில் நிலையத்தைத் தாண்டிய பின்னர்தான் பாபா அந்த மாதிரி கேலித்தனமான சம்பவத்தை விளக்கினார். திடீரெனத் தூக்கத்திலிருந்து விழித்து, அவர் கண்ட கனவைத்தான் எடுத்துரைத்தார்" என்று பெய்லிக்கு பதிலளித்தார்.

பாபா, உடனே குறுக்கிட்டு, "**நிச்சயமாக நீ சொல்வது உண்மைதான், ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், மேலும் ஒன்று கூறுகிறேன், நாம் நேரல்** (NERAL) **ரயில் நிலையம் சென்று சேர்ந்ததும் அங்கிருந்து திரும்பிச் செல்ல வேண்டியதுதான்!**" என்றார்.

"பாபா, தயவு செய்து இந்த விரும்பத்தகாத பேச்சை நிறுத்துங்கள்" என்று டாக்டர் கனி எரிச்சலடைந்து, "இல்லையென்றால், நான் உங்களோடு பைத்தியக்கார மருத்துவமனைக்குச் செல்ல வேண்டியதுதான்" என்று கூறினார்.

பாபா, டாக்டர் கனியிடம் ஏதோ சூழ்ச்சித்தனம் செய்கிறார் என்று பெய்லி நினைத்தார். டாக்டர் கனி உடனே, சரி, என்ன இருந்தாலும் பாபாவின் கேலிக் கூத்தை நாம் கொஞ்சம் ரசிப்போம் என்று கூறி அமைதியானார்.

ரயில் லோனவாலா (LONAVALA) வந்து கண்டாலா (KHANDALA) ரயில் நிலையம் வரை நேரப்படி வந்தடைந்தது.

கண்டாலா மலையிலிருந்து பெருக்கெடுத்த மழை வெள்ளம் பள்ளத்தாக்கில் வழியும் அபார சத்தம் கேட்டது. அருமையான இயற்கை காட்சிகள், பச்சை பசேலென்று மரம் செடி கொடிகள், ஆனந்தமான சூழ்நிலையை அனைவரும் ரசித்தனர். ரயில் கர்ஜத் (KARJAT) ரயில் நிலையத்தைக் கடந்து, கீழ்ப்பகுதியில் அமைந்த நேரல் ரயில் நிலையத்தை நோக்கி மெதுவாக நகர்ந்து சென்றது. ரயில் தண்டவாளத்தில் ஒரே வெள்ளம். எப்படியோ நேரல் ரயில் நிலையம் வந்தடைந்தது. பாபா கண்களை மூடிக்கொண்டு, தலையை ஜன்னலோடு சாய்த்த வண்ணம் அமர்ந்திருந்தார். ரயிலில் ஒரே கூச்சல் குழப்பம். டாக்டர் கனியும் பெய்லியும் மாறி மாறி இருவரையும், பாபாவையும் பார்த்துக் கொண்டிருந்தனர். வெள்ளப் பெருக்கால் ரயில் மேலும் செல்ல முடியாத நிலை. நடத்துனர் வந்து விபரங்களை விளக்கிக் கூறி, ரயில் மும்பைக்குச் செல்ல முடியாது, திரும்பி பூனாவுக்குச் செல்வதாக அறிவித்தார்.

நடத்துனர் அறிவிப்பைக் கேட்ட டாக்டர் கனி, தர்மசங்கடமான சூழ்நிலையை சந்திக்க நேர்ந்தது. பல எண்ணங்கள் அலைமோத, டாக்டர் கனி பாபாவை உற்று நோக்கி அவர் ஏதாவது பதில் அளிப்பாரா என்று எதிர்பார்த்தார். பாபாவிற்குப் பைத்தியம் என்று பட்டம் சூட்டிய டாக்டர் கனி, இப்போது அவரே மனநலம் பாதிக்கப்பட்டவர் போல் ஆகிவிட்டார். பெய்லியும் தனது முட்டாள்தனத்தை உணர்ந்தார். இருவரும் ஒரு வார்த்தைக் கூட பேசவில்லை .

மெஹர் பாபா, தனது கண்களைத் திறந்து, '**இது நேரல், அப்படித்தானே**' என்று கேட்டுவிட்டு இருவருக்குமிடையே இருந்த பதட்டத்தைப் போக்கினார்.

"ஆமாம்" பெய்லி பதிலளித்தார், "அதே 'நேரல்'தான், உல்லாசமாக மும்பைக்குச் செல்லும் நம்பிக்கையைக் கெடுத்த அதே 'நேரல்'தான்" .

"**ஆனால், ஏன்? என்னவாயிற்று?**" பாபா கேட்டார்.

பெய்லி பதிலுக்கு, "பாபா காரணம் உங்களுக்குத் தெரியும். நீங்கள்தான் ரயில், நேரல் ரயில் நிலையத்தைத் தாண்டிச் செல்லாது என்று முன்கூட்டியே கூறினீர்கள். ஆனால், இப்போது ஒன்றும் அறியாதவர் போலக் கேட்கிறீர்கள். ஏன்?" என்றார்.

"**உண்மையாகச் சொன்னால், எனக்கு எதுவுமே தெரியாது. அப்படி ஏன் சொல்லியிருக்க வேண்டும் என்று ஆச்சரியப்படுகிறேன்**" என்று கூற, வெளித்தோற்றத்தில் உண்மையிலே குழம்பிப் போனவர் போல் இருந்தார்.

பெய்லி, பாபா நடிக்கிறார் என நினைத்து சீற்றமடைந்தார், "எல்லாம் அறிந்த ஞானி போல முன்கூட்டியே சொல்லிவிட்டு இப்போது ஒன்றும் தெரியாது என்கிறீர்கள்?"

"**நீ சொல்வது நிச்சயமாக சரிதான்**" பாபா விளக்கினார், "**ஆனால் நான் சொல்வதும் சரிதான். நான் இதை எப்படிச் சொல்லியிருக்க முடியும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அதை நினைக்கும் போது எனக்குத் தோன்றுகிறது, நான் பேசவில்லை; வேறு எவரோ பேசியிருக்க வேண்டும். ஏதோ ஒரு சக்தி என் மூலம் என்னைக் கூற வைத்திருக்கிறது**..."

அமைதியாக அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த டாக்டர் கனி, "பாபா! நீங்கள் எத்தகையவர் என்பதை நினைத்து எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது! நான் மறுபடியும் உங்களோடு வாதாட விரும்பவில்லை. இதுபோல் இனிமேல் எனது முன்னிலையில் எதுவும் சொல்லாதீர்கள். இது எனது வேண்டுகோள். உண்மையிலே உங்களைக் கண்டு, உங்களிடமிருக்கும் சக்தியைக் கண்டு அஞ்சுகிறேன். நான் உங்களை வணங்குகிறேன். உங்களுக்கு எல்லாம் தெரியும். உங்களை அடிபணிந்து வணங்குகிறேன்" என்று கூறி முடித்தார்.

இவ்வாறு, கடினமான எட்டு மணி நேர பயணத்திற்குப் பிறகு மூவரும் பூனா வந்து சேர்ந்தனர்.

பெய்லியும் டக்டர் கனியும் இதைப் பற்றிப் பேசிக் கொண்டனர்; மெஹர் பாபா, தமது ஆன்மீக சக்தியை அவர்களுக்குக் காண்பிப்பதற்காக நடத்திய

திருவிளையாடல் என்று நினைத்தனர். அந்நாளிலிருந்து பாபா அனைத்தும் அறிந்தவர் என்ற நம்பிக்கை அவர்கள் மனங்களில் ஆழமாக வேரூன்றியது.

1919ஆம் ஆண்டிலிருந்து குல்மாய் அடிக்கடி ஸாக்கோரிக்குச் சென்று, சத்குரு உபாஸனி மஹாராஜை சந்தித்து வந்தார். அதேவேளை, மெஹர் பாபாவையும் பலமுறை சந்திக்க நேர்ந்தது. குல்மாயின் மகன் ஆதி தனது தாயாருடன் அங்குச் சென்றபோது, ஒரு முறை மெஹர் பாபாவை சந்தித்தார். ஆதிக்கு அப்போது பதினாறு வயது. பஞ்ச்கனியில் ஒரு விடுதியில் தங்கிப் பயின்று வந்தார். குல்மாய், ஆதி இருவரையும் தவிர அவர்கள் குடும்பத்தில் வேறு எவரும் 1921ஆம் ஆண்டு மெஹர் பாபா அஹமதுநகர் வருவதுவரை சந்திக்கவில்லை.

இவ்வாறு, குல்மாய், மெஹர் பாபாவின் மிக நெருக்கமான தொடர்பில் வந்தார். குறிப்பாக 1920ஆம் வருடம் (குல்மாயை அவரது ஆன்மீகத் தாய் என்று குறிப்பிட்டது மட்டுமின்றி, அவர், மெஹர் பாபாவின் அவையில் முக்கிய உறுப்பினராக அங்கம் வகிக்க இருந்தார்) ஒரு முறை மெஹர் பாபா அஹமதுநகரில் குல்மாயின் இல்லத்திற்கு விஜயம் செய்தார். அனைவரும் அன்புடன் வரவேற்றனர்; ஓரிரவு அவர் அங்குத் தங்கியிருந்தார். அன்றைய மாலைப் பொழுதில் மெஹர் பாபாவை மகிழ்விக்க ஒரு கவாலி இசை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தனர். இத்தருணத்தில் மெஹர் பாபா குல்மாயின் கணவரிடம் அவர் ஒரு நாள் '**கான் ஸாஹேப்**' என்ற அரசாங்க அந்தஸ்தை அடைவார் என்று குறிப்பிட்டார் (கான் ஸாஹேப் என்பது ஆங்கிலேயர் அந்தக் காலத்தில் அளித்த ஒரு கௌரவ பட்டம்). அதை அவர் ஒரு விளையாட்டாக எடுத்துக் கொண்டார். மெஹர் பாபா மறுபடியும் தனது கணிப்பை வலியுறுத்திக் கூறினார். அடுத்த ஒரு வருடத்தில் அந்தப் புகழ் நிறைந்த பட்டத்தை குல்மாயின் கணவர் அடையப்பெற்றார்.

மற்றுமொரு தருணத்தில் மெஹர் பாபா, குல்மாயிடம், **"நீங்கள் பாபாஜானைப் போல மாறுவீர்கள்"** என்றார். குல்மாய், 'ஹஸ்ரத் பாபாஜானுடன் என்னை ஒப்பிடாதீர்கள்' என்று சொன்னதும், மெஹர் பாபா மறுபடியும், **"ஆமாம், உண்மையிலே நீங்கள் பாபாஜானுக்கு இணையானவர்கள்"** என்று ஆணித்தரமாக அறிவித்தார்.

மெஹர் பாபா அடுத்த நாள் தனது சீடர்களுடன் பூனாவுக்குத் திரும்பிச் சென்றார்.

மெஹர் பாபா, ஒரு முறை குஸ்தாஜியுடன் மும்பைக்குச் சென்று, அங்கிருந்து அஹமதுநகருக்குப் பயணம் செய்தார். அன்றிரவு குல்மாய் இல்லத்தில் தங்கி, அடுத்த நாள் குல்மாயுடன் ஸாக்கோரிக்குச் சென்றார். ஒரு வாரம் 'மகர் சங்கராந்தி விழா' ஸாக்கோரியில் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

கராச்சியிலிருந்து பீலாமாய் (PILAMAI) எனும் ஒரு ஸொராஸ்டிரிய பெண்மணி இவ்விழாவில் கலந்துகொள்ள ஸாக்கோரிக்கு வந்தார். பீலாமாய்

மும்பையில் குல்மாயை சந்தித்து, இருவரும் நெருங்கிய நண்பர்களாயினர். பீலாமாய் மனச்சோர்வால் சிரமப்படுவதை அறிந்த குல்மாய், அவரை ஸாக்கோரிக்கு அழைத்து வந்து மஹாராஜை சந்திக்கச் செய்தார்.

ஒரு நாள், பீலாமாய், குல்மாய் இருவரும் மெஹர் பாபா அருகில் அமர்ந்திருந்த வேளையில், பாபா, குல்மாயை அருகில் அமருமாறு கூறி, "**நான் கூறுவதை நீங்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். ஒவ்வொரு சத்குருவுக்கும் ஒரு ஆன்மீகத் தாய் உண்டு. துர்காபாய்** (மஹாராஜின் முக்கிய பெண்சீடர்) **சத்குரு உபாஸனி மஹாராஜின் ஆன்மீகத் தாய். சத்குரு நாராயண் மஹாராஜ் மற்றும் தாஜுதீன் பாபாவிற்கும் ஆன்மீகத் தாய்மார்கள் இருந்தனர். அதுபோல், ஒவ்வொரு சத்குருவுக்கும் ஆன்மீக சகோதரியும் உண்டு. இவ்வண்ணம், நீங்கள் எனது ஆன்மீகத் தாயார், பீலாமாய், எனது ஆன்மீக சகோதரி. எனக்கு உங்களோடு பல வாழ்வுகால தொடர்பு உள்ளது. நான் உங்களுக்கு இந்த உண்மையைச் சொல்கிறேன் 'நான் உங்கள் மகன்' அதுபோல 'நான் பீலாமாயின் சகோதரன்.' நீங்கள் இருவரும் உண்மையில் அதிர்ஷ்டசாலிகள்.**"

குல்மாய், திகைப்பில் பதிலளித்தார்: "ஆன்மீக ரகசியங்கள், உண்மைகள் எதுவும் எனக்குத் தெரியாது. உங்கள் பாதத்தில் படிந்திருக்கும் தூசுக்குக் கூட நான் நிகராக மாட்டேன். ஆன்மீகம் சம்மந்தப்பட்ட எதற்கும் நான் தகுதியானவளும் அல்ல. நான் ஓர் எளிமையான பெண் - வாழ்வில் சோர்வடைந்தவள். உபாஸனி மஹாராஜின் அருகிலமர்ந்து, பணிவிடை செய்து அவர் காலடியில் உயிரைத் துறப்பதே எனது ஒரே ஆசை."

இதைக் கேட்ட மெஹர் பாபா, தீவிரமாக குல்மாயை உற்று நோக்கி, அறிவுறுத்தினார்: "**நானே உபாஸனி மஹாராஜ். உபாஸனி மஹாராஜும் நானே! உடல்கள் தான் வேறு வேறு. நானே அவர்! நான் கூறுவதைக் கேளுங்கள்.**" உபாஸனி மஹாராஜ் குல்மாயிடம், பாபாவின் விருப்பங்களுக்கு எப்போதும் பணிந்து நடக்க வேண்டும் என்று ஏற்கனவே வழங்கிய உத்தரவால், இப்போது மெஹர் பாபா கூறியதை ஏற்றுக் கொண்டார்.

மெஹர் பாபா, குல்மாய்க்கு நம்பிக்கை அளித்தார்: "**நீங்களும், உங்கள் குடும்பமும் என் அன்பிற்குரியவர்கள். நாம் அனைவரும், எதிர்காலத்தில், சேர்ந்து வாழப் பிறந்தவர்கள். ஒன்றை மட்டும் தெரிந்து கொள்ளுங்கள், அனைத்து உலகமும் எனக்கு எதிராகச் சென்றாலும், நீங்கள் என்னை விட்டு விலக மாட்டீர்கள்.**"

பல நாட்கள் கடந்தன. மெஹர் பாபா ஸாக்கோரியில் அமைந்த இந்து கோயில் விதானத்தில், துர்காபாய், குல்மாய் இருவருடன் அமர்ந்திருந்தார். பல இந்து கடவுள்களின் சித்திரங்கள், விதானத்தை அலங்கரித்தன. மெஹர் பாபா சுதாமாவின் (கிருஷ்ணனின் சிறு வயது நண்பர்) கதையை எடுத்துரைக்கத் தொடங்கினார். கூறி முடித்ததும், குல்மாய் மேலும் கதைகளைக் கேட்க விரும்பினார். உடனே பாபா, "**எல்லாவற்றையும் எப்படிச் சொல்ல முடியும்?**" என்றதற்கு குல்மாய், "பாபா! உங்களுக்கு எல்லாம் தெரியும்!" என்றார்.

மெஹர் பாபா சிரித்துக்கொண்டே கூறினார், "**மும்பைக்கு ஒருவர் விஜயம் செய்யும்போது, ஒரு குறிப்பிட்ட இடத்திற்குச் செல்வார். மும்பை நகரிலுள்ள அனைத்து மூலை முடுக்குளையும் பார்க்க மாட்டார். அதே போலத்தான் நானும் எல்லாவற்றையும் விளக்க முடியாது.**"

குல்மாயின் கணவர் கான் ஸாஹேப் மனைவியை அழைத்துச் செல்ல ஸாக்கோரிக்கு வந்தார். கோவில் விதானத்தில், மெஹர் பாபாவுடன் அனைவரும் மதிய உணவுக்காக அமர்ந்தபோது, குல்மாய், மஹாராஜின் கட்டளைக்கிணங்கி, அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதை நினைவில் கொண்டு, உபவாசம் இருந்ததால் உணவில் பங்கெடுக்காமல் அமைதியாக மறுத்தார். மெஹர் பாபா குறிப்பிட்டார்: "**கவலைப்படாதீர்கள். நீங்களும் உண்ணலாம்.**" குல்மாய் தயங்கவே, பாபா வற்புறுத்தினார். அந்த சலசலப்பு மஹாராஜின் செவிகளை எட்டியதும், அவர் குல்மாயை உணவில் பங்கெடுக்கக் கூறினார். இதுபோன்ற சூழ்நிலைகள் குல்மாயைப் பெரும் சோதனைக்குள்ளாக்கியது.

உணவுக்குப் பிறகு, மெஹர் பாபா, கான் ஸாஹேபைத் தனியாக அழைத்துச் சென்று பலவிதமான ஆன்மீக விளக்கங்களை வழங்கினார். மேலும் மஹாராஜைப் பற்றிய உண்மைகளையும் எடுத்துக் கூறினார். மாலை வேளையில் கான் ஸாஹேப், குல்மாயுடன் அஹமதுநகர் புறப்பட்டுச் சென்றார்.

1913ஆம் ஆண்டில் மேர்வான் இறைநிலையை அடைந்து, மெஹர் பாபா என்று அழைக்கப்படும் இத்தருணம் வரை, அவருடைய உண்மை நிலையை உணர்ந்து அல்லது அவருடைய இறையன்பின் தூண்டுதலால் பல நண்பர்கள், பார்சி இனத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமல்லாமல், இந்துக்கள் மற்றும் முஸ்லிம்கள் அவருடன் சீடர்களாக வந்து இணைந்தனர்.

டாக்டர் கனி வந்து இணைந்த பின்பு, மேலும் ஒரு முஸ்லிம் நண்பர் அப்துல் கரிம் அப்துல்லா (ABDUL KARIM ABDULLA), மெஹர் பாபாவின் தொடர்பில் வந்தார். அவர் ரம்ஸான் மாதத்தில் பிறந்ததால், ராம்ஜூ (RAMJOO) என்ற புனைபெயரால் அழைக்கப்பட்டார். ராம்ஜூ பூனாவில் துணி வியாபாரம் செய்து வந்தார். மெஹர் பாபாவை, முஸ்லிம் நண்பர்கள் ஒன்று கூடும் முன்ஷி ரஹிம் இல்லத்தில், முதன்முதலில் சந்தித்தார். ஆரம்ப காலத்திலிருந்து மெஹர் பாபாவுடன் தொடர்பு இல்லாத போதிலும், முதல் சந்திப்பிலேயே தன் இதயத்தைப் பறிகொடுத்தார், "இந்த ஈரானி துறவியைப் பற்றி அறிய மிகுந்த ஆவலாக உள்ளேன்" என்று குறிப்பிட்டார்.

மேலும், மெஹர் பாபாவின் தொடர்பில் வந்த இரண்டு ஈரானிய சகோதரிகள் - ஃபிரீனி (FREINY MASI - ஃபிரீனிமாசி) மற்றும் தவுலத் ஜஹாங்கிர் ஈரானி - DAULAT JEHANGIR IRANI (DAULATMAI - தவுலத்மாய்). ஃபிரீனிமாசி, ஹஸ்ரத் பாபாஜான் அமர்ந்திருந்த இடத்திற்கு எதிரே குடியிருந்தார். தினமும் பாபாஜானை சந்திப்பது வழக்கம். ஒரு முறை பாபாஜானின் முன்னிலையில் மெஹர் பாபாவை சந்திக்க நேர்ந்தது. முதல் சந்திப்பிலேயே, ஏதோ

இனம்புரியாத உணர்வில் தன் இதயத்தைப் பறிகொடுத்தார். ஃபிரீனிமாசி சகோதரி தவுலத்மாயிடம் ஹஸ்ரத் பாபாஜான் மற்றும் மெஹர் பாபாவைப் பற்றி விளக்கிச் சொல்லி, ஒரு நாள் பாபாஜானை தரிசனம் செய்ய அழைத்துச் சென்றார்.

மேலும் ஒரு சந்தர்ப்பத்தில், ஃபிரீனிமாசி, சகோதரி தவுலத்மாயை, மெஹர் பாபாவை சந்திப்பதற்காக சதாஷிவ் பாட்டீலின் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார். பஜனை நிகழ்ச்சி நிறைவடைந்ததும், ஃபிரீனிமாசி, தவுலத்மாயை பாபாவிற்கு அறிமுகப்படுத்தவே, பாபா, "**நீங்கள் என்னிடம் ஏதேனும் கேட்க விரும்புகிறீர்களா?**" என வினவினார்.

தவுலத்மாய், உடனடியாக எதையும் நினைவுக்குக் கொண்டுவர முடியாத நிலையில், பாபா மறுபடியும் அதே கேள்வியைக் கேட்க, இறுதியில் தவுலத்மாய் வினவினார், "எனது மகள் பிரோஜா, உடல் நலக்குறைவால் பசியில்லாமல் அவதிப்படுகிறாள். நான் என்ன செய்ய வேண்டும்?"

பாபா உடனே, "**பிரோஜாவை, உத்வாடாவிற்கு** (UDVADA) **அழைத்துச் செல்லுங்கள், அங்கே ஸொராஸ்டரின் அணையா விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. அங்குச் சென்றால் எல்லாம் சரியாகிவிடும்**" என்றார்.

சில நிமிடங்களுக்குப் பிறகு பாபா மறுபடியும், "**வேறு ஏதேனும் கேட்க விரும்புகிறீர்களா?**" என்று கேட்டார்.

தவுலத்மாய் அவர்களுக்கு நெருக்கமான, ஏறக்குறைய நாற்பது வயதான, திருமணமாகாத பெண்மணியை நினைவுகூர்ந்து, பாபாவிற்கு எடுத்துக் கூறினார். அதற்கு பாபா, அவரையும் அங்கு அழைத்துச் செல்லுமாறு கூறினார்.

மெஹர் பாபாவின் மீதுள்ள நம்பிக்கையில், தவுலத்மாய் இருவரையும் உத்வாடா அழைத்துச் சென்றார். மெஹர் பாபா கூறியது போல, பிரோஜா குணமடைந்தார். மேலும் அந்தக் கன்னிப்பெண் ஊருக்குத் திரும்பி வந்ததும், ஒரு விவாக சம்பந்தம் தானே தேடி வந்தது. திருமணம் நடந்து முடிந்த வேகம் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

முதல் சந்திப்பிலிருந்தே சகோதரிகள் - ஃபிரீனிமாசி, தவுலத்மாய் இருவரும் மெஹர் பாபாவின் மீது ஆழ்ந்த அன்பும் நம்பிக்கையும் கொண்டிருந்தனர். தவுலத்மாய், மெஹர் பாபாவின் கட்டளைப்படி, பல ஆண்டுகள் மௌனம் அனுஷ்டித்தார். மேலும் அவர்களின் இரண்டாவது பெண் மெஹரா (MEHERA), மெஹர் பாபாவின் முக்கிய பெண் சீடராக சேவை புரிந்தார் .

இவ்வாறு தாயும், மகளும் தங்கள் வாழ்க்கையை மெஹர் பாபாவின் பாதங்களில் அர்ப்பணம் செய்தனர்.

1921, ஜுன் மாதத்தில் சதாஷிவ் பாட்டீலின் மனைவி, கீதா, காலமானார். மெஹர் பாபா, இறுதிச்சடங்கில் பங்கெடுத்தார். அவருடன் முஸ்லிம், ஈரானியர், பார்சி அனைவரும் கலந்துகொண்டது, அக்கம் பக்கம் வாழ்ந்த அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. இவ்விதமான ஊர்வலம், மெஹர் பாபா, ஜாதி, மதம், குலம், கோத்திரங்களுக்கு அப்பாற்பட்டவர் என்பதைத் தெளிவாக

எடுத்துக்காட்டியது மட்டுமின்றி, ஆன்மீக குருநாதர் மெஹர் பாபா, '**எல்லோரும் ஒன்றே**' என்று கருதியதை, சாதாரண மனிதனுக்கு நிரூபித்தது.

அவ்வேளையில் ஒரு நாள், டாக்டர் கனி, மெஹர் பாபாவை சந்திக்க பூனா வந்திருந்தார். பாபா, மும்பையில் அவருடைய மருந்தகம் எப்படி நடக்கிறது என்று விசாரிக்கவே, கனி வருத்தத்துடன் குறை கூறி முறையிட்டார், "எவ்வளவோ முயன்றும் அமெரிக்காவிலிருந்து வரவேண்டிய ஒரு சில முக்கியமான மருந்துகள் வராதது, தொழிலுக்குப் பெருந்தடையாக உள்ளது."


"**அமெரிக்க நாட்டு கம்பெனிக்கு மேலும் ஒரு கடிதம் எழுது; அந்தக் கடிதத்தை முதலில் என்னிடம் எடுத்து வா! முகவரியை நானே எனது கையால் எழுதுகிறேன், அதற்குப் பின்னர் என்னவாகும் என்று பார்க்கலாம்!**" என பாபா கூறினார்.

டாக்டர் கனி பதிலளித்தார், "கடந்த இரண்டு ஆண்டுகளாக நானும் முயற்சித்து வருகிறேன். அந்தக் கம்பெனி பதிலே தருவதில்லை, ஆகையால் மேலும் ஒரு கடிதம் உதவுமென எனக்கு நம்பிக்கையில்லை."

அதற்கு மெஹர் பாபா, "**பார்க்கலாம்! அந்த மருந்து, அடுத்து நான் மும்பையில் எனது காலடிகளை எடுத்து வைக்கும் அதே நாளில் உன்னை வந்து சேரும்**" என்றார். டாக்டர் கனியும் பாபா கூறியபடியே கடிதத்தைத் தயார் செய்து, பாபா எழுதிய முகவரியுடன் அதனை அனுப்பி வைத்தார்.

சில நாட்களுக்குப் பிறகு, மெஹர் பாபா மும்பைக்குச் செல்ல நேர்ந்தது. அப்போது, டாக்டர் கனி பூனாவில் இருந்ததால், அவரும் ஏனைய நண்பர்களும் கூடவே மும்பைக்குச் சென்றனர். பாபா, மறைமுகமாக நண்பர்களிடம், "**நாம் அனைவரும் சிறப்புமிக்க டாக்டர் கனியின் மருந்தகம் சென்று பார்க்கலாமா?**" எனக் கூறி அழைத்துச் சென்றார். டாக்டர் கனி அஞ்சல் பெட்டியிலிருந்த கடிதத்தைப் படித்தார். அமெரிக்காவிலிருந்து அனுப்பிவைத்த மருந்துகளின் விபரங்கள் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. மெஹர் பாபாவின் வார்த்தைகள் உண்மையானதை எண்ணி மிகவும் பெருமிதம் அடைந்தார் டாக்டர் கனி. மெஹர் பாபா அனைத்தும் அறிந்தவர் என்பதற்கு மேலும் ஓர் எடுத்துக்காட்டாக இந்த சம்பவம் அமைந்தது.

குல்மாய் குடும்பத்தினர் அஹமதுநகரில் பார்சி தர்மசத்திரத்தில் தங்கியிருந்தனர். அதை ஒட்டி, 1921ஆம் ஆண்டு கட்டி எழுப்பிய ஒரு பெரிய வீட்டிற்கு 'ஸரோஷ் மன்ஸில்' (SAROSH MNZIL) என்று பெயரிடப்பட்டது. வீட்டின் திறப்பு விழாவுக்கு சத்குரு உபாஸனி மஹாராஜை அழைக்க குல்மாய் விரும்பினார். ஆனால், குடும்பத்தில் அனைவரும் இந்து சத்குருவை அழைப்பதில் ஆட்சேபனைத் தெரிவித்தனர். குல்மாய் பிடிவாதமாக இருந்தார். இவ்வாறு சில மாதங்கள் கடந்தன. இறுதியில் குல்மாய், கணவர் கான் ஸாஹேப் இருவரும் ஸாக்கோரிக்குச் சென்று மஹாராஜை அழைத்து வந்தனர்.




ஸரோஷ் மன்ஸில் - அஹமதுநகர்

ஆதி கே. ஈரானி



மெஹர் பாபாவும் ஏழு நாட்கள் மஹாராஜூடன் அங்குத் தங்கி அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டார்.

இவ்வேளையில், குல்மாயின் இரண்டாவது மகன் ஆதி கடுமையான ஜுரத்தால் பாதிக்கப்பட்டார். மஹாராஜ் கொடுத்த 'கியூனைன்' மாத்திரை ஆதிக்குப் பலமுறை தரப்பட்டது. மெஹர் பாபா இரவெல்லாம் ஆதிக்குத் துணையாக இருந்து தனி கவனம் செலுத்தி வந்தார். அவ்வப்போது மருந்து, தேநீர் தருவதும், கழிவறை செல்ல உதவவும் செய்தார். ஆதி எதிர்பார்த்ததை விட விரைவில் குணமடைந்தார். ஆதி தன்னுள் நினைத்துக் கொண்டார், "என்னுடைய தாயார் அல்லது தந்தையின் அன்பு என்பது ஒரு சிறிய குளத்தைப் போன்றது. அதே வேளையில் மெஹர் பாபாவின் அன்பானது கடல் போன்றது. எனவே, அன்பின் மொத்த உருவமாகத் திகழும் ஒருவரை நாடுவதே நல்லது!."

ஆதி, அப்போது, பூனாவில் ஒரு கல்லூரியில் பயின்று வந்தார். தன்னுடைய பக்தர் ஒருவரின் வீட்டிலிருந்து ஆதிக்குத் தேவையான உணவை அனுப்பி வைக்க ஏற்பாடு செய்வதாக மெஹர் பாபா உறுதியளித்தார். ஆதி ஒரு சாப்பாட்டுப் பிரியர், மெஹர் பாபாவின் இந்த யோசனை அவரைப் பெரிதும் மகிழச் செய்தது. இவ்வாறு, நாளடைவில் ஆதி, மெஹர் பாபாவின் நெருக்கமான வட்டத்திற்குள் நுழைந்தார்.

ஒரு முறை, மெஹர் பாபா ஆதியுடன் வீட்டிற்குப் பின்புறம், கிணற்றருகில் நீளமான கல் மேடையில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தார். அப்போது ஆதியிடம்: **"உனது எதிர்காலம், என்னுடைய பணிக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அன்பான என் அறிவுறுத்தல்களுக்குக் கீழ்ப்படிவது உனக்குப் பொருத்தமானதாக அமையும்"** மேலும் பாபா **"உன்னை நான் ஒரு விவேகானந்தராக மாற்றுவேன்"** என்றார். ஆதி ஆனந்தத்தில் துள்ளிக் குதித்தார். அதைத் தொடர்ந்து மெஹர் பாபா அழைக்கும் வரை, ஆதி காத்திருந்தார்.

குல்மாய் வீட்டு திறப்பு விழாவிற்கு வந்த சத்குரு உபாஸனி மஹாராஜ், ஏழு நாட்கள் ஒரு தனி அறையில் தங்கியிருந்தார்.

அவ்வேளையில் குல்மாய் அவரது அன்றாட வீட்டுச் செலவு தொகையிலிருந்து சேமித்தப் பணத்தை மஹாராஜிடம் நன்கொடையாக வழங்க விரும்பி அவர் முன் வைத்தார். மஹாராஜ் அதைத் தொடாமல், அருகில் நின்ற மெஹர் பாபாவை அழைத்து, குல்மாயிடம், "இவன் எனது பையன் மேர்வான். மிகவும் நல்லவன். என்னுடைய அனைத்து தேவைகளையும் கவனித்துக் கொள்கிறான். இந்தப் பணத்தை நீ அவனிடம் கொடுக்கலாம். அவன் எனது தேவையை அறிந்து செய்வான்" என்று கூறினார்.

மெஹர் பாபா, அதற்குப் பிறகு குல்மாயைத் தனியாக சந்தித்து, **"மஹாராஜ் எது செய்தாலும் அது நன்மைக்கே! அவர் இறைநிலையை அடைந்த சத்குரு! அவர் மனம் உலகளாவியது! அவருடைய தேவைகளில் நீங்கள் உதவ வேண்டும். உங்களுக்கு அவருடனான முற்காலத்**

**தொடர்பால் இப்போது அவர் வட்டத்திற்குள் வந்துள்ளீர்கள், அவர் இந்துவாக இருந்தாலும், ஸொராஸ்டருடன் மிகவும் நெருக்கமானவர்.**

**"நீங்கள் ஸாக்கோரிக்குச் சென்றிருக்கிறீர்கள். அந்தக் கிராமத்தில் தங்குவதற்கு உகந்த இடம் எதுவுமில்லை. சில அறைகள் தேவை, நீங்கள் எப்படியேனும் சிறிது பணம் ஏற்பாடு செய்தால் சிறப்பாக இருக்கும்"** என்றார்.

குல்மாய், உடனே எவ்வளவு பணம் தேவைப்படும் என்று கேட்க, '**நான்கு அல்லது ஐந்தாயிரம் ரூபாய்**' என மெஹர் பாபா கூறியதும், குல்மாய் தனது கணவரிடம் எடுத்துக் கூறி பணத்திற்கு ஏற்பாடு செய்தார்.

எட்டாவது நாள், மஹாராஜ், குல்மாய் வீட்டிலிருந்து புறப்படுவதற்கு முன்பு, பழைய மற்றும் புதிய வீட்டில் அமைந்த அனைத்து அறைகளுக்கும் சென்று பார்வையிட்டு, தான் தங்கியிருந்த அறையில் வைக்கப்பட்ட நீரை அனைத்து அறைகளிலும் தெளிக்குமாறுக் கூறி, அவர் இருந்த அறையைக் காட்டி, 'எல்லா தெய்வங்களின் சித்திரங்களையும் இந்த அறையில் வைக்கவும், வேறு எதுவும் இங்கே வைக்காமல், இதை ஒரு தனிப் பிரார்த்தனை அறையாக வைத்துக்கொள்ளுமாறும்' அறிவுறுத்தினார். மஹாராஜ் பயன்படுத்திய பொருட்களையும் குல்மாய் பத்திரமாக வைத்திருந்தார்.

குல்மாய், கான் ஸாஹேப், மெஹர் பாபா மற்றும் சிலர் மஹாராஜுடன் காரிலும், பிறர் ரயிலிலும் ஸாக்கோரிக்குப் புறப்பட்டனர். வழியில் மஹாராஜ் முக்கியமான ஒரு விளக்கத்தை எடுத்துக் கூறினார்: "சத்குரு என்பவர் ரயிலின் எஞ்சினைப் போல; ரயில் பெட்டிகள் அத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் வரை, சத்குரு அவற்றை இறுதியாகச் சென்றடைய வேண்டிய இடத்திற்கு எடுத்துச் செல்வார். அதுபோல் உங்கள் அனைவரின் ரயில் பெட்டிகளை மேர்வானோடு இணைத்துக் கொள்ளுங்கள். அவன் உங்கள் அனைவரையும் பத்திரமாக அழைத்துச் செல்வது உறுதி."

மேலும் மஹாராஜ், "நான் அந்த இயந்திரத்தை மேர்வானுக்கு வழங்கும்போது, உங்கள் தீர்க்கதரிசி ஸொராஸ்டர் தோன்றுவார்" என்று கூறி முடித்தார்.

1921ஆம் ஆண்டு ஜுன் மாதம் ஷிரீன்மாய், மேர்வான் சிறு குழந்தையாக இருந்த போது கண்ட கனவு போல, வேறொரு கனவும் காண நேர்ந்தது; பின்னர் அதை விளக்கமாக எடுத்துரைத்தார்: "நான் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தேன். மேர்வான் எதிர் வீதியில் ஒரு மரத்தின் கீழ் அமர்ந்திருந்தான். ஓர் அழகான மெல்லிய இந்து தேவதை, தலை முடியைப் பின்னலாகத் தொங்கவிட்டு, மூன்று தங்க பூக்களைச் செருகிக்கொண்டு, திடீரெனத் தென்பட்டாள். மெல்லிய உடலில் முத்து மாலைகளும், கை வளையல்களும் அணிந்திருந்தாள். ஒரு சிறுவனும் உடனிருந்தான். இருவரும் அருகாமையில் ஒரு கிணற்றிலிருந்து தோன்றி, இரு கரங்களையும் நீட்டி மேர்வானை நோக்கிச் சென்றனர். மேர்வான் எழுந்து அவர்கள் முன்னே நின்றான். நான்

அந்தப் பெண்ணின் அருகில் சென்று, 'நீ ஏன் இங்கு வந்தாய்? உனக்கு என்ன வேண்டும்? நீ யார்?' எனக் கேட்டதற்கு, அந்தப் பெண்ணோ, 'நான் பரமாத்மா… உனது மகனை என்னோடு அழைத்துச் செல்ல வந்துள்ளேன்' என்றாள்.

மெரோகை கைகளால் தழுவி, "எனது மகனை நான் என்னிடமிருந்து அழைத்துச் செல்ல அனுமதிக்க மாட்டேன்" என்றேன்.

மெரோக் உடனே, "என்னைப் போக விடுங்கள்! தடுக்காதீர்கள்! அம்மா, நான் அவர்களோடு சென்றாக வேண்டும்" என்றான்.

நான் மெரோகின் கைகளைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டு, அந்தப் பெண்ணை அங்கிருந்து போகச் சொன்னேன். உடனே, அந்த இரண்டு உருவங்களும் கிணற்றில் மறைந்தன.

ஷிரீன்மாய் கனவிலிருந்து விழித்ததும் ஷெரியாரை அழைத்தார். கவலையில் தாயார் கனவில் கண்டதைக் கணவருக்கு எடுத்துரைக்க, ஷெரியார் ஆறுதல் கூறினார். மெஹர் பாபா பக்கத்து அறையில் தூங்கிக்கொண்டிருந்தார். பெஹராம்ஜியும், குஸ்தாஜியும் அன்றிரவு அங்கே இருந்தனர். மெஹர் பாபா, தாயார் சொன்னதைக் கேட்டு, வாய்விட்டு சிரித்துக் கொண்டே, பெஹராம்ஜி, குஸ்தாஜி இருவரையும் அழைத்து, நடந்ததை எடுத்துக் கூறி, "**இது நல்லதல்ல**! **நல்லதே அல்ல**! **மிகவும் மோசம்**" என்றார்.

மெஹர் பாபா, இவ்வாறு கேலி செய்து சிரித்தது, தாயார் ஷிரீனுக்குக் கஷ்டமாக இருந்தது. சீற்றமடைந்த ஷிரீன்மாய், "மெரோக்! ஏன் இப்படி சிரிக்கிறாய்? இந்தக் கனவுக்கு என்ன அர்த்தம் என்பதைச் சொல்!" என்றார்.

அதைக்கேட்டு மெஹர் பாபா, சத்தமாக சிரித்துக் கொண்டே, "**அர்த்தம் எனக்குத் தெரியும்**" மேலும் கிண்டலாக, "**இது நல்லதல்ல**! **நல்லதே அல்ல**! **மிகவும் மோசம்**" என்றதும் தாயார் கோபமடைந்தார். அதன் உண்மையான அர்த்தத்தை பாபா சொல்ல மறுத்தார்.

பரமாத்மா அளவிறுதியற்ற பரிபூரண உணர்வால் உருவான கடவுள்; அவருடன் இப்போது மெஹர் பாபா இணையும் தருணம் ஆதலால் ஷிரீன்மாயைப் பொறுத்தவரை, 'இது நல்லதல்ல! நல்லதே அல்ல! மிகவும் மோசம்' என்று மறைமுகமாகக் கூறினார்.

அஹமதுநகரிலிருந்து, பூனாவுக்குத் திரும்பி வந்த மெஹர் பாபா சில தினங்களில், முன்ஷி ரஹிம் வேலை நிமித்தம் மும்பைக்கு இடம் மாற்றம் செய்யப்பட்ட செய்தியை அறிவித்தபோது, டாக்டர் கனி, 'இனிமேல் நாம் அனைவரும் எங்கே சந்திப்பது?' என்ற கேள்வியை எழுப்ப, மெஹர் பாபா, "**ஆரம்பத்திலிருந்தே எல்லா ஏற்பாடுகளும் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளன. சிறிது காலத்திற்குப் பிறகு, நமது நடவடிக்கைகளின் மையம் மும்பைக்கு மாற்றப்படும்**" என்று தெரிவித்தார்.

சில மாதங்களில், இந்தியாவில் ஆங்கிலேயரின் தடை உத்தரவு இயக்கம் ஆரம்பித்து, மதுபானம் மற்றும் மதுபானக்கடைகளுக்குத் தடை விதித்து, அவற்றை அப்புறப்படுத்தும் நோக்கத்தில் மறியல் போராட்டம் நடைபெற்றது; மெஹர் பாபா அவரது அடுத்தக்கட்ட பணியை ஆரம்பிப்பதற்கு அது பேருதவியாக இருந்தது. இதைக் காரணம் காட்டி மெஹர் பாபா, சத்குரு உபாஸனி மஹாராஜை சந்தித்துப் பேச இருப்பதாகவும், திரும்பி வர சில நாட்கள் ஆகலாம் எனவும் கூறிவிட்டு பூனாவிலிருந்து புறப்பட்டார். ஏறக்குறைய ஆறு மாதங்கள் அவர் திரும்பி வரவில்லை.

இந்த ஆறு மாத காலத்தில், மெஹர் பாபா தன்னுடைய சாதாரண மனித உணர்வை முற்றிலுமாகத் திரும்பப் பெற்று, 'கலியுகத்தின் அவதார புருஷர்' என்ற அடிப்படை பணியைத் தொடங்கினார்.

1914 ஜனவரியிலிருந்து 1922 ஜனவரி வரையான காலகட்டத்தில் நிகழ்ந்த மேர்வானின் அனுபவங்களைப் புரிந்துகொள்வது என்பது, இறைநிலையை எய்தும் செயல் முறையை முழுமையாகப் புரிந்துகொள்வதைப் போன்றதாகும்.

ஹஸ்ரத் பாபாஜான் அளித்த முத்தத்தில் மேர்வான் 'நான் கடவுள்' எனும் இறையுணர்வை எய்தினார். அவருடைய உள்ளுணர்வு அளவிலா ஆனந்தத்தில் மூழ்கியிருந்தது. அடுத்த ஏறக்குறைய இரண்டு வருடங்கள், இவ்வுலகம் அவருக்கு எவ்வகையிலும் தொடர்பில்லாதது போலிருந்தது. மேர்வானின் இறையுணர்வு, அளவிறுதியற்றது, பரிபூரணமானது. ஆனால் இறைவனுக்குரிய தனிப்பண்புகளான எல்லையில்லா அறிவு, சக்தி மற்றும் ஆனந்தத்தை ஆதிக்கம் செய்ய இயலாத நிலையிலிருந்தார். மேர்வானால், இறைவனுக்குரிய பரிபூரண ஒளியை உணர முடிந்தது. அதே வேளையில், இறைவனின் நிழலாகிய பிரபஞ்சத்தை உணர முடியாத சூழ்நிலையில் இருந்தார்.

கடவுள் மனித உருவில், ஆண்மகனாக, இப்பூவுலகில் 'மேர்வான்' என்ற பெயரில் அவதார புருஷனாக உருவெடுத்தார். இவ்வாறு, மேர்வான் அவதார புருஷனாக உருவெடுக்கும் நிலையில், பரிணாம வளர்ச்சி (EVOLUTION), மறுபிறவி (REINCARNATION), உட்சுழற்சி (INVOLUTION) எனும் செயல்முறைகளைக் கடக்க வேண்டியதில்லை (அவதார புருஷருக்கு அது தேவையற்றது). அக்காலகட்டத்தில் வாழ்ந்த ஐந்து சத்துருக்கள், உருவமில்லா இறைவனை மேர்வான் என்ற உருவில் பூமிக்குக் கொண்டு வந்தனர். ஆனால் 1913 வரை, அவரது இறை தன்மையிலிருந்து, மூலாதார சக்தி என்ற தனித்துவத்தை அடையாளம் கண்டு கொள்ளாமல் முகத்திரையால் ((முக்காடு) மறைத்து வைத்திருந்தனர். 1914ஆம் ஆண்டு ஹஸ்ரத் பாபாஜான் அளித்த அன்பு முத்தம், மேர்வான் மீது இருந்த முகத்திரையைக் கிழித்தெறிந்த அக்கணத்தில், மேர்வான் 'நான் கடவுள்' என்ற உண்மை நிலையை உணர்ந்தார். இருந்தாலும், அதே

நேரத்தில் மனித உணர்வை முற்றிலும் இழந்தார். அவருடைய உடல் தானாகவே இயங்கியது. உடலைக் குறித்த எந்த உணர்வுமில்லாமல், எல்லையற்ற அறிவு, சக்தி, ஆனந்தம் எனும் இறைவனுக்கே உரித்தான தனிப் பண்புகளை மட்டுமே உணர்ந்தார்.

இவ்வாறு, மேர்வான், ஹஸ்ரத் பாபாஜான் மூலமாக எல்லையில்லா ஆனந்தத்தை அனுபவித்தார். ஷிர்டி சாய் பாபா அளித்த அளவிறுதியற்ற சக்தியை அடையப்பெற்ற அவ்வேளையில் மேர்வான், சத்குரு உபாஸனி மஹாராஜ் மூலமாக எல்லையில்லா அறிவையும் அடையப்பெற்றார். சத்குரு நாராயண் மஹாராஜ், தாஜுதீன் பாபா இருவரும் மேர்வானை பூமியில் கொணரும் நேரடிச் செயலில் ஈடுபட்டிருந்தாலும், இறைநிலையை எய்திய பின்பு, மறைமுகமாக மேர்வான் சாதாரண மனித உணர்வை மீட்டெடுக்கத் துணை புரிந்தனர்.

சுருக்கமாகச் சொல்லப்போனால், சத்குரு நாராயண் மஹாராஜ், தாஜுதீன் பாபா இருவரும் மேர்வானை ஆழ்மன தளங்களைக் (5, 6) கடக்கவும், சாய் பாபா சூட்சும (நுட்ப) தளங்களைத் (சக்தி நிறைந்த தளங்கள் - 4, 3, 2 & 1) தாண்டவும் வழிவகுத்தனர். இறுதியாக, சத்குரு உபாஸனி மஹாராஜ் கல்லால் அறைந்த சம்பவம், மேர்வானை மிகச்சிறிய அளவில் சாதாரண உலக உணர்வை மீட்டெடுக்க வழிவகுத்தது.

அக்காலகட்டத்தில் வாழ்ந்த ஐந்து சத்குருக்களும், இவ்வாறு, நேரடியாக அல்லது மறைமுகமாக மேர்வானை இப்பூவுலகில், அவதார புருஷர் என்ற நிலைக்கு ஆளாக்கினர். சத்குரு உபாஸனி மஹாராஜின் நேரடி பங்கு, இறுதியில் மேர்வானை அனைத்து ஆன்மீகத் தளங்களிலும் செயல்படச் செய்தது. கடைசி ஏழுவருட காலத்தில், மேர்வான் தன்னுடைய சாதாரண உலக உணர்வை முழுமையாக அடையப்பெற்றதோடு, பரிபூரண இறை உணர்வையும் உள்ளடக்கி, அவதார புருஷராகப் பொறுப்பேற்கும் நிலையை எய்தினார்.

சாதாரண மனிதனுக்கு பௌதீக உலகைக் குறித்த உணர்வு மட்டுமே உள்ளது; இறையுணர்வைப் பற்றி எதுவும் தெரியாது. மனிதனுக்கு, கடவுளைப் பற்றிய உண்மை, சற்றும் தெரிய வாய்ப்பில்லை. ஆன்மீகப் பாதையில் பயணிக்கும் யாத்ரீகர், முதல் மூன்று சூட்சும (நுட்ப) தளங்களில் பிரவேசிக்கிறார். அவர் இறைவனின் சக்தியை அறிவார். நான்காவது தளத்திலிருக்கும் ஒருவரை, குபேரன் என்பார்கள். அவர் இறைவனின் அளவிலா பூரணசக்தி என்ன என்பதை அறிவார். உயர் நிலையை அடைந்த, 'வாலி' என்று அழைக்கப்படுபவர் ஐந்தாவது தளத்திலும், 'பிர்' என்று அழைக்கப்படும் சித்தர் ஆறாவது தளத்திலும் நிலைகொண்டுள்ளனர். ஐந்து மற்றும் ஆறாவது தளங்கள், ஆழ்மன உலகில் அடங்கிய தளங்களாகும். இத்தளங்களில் இறைவனின் எல்லையற்ற வாழ்வை அவர்கள் கண்கூடாகக் காணமுடியும். இறையுணர்வை அடைந்த பரிபூரண ஆத்மா, இறுதியில் ஏழாவது தளத்தை அடையும்போது பரிபூரண இறையுணர்வைப் பெற்று, அவரே கடவுள் என்பதை அறிந்து கொள்கிறார்.

இறையுணர்வு ஒரு முறை அடையப் பெற்றதும் அது நித்திய, நிரந்தர உணர்வாக இருக்கும்.

நித்தியமும் நிரந்தரமுமான இறையுணர்வு எந்த சூழ்நிலையிலும் பாதிக்கப்படுவதில்லை. எல்லையும் முடிவும் இல்லாத, எல்லாவற்றையும் தன்னுள்ளடக்கிய ஓர் உண்மைப்பொருள். இருந்தாலும், இறைநிலையை அடையப்பெற்ற ஒருவர் மூவுலகிலும் (ஆழ் மன உலகம் - 6, 5ஆவது தளம், சூட்சும உலகம் - 4, 3, 2 & 1ஆவது தளம், நாம் வாழும் பூமி, பௌதீக உலகம்) அவரது உலகளாவிய பணியில் ஈடுபட, இம்மூவுலகின் உணர்வுகளும் இன்றியமையாதது. இதுவே அவதார புருஷரின் செயல்பாட்டு நிலையாகும்.

எனவே, சாதாரண மனித உணர்வை அடைய, ஏழாவது நிலையிலிருந்து, படிப்படியாக ஆறு, ஐந்து, நான்கு, மூன்று, இரண்டு வழியாக ஒன்றாவது நிலையைக் கடந்து, பௌதீக உலகை வந்தடைய வேண்டியது இன்றியமையாதது. இவ்வாறு இறையுணர்வுடன் இம்மூவுலக உணர்வுகளையும் தன்னுள் அடக்கும் அவதார புருஷர் மிகச்சிறப்பான, ஆசீர்வதிக்கப்பட்ட நிலையை அடையப்பெற்றவர்.

இவ்வண்ணம், சத்குருக்கள், அவதார புருஷர் - இவர்களின் இடையேயுள்ள முக்கியமான வேறுபாடு என்னவெனில்:

சத்குரு இறை மற்றும் மனித உணர்வுகளை அடையப் பெற்றிருந்தாலும், அவர் அனைவரின் மத்தியில் தானும் ஒருவராக இருக்கிறார். ஆனால் அவதார புருஷர், தான் அனைவராகவும், அனைத்து பொருட்களாகவும் மாறிவிடுகிறார் . ஆகையால், அவதார புருஷர், உலக உணர்வை அடைய, பூமியில் வருவது என்பது அளவற்ற வேதனைக்குரியது. உதாரணமாக, சிறுவர்கள், தாஜுதீன் பாபா மீது விளையாட்டாகக் கற்களை வீசியபோது, அவர் அதனால் காயமடைந்தது போலத் தோன்றினாலும், வலியை உணரவில்லை. ஆனால், சத்குரு உபாஸனி மஹாராஜ் மேர்வானை நோக்கி எறிந்த கல் அவரைக் காயப்படுத்தியது மட்டுமின்றி வலியையும் உணர வைத்தது. இன்னும் விரிவாகக் கூறுவதானால், சத்குரு, நாடக மேடையில் நடிக்கும் ஒரு பாத்திரத்தைப் போன்றவர். அதே வேளையில் அவதார புருஷர் அந்த நாடக மேடையில் அந்தப் பாத்திரத்துடன் இரண்டறக் கலந்து விடுகிறார்.

1915-1921, இந்த ஏழு ஆண்டுகளில் மேர்வான் சாதாரண மனித உணர்வை மீட்டெடுக்கும் வேளையில், படிப்படியாக, சுற்றுப்புற சூழ்நிலைகளை உணரத் தொடங்கினார். இவ்வாறு அவருடைய உள் இறைத்தன்மை, பிரகாசமான ஒளிக்கதிர்களை வெளிப்படுத்திய தருணத்தில், மேர்வான், மேர்வான் ஸேட் என்றழைக்கப்பட்டு இறுதியில் ‘மெஹர் பாபா’ எனும் இறைப்பெயர் நிரந்தர பெயராக மாறியது. அடிப்படையான உண்மை என்னவெனில், மெஹர் பாபா, உலகத்திலுள்ள அனைத்து பொருட்களும், தன்னுள்ளிருந்து, ‘ஓம்’ எனும் மையத்தின் வழியாக உருவெடுத்து வெளிப்படுவதை உணர்ந்தார்.

அவருடைய இறையுணர்வு ஒரு பக்கம், அதே வேளை, மனித பக்கத்தை உற்று நோக்கினால், அது உணர்வில்லாத, முன் சிந்தனையற்ற தானியங்கியாகச் செயல்பட்டது. தானியங்கியின் தன்மையானது, ஒரு முறை தொடங்கினால் அடுத்த கட்டளை வரும் வரை அது இயங்கும். மெஹர் பாபாவின் செயல்களும் அப்படித்தான் இருந்தன. 1915ஆம் ஆண்டிலிருந்து, மெஹர் பாபா, ஒரு செயலைச் செய்யத் தொடங்கினால் பிறர் தலையிடுவதுவரை தொடர்வது வழக்கம். கடைசி ஆறு மாதங்கள், மெஹர் பாபா ஸாக்கோரியில் இருந்தபோது, இடைவிடாமல் வெற்றிலையை மென்று வந்தார். அதற்காக இரவும் பகலும் இரண்டு சீடர்களை மஹாராஜ் நியமித்தார். இவ்வாறு, தினமும் நூற்றுக்கும் மேலாக, ஒரு தொழிற்சாலையில் உற்பத்தி செய்வது போல் இருவரும் செயல்பட்டனர்.

வழக்கமாக, மெஹர் பாபா இரவு நேரங்களில் நிறைய வெற்றிலை மென்று வந்தார். ஓரிரவு, யஷ்வந்த் எனும் சீடர், தொடர்ந்து அந்தப் பணியில் ஈடுபட்டதால் சோர்வடைந்து மயக்கமானார். உடனே அங்குத் தோன்றிய மஹாராஜ், யஷ்வந்தைத் தட்டி எழுப்பித் திட்டினார்: “மறுபடியும் இப்படி கவனக்குறைவாகத் தூங்கி என்னிடம் மாட்டிக் கொள்ளாதே; மேர்வானுக்கு நீ செய்வது புனிதமான கடமை என்பதைத் தெரிந்துகொள்; மேர்வானுக்கு சேவை செய்ய நீ எவ்வளவு பாக்கியவானாக இருக்கவேண்டும் தெரியுமா? இனிமேல் இப்படி கவனக்குறைவாக இருக்காதே. இது ஒரு சீடன் குருவிற்கு எவ்வளவு கடமைப் பட்டவன் என்பதை எடுத்துக் காட்டுகிறது.”

மெஹர் பாபா, உலக உணர்வை மீட்கும் தருணத்தில், பிரபஞ்சத்தில் அவர் தனியாகவும், அனைத்து உலகங்களும் அவர் ஒருவருக்காகவே என்பதை உணர்வுபூர்வமாக மட்டுமல்லாமல் உண்மையிலேயே அனுபவப்பூர்வமாகவும் உணர்ந்தார். உதாரணமாக, ஒரு மனிதன் நடப்பதை, உண்பதை, அல்லது உரையாடுவதை அவர் பார்க்கும் போது, தன்னையே அந்த மனிதரிடம் பார்த்தார் என்பது மட்டுமன்றி, அங்கே நடப்பதும், உண்பதும் அல்லது உரையாடுவதும் எல்லாம் அவரே, என்பதையும் அறிந்தார். தானே எல்லாமாக, எல்லோருமாக இருப்பதைத் தெளிவாக உணர்ந்தார் .

மெஹர் பாபாவின் அனுபவங்களை ஆழமாக சிந்தித்து, விபரங்களை அறிந்து கொள்வது, சாதாரண மனிதனுக்கு இயலாத காரியம். அதே வேளையில், முக்கியமாகப் புரிந்துகொள்ள வேண்டியது என்னவெனில், இறையுணர்வு என்பது வேறு பல உணர்வுகளைவிட (ஆழ் மன, சூட்சும மற்றும் பௌதீக உணர்வுகள்) தனிப்பட்டதும், அப்பாற்பட்டதுமாகும். இது பரிபூரணத்தின் மொத்த உருவம், எல்லையற்றது, என்றுமிருப்பது. உண்மையாகச் சொல்லப் போனால் அதைத் தவிர வேறொன்றுமில்லை.

இறையுணர்வைப் பொறுத்த வரை, பிரபஞ்சத்துடன் சம்மந்தப்பட்டது எதுவுமேயில்லை; உலகம், அதிலடங்கிய அனைத்து பொருட்கள், அதில் வாழும் அனைத்து ஜீவராசிகள், மனிதர்கள் - அவர்களைப் பற்றிய எவ்வித உணர்வும் இறையுணர்வில் இருக்காது. சத்குருக்கள் மற்றும் அவதார புருஷருக்கு, உலக

உணர்வை முற்றிலுமாக அடைந்த பின்னரும், தமது கட்டுப்பாட்டில் இருக்கும் பிரபஞ்சம் வெறும் நிழல் போலத்தான்.

மெஹர் பாபா, உலக உணர்வை மீட்டெடுக்கும் காலகட்டத்தில், உலகில் வாழும் அனைவரின் தனிப்பட்ட எண்ணங்கள், எண்ணிலடங்கா அளவில் தன் உலகளாவிய மனதில் வந்து குவிந்து, ஒரு கணம் திக்குமுக்காட வைத்த அனுபவத்தை விளக்கினார். இவ்வளவு வேகமாக வரும் அனைத்து எண்ணங்களின் விளைவை எடுத்துரைக்க முடியாது. ஆனால் அவர் மனம் உலகளாவிய நிலையை அடைந்ததால் தாங்கிக் கொள்ள முடியும் என்பதை விளக்கினார்.

எண்ண அலைகள் மனித அறிவுக்கு எட்டும் வேகத்தைவிட அதிவேகத்தில் அதிர்வுறும். அனைத்து மானிடர்களின் அளவிலா எண்ண அலைகள், மெஹர் பாபாவின் உலகளாவிய மனதில் எந்நேரமும் பெருக்கெடுத்தோடும். இறையுணர்வை அடைந்து, சாதாரண உலக உணர்வைத் திரும்பப் பெறும் ஆரம்ப காலத்தில், அவருடைய உலகளாவிய மனமும் செயல்படத் தொடங்கியது. அப்போது ஒரு நாள், மெஹர் பாபா ஸாக்கோரியில் ஒரு கால்வாய் கரையில் தனியாக அமர்ந்திருந்த வேளையில், ஓரிரு நிமிடங்களில், உலகில் வாழும் ஆயிரக்கணக்கான மக்களின் அனைத்து எண்ணங்களும் தன் உலகளாவிய மனதில் வேகமாக நுழைவதை உணர்ந்தார். அதன் மிகப்பெரிய விளைவாக, கடுமையான வலியை அனுபவித்தார். சங்கடமான, அமைதியற்ற அந்த சூழ்நிலையில், அதிர்ச்சியிலிருந்து மீண்டுவரும் எண்ணத்தில், தனது தலையை தண்ணீரில் மூழ்கடிப்பதை வழக்கமாகக் கொண்டார்.

மேலுமொரு முறை ஸாக்கோரியில் நடந்த ஒரு சம்பவத்தை மெஹர் பாபா விளக்கினார்: “**என் இதயத்திலிருந்து வட்ட வடிவில் ஒளிக்கதிர்கள் வெளிவருவதை உணர்ந்தேன். இதயம் தானாகவே திறந்த போது, அதனுள் எண்ணிலடங்கா வட்டங்கள் வெடிப்பதையும் கண்டேன். அளவிலா அனைத்து பிரபஞ்சங்களும் என் இதயத்திலிருந்து வெளிவந்தன. ஒவ்வொன்றிலிருந்தும் எண்ணிலடங்கா கிரகங்கள், சந்திரன்கள் மற்றும் சூரியன்கள் வெளிவந்தன.**”

மதுபானக்கடையில் மெஹர் பாபா, தன் உடலால் கடுமையாக உழைத்தது, பெருமளவில் உலக உணர்வை விரைவில் மீட்டெடுக்க உதவியாக இருந்தது .

உலக உணர்வை மீட்டெடுப்பது என்பது, மெஹர் பாபாவின் வாழ்வில் ஒரு முக்கியமான கட்டமாகும். அவ்வேளையில், தூய்மையான நல்லொழுக்கம், மிகையான பணிவு இரண்டும் அனைத்து செயல்களுக்கும் அடிப்படையாக அமைய வேண்டியது அவசியம். இத்தகைய ஆழ்ந்த பணிவுத் தன்மையை அடையப் பெறுவதற்கு, மெஹர் பாபா, இறைநிலையை அடைந்து, ‘சத் சித் ஆனந்த்’ எனும் தனிச் சிறப்பை அனுபவிக்கும் தருணத்திலும், மூன்று

ஆண்டுகள், குற்றேவல் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். இவ்வேளையில், கழிவறைகளை சுத்தம் செய்தல், மதுபானக்கடை மற்றும் சுற்றுப்புறங்களைத் தூய்மை படுத்தல், அசுத்தமான டம்ளர், தட்டுகளை சுத்தம் செய்தல் போன்ற செயல்கள் அனைத்தையும் மனம் சலிக்காமல் பணிவுடன் செய்து வந்தார்.

மெஹர் பாபாவின் இணை பிரியா நண்பரும், பங்குதாரருமான பெஹராம்ஜி (BEHERAMJI), தான் கண்கூடாகக் கண்டதை இவ்வாறு நினைவு கூர்ந்தார்:

"ஒரு முறை மேர்வான் ஸேட், பாட்டில்களை நிரப்பத் தொடங்கினால், கடைசி பாட்டில் நிரம்புவது வரை ஓயமாட்டார். எவ்விதமான வேலையாக இருந்தாலும், பூரண விருப்பத்துடன் அதைச் செய்தார். பெரும்பாலும் அங்கு வந்த வாடிக்கையாளர்கள் ஏழைகள். முரட்டுத்தனத்துடன் பண்பாடில்லாமல், அசுத்தமான உடையயில் அநாகரிகமாகப் பேசி பழகக் கூடியவர்கள். அமர்ந்திருக்கும் இடத்திலேயே எச்சிலைத் துப்பும் பழக்கமுடையவர்கள். மேர்வான் ஸேட் மனம் சலிக்காமல் அனைத்தையும் சுத்தம் செய்வது வழக்கம். பெரும்பாலோர் குடிகாரர்கள். குடித்ததும் இருந்த இடத்தில் அல்லது தெருவோரங்களில் சாய்வதும், அமளியில் ஈடுபடுவதும் அனுதினமும் நிகழும் கூத்து. மேர்வான் ஸேட், இவர்களுக்குப் பணிவிடை செய்வதும், இரக்கமாக நடந்து கொள்வதும் கண்கொள்ளாக்காட்சி."

மதுபானக்கடை, மெஹர் பாபாவிற்குப் பணிவாக இருக்கவும், குற்றேவல் பணிகளில் ஈடுபடவும் உதவியாக இருந்தது. அவருடைய நோக்கம் நிறைவடைந்த அடுத்த கணமே, தடை உத்தரவு நடைமுறைக்கு வந்தது. அனைத்து மதுபானக்கடைகளும் சூறையாடப்பட்டன.

பிரபஞ்சத்தில் அடங்கியுள்ள உலகங்களின் எண்ணிக்கை, மனித மனதின் கற்பனைக்கு அப்பாற்பட்டது. ஆனால், இறைநிலையை அடைந்த ஒருவருக்கு இது சாத்தியம். மனித இனம் வாழும் 18000 கிரகங்கள் மட்டுமல்லாமல், வெவ்வேறு பரிமாணங்களில் காணப்படும் ஆயிரக்கணக்கான கிரகங்களைப் பார்க்கவும், எண்ணவும் முடியும். ஸாக்கோரியில், 1921ஆம் ஆண்டு ஓரிரவு, மெஹர் பாபா, உபாஸனி மஹாராஜுடன் அமர்ந்திருந்தபோது, மஹாராஜ் குறிப்பிட்டார்: "எனது சாதாரண கண்களால், அனைத்து பிரபஞ்சங்களிலும் உள்ள எல்லா கிரகங்களையும் நான் கணக்கிட முடியும். அதற்காக, எனது மனதை மட்டும் ஒருநிலைப்படுத்த வேண்டியது அவசியம்" எனக் கூறிக்கொண்டே கிரகங்களைக் கணக்கிடத் தொடங்கினார்.

கிரகங்களின் வேகம் மிகவும் அதிகமாக இருப்பதால், மனதை ஒருநிலைப்படுத்தி கணக்கிடும் வேளையில், உடலை துறக்கவும் வாய்ப்புள்ளதால், மெஹர் பாபா உடனே தலையிட்டு மஹாராஜைத் தடுத்து நிறுத்தினார். அதுபோல, மெஹர் பாபாவும் முயற்சித்தபோது, மஹாராஜ் அதைச் செய்யவிடாமல் தடுத்தார்.

இதற்கிடையில், ஆறு மாதங்கள் மெஹர் பாபா தொடர்ந்து ஸாக்கோரியில் இருந்ததால், ஷரீன்மாய் மிகுந்த மன வேதனையில் ஹஸ்ரத் பாபாஜானை அணுகி, தனது மகன் எப்போது திரும்பி வருவான் என்று கேட்டு முறையிட்டார் .

பாபாஜான் முணு முணுத்துக்கொண்டே, “எனது பிரியமான மகன்.... எனது மகன்” என்றார்.

ஷிரீன்மாய் அவரை நோக்கிக் கத்தினார், “அவன் உன் மகனல்ல! என் மகன்.”

பாபாஜான், மிகவும் அமைதியான குரலில், “நீங்கள் எங்கிருந்து அவனைக் கொண்டு வந்தீர்கள்? அவன் எங்கிருந்து வந்தான்?” எனக் கூறிக்கொண்டே தனது குரலை உயர்த்தி, “அவன் அனைத்து உலகுக்கும் சொந்தமானவன். உங்களுக்கு மட்டுமல்ல” மறுபடியும் அமைதியான குரலில், “என் அருமை மகன்!.... என் அருமை மகன்!....” என்றார். ஷிரீன்மாய் நம்பிக்கை இழந்த நிலையில், வெறுத்துப் போய் திரும்பிச் சென்றார் .

ஷிரீன்மாய், தனது தாயார் கோலண்டூனை அனுப்பி பாபாஜானிடம் முறையிட்டு, மெரோகை மீட்க முயன்றார். கோலண்டூன், பாபாஜானை சந்தித்தபோது, அவருடைய நடைமுறைகள் மற்றும் விளக்கங்கள் மெரோகின் உண்மை நிலையை உணரவைத்து அவர் உள்ளத்தை நெகிழச் செய்தது.

இறுதியில், ஷிரீன்மாய் ஆழ்ந்த கவலைக்குள்ளாகி, வேறு வழி தெரியாமல், சத்குரு உபாஸனி மஹாராஜை எதிர்க்கொள்ள ஸாக்கோரிக்குச் சென்றார். இதற்கு முன்னரும், மேர்வானை மீட்கும் முயற்சியில், பலமுறை அங்குச் சென்று வந்தார். ஆனால் ஒவ்வொரு சந்திப்பிலும், மஹாராஜ், சுவாரஸ்யமாகப் பேசி, ஷிரீன்மாயின் கவனத்தைத் திசை திருப்பி உரையாடலைத் தொடரவே, அவர், வந்த நோக்கத்தையும் மறந்து திரும்பிச் செல்வது வழக்கமாகிவிட்டது. பூனா வந்த பின்பு ஷிரீன்மாய் மஹாராஜை, சாபமிட்டுத் திட்டுவது சகஜம், “இந்தத் தந்திரம் படைத்த யோகி என்னை மறுபடியும் முட்டாளாக்கிவிட்டார். இது எனது சாபம்! எனது மகனை என்னிடமிருந்து பிரித்துவிட்டார்.”

ஆனால் இந்த முறை மஹாராஜின் தந்திர வலையில் சிக்கக்கூடாது என்ற சபதத்துடன் சென்றார். ஷிரீன்மாய் கோயிலில் நுழைந்ததும், மஹாராஜ் அவரை “ஓ தாயே! வாருங்கள்... வாருங்கள்...” என்று வரவேற்றார். ஷிரீன்மாய், அதைக் கேட்டு எரிச்சலடைந்து, “நீங்கள் இவ்வளவு வயதான கிழவனாக இருக்கும்போது, நான் எப்படி உங்களுக்குத் தாயாக முடியும்?” என்று கேட்டார்.

“ஓ! நீங்கள் அனைத்து உலகத்திற்கும் தாயார். என் அருமை பெண்மணியே!” என்றார் மஹாராஜ்.

மஹாராஜ் இம்முறையும் ஏதோ சூழ்ச்சி செய்கிறார் என்பதை உணர்ந்து, “இப்படியெல்லாம் சிலாகித்து என்னை ஏமாற்றிவிட முடியாது. அதற்காக நான் இங்கு வரவில்லை. எனது பையனை அழைத்து வாருங்கள். நான் அவனுக்காகத்தான் வந்தேன்” என்று கூறினார்.

மஹாராஜ் கனிவாகக் கூறினார், “தாயே! முதலில் என்னுடன் சற்று நேரம் அமருங்கள்”, அதற்குப் பிறகு தனது முக்கிய பெண் சீடர், துர்காபாயை அழைத்து, “மேர்வானின் தாயாருக்காக ஏதாவது விசேஷமான உணவு தயார் செய்யுங்கள்” என்றார். ஷிரீன்மாய், இதற்கிடையில், தான் கொண்டு வந்த மலர் மாலையை மஹாராஜுக்கு அணிவிக்க மறந்ததால், உடனே பொட்டலத்தை அவிழ்த்தார். உபாஸனி மஹாராஜ் குறிப்பிட்டார், “எவ்வளவு அழகான செருப்பு மாலையைக் கொண்டு வந்துள்ளீர்கள்?”

“என்ன சொன்னீர்கள்?” என்று ஷிரீன்மாய் உரக்க கத்தினார்.

ஷிரீன்மாய், மஹாராஜிடம் “நீங்கள் கூறியதன் அர்த்தம் என்ன? நான் இந்தப் பூமாலையை உங்களுக்காகப் பூனாவிலிருந்து எடுத்து வந்தேன்” என்றார்.

மஹாராஜ் குறுக்கிட்டு, “எனக்குத் தெரியும் நீங்கள் என்ன நினைத்துக் கொண்டிருந்தீர்கள்! இங்கு வந்ததும் ‘என்னோடு எப்படி முறையிட்டு, வாக்குவாதத்தில் ஈடுபடலாம்’ என எண்ணி, வழியெல்லாம் திட்டித் தீர்த்தீர்கள்?” என்றார்.

ஷிரீன்மாய் திகைப்பில், மஹாராஜ் கூறிய உண்மையை அமைதியாக ஒப்புக்கொண்டார். ஆனால், மஹாராஜ் சாதுரியமாகப் பேசி, சதி செய்வதாக உணர்ந்து, “மஹாராஜ், இப்போது என்னை முக்கிய விஷயத்திலிருந்து திசைத் திருப்பாதீர்கள்! நான் எனது பையனோடு பேச வந்திருக்கிறேன்! எங்கே அவன்?” **எனக் கேட்டார்**

மஹாராஜ் அமைதியாக பதிலளித்தார்: “அவன் இங்கேதான் இருக்கிறான். ஏன் இங்கிருக்கிறான் என்று எனக்குத் தெரியாது. அவன் மனநிலை சரியில்லாமல் இருப்பது போலத் தோன்றுகிறது. எனக்கு அவனை வைத்து என்ன செய்வதென்றும் தெரியவில்லை. நான் அவனை இங்கிருக்குமாறு வற்புறுத்துவதும் இல்லை. சில வேளைகளில் நான் அவனை, கழியால் அடித்து விரட்டியிருக்கிறேன். இருந்தாலும் என்னை விட்டுச் செல்ல மாட்டேன் என்கிறான். நான் என்ன செய்யட்டும்?... தாயே! அவனை வீட்டிற்கு அழைத்துச் சென்று என்ன செய்யப் போகிறீர்கள்? அது அவனுக்கு உதவியாக இருக்கும் என்று நினைக்கிறீர்களா?”

ஷிரீன்மாய் பதிலளித்தார், “ஆமாம். நான் அவனுக்கு உதவுவேன். பூனாவுக்குத் திரும்பிச் சென்றதும், அவனுடைய திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வேன்” என்றார்.

“அது நல்ல யோசனை” மஹாராஜ் பதிலளித்து, சத்தம் செய்யாமல், தந்திரமாகக் கூறினார், “தாயே! மேர்வானை அழைத்துச் செல்லும் முன்னர் ஒன்று செய்யுங்கள்! நீங்கள் அவனுக்கு அருமையான பெண்ணைத் தேடும்போது, எனக்கும் தேடுங்கள். அப்போது, நாங்கள் இருவரும் உங்களோடு திருமணத்திற்காக, பூனா வருகிறோம்.”

ஷிரீன்மாய், மஹாராஜ் கூறியதைக் கேட்டு அதிர்ச்சியடைந்து, “உங்களைப் போன்ற மனிதருக்கு யார் பெண் கொடுப்பார்கள்?” என்று கேட்டதும்,

"நான் உங்கள் மகனாக இருக்கும்போது எப்படிப் பொருத்தமற்றவனாக இருக்கமுடியும்?" என்று மஹாராஜ் கேட்டார்.

சத்குரு உபாஸனி மஹாராஜ் இப்படிக் கேட்டது, ஷிரீன்மாய்க்கு மிகுந்த எரிச்சலை ஊட்டியது, "இவ்வாறு நையாண்டி செய்வதை நிறுத்திவிட்டு மெரோகை உடனே வரச்சொல்லுங்கள்" என்றார்.

மஹாராஜ், உடனே அருகிலிருந்த குல்மாயைக் காட்டி, "இவர் குல்மாய், அஹமதுநகரிலிருந்து வந்திருக்கிறார். இவரும் பார்சி இனத்தைச் சார்ந்தவர். அவரோடு பேசி, பழகி உங்கள் கோபத்தை சற்று தணித்துக் கொள்ளுங்கள். அதற்குப் பிறகு, மேர்வானை சந்திக்கும் போது, கேள்வி மேல் கேள்வி எழுப்பி அவனை தொந்தரவு செய்யாதீர்கள். அவனுடன் சந்தோஷமாகப் பேசிவிட்டுப் புறப்படுங்கள்." மஹாராஜ் தொடர்ந்து, "அன்புள்ள தாயே! அவனை மகனாக அடையப் பெற்றது, உங்களின் அதிர்ஷ்டம். இது உங்களின் சிறந்த முன்வினைப் பயனாகும். நான் என்ன செய்ய முடியும்? ஆன்மீகப் பாதையில் தொடர்ந்து செல்ல நீங்கள் உதவியாக இருக்கவேண்டும். அவனை உலகத்தில், நரக வாழ்க்கையில் தள்ளி விடாதீர்கள். அவனது திருமணம் ஒரு நாள் நடக்கும்!" என்று புத்திமதி கூறினார். மஹாராஜ் சொன்னதைக் கேட்டு, குல்மாயுடன் மனம் விட்டுப் பேசிய பின்பு ஷிரீன்மாய் அமைதியானார்.

உபாஸனி மஹாராஜ், அவரது உரையாடலைத் தொடர, ஷிரீன்மாயின் கவனம் முழுவதும் அதில் இருந்தது. திடீரென, மஹாராஜ் ரயில் வரும் நேரம் நெருங்குவதை நினைவூட்டி, "ஓ! நேரமாகி விட்டது! நீங்கள் உடனே புறப்பட வேண்டும். இல்லையேல், ரயிலைத் தவறவிடுவீர்கள்" என்றார்.

ஷிரீன்மாய், அவசரத்தில் மெரோகை மறந்து விட்டார். காத்திருந்த குதிரை வண்டியில் ஏறி சென்றுவிட்டார். ரயிலில் ஏறிய பின்பு ஞாபகம் வந்தது இம்முறையும் மெஹர் பாபாவை சந்திக்க முடியவில்லை என்று! வீடு சென்றதும், பெஹராமிடம், "இந்த யோகி தந்திரமாக மறுபடியும் என்னை ஏமாற்றிவிட்டார்" என்று கூறி வருத்தப்பட்டார்.

நாட்கள் கடந்தன. ஷிரீன்மாய் அவரது துயரத்தைக் கட்டுப்படுத்த முடியாமல், சத்குரு நாராயண் மஹாராஜை சந்தித்து முறையிடும் எண்ணத்தில் கேட்காவ்ம் சென்றார். நாராயண் மஹாராஜ் அன்புடன் வரவேற்று, "தாயே! நீங்கள் மிகவும் பாக்கியசாலி. உங்கள் மகன் ஜகத், உலகத்திற்கெல்லாம் இறைவன், மேலும், வருங்காலத்தில், மனிதகுலம் உங்களை அனைத்து உலகங்களின் தாயார் என்று பெருமையுடன் வணங்கும். பொறுமையாக இருங்கள். எல்லாம் சரியாகிவிடும். உங்கள் மகன் யார் என்பதை ஒரு நாள் நீங்கள் அறிவீர்கள்." என்று எடுத்துரைத்தார். நாராயண் மஹாராஜ் எடுத்துக் கூறிய வார்த்தைகள் ஷிரீன்மாய்க்கு மிக்க ஆறுதலாக இருந்தன. இருந்தாலும், அவர் கூறியதன் முழு அர்த்தத்தையும் அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை. மெரோகின் பிரிவைத் தாயாரால் அவ்வளவு எளிதாக எடுக்க முடியவில்லை.

மெஹர் பாபா இன்னமும் ஸாக்கோரியில்தான் இருந்தார். வீட்டிற்கு வரவுமில்லை; எந்த விதமான தொடர்பும் வைத்துக் கொள்ளவில்லை.

ஷிரீன்மாய்க்குத் தெரிந்தவர்கள், அக்கம் பக்கம் உள்ளவர்கள் மற்றும் அந்த இனத்தைச் சார்ந்தவர்களின் கேலித்தனமான பேச்சு, அதீத கஷ்டத்தைத் தந்தது. பூனாவில் வாழ்ந்த சில பார்சி இனத்தவர்கள் மேர்வானின் ஆன்மீகப் போக்கு, போலியானது, கபடநாடகம் எனக் குறைகூறி, "அவன் ஒரு நாள் இமயமலைக்கு ஓடிப்போய், அவனுடைய குரு உபாஸனி மஹாராஜைப் போல் ஆடை ஏதும் அணியாமல் சாதுவாகத் திரிவான்" என்று கேலியும் கிண்டலும் செய்தனர்.

சில வேளைகளில், பார்சி இனத்தவர்கள் ஹஸ்ரத் பாபாஜானையும் குறை கூறினர், "மேர்வான் ஏன் இந்தச் சூனியகாரிக்கு அடிபணிந்து வணங்க வேண்டும்? அந்தக் கிழவி அவனை மந்திரத்தால் மயக்கிவிட்டார்!" இப்படி, ஷிரீன்மாய், தன்னுடைய அருமை மகனின் நிலையை எண்ணி, எதிர்காலம் என்னாகுமோ என்ற அச்சத்தில் பெரிதும் கவலைப்பட்டார். தனது பயத்தை கணவரிடம் பகிர்ந்ததும், ஷெரியார் தனது மகன் இறைவனுக்குச் சொந்தம் என்ற உண்மையை ஏற்றுக்கொண்டார்.

மெஹர் பாபா ஸாக்கோரிக்குச் சென்ற பின்னர், அவருடைய சகோதரர் பெஹராம், தினமும் மெஹர் பாபாவின் அறையை சுத்தம் செய்து, விளக்கேற்றி வைப்பது வழக்கம். பெஹராம், ஜால் இருவரும் மெஹர் பாபாவின் உயர்வான ஆன்மீக நிலையை ஏற்றுக் கொண்டாலும், அண்ணன் ஜாம்ஷெட், மெஹர் பாபாவின் மீதுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையில், அவருடைய புகைப்படத்தை அறையில் வைத்து வணங்கி வந்தார். சில நேரங்களில் மெஹர் பாபாவும் அந்தப் புகைப்படத்தைப் பணிவோடு வணங்குவதுண்டு.

ஷிரீன்மாய், இவ்வாறு மெரோக் அருகிலில்லாமல் பெரிதும் தவித்தார். அவருடைய பிரிவைத் தாங்கிக்கொள்ள முடியாமல் கண்கலங்கினார். ஒரு வாரத்திற்குப் பிறகு மறுபடியும் மஹாராஜை சந்திக்க ஸாக்கோரிக்குச் சென்றார். ஆனால் இம்முறை, இன்னும் உறுதியாகத் திட்டமிட்டுச் சென்றார். மஹாராஜை எதிர்க்கொண்டு கடினமான குரலில், "எனது பையனை ஏன் எனக்குத் திருப்பித் தரமாட்டேன் என்கிறீர்கள்? அவனை என்னிடமிருந்து எடுத்துச் சென்றீர்கள், இப்போது என்னிடம் திருப்பிக் கொடுங்கள்" என்றார் ஷிரீன்மாய்.

"மேர்வானை நான் இங்குக் கைதியாகப் பிடித்து வைக்கவில்லை" என்று உபாஸனி மஹாராஜ் தெரிவித்தார். "நீங்கள் அவனை அழைத்துச் செல்லுங்கள். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? அவனை, நான் இங்குப் பிடித்து வைக்கவுமில்லை. சங்கிலியால் கட்டிப் போடவுமில்லை."

ஷிரீன்மாய் எரிச்சலில், "நீங்கள் சொல்லவில்லை என்றால் அவன் வரமாட்டான் என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும்" என்றதும்,

உபாஸனி, “நான் எதுவும் சொல்லப் போவதில்லை. என்ன முடிவு எடுக்க வேண்டுமோ அதை அவனே எடுக்கட்டும்” என்றார்.

உபாஸனி உடனே தனது பார்வையை ஷிரீனின் கடைசி பையன் ஆதியின் பக்கம் திருப்பி (ஆதி தாயாருடன் வந்திருந்தான்), அமைதியான தந்திர குரலில், “நான் என்ன செய்வேனென்று இப்போது சொல்கிறேன். இதை மட்டும் எனக்காகச் செய்யுங்கள். நான் மேர்வானை உங்களோடு அனுப்பி வைக்கிறேன். ஆனால் இந்தப் பையன் ஆதியை இங்கு என்னிடம் விட்டுச் செல்லுங்கள்” என்றார்.

அவ்வளவுதான். ஷிரீன்மாய்க்கு வந்த கோபத்தில், “என்ன தைரியம் உங்களுக்கு? ஏற்கனவே என்னுடைய ஒரு மகனை விழுங்கி விட்டீர்கள். இரண்டாவதாக இன்னும் ஒருவனை விழுங்கப் பார்க்கிறீர்களா? இப்போது, இந்த நிமிடம் மேர்வானை இங்கே வரச்சொல்லுங்கள்” என்றார்.

உபாஸனி மஹாராஜ் பதிலளித்தார், “தாயே! தயவு செய்து சற்று அமைதியாக இருங்கள்”, என்று கூறி ஷிரீன்மாயின் பாதங்களில் பணிவுடன் வணங்கி, மேர்வானை அழைத்துவரச் சொன்னார்.

மேர்வான் மயங்கிய நிலையில் தள்ளாடிக் கொண்டே அங்கு வந்தார். ஷிரீன்மாய், மேர்வானை அருகில் சென்று உற்று நோக்கினார். தலைமுடி சடை போல வளர்ந்து, கிழிந்த, அழுக்கு துணியுடன் காணப்பட்டார். ஷிரீன்மாய் கொண்டுவந்த ஆடையையும் அணிய மறுத்துவிட்டார்.

உபாஸனி, மேர்வானிடம், “உனது தாயார் மறுபடியும் வந்துள்ளார். உன்னை அவருடன் வீட்டுக்கு அழைத்துச் சென்று, உனக்குத் திருமணம் செய்து வைக்க ஆசைப்படுகிறார். ஒவ்வொரு முறை இங்கு வரும்போதும், கோபத்தில் என்னுடன் வம்புச் சண்டையில் ஈடுபடுகிறார். எனக்கே வெறுத்துவிட்டது. எனவே, இப்போது நீ உன் தாயாருடன் செல்லலாம்” எனக் கூறி சிரித்துக் கொண்டே, அமைதியாக மேலும் தொடர்ந்தார், “நீ ஒரு திருடனாக மாறி, பொய் பேசி, அடுத்தவரிடமிருந்து திருடுவதை நான் விரும்புகிறேன். இங்கிருந்து போய் விடு. அப்போதுதான் உன் தாயார் சந்தோஷமாக இருப்பார்கள். அப்போது நீ நரகத்தைச் சென்றடைவாய்.”

“இதுபோன்ற வேடிக்கையான பேச்செல்லாம் எனக்குத் தேவையில்லை” என்று ஷிரீன்மாய் கத்தினார், “நான் முடிவாகச் சொல்கிறேன், எனக்கு எனது பையன் திரும்பத் தேவை!”

மெஹர் பாபா, மஹாராஜின் அருகில் நின்று கொண்டு, புன்முறுவலோடு இருந்தவர், திடீரெனச் சோகமாகத் தென்பட்டார். துர்காபாய் அவ்வேளை, உண்ண உணவு எடுத்து வந்தார். ஷிரீன்மாயும், ஆதியும் அவருடன் வெளியே சென்று ஒரு மரத்தின்கீழ் அமர்ந்தனர். துர்காபாய், ஷிரீன்மாயிடம், “நாம் என்ன செய்ய முடியும்? உங்கள் பையன் மஹாராஜை விட்டுச் செல்ல விரும்பவில்லை. மஹாராஜ் அவருக்கு ஜன்னல் எதுவும் இல்லாத ஒரு மிகச்சிறிய அறையைக் கொடுத்துள்ளார். உள்ளே எதுவுமில்லை, ஒரே கும்மிருட்டு. மஹாராஜ் எந்த விதமான வசதிகளும் வழங்கவில்லை.

இருந்தாலும் உங்கள் மகன் அவர் அருகிலேயே இருக்க விரும்புகிறார். நான் இதைவிட எதுவும் விளக்க முடியாது. அவர் மஹாராஜை மிகவும் நேசிக்கிறார். இங்கு இருப்பதையே விரும்புகிறார்" என்றார்.

ஷிரீன்மாய் அழுது கொண்டே, "எனக்கு எதுவும் புரியவில்லை. மஹாராஜ் எனது பையனை ஏன் திரும்பத் தர மறுக்கிறார்? மேர்வான் வீட்டிற்குத் திரும்பி வர மறுப்பது ஏன்? மஹாராஜ் எனக்கு ஏன் இவ்வளவு கஷ்டம் தரவேண்டும்?" இந்த வார்த்தைகளைக் கேட்டு துர்காபாயும் கண்ணீர் விட்டார்.

ஷிரீன்மாய் மறுபடியும் மஹாராஜ், மெஹர் பாபா இருவரும் இருந்த அறைக்குச் சென்றார். மஹாராஜ் இறுதியாக இவ்வாறு கூறினார், "உங்கள் மகன் வீட்டிற்குத் திரும்பிச் செல்வதை விரும்பவில்லை. திருமணம் செய்து சந்ததிகளை அடைவதிலும் ஆசையில்லை. எனவே, நீங்கள் ஆசைகளைத் துறந்து, வீட்டிற்குச் செல்லுங்கள். அவன் இங்கு என்னுடன் இருப்பதையே விரும்புகிறான்." உபாஸனி மஹாராஜ், ஷிரீன்மாயை அன்புடன் அரவணைத்து, "மேர்வான் மீதுள்ள உங்கள் அன்பிற்கு நான் அடிபணிகிறேன்." மஹாராஜின் வார்த்தைகள் அவ்வளவு ஆறுதலாக இல்லாமல் இருந்தாலும், ஷிரீன்மாய் அமைதியாக அங்கிருந்து புறப்பட்டார்.

வீட்டிற்குத் திரும்பி வந்தவர், எவரிடமும் எதுவும் பேசாமல் அவரது அறைக்குள் சென்று கண்ணீர்விட்டு அழுதார். தனது அருமை மகனை இழந்த நிலையை எண்ணி அவரால் ஆறுதலடைய முடியவில்லை. ஷெரியார் எவ்வளவோ எடுத்துக் கூறியும் எதையும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. இதயம் நொறுங்கியது போலாகிவிட்டார். இந்த நிலையிலிருந்து மீள முடியாமல், ஷிரீன்மாய் அவதிப்பட்டு, நோயால் படுக்கையிலானார். ஷெரியார், டாக்டரை வரவழைத்தார். ஷிரீன்மாய் மனநிலை, உடல்நிலை இரண்டிலும் பாதிக்கப் பட்டிருப்பதாகவும், நிலைமை சரியில்லை என்றும் தெரிய வந்தது. தாயார் கோலண்டூன் மற்றும் ஷெரியார் எவ்வளவோ முயன்றும் ஒன்றும் செய்ய இயலாமல் நம்பிக்கையை இழந்தனர்.

வாரங்கள் கழிந்தன. எவ்வித முன்னேற்றமும் தென்படாத நிலையில், 'ஷிரீன் உயிரைத் துறந்து விடுவாரோ' என்று ஷெரியாருக்குத் தோன்றியது. ஒரு நாள் ஷெரியார், படுக்கையில் அமர்ந்து ஷிரீன்மாய் தூங்குவதைப் பார்த்துக் கொண்டிருந்த வேளையில், கதவைத் திறந்து இரண்டு உருவங்கள் படுக்கையை நோக்கி வந்தன. ஒன்று மேர்வானுடைய தோற்றத்திலும், மற்றொன்று தலைப்பாகையும், ஜிப்பா போன்ற சட்டையும் அணிந்து ஷிர்டி சாய் பாபா போலவும் காட்சியளித்தனர். இரண்டு உருவங்களும் ஷிரீன்மாயின் படுக்கை அருகில் நின்று சில நிமிடங்கள் உற்றுநோக்கி மறைந்தன. அதற்குப் பிறகு ஷிரீன்மாய் கண் விழித்து, பல வாரங்களில் முதல் முறையாகத் தெளிவாகப் பேசினார்; அருந்த நீர் கேட்டார். ஷெரியார் தண்ணீர் கொடுத்த மறுகணமே ஆச்சரியமாக உடல் நிலையில் பெரிய மாற்றம் தென்பட்டது. வீட்டில் அனைவரும் மகிழ்ச்சியடைந்தனர்.

மெஹர் பாபா ஸாக்கோரியிலிருந்த ஆறு மாத காலத்தில், ஒரு முறை கூட உபாஸனி மஹாராஜின் ஆஷ்ரமத்தைவிட்டு வெளியே சென்றதில்லை. மஹாராஜ் கொடுத்த அந்தச் சிறிய அறையிலேயே தங்கியிருந்தார். அவருடைய ஒரே உடைமையான சிறிய மரப்பெட்டியில் தன்னுடைய சில கடிதங்கள் மற்றும் காகிதங்களை வைத்திருந்தார். ஒரே சட்டையும், காலுறையும் அணிந்திருந்ததால் அவை கிழிந்த நிலையில் இருந்தன. ஹஸ்ரத் பாபாஜான் கொடுத்த காலணியை மட்டுமே அணிந்தார். உலக உணர்வை மீட்டெடுக்கும் இவ்வேளையில் மெஹர் பாபா கடைசி ஆறு மாதங்கள் தூங்கவோ அல்லது ஓய்வெடுக்க சாய்ந்ததோ இல்லை. குறிப்பாக, கண் இமைகளை மூடவும் இல்லை. இந்நிலையில் ஆறு மாதங்கள் நீராடாமலிருந்ததால், மெலிந்த உடலில் பேன்களும், அழுக்கும் நிறைந்து காணப்பட்டார்.

ஒவ்வோர் இரவிலும், பஜனை, பிரார்த்தனைக்குப் பிறகு, மெஹர் பாபா, மஹாராஜூடன் அவர் அறையில் இரவெல்லாம், காலை நான்கு, ஐந்து மணிவரை ஆன்மீகப் பணியில் ஈடுபட்டார். யஷ்வந்த் ராவ், மஹாராஜின் சீடர், மெஹர் பாபாவுக்காக வெற்றிலை பொட்டலம், அறைக்கு வெளியே தயார் செய்து வைத்திருப்பதும், மெஹர் பாபா, தேவைப்படும் வேளையில் வாங்கிக் கொள்வதும் வழக்கம். மெஹர் பாபா, உபாஸனி மஹாராஜ் இருவரும் இருந்த அறையிலிருந்து விசித்திரமான ஓசையும், சில நேரங்களில் அழுகை குரலும் வெளிவரும் என்று சொல்லப்பட்டது.

கிராமத்து மக்கள், மஹாராஜுடன் மெஹர் பாபா இவ்வளவு நெருக்கமாக இருந்ததால், அவரை மஹாராஜின் வாரிசு என்றெண்ணி உரிய மதிப்பும் மரியாதையும் அளித்து, வணங்கி வந்தனர். இருந்தாலும், அங்கு வாழ்ந்த சில பிராமண சீடர்கள் பொறாமை அடைந்தனர். இரவில் மெஹர் பாபாவும், மஹாராஜும் சேர்ந்திருக்கும் வேளையில் வரும் விசித்திரமான அழுகைக்குரலைக் கேட்டு, செய்த பாவத்திற்காக வருந்தி வேண்டுதல் செய்ததாகப் பேசிக் கொண்டனர். உபாஸனி மஹாராஜ், மேர்வானை ‘மஹாதேவ்’ என்று அழைத்தபோது, அங்கிருந்த பிராமண சீடர்கள் கடுங்கோபமடைந்தனர். ஆனால், கிராமத்து மக்கள், மெஹர் பாபாவின் அன்பான குணத்தைக் கண்டு, மாலை வேளைகளில் அவருடன் அமர்ந்திருந்ததோடு உண்ண சுவையான உணவும் அவ்வப்போது எடுத்து வந்தனர்.

துர்காபாய், சத்குரு உபாஸனி மஹாராஜின் ஆன்மீகத் தாயார். அவருக்கு மெஹர் பாபா மீது தனிப்பட்ட பாசம் உண்டு. மஹாராஜ், மெஹர் பாபாவுடன் அவருக்கான ஆன்மீக உறவை, துர்காபாய்க்கு மட்டுமே தெரிவித்திருந்தார். துர்காபாய், அனைத்து விஷயங்களுக்கும் மெஹர் பாபாவின் கருத்தைக் கேட்டு செயல்படுவதும், அவருக்காக உணவு தயார் செய்து வைத்துக் காத்திருப்பதும், வர காலதாமதமானால் உட்கார்ந்து கண்கலங்குவதும் தினமும் நடக்கும் காட்சி. ஒரு முறை மெஹர் பாபா, பூனாவில் வாழும் சீடர்களுக்கு, துர்காபாயைப் பற்றி எடுத்துக் கூறினார், “உங்களில் ஒருவர் கூட

என்னை துர்காபாயைப் போல நேசித்ததில்லை. என்னுடைய உறவுகள் கூட என் மீது இவ்வளவு பாசம் வைத்ததில்லை."

மெஹர் பாபாவின் ஆன்மீகத் தாயார் குல்மாய் ஸாக்கோரிக்கு வந்த வேளையில் மெஹர் பாபா அவரை, தனது அறைக்கு அழைத்துச் சென்றார். அறையிருந்த அவல நிலையைக் கண்டு, குல்மாய் மிகவும் திகைத்துப் போனார். மெஹர் பாபாவின் அனுமதியுடன், அவர் அந்த அறையை சுத்தம் செய்தார். அதற்குப் பிறகு, குல்மாய், துர்காபாயுடன் சென்று தங்கினார்.

இவ்வேளையில், கான் ஸாஹேப், குல்மாய் இருவரும் வழங்கிய பணத்தில் கோயிலும், தங்கும் விடுதிகளும் கட்டத் தொடங்கினர். கொத்த வேலை செய்யும் ஒருவரை நியமித்து, அவருடைய கண்காணிப்பில் மஹாராஜின் சீடர்கள் - ஆண், பெண் அனைவரும் பணிபுரிந்தனர். துர்காபாய் மாட்டுவண்டி ஓட்ட, இதர பெண்மணிகள் பிற பணிகளில் ஈடுபட்டனர். மெஹர் பாபாவும், குல்மாயும் அவ்வப்போது கைகொடுத்து உதவினர்.

மாலை வேளையில், பிரார்த்தனை, பூஜை முடிந்த பின்னர், அங்கிருந்த அனைவரும், மெஹர் பாபாவுடன் இணைந்து, நீண்ட நேரம் பஜனை பாடுவது வழக்கம். மெஹர் பாபா பாடிய கருத்துமிக்க சில வரிகள்:

**"பிரேம நகரம் செல்லும் பாதை கடினமானது!"**

மேலும்…

**"கடவுளே! நீ ஏன் புல்லாங்குழல் வாசித்தாய்?"**

குல்மாய், இப்பாடல்களை மெஹர் பாபாவுடன் அமர்ந்து, பல நாட்கள் பயிற்சி செய்து வந்தார்.

மெஹர் பாபா ஸாக்கோரியில் இருந்த கடைசி ஆறு மாதங்களில் கண்களை மூடியதில்லை. ஓய்வெடுத்ததும் மிகக் குறைவு. உபாஸனி மஹாராஜ், மெஹர் பாபாவிடம் வந்து, 'வா மேர்வான், வா' என்று அழைத்து அவருடைய கூரை வீட்டில் அமர்ந்து, ஆன்மீகப் பணியில் இருவரும் மும்முரமாக ஈடுபட்டு வந்தனர். மஹாராஜ் எடுத்துக் கூறியதைக் காகிதத்தில் எழுதி, தன்னுடைய மரப்பெட்டகத்தில் பத்திரமாக வைத்தார். பல மணி நேரம், இரவு இரண்டு மூன்று மணி வரை மஹாராஜ் எடுத்துரைக்க, மெஹர் பாபா எழுதிக்கொள்வது வழக்கம்; என்ன எழுதினார் என்பது எவருக்கும் தெரியாது .

துர்காபாய் எப்பொழுதும் மெஹர் பாபாவுக்காக காத்திருப்பது வழக்கம். உணவு, மெஹர் பாபா எவ்வேளையில் வந்தாலும், தயாராக இருக்கும். துர்காபாய், மஹாராஜின் நம்பகமான சீடராக இருந்தார். மெஹர் பாபாவிடம் அளப்பரிய அன்பு வைத்திருந்தார். ஸாக்கோரி ஆஷ்ரமத்தில், சத்குரு உபாஸனி மஹாராஜ், 'மெஹர் பாபா, அவதார புருஷன், ஆதி சக்தி' என்ற உண்மையை தன்னுடைய ஆன்மீகத் தாயார் துர்காபாய்க்கு மட்டுமே வெளிப்படையாகத் தெரியப்படுத்தினார்.

மெஹர் பாபா பகல் வேளையில் துர்காபாயின் சமையலறைக்கு வந்து, உண்ணும் வேளையில் குல்மாயையும் தன்னுடன் உண்ண அமருமாறு வேண்டினார். ஒரே தட்டில் இருவரும் உண்ணுவதையும் விரும்பினார். அவ்வாறு உண்ணும் வேளையில் மெஹர் பாபா பெயரளவில் ஓரிரு வாய் உண்ட பின்னர் எஞ்சியிருந்ததை குல்மாய் உண்ணுமாறு செய்வது வழக்கம்.

இந்த ஆறு மாத காலகட்டத்தில், பகல் நேரங்களில், மெஹர் பாபா, தமது மதுரமான குரலில் இறைவனை நினைந்து பாடினார். ஒரு முறை பாட ஆரம்பித்தால் தன்னை மறந்து பல பாடல்கள் பாடுவதை வழக்கமாகக் கொண்டார். அருமையான பாடல்களின் எதிரொலி மஹாராஜின் காதுகளை எட்டி, அவரைக் கண்கலங்கச் செய்தது. பாடல்களில் நிறைந்துள்ள இறை இன்பத்திற்கு, கண்ணீர் ஒரு சான்றாகும்.

ஒரு நாள், யஷ்வந்த் ராவ், ஒரு பெரிய கம்பளி கோட்டை மெஹர் பாபாவிற்குப் பரிசாக வழங்கினார். பல வருடங்களாக மெஹர் பாபா அது கிழிந்த பின்னரும் தைத்து, சரி செய்து அணிந்து வந்தார்.

ஆறுமாத காலம் நிறைவுறும் தருவாயில், மெஹர் பாபா அங்கிருந்து சென்று விடும் செய்தி அனைவருடைய செவிகளையும் எட்டியது. சத்குரு உபாஸனி மஹாராஜ், தரிசனத்திற்காக வருபவர்களிடம், “நீங்கள் மேர்வானிடம் செல்லுங்கள். நான் என்னுடைய பொறுப்பையும், அதிகாரத்தையும் அவனிடம் ஒப்படைத்து விட்டேன். திறவுகோல் இப்போது மேர்வானிடம் உள்ளது” என்று கூறினார்.

மற்றுமொரு சந்தர்ப்பத்தில், மஹாராஜ் அவருடைய சீடர்களிடம், “நான் சாய் பாபாவிடமிருந்து பெற்றுக்கொண்ட அனைத்தையும், மெஹர் பாபாவிடம் கொடுத்துவிட்டேன். சாய் பாபா எனக்குக் கொடுத்தது உங்களுக்கு வேண்டுமாயின், மேர்வானிடம் செல்லுங்கள்” என்று கூறினார்

அதற்குப் பிறகு நடந்த ஒரு பெரிய கூட்டத்தில், உபாஸனி மஹாராஜ் மெஹர் பாபாவைச் சுட்டிக்காட்டி துர்காபாயிடம் கூறினார், “இந்த சிறுவன் அனைத்து உலகத்தையும் ஆட்டிப்படைப்பான்!”

வேறு ஒரு தருணத்தில், கரக்பூர் மற்றும் நாக்பூரிலிருந்து வந்த உபாஸனி மஹாராஜின் சீடர்கள் பங்கெடுத்த கூட்டத்தில், தன்னுடைய ஆன்மீக சொற்பொழிவுக்கு மத்தியில், திடீரெனப் பேச்சை நிறுத்திவிட்டு, மெஹர் பாபாவைச் சுட்டிக்காட்டி, “இதுவரை, ஒரு குருவும் ஆன்மீக இறை ஞானத்திற்காகக் கல்லூரி திறந்தது கிடையாது. ஆனால் இவன் அதைச் செய்வான்” என்று கூறினார்.

**1921** இறுதியில், குஸ்தாஜி ஸாக்கோரிக்கு அழைக்கப்பட்டார். மஹாராஜ், மெஹர் பாபாவுடன் அமர்ந்திருந்த வேளையில், குஸ்தாஜியை

நோக்கி கம்பீரமான குரலில், "நான் மேர்வானை, பரிபூரணமாக்கிவிட்டேன். இந்நேரத்திலிருந்து அவனையே பின்பற்ற வேண்டும்" என்று அறிவித்தார்.

சதாஷிவ் பாட்டீலையும் ஸாக்கோரிக்கு அழைத்தார். மஹாராஜுடன் அமர்ந்திருந்த போது, திடீரென மஹாராஜின் கண்களில் நீர் ததும்ப கூறினார், "சாய் பாபா எனக்கு அளித்த அனைத்தும் இப்போது மேர்வானிடம் உள்ளது. அனைத்தையும் அவனுக்குத் தந்துவிட்டேன்… அனைத்து சுமையும் இப்போது அவன் தோள்களில்தான் உள்ளது!"

இறுதியாக, 1921 டிசம்பரில், பூனாவிலிருந்து, பெஹராம்ஜியும் மெஹர் பாபாவை சந்திக்க அழைக்கப்பட்டார். உபாஸனி மஹாராஜ், பெஹராம்ஜியை ஒருபுறமாக அழைத்துச் சென்று கூறினார், "உன் நண்பன் இப்போது பரிபூரணமாகிவிட்டான். எப்பொழுதும் மேர்வான் சொல்வதையே கேட்டு, மனமார கீழ்ப்படிந்து நடக்கவேண்டும்."

மெஹர் பாபாவின் ஆரம்பகால சீடர்கள் அவர் மீது அதீத நம்பிக்கை வைத்திருந்தாலும், இவ்வளவு பெருமைக்குரிய சத்குரு எடுத்துரைத்த வார்த்தைகள் அவர்களுடைய நம்பிக்கையை மேலும் ஊர்ஜிதப்படுத்தின. அனைவரும் பூனா திரும்பி வந்து மெஹர் பாபாவைப் பற்றிய மஹாராஜின் பிரகடனத்தை அனைவருக்கும் அறிவிக்கவே மெஹர் பாபா 'பரிபூரணமானவர்', 'சத்குரு' என்றெல்லாம் செய்தி எங்கும் பரவியது.

இறுதியில், உலகமே வெகுகாலமாக எதிர்நோக்கிய அந்த நாள் வந்துவிட்டது. அவதார புருஷனின் பணி, தன்னலமற்ற சேவை உலக மக்களை வந்தடையும் வேளை வந்துவிட்டது.

1922 ஜனவரியில் மெஹர் பாபா ஸாக்கோரியிலிருந்து புறப்பட்டு, தன்னுடைய உலகளாவிய பணியைத் தொடங்க ஆயத்தமானார். புறப்படும் ஓரிரு நிமிடங்களுக்கு முன்னர், சத்குரு உபாஸனி மஹாராஜ், மெஹர் பாபாவை அழைத்து, இருகரம் கூப்பி வணங்கி பறைசாற்றினார்:

"மேர்வான், நீ ஆதிசக்தி! முதல் நிலையான மூலாதார சக்தி! நீ இந்த யுகத்தின் அவதார புருஷன்!"

மெஹர் பாபா ஆனந்த கண்ணீர் வடித்து, மஹாராஜின் பாதங்களில் அடிபணிந்தார். உபாஸனி மஹாராஜ், மெஹர் பாபாவின் கைகளைப் பற்றிக்கொண்டு நீண்ட நேரம் கண்கலங்கி அழுது, 'மேர்வான்! என் அருமை மேர்வான்!' என்றார். சொல்ல வேறு வார்த்தைகள் இல்லை.


மெஹர் பாபா, சத்குரு உபாஸனி மஹாராஜுடன் இருந்த அனைவரையும் வணங்கி விடைபெற்று, வேகமாக அங்கு நின்றுகொண்டிருந்த குதிரை வண்டியில் ஏறி அமர்ந்தார். மஹாராஜின் பெண் சீடர்கள் அருகில் வந்து மெஹர் பாபாவின் பாதங்களை வணங்கும் வரை குதிரை வண்டி அங்கிருந்து நகரவில்லை. சில வினாடிகளில் குதிரை வண்டி புறப்பட்டு ரயில் நிலையம் சென்றது. அங்கிருந்து மெஹர் பாபா மும்பைக்குச் சென்றார்.

குதிரை வண்டி கண்களிலிருந்து மறைவது வரை மஹாராஜ் கண்கலங்கி பார்த்துக் கொண்டே நின்றார். துர்காபாயின் இதயம், மெஹர் பாபா

மீதான அளப்பரிய அன்பால் வலித்தது. ஸாக்கோரியிலிருந்த அனைவரின் இதயங்களிலும் தனக்கென ஓர் இடத்தை பிடித்துக் கொண்டார் மெஹர் பாபா.

இப்போது, மெஹர் பாபாவிற்கு வயது ஏறக்குறைய 28. இளமை, அழகு, வலிமை வாய்ந்தவர், யோகிகளின் அரசன். சத்குரு உபாஸனி மஹாராஜிடமிருந்து மெஹர் பாபா விடைபெறும், உள்ளத்தை நெகிழ வைக்கும் காட்சி, கலியுகத்தை ஆனந்த கண்ணீர் சிந்த வைத்தது. காலத்தின் எதிர்பார்ப்பு வீண்போகவில்லை. இறை ஒலி இவ்வாறு பறைசாற்றியது:

அவதார புருஷர் வந்துவிட்டார்!<br>
இக்காலத்தின் அவதார நாயகன் மெஹர் பாபா!<br>
நாம் அனைவரும் மெஹர் பாபாவை போற்றுவோம், அவர் நம் இரக்கம் நிறைந்த தந்தை!<br>
இரக்கத்தின் இலக்கணமாகத் திகழும் சூரியன் உதயமாகி விட்டது!<br>
மெஹர் என்னும் சூரியன் இவ்வுலகத்திலும், அனைத்து பிரபஞ்சத்திலும் ஒளிமயமாகும்!<br>
யோகிகளின் மன்னன் சிந்திய கண்ணீர், அனைத்து உலகத்தையும் பாடவைத்தது!<br>
மெஹர் பாபாவின் பெயரைப் பாட வைத்தது!<br>
மெஹர் பாபா, நம் இரக்கமுள்ள தந்தை. அவர் கருணை அனைத்தையும், அனைவரையும் உள்ளூர உணர வைக்கும்!



# சீடர்களின் வட்ட உருவாக்கம்
**(Formation of the circle - His disciples)**

மெஹர் பாபா 1922, ஜனவரி மாதத்தில் ஸாக்கோரியிலிருந்து புறப்பட்டு, மும்பையில் வாழ்ந்து வந்த முன்ஷி ரஹிமின் இல்லத்திற்கு வருகை தந்தார். அவரது வருகையால் மிகவும் மகிழ்ச்சியடைந்த முன்ஷி, அவருடைய பரிதாபமான நிலையைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். மெஹர் பாபாவை நீராடுமாறு அவர் வேண்டவே, அதற்கு முன்ஷியின் உதவியுடன் நீராடுவதாக பாபா இணக்கம் தெரிவித்தார். நீராடி, சிறிது உணவு உண்ட பின்னர், ஒரு சிறிய ஓலைக் குடிசையை உருவாக்குமாறு பூனாவில் வாழும் சதாஷிவ் பாட்டீலுக்கு பாபா கடிதம் எழுதி, அதில் அவர் விளக்கமாக '**பூனாவுக்குத் திரும்பி வந்து**, **அவரது குடும்ப வீட்டில் தங்காமல்**, **அக்குடிசையில் தங்க விரும்புவதாகக் குறிப்பிட்டிருந்தார்**.'

அதற்குப் பிறகு, முன்ஷியுடன் டாக்டர் கனியின் மருந்தகம் சென்று விசாரித்தார். டாக்டர் கனி வருத்தத்துடன் புகார் செய்தார், 'மருந்தகத்தில் எவ்விதமான முன்னேற்றமும் இல்லை. நோயாளிகள் வருவதும் குறைந்து விட்டது. விரக்தியில், மருத்துவ தொழிலை விட்டுவிடலாம்' என்ற எண்ணத்தை பாபாவிற்குத் தெரியப்படுத்தவே, மெஹர் பாபா, "**இந்த மருந்தகத்தை ஆறுமாதங்களுக்கு**, **பணியாளர்களின் உதவியின்றி**, **நீங்களே சுத்தம் செய்து வந்தால்**, **பொருள் வளம் மட்டுமின்றி ஆன்மீக ரீதியிலும் சிறப்படைவீர்கள்**" என்று அறிவுறுத்தினார். அந்நாளிலிருந்து, டாக்டர் கனி, அனைத்து பணிகளையும் தானே செய்து வந்ததைத் தொடர்ந்து, மருந்தகம் சில மாதங்களில் சிறப்படைந்தாலும், அவர் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை.

மெஹர் பாபா, அங்கிருந்து மும்பை அருகில் அரபிக்கடலில் அமைந்த 'மண்ட்வா' (MANDWA) என்ற தீவுக்குச் செல்ல விருப்பம் தெரிவித்து, பூனா மற்றும் லோனவாலாவில் வாழ்ந்து வந்த நண்பர்களையும் உடனழைக்குமாறு முன்ஷி ரஹிமுக்குத் தெரிவித்தார். 1922 ஜனவரி 23 அன்று அனைவரும் மெஹர் பாபாவுடன் விசைப்படகில் மண்ட்வாவை நோக்கிப் பயணம் செய்தனர். ராம்ஜூ அப்துல்லா (RAMJOO ABDULLA), மெஹர் பாபாவை பலமுறை பார்த்திருந்தும், அவருடனிருக்கும் வாய்ப்பைத் தவறவிடாமல் இம்முறை அவரும் உடன் சென்றார்.

மெஹர் பாபாவுடன் மண்ட்வா சென்ற நண்பர்கள், இனிப்புப் பண்டங்கள், பழங்கள், ரொட்டி, சட்னி போன்றவை நிரம்பிய கூடைகளை எடுத்துச் சென்றனர். படகு சிறிது தூரம் சென்றதும், மெஹர் பாபா உணவு பொட்டலங்களைத் தனது கைகளால் அனைவருக்கும் வழங்கினார். உண்ணும் வேளையில் மெஹர் பாபாவின் முகம் மிகவும் பிரகாசமாக, முற்றிலும் வித்தியாசமான தோற்றத்தில் தென்பட்டதை அனைவரும் கவனித்தனர்.

கூட்டத்திலிருந்த ஒருவர், மும்பை நகரின் அழகான இயற்கைக்காட்சி, அதனை அடையாளம் காட்டும் முக்கிய அறிவிப்புப் பலகைகள் மற்றும் வளைந்து செல்லும் கடலோரப்பகுதிகளின் வனப்பை வர்ணனை செய்து கொண்டிருந்தார். மெஹர் பாபாவும் அதன் சிறப்பை எடுத்துக் கூறி இவ்வாறு குறிப்பிட்டார், **"ஆமாம்! இந்த அற்புதமான இயற்கைக்காட்சி சிறந்ததா? இல்லை ஞானதிருஷ்டி படைத்த தீர்க்கதரிசி உயர்ந்தவரா?"**

இதைத் தொடர்ந்து ஒரு பெரிய விவாதம் நடைபெற்றது. மெஹர் பாபா அனைவரின் எண்ணங்களைத் தூண்டும் விதத்தில் பலவிதமான ஆன்மீகக் கருத்துக்களை விளக்கினார்.

ஒரு மணி நேரத்தில் மண்ட்வா வந்தடைந்து, ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்ட தங்கும் விடுதிக்குச் சென்றனர். அந்த இடத்தின் கண்கொள்ளா காட்சிகளில் மயங்கிய பல நண்பர்கள், வெளியே தொலைதூரம் சென்று ரசிக்க ஆரம்பித்தனர். ராம்ஜு அப்துல்லா, அவர் ஒரு முஸ்லிம் என்பதால், மறைவிடம் ஒன்றில் அமர்ந்து நமாஸ் செய்யத் தொடங்கினர். ராம்ஜு விடுதிக்குத் திரும்பிய வேளையில், மெஹர் பாபா வருத்தம் தோய்ந்த முகத்துடன், **"சிலர் உலாவுவதற்காக அங்குமிங்கும் சென்றனர். சிலர் அவர்களுடைய பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தனர். அதே வேளையில், நான் இங்குத் தனியாக உங்கள் அனைவரையும் எதிர்நோக்கி இருக்கிறேன்"** என்று கூறினார்.

இதைக்கேட்ட ராம்ஜு அப்துல்லா அதிர்ச்சியடைந்தார் - ஏனெனில் அவர் பிரார்த்தனைக்காக அமர்ந்த இடம் எவரும் அறியாத ஒரு மறைவிடம். அதே வேளை மெஹர் பாபா தங்கியிருந்த இடத்திலேயே இருந்தார், வெளியே வரவில்லை. இந்த வினோதமான பேச்சு, மெஹர் பாபா அனைத்தும் அறிந்தவர் எனும் ஓர் அற்புதமான அனுபவத்தைத் தந்தது.

மெஹர் பாபா, மண்ட்வாவில் இருந்த வேளையில், முதல் முறையாகத் தன்னை இறையுணர்வை எய்திய குருநாதர், ஒரு சத்குரு அல்லது 'குதுப்' என்று அறிவித்து, தன்னுடைய சீடர்களைப் பற்றியும், குருநாதரைச் சுற்றியுள்ள சீடர்களின் வட்ட அமைப்பைப் பற்றியும் விளக்கினார்:

**"ஆரம்பத்திலிருந்தே, ஆண், பெண் இருவரும் அடங்கிய நிலையான எண்ணிக்கையில், எனக்கு ஒரு வட்ட அமைப்பு உள்ளது. இவர்கள் விரைவில் இறைநிலையை அடைந்து, உண்மை, ஞானம் என்ற இறைவனுக்கே உரித்தான தனிச்சிறப்பை அனுபவிப்பார்கள்.**

**"பல்லாயிரக்கணக்கான ஆத்மாக்களில் ஒன்றே ஒன்று இவ்வாறு இறைநிலையை எய்தும். இறைநிலையை எய்துவது என்பது ஒரு சாதாரண விஷயமல்ல. கற்பனைக்கு எட்டாத அளவுக்கு துன்பமும் துயரமும் அனுபவிக்க நேரும். இவ்வாறு இறைநிலையை எய்திய சத்குரு, கண்மூடி திறக்கும் வேளைக்குள், பிறருக்கு அவரைப் போன்ற இறைநிலையை வழங்க முடியும். இப்படி, தன்னுடன் பலநூறு ஆண்டுகள்**

**தொடர்பில் இருப்பவர்களுக்கு, சரியான தருணத்தில் பரிபூரண இறை அனுபவத்தை வழங்குகிறார்.**

**இதை மேலும் விளக்கிக் கூறுவதானால்: ஒருவன் திடீரென செல்வந்தன் ஆகிவிட்டான் என்று வைத்துக் கொள்ளுங்கள். பின்னர், அவன் எவ்வளவுதான் தாராள மனம் படைத்தவனாக இருந்தாலும், தன்னுடைய செல்வத்தை உலகிலுள்ள அனைத்து ஏழைகளுக்கும் வாரி வழங்கமாட்டான். தனது நெருங்கிய, குறிப்பிட்ட ஒரு சிலருக்கு மட்டுமே வழங்குவான். மேலும், இந்த செல்வந்தன் தனது காரில் செல்லும் வேளையில், வழியில் ஓர் ஏழையை சந்தித்தால், அவனைக் கடந்து செல்வான் அல்லது ஏதாவது காசு கொடுத்து செல்வான். ஆனால், அவன் அவ்வாறு ஓர் ஏழையை சந்திக்கும் வேளையில், நீண்ட காலத்திற்கு முன்பு பிரிந்து சென்ற தனது சகோதரன் எனத் தெரிய வந்தால் அவ்வேளையில் எப்படி நடந்து கொள்வான்? எவ்வளவுதான் முக்கியமான வேலையாக இருந்தாலும், எவ்விதமான உயர் பதவியை வகித்தாலும், அந்த செல்வந்தன் தனது காரில் அவனை வீட்டிற்கு அழைத்துச் சென்று, தான் வாழும் சொகுசான வாழ்க்கையில் சகோதரனையும் வாழவைப்பான்.**

**அதுபோலத்தான் ஆன்மீக மார்க்கமும். இறையறிவை அடைய சத்குருவின் தொடர்பு இன்றியமையாதது. எனக்கும், பாபாஜானுக்கும் இடையேயுள்ள நெருக்கமான உறவுதான், நான் கேட்காமலேயே எனக்குக் கிடைத்த இறைத்தன்மை என்ற வெகுமதி. அதுபோல், என்னுடைய நெருங்கிய தொடர்பில் இருக்கும் பன்னிரெண்டு உள்வட்ட சீடர்களும் இறைநிலையை எய்துவர்"** என்று கூறிமுடித்தார். மெஹர் பாபாவின் உரையைக் கேட்ட ஒவ்வொருவரும், 'நானும் அந்த அதிர்ஷ்டசாலிகளில் ஒருவனாக இருப்பேனா?' என்ற ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர்.

கூட்டத்திலிருந்த அனைவருக்கும் தான் இறைநிலையை அடைந்த குருநாதர் என்பதை தெளிவுற விளக்கியதும், அனைவரும் மெஹர் பாபாவை சத்குருவாக ஏற்றுக் கொண்டு உரிய மதிப்பும், மரியாதையும் வழங்கினர்.

இனிமையாகவும், இறை ஞானத்தை அள்ளி வழங்குவதாகவும் அமைந்த அந்த மூன்று நாட்களுக்குப் பிறகு, மண்ட்வாவிலிருந்து ஜனவரி 26ஆம் நாள் மும்பை வந்து, முன்ஷி ரஹிம் வீட்டில் தங்கினர். மெஹர் பாபா, **'அவர் உடனடியாக பூனா திரும்பிச் சென்று, புதிதாக எழுப்பப்பட்ட ஓலைக்குடிசையில் சில மாதங்கள் தங்கப் போவதாகவும், அதன் பின்னர் அவரது செயல்பாட்டின் மையம் மும்பைக்கு மாற்றப்படும்'** என்றும் முன்ஷியிடம் தெரிவித்தார். முன்ஷி, தானும் உடனிருக்க விரும்புவதை எடுத்துக் கூறியதும், மெஹர் பாபா, சற்று பொறுமையாக அவரை மும்பையிலேயே இருக்குமாறு அறிவுறுத்தினார்.

அன்று மாலையில் தனது நண்பர்களுடன், 'சார்னி ரோட் பூங்கா'வில் (CHARNI ROAD GARDEN) உலாவும்போது, மெஹர் பாபா அனைவரிடமும் அவரவர் தனிப்பட்ட பிரச்சினைகளைக் கேட்டு, ஒவ்வொருவரும் செய்ய வேண்டியதை

எடுத்துக் கூறினார். ராம்ஜூ அப்துல்லா தனது பிரச்சினைகளை பாபாவிடம் கொட்டித் தீர்க்க ஆசைப்பட்டார். ஆனால் பாபாவின் அறிவுரைகளைக் கேட்ட பின்னர், அவருடைய தனிப்பட்ட பிரச்சினைகளால் பாபாவை சிரமப்படுத்த வேண்டாம் என நினைத்து எதுவும் சொல்லவில்லை. உஸ்மான் என்கிற நண்பர் ராம்ஜூவின் பிரச்சினைகளைப் பற்றி அவருக்கு நினைவூட்டினார். அதைக் கேட்ட மெஹர் பாபா, "**ராம்ஜூ என்னுடன் நாளை பூனா வருகிறார். நான் அவற்றைப் பார்த்துக் கொள்கிறேன்**" என்றார்.

மறுநாள் காலையில் குஸ்தாஜி, டாக்டர் கனி, பெய்லி, ராம்ஜூ ஆகியோருடன் மெஹர் பாபா, ரயிலில் பூனாவுக்குப் புறப்பட்டுச் சென்றார். ரயில் பயணத்தின்போது சத்குருவின் வட்டத்து சீடர்களைப் பற்றிய பேச்சு மறுபடியும் எழுந்தது. சீடர்களை மெஹர் பாபா '**மண்டலி**' (MANDALI) என்றழைத்தார். மெஹர் பாபா, மேலும் சத்குருக்களின் வட்ட அமைப்பிலிருக்கும் மண்டலியைப் பற்றி விளக்கினார்:

"**ஒரு சத்குருவின் வட்டத்தில் 12 ஆண், இரண்டு பெண் உறுப்பினர்களையும் சேர்த்து மொத்தம் 14 உறுப்பினர்கள் உள்ளனர். மேலும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு நிழல் உறுப்பினர் உண்டு. ஆகையால், வட்டத்தில் மொத்தம் 28 நபர்கள் - அதாவது 14 உறுப்பினர்களுடன் மேலும் 14 உறுப்பினர்கள் நிழலாக இருப்பார்கள்.**"

"**சத்குருவைச் சுற்றியுள்ள அசலான 14 பேரும், இறுதியில் அவரைப் போல் இறைநிலையை எய்துவர். நிழலாகிய 14 பேரும் இறைவனைக் காண்பார்கள். இறைவனைக் காண்பதென்பது சாதாரண விஷயமல்ல. இறை ஒளியைக் காண ஆழ்ந்த ஏக்கத்தில் இருக்கும் ஆயிரக்கணக்கான யோகிகள், மஹாத்மாக்கள் மற்றும் வாலிகளில் ஒரு சிலர் மட்டுமே அவர்களின் சொந்த முயற்சியால், சத்குருவின் உதவியில்லாமல் ஆன்மீகத் தளத்தின் மேல்நிலையை அடைந்து இறைவனை நேரடியாகக் காணமுடியும். ஆனால் ஒரு சத்குருவின் அருளின்றி இறைநிலையை அடைவது என்பது சாத்தியமற்றது.**" இவ்வாறு விளக்கிய பின்பு, மெஹர் பாபா ராம்ஜூவிடம் கேட்டார், "**நீங்கள் என்னைப் பின்பற்ற விரும்புகிறீர்களா?**" அதற்கு ராம்ஜூ, '**ஆம்**' என்று தலையசைத்தார். "**அப்படியானால் நான் கூறுவதைச் செய்ய வேண்டும்**" என்றதும், ராம்ஜூ புரிந்து கொண்டதாக பதிலளித்தார்.

பாபா தொடர்ந்து கூறியதாவது: "**நீங்கள் என்னைப் பின்பற்றுவதாக இருந்தால், உலகப்பொருட்கள் மற்றும் உலகப் பிரச்சினைகளைப் பற்றிய எண்ணங்களை நிறுத்த வேண்டும். நன்கு சிந்தித்து உங்கள் முடிவை எனக்குத் தெரியப்படுத்துங்கள்.**" அப்போது ராம்ஜூ, மெஹர் பாபாவால் வெகுவாக ஈர்க்கப்பட்டார். ஆகையால் தன்னுடைய சொத்து சுகங்களை விட்டுவிட்டு அவரைப் பின்பற்ற முழுமனதுடன் ஆயத்தமானார். மெஹர் பாபா, மேலும் அவரது தொழிலைப் பற்றிக் கேட்க, ராம்ஜூ துணி வியாபாரம் மற்றும் சமூக சேவையில் ஈடுபடுவதாகத் தெரிவித்தார்.

ஆங்கிலேயர்களுக்கு எதிராக, இந்திய தேசத்திற்கான சுதந்திரப் போராட்டங்களில் ராம்ஜூ தீவிரமாக ஈடுபட்டதால், மெஹர் பாபா, "**இது என்னுடைய முதல் கட்டளை. எந்தவிதமான அரசியல் நடவடிக்கைகளிலும் பங்கெடுப்பதற்குத் தடைவிதிக்கிறேன். உங்களுடைய இதர உலக சமாச்சாரங்களை பின்பு பார்க்கலாம்**." ராம்ஜூ முழுமையாகக் கீழ்ப்படிவதாக உறுதியளித்து, லோனவாலாவில் விடைபெற்றார். இதர மூவரும் பூனா சென்றனர்.

மெஹர் பாபாவை, 'பாபா' என்று சீடர்கள் அழைத்தாலும், பூனாவில் அவ்வளவு நெருக்கத்தில் இல்லாதவர்கள் அவரை இன்னும் 'மேர்வான்' அல்லது 'மேர்வான் ஸேட்' என்று அழைக்க, அவருடைய குடும்பத்தினர் அன்போடு 'மெரோக்' என அழைத்தனர்.

மெஹர் பாபா கேட்டுக் கொண்டதற்கிணங்க சதாஷிவ் பூனாவில் 'சதுர்ஸிங்ஜி' (CHATURSINGHJI) என்னும் இடத்தில் அமைந்த ஃபெர்குஸன் கல்லூரி (FERGUSSON COLLEGE) அருகில் மாமரங்கள் நிறைந்த விசாலமான இடத்தில் கூரை குடில் ஒன்றை எழுப்பியிருந்தார். பூனா வந்ததும், மெஹர் பாபா அதைப் பார்வையிட்டு, மகிழ்ச்சியில் '**சபாஷ்**' என்று கூறி, 1922 ஜனவரி 27 முதல் அங்குத் தங்கிவந்தார். குடிலமைந்த அந்த இடத்தின் சொந்தக்காரர் மெஹர் பாபாவின் பள்ளித்தோழன் என்பதால் வாடகை வாங்க மறுத்து விட்டார்.

மெஹர் பாபாவின் முதல் தற்காலிக குடியிருப்பான இந்த இடம் வெகு விரைவில், கோலாகலமாகக் காட்சியளிக்க ஆரம்பித்தது. சாதாரண மக்களும், வழிப்போக்கர்களும் அவரை ஓர் ஈரானிய துறவி எனக் கருதினர். எளிமையான இந்தக் குடில், மூங்கில் மற்றும் கூரையால் அமைக்கப்பட்டு, மண் தரையால் செம்மை செய்யப்பட்டது. 10 அடி நீளம், 5 அடி அகலம். பாபா மட்டும் இரவில் உள்ளே இருந்தார், வேறு எவரையும் குடிலுக்குள் அனுமதிக்கவில்லை. பகல் நேரங்களில் வெளியே மாமர நிழலில் திரள் திரளாக மக்கள் மெஹர் பாபாவை சுற்றி ஒன்று கூடினர். இந்து, இஸ்லாமிய பாடல்கள் மற்றும் பஜன் கீர்த்தனைகள் பாடப்பட்டன. சில வேளைகளில் விளையாடவும் செய்தனர். மெஹர் பாபா, அவ்வப்போது ஆன்மீக விளக்கங்களும் அளித்து வந்தார். இரவு நேரங்களில் நண்பர் பெய்லி கண்காணிப்பு பணியை மேற்கொண்டார். பின்னர் அர்ஜுன் ஸுப்பேக்கர் அந்தக் கடமையில் பங்கெடுத்தார். (எப்பொழுதும் இரவில் பாபாவின் அறைக்கு வெளியே ஒருவர் காவல் புரிந்து வந்தார்).

அதிகாலையில், மாஸாஜி தேநீர் மற்றும் சிற்றுண்டி எடுத்து வருவது வழக்கம். காலை ஒன்பது மணியளவில் கஸ்பா பேட் (KASBA PETH) நண்பர்கள் வந்து பஜனை பாடி, பாபாவை மகிழ்வித்தனர். பத்தரை மணிக்கு பல மைல் தூரம் நடந்து தனது வீட்டிற்குச் சென்று, மதிய உணவை முடித்து, குடும்பத்தில் அனைவரையும் சந்தித்து, சற்று ஓய்வெடுத்த பின்பு தனது இருப்பிடத்திற்கு வருவதை வழக்கமாகக் கொண்டார். செய்தித் தாள்களைப் படித்து, அதைத்

தேவையற்ற, போலி செய்திகள் என்றார். பாபாவைப் பின்பற்றுபவர்கள் மாலை வேளையில் வந்து பஜன், கீர்த்தனைகளில் பங்கெடுத்தனர். பழங்கள் மற்றும் இனிப்புகளைப் பிரசாதமாக, பாபா அனைவருக்கும் வழங்கினார். இரவு உணவிற்குப் பின்னர், அர்ஜுன் அல்லது பெய்லி இரவு கண்காணிப்பாளர்களாகப் பணிபுரிந்தனர்.

பூனாவில் ‘கஸ்பாபேட்’ என்ற இடத்தில் முதல் முறையாக ஒரு கோவில் அமைத்து, மெஹர் பாபா, ஒவ்வொரு வியாழக்கிழமையும் அங்குச் செல்வது வழக்கம். அவர் தலைமையில் நடைபெற்ற பூஜை, ஆரத்தியில் பக்தர்களும், அக்கம் பக்கம் வாழ்ந்தவர்களும் கலந்து கொண்டனர். ஆன்மீக சொற்பொழிவுகள் வழங்குவது மட்டுமின்றி, சாதாரணமாக அனைவரிடமும் பேசி, அவரவர் சுகம், துக்கம், பொறுப்பு அனைத்தையும் விசாரித்தார். இக்கோயில் மெஹர் பாபாவின் ஆரம்பகால சீடர்களை (மண்டலி) உருவாக்கும் மையமாகத் திகழ்ந்தது.

ஃபெர்குஸன் கல்லூரி அருகிலமைந்த குடிலுக்கு அனைத்து ஞாயிற்றுக் கிழமையும் பல பக்தர்கள் விஜயம் செய்தனர். அன்று அந்த இடம் திருவிழா கோலங்கொண்டிருக்கும். மும்பையிலிருந்து டாக்டர் கனி, ஸையத் ஸாஹேப், ராம்ஜு அப்துல்லா ஆகியோர் வந்தனர். கஸ்பாபேட் பக்தர்களும் பங்கெடுத்தனர்.

மெஹர் பாபாவிற்கு நெருக்கமானவர்களில் குறிப்பாக, குல்மாய் (GULMAI) அவ்வப்போது வருவதுண்டு. ஒரு முறை குல்மாய் வந்த வேளையில், மெஹர் பாபாவின் மண்டலியில் சிலர் குடிலுக்கு வெளியே அமர்ந்து பஜன் கீர்த்தனைகள் பாடிக்கொண்டிருந்தனர். பாபா தம்பூரா வாசித்துக் கொண்டிருந்தார். மெஹர் பாபா எழுந்து, குல்மாயின் கையைப் பிடித்து அழைத்துச் சென்று, அருகில் அமரவைத்துக் கூறினார், “**சற்று நேரத்திற்கு முன்பு நீங்கள் வந்திருந்தால், துப்புரவாளர்கள் பஜனை பாடியதைக் கேட்டிருந்திருக்கலாம். மிகவும் அருமையாகப் பாடினர். அவர்களில் பஹதூர்** (BAHADUR) **என்பவர் என்னை மிகவும் நேசிப்பவர். அவர் ஒரு கவிஞர் மட்டுமல்லாமல் பாடகரும் கூட. என்னைப் பற்றிய கவிதைகள் எழுதி, அவருடைய நண்பர்களுடன் வெகு சிறப்பாகப் பாடினார். நீங்கள் இருந்திருந்தால் நிச்சயமாக ரசித்திருப்பீர்கள்.**”

பஜனைக்குப் பிறகு மெஹர் பாபா, குல்மாயை குடிலுக்குள் அழைத்துச் சென்று, மரப்பேழை ஒன்றில் அமரவைத்து, அவர் தரையில் அமர்ந்தார். தடுமாற்றத்துடன் குல்மாய் தானும் தரையில் அமர விரும்பினார். மெஹர் பாபா அவரைத் தடுத்து, கைகளைப் பற்றிக்கொண்டு, “**நீங்கள் எனது தாயார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நான் உங்கள் மகன். ஆரம்பத்திலிருந்தே நம் இருவருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. நான் உங்கள் வழியாகப் பலமுறை பிறவி எடுத்திருக்கிறேன். நீங்கள் எதிர்காலத்தில் எனக்காக, பல பணிகள் செய்வீர்கள். ஒரு நாள் வரும்,**

**அன்று நான் உங்களை உச்சநிலைக்கு எடுத்துச் செல்வேன்"** என்று கூறிக்கொண்டே அவரது தலையை குல்மாயின் தோளில் சாய்த்து, இருவரும் மௌனமாக இருந்தனர்.

மதிய வேளையில், பாபாவின் பெரிய தாயார் டவ்லாவின் கணவர் எடுத்து வந்த உணவை அனைவரும் உண்டு மகிழ்ந்தனர். மெஹர் பாபா, தனது ஆன்மீகத் தாயார் குல்மாயை, அனைவருக்கும் அறிமுகப் படுத்திவைத்து, குருவின் வட்ட அமைப்பில் இருக்கும் சீடர்களைப் பற்றி விளக்கினார்.

அன்று மாலை, குல்மாயின் இரண்டாவது மகன் ஆதி அங்கு வந்தார். மெஹர் பாபா அவரது நண்பர் கோடுவின் வீட்டிலிருந்து சித்தாரை எடுத்து வரச்சொல்லி, குல்மாய் பாடும்போது ஆதியை சித்தார் வாசிக்கச் செய்தார். குல்மாயால் உரத்த குரலில் பாடமுடியாத போது, மெஹர் பாபா கூறினார், **"கவலைப்படாதீர்கள். உங்கள் குரலில் இருக்கும் வலியின் தன்மை, புகழ்வாய்ந்த பாடகர்களின் குரலில் கூட இருப்பதில்லை. இது இயற்கையின் அன்பளிப்பு."**

குல்மாய் புறப்பட்டுச் செல்லும் முன், மெஹர் பாபா மறுபடியும் அவர்களைத் தனது பிறந்தநாளன்று பூனா வருமாறு அழைத்தார்; அவ்வேளையில் மண்டலியுடன் சத்குரு பாபாஜானை சந்திக்க அனுப்பி வைத்தார். குல்மாய், பாபாஜானை சந்தித்தது இதுவே முதல்முறை. தலைவணங்கி அவர் பாதங்களைத் தொழ முன்வந்த போது, பாபாஜான் அவரைத் தடுத்து நிறுத்தி, "நீங்கள் என்னைப் பாவத்தில் இழுத்துச் செல்கிறீர்கள்" என்று கூறினார். குல்மாய் திடுக்கிட்டு பாபாஜானை உற்று நோக்கினார். ஹஸ்ரத் பாபாஜான், குல்மாயை அரவணைத்து, மெல்லிய குரலில், "நீங்கள் எனக்கும் தாய்தான்" எனக் கூறினார்.

மெஹர் பாபாவின் 28ஆவது பிறந்தநாள் 1922 பிப்ரவரி 18ஆம் தேதி (ஸொராஸ்டிரியன், குஜராத்தி நாள்காட்டிபடி) கொண்டாடப்பட்டது. சதாஷிவ் பாட்டீல் அவரது இல்லத்தில் மேல் மாடியை அலங்கரித்து, அனைத்து மண்டலி மற்றும் நண்பர்களை வரவழைத்தார். மெஹர் பாபா மாலையில் வந்தபோது, பிரம்மாண்டமான உணவு வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து மும்பையிலிருந்து அழைக்கப்பட்ட பாடகர் ஒருவர் சித்தார் இசையுடன் இனிமையாகப் பாடினார். இசை நிகழ்ச்சி இரவெல்லாம் நடைபெற்றது. இறுதியில் பாபா எழுதிய சத்குரு உபாஸனி மஹாராஜின் ஆரத்தியுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது. எதிர்பாராத விதமாக மெஹர் பாபா அன்றிரவு குடிலுக்குத் திரும்பிச் செல்லாமல் அங்கேயே தங்கினார்.

மெஹர் பாபாவின் தாயார் ஷிரீன்மாய் பிறந்தநாள் விழாவுக்காக வந்திருந்தார்கள். குல்மாயை தனது தாயாருடன் குடும்ப வீட்டிற்குச் சென்று அங்கே தங்குமாறு கூறினார். ஷிரீன்மாய் குல்மாயின் கையைப் பிடித்துச் செல்வதைப் பார்த்து மெஹர் பாபா, **"இந்த இரண்டு பெண்மணிகளும்**

**எனக்குத் தாய்மார்கள்: ஒருவர் உலகத் தாய், மற்றொருவர் ஆன்மீகத் தாய்"** என்றார்.

குல்மாய் மெஹர் பாபாவிற்கு ஆடைகளும், ஸொராஸ்டரின் சித்தரம் பதித்த அலங்காரப் பேழையுடன் ஒரு தங்கச் சங்கிலியும் பரிசாக அளித்தார்கள். அடுத்த நாள், பாபா, ரயில் நிலையம் சென்று குல்மாயை வழியனுப்பி வைத்தார்.

மெஹர் பாபா தனது குடும்ப இல்லத்திலிருந்து வெளியே வந்தாலும், ஒவ்வொரு நாளும் மதிய உணவுக்காக அங்குச் சென்றார். தாய், தந்தையர் மீதுள்ள அளப்பரிய மரியாதையின் நிமித்தம், வீட்டிற்கு வந்ததும், பெற்றோரின் கால்களில் விழுந்து வணங்கி முத்தமிட்டார். இன்னமும், தன் தந்தையை போபோ என்றும், தாயாரை மெமோ என்றும் அழைக்க, பெற்றோர்கள் அவரை 'மெரோக்' என்றே அழைத்தனர்.

ஆன்மீக ரீதியில், தனது மகன் யார் என்பது ஷெரியாருக்கு நன்கு தெரியும். ஆனால் ஷிரீன்மாய் அவரைத் தனக்குப் பிடித்த, பிரியமான மகன் என்றே கருதி வந்தார். மெஹர் பாபா, வீட்டிலிருந்து வெளியே சென்று இதுபோன்ற எளிமையான ஓலைக்குடிலில் வாழ்வதை ஷிரீன்மாய் விரும்பவில்லை. அவர் இன்னமும் மெரோக் இந்நிலைக்கு மாறியதை ஏற்றுக்கொள்ள முடியாமல் கண்கலங்கி அழுதார்.

தவுலத்மாயின் சகோதரி ஃபிரீனிமாசி, ஹஸ்ரத் பாபாஜான் மீது மிகுந்த பற்றும், பக்தியும் கொண்டிருந்தார். தினமும் அவரை தரிசனம் செய்துவந்தார். தவுலத்மாய், மெஹர் பாபாவின் தொடர்பில் வந்த பின்னர் ஃபிரீனிமாசியும் மெஹர் பாபாவை சந்தித்து வந்தார். அவரது மகன் ஃபெரடூன் (FAREDOON), வயது 21, மெஹர் பாபாவைப் பற்றி, அவரது தம்பி ஜால் மூலம் தெரிய வந்தாலும், எவ்வளவோ எடுத்துக் கூறியும், மெஹர் பாபாவின் மீது நம்பிக்கை வந்தபாடில்லை. குறிப்பாக அவர் எந்த ஒரு குருநாதரையும் சந்திக்க விரும்பவில்லை. தாயார் ஃபிரீனிமாசியும் இனிமையாகப் பேசிப் பணிய வைக்க முயற்சித்தார். ஃபெரடூன் பிடிவாதமாக மறுத்துவிட்டார். 1922 பிப்ரவரியில், மெஹர் பாபாவை சமீபத்தில் சந்தித்துவிட்டு வந்த பின்னர் (தாயார் மெஹர் பாபாவை சந்தித்து வந்த விபரம் ஃபெரடூனுக்குத் தெரியாது) அவர் பையனிடம், "மெஹர் பாபாவிடம் சென்று, நான் நாளைக்கு அவருடைய தரிசனத்திற்கு எப்போது வரவேண்டும் என்பதைக் கேட்டு வருவாயா?" என வினவினார். தாயாரின் மனதைப் புண்படுத்தக் கூடாது என்ற எண்ணத்தில், ஜாலுடன் அடுத்த நாள் மெஹர் பாபாவை சந்திக்கச் சென்றார்.

மெஹர் பாபா தங்கியிருந்த குடிலுக்கு வந்து, தன்னை அறிமுகம் செய்து, தாயாரின் வேண்டுகோளைத் தெரிவித்தார். ஆச்சரியம் அடைந்தவர் போல, பாபா கேட்டார், **"உங்கள் தாயார் நேற்றுதான் இங்கிருந்தார்! இன்று ஏன் மறுபடியும் வரவிரும்புகிறார்கள்?"** ஃபெரடூன் அதைக் கேட்டுக்

குழப்பத்தில் ஆழ்ந்தார். ஆனால் பாபாவை விட்டுச்செல்ல மனம் இடம் தரவில்லை. மெஹர் பாபாவின் தோற்றம், அவரது தெளிவான அம்சங்களைக் கண்டு வியந்துபோன அவருக்கு அங்கேயே இருக்கத் தோன்றியது. ஃபெரடூன் மனதில் அலைபாயும் எண்ணங்களை அறிந்த மெஹர் பாபா, **“நீங்கள் விரும்பினால் சற்று நேரம் இங்கே இருந்து செல்லலாம்”** என்றார். சந்தோஷத்தில் ஃபெரடூன் அங்கே அமர்ந்தார். மாலை உணவு வந்ததும் பாபா அதை அனைவருக்கும் அவரது கைகளால் வழங்கினார். ஃபெரடூனும் உணவில் பங்கெடுத்தார். அதற்குப் பிறகு பாபா அவருக்கு விடையளித்தார். சற்றும் மனமில்லாமல் எழுந்து கொண்டார். உண்மையிலே வெகுவாக ஈர்க்கப்பட்டார். புறப்படும் போது, மெஹர் பாபா அவரிடம் கூறினார்: **“உங்களுக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் நீங்கள் இங்கே வரலாம். எனது வாசல் உங்களுக்காகத் திறந்தே இருக்கும்.”** அந்நாளிலிருந்து ஃபெரடூன், மோட்டார் வாகனம் பழுதுபார்க்கும் இடத்தில் வேலை முடிந்ததும், மாலையில் மெஹர் பாபாவை சந்திப்பதை வழக்கமாகக் கொண்டார். இவ்வாறு ஃபெரடூன், பாபாவுடன் மிகவும் நெருக்கமானார்.

1922 பிப்ரவரி 25ஆம் நாள், டாக்டர் கனி வழக்கம்போல வார இறுதியில் பூனா வந்தார். மெஹர் பாபாவின் நிலையான கட்டளைப்படி, டாக்டர் கனி பூனாவுக்கு வந்ததும், முதல் வேலையாக ஹஸ்ரத் பாபாஜானிடம் சென்று, மரியாதையைச் செலுத்திவிட்டு, அதற்குப் பிறகு பிற வேலைகளை கவனிக்க வேண்டும். ஆனால், டாக்டர் கனி அன்று மாலையில் காலதாமதமாக, கடைசியாக ஹஸ்ரத் பாபாஜானை சந்திக்கச் சென்றார். டாக்டர் கனி வந்ததும், பாபாஜான், அங்கிருந்த கூட்டத்தின் மத்தியில், அவரைப் பிடித்து உலுக்கித் திட்டினார்: “அட போக்கிரிப்பயலே! என்னிடம் காலையில் வரவேண்டிய நீ இப்போது வருகிறாய்! உன் முகத்தைக் காட்ட வெட்கமாக இல்லையா?” என்றதும் டாக்டர் கனி அதிர்ந்துபோனார்.

அடுத்த நாள் காலையில் டாக்டர் கனி, மெஹர் பாபாவை சந்திக்க அவருடைய குடிலுக்கு, மும்பையிலிருந்து கொணர்ந்த இனிமையான பழங்கள் நிறைந்த கூடையைப் பிரசாதமாக எடுத்து வந்தார். டாக்டர் கனி வந்ததும் பாபா அவரது முகத்தைத் திருப்பிக் கொண்டு, கடுமையான குரலில், **“பழக்கூடையைக் கிணற்றில் எறிந்து விட்டு, உடனடியாக மும்பைக்குத் திரும்பிச் செல். என் அனுமதியின்றி இங்கு எதற்காக வந்தாய்?”** என்று கேட்டார். டாக்டர் கனி, பாபாவை சமாதானப்படுத்த முயன்றபோது, அதை ஏற்றுக் கொள்ளாமல் அவர் கூறியதற்குக் கீழ்ப்படியுமாறு உத்தரவிட்டார். டாக்டர் கனி எதுவும் பேசாமல் உடனே திரும்பிச் சென்றார். அந்த கணத்திலிருந்து அவர், மெஹர் பாபாவின் உத்தரவுகளை முழுமையாகக் கடைப்பிடிக்காத வரையில் அவருடைய தர்பாரில் ஏற்றுக் கொள்ளபடமாட்டாது என்பதைக் கற்றுக் கொண்டார். இதுவே மெஹர் பாபா முன்னிலையில் முதல் முறையாக டாக்டர் கனி எதிர்கொண்ட கசப்பான வரவேற்பாகும். ஆனால் இந்த

சம்பவம் ஹஸ்ரத் பாபாஜான், மெஹர் பாபா இருவருக்கும் இடையேயான ஆழமான இணைப்பையும், இரகசிய தொடர்பையும் தெளிவாக வெளிப்படுத்தியது.

1922 மார்ச் மாதத்தில் குல்மாய், மெஹர் பாபாவின் தரிசனத்திற்காக பூனா வந்த வேளையில், குடிலுக்கு வெளியே அமர்ந்திருந்த மெஹர் பாபா, அவருடைய புகைப்படம் ஒன்றை குல்மாயிடம் கொடுத்து, அங்கிருந்த அனைவருக்கும் தெரியப்படுத்தினார்: **"என்னோடு குல்மாய்க்கு உள்ள தொடர்பு மிகப் பழமையானது. அவர்கள் எனது ஆன்மீகத் தாய்."** குல்மாயின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. அப்போது மெஹர் பாபா, **"உங்களிடமிருந்து எனக்கு ஒரு வாக்குறுதி வேண்டும்! வழங்குவீர்களா?"** என்று கேட்டார்.

"எனது உயிரையே உங்களுக்குத் தருவேன்!" என்று எந்தவித தயக்கமும் இல்லாமல் பதிலளித்தார்.

மிக்க மகிழ்ச்சியடைந்த பாபா, **"உங்கள் பையன் ஆதி மற்றும் உங்கள் மகள் டாலி இருவரும் எனக்கு வேண்டும். அவர்களை என்னுடைய பணிக்காக நீங்கள் விடுவிக்க வேண்டும். பெற்றோரின் கடமையை நிறைவேற்றும் வகையில், முதலில் உங்கள் பெரிய பையன் ருஸ்தத்திற்கும் அதற்குப் பிறகு மகள் பிரோஜாவுக்கும் திருமணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள்."** குல்மாய், மெஹர் பாபாவின் கோரிக்கையை, தனது கணவர் கான் ஸாஹேபிடம் கூடக் கூறாமல், முழு மனதுடன் ஏற்றுக் கொண்டார். ஆதி, டாலி இருவரும் மெஹர் பாபாவுக்கே சொந்தம் எனவும் வாக்குறுதி அளித்தார். மெஹர் பாபாவின் வார்த்தைகளுக்கு எவ்விதமான மாற்றுக் கருத்தும் இல்லை. அங்கிருந்து புறப்படும்போது, குல்மாய் ஒரு ஜோடி பாத அணிகளை மெஹர் பாபாவிடம் கொடுத்தார். இவை, அஹமதுநகரில் வாழ்ந்த 'கன்னோபா ராவ் காடேக்கர்' என்பவரால் சிறப்பாகச் செய்யப்பட்டது. மெஹர் பாபா அதை ஆழ்ந்த பாராட்டுடன் பெற்றுக் கொண்டு, உடனே தனது பாதங்களில் அணிந்து கொள்ளவும் செய்தார். அந்நாளிலிருந்து பாபா இதை மட்டுமே பல வருடங்களாக அணிந்து வந்தார்.

மேலுமொரு தருணத்தில், குல்மாய் அவரது மகன் ஆதியுடன் மெஹர் பாபாவை சந்திக்க பூனா வந்தபோது, பாபா ஓய்வெடுத்தாற் போல சாய்ந்து கொண்டே, சில நண்பர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தார். குல்மாய் வந்ததும், அவர் ஏதோ கலக்கத்தில் இருப்பதைக் கண்டு, தனியாக அழைத்துச் சென்று விசாரித்தார். குல்மாய், கை மற்றும் தலைவலியால் சோர்வடைந்து காணப்பட்டார். மனவருத்தத்தில் வேறு எதுவும் சொல்லாமல், சிறிய தலைவலிதான் என்று கூறி, சமாளிக்க முயற்சித்தார்.

மெஹர் பாபா உடனே, **"நீங்கள் ஏன் இவ்வளவு சோகத்தில் இருக்கிறீர்கள்? இது ஓர் ஆரம்பம்தான்! நீங்கள் இனிமேல் கொள்ளு தானியத்தை அள்ளி உண்ண வேண்டிய நிலை வரும்!** (குஜராத் நாட்டுப்புற

பாணியில் 'இனி ஏராளமான கஷ்டங்களை அனுபவிக்க நேரும்' என்று அர்த்தம்). பாபா, தொடர்ந்து புரியாத புதிராக, "**நான் என்ன செய்யட்டும்? விளையாட்டு ஆரம்பமாகும் முன்னரே களைப்பாகி விட்டீர்களா?**" எனக் கேட்டார்.

அடுத்த நாள் மாலையில், குல்மாயும், ஆதியும் மெஹர் பாபாவுடன் குடிலில் அமர்ந்திருந்த வேளையில், ஃபெர்குஸன் கல்லூரி அருகில் இந்தக் குடிலை தேர்ந்தெடுத்ததன் காரணத்தை விளக்கினார்: "**பல்லாண்டுகளுக்கு முன்னர், இந்த இடம் காடாக இருந்தபோது, மேன்மைமிக்க சாது ஒருவர் இங்கே வாழ்ந்து வந்தார். குறிப்பாக இக்குடிலிருக்கும் இடம் அவரால் புனிதமாக்கப்பட்டுள்ளது.**"

சற்று நேரத்தில் குல்மாயின் மருமகன் ஸரோஷ் ஈரானி (SAROSH IRANI) அவர்களை சந்திக்க அங்கே வந்தார். ஸரோஷ் வந்து சென்ற பிறகு குல்மாய் அவரைப் பற்றி மெஹர் பாபாவிற்கு எடுத்துக்கூற, பாபா அவரை சந்திக்க விரும்பினார்.

அடுத்த நாள் ஸரோஷ் வந்ததும், மெஹர் பாபா அவரைக் குடிலுக்குள் அழைத்தார். தயக்கத்துடன் ஸரோஷ் உள்ளே நுழைந்து, மெஹர் பாபாவைப் பார்த்ததும், ஓர் இனம்புரியாத, வியக்கத்தக்க மாற்றம் அவரை ஆக்கிரமித்தது. அவரை அறியாமலே மெஹர் பாபாவின் பாதங்களில் தலைவணங்கி, தனது மனதிலிருந்த பாபாவை பற்றிய தவறான எண்ணங்களுக்காகப் பெரிதும் வருந்தினார்.

மெஹர் பாபா அவர் தலையை அன்புடன் வருடிக் குறிப்பிட்டார், "**நான் சொல்வது போல நீங்கள் செய்தால், நான் உங்களை ஒரு மன்னன் ஆக்குவேன்.**"

ஸரோஷ், பாபாவின் அறிவுரைப்படி 'மின்னியல் வல்லுநர்' படிப்பில் கவனம் செலுத்தினார். மெஹர் பாபா அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்தார். அவருடைய அன்பான தயவும், அக்கறையும் ஸரோஷை மிகவும் ஆழமாகப் பாதித்தது. அவ்வேளையிலிருந்தே அவர் மெஹர் பாபாவின் முக்கியமான உள்வட்ட சீடர்களில் ஒருவராக மாறினார்.

1922 மார்ச் 11 அன்று இந்துக்களின் ஹோலி பண்டிகை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மாலையில் கிளித்தட்டு விளையாட்டுக்குப் பின்னர், ஒரு மண் சட்டியில் தீ வளர்த்து, அதில் மெஹர் பாபா ஒரு சிறிய மரத்துண்டை எறிந்து ஹோலிப் பண்டிகையைத் தொடங்கி வைத்தார். ஹோலியின் முக்கியத்துவத்தை மெஹர் பாபா இவ்வாறு விளக்கினார்: "**கொழுந்து விட்டு எரியும் நெருப்பு, இறையன்பைக் குறிக்கும். கீழ்நிலை குணத்தைக் குறிக்கும் மரத்துண்டு இறையன்பில் எரிந்து சாம்பலாகும்.**" கஸ்பாபேட்டில் வாழும் மீனவர்கள் பலர் அங்கு வந்து இரவெல்லாம் பஜனை பாடி பாபாவை மகிழ்வித்தனர்.

மறுநாள் காலையில் திடீரென மெஹர் பாபா ஒரு சித்தார், தம்பூரா, மற்றும் மத்தளத்தை எரிந்து மறைந்த நெருப்பில் எறிந்து "**இது ஒரு படையல்**

**செய்வது போல்"** எனக் குறிப்பிட்டு, எரிந்த சாம்பலில் சிறிய சிறிய இசைக் கருவிகளின் வடிவமைத்து, நெருப்பு வளர்க்கப்பட்ட இடத்திலே வைத்தார். அந்நாளிலிருந்து இவ்வாறு அமைக்கப்பட்ட நெருப்புக் குண்டத்தை, 'துனி' (DHUNI) என்றழைத்து, தொடர்ந்து நெருப்பு வளர்த்து வந்தனர்.

லத்தீஃப் (LATEEF) எனும் அன்பர் ஒருவர் மெஹர் பாபாவிற்கு, புதிய சைக்கிள் ஒன்றைப் பரிசாக வழங்கினார். பாபா, அதைக் குலுக்கல் முறையில் யார் பெயர் வருகிறதோ அவருக்கு வழங்கப்போவதாகக் கூறி, பூனாவிலுள்ள 'சிஞ்ச்வாட்' (CHINCHWAD) என்ற ஊருக்கு, சுற்றுலா செல்லும்போது குலுக்கலை நடத்த முடிவு செய்தார்.

மெஹர் பாபா அனைவரையும் அடுத்த சனிக்கிழமை, மார்ச் 25 அன்று சிஞ்ச்வாட் கிராமத்தில் சந்தித்தார். அன்று மாலை நடைபெற்ற குலுக்கலில் நெர்வஸ் (NERVOUS) என்றழைக்கப்படும் சீடருக்குச் சைக்கிள் கிடைத்ததும், மெஹர் பாபா, நெர்வஸின் புதிய சைக்கிளுக்கு பதிலாக, அவருடைய பழைய சைக்கிளை, சின்னாபின்னமாகப் பிரித்து, உடைத்து சுக்குநூறாக்கி அருகிலிருந்த கிணற்றில் எறிய வேண்டும் என்ற விசித்திரமான உத்தரவைப் பிறப்பித்தார். மெஹர் பாபாவின் உத்தரவு, மறுபேச்சு எதுவுமில்லாமல் நிறைவேற்றப்பட்டது. பாபா உடனே நெர்வஸிடம் **"இவ்வாறு நடந்ததில் உனக்கு ஏதாவது வருத்தமா?"** என்று கேட்டதற்கு, நெர்வஸ் 'அப்படி எதுவுமில்லை' என்று பதிலளித்தார். ஆனால், உடனிருந்த நண்பர்களால் அந்த இழப்பைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஏனெனில் பழைய சைக்கிளும் நல்ல நிலையில்தான் இருந்தது.

மெஹர் பாபா பூனாவுக்குத் திரும்பி வந்ததும், அவருடைய நெருங்கிய நண்பர் பெய்லி நடந்ததை எடுத்துரைத்தார். மெஹர் பாபா வெளியே சென்ற வேளையில், பெய்லி, பாபாவின் குடிலுக்கு அருகிலிருந்த கிணற்றில் தவறி விழுந்து, மூழ்க இருந்ததாகவும், ஒரு வழிப்போக்கர் தற்செயலாகப் பார்த்து பெய்லியைக் காப்பாற்றியதாகவும் விளக்கினார். அந்த சம்பவம் நடந்த நேரத்தை, பிற நண்பர்கள் கேட்டறிந்தபோது, சைக்கிளைக் கிணற்றில் எறிந்த அதே வேளையில், பெய்லி கிணற்றில் விழுந்தது தெரிய வந்தது. அப்போதுதான் அனைவரும் இதில் ஏதோ முக்கியமான தொடர்பிருப்பதாக உணர்ந்தனர். அதற்குப் பிறகு மெஹர் பாபா அவ்விதமான உத்தரவை அளித்ததன் காரணத்தை விளக்கினார்: **"பெய்லியைத் தண்ணீரில் மூழ்கடிப்பதற்கு பதிலாக, நான் சைக்கிளை மூழ்கச் செய்தேன். இது சாதாரணமான இரண்டு திடப் பொருள்களின் பரிமாற்றம்."**

1922 ஏப்ரல் மாதத்தில் மெஹர் பாபா அவருடைய இருப்பிடத்தை மும்பைக்கு மாற்றும் விஷயத்தை எடுத்துக் கூறினார். மேலும் அவருடன் இணைய விரும்புவோர் அவரவர் குடும்பப் பிணைப்பை முற்றிலுமாகத் துண்டிக்க வேண்டும் என்பதையும் தெரிவித்தார். ராம்ஜூ அப்துல்லாவும் தனது விருப்பத்தைத் தெரிவித்தபோது, பாபா அவருடைய துணி வியாபாரத்தை விட்டு

விடுமாறு கூறி, "**நீங்கள் எதற்கும் கவலைப்படத் தேவையில்லை. உங்களுடைய ஆன்மீக முன்னேற்றத்தோடு உங்கள் குடும்பம் எவ்வித சிரமத்தையும் சந்திக்காமல் நான் பார்த்துக் கொள்வேன். ஒன்றை மட்டும் நினைவில் கொள்ளுங்கள் 'இந்த முழு உலகமும் ஒரு கற்பனையே! அதற்கு ஒரு மதிப்பீடே இல்லை; ஒரு கனவை விடக் குறைந்ததே!'**" என்றார்.

ராம்ஜு தனது வியாபாரத்தைக் கைமாற்றம் செய்ய முயற்சித்தும் முடியவில்லை. அப்போது பாபா ராம்ஜுவிடம், "**நீங்கள் யார் ஒருவரை, எப்போது, எங்கு சந்திக்க நேர்ந்தாலும், முதலில் 'உங்களுடைய கடை இன்னமும் விற்பனையாகவில்லை' என்று சொல்லவேண்டும்**" என்றார்.

ராம்ஜு தன்னுடைய அரசியல் மற்றும் சமூக தொடர்புகளை, காரணம் எதுவும் கூறாமல், சிலநாட்களாகத் துண்டித்துவிட்டார். ஆகையால், தெரிந்தவர்கள் மற்றும் உறவுக்காரர்களை, தற்செயலாக சந்திக்கும் போது, 'வாருங்கள்', 'வணக்கம்' என்று சொல்வதற்கு பதிலாக, "எனது கடை இன்னமும் விற்பனையாகவில்லை" என்று சொல்லி வந்தார். அனைவரும் ராம்ஜுவை, பைத்தியம் என்று நினைத்தனர். ராம்ஜூ போன்ற மதிப்பிற்குரிய பெரிய பிரபலமான வியாபாரிக்கு, இந்த விசித்திரமான உத்தரவு அவமானமாக இருந்தது. அதன் விளைவாக, ராம்ஜு வீட்டை விட்டு வெளியே செல்வதைத் தவிர்த்து வந்தார். என்றாலும் அவரை சந்திக்க வீட்டுக்கு வருபவர்களிடமும் அவ்வாறே கூறவேண்டியிருந்ததால், மெஹர் பாபாவின் உத்தரவைக் கடைப்பிடிப்பது மிகவும் சிரமமாக இருந்தது.

இவ்வாறு, மெஹர் பாபாவின் விசித்திரமான உத்தரவால் ராம்ஜு அப்துல்லா பரிதாபமான நிலைக்குத் தள்ளப்பட்டார். விரக்தியடைந்த நிலையில் ராம்ஜு தன்னுடைய வியாபாரத்தை ஏல முறையில் விற்கலாம் என்ற எண்ணத்தை பாபாவிற்கு எடுத்துக்கூற, பாபாவும் அதற்கு ஒப்புதலளித்தார். இறுதியில் அனைத்திற்கும் ஒரு தீர்வு கண்டு, மெஹர் பாபாவுடன் மும்பைப் பயணத்தில் இணைய ஆயத்தமானார் ராம்ஜு அப்துல்லா.

ஃபெர்குஸன் கல்லூரிக்கு அருகிலமைந்த குடிலில், இவ்வாறு மெஹர் பாபாவின் இறை வாழ்வு தொடர்ந்தது. அவ்வேளையில், குஸ்தாஜியின் (GUSTADJI) மகிமையை அனைவருக்கும் எடுத்துரைத்து, அவருடன் மிக்கப் பணிவுடன் நடந்து கொள்ளுமாறு மெஹர் பாபா நெருங்கிய மண்டலிக்குக் கூறினார் (குஸ்தாஜி முதலில் ஷிர்டி சாய் பாபாவுடன் இருந்து, அதற்குப் பிறகு சத்குரு உபாஸனி மஹாராஜுக்கு சேவை புரிந்து, இறுதியில் மெஹர் பாபாவிடம் வந்திணைந்த ஒரு மேல்நிலை அங்கத்தினர்). மெஹர் பாபா, இவ்வேளையில் குஸ்தாஜியின் புகைப்படத்தை, தனது குடிலில் தொங்கவிட்டு, பூமாலை அணிவித்து '**குஸ்தாஜிக்கு மாலை அணிவிப்பது எனக்கு மாலை அணிவிப்பதற்கு நிகரானது**' என்று எடுத்துரைத்தார்.

மற்றுமொரு தருணத்தில், மெஹர் பாபா, ஆன்மீகப் பாதையில் பயணம் செய்வதை, ரயில் பயணத்துடன் ஒப்பிட்டு, பல்வேறு மக்கள் வெவ்வேறு

பெட்டிகளில் அமர்ந்து, ஒவ்வொரு ரயில் நிலையம் வந்ததும் (ரயில் நிலையங்களை வேறு வேறு நிலையில் இருக்கும் ஆன்மீகத் தளங்களுக்கு ஒப்பிடுகிறார்) இறங்கிக் கொள்கின்றனர். பாபா, அவரை ரயில் ஓட்டுனருக்கு ஒப்பிட்டு, தனது சீடர்களின் செயல்பாடுகளையும் விளக்கினார். **"நான் ரயிலை ஓட்டுபவன், குஸ்தாஜி இயந்திரம், சதாஷிவ் பெட்டிகளை ஒன்றாக வைத்திருக்கும் இணைப்பு, பெஹராம்ஜி காவல் புரிபவர், பெய்லி தண்டவாளம், எஞ்சிய சீடர்கள், என்னுடன் அவர்களுக்கு உள்ள தொடர்பின் அடிப்படையில் வெவ்வேறு விதமான பெட்டிகளைக் குறிக்கின்றனர்."**

இதுபோன்ற மெஹர் பாபாவின் தன்னிச்சையான அறிவிப்புகள், விளக்கங்கள் அனைத்தும், நெருங்கிய தொடர்பில் வருபவர்கள் அனைவரின் ஆர்வத்தை வலுப்படுத்தி, குடும்ப வாழ்வை விட்டுவிட்டு மெஹர் பாபாவுடன் வந்திணைய வழி வகுத்தது. குடிலைச் சுற்றி நிரம்பி வழியும் இறை இன்பம் தரும் தெய்வீக போதையின் மத்தியில், மெஹர் பாபா, தன்னுடைய நெருங்கிய சீடர்களை, உலக வாழ்வைக் களைந்து ஆன்மீக வழியில் நடத்திச் சென்றார். அவரது வார்த்தைகளில் இறை ஞானத்தின் ஒளிக்கதிர்களை வியாபிக்கச் செய்து, சீடர்களின் ஒவ்வொரு செயலுக்கு மத்தியிலும் உண்மையை விளக்கினார்.

ஒரு முறை மெஹர் பாபா, உடன் இருந்தவர்களுடன் சீட்டு விளையாடிக் கொண்டிருந்த வேளையில், **"உங்களில் எவருக்கேனும் ஒவ்வொரு சீட்டிற்கும் இடையே உள்ள ஆன்மீக முக்கியத்துவம் என்னவென்று தெரியுமா?"** என்று கேட்க, ஒருவரும் பதில் சொல்லாதபோது மெஹர் பாபா இவ்வாறு விளக்கினார்:

**"இரண்டிலிருந்து பத்தாவது எண்கள் வரை கீழ்ப்பரிணாம நிலைகளைக் குறிக்கும். அந்த நிலைகளை ஒவ்வொன்றாகக் கடந்து செல்லும்போது, ஆத்மா, அனுபவம், உணர்வு மற்றும் வலிமையை அடையும். 'ஜெ' எனும் ஜாக், முழு உணர்வை அடைந்த மனித உருவத்தைக் குறிப்பதோடு, இந்நிலையில் பக்தியின் சிகரமாகத் திகழும். 'ராணி' எனும் சீட்டு, ஆன்மீக உட்பாதையில் அடியெடுத்து வைக்கும் கர்மயோகம் மற்றும் ராஜயோக நிலைகளைக் குறிக்கும். 'அரசன்' எனும் சீட்டு ஞானத்தைக் குறிக்கும். இவ்விதமான பூர்வாங்க நிலைகளைத் தாண்டி இருக்கும் 'ஏஸ்' என்பது ஆதியும் அந்தமுமில்லா இறைவனைக் குறிக்கும் - அளவிறுதியற்ற உணர்வு - பரமாத்மா."**

இதைத் தொடர்ந்து மெஹர் பாபா கிட்டி-புள் (GILLI-DANDA) மற்றும் கிளித்தட்டு விளையாட்டுகளின் ஆன்மீக முக்கியத்துவங்களையும் விளக்கினார்:

'கிட்டி-புள்' விளையாட்டு என்பது, ஒரு கூர்மையான முனையுடன் கூடிய சிறிய மரத்துண்டு, தரையில் கிடைமட்டமாக இருக்கும் போது, சுமார் இரண்டு அடி நீளமான கோலால் அதன் நுனி பாகத்தை அடிக்க, அது மேலெழுந்து சுழலும். அவ்வாறு சுழலும் மரத்துண்டு, மீண்டும் தரையில் விழும்

முன்பே, பெரிய கோலால் முடிந்தவரை வேகமாக அதை அடிக்க வேண்டும். ஒரு முறை மெஹர் பாபா இதன் ஆன்மீக முக்கியத்துவத்தை விளக்கினார்:

**“ஒரு சத்குரு, இறைநிலையை அடைவதற்குத் தகுதி வாய்ந்த ஒரு சீடனைத் தேர்ந்தெடுக்கும் போது, முதலில் அவனுடைய இயல்பின் கீழ்நிலையை - அதாவது ‘நான் எனும் அகந்தை’ மனதை முதலில் தாக்குகிறார். இது நீளமான கோலால் கிட்டி புள்ளின் நுனி பாகத்தை அடிக்க, அது மேலெழுந்து சுழல்வதைக் குறிப்பிடும். அந்த அகந்தை மனம், அடிபட்டு சிதைந்ததும் இரண்டாவதுமுறை கிட்டிப்புள்ளை அடிப்பது சீடனை, இறைநிலையை அடையச் செய்வதற்கு சமம். சீடன் அந்த அளவுக்குக் கஷ்டங்கள் அனுபவித்தாலும், இறுதியில் இறைநிலையை அடைவது சத்குருவின் கருணையைப் பொறுத்தது.”**

அதுபோல் ஒரு நாள் பரந்த வெளித்திடலில் குறுக்கும் நெடுக்குமாக கோடுகள் வரைந்து, சீடர்கள் ‘கிளித்தட்டு’ (ATYA-PATYA) விளையாடும் வேளையில், அனைவரையும் அழைத்து அதன் ஆன்மீக முக்கியத்துவத்தை விளக்கினார்:

**“கர்வம், கோபம், பேராசை, பொறாமை, வெறுப்பு, எரிச்சல், தற்பெருமை இவை அனைத்தும் கிடைமட்ட கோடுகளைக் குறிக்கும். ஆன்மீகப் பாதையில் பயணிக்கும் ஒருவன் இவற்றைக் கடந்து, கடவுளை நோக்கிச் செல்லவேண்டும். சமமான இரு பாகத்திற்கும் நடுவில், இறுதிவரைச் செல்லும் நீளமான கோடு, காமத்தைக் குறிக்கும். அது இதர விரும்பத்தகாத குணங்களைத் துறந்த பின்னரும் ஒருவனோடு சிறிதளவிலாவது ஒட்டிக் கொண்டிருக்கும். தன் இறுதி இலக்கான இறைநிலையை அடைந்த பின்னர், இந்தக் குறைபாடுகள் தெய்வீக பண்புகளாக உயர் நிலையை அடையும். பிறரிடம் வெளிப்படுத்தும் வேளையில் அவர்களுக்கு நன்மை பயக்கும். ஆன்மீகப் பாதையில் இருப்பவர்கள் பிறருக்கு உதவ முடியும். ஆனால் அவர்கள் எந்த நிலையில் (எந்தத் தளத்தில்) இருக்கிறார்களோ அதுவரை மட்டுமே! இறைநிலையை அடைந்தவர்கள், வழியில் மாட்டிக் கொண்டுத் தவிப்பவர்களையும் கரை சேர்த்து, அவர்கள் நிலைகொண்டிருக்கும் ஆன்மீகத் தளம் வரை எடுத்துச் செல்ல இயலும்.”**

இவ்வண்ணம், எளிமையான சொற்பொழிவுகளால், மெஹர் பாபா, ஆண், பெண் - அடங்கிய வட்டத்து சீடர்களின் ஆர்வத்தைத் தூண்டினார். அவருடைய சந்நிதானம் தெய்வீக ஒளியால் வியாபித்திருந்தது மட்டுமல்லாமல், அவருடைய சொற்பொழிவுகள் பயனுள்ளதாகவும், நினைவில் கொள்ளும் வகையிலும் அமைந்திருக்கும். பலர் அவற்றை வார்த்தைக்கு வார்த்தை மனதில் பொறித்து வாழ்வெல்லாம் பிறருக்கு அப்படியே போதித்து வந்தனர். மெஹர் பாபாவைப் பற்றிய பல விஷயங்கள், அவரை அணுகிய முதல் சீடர்களைப் பெரிதும் கவர்ந்தன; அவர்தம் மகிமையைப் புரிந்து கொள்ள வாய்ப்பாக அமைந்தன. முக்கியமாக, மீண்டும் மீண்டும் நிகழும் மூன்று முக்கிய விஷயங்கள் அனைவரிடமும் ஒரு நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தின.

1. **முதலாவதாக, அவரைச் சுற்றி இருப்பவர்களின் மனங்களை, இதயங்களை அறிந்து, ஏதோ ஒருவகையில் அதைப் பேச்சில் வெளிப்படுத்தி 'அவர் எல்லாம் அறிந்தவர்' என்பதை உணரச் செய்தது.**
2. **இரண்டாவதாக, எதுவும் கேட்காமலேயே, அவர்களை ஆட்டிப்படைக்கும் கேள்விகளுக்கு விடைகள் அளித்தது.**
3. **மூன்றாவதாக, ஒன்று நிகழும் முன்பே இந்நேரம், இவர் வருவார் என்றும், இது நடக்கும் என்றும் கணித்துக் கூறியது; தவறாமல் அது நடந்தது.**

பூனா நகரில், மெஹர் பாபாவை மேர்வான் ஷெரியார் ஈரானி, மேர்வான் ஸேட் என அவரைப் பற்றி தெரியாதவர்கள் மட்டுமே அழைத்து வந்தனர். சில மாதங்களில் அனைவரும் மதிப்பும் மரியாதையும் கலந்த தொனியில் 'மெஹர் பாபா' என்றே அழைக்கத் தொடங்கினர். அவர், தன்னுடைய கேலி, கிண்டல், விளையாட்டு, பாட்டு, சங்கீதம் இவைகளால் அனைவரின் இதயங்களையும் கவர்ந்து விட்டார். இதுவரையிலும் அவர் தன்னுடைய ஆண், பெண் - அனைத்து சீடர்களையும் பரிவோடும், பாசத்தோடும், நெருக்கமான தோழமை உணர்வுடன் நடத்திவந்தார்.

1921ஆம் ஆண்டு பூனா நகரில் மாபெரும் போர்வீரரான சிவாஜி மஹாராஜுக்குச் (SHIVAJI MAHARAJ) சிலை வைக்கப்பட்டது. மெஹர் பாபா, ஒரு நாள், தனது சீடர்களுடன் அந்த வழியே நடந்து சென்றபோது, சில குறிப்பிட்ட காரணங்களுக்காக வெவ்வேறு நூற்றாண்டில், பெரிய அல்லது சிறிய அளவில், கடவுள் மனிதனாக அவதரிக்கிறார் என்று வெளிப்படுத்தினார். இவ்வண்ணம், அவர், டெக்கன் பீடபூமியில் சில நூற்றாண்டுகளுக்கு முன்பு, பெரிய ஒரு போர்வீரராக இருந்ததை எடுத்துரைத்து விளக்கினார்: "**முந்தைய காலத்தில், நான் சிவாஜியாக வந்தேன். சிறிது காலத்திற்கு முன்வரை, ஆங்கிலேயர்கள் சிவாஜியின் வரலாற்றை திசை திருப்பி, குறை படுத்த, செய்யாத வேலைகளே இல்லை. இருப்பினும், நான் அவதார புருஷராக உருவெடுத்த இவ்வேளையில், அவர்கள், வேல்ஸ் இளவரசரின்** (PRINCE OF WALES) **கைகளால், சென்ற ஆண்டு இந்தச் சிலையை சனிவார் வாடாவில்** (SHANIWAR WADA) **திறந்து வைத்தனர்.**"

தன்னுடன் இருந்த சீடர்களை நோக்கி இவ்வாறு கூறினார்:

**"சிவாஜியின் காலத்தில் நீங்கள் அனைவரும் என்னுடன் இருந்தீர்கள். பெஹராம்ஜி, அஃப்ஸல் கானாக** (AFSAL KHAN) **இருந்தார். முகலாய மன்னராக இருந்த அவர் சிவாஜியால் கொல்லப்பட்டார். சதாஷிவ் பாட்டீல், சிவாஜியைக் காப்பாற்ற தன் உயிரைத் தியாகம் செய்த தானாஜி மால்ஸுரே** (TANAJI MALSOORE) **என்பவராவார். மஹாராஷ்டிரா மாநிலத்தில் மக்கள் சிவாஜிக்கு மிகுந்த அன்பும் மரியாதையும்**

**அளிக்கிறார்கள்.**" மெஹர் பாபாவின் இவ்விதமான அறிவிப்புகள், ஆரம்பகால சீடர்களுக்கு பெரும் நம்பிக்கையை அளித்தது மட்டுமல்லாமல், மெஹர் பாபாவின் மகிமையை உணரச் செய்தது. அதற்குப் பிறகு பல நாட்கள் மெஹர் பாபாவின் மண்டலி இதையே பேசி பேசி ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர். ஒரு நாள், '**குல்மாயின் இரண்டாவது மகன் ஆதி**, **சிவாஜியின் மனைவியாக இருந்தார்**' என்பதையும் மெஹர் பாபா அவருக்கு விளக்கினார்.

17ஆம் நூற்றாண்டில், டெக்கன் பீடபூமியில், மராட்டிய சாம்ராஜ்யத்தை உருவாக்குவதில் சிவாஜி மஹாராஜுக்கு ஒரு முக்கியமான பங்கு இருந்தது. அதற்குப் பின்னர், அதுவே 'மஹாராஷ்டிரா' மாநிலமாக உருவானது. 1630ஆம் ஆண்டு சிவாஜி பிறந்தார் - பல்துறைகளையும் ஆளும் திறன் பெற்ற ஒரு தலைவராகத் திகழ்ந்தார். பெரிய ராஜதந்திரி, சமூக சீர்திருத்தவாதி, சிறந்த ராணுவ போர் வீரர் (கொரில்லா போரில் தலைசிறந்தவர்), மற்றும் மத சகிப்புத்தன்மை உடையவர். 'பெரும் கிளர்ச்சி' எனும் இயக்கத்தைத் தொடங்கி, இந்து மத சுதந்திரத்திற்காகத் தன்னை அர்ப்பணித்து, இந்துக்களை அடக்கிக் கொடுமை படுத்திய முகலாய மன்னன் ஒளரங்கசீப் மீது படையெடுத்து வென்றார். சிவாஜியை ஆன்மீக வழியில் நடத்திச் சென்றவர், சுவாமி ராம்தாஸ், அக்காலத்தில் வாழ்ந்த ஐந்து சத்குருக்களில் ஒருவர். தன்னுடைய உண்மையான ரூபத்தைத் திரைபோட்டு மறைத்திருந்தாலும், சிவாஜி, இந்திய தேசத்தை அங்கீகரித்து, மக்களின் உணர்வுகளை அவதார புருஷரின் வருகைக்காக, குறிப்பாக முஸ்லிம்கள் மற்றும் இந்துக்கள் வாழ்ந்த டெக்கன் பீடபூமியை ஆயத்தப் படுத்தினார்.

ஒரு நவாப் (NAWAB), முஸ்லிம் இளவரசர், மெஹர் பாபாவைப் பற்றிக் கேள்விப்பட்டு அவர் தங்கியிருந்தக் குடிலுக்கு வந்தார். கவலை தோய்ந்த குரலில் அவர், தனது தந்தையின் இராஜ்ஜியத்திற்கு அவரே வாரிசு என்றும் ஆனால், வேறு ஓர் இளவரசன் அவரை ஏமாற்றி, அவரது சட்டபூர்வமான அரியணையை அபகரித்துக் கொண்டதாகவும் மெஹர் பாபாவிடம் முறையிட்டார். அவ்வளவு பெரிய சாம்ராஜ்யத்தை திரும்பப் பெற உதவுமாறு நவாப், மெஹர் பாபாவை இறைஞ்சி வேண்டினார். மெஹர் பாபா, ஒரே ஒரு நிபந்தனையாக, நவாப் சாம்ராஜ்யத்தை திரும்பப் பெற்றதும், அவருடைய பக்தர் ஒருவருக்கு வேண்டிய பண உதவியைச் செய்ய வேண்டும் என்பதை முன்வைத்து, ஒப்புக்கொண்டார்.

நவாப் அதற்கு இணக்கம் தெரிவித்தார். ஆனால் மெஹர் பாபா, எப்படி இதைச் செய்ய முடியும் என்பது அவருக்குப் புரியாத புதிராக இருந்தது. உடனே, நவாப், அவரது அரசவையைக் கைப்பற்றிய இளவரசனுக்கு அரசாங்கத்தின் ஆதரவு பக்கபலமாக இருப்பதாகக் கூறினார். பாபா அவரை சற்று அமைதியாக இருக்குமாறு கேட்டுக்கொண்டார்.

சில நாட்களில், சாம்ராஜ்யத்தைத் தன்வசப்படுத்திய இளவரசன் திடீரெனக் காலமானார். நவாப், இந்தச் செய்தியை மெஹர் பாபாவிற்குத்

தெரிவித்தார். பின்னர், அந்த சாம்ராஜ்யம் அவரது கைக்குள் வந்தது. ஆனால், நவாப், மெஹர் பாபாவிற்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறிவிட்டார் . இதை மண்டலி, மெஹர் பாபாவிற்கு நினைவூட்டியபோது, பாபா '**அதை மறந்து, இனிமேல் நவாபிடம் இது விஷயம் குறித்து பேசக்கூடாது**' என்று அறிவுறுத்தினார்.

இவ்வேளையில், தவுலத்மாய் தனது சகோதரி ஃபிரீனிமாசியுடன் மெஹர் பாபாவின் குடிலுக்குச் சென்று தரிசனம் செய்து வந்தார். தவுலத்மாயின் கணவர் ஜஹாங்கிர் அரசாங்க வன அதிகாரியாக இருந்தபோது, பணி நிமித்தம் இந்தியா முழுவதும் சுற்றி வந்தார். ஜஹாங்கிர், தன் இளம் வயதிலேயே நோய்வாய்ப்பட்டுக் காலமானார். தவுலத்மாய் அவரது இரண்டு பெண்கள் **மெஹரா** மற்றும் பிரோஜாவுடன் பூனாவில் மறுபடியும் குடியேறினார். இரண்டு இளம் பெண்களும் மெஹர் பாபாவை இதுவரை சந்திக்கவில்லை.

தவுலத்மாயின் இரண்டாவது மகள் மெஹரா, மெஹர் பாபாவின் முதல் பெண்சீடராக வேண்டும் என்பது இறைவனால் நிர்ணயிக்கப்பட்ட ஒன்று. அப்போது, மெஹராவின் வயது 15, பள்ளிப்படிப்பில் மும்முரமாக இருந்தார். மெஹராவுக்குக் குதிரை என்றால் அலாதி ஆசை. ஆனால் தனது பிரியமான தந்தையின் மறைவுக்குப் பின்னர், அந்த ஆசை நிறைவேறாமல் போயிற்று.

ஒரு நாள், பள்ளித்தோழி ஒருத்தி மெஹராவை, நாம் எது கேட்டாலும் அதை பாபாஜான் கொடுப்பார்கள் என்று கூறி, அவரிடம் அழைத்துச் சென்றாள். ஹஸ்ரத் பாபாஜான், மெஹராவிடம், "என் மகளே! உனக்கு என்ன வேண்டும்?" என வினவினார்.

மெஹரா தன்னிச்சையாக பதிலளித்தார், "பாபாஜான், என்னிடம் ஒரு குதிரை இருந்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்தேன்."

பாபாஜான், ஆகாயத்தை உற்றுநோக்கி முணுமுணுத்தார், "ஓர் அருமையான குதிரை… உன்னிடம் ஓர் அழகான குதிரை இருக்கும், அது உன்னை, சொர்க்கலோகத்திற்கு அழைத்துச் செல்லும்!"

ஹஸ்ரத் பாபாஜானின் வார்த்தைகள் வழக்கமாகப் புதிர்நிறைந்து இருக்கும். மெஹராவுக்கு எதுவுமே புரியவில்லை.

அன்று வீட்டிற்குத் திரும்பிச் சென்ற வேளையில் ஓர் ஆச்சரியம் அவருக்காகக் காத்திருந்தது. மெஹராவின் தாயார் தவுலத்மாய், அன்றுதான் அழகான வெண்குதிரை ஒன்றை வாங்கி வீட்டிற்குக் கொண்டு வந்திருந்தார். என்ன ஆச்சரியம்!

குல்மாயின் இரண்டாவது மகன் ஆதி, ஒரு நாள் பெய்லியுடன் பாபாவை சந்திக்க அவர் குடிலுக்குச் சென்றார். ஆதி அப்போது பூனா டெக்கன் கல்லூரியில் பயின்று வந்தார். மெஹர் பாபா, ஆதியை தினமும் மாலை நேரத்தில் வந்து சந்திக்குமாறு அறிவுறுத்தினார்.

ஒரு முறை, பாபா, ஆதியிடம், எப்பொழுதும் கடமைகளுக்கு உட்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு கூறினார்: “**நீ கல்லூரியில் பயிலும்போது, உனது மனதையும், இதயத்தையும் எனக்காக அர்ப்பணிப்பது உனது கடமை. உனது வாழ்வின் பிரதான கடமை என்னையே நினைப்பது என்பதை நீ நினைவில் கொள்ளவேண்டும்.**”

“நான் படிக்கும் வேளையிலும் உங்களை நினைக்க வேண்டுமா?” என்று கேட்டார் ஆதி.

பாபா உடனே, “**இல்லை; படிக்கும் வேளையில் என்னை நினைக்க வேண்டாம்! உனக்கு நேரம் கிடைக்கும்போதெல்லாம், நீ சாதாரணமாக நேசிப்பவர்களை எவ்வாறு நினைப்பாயோ அவ்வாறே உன்னுடைய முழு கவனமும் என்னிடம் இருக்கவேண்டும்!**” என்றார்.

மெஹர் பாபா, மதிய வேளையில் உணவுக்காக, தனது இல்லத்திற்குச் செல்லும்போது சில சீடர்களும் உடன் செல்வதுண்டு; நடந்து கொண்டே சிறிய சொற்பொழிவுகள் அல்லது ஆன்மீக விளக்கங்களை வழங்குவது வழக்கம்.

ஒரு முறை, நடந்து செல்லும் பாதையில், அடர்ந்த கற்றாழைச் செடிகள் நிரம்பியிருந்தன. பாபா ஆதியிடம், “**எப்போது, நான் எதைச் சொன்னாலும் நீ அதை உடனே செய்யத் தயாரா?**” என்று கேட்டார். ஆதி ஆமாம் என்று சொல்லவும், பாபா உடனே, “**உன்னுடைய தொப்பியைக் கழற்றி அந்தக் கற்றாழைச் செடிகள் மீது வீசு!**” எனக் கட்டளையிட்டார்.

ஆதி, எப்போதும் அருமையாக உடையணிவது வழக்கம். மேலும் அந்தத் தொப்பி அவர் மிகவும் விரும்பிய உடைமைகளில் ஒன்று! அவரது தந்தை இப்படி ஒரு விலை உயர்ந்த தொப்பியை வாங்கப் பணம் கொடுப்பாரா என்ற சந்தேகம். இருந்தாலும், ஆதி தனது தயக்கத்தையும் மீறி தொப்பியை வீசி எறிந்தார். பாபா பெரிதும் மகிழ்ச்சியடைந்தார். இதுபோல, சில நாட்களில் இன்னும் ஒரு சம்பவம் நடந்தது. ஆதியிடம் இருந்த அவருக்குப் பிரியமான புல்லாங்குழல் ஒன்றையும் வீசி எறியச் சொன்னார் பாபா. ஆதியின் கீழ்ப்படிதல், பாபாவை மேலும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

சில வேளைகளில் வெளியே நடந்து செல்லும் போது, மெஹர் பாபா திடீரென ஓரிடத்தில் நின்றுகொண்டு, பூமியை ஆழ்ந்து உற்றுநோக்கி, ஆராய்வது போலத் தோற்றமளிப்பது வழக்கம். அதே வேளை, மண்டலியின் கண்களுக்கு எதுவும் புலப்படாததால், அமைதியாக ஒன்றும் புரியாமல் அருகில் நின்று கொண்டிருந்தனர். ஒரு முறை அவர் வீட்டின் பின்புற வீதியில் சென்றபோது இப்படி நடந்தது. சில நிமிடங்களுக்குப் பிறகு பாபா மண்டலியிடம், “**நான் என்ன செய்கிறேன் என்று உங்களுக்குத் தெரியுமா?**” ஒருவரும் பதில் கூறவில்லை. “**ஒவ்வொரு கணமும் உடல்கள் மடிந்து, மீண்டும் பிறவி எடுத்து கொண்டேயிருக்கும். ஒவ்வொரு நொடியும் இந்தச் செயல்முறை நிகழ்ந்து கொண்டிருக்கும். நான் அவற்றைக் கண்காணித்து, இயக்கிக் கொண்டிருக்கிறேன்**” என்று விளக்கமளித்தார்.

அப்போது ஆதி நினைத்தார்: "பாபா, இந்தப் பார்வையின் ஓர் அம்சத்தை எனக்கு வழங்கினால் எவ்வளவு அற்புதமாக இருக்கும்! அவர் அந்தக் கண்ணுக்கு தெரியாத உலகங்களை எந்நேரமும் பார்க்கிறார். நம்மில் ஒவ்வொருவரும் அதைப் பார்க்க நேர்ந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?"

மெஹர் பாபாவின் சீடர்கள் அவரது அரவணைப்பில் வந்த பின்பு, சீடர்களின் குடும்பத்தினர், உறவினர் மற்றும் நண்பர்கள் பலர் மெஹர் பாபாவைப் பற்றி அறிந்து, அவர் தொடர்பில் வந்தனர். அவ்வாறு வந்த ஒருவர் ஜம்பு (JAMBOO), இணக்கமான குணம், புன்முறுவலோடு இருக்கும் வயதான பெரியவர், பெஹராம்ஜியின் மாமா, மெஹர் பாபாவை சந்திக்கக் குடிலுக்கு வருவது வழக்கம். பாபா வாழும் குடிலுக்கு இரவில் எவரையும் அனுமதிப்பது இல்லை என்று ஜம்புவுக்குத் தெரியும். இருந்தாலும், மெஹர் பாபா, இரவில் அங்கே என்னதான் செய்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ள ஆவலாயிருந்தார்.

தன் அடக்கமுடியா ஆர்வத்தில், ஜம்பு இரகசியமாக ஓர் இரவில் அங்கே செல்ல முடிவு செய்து, ஃபெர்குஸன் கல்லூரியை நோக்கி நடந்தார். எவ்வளவுதான் முயற்சித்தும் அவரால் குடிலிருக்கும் இடத்தை கண்டுபிடிக்க முடியவில்லை, குழப்பமடைந்து போனார். ஏனெனில், பூனாவில் நீண்ட காலமாக வாழ்பவர், அப்பகுதியின் அனைத்து மூலை முடுக்குகளும் அவருக்கு அத்துப்படி. இருந்தாலும், ஏமாற்றத்தில் குழப்பமடைந்து இடத்தைக் கண்டுகொள்ள முடியாமல் வீட்டுக்குத் திரும்பிச் சென்றார்.

அடுத்த நாள், அவர் மெஹர் பாபாவை சந்திக்க நேர்ந்தது. பாபா அவரிடம், வழக்கத்திற்கு மாறாக, '**இரவில் நன்றாகத் தூங்கினீர்களா**?' என்று விசாரித்தார். ஜம்பு இல்லை என்றதும், ஒன்றும் அறியாதவர் போல், '**ஏன்**?' என வினவினார். பாபா திரும்பத் திரும்பக் கேட்டும் ஜம்பு நடந்த உண்மையை ஒத்துக்கொள்ள மறுத்து விட்டார்.

சிறிது நேரம் கழித்து, மண்டலியுடன் உரையாடிக் கொண்டிருந்த வேளையில், பாபா, கடுமையான தொனியில் வினவினார், "**எவரேனும் ஏதேனும் தவறிழைத்திருந்தால் அல்லது என்னை ஏமாற்றியிருந்தால், வெளிப்படையாக என்னிடம் அதை எடுத்துச் சொன்னால், அவரை நான் மன்னித்து விடுவேன். இல்லையேல் விளைவு மிகவும் விபரீதமாக இருக்கும்.**" ஆனால், ஜம்பு வாயைத் திறக்காமல் பிடிவாதமாக, அமைதி காத்தார்.

இரண்டு நாட்களில் ஜம்புவின் ஒரே மகன் திடீரெனக் காலமானார். இறுதிச்சடங்கில் மெஹர் பாபா கூறியதை நினைவுகொண்டு, அவரை ஏமாற்றி விட்டதாக எண்ணி மனம் வருந்தினார். அதற்குப் பிறகு, ஜம்பு, மெஹர் பாபா மற்றும் மண்டலியிடம் நடந்ததை எடுத்துச் சொன்னார். அனைவரும் ஆறுதல் கூறினர்; நடந்த சம்பவங்களைக் கோர்வையாகப் பார்க்கும்போது இரக்கமுள்ள இறைவன் இவ்வித அப்பாவித்தனமான ஆர்வத்திற்கு இப்படியொரு கொடிய

தண்டனையை ஏன் வழங்க வேண்டும் என்று அனைவரும் எண்ணினர். ஆனால், அனைத்தும் நன்மைக்கே என்று எவரும், எதுவும் கேட்க விரும்பவில்லை.

சில நாட்களுக்குப் பிறகு, மெஹர் பாபா, மண்டலியுடன் குடிலுக்கு வெளியே ஓய்வெடுத்துக் கொண்டிருந்தபோது, உரையாடல்களுக்கு நடுவே பாபா, இந்து சத்குருவைப் பற்றிய கதை ஒன்றை எடுத்துரைத்தார்:

**"ஒரு முறை சத்குரு ஒருவர் சீடர்களுடன் யாசிப்பதற்காகப் புறப்பட்டார். அவர் பணக்கார வியாபாரி ஒருவரை அணுகியபோது, தானம் அளிப்பதற்கு பதிலாக, அவதூறாகப் பேசினார். இருப்பினும், சத்குரு அவரை ஆசீர்வதித்து, "உங்களுடைய லாபம் இரட்டிப்பாகட்டும்!" என்றார்.**

**"சத்குரு, பின்னர் இன்னுமொரு பணக்கார வியாபாரியிடம் சென்றபோது அவர் மேலும் கடுமையாக நடந்து கொண்டார். என்றாலும், சத்குரு அவரையும் வாழ்த்தி "உங்களுடைய லாபம் நான்கு மடங்காகப் பெருகட்டும்" என்று சொன்னார்.**

**"சத்குரு தனது சீடர்களுடன் அடுத்ததாக ஒரு வயதான, ஏழை கடைக்காரரிடம் சென்றார். அவர் சத்குருவை மரியாதையுடன் வணங்கி வரவேற்று, தன்னிடமிருந்த சில பொருட்களை அன்போடு அள்ளித் தந்தார். அந்த ஏழை வியாபாரிக்கு ஒரே அருமை மகன் இருந்தான். சத்குரு அவரை சாபமிட்டு "நீ உன் மகனை இழந்து விடுவாய்" என்று கூறிச் சென்றார். சத்குரு கூறியது போல் அந்த சிறுவன் மறுநாள் திடீரென உயிரிழந்தான்.**

**"சீடர்கள், சத்குரு நடந்துகொண்ட விதத்தைக் கண்டு குழம்பிப் போயினர். இவ்வளவு அன்போடு நடந்துகொண்ட ஒரே ஏழையை ஆசீர்வதிக்காமல் சத்குரு சபித்தது தடுமாற்றத்தைத் தந்தது.**

**அதைப் பார்த்த சத்குரு விளக்கமளித்தார்: "முதலிரண்டு வியாபாரிகளும் உலகமெனும் சேற்றில் ஆழமாக மூழ்கி, தங்களை விடுவிக்க, சிறிதும் விருப்பமில்லாமல் இருக்கிறார்கள். ஆகையால், என்னுடைய ஆசீர்வாதத்தால் அவர்கள் மேலும் அந்தச் சேற்றில் மூழ்கும் தருவாயில், அதிலிருந்து விடுவிக்கும்படிக் கதறி அழுவார்கள் .**

**"அதே வேளையில், அந்த ஏழை கடைக்காரர், ஆன்மீகத்தில் அக்கறை உள்ளவராக இருந்தாலும், தனது ஒரே மகன் மீதுள்ளப் பாசம், பாதையில் பெருந்தடையாக இருந்தது. தந்தையின் வழியில், மகன் ஒரு முள்ளாக இருந்ததால், அவனை அங்கிருந்து அகற்றி, தந்தைக்காகக் கதவைத் திறந்து விட்டேன்"** என்றார்.

**"இப்போது சொல்லுங்கள், நான் யாரை ஆசீர்வதித்தேன், யாரை சபித்தேன் என்று!"**

சத்குரு கூறிய இந்தக் கதையை ஜம்புவிற்கு நடந்த சம்பவத்தோடு சீடர்கள் ஒப்பிட்டுப் பார்த்தனர். ஜம்புவும் உண்மையை உணர்ந்து மெஹர் பாபாவுடன் நெருக்கமானார்.

பெய்லி, மெஹர் பாபா தங்கியிருந்த குடிலில், இரவு கண்காணிப்பாளராகப் பணிபுரிந்தார். எவரும் மெஹர் பாபாவின் குடிலுக்குள் நுழையாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது முக்கியம். ஒரு முறை, பெய்லி சோர்ந்துபோய் சில கணங்கள் கண்களை மூடிவிட்டார். விழித்ததும், கடமை தவறியதால், மெஹர் பாபா என்ன செய்வாரோ என்ற எண்ணத்தில், பெய்லி, அச்சத்தில் குடிலின் உள்ளே உற்று நோக்கினார். பாபா அங்கே இல்லாததைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். மேலும், குடிலின் கதவு வெளியே தாழ்ப்பாள் இடப்பட்டிருந்தது. எங்குச் சென்றிருப்பார் என எதுவும் புரியவில்லை.

பெய்லி குடிலுக்கு வெளியே அமர்ந்து குழப்பமும், கவலையும் அடைந்தார். மறுபடியும் தன்னையறியாமல் தூங்கி விட்டார். திடீரென விழித்துக் குடிலுக்குள் பார்த்தபோது, மெஹர் பாபா அங்கேயே இருந்தார். நடந்ததை எண்ணி மேலும் குழம்பிப்போய், ஏதோ கனவாக இருக்குமோ என்று எண்ணினார்.

பெய்லியின் சகோதரர் ஹோமி, பள்ளி பருவத்திலிருந்தே மெஹர் பாபாவின் எதிரியாக இருந்தவர், பாபாவை எதிர்கொள்ள ஒரு நாள் குடிலுக்கு வந்தார். அவர் சண்டாளனாக நினைக்கும் பெய்லியை, மெஹர் பாபா, அவரது சீடர்களில் ஒருவராகத் தேர்ந்தெடுத்ததை ஹோமியால் புரிந்துகொள்ள முடியவில்லை. மெஹர் பாபாவின் தோற்றம், அவர் கடைசியாகப் பார்த்ததிலிருந்து முற்றிலும் மாறிவிட்டது. இம்முறை மெஹர் பாபாவைப் பார்த்ததும், இனம்புரியாத பாசத்தால் இதயம் வலிக்கத் தொடங்கியது. சற்று நேரத்தில் பாபா, ஹோமியை அரவணைத்து, இருவரும் அவர்களின் பள்ளி வாழ்க்கை நிகழ்வுகளை நினைவு கூர்ந்தனர். அந்த நாளிலிருந்து ஹோமியும் மெஹர் பாபாவின் நெருங்கிய பக்தரானார்.

அர்ஜுன் ஸுப்பேக்கர் மெஹர் பாபாவின் அவையில் முக்கியமான சீடர்களில் ஒருவர். இரவு கண்காணிப்பாளராக, பாபாவின் குடிலில் பணிபுரியும் பாக்கியம் பெற்றவர். பாபா அவரிடம், "**எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டும், எதைக் கண்டும் அஞ்ச வேண்டாம்**" என்று கூறியிருந்தார்.

ஓரிரவு, குடிலின் அருகில் இலைகளின் சலசலப்பு அர்ஜுனைத் திடுக்கிடச் செய்தது. இருளில் உற்று நோக்கிய போது இரண்டு பெரிய உருவங்கள், அளவில் வளர்ந்துகொண்டே, அச்சுறுத்தும் விதத்தில் ஏறக்குறைய இருபதடி உயரத்தில் தென்பட்டன. அர்ஜுன் அச்சத்தில் சிலை போல் ஒரு வார்த்தை கூட பேசாமல் நின்றார். அதே வேளை, மெஹர் பாபா குடிலிலிருந்து வெளியே வந்து எரிச்சலுடன் வினவினார், "**உனக்கு என்னவாயிற்று?**" அர்ஜுன் அந்த இருள் நிறந்த இடத்தை உற்று நோக்கிக் காண்பித்தார். ஆனால் அப்போது அங்கு எதுவும் தெரியவில்லை. பாபா அவரைத் திட்டினார், "**நான் இங்கு இருக்கும்போது நீ எதற்கும் அஞ்சக்கூடாது என்று சொன்னேனா இல்லையா?**"

அதற்குப் பிறகு, மெஹர் பாபா விளக்கமாக எடுத்துரைத்தார்: "**அங்கு வந்தவை பேய்கள், மறுபிறவி வேண்டி என்னை நாடி வந்தன. தற்கொலை செய்து கொள்ளும் ஆத்மாக்கள், மறுபிறவி எடுக்க வழியில்லாமல், பலநூறு ஆண்டுகள் ஆவியாக ஆங்காங்கே அலையும். எல்லா இரவிலும் அந்தப் பேய்கள் விடுதலை வேண்டி, நானிருக்கும் இடத்தைத் தேடிவரும். ஆகையால் ஒருபோதும் பயப்பட கூடாது. அதனால் எவ்விதத் தொந்தரவும் இராது**." ஆனால் அர்ஜுனின் உடல்நிலை பாதிக்கப்பட்டு, குணமடைய பலநாட்கள் ஆயிற்று.

குல்மாயை, பூனாவுக்கு வரக்கூறி மெஹர் பாபாவிடமிருந்து கடிதம் வந்தது. அவரது மூத்த மகன் ருஸ்தத்திற்குத் திருமணம் செய்துவைக்க வேண்டி பாபாவிடம் ஏற்கனவே கூறியிருந்தார். அதையெல்லாம் காரணம்காட்டி, குல்மாய் ருஸ்தத்துடன் பூனா வந்தார்.

பெஹராம்ஜியின் மகள் நாஜாவுடன் (NAJA), குல்மாய் தினமும் வெவ்வேறு ஸொராஸ்டிரியன் குடும்பங்களுக்குச் சென்று பெண் பார்த்துவிட்டு, மாலையில் மெஹர் பாபாவிற்கு விபரங்களைத் தெரிவித்தனர். பாபா எதையும் ஏற்றுக் கொள்ளாமல், கூறினார், "**பெண் பார்க்கும் படலம் தொடர்ந்து நடக்கட்டும். இறுதியில் என்னுடைய திட்டப்படி எல்லாம் நடக்கும்**."

அன்றிரவு, மெஹர் பாபா, குல்மாய், ருஸ்தம் இருவரையும் அவரது குடிலில் தூங்கச் செய்து, அவர் சீடர்களுடன் வெளியே தூங்கினார். குல்மாய் திரும்பிச் செல்வதற்கு முன்பு, மெஹர் பாபா அவரிடம், ஆதியின் அளவில் எட்டுக் காட்டன் பைஜாமாக்கள், அடுத்த முறை வரும்போது தைத்து எடுத்து வருமாறு கூறினார்.

மெஹர் பாபா முன்பு கூறியது போல, குல்மாயின் கணவர் கய்குஷ்ரு ஈரானி, அஹமதுநகருக்கு 'கான் ஸாஹேப்' (KHAN SAHEB) என்ற கௌரவ பதவியில் ஆங்கிலேயர்களால் நியமிக்கப்பட்டார். அப்போதிலிருந்து அவரை அனைவரும் 'கான் ஸாஹேப்' என்றே அழைத்தனர்.

குல்மாயின் மகன் ருஸ்தம், மகள் பிரோஜா இருவரும் அவ்வப்போது சத்குரு உபாஸனி மஹாராஜை சந்திக்க, ஸாக்கோரிக்குச் சென்றனர். இம்முறை வந்தபோது, ருஸ்தம் தனது தந்தை கான் ஸாஹேபாக நியமிக்கப்பட்ட செய்தியை மஹாராஜுக்கு எடுத்துச் சொன்னார். மஹாராஜ், ருஸ்தம், ஆதி இருவரையும் பிரியத்துடன் ராம், லக்ஷ்மணன் என்று அழைத்து வந்தார் .

இதற்கிடையில், ஆதி மற்றும் நாஜாவின் மகள் ஃபிரீனி இருவரும் காதல் வயப்பட்டனர். இளம் பெண் ஃபிரீனி, ஆதியைத் திருமணம் செய்துகொள்ள விரும்பினார். ஆனால், தாயார், இதை உடனே மெஹர் பாபாவிற்குத் தெரியப்படுத்தினார்.

மறுகணமே மெஹர் பாபா, ஃபிரீனி, தாயார் நாஜா, ஆதி, குல்மாய் அனைவரையும் சதாஷிவ் வீட்டிற்கு அழைத்தார். பாபா, அந்த இளம்

பெண்ணிடம் எடுத்துக் கூறினார், “**ஆதியை மறந்து விடு. அவன் எனக்குச் சொந்தம். தாயார் கூட அவன் மீது உரிமை கோர இயலாது. அவனை மணம் செய்வது உனக்கு நல்லதல்ல. நீ மகிழ்ச்சியாக வாழமுடியாது.**”

“**ஆனால், என் அருளால் நீ ஒரு பெரிய செல்வந்தரை மணந்து சந்தோஷமாக இருப்பாய்**” என்றதும், ஃபிரீனி அழுது கொண்டே மெஹர் பாபாவின் முடிவை ஏற்றுக்கொண்டார். அந்த நிகழ்வுக்குப் பின்னர் ஆதிக்குத் திருமணம் குறித்த எண்ணமே வரக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டது .

குல்மாய், மெஹர் பாபாவைப் பற்றி, தோழி நாஜாவிடம் எடுத்துக்கூறி, அவருடைய பிரச்சினைகளை வெளிப்படையாக மெஹர் பாபாவிடம் எடுத்துரைக்கக் கூறினார். கடவுள் மீது அந்த அளவுக்கு நம்பிக்கை இல்லாமலிருந்தாலும், “மெஹர் பாபாவுடன் விவாதிக்க என்னிடம் ஓரிரு விஷயங்கள் உள்ளன; திருப்திகரமான பதில் கிடைத்தால், நான் மெஹர் பாபாவை நம்புவது மட்டுமின்றி, அவருடைய இருப்பிடத்தைப் பெருக்கி சுத்தமும் செய்வேன்” என்றார். நாஜா வசதியான குடும்பத்தில் பிறந்து வளர்ந்ததால் இதுபோன்ற வீட்டு வேலைகளைச் செய்து பழக்கமில்லாத நிலையில், இப்படி ஒரு வாக்குறுதியை அளித்தது குறிப்பிடத்தக்கது.

ஒரு நாள், குல்மாயுடன் குடிலுக்கு வந்த நாஜா, மெஹர் பாபாவை அணுகி, “நான் ஈரான் சென்று சில ஸொராஸ்டிரியன் சடங்குகளைச் செய்ய விரும்புகிறேன். எனது மகளை அங்கேயே திருமணம் செய்து கொடுக்கவும் ஆசைப்படுகிறேன். இது நிறைவேறினால், நான் உங்களுக்கு சேவை செய்வது மட்டுமல்லாமல், உங்கள் இருப்பிடத்தை தினமும் பெருக்கி சுத்தம் செய்வேன்” என்று கூறினார்.

மெஹர் பாபா புன்முறுவல் செய்துகொண்டே, “**நல்லது. உங்கள் விருப்பம் அப்படியே நிறைவேறட்டும்**” எனக் கூறி நகைச்சுவை தோரணையில், “**திரும்பி வந்து எனது குடிலைப் பெருக்கி, சுத்தம் செய்ய மறந்துவிடாதீர்கள்**” என்றார்.

அதற்கு நாஜா, “நான் உங்களுக்கு சேவை செய்ய விரும்புகிறேன். ஒரு வாய்ப்பு மட்டும் கொடுங்கள்” என்றார்.

“**எனக்கு சேவை செய்வது என்பது மிகவும் கடினம்; தொடர்ந்து என்னை நினைத்தாலே போதும்**” என்று பாபா கூறினார்.

ஆனால் அந்தப் பெண்மணி தனது வேண்டுதலில் உறுதியாக இருந்ததால், மெஹர் பாபா அவரிடம், “**ஈரானில் உங்கள் மகள் திருமணத்தை நடத்தி முடித்தப் பின்னர் என்னிடம் வாருங்கள், எனக்கு சேவை புரியும் வாய்ப்பை உங்களுக்கு வழங்குகிறேன்**” என்று உறுதியளித்தார்.

பெஹராம்ஜியின் மகள் நாஜா மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார். ஆனால் அவர் கணவர், நாஜா ஈரானுக்குச் செல்வதைக் கடுமையாக எதிர்த்தார். என்றாலும், கணவரின் விருப்பத்திற்கு மாறாக, நாஜா ஈரான் சென்று, மதச்சடங்குகளை செய்து முடித்து, தனது மகளுக்குத் தகுந்த வரனையும்

தேர்ந்தெடுத்து, திருமணத்தையும் நடத்தினார். ஆனால் பூனாவுக்குத் திரும்பி வந்த பின்னர் அவர் பாபாவை சந்திக்கவில்லை. அதற்குப் பிறகு, நாஜா மனநிலை பாதிக்கப்பட்டு, கோபமும் கவலையும் நிறைந்த முகத்தோற்றத்தில் காணப்பட்டார். ஏறக்குறைய ஆறு மாதங்கள், மருத்துவர்கள் பலவிதமான சிகிச்சை அளித்தும், உடல் நிலையில் எந்த மாற்றமும் இல்லாமல் அப்படியே இருந்தார் .

அவ்வேளையில், மெஹர் பாபா மும்பையில் இருந்தார். நாஜாவின் மகள் ஃபிரீனி அவரது தாயார், மெஹர் பாபாவிற்கு அளித்த வாக்குறுதியை நினைவுகூர்ந்து, அவரை பாபாவிடம் அழைத்துச் செல்ல விரும்பினார். நாஜாவும் மெஹர் பாபாவை சந்திக்க ஏங்கினார், ஆனால் உறவினர்கள் அதற்குத் தடையாக இருந்தனர். உடல்நிலை இன்னமும் சீரானபாடில்லை.

1922 மே மாதத்தில் மெஹர் பாபா, ஸாக்கோரியில், சத்குரு உபாஸனி மஹாராஜின் பிறந்தநாளை சிறப்பாகக் கொண்டாடத் திட்டமிட்டிருந்தார். அனைவரும் மே 9 அன்று ஸாக்கோரிக்குச் சென்று விழாவில் கலந்து, பின்னர் அங்கிருந்து மும்பைக்குச் செல்லவிருந்தனர்.

மெஹர் பாபா ஏற்கனவே அனைத்து சீடர்களுக்கும் அவருடைய அடுத்தத் திட்டத்தைப் பற்றி அறிவித்திருந்தார்: பூனாவிலிருந்து அனைவரும் நடைபயணமாக மும்பைக்குச் சென்று, ஒரு வருடம் அங்கே தங்கியிருந்து, அடுத்த கட்ட ஆன்மீகப் பணியில் ஈடுபடுவது! உடன் செல்லும் சீடர்கள் அனைத்து உலக பொறுப்புகளையும் விட்டுவிட வேண்டும் என்பதை பாபா தெளிவாக விளக்கினார். மேலும் பலவித சோதனைகளை சந்திக்க வேண்டியது வரும் என்றும் எச்சரித்தார். அரசாங்க காவலர்களால் கைது செய்யப்பட்டு, சிறை செல்லவும் நேரிடும் (அவ்வேளையில் இந்தியாவில், அரசியல் கிளர்ச்சி மற்றும் போராட்டங்கள் வெகுவாக நடந்து வந்ததால், மெஹர் பாபாவின் சீடர்களை, போராட்டக்காரர்கள் என்று நினைக்கவும் வாய்ப்பிருந்தது. 1921ஆம் ஆண்டு ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்ட மஹாத்மா காந்தி ஆறு வருடம் சிறையில் அடைக்கப்பட்டார். ஆங்கிலேய அதிகாரிகள் போராட்டத்தைத் தடுக்கும் எண்ணத்தில் எவரேனும் புரட்சியில் ஈடுபடுவதாக சந்தேகப்பட்டால் உடனே கைது செய்து சிறையில் அடைத்தனர்).

மெஹர் பாபாவின் சீடர்களில் பெரும்பாலும் அனைவரும், அவருடன் மும்பைக்குச் செல்வதாக ஒப்புதலளித்தனர். அவருடைய கடுமையான வார்த்தைகளால் ஊக்கம் இழந்தவர்கள் கூட இப்போது மிகுந்த ஆர்வம் காட்டினர். ஸாக்கோரிக்குச் சென்று திரும்பி வந்ததும், அனைவரும் ‘மெஹர் பாபாவிடம் சரணடையும் ஒப்பந்தப் பத்திரத்தில்’ கையெழுத்திட வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. அதன் மூலம், அவர்கள் மெஹர் பாபாவுடன் வாழ்ந்து, அவருக்குக் கீழ்ப்படியும் வாக்குறுதியை நிலை நிறுத்தினர்.

அவ்வேளையில், ஈரானிலிருந்து வந்து இந்தியாவில் குடியேறிய ஒரு விவசாயி, மெஹர் பாபாவின் வட்டத்திற்குள் வர நேர்ந்தது. ருஸ்தம் பெஹராம் ஜஃப்ராபடி (RUSTOM BEHRAM JAFRABADI) என்று அழைக்கப்பட்டார். பூனாவில், ஹஸ்ரத் பாபாஜானின் இடத்திற்கு எதிரிலமைந்த ஒரு தேநீர்க்கடையில் பணிபுரிந்தார். பாபாஜான், தினமும் அங்குச் சென்று தேநீர் அருந்துவது வழக்கம். மிகவும் தைரியம் படைத்த ஜஃப்ராபடி, பல வருடங்களுக்கு முன்னர் இந்தியா வந்து இறை ஞானிகளைத் தேடும் பணியில் ஈடுபட்டார்.

ஒரு நாள், மெஹர் பாபாவின் முதல் மண்டலியில் ஒருவரான பெஹராம்ஜி, ஜஃப்ராபடியை தேநீர்க்கடையில் சந்தித்தபோது பாபாவைப் பற்றி எடுத்துக் கூறினார். ஜஃப்ராபடியின் இதயம் பாபாவை சந்திக்கும் ஆர்வத்தில் மிகவும் படபடத்தது. அதற்குப் பிறகு, மெஹர் பாபாவை சந்திக்க சதாஷிவ் வீட்டிற்குச் சென்றார். பாபா, அங்கு அதுவரையிலும் வராத காலையில், தன்னை அறிமுகம் செய்யாமலேயே, ஜஃப்ராபடி, குல்மாயின் மகன் ஆதியை, தவறாக பாபா என்று நினைத்து வணங்கினார். ஆதி அதிர்ச்சியில் பின்வாங்க, அங்கிருந்த அனைவரும் வாய்விட்டுச் சிரித்தனர். சற்று நேரத்தில் மெஹர் பாபா அங்கே நுழைந்ததும், நடந்த நகைச்சுவை சம்பவத்தைக் கேட்டு புன்முறுவல் செய்தார். ஜஃப்ராபடியை ஆறுதல்படுத்தி, உள்ளே அழைத்துச் சென்று நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தார்.

மெஹர் பாபா அவருடைய திட்டத்தை விளக்கமாக எடுத்துக் கூறினார்: “**விரைவில் நான் மும்பைக்குச் செல்லவிருக்கிறேன். நீங்கள் என்னுடன் வருவதானால், உங்களுக்கு ஒரு வேலை வாங்கித் தருவதோடு, உங்களுடைய ஆன்மீக முன்னேற்றத்திலும் நான் கவனம் செலுத்துவேன்.**”

மே 9ஆம் தேதியிலிருந்து நான்கு நாட்கள், சத்குரு உபாஸனி மஹாராஜின் பிறந்தநாள் விழா, மிகவும் கோலாகலமாக ஸாக்கோரியில் கொண்டாடப்பட்டது. மெஹர் பாபா, தாயார் ஷிரீன், குல்மாய் மற்றும் அனைத்து சீடர்களும் அங்குச் சென்றிருந்தனர். மெஹர் பாபா, முதலில் மஹாராஜுக்கு மாலை அணிவித்து வணங்கினார். பதிலாக, மஹாராஜ் சம்பங்கி மலர் ஒன்றை பாபாவிடம் கொடுக்க, இருவரும் அதைப் பிரசாதமாக உண்டனர். பிரமாதமான பிறந்தநாள் விருந்து அனைவருக்கும் வழங்கப்பட்டது. பல ஏழை மக்களும் விழாவில் கலந்து கொண்டு விருந்தில் பங்கெடுத்தனர்.

ஆதி வீணையை மீட்ட, மெஹர் பாபா, மஹாராஜை வாழ்த்தி சிறப்பாகப் பாடினார். (பாடலின் பொருள்: அந்த இறைஞானி தண்ணீர் துளிகளைக் கடலாக மாற்றினார்.)

விழாவின்போது, சத்குரு உபாஸனி மஹாராஜ் பல மணி நேரம் மெஹர் பாபாவின் சீடர்களுடன் அமர்ந்து, ஆன்மீக விளக்கங்களை சிறப்பாக எடுத்துரைத்தார். மெஹர் பாபாவின் ஆன்மீக நிலையைப் பற்றிக் கூறும்போது: “நீங்கள் அனைவரும் நான் கூறுவதை கவனமாகக் கேளுங்கள். என்னிடம் இருந்த திறவுகோலை நான் மேர்வானுக்குக் கொடுத்து விட்டேன். இப்போது

அவன் கால்களை - ஒரு கையால் அல்ல இரண்டு கைகளாலும் - பற்றிக் கொள்ளுங்கள். இது நான் உங்களுக்கு வழங்கும் புத்திமதி. நீங்கள் அவ்வாறு செய்தால் சிறப்பாக இருப்பீர்கள்.

"மேர்வான் இவ்வுலகை அவனது சுண்டு விரலால் ஆடவைப்பான். மேற்கத்திய நாடுகளிலிருந்து மக்கள் திரள்திரளாக அவனை தரிசிக்கவும், அவனிடமிருந்து ஆசிகளைப் பெறவும் வருவதை நீங்கள் காண்பீர்கள். இறையருளால், நீங்கள் அவனைப் பின்பற்றினால் உங்கள் இலக்கை நிச்சயமாக அடைவீர்கள்" என்றார்.

அனைவரும் புறப்படுவதற்கு முன்பு, மஹாராஜ், நவல் மற்றும் தீனா **தலாட்டி**யின் (NAVAL & DINA TALATI - மஹாராஜின் நெருங்கிய பக்தர்கள், இறுதியில் மெஹர் பாபாவின் சீடர்களாயினர்) திருமண நிச்சயதார்த்தத்தை நடத்தி வைத்தார். நவல் திருமண தேதியைப் பற்றிக் கேட்டபோது, 'இனி எல்லாமே உங்களுக்கு மேர்வான்தான்' என்று கூறிவிட்டார். மேர்வானைப் பைத்தியக்கார ஈரானி எனக் கூறிவந்த நவல், கடைசியில் அவரை குருநாதராக ஏற்றுக்கொண்டு, எஞ்சிய வாழ்நாளின் அனைத்து விஷயங்களிலும் மெஹர் பாபாவிற்குக் கீழ்ப்படிந்து நடந்தார்.

மும்பைக்குத் திரும்பிச் செல்லும் முன்பு, ஸுனாமாசியும் அவரது மகள் கோர்ஷத் இருவரும் மெஹர் பாபாவைத் தனியாக சந்தித்துப் பேசினர். "**மஹாராஜின் ஸாக்கோரி ஆஷ்ரமம் எப்படி இருக்கிறது**?" என்று மெஹர் பாபா கேட்டபோது, ஸுனாமாசி "மிகவும் இன்பகரமாக இருக்கிறது" என்றார். உடனே மெஹர் பாபா, "**நீங்கள் என் ஆஷ்ரமத்தில் வந்து தங்குவீர்களா**?" என்று கேட்டார்.

"எப்போது?" ஸுனாமாசி வினவினார்.

"**இப்போதல்ல**! **நான் என் இருப்பிடத்தை அமைத்த பிறகு**! **நீங்கள் வருவீர்களா எனத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்**!"

"நிச்சயமாக!" என்று ஸுனாமாசி பதிலளித்தார்.

ஸுனாமாசியின் மகள் கோர்ஷத் அவர்களின் உரையாடலில் மிக்க ஆர்வமாக இருந்ததோடு, 'மெஹர் பாபா, ஏன் தனது தாயாரிடம் மட்டும் கேட்கிறார்? என்னிடமும் கேட்கலாம் அல்லவா!' என்று மனதில் நினைத்தார்.

எதுவாகிலும், பாபா இதை மட்டும் கோர்ஷத்திற்குக் கூறினார்: "**நன்றாக இருங்கள்**! **என்னையே நினைவில் கொள்ளுங்கள்**! **நாம் மீண்டும் சந்திப்போம்**!"

மஹாராஜின் பிறந்தநாள் விழாவுக்குப் பிறகு, மெஹர் பாபாவும் குஸ்தாஜியும் சில தினங்கள் அங்கே இருந்தனர். ஐந்து நாட்கள் மஹாராஜை தனியாக சந்தித்துவிட்டு இருவரும் பூனா திரும்பி வந்தனர்.

மெஹர் பாபா எதிர்வரும் மும்பை பயணத்தில் மிக்க ஆர்வம் காட்டினார். பூனாவிலிருந்து மும்பைக்கு இரண்டே நாட்களில் நடைபயணம்

செல்வதாகத் திட்டம். முன்ஷி ரஹிம் மும்பை அந்தேரியில் வசதியான வீடு ஒன்றை ஏற்பாடு செய்தார். மெஹர் பாபா, உடன் செல்லும் மண்டலியின் தனிப்பட்ட பொறுப்புகளை மறு ஆய்வு செய்வதும், பத்திரங்களில் கையெழுத்து வாங்குவதிலும் தனது கவனத்தைச் செலுத்தினார்.

பூனா, ஃபெர்குஸன் கல்லூரி சாலையில் அமைந்த மெஹர் பாபாவின் குடிலுக்கு வரும் பெரும்பாலான பக்தர்களும், கஸ்பாபேட்டில் வாழ்ந்த மண்டலியும், மெஹர் பாபாவுடன் மும்பைக்குச் செல்லும் பயணத்தை எதிர்நோக்கி மும்முரமாக இருந்தனர். பெஹராம்ஜி மதுபானக்கடை மற்றும் உடைமைகளை விற்பதில் கவனம் செலுத்தினார். ஏனைய சீடர்களும் குடும்பம் மற்றும் தொழில் பிணைப்புகளிலிருந்து விடுபட வேண்டியவற்றை வேகமாகச் செய்து வந்தனர்.

மெஹர் பாபா கடைசியாக, மே 21 அன்று இரவில் அந்த எளிய மூங்கில் குடிலில் தங்கியிருந்தார்; அது, அவரது ஆரம்பகால பணிகளைத் தொடங்கிய ஆன்மீகக் குழந்தைப் பருவத்தின் தொட்டிலாக சிறந்து விளங்கி, பின்பு புனித இடமாக அமைந்தது.

ஒவ்வொரு மண்டலியும் கடைசி முறையாகக் குடிலுக்குள் சென்று வணங்கிவிட்டு வந்ததும், அந்தக் குடில் பிரிக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டது. மெஹர் பாபா, உடனே, அனைவரையும் முன்னின்று வழிநடத்தி, கஸ்பாபேட்டில் வாழ்ந்த சதாஷிவ் வீட்டிற்குச் சென்றார். அங்கிருந்து அனைவரும் அவரவர் பெட்டி படுக்கைகளை மாட்டு வண்டியில் ஏற்றிக்கொண்டு, அன்றிரவே உலகம் அமைதியாகத் தூங்கும் வேளையில், பாத யாத்திரையாக மும்பையை நோக்கிப் புறப்பட்டனர்.

இதுவரை, ‘கண்டிப்பான கீழ்ப்படிதல்’ என்று மெஹர் பாபா எதையும் வலியுறுத்தவில்லை. இரக்கமுள்ள இறைவன் புதிய, பக்குவமற்ற சீடர்களை தன்வசம் ஈர்த்து, ஆன்மீக வெம்மையில் ஆழ்த்தினார்.

கடவுள் அளவிலா இரக்கமானவர்;
ஆனால் அவரை அணுகும் பாதை எளிதல்ல!
குருநாதர் இதுவரை, அந்த அக்னிபாதை
எவ்வளவு கடினம் என்பதைக் கூறவில்லை!
அவர் இப்போது இரக்கமற்றவர் போலத் தோன்றினாலும்,
உண்மையான வெகுமதியை வழங்குவது உறுதி!
சீடர்களுக்கு, அவர்களின் அகங்காரம் அனைத்தும்,
மனதினுள்ளே அழிக்கப்படுவதன் ஆரம்பம் இது என்று தெரியாது!
இறைவுணர்வு என்பது நெருப்பில் எரிவது போல்;
அதன் விலை ‘நான்’, ‘நான்’ எனும் அகந்தை!
குருநாதரின் கருணை இல்லாத வரையில்,
அந்த விலையை வழங்கவும் முடியாது!
அவ்வாறு வழங்கப்பட்ட ஒருவர் நெருப்பில் எரிந்தால்,
இரக்கத்திற்கும், பரிதாபத்திற்கும் இடமே இராது!

குருநாதரின் அளப்பரிய கருணை
அவர் அன்பின் சுடரை வெளிப்படுத்தும்!
இப்படி ஒவ்வொரு சீடரும் கொஞ்சம் கொஞ்சமாக
அதன் விலையை வழங்கட்டும்!

மும்பையை நோக்கி நடைபயணம் தொடங்கும் முந்தைய இரவில் நிகழ்ந்த ஒரு சம்பவம்: மெஹர் பாபாவிற்குக் கீழ்ப்படிதல் - முழுமையான கீழ்ப்படிதல் எவ்வளவு முக்கியம் என்பதை அனைவருக்கும் உணரவைத்தது. பூனாவிலிருந்து புறப்படும் முன்னர் இந்த சம்பவம் முதல் பாடமாக அமைந்தது.

மெஹர் பாபா, காலை சிற்றுண்டிக்காக டாக்டர் கனி, ஆதி, ஸ்லாம்சன் மூவரையும் ரொட்டி, வெண்ணெய் மற்றும் தேநீர் வாங்கிவர அனுப்பி வைத்தார். அருகிலிருந்த உணவகத்தில் வேண்டியதைக் கூறிவிட்டு மூவரும் அமர்ந்திருந்தனர். அப்போது ஆதிக்கு அபார பசி எடுக்கவே, அவருடைய பாகத்தை அங்கே, உடனே உண்ண விரும்பி, டாக்டர் கனி பெரியவர் ஆகையால் ‘அவ்வாறு சாப்பிடுவது முறையா?’ என்று அவரிடம் கேட்க, அவரும் ‘அதில் ஒன்றும் தவறில்லை’ என்றதும், ஆதி அங்கேயே அதை உண்டார். அதனால் திரும்பிவர சற்று காலதாமதமாயிற்று. ‘**ஏன் இவ்வளவு நேரம்?**’ என்று பாபா கேட்டதற்கு, ஆதி அங்கேயே அவரது பங்கை உண்டதை விளக்கினார். அது பாபாவைப் பெரும் வருத்தத்தில் ஆழ்த்தியது. பசி எடுத்ததால், டாக்டர் கனியிடம் அனுமதி கோரிய பின்னரே உண்டதாக ஆதி விளக்கினார். பாபா உடனே கனி பக்கம் திரும்பி, ‘**ஆதி கூறுவது உண்மையா?**’ என வினவ, கனி மறுத்தார்! மறுத்ததும் பாபா, ஆதியின் கன்னத்தில் அறைந்தார்.

மெஹர் பாபா, எரிச்சலில் மூவரையும் வெளியேறச் சொல்லி, ஒருபோதும் திரும்பி வராதீர்கள் என்று உத்தரவிட்டார். அதிர்ச்சியில் மூவரும் வெளியேற ஆயத்தமாயினர். ஆனால், பாபா மூவரையும் திரும்ப அழைத்து எச்சரித்தார்: “**என்னுடைய விருப்பத்திற்கு எதிராக இனிமேல் ஒருபோதும் இப்படி கவனம் இல்லாமல் இருக்காதீர்கள்! என்னுடைய விருப்பு வெறுப்புகளை கற்றுணர வேண்டியது அவசியம்!**”

ஏனைய சீடர்கள் மெஹர் பாபாவின் மனநிலையில் இத்தகைய திடீர் மாற்றத்தைக் கண்டுத் திகைத்துப் போயினர். அங்கிருந்த அனைவரிடமும் பாபா கண்டிப்பாகக் கூறினார்: “**இந்நேரத்திலிருந்து, என்னுடன் வாழும்போது, என்னை மகிழ்விப்பதில் எந்நேரமும் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். வெளியே உண்ணக் கூடாது என்று என்னிடமிருந்து உத்தரவு எதுவும் இல்லையென்றாலும், நான் அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கும் வேளையில், தனது சுய விருப்பத்தைப் பூர்த்தி செய்ய இது சரியான நேரமோ, இடமோ இல்லை என்பதை ஆதி அறிந்திருக்க வேண்டும்!**” மெஹர் பாபாவின் ஒவ்வொரு வார்த்தைக்கும் இவ்வித கண்டிப்பான ஆனால் பணிவான அணுகுமுறை அனைவரிடமும் ஒரு பதட்டமான உணர்வை உருவாக்கியது.

விடியற்காலை இரண்டு மணிக்கு, அனைவரையும் மெஹர் பாபா முன்னின்று வழிநடத்தி, முதலில் ஹஸ்ரத் பாபாஜானின் இருப்பிடத்திற்குச் சென்றார். பாபா, பெய்லியுடன் சற்று தொலைவில் நின்று வணங்க, பிற அனைவரும் பாபாஜானை அடிபணிந்து வணங்கி விடை பெற்றனர். மும்பையை நோக்கிச் செல்லும் சாலையில் அனைவரும் பயணத்தைத் தொடங்கினர். மொத்தத்தில் 45 நபர்கள் - 22 இந்துக்கள், 12 முஸ்லிம்கள், மற்றும் 11 ஸொராஸ்டிரியர்கள். இதை அனைவரும் புனித பாத யாத்திரையாகக் கருதினர். வரிசைக்கு நான்கு பேர்களாக 11 வரிசையில் சென்றனர். குஸ்தாஜி முன்னும் பின்னும் சென்று வரிசையை சீர்படுத்தி வந்தார்.

நான்கு மணி நேரத்தில் சிஞ்ச்வாட் கிராமத்தை வந்தடைந்து, ரயில் நிலையத்திற்கு எதிராக, அர்ஜுன் ஸுப்பேக்கர் ஏற்பாடு செய்த பங்களாவில் அனைவரும் மகிழ்ச்சியுடன் களைப்பாறினர். சற்று ஓய்வுக்குப் பிறகு, பயணம் தொடர்ந்தது. களைப்பாக இருந்த சிலரை சிறிது தூரம் ரயிலில் பயணம் செய்ய பாபா அனுமதித்தார். டாக்டர் கனி ஜுரத்தால் அவதிப்படவே, பாபா 'கியூனைன்' மாத்திரையைத் தந்தார்.

பயணம் தொடர்ந்து, மலை பள்ளத்தாக்கு வழியாக இரவில் நிலா வெளிச்சத்தில் மும்பையை நோக்கி நடந்து சென்றது, அனைவருக்கும் மறக்க முடியாத, கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது.

பன்வெல் (PANVEL) என்ற இடத்திற்கு வந்ததும், மெஹர் பாபா கூறியது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது: **"இப்போது பன்வெல் வந்துவிட்டது; இங்கே கடலும் நிலமும் சந்திப்பதால், நடந்து வந்த புனித பயணம் நிறைவடைந்தது. இங்கிருந்து மும்பைக்குப் பேருந்தில் செல்லலாம்!"**

இவ்வாறு, மும்பையில் முன்ஷி ரஹிம் இல்லத்திற்கு அனைவரும் வந்து, தங்கள் இருப்பிடம் செல்லும் வரை அங்கேயே தங்கினர். பயணத்தில் பல சிரமங்கள் இருந்தாலும், இந்தப் புனித யாத்திரை சிறப்பாக அமைந்தது என மெஹர் பாபா பறைசாற்றினார்.

எல்லையில்லா இன்ப நிலையை அடைந்த ஒருவரால்தான்
இறை கீதங்களைப் பாடமுடியும்.
இந்த மெல்லிசையைக் கற்றறிய உலக சிந்தனை ஒவ்வொன்றும்
இறை அன்பின் புனிதமான நெருப்பில் வீசப்படவேண்டும்!
அந்த இறை கீதங்களின் எதிரொலி
சீடர்களின் உதடுகளில் வெளிப்பட்டது.
இது ஓர் ஆரம்பம்தான்.
அவதார புருஷனின் உருவழியாக இறையன்பின் நெருப்பு
கொழுந்துவிட்டு எரிவதை, சீடர்கள் அனைவராலும் காணமுடிந்தது.



**தரையில் அமர்ந்திருப்போர்**: குஸ்தாஜி, மெஹர் பாபா

**முதல் வரிசை**:

கனி முன்ஸிஃப், காக் ஸாஹேப் (அஹமத் அப்பாஸ்), ஸையத் ஜமதார், முன்ஷி ரஹிம், உஸ்மான், நோமன் பாய், லத்தீஃப், அஸார் ஸாஹேப், மாதோ

**இரண்டாவது வரிசை**:


உஸ்மான், ரஹிம், மர்யா, பெய்லி, இலிம், மாஸாஜி, பாபு

**மூன்றாவது வரிசை**:

ஸ்லாம்ஸன், விட்டல், அடையாளம் தெரியாதவர், சௌதரி, யஷ்வந்த் ராவ், அர்ஜுன் ஸுபேக்கர், பால்




மன்ஸில்-எ-மீம்



மெஹர் பாபா, **1922**

# மன்ஸில்-எ-மீம், ஆரம்பகால பயிற்சி மையம்

**(Manzil-e-Meem - House of the Master)**

மெஹர் பாபா மண்டலியுடன் 1922, ஜூன் 6 அன்று புதிய இடத்திற்குச் சென்றார். அரண்மனை போன்ற பெரிய வீடு, விசாலமான வரவேற்பறை, அனைவரும் அங்கே அமர்ந்ததும், மெஹர் பாபாவின் முன்னிலையில் நடந்த முதல் விவாதத்தின் தலைப்பு என்னவெனில் 'அந்த பங்களாவுக்கு என்ன பெயர் சூட்டுவது?' என்பதே. பல பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டு இறுதியில் மெஹர் பாபா 'மன்ஸில்-எ-மீம்' (MANZIL-E-MEEM) என்று பெயர் சூட்டினார். அன்று மாலை கவாலி இசை நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் அக்கம் பக்கம் உள்ளவர்கள் பலர் அழைக்கப் பட்டனர்.

மன்ஸில்-எ-மீம் செல்வதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு, மெஹர் பாபா கூறியதற்கு இணங்க, டாக்டர் கனி ஏழு கட்டளைகள் அடங்கிய பட்டியல் ஒன்றைத் தயார் செய்து, அனைவரின் கையெழுத்துக்காக வைத்திருந்தார். மன்ஸில்-எ-மீம் சென்ற அந்நாளிலிருந்து அனைவரும் தவறாமல் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்.

1. **என்னுடைய ஆன்மீக வழிமுறைகளை அப்படியே பின்பற்ற வேண்டும்.**
2. **என் ஆணைப்படி மட்டுமே ஒருவர் இன்னொருவருடன் அல்லது குழுவிலுள்ள பிறருடன் தொடர்பு வைத்துக் கொள்ளவோ அல்லது அதை முறிக்கவோ வேண்டும்.**
3. **அடுத்த 12 மாதங்களுக்கு முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டியவை - மதுபானம் அல்லது போதை பொருள் அருந்துவது, மேலும் உடலுறவு, என் அனுமதியோடு, மனைவியுடன் மட்டுமே.**
4. **இந்த மன்ஸிலில் இருக்கும் அனைவருக்கும் ஏற்ப ஒவ்வொருவரும் உணவு உண்பது, பானம் அருந்துவது மற்றும் உடை அணிவது அவசியம். எந்த சூழ்நிலையிலும் மீன், மாமிசம், முட்டை உண்ணுவதை தவிர்க்க வேண்டும்.**
5. **வீட்டின் வளாகத்தில், மாலை ஏழு மணியிலிருந்து காலை ஏழு வரை, விபத்து மற்றும் ஆபத்தான சந்தர்ப்பங்களைத் தவிர, அனைவரும் இருக்க வேண்டும்.**
6. **ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்ட வெளியளவிலான வேலைகளை உண்மையுடன் செய்ய வேண்டும்.**
7. **முழு உலகமும் எனக்கு எதிராக இருந்தாலும், என்னிடமிருந்து விலகக் கட்டளையிட்டாலொழிய, எந்த சூழ்நிலையிலும் எனது சகவாசத்தை விட்டு விலகக் கூடாது.**

குறிப்பு: **என்னுடைய கட்டளைகளில் கட்டுண்டிருக்கும் உங்களில் எவரேனும் இந்த ஏழு** வழிமுறைகளையும் **வேண்டுமென்றே மீறினால், நான் எதுவும் உண்ணாமல், அருந்தாமல், உங்களோடு எந்த சகவாசமும் இல்லாமல் என்னை நானே ஓர் அறையில் அடைத்துக் கொள்வேன்**.

மெஹர் பாபா குறிப்பாக ஒரு சிலரிடம், பாபாவின் சகோதரன் ஜால், அவரையும் சேர்த்து, கட்டைவிரல் நுனியிலிருந்து இரத்தம் எடுத்து, பெருவிரலைப் பதிவு செய்து, அனைத்து ஏழு கட்டளைகளையும் தவறாமல் கடைப்பிடிப்பதாகவும், இறுதிவரை அவருடனே இருப்பதாகவும் உறுதிமொழி பெற்றுக் கொண்டார்.

இரண்டாவது உத்தரவைப் புரிந்துகொள்ள, இந்த உதாரணத்தை பாபா எடுத்துரைத்தார். பூனாவிலிருந்த வேளையில், குஸ்தாஜியின் சகோதரர் ஸ்லாம்சனுடன் ஆதி சேரக்கூடாது என்று கட்டளையிடப்பட்டது. மும்பை வந்த பின்னர், இன்னும் ஒரு நண்பர் அஸார் ஸாஹேபுடனும் சேர்ந்திருக்கக் கூடாது என்ற கட்டளையும் வழங்கப்பட்டது. இதன் பொருள் என்னவெனில் ஆதி, அஸார் ஸாஹேபைப் பற்றி எதுவும் குறிப்பிடக்கூடாது. அவருடன் பேசவோ அல்லது அவரைப் பார்க்கவோ கூடாது; பாபா சொன்னால் மட்டுமே அதைச் செய்யலாம்.

நான்காவது உத்தரவு, குறிப்பாக முஸ்லிம் மற்றும் ஸொராஸ்டிரிய நண்பர்களுக்கு மிகவும் சிரமமானது ஏனெனில் மாமிசம் அவர்களின் பிரதான உணவு. இந்துக்கள் பாரம்பரியமாக சைவ உணவையே உண்டு வந்தனர்.

மன்ஸில்-எ-மீம் சென்ற முதல் வாரத்தில், பல நண்பர்கள் அரசாங்க அலுவலகங்கள், தொழிற்சாலை அல்லது தனியார் நிறுவனங்களில் பணிபுரிந்தனர். வேலையிலிருந்து மாலை ஏழு மணிக்கு முன்னர் திரும்பி வரவேண்டிய கட்டாயம். அஹமத் அப்பாஸ் (AHMED ABBAS), அஸார் ஸாஹேப் (ASAR SAHEB) இருவருக்கும் சத்குரு உபாஸனி மஹாராஜின் வாழ்க்கை வரலாற்று தொகுப்பை உருது மொழியில் எழுதும் பொறுப்பு வழங்கப்பட்டது. மாஸாஜிக்கு முஸ்லிம், பார்சி, மற்றும் ஈரானிய நண்பர்களுக்கு உணவு தயார் செய்யும் பணி; அதேவேளை சௌத்ரி இந்துக்களுக்கு உணவு தயார் செய்தார். குஸ்தாஜி, பாபாவின் இணைபிரியா தோழனாக இருந்து அவருக்குத் தேவையான தேநீர் தயார் செய்வது வழக்கம். இப்படி, சிலர், வீட்டிலேயே வேலைகளை கவனிக்க, பிற அனைவரும் வெளியே சென்று பணிபுரிந்து வந்தனர்.

உணவு அனைத்தும் எளிதானது. காலையில் சிற்றுண்டி - ரொட்டி, வெண்ணெய், தேநீர். மதிய உணவு - சாதம், பருப்பு, காய்கறி. மாலை உணவு - ரொட்டி, காய்கறி. அவ்வப்போது சினிமா, நாடகம் செல்லவும், வாடகைக் கார் எடுத்துக்கொள்ளவும் அனுமதிக்கப்பட்டது. ஒவ்வொரு மாதமும் திருமணமான மண்டலியின் மனைவி மற்றும் குழந்தைகளுக்குத் தேவையான பணம், பிரசாதமாக அனுப்பி வைக்கப்பட்டது. இதனால் மண்டலியில் திருமணமானவர்கள் கவலையின்றி இருக்க முடிந்தது.

மன்ஸில்-எ-மீமில் அனைத்து வசதிகளும் செய்யப்பட்டிருந்தன. ஆனால் வாழ்க்கை அவ்வளவு மகிழ்ச்சிகரமாக இல்லை. மெஹர் பாபாவின் சாதாரண மற்றும் மிகக்கடினமான உத்தரவுகளைச் செவ்வனே செய்து முடிப்பது, மிகவும் இன்றியமையாததாக இருந்தது. ஆகையால், வேறு எந்த வேலையும் அதைவிடப் பெரிதல்ல. தனிப்பட்ட சுதந்திரம் என்பது கடந்து போன கதை. சில நேரங்களில் பாபாவின் ஆணைகளுக்கும், அறிவுறுத்தல்களுக்கும் கட்டுண்டு சிறையில் அடைக்கப்பட்டது போன்ற நிலைமை. வெளியில் செல்லும் போது கூட, எந்நேரமும் பாபாவின் பார்வையிலேயே இருப்பது போன்ற உணர்வு.

மெஹர் பாபாவின் அழைப்புக்கு ஒருவர் நொடிப் பொழுதில் தாமதமின்றி உடனடியாக பதிலளிக்க வேண்டியது அவசியம்; அழைக்கும் தருணத்தில் ஒருவர் சவரம் செய்து கொண்டிருந்தாலும் அனைத்தையும் விட்டு விட்டு, அப்படியே செல்ல வேண்டிய கட்டாயம். பாபா ஒருவரை அவர் நிற்கும் நிலையில் நிற்க உத்தரவிட்டால், மறு உத்தரவு வரும்வரை அவ்வாறே நிற்க வேண்டும்.

மெஹர் பாபாவின் முதல் ஏழு உத்தரவுகளைத் தவிர ஒவ்வொரு நாளும் விதிக்கப்பட்ட புதிய நிபந்தனைகள், மண்டலியின் தினசரி பழக்கங்களான உண்பது, உறங்குவது, நீராடுவது போன்ற சிறிய இன்பங்களுக்கும் தடையாக இருந்தன. எவரும் விருப்பப்படி எதுவும் செய்ய இயலாத நிலை. சிறிய தவறும் பெரிய தலைவலியாக பாபாவின் கோபத்திற்கும், அதிருப்திக்கும் வழிவகுத்தது. மன்ஸிலுக்கு வெளியே எவரும் பேசவோ, எழுதவோ, வாசிக்கவோ கூடாது என்ற பொது நிபந்தனை அமலில் இருந்தது. ரயில், பேருந்துகளில் பயணம் செய்யும்போது, தற்செயலாக நிகழும் சாதாரண விளம்பரங்கள் மற்றும் அறிவிப்புகளை வாசிக்கவும், பழைய நண்பர் எவரையேனும் வழியில் சந்திக்க நேர்ந்தால் விசாரித்து உரையாடுவதற்கும் கூடத் தடை விதிக்கப்பட்டது. இத்தகைய அசாதாரணமான ஆணைகள் அனைவருக்கும் விரும்பத்தகாத சூழ்நிலைகளை உருவாக்கின.

மண்டலியில் ஸரோஷ் ஈரானி, மெஹர் பாபாவிற்கு மிகவும் நெருக்கமானவர். ஒரு நாள், அவர் மாலையில் தான் பணிபுரியும் மோட்டார் வாகனம் பழுது பார்க்கும் இடத்திலிருந்து மன்ஸில்-எ-மீமுக்கு வந்துகொண்டிருந்த வேளையில், ரயிலில் அவருக்கு மிகவும் பரிச்சயமான நண்பர் ஒருவரை சந்திக்க நேர்ந்தது. அந்த நண்பர் ஸரோஷுடன் பள்ளியில் ஒன்றாகப் படித்தவர்; பார்த்ததும் மகிழ்ச்சியில் அவரை வரவேற்றார். ஸரோஷ், பாபாவின் கட்டளைகளை நினைவில் கொண்டு, பதிலெதுவும் கூறாமல் அவரைத் தெரியாதவர் போல முகத்தைத் திருப்பிக் கொண்டார். ஒருவேளை, தவறாகப் புரிந்திருக்கலாம் என எண்ணி, அந்த நண்பர் அருகில் வந்து, ஸரோஷ் என்பதை ஊர்ஜிதம் செய்து, “ஸரோஷ், உனக்கு என்னவாயிற்று? நான் யார் என்று தெரியவில்லையா?” என ஆச்சரியத்தில் கேட்டார். ஸரோஷ் அதைப் பார்த்து, தர்மசங்கடமான உணர்வில், இந்த சூழ்நிலையும் ஒரு நாள் கடந்துபோகும் என்ற எண்ணத்தில் அமைதியாக இருந்தார்.

ஆனால் அந்த நண்பர், மறுபடியும் ஸரோஷை அணுகி, கத்தினார், “ஸரோஷ், நீ என்ன பைத்தியமா? கடவுளின் நிமித்தம் தயவு செய்து என்னைப் பார்!” ஸரோஷ் எவ்விதமான பதிலும் தராததால், அவர் மீது இரக்கப்பட்டு கண்ணீர் ததும்பும் கண்களுடன் அருகிலிருந்தவர்களிடம், அவருடைய பழைய நண்பன் இப்போது பைத்தியமாகிவிட்டான் எனக் கூறினார். தனது நண்பனின் பரிதாபமான நிலையைக் கண்டுகொள்ளாமல், ‘இந்த விஷயத்தை பாபா கேள்விப்பட்டால் எவ்வளவு மகிழ்ச்சியடைவார்’ என்றெண்ணி ஸரோஷ் பூரிப்படைந்தார். மன்ஸிலுக்கு வந்ததும், நடந்ததை பாபாவிற்கு விளக்கமாக எடுத்துரைத்தார். மெஹர் பாபா, உடனே, ஸரோஷிடம் அந்த நண்பருக்குக் கடிதம் எழுதி, அவரை மன்ஸில்-எ-மீமுக்கு அழைக்குமாறு உத்தரவிட்டார். அதன் பின்னர் ஒரு நாள், அந்த நண்பர் மன்ஸில்-எ-மீமுக்கு வந்து ஸரோஷின் உண்மை நிலையை அறிந்து சந்தோஷமும், நிம்மதியும் அடைந்தார். அவ்வப்போது அந்த நண்பர் மன்ஸில்-எ-மீம் வந்து போகவும் அனுமதிக்கப்பட்டார்.

ஓரிரவு, சீடர்களுடன் நடந்த உரையாடலுக்குப் பிறகு, மெஹர் பாபா அவர்களிடம் அவரவர் அறைக்குச் சென்று தூங்குமாறு கூறினார். அனைவரும் அவ்வாறே செய்தனர்; ஆனால் ருஸ்தம், ஃபெரடூன் இருவரும் அவர்களின் அறைக்குச் செல்லாமல், நேரடியாகக் கழிவறைக்குச் சென்றதால், பாபா அவர்களை அழைத்து, “**நீங்கள் எனது கட்டளையை ஏன் மீறினீர்கள்?**” என்று கேட்க, இருவரும், பதிலாக, ‘நாங்கள் உங்கள் கட்டளையை மீறவில்லை’ என்று பதிலளித்தனர். அதற்கு பாபா, “**நீங்கள், முதலில் உங்கள் அறைக்குச் சென்று, படுக்கையைத் தயார் செய்த பின்பு வெளியே சென்றிருக்க வேண்டும்**” என்றதும், இருவரும் இனிமேல் அப்படியே செய்வதாக உறுதியளித்தனர்.

இவ்விதமான, வெளியளவில் தோன்றும் முக்கியமற்ற விஷயங்களில் கூட மெஹர் பாபா கீழ்ப்படிதலை எதிர்பார்ப்பதன் நோக்கம், ஒரு முழுமையான, உள்ளார்ந்த கீழ்ப்படிதலின் உறுதியான மனநிலையை சீடர்களிடம் உருவாக்குவதன் மூலம், எவ்விதமான உத்தரவுகளாக இருந்தாலும் அவர்களின் அறிவாற்றலின் ஆவேசம் படிப்படியாகக் குறைந்து, அகந்தை அழிந்து, அவரைப் பின்பற்ற வழிவகுக்கும் என்பதாகும். இவ்வேளையில், சீடர்களின் முறையீடுகளை எளிதாக்கும் எண்ணத்தில், மெஹர் பாபா இவ்வாறு விளக்கம் அளித்தார்:

**“என்னுடைய வார்த்தைகளுக்கு நீங்கள் உடனடியாகக் கீழ்ப்படியும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளாவிடில், நான் அந்த உண்மைப்பொருளை உங்களுக்கு வழங்க முடிவு செய்யும் தருவாயில், நீங்கள் எப்படி எனக்குக் கீழ்ப்படிய முடியும்? இது உங்கள் நன்மைக்காகவே, அதை அல்லது இதைச் செய்ய நான் உத்தரவிடுகிறேன். பொக்கிஷம் உங்களை வந்தடையும் நேரத்தில், நீங்கள் அதை இழக்கவும் நேரிடும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அந்தத் தருணம் குறுகிய நேரத்திற்கு மட்டுமே இருக்கும்**

**என்பதால், நான் இதை உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் அதைத் தவற விட்டால் அனைத்தும் முடிந்துவிடும்; மீண்டும் திரும்பி வராது.**

**"அந்நேரத்தில் நீங்கள் எண்ணிப் பார்க்கவே கூடாது. நான் 'குதி' என்று சொன்னால், நீங்கள் உடனே குதிப்பதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும். இல்லையென்றால் நீங்கள் அதைத் தவறவிடுவீர்கள். இந்தக் காரணத்தினால்தான் நீங்கள் எனக்குக் கீழ்ப்படிவதைக் கற்றுத் தருகிறேன். நான் உங்களை எப்போது அழைத்தாலும், அனைத்தையும் விட்டுவிட்டு உடனே வரவேண்டும். நான் செய்யச் சொல்வதை எந்தக் கேள்வியும் எழுப்பாமல், சிந்திக்காமல் செய்ய வேண்டும்."**

ஒரு நாள், மெஹர் பாபா மாஸாஜியிடம், "**நான் மதிய உணவில் மீதம் வைப்பதை அப்படியே வைத்து விடுங்கள். பின்னர் எனக்குப் பசிக்கும்போது நான் அதை உண்பேன்**" என்று உத்தரவிட்டார். மாஸாஜி பலநாட்கள் பாபா சொன்னது போல் உணவைப் பத்திரமாக வைத்திருந்தார். ஆனால் ஒரு நாள் கூட, பாபா அதைக் கேட்டதில்லை.

அதற்குப் பின்னர் ஒரு முறை மாஸாஜி, பாபா மீதம் வைத்த அந்த உணவை ஆதி ஈரானிக்கு சாப்பிடக் கொடுத்தார். பாபாவின் கண்களிலிருந்து எதையும் மறைக்க முடியாது. தனது அறையிலிருந்த பாபா உடனே சமையலறைக்கு வந்து மாஸாஜியிடம், "**நான் பசியாக இருக்கிறேன், மீதம் வைத்த அந்த உணவை எடுத்து வாருங்கள்**" என்று கூறினார்.

மாஸாஜி திகைப்புற்று ஒன்றும் பேசாமல் நின்றார். என்ன செய்வது என்று புரியாமல் பரிதவித்துப் போனார். மெஹர் பாபா விசாரித்தார், "**என்னாயிற்று? நான் கூறுவது காதில் விழவில்லையா? அந்த உணவை என் அறைக்கு உடனடியாக எடுத்துவாருங்கள்**" எனக் கூறி வேகமாகத் திரும்பிச் செல்ல ஆயத்தமானார்.

மாஸாஜி தயக்கத்துடன் தெரிவித்தார்: "தினமும் நான் அந்த உணவை உங்களுக்காக வைப்பது பழக்கம். ஆனால் நீங்கள் ஒரு நாள் கூட அதை உண்டதில்லை."

"**ஆனால் இன்று எனக்கு வேண்டும். எங்கே அது?**" பாபா வினவினார்.

மாஸாஜி அவரது தவறை ஒப்புக்கொண்டு அந்த உணவை ஆதிக்குக் கொடுத்ததாகக் கூறினார். பாபா அவரைத் திருத்தும் எண்ணத்தில் கண்டித்து, நீங்கள் வார்த்தைக்கு வார்த்தை எனக்குக் கீழ்ப்படிய வேண்டும். அதில் உங்கள் எண்ணங்களுக்கு இடம் கொடுக்காதீர்கள் என்று எச்சரித்துச் சென்றார்.

அவ்வேளையில் ஒரு நாள், மெஹர் பாபா, குஸ்தாஜியுடன் மும்பையில் வாழ்ந்து வந்த ஒரு நகைவியாபாரி கய்குஷ்ரு மாஸாவின் (KAIKHUSHRU MASA) வீட்டிற்குத் திடீரெனப் புறப்பட்டுச் சென்றார். அவ்வேளையில் கய்குஷ்ரு வீட்டில் இல்லை. அவரது மனைவி, மகள் மற்றும் அத்தை

மோதிபாய் அனைவரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். குஸ்தாஜியை வெளியே நிற்கச் சொல்லி, பாபா வேகமாக உள்ளே நுழைந்து சமையலறை பக்கம் சென்றார். மெஹர் பாபா, அப்போது தனது வழக்கமான நீள வெள்ளைச் சட்டையும், காலுறையும், தலையில் ஈரானிய கைக்குட்டையும் அணிந்திருந்தார். திடீரென முன்பின் தெரியாத வித்தியாசமான தோற்றத்தில் இருந்த பாபாவைப் பார்த்து மோதிபாய், “யார் இந்தப் பைத்தியக்காரன்?” என்று ஆச்சரியப்பட்டார்.

அப்போது, அங்கிருந்த ஸூனாமாசி மற்றும் கோர்ஷெத் இருவரும் சமீபத்தில் பாபாவை ஸாக்கோரியில் சந்தித்ததால், அடையாளம் கண்டு, அன்புடன் வரவேற்றனர். மோதிபாய் வெட்கத்தில் தலை குனிந்தார். மெஹர் பாபா இப்போது மன்ஸில்-எ-மீமில் தங்கியிருக்கும் விபரத்தைத் தெரிவித்து, **“கய்குஷ்ரு மாஸாவிடம் மன்ஸிலில் தினமும் மாலையில் வந்து என்னைப் பார்க்கச் சொல்லுங்கள். காலையில் பள்ளிக்கூடம் செல்லும்போது கோர்ஷெத்தும் என்னை வந்து பார்க்க வேண்டும். ஸூனாமாசி, நீங்களும் பகல் வேளையில் வரலாம்”** என்று கூறி திரும்பிச் சென்றார். அனைவரும் மெஹர் பாபாவை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பை எண்ணி மகிழ்ச்சி அடைந்தனர்.

கோர்ஷெத் தினமும் மன்ஸில்-எ-மீமுக்குச் சென்று வந்தார். சில நாட்களுக்குப் பிறகு, குல்மாயின் மகள்கள் பிரோஜா, டாலி இருவரும் மும்பைக்கு வந்து படிப்பைத் தொடர்ந்தனர். ஆகையால் மூவரும் தினமும் மெஹர் பாபாவை சந்திக்க மன்ஸிலுக்குச் சென்றனர். மூவரும் இளம் வயது சிறுமிகள். பள்ளியில் என்ன பயின்றீர்கள் என்று பாபா கேட்டால் அப்பாவித்தனமாக பதிலளித்தனர். அவ்வப்போது, பாபா மூவருடன் ஒரு குறிப்பிட்ட விளையாட்டு விளையாடுவது வழக்கம். மூவரும் பாபா முன்னே ஒரே வரிசையில் காதுகளைப் பிடித்துக்கொண்டு நிற்க, பாபா அவர்களை நோக்கி பந்து எறிவது போலப் பாசாங்குச் செய்யும் போது, பந்தைப் பிடிக்கும் ஆர்வத்தில் கையைத் தவறவிட்டால், விளையாட்டிலிருந்து வெளியேற வேண்டும். மேலும் பாபா, நிஜமாகவே பந்துவீச, அதைப் பிடிக்கத் தவறினாலும் வெளியேற வேண்டும். இவ்வாறு, மெஹர் பாபா அந்த சிறுமிகளின் உற்சாகம் ஊட்டும் நண்பராகத் திகழ்ந்தார்.

மன்ஸில்-எ-மீமில் பாபா அந்நியர்களை அனுமதிப்பது மிகக்குறைவு. இருந்தாலும், ஜுலை 2ஆம் நாள், முஸ்லிம் பேராசிரியர் ஸயானி (PROFESSOR SAYANI) என்பவர் பாபாவிற்கு அறிமுகமானார். உரையாடலுக்கிடையே மெஹர் பாபா குறுக்கிட்டு, **“இந்நாட்களில் நான் வெளியே செல்லும் போது, ‘ஃபெஸ்’ எனும் டர்கிஷ் தொப்பியை அணிவதுண்டு”** என்று கூறி பேராசிரியரைப் பார்த்து, **“அப்படித்தானே?”** எனக் கேட்டார்.

பேராசிரியர் ஸயானி ‘ஆம்’ என்று பதிலளித்தாலும், அங்கிருந்த பாபாவின் மண்டலிக்கு, தலையும் வாலும் புரியவில்லை. ஏனெனில் பாபா

ஒருபோதும் இதுபோன்ற தொப்பியை அணிந்ததில்லை. ஒரு கைக்குட்டையை மட்டுமே அணிந்து வந்தார்.

பேராசிரியர் ஸயானி, பாபாவின் அறையிலிருந்து வெளியே வந்து மண்டலியிடம் கூறினார், "மெஹர் பாபா, நான் கேட்காமலேயே எனது கேள்விக்கு பதிலளித்து விட்டார்." என்ன கூறுகிறீர்கள் என்று மண்டலி கேட்டதற்கு, பேராசிரியர் விளக்கமளித்தார்: "பாந்த்ராவில் அமைந்த (மும்பையில் ஒரு பகுதி) மௌலானா ஸாஹேப் சமாதியில், எனது தம்பி கடந்த இருபது வருடங்களாக இருந்து வருகிறார். இன்று அவர் என்னிடம் மன்ஸில்-எ-மீம் சென்று, மெஹர் பாபா எவ்விதமான தொப்பி அணிந்திருக்கிறார் என்பதை உறுதி செய்யுங்கள் என்று கூறி அனுப்பினார். ஆனால், நான் இங்கு வந்தபோது மெஹர் பாபா எந்தத் தொப்பியும் அணியாமல் சாதாரணமாக இருந்ததைப் பார்த்தேன். எப்படிக் கேட்பது என்ற குழப்பத்தில் தடுமாறினேன். ஆனால், நான் கேட்காமலேயே, எனது கேள்விக்கு பதிலளித்து மனதை திருப்தியடையச் செய்தார்."

மெஹர் பாபா, டாக்டர் கனியிடம் அவரது மருத்துவமனையை ஆறுமாதங்களுக்கு, அவரே சுத்தம் செய்து வந்தால், அவருடைய மருந்தகம் வெற்றிகரமாக நடக்கும் எனக் கூறியிருந்தார். டாக்டர் கனி அவ்வாறே செய்து வந்தபோதும் தொழிலில் எவ்வித முன்னேற்றமுமில்லை. மாறாக பெரும் நஷ்டத்தை சந்தித்தார். ஒரு நாள் பாபா, டாக்டர் கனியிடம், "**நான் உன்னை இந்த மன்ஸிலில் தங்குவதற்கு அனுமதித்தால், தினமும் மாலை ஏழு மணிக்கு முன்னர் இங்கு வரமுடியுமா?**" என்று கேட்டதற்கு, டாக்டர் கனி தன் இயலாமையை எடுத்துச் சொன்னார். "**மன்ஸிலின் சட்டதிட்டங்கள் படி, நீ ஏழு மணிக்கு முன்பு திரும்பி வந்தாக வேண்டும். எனவே உன்னுடைய உடைமைகளை முழுமையாக விற்பனை செய்துவிட்டு என்னுடன் வந்துவிடுவது நல்லது**" என்று பாபா கூற, டாக்டர் கனியும் இணக்கம் தெரிவித்து, அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தார். மெஹர் பாபா, வெற்றி எனக் குறிப்பிட்டது இதைத்தான், உலக வாழ்க்கையில் சொத்து, சுகங்களை அடைவதற்காக அல்ல!

மெஹர் பாபா தனது இளம் வயதில் ஒரு தலைசிறந்த கவிஞனாக, 'ஹுமா' (HUMA) எனும் புனைபெயரில் கவிதைகள் எழுதியது அனைவருக்கும் தெரியும். மண்டலியில் பலரும் கவிதை எழுதும் திறன் படைத்தவர்கள். பாபாவின் அகத் தூண்டுதலால் மன்ஸிலில் இருந்த வேளையில் பகலில் எழுதிய கவிதைகளை மாலையில் அவர் முன்னிலையில் வாசிப்பது வழக்கம்.

அஸார் ஸாஹேப் எழுதிய ஓர் ஈரடி கவிதை:

மன்ஸிலில் ஒருவர் மறைந்திருக்கிறார்;
என் மனத்திரையை அகற்றினால், அவர்
இறைவன் என அறைகூவல் விடுவேன்.

டாக்டர் கனி கவிதை, கஸல் எழுதுவதில் நல்ல திறன்படைத்தவர்.

ஜஃப்ராபடி என்பவரும் தனக்குக் கவித்திறன் இருப்பதாக நினைத்து தனது கைவண்ணத்தைக் காண்பித்தார். கேட்கவே சகிக்காதபோதும், பாபா அவரை பாராட்டி, மேலும் எழுதுமாறு ஊக்குவித்தார். ஒரு முறை, டிராமில் பயணம் செய்து கொண்டிருந்த போது, கவிதை எழுதும் ஆர்வத்தில் மெய்மறந்து இறங்குமிடத்தைத் தவறவிட்டார். அவரின் ஆர்வத்தைப் பார்த்து மண்டலி அனைவரும் அவருக்கு பொருத்தமான பெயர் ஒன்றை வைக்க விரும்பினர். டாக்டர் கனி பிதால் என்ற புகழ்பெற்ற பெர்ஸியன் கவிஞர் பெயரை முன்மொழிந்தார். பாபா உடனே "**இல்லை, அதைவிட சிறந்த பெயராக வைக்க வேண்டும்**" எனக் கூறி '**பைதூல்**' என்ற பெயரை முடிவு செய்தார். (பைதூல் என்றால் 'பளிங்கு கல்' என்று பொருள்).

அஸ்பந்தியார் (ASPANDIAR), மெஹர் பாபாவின் சித்தி பிரோஜாவின் மகன். சிறுவயதில் மெஹர் பாபாவை, ஸொராஸ்டரின் உருவில் பார்த்த உள் அனுபவத்தால் அவரின் ஆன்மீக இறைநிலையை அறிந்து கொண்டார். 1917ஆம் ஆண்டு, தாயாரின் மறைவுக்குப் பிறகு, குவெட்டா சென்று அங்கே பணிபுரிந்தார். தந்தை மாஸாஜி மெஹர் பாபாவுடன் மன்ஸில்-எ-மீமில் வாழ்ந்து வந்தார். அப்போது தங்கை நாஜாவையும் பாபா குவெட்டாவுக்கு அனுப்பி வைத்தார்.

நாஜா, குவெட்டா சென்ற பின்பு, மெஹர் பாபா மும்பைக்கு இடமாற்றமான விபரங்களைத் தம்பிக்கு எடுத்துச் சொன்னதும், அஸ்பந்தியாருக்கு மெஹர் பாபாவுடன் வந்திணைய உள்ளூர ஆர்வம். ஆனால் அங்கிருந்த பொறுப்புகளை விட்டு வர சிரமமான சூழ்நிலை. அதிர்ஷ்டவசமாக, வியாபார நிமித்தம் மும்பைக்கு வரவேண்டிய தேவை ஏற்படவே, நாஜா, தம்பியின் மும்பை வருகையைக் குறித்து பாபாவிற்குத் தெரியப்படுத்தி, அஸ்பந்தியாரை அவருடனே இருக்க அனுமதி கோரி கடிதம் எழுதியிருந்தார்.

அஸ்பந்தியார் மும்பை வந்ததும் பாபாவை சந்திக்க மன்ஸில்-எ-மீம்க்குச் சென்றார். அப்போது தந்தையார் மாஸாஜி, மன்ஸிலுக்கு வெளியே காவல் புரிந்து வந்தார். மன்ஸிலில் எவரிடமும் பேசுவது தடை செய்யப் பட்டிருந்ததால், அவரது மகன் அஸ்பந்தியார் வந்ததும், எதுவும் பேசாமல் உள்ளே சென்று, அவர் வந்த விஷயத்தை பாபாவிடம் கூறினார். சற்று நேரத்தில் பாபா அவரை உள்ளே அழைத்துப் பேசினார். ஸரோஷ், ஃபெரடூன் இருவரும் அருகிலிருந்தனர். அஸ்பந்தியார் அவர்களுக்கு ஏற்கனவே அறிமுகம் ஆனவராக இருந்தாலும், அவரிடம் எதுவும் பேசாமல் அவர்கள் முகங்களைத் திருப்பிக் கொண்டதால் சங்கடமான உணர்வில் குழம்பிப் போனார். அஸ்பந்தியார் பாபாவை அடிபணிந்து வணங்கினார். பாபா அவரை அன்புடன் அரவணைத்து, "**உன்னுடைய திட்டங்கள் என்ன?**" என்று கேட்டார்.

"நான் உங்களோடு இருக்க விரும்புகிறேன்" அஸ்பந்தியார் பதிலளித்தார்.

பாபா உடனே, "**நீ இங்கே இருப்பதானால், மன்ஸிலிலிருந்து வெளியே அடியெடுத்து வைக்க முடியாது**!" என்றார்.

"என்னுடைய முதலாளிக்கு சில பொருட்கள் வாங்க வேண்டியது மட்டுமல்லாமல், என்னுடைய துணிமணிகளை நான் எடுத்து வரவுமில்லை."

அதற்கு, பாபா அவரிடம், "**நீ கொண்டுவந்த பணத்தை, உன்னுடன் வந்தவரிடம் கொடுத்து, வேண்டிய பொருட்களை வாங்கிச் செல்லவும், உனது துணிமணிகளை இங்கு அனுப்பி வைக்கவும் ஏற்பாடு செய்**" என்றார். அஸ்பந்தியார் அப்படியே செய்து மன்ஸில்-எ-மீமில் வாழத்தொடங்கினார்.

மன்ஸில்-எ-மீமில் பாபாவுடன் தங்கி இருந்தவர்கள் வேறு வேறு பின்னணி சூழல்கள், மதங்கள், இனங்கள், மனோநிலைகள், நம்பிக்கைகள், மற்றும் வேறுபட்ட வயது படைத்தவர்களாக இருந்தாலும், ஒருவருக்கொருவர் சுமூகமாக, தங்கள் குருநாதரின் கண்காணிப்பில் தத்தமது பணியைச் செவ்வனே செய்து வந்தனர்.

அஹமத் அப்பாஸ், அஸார் ஸாஹேப் இருவரும், தனியாக ஓர் அறையில் அமர்ந்து, எவரையும் உள்ளே அனுமதிக்காமல், சத்குரு உபாஸனி மஹாராஜின் வாழ்க்கை வரலாற்றை, மெஹர் பாபா அறிவுறுத்தியதற்கு இணங்க, உருது மொழியில் எழுதிக் கொண்டிருந்தார்கள். உணவு உண்ண, விளையாட மட்டுமே வெளியில் வந்தனர்.

ஜுலை 28ஆம் நாள், மஹாராஜின் வாழ்வின் முக்கிய நிகழ்வுகளை மேலும் கண்டறிய, மெஹர் பாபா, அஹமத் அப்பாஸுடன் ஸாக்கோரிக்குச் சென்றார். அங்கே மெஹர் பாபா, தொடர்ந்து நான்கு நாட்கள், இரவும் பகலும் மஹாராஜுடன் அமர்ந்து அனைத்து விபரங்களையும் பரஸ்பரம் பரிமாறிக் கொண்டார். அதே வேளையில் அஹமத் அப்பாஸ் அனைத்தையும் குறிப்பெடுத்தார். மஹாராஜ், ஷிர்டி சாய் பாபாவின் வாழ்க்கை நிகழ்வுகளையும் தெளிவாக எடுத்துரைத்தார். மெஹர் பாபா இந்த வாழ்க்கை வரலாறு, இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு ஏன் முக்கியமானது என்பதை மஹாராஜ் முன்னிலையில் வெளிப்படுத்தினார்.

சில தினங்களுக்குப் பிறகு, குஸ்தாஜியின் தலைமையில், சில சீடர்களை மெஹர் பாபா, மஹாராஜின் தரிசனத்திற்காக அனுப்பி வைத்தார். மஹாராஜின் ஆரத்தியில் பங்கெடுத்த பின்னர், அவருடைய குடிலுக்குச் சென்று அடிபணிந்து வணங்கினர். மஹாராஜ் அனைவரையும் வாழ்த்தி, இறையுணர்வு, இறையின்பம் மற்றும் குருநாதருக்குக் கீழ்ப்படிதலைக் குறித்து, சொற்பொழிவாற்றினார். "எல்லா சூழ்நிலைகளிலும், மெஹர் பாபாவின் பாதங்களைப் பற்றிக்கொண்டு, சற்றும் நழுவி விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று சத்குரு உபாஸனி மஹாராஜ் அனைத்து சீடர்களுக்கும் வலியுறுத்திக் கூறினார்.

மன்ஸில்-எ-மீமில், சமீப காலத்தில், மெஹர் பாபாவின் ஒரு நிலையான கட்டளை நிலவிவந்தது. அதன்படி ஆதி, டாக்டர் கனி, ராம்ஜூ மூவரும், வேலை எதுவும் இல்லாத ஓய்வு நேரங்களில் பாபாவின் அருகில், அவரால் முடிவு செய்யப்பட்ட முறையில் - ஆதி வலது பக்கம், டாக்டர் கனி பாபாவிற்கு எதிராகவும், ராம்ஜூ இடப்புறத்திலும் அமர வேண்டும். இக்கட்டளையை நடைமுறைப் படுத்துவது மூவருக்கும் கடினமாகவும், சிரமமாகவும் இருந்தது, ஏனெனில் வெளியே பயணம் செய்யும் போதும் இதைக் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயம். அவ்வப்போது மூவரும் இடத்தை மாற்றி அமர விரும்பினால், பாபாவின் அனுமதியைக் கோர வேண்டியதும் அவசியம்.

இதைவிட இன்னும் அச்சம் விளைவிக்கும் விஷயம் என்னவென்றால், பாபா, திடீரென, "**இவ்வேளையில் நீ என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்?**" என்று கேட்டால், அது எவ்விதமான அச்சமூட்டும் அநாகரீகமான எண்ணங்களாக இருந்தாலும், ஒளிவு மறைவின்றி சொல்ல வேண்டியது அவசியம். வாரம் ஒரு முறை மெஹர் பாபா, வெளியிலிருந்து வருபவர்களுக்கு மன்ஸிலில் தரிசனம் வழங்குவது வழக்கம். அவ்வப்போது அழகான இளம் பெண்களும் வருகை தந்தனர். ஒரு நாள், ஓர் அழகான இளம் பெண் வந்து, பாபாவின் பாதங்களை அடிபணிந்து வணங்கினார். பாபாவின் வலது புறம் நின்று கொண்டிருந்த ஆதி, அப்பெண்ணின் அழகை மனதிற்குள் பாராட்டினார். ஆதியின் மனதில், தன்னை அறியாமலேயே காம உணர்வுகள் அலைமோதின. பாபா உடனே ஆதியின் பக்கம் திரும்பி, "**என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்?**" என்று வினவினார். "ஒன்றுமில்லை" என்றார் ஆதி. அந்தப் பெண்ணும் தொடர்ந்து பாபாவின் தரிசனத்திற்காக வந்து கொண்டிருந்ததால், இந்தப் பிரச்சினை, சில நாட்கள் இப்படியே நீடித்து வந்தது. பாபா, கேட்கும் போதெல்லாம் ஆதி, "ஒன்றுமே இல்லை" என்ற பதிலையே கூறிவந்தார். டாக்டர் கனியும் இதுபோன்ற உணர்வுகளுக்கு விதிவிலக்கு இல்லாமல் சிரமப்பட்டார். ஒரு முறை, மெஹர் பாபா இருவரையும் தனியாக அழைத்து, "**நீங்கள் என்னை, என்ன முட்டாளென்று நினைத்தீர்களா? உங்கள் மனங்களில் இருப்பவை எனக்குத் தெரியாது என்று நினைத்தீர்களா? எனக்கு எல்லாம் தெரியும். நீங்கள் நேற்று என்ன நினைத்தீர்கள், இன்று என்ன நினைக்கிறீர்கள், நாளை என்ன நினைப்பீர்கள் அனைத்தும் எனக்குத் தெரியும். கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் எல்லாமே எனக்குத் திறந்த புத்தகங்கள்**" என்று விளக்கினார். டாக்டர் கனி, ஆதி இருவரும் மெஹர் பாபாவுடன் வந்து இணையும் முன்னர் அவர்களின் வாழ்வில் நடந்த சில சுவையான, தனிப்பட்ட, அவர்களுக்கு மட்டுமே தெரிந்த காதற்செயல்களை, இடம், காலம், சூழ்நிலை அனைத்தையும் அப்படியே திரையிட்டுக் காட்டுவது போல, பாபா விவரித்துக் கூறினார். இருவரும் செயலற்று, வாயடைத்துப் போயினர். பாபாவிற்கு இதுபோன்ற அந்தரங்க விஷயங்களெல்லாம் எப்படித் தெரியும் என்றெண்ணி கண்கலங்கி அழுதனர்.

**“என்னிடம் பொய் பேசாதீர்கள். நீங்கள் இருவரும் சிலநாட்களாக என்னிடம் பொய்யாய்ப் புளுகி வருகிறீர்கள்”** என்றார் பாபா. ஆதி திடீரென, சிந்திக்காமல் உளறினார், “அப்படியென்றால் எங்களிடம் இத்தகைய சிக்கலான கேள்விகளை, பிறர் முன்னிலையில் கேட்காதீர்கள்.”

**“அப்படி எதுவும் இல்லை,”** பாபா வேண்டுமென்றே பதிலளித்தார். **“எனது விருப்பப்படி நான் எங்கும், எப்பொழுதும், எதை வேண்டுமானாலும் கேட்பேன்.”** பாபா தொடர்ந்து துருவி துருவி விசாரித்தார். அவர்கள், வெளிப்படையாக, மனதில் உதித்த எண்ணங்களை - நல்லது கெட்டது எதுவாயினும் - ஒப்புக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

குல்மாயின் மகன் ஆதி அப்போது கல்லூரிக்குச் சென்று வந்தார். வெகு தூரம் ரயிலில் பயணம் செய்யும் நேரத்தில், மனதில் தோன்றும் எண்ணங்களைக் குறித்து வைக்குமாறு மெஹர் பாபா கட்டளையிட்டிருந்தார். ஆகையால் ஆதி அவருடைய எண்ணங்களில் கவனமாக இருக்கவேண்டியது அவசியமாயிற்று. பாபா அந்தக் குறிப்புகளைப் படித்துவிட்டு, கடுமையாக ஏதாவது கூறிவிடுவாரோ என்ற அச்சத்தில் ஆழ்ந்தார். ‘**உனக்கு நினைத்துப் பார்க்க வேறு நல்ல விஷயங்கள் எதுவும் இல்லையா?**’ என்று பாபா கேட்டுவிடுவார் என்ற எண்ணத்தில், ஆதி மன்ஸிலுக்கு வெளியே இருக்கும்போதும் இறைவனைப் பற்றிய உன்னதமான சிந்தனைகளில் ஆழ்ந்திருந்தார்.

மன்ஸில்-எ-மீமில் மெஹர் பாபா மிகச்சிறிய அளவில் உணவு உண்டு, நெடுநாள் உபவாசம் இருந்து வந்ததால், உடல் மெலிந்து தோன்றினாலும் அதீத சக்திமிக்கவராக இருந்தார். ஒரு முறை ஆதியைக் குஸ்தி செய்ய பாபா அழைத்தார். பாபாவிற்குக் காயம் ஏற்படக்கூடாது என்ற எண்ணத்தில் ஆதி மெதுவாகக் குஸ்தி செய்தார். முழு சக்தியுடன் தாக்குமாறு பாபா கூற, ஆதியும் அவ்வாறே செய்தார். ஒரே ஒரு சிறிய உந்துதலில் ஆதி வெகு தூரத்திற்குத் தூக்கி எறியப்பட்டார். பாபாவிற்கு அவ்வளவு அபார சக்தி.

அதுபோல் இன்னொரு முறை மன்ஸிலில் கயிறு இழுக்கும் போட்டியில் அனைத்து சீடர்களும் ஒரு பக்கம், பாபா தனியாக மறுபக்கமும் இருந்தனர். அனைவரையும் பாபா ஒரே இழுப்பில் கீழே தள்ளி, தனது பலத்தை வெளிப்படுத்தினார்.

மெஹர் பாபாவின் ஐந்து சத்குருக்களின் தனித்தன்மையை அவரிடம் காணமுடிந்தது. ஹஸ்ரத் பாபாஜான், ஷிர்டி சாய் பாபா, சத்குரு உபாஸனி மஹாராஜ் அனைவரும் சீற்றம் மிக்கவர்கள். ஆதலால் அதே குணத்தை பாபாவும் அவ்வப்போது வெளிப்படுத்தினார். இது தோற்றத்தில் கடுமையாக இருந்தாலும் தெய்வீக அழகும், ஆன்மீக பலன்கள் நிறைந்ததாகவும் இருக்கும். சீற்றமடைந்த அடுத்த கணமே, எதுவுமே நடந்ததாகக் காட்டிக் கொள்ளாமல், பாபா தன் இயல்பான நிலைக்குத் திரும்பிவிடுவதைக் காணமுடிந்தது.

ஒரு முறை பாபா மகிழ்ச்சியான மனநிலையில் இருந்தபோது, ஸரோஷ் அவரிடம் கேட்டார், "ஏன் சில நேரங்களில் எங்களிடம் கோபப்படுகிறீர்கள்?"

அதற்கு பாபா அளித்த விளக்கம்:

**"நான் ஒருபோதும் கடுமையாகவோ, கோபமாகவோ இருப்பதில்லை. கோபம், கர்வம், காமம், மகிழ்ச்சி அல்லது துயரம் இவையெல்லாம் எனக்கு இல்லை. அதுபோல் எதுவும் என்னில் இல்லை. ஆனால், நான் ஒருவரிடம் கோபப்படுவதாகத் தோன்றினால், அது, அவரது கோபம் எனது வழியாக வெளிப்படுவதாகும். நான், உங்களின் நல்லது, தீயது இரண்டையும் வெளிப்படுத்தும் ஊடகம்.**

**"நீங்கள், உங்கள் முகம் கண்ணாடியில் பிரதிபலிப்பதைப் பார்க்கலாம். நீங்கள் எப்படித் தோன்றுகிறீர்களோ, அப்படியே உங்களைக் கண்ணாடியில் பார்க்கிறீர்கள்! அந்த உருவம் கண்ணாடியில் அல்ல, உங்கள் முகத்தில் உள்ளது. கண்ணாடியின் நிலை மாறாதது. முகம் நன்றாக இல்லையெனில், கண்ணாடியில் வித்தியாசமாகத் தோன்ற முடியுமா? நீங்கள் கண்ணாடியில் பார்ப்பது உங்களுடைய உண்மையான சாயல், கண்ணாடியின் சாயலல்ல."**

பாபா மேலும் ஒரு மேற்கோள் காட்டி தொடர்ந்தார்.

**"ஒரு பந்து, சுவரைநோக்கி எறியும் அதே வேகத்தில் திரும்பி உங்களிடம் வரும். அந்தச் சுவர் எப்போதும் நிலையாக அங்கேயே நிற்கும். நீங்கள் சுவற்றில் எறியும் பந்தின் அதே வேகம்தான், உங்களிடம் திரும்பி வரும் பந்திலும் இருக்கும்.**

**"இறுதியில், எனது வெளிப்பாடு, உங்களுடைய பிரதிபலிப்பாகும். நான் எப்போதும் நிலையான, மாற்றமுடியாத சுவர் அல்லது கண்ணாடியைப் போல!"**

1922, ஆகஸ்ட் மாதம், முதன்முதலில் மெஹர் பாபாவை, ஸாக்கோரியில் சந்தித்த நவல் தலாட்டி (NAVAL TALATI), மன்ஸிலுக்கு பாபாவின் தரிசனத்திற்காக வருவது வழக்கம். ஒரு முறை அவருடைய நண்பர், கிரிக்கெட் புகழ் வஜிப்தர் (VAJIFDAR) என்பவரையும் அழைத்து வந்தார். இருவரும் தினமும் காலையில் மன்ஸிலுக்கு வந்து மாலையில் திரும்பிச் சென்றனர்.

சிறு வயதிலிருந்தே, மெஹர் பாபா, விளையாட்டுகளில் பேரார்வம் கொண்டிருந்தார். கிரிக்கெட் வீரர் வஜிப்தரின் வருகையால் அனைவரும் பெரு மகிழ்ச்சியடைந்தனர். மாலை வேளையில் மெஹர் பாபா மண்டலியுடன் கிட்டிப்புள், கிரிக்கெட் விளையாடுவது அல்லது நீண்ட தூரம் நடைப்பயிற்சி செய்வதைப் பொழுதுபோக்காகக் கொண்டிருந்தார். ஒரு முறை பாபா மண்டலியுடன் மும்பையில் நடந்த கிரிக்கெட் விளையாட்டைப் பார்வையிடச் சென்றார். அதில் வஜிப்தரும் பங்கெடுக்க வேண்டியிருந்தது. ஆனால் அவர் கடும் காய்ச்சலால் அவதிப்படவே, பாபா அவரை, பார்வையாளராக அழைத்துச்

சென்றார். விளையாட்டில் வஜிப்தர் அணி தோல்வியை சந்திக்கும் நிலையிலிருந்த போது, பாபாவின் அனுமதியுடன் விளையாட்டில் பங்கெடுத்தார். உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோதிலும், அருமையாக விளையாடி அவர் அணிக்கு வெற்றியைத் தேடித் தந்தார். மண்டலி பாபாவுடன் தங்கள் இருக்கைகளிலிருந்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். அடுத்த நாள் மெஹர் பாபா அனைவரையும் அதே மைதானத்திற்கு அழைத்துச் சென்று கிரிக்கெட் விளையாடினார்.

மன்ஸில்-எ-மீமில் மெஹர் பாபா அவரவர் மதப் பண்டிகைகளை அனுஷ்டிக்க அனுமதித்தார். பண்டிகை நாட்களில் முஸ்லிம்கள் மசூதிக்கும், இந்துக்கள் கோயிலுக்கும், ஈரானிய மற்றும் பார்சிகள் அக்யாரிக்கும் சென்று வந்தனர். மண்டலி மறந்தால் கூட, மெஹர் பாபா பண்டிகைகளை அவர்களுக்கு நினைவூட்டும் விதம், ‘**உங்கள் இதயங்களில் பின்னிப் பிணைந்திருக்கும் இவ்விதமான சடங்கு, சம்பிரதாயங்கள் முற்றிலுமாக ஒரு நாள் மறையவேண்டும்**’ என்ற முறையில் இருக்கும். ‘**சடங்கு மற்றும் பாரம்பரிய நடைமுறைகள் ஆன்மீகப் பாதையில் பெருந்தடையை விளைவிக்கும்**.’ உதாரணமாக, பாபா அரிதான கருத்துகளை விளக்கும் போது, ஆன்மீக சொற்பொழிவுகள் வழங்கும் வேளைகளில், மற்றும் மன்ஸிலின் பின்புறத்தில் வேடிக்கை விளையாட்டுகளில் பங்கெடுக்கும் நேரங்களிலும், மண்டலியில் ஒருவரிடம், “**இன்று உன்னுடைய பண்டிகை தினமல்லவா? நீ இன்று பிரார்த்தனைக்குச் சென்றிருந்தால் நன்றாக இருந்திருக்கும் இல்லையா? உன் மதத்தைப் புறக்கணிப்பது நல்லதல்ல**!” இப்படி, நுட்பமான வழிமுறைகளைக் கையாண்டு, பாபா, அவர்களை மதப் பிணைப்புகளிலிருந்து விடுவித்து, குருநாதரின் அருகாமையிலிருக்கும் வாய்ப்பு, எவ்வளவு நன்மை பயக்கும், எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை உணர வைத்தார்.

‘கர்மவினை மற்றும் மறுபிறவி - இறைநிலையை எய்தும் நடைமுறையில் பிறப்பு, இறப்பு எனும் காலச்சக்கரம்’ - இவற்றைக் குறித்து மெஹர் பாபா ஆரம்பத்தில் விளக்கியிருந்தாலும், மண்டலியின் பிறந்த நாட்களில் விடுமுறை அறிவித்து, சிறப்பாக ஆனால் கோலாகலமாக இல்லாமல் தன்னடக்கத்துடன் கொண்டாடினர். 1922, ஆகஸ்ட் 22 அன்று மெஹர் பாபாவின் நெருங்கிய நண்பரும் சீடருமான முன்ஷி ரஹிமின் வளர்ப்பு மகன் உஸ்மானின் திருமணத்தில் அவர், கௌரவ விருந்தினராகப் பங்கெடுத்தார்.

ஆன்மீகம் என்பது சொற்பொழிவுகளைக் கேட்டு, பக்தியுடன் பாடி, தரிசனம் செய்வது மட்டுமல்ல. பல தருணங்களில் குருநாதர் தனக்கே உகந்த முழுமையான பணிவை வெளிப்படுத்தி, ஏழைகள் மற்றும் பிச்சைக்காரர்களை வரவழைத்து உணவூட்டி, புத்தாடைகளை வழங்கினார். ஒரு தாழ்மையான துப்புரவு தொழிலாளரைப் போல மன்ஸிலைச் சுற்றியிருந்த கழிவுநீர் ஓடைகளை அடிக்கடி சுத்தம் செய்வதை வழக்கமாகக் கொண்டார்.

இவ்வேளையில்தான் மெஹர் பாபா இஸ்லாமிய சொல் மஸ்த் (MAST), இறை உணர்வை அடையும் நோக்கத்தில், மெய்மறந்து, மனநிலை பாதிக்கப்பட்டவர் போலத் தோற்றமளிப்பவர் என்பதை எடுத்துக் கூறி, அதற்குப் பிறகு, 'மஸ்த்' என்ற சொல்லை சரளமாக உபயோகித்தார். இவ்வாறு '**இறை போதையில் இருப்பவர்கள் அவருக்கு எந்த அளவுக்கு முக்கியம்**' என்பதையும் பாபா எடுத்துரைத்தார். முதன்முதலில், மன்ஸிலுக்கு அழைத்துவந்த ஒரு முஹமதிய மஸ்த்திற்கு, பாபா அவர் கையாலேயே அன்போடு (ஒரு குழந்தைக்கு ஊட்டுவது போல்) உணவூட்டினார். படிப்படியாக, மும்பை வீதிகளில் அலைந்து திரிந்த பல மஸ்த்துகள் மன்ஸிலுக்கு அழைத்து வரப்பட்டனர். அனைவரையும் பாபா குழந்தைகளைப் போல பாசத்துடன் நடத்தினார்.

பொழுதுபோக்காக, சில நேரங்களில் மெஹர் பாபா, முன்ஷி ரஹிம் வீட்டிற்குச் சென்று சீட்டு விளையாடுவது வழக்கம். அவ்வாறு, ஒரு முறை விளையாடிக் கொண்டிருந்த வேளையில், பாபா, ராம்ஜுவிடமிருந்து ஒரு சீட்டை அமைதியாகத் திருடி, அவர் அணியை வெற்றி பெறச் செய்தார். அடுத்த சுற்றின் நடுவில் டாக்டர் கனி, சீட்டைத் திருடியபோது, ராம்ஜு அப்துல்லா அதைப் பார்த்து பாபாவிடம் முறையிட்டார். பாபா, உடனே டாக்டர் கனியைக் கண்டித்தார். கனியின் மனதில் எதிர் மாறான எண்ணங்கள் அலைமோதின. "மெஹர் பாபா, அவரே சீட்டுகளைத் திருடி விளையாடும் போது, என்னை மட்டும் கண்டிப்பானேன்?"

சற்று நேரம் பொறுமையாக இருந்து, பாபா, சீட்டு விளையாடுவதை இடையிலே நிறுத்திவிட்டு, ஒரு சத்குருவின் உண்மை கதையை மண்டலிக்கு எடுத்துரைத்தார்:

**ஒரு நாள், சத்குரு ஒருவர் சில சீடர்களோடு, பிரபலமான ஒரு நகரத்திற்குச் சென்றார். அங்கிருந்த ஒரு மிட்டாய் கடைக்குள் நுழைந்து சில மிட்டாய்களை எடுத்து அவர் வாயிலிட்ட போது, அவருடைய சீடர்களும் அவ்வாறே செய்தனர்.**

**பின்னர் ஒரு ரொட்டிக் கடைக்குச் சென்ற போது, அங்கும் அதே நடந்தது. சில பிஸ்கட்களை அவர் வாயிலிட்டு உண்டது போல, சீடர்களும் உண்டனர்.**

**தொடர்ந்து அவர் ஒரு கொல்லன் பட்டறையில் நுழைந்து, உலையில் இருந்த சூடான செந்நிற இரும்புத் துண்டுகளில் ஒன்றை எடுத்து வாயிலிட்டார்.**

**சீடர்கள் அவரை உற்றுநோக்கினர். சத்குரு அப்போது, இதையும் சாப்பிடுங்கள் என்று சீடர்களிடம் கூறினார்.**

ஒருவரும் அசையவில்லை. "**நான் செய்ததை நீங்கள் ஏன் செய்தீர்கள்? நீங்கள் என்ன கிளிப்பிள்ளைகளா? நான் செய்வதை**

**ஒருபோதும் செய்யாதீர்கள். ஆனால், நான் சொல்வதைச் செய்யுங்கள்"** என்று சத்குரு அறிவுரை கூறினார்.

இக்கதையைக் கேட்டதும் டாக்டர் கனி, கட்டுப்படுத்த முடியாமல் வாய்விட்டு சிரிக்க, அதன் காரணத்தை பாபா வினவினார். டாக்டர் கனி உடனே, "நான் உங்கள் அறிவுக்கு அடிபணிகிறேன். எனது கேள்விக்கு அருமையாக பதிலளித்தீர்கள்" என்றார்.

சீடர்கள் கவிதை எழுதும் பழக்கம் மன்ஸில்-எ-மீமில் தொடர்ந்தது. பாபா முதலடியை எடுத்துக் கொடுக்க, கவித்திறன் மிக்க மண்டலி, கவிதை எழுதி, பாபா முன்னிலையில் படிப்பது வழக்கம். டாக்டர் கனி, ஒரு முறை, பாபா தொடங்கிவைக்க, தனது கைவண்ணத்தைக் காட்டினார்:

குருநாதரின் தாளத்திற்கு நடனமாடும் பக்தனுக்கு
நீதி எனும் கேள்விக்கு இடமேது?
உமது வீதியில் வீசும் தென்றல் காற்றுக்கு,
சொர்க்கத்திலும் ஈடேது?
சிறந்த கஸ்தூரி சுகந்தம் கூட இதற்கு இணையில்லை.
என் உயிரே! சிக்கித் தவிக்கும் என் இதயம் இருப்பது
உங்கள் பாதங்களில் அல்லவா!
இறைவனை அளிப்பது இனி உங்கள் கைகளிலில்லையா?
அவன் ஒரு சுதந்திரப் பறவையானால், அவன்
வாசலில் தவழும் என்னைக் கண்டுகொள்வானா?
அடிபணிந்த என் இதயம், அவன் வாசற்படியில் தவிப்பது எதற்காக?
ஆனால் எனக்குத் தெரியாது, அவன்
அதைக் கொலை செய்வது எப்போது?
முன்னைவிட உன் நடத்தை ஏன் மாறிவிட்டது இப்போது?
இதயம் அறியாவிடிலும், அதில் ஏதோ இரகசியம் உள்ளதோ?
'**கனி**' சொல்கிறான்! உன் வழிமுறை அவனைப்
பைத்தியமாக்கி விட்டது!
அது ஓர் இனிய குயிலா என்று
அவன் கண்டுகொள்வதில்லை இப்போது!

மெஹர் பாபாவின் மண்டலியில் அஹமது அப்பாஸ் என்பவர் பூனாவில் பிறந்து வளர்ந்தவர். அவர் 1914ஆம் ஆண்டில், ஹஸ்ரத் பாபாஜான், மேர்வானுக்கு முத்தம் அளித்து, இறையுணர்வைத் தந்த அந்த நாளிலிருந்தே, அவரின் தொடர்பில் வந்து மிகவும் நெருக்கமானவர். ஆனால், மேர்வான் கஸ்பாபேட் மதுபானக்கடையை நடத்தி வந்தபோது, அஹமது, மெஹர் பாபாவின் மகிமையை உணர்ந்து அவரை பின்பற்றத் தொடங்கினார். பாபா பூனாவிலிருந்து மும்பையை நோக்கி மேற்கொண்ட நடைபயணத்தில் பங்கெடுத்தவர்களில் அவரும் ஒருவர். இப்போது மன்ஸில்-எ-மீமில் பாபாவின்


நெருங்கிய நண்பராக, மண்டலியில் ஒருவராக இருந்து, இந்து சத்குரு உபாஸனி மஹாராஜின் வாழ்க்கை வரலாற்றை உருது மொழியில் எழுதிக் கொண்டிருக்கிறார். ஆன்மீக இலக்கியங்கள், பாரசீக கஸல் மற்றும் பாடல்களில் பெரிதும் ஈடுபாடு உள்ளவர். ஓரளவு புகழ்பெற்ற கவிஞர். 'காக்' (KHAK) என்றால் தூசு, மெஹர் பாபாவின் காலடியில் இருக்கும் தூசு என்ற முறையில் 'காக்' என்ற புனைபெயரில் கவிதைகள் எழுதி வந்தார். எனவே மன்ஸில்-எ-மீமில் இருந்த அவ்வேளையில் அவருக்கு காக் ஸாஹேப் (KHAK SAHEB) என்று பெயர் சூட்டப்பட்டது. அப்போது, அவர் மெஹர் பாபாவிற்கு அர்ப்பணித்த ஒரு கவிதையின் சில வரிகள்:

உமது வாசற்படியை நான் எட்டமுடியுமா என்று பார்ப்போம்!
அதை என் உறைவிடமாக மாற்றமுடியுமா எனவும் முயல்வோம்!
காலங்காலமாக எதிர்கொள்ளும் கஷ்டங்கள்,
திறந்திடுமா என் இதய வாயிலை?
நான் சொர்க்கத்தை அடைந்தாலும் அடையாவிட்டாலும்
எனது விதி உமது கையிலே!
உலகம் எனக்கு ஒரு பொருட்டல்ல;
நான் அமைந்துவிட்டேன் உமது பெயரிலே!
நான் கடவுளை அடைந்தாலும் இல்லாவிடிலும்
நான் உமது அடிமையே!
எவரை நான் அணுகினாலும், உமது புகழையே கேட்கிறேன்!
உள்ளூர நீ தந்த சக்தி, யாருக்குத் தெரியும் என நான் அறியேன்!
இந்தக் 'காக்' எனும் தூசு, சாம்பலுக்கு சமம்,
மெஹர் எனும் சூரியனைப் பார்க்கத் துடிக்கிறது!
அது உங்கள் கால்களின் தூசாக நிறைந்து மதுவாக மாறுகிறது!
மெஹரின் சகவாசத்தில் இருப்பது
இணையிலா பொக்கிஷம் அல்லவோ!
அதை ஒருவர் கண்டுகொண்டாரோ இல்லையோ!

ஓரிரவு தமது அறையில் தனியாக அமர்ந்து மெஹர் பாபா 'காதலின் கீழ்வானம்' என்ற தலைப்பில் கஸல் ஒன்றை எழுதி, தீர்க்கதரிசி ஸொராஸ்டருக்கு அர்ப்பணித்தார். பின்னர் அதை மன்ஸில்-எ-மீமில் மண்டலிக்குப் படித்து விளக்கினார்:

**கடவுளின் மகிமை ஒன்றே இந்த நான்கு**
**இயற்கைக் கூறுகள் - பூமி, காற்று, நீர், நெருப்பு.**
**ஆன்மீகம், பொருள் சார்ந்த - இவ்விரு உலகங்களுக்கு**
**நீங்களே கடவுள், நீங்களே குரு!**
**உங்களின் ஒளி ஒவ்வொரு அணுவிலும் மறைந்திருக்கும்!**
**இறையன்பில் அந்த தீபம் அதுவாகவே சுடர் விட்டு எரியும்.**
**விட்டில்பூச்சி, தனது விதியால் தீபத்தின் சுடரில் மறையும்.**

இரவுக்குயில் தனது உயிரை பணயம் வைத்து
ரோஜாவை நாடி அலையும்.
காலையில் ரோஜா கடவுளை எண்ணிய வண்ணம் மலரும்.
அன்பு ஒவ்வொன்றிலும், ஒவ்வொருவரிடத்திலும் உள்ளது!
போற்றுவோம், அந்த அன்பு
இல்லத்திலும், உள்ளத்திலும் நிறைந்தது!
மதம், உலகம் இரண்டிற்கும் தெரியாது
தூய அன்பு என்னவென்று!
என் காதலியின் முகம் எப்போதும் தெரிகிறது
கண்முன்னே நின்று!
அன்பானது, செல்வம், சக்தி, அறிவு மற்றும்
உணர்வுபூர்வமான முயற்சிக்கும் அப்பாற்பட்டதே!
ஓர் அரசனும் ஆண்டியும் அன்பின் உலகில் சரிசமமே!
இறையன்பைப் பின்பற்றுவது ஒவ்வொருவருக்கும் எளிதல்ல!
சந்தையில் வாங்க 'அன்பு' ஓர் அரிதான சரக்கல்லவா!
வறுமை, தவிப்பு, அழிவு, அநீதி இவையெல்லாம்
கடவுளை உண்மையாக நேசிப்பவரின் நண்பர்கள்!
அடிமைப்பணி, அடிமைத்தனம், அவமானம், அநீதி
போன்றவை அன்பின் பாதையில்
நிறைந்திருக்கும் ஆயிரம் சோதனைகள்!
புனித ஸொராஸ்டரே! இவ்வுலகுக்காக எவ்வளவு
துயரங்களைத் தாங்கிக் கொண்டீர்கள்!
இரட்சிப்பவரின் முடிவு ஓர் எதிரியின் வாள்முனையில்
வந்ததையும் ஏற்றுக் கொண்டீர்கள்!
கிறிஸ்துவின் கைகால்கள் சிலுவையில்
ஆணியால் அறையப்பட்டன,
அதுபோல, மன்சூர் தனது வாழ்வை
தூக்குக் கயிற்றில் தியாகம் செய்தார்!
அன்பு ஒன்றே ஸொராஸ்டிரிய மதத்தின் அடித்தளம்.
புனித நூலின் முடிச்சுதான் அன்பின்
நித்திய பிணைப்பை அறிவுறுத்தும்.
இறைவன் உண்மைப்பொருள் என்பதை ஸொராஸ்டர்
தனது அன்பின் வழியாக எடுத்துக் காட்டினார்!
அந்த உண்மைப்பொருளை, நல்லெண்ணம், நல்வார்த்தை,
நற்செயல் வழியாக உலகில் நிலைநாட்டினார்!
ஓ ஸொராஸ்டரே! அனைத்தையும் காப்பவரே!
உமது ஆதரவாளர்களிடம் அன்பை பொழியுங்கள்!
'அகுராமஸ்தின்' (கடவுளின்) அரசவையில் நான் வைக்கும்
இந்தப் பிரார்த்தனையை ஏற்றுக்கொள்ளுங்கள்!




கஸ்பா பேட் மண்டலியுடன் மெஹர் பாபா



குஸ்தாஜியுடன் மெஹர் பாபா

**1917**ஆம் ஆண்டில், மேர்வான், ஹுமா (HUMA) எனும் புனைபெயரில் ஒரு கஸல் எழுதி, குஜராத் மாநிலம், நவ்ஸாரி நகரில் வாழ்ந்து வந்த ஸொராப்ஜி தேசாய் (SORABJI DESAI) என்பவருக்கு அனுப்பி வைத்தார். அவர், புகழ்வாய்ந்த ஓர் அறிஞர், பல புத்தகங்களுக்கு ஆசிரியர். மெஹர் பாபாவின் கவிதை அவர் இதயத்தைப் பெரிதும் நெகிழச் செய்தது. அனுதினமும் பலமுறை அதைப் படிப்பது மட்டுமின்றி, எழுதியவரை சந்திப்பதில் தீவிரமாக இருந்தார். ஆனால், 'ஹுமா' எனும் புனைபெயரை அவர் கேள்விப்பட்டதே இல்லை.

அவ்வேளையில்தான் பெய்லி, சத்குரு உபாஸனி மஹாராஜின் வரலாற்றை குஜராத்தி மொழியில் எழுதி முடித்திருந்தார். மெஹர் பாபா, பெய்லியை ஸொராப்ஜி தேசாயிடம் அனுப்பி, மஹாராஜின் வரலாற்று பிரதியைத் தொகுத்து, திருத்தம் செய்யுமாறு கூறினார். பெய்லி, ருஸ்தம் இருவரும் ஸொராப்ஜியிடம் பிரதியைக் கொடுத்து, மெஹர் பாபாவின் கட்டளையை எடுத்துக் கூறினர். அதைக் கேட்ட ஸொராப்ஜி, எரிச்சலுடன், "எனக்கு, இப்படிக் கட்டளையிட யார் அந்த மெஹர் பாபா? நான் யாருக்கும் ஊழியனல்ல! மேலும், என்னிடம் இதற்கெல்லாம் நேரமுமில்லை! மெஹர் பாபாவிடம் சொல்லுங்கள் நான் இது விஷயத்தில் உதவ முடியாது என்று!"

இருவரும் நீண்ட நேரம் முயற்சி செய்தும், ஸொராப்ஜி இணங்கிய பாடில்லை. பெரும் பிடிவாதமாக இருந்து, பிரதியைத் திருப்பிக் கொடுத்து விட்டார். பெய்லியும், ருஸ்தமும் திரும்பி வந்து மெஹர் பாபாவிடம் நடந்ததை எடுத்துரைக்க, சில நாட்களுக்குப் பிறகு பாபா, ருஸ்தத்தை மறுபடியும் அனுப்பி இவ்வாறு ஒரு செய்தியை வழங்கக் கூறினார்:

**"ஸொராப்ஜி, நீங்கள் மட்டுமே இந்தப் பணியைச் செய்ய முடியும்! இது மெஹர் பாபாவின் விருப்பம்!"** ருஸ்தம் இச்செய்தியை வழங்கியதும், அது ஸொராப்ஜியை மேலும் எரிச்சலடையச் செய்தது: "மெஹர் பாபா, அவரை என்னவென்று எண்ணிக் கொண்டிருக்கிறார்? இவ்வளவு திமிரும், கர்வமும் ஆகாது என்று அவரிடம் சொல்லுங்கள்!" ருஸ்தம், மெஹர் பாபாவைப் பற்றிய உண்மைகளைத் தெளிவுபடுத்த எவ்வளவோ முயன்றும், ஸொராப்ஜி தேசாய் செவிமடுக்க மறுத்துவிட்டார்.

நவ்ஸாரியிலிருந்து ருஸ்தம் திரும்பி வந்ததும், நடந்ததை மெஹர் பாபாவிற்கு எடுத்துக் கூற, அவர் பெய்லி, ருஸ்தம் இருவரையும் மறுபடியும் - இம்முறை மஹாராஜின் வரலாற்றுப் பிரதியுடன் மூன்றாவதாக ஒரு செய்தியையும் அனுப்பி வைத்தார்:

**"சத்குரு உபாஸனி மஹாராஜின் வரலாற்று பிரதிகள், உங்களுக்கு ஹுமாவால் வழங்கப்படுகிறது. ஹுமா, மெஹர் பாபாவின் புனைபெயர். இந்தப் பணியை நீங்கள்தான் செய்யவேண்டும்."** பாபா, இருவரிடமும் அந்தப் பிரதியை ஸொராப்ஜியிடம் அப்படியே விட்டுவிட்டு, ஒரு வார்த்தையும் கூறாமல் திரும்பி வருமாறு கட்டளையிட்டிருந்தார்.

இம்முறை, ஸொராப்ஜி, இருவரையும் அவர் வீட்டு வாசலில் நுழைவதைப் பார்த்ததும் உரத்த குரலில் கூச்சலிட்டு, "எதற்காக இருவரும்

மறுபடியும் என்னைத் தொந்தரவு செய்ய வந்தீர்கள்?" என்று கத்தினார். ஆனால், ருஸ்தமும் பெய்லியும் எந்த எதிர்ப்புக்கும் இடங்கொடுக்காமல், மெஹர் பாபாவின் செய்தியையும், வரலாற்று பிரதியையும் அவரிடம் கொடுத்துவிட்டு மும்பைக்குத் திரும்பி விட்டனர் (கடந்த ஐந்து ஆண்டுகளாக ஸொராப்ஜி தேசாய் 'ஹுமா' என்று அழைக்கப்படும் கவிஞரைத் தேடி, ஏங்கும் விஷயம் இருவருக்கும் தெரியாது!). ஹுமா என்றப் பெயரை ஸொராப்ஜி கேட்டதும் அவரது ஆழ் இதயத்தை ஏதோ ஒன்று வருடுவது போன்ற உணர்வு. உடனே அமைதியாகி, பழைய 'ஹுமா' கஸலை மறுபடியும் எடுத்துப் படித்தார். கண்களில் கண்ணீர் ததும்ப, மஹாராஜின் வரலாற்று பிரதியை நெற்றியால் தொட்டு, தலை வணங்கினார். சிறிது நேரத்தில் மெஹர் பாபாவிற்கு இவ்வாறு கடிதம் எழுதினார்:

"ஐயா! தயவுசெய்து என்னை மன்னித்துவிடுங்கள். உங்கள் கட்டளைக்கு அடிபணிகிறேன். நீங்கள் என் இதயத்தை பல காலங்களுக்கு முன்பே திருடிவிட்டீர்கள். ஆனால் இன்றுதான் உங்கள் இரகசியம் புலப்பட்டது, புரிந்தது! உங்கள் லீலையே தனி! நான் உங்களுக்காகவே வாழ்கிறேன்!"

--ஸொராப்ஜி--

1922ஆம் ஆண்டு, மன்ஸில்-எ-மீமில் இருந்த போது, மெஹர் பாபா தலைமுடியை வெட்டாமல் வளர்த்து வந்தார். சாதாரணமாக, பருத்திச் சட்டை, நீள காலுறை, கம்பளி கோட் அணிந்து, கைக்குட்டையைத் தலையில் அணிவது வழக்கம். வெளியே செல்லும்போது சில வேளைகளில் 'டர்கிஷ் ஃபெஸ்' தொப்பியை அணிந்தார்.

மெஹர் பாபாவின் சரீரத்தை, இவ்வேளையில், அவரது அனுமதி இல்லாமல் எவரும் தொடக்கூடாது எனக் கட்டளையிட்டிருந்தார். நீராடும்போது டாக்டர் கனி மற்றும் ஆதியை பாபா அனுமதித்தார். ஆதி வெந்நீர் எடுத்து வர, டாக்டர் கனி பாபாவின் சரீரத்தில் அதை ஊற்றி உதவினார்.

கஸ்பா பேட்டில் ஆரம்பித்த வெற்றிலை உண்ணும் பழக்கத்தை, பாபா ஸாக்கோரியில் தொடர்ந்து, இப்போது மன்ஸிலிலும் உண்டு வந்தார். சில நேரங்களில், மெஹர் பாபா மிகவும் களைப்பாகக் காணப்பட்டாலும், அவருடைய நடை ஒரு மானைப் போல் இலகுவாகவும், வேகமாகவும் இருந்தது.

அவர் முகம் அதிசயமூட்டும் மறுவுலகின், அற்புத பிரகாசத்தால் நிரம்பியிருக்கும். பாதாம் பழுப்பு நிற கண்கள், காந்த சக்தி நிறைந்து காணப்படும். ஷிர்டி சாய் பாபாவின் கண்களை மரபுவழி மெஹர் பாபா அடையப்பெற்றதாகக் கூறப்பட்டாலும், வெளித்தோற்றத்தில் வித்தியாசமாக இருந்தன! சாய் பாபாவின் கண்களைப் போல சக்தி வாய்ந்து, ஒளி நிறைந்து இருந்தாலும், இரக்கம் பொங்கி பிரகாசித்தன. மனமுடைந்த, துயரத்தால் ஒடுங்கிப்போன இதயங்களுக்கு அவை ஓர் ஆறுதலாக அமைந்தன. அவர் கண்கள், அவரை சந்தித்த ஒருவரின் கதையை வெளிச்சமிட்டுக் காட்டி, நொடிப்பொழுதில் இறைவனடியை நோக்கி வழி நடத்தும். அவருடைய அழகான

புன்னகை, ஒருவர் வாழ்வின் துயரத்தைத் துரத்திவிட்டு, '**வாழ்வில் ஒவ்வொரு கணமும் ஒரு மனம் நிறைந்த புன்னகையோடு வாழவேண்டும்**' என்ற ஊக்குவிக்கும் செய்தியை வெளிப்படுத்தும்.

1922, செப்டம்பர் 10 அன்று வெள்ளை புறா ஒன்று மன்ஸில்-எ-மீமிற்கு வந்தது. அந்தப் புறா உடல் நலம் குன்றி, சோர்ந்து காணப்பட்டது. பிடிக்க முயன்றபோது எளிதில் பிடிபட்டது. அதை மெஹர் பாபாவிடம் கொடுத்ததும் அவர் அன்போடு கையிலேந்தி, இதமாக வருடிக் கொடுத்தார். நடக்க முடியாத அளவுக்குப் பலவீனமாக இருந்தது. அபூர்வமான அழகு படைத்த அந்த வெண்புறாவை, பாபா இரவெல்லாம் கவனித்து வந்தார். அடுத்த நாள் அந்தப் புறா, பாபாவின் அருகில் உயிரைத் துறந்தது. மெஹர் பாபா மண்டலி அனைவரையும் அழைத்து அதைப் பார்க்கச் சொன்னார் - ஒரு விசித்திரமான நிலையில் - இரண்டு கால்களிலும் அமர்ந்து, தலையைப் பணிந்த வண்ணம், வணங்கித் தொழுவது போல் இருந்தது.

பாபா மண்டலியிடம் கேட்டார், "**எப்படி இந்த வெண்புறா திடீரென இங்கு வந்த அதே வேகத்தில் மறைந்தது? சொல்லுங்கள் பார்க்கலாம்.**" எவரும் பதிலளிக்க இயலாதபோது, பாபா விளக்கினார்: "**பாபாஜானிடமிருந்து ஒரு முக்கியமான செய்தி வரும் என்று ஏற்கனவே நான் உங்களிடம் கூறியது நினைவில் இருக்கிறதா? இந்த வெண்புறா அச்செய்தியைக் கொண்டு வந்தது. அது வந்ததும் உயிரைத் துறந்த இந்த சம்பவத்தால் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த செய்தியைக் கொண்டு வந்தது என்பதை, கற்பனையால் கணக்கிட முடியும்.**"

அதற்குப் பிறகு, பாபா அவரது கைகளால் மன்ஸிலின் பின் புறத்தில் ஒரு குழியை வெட்டி, புறாவை அதில் புதைத்து, பச்சை நிற துணியால் போர்த்தி, பூக்களைத் தூவினார். பாபா, உடனே பெர்ஸியன் மொழியில் கவிதை ஒன்றை எழுதி அந்தப் புறாவுக்கு அர்ப்பணித்தார்:

**ஓ வெண்புறாவே! நான் உன்னை எனது கௌரவ விருந்தினராக**
**ஏற்றுக்கொண்டேன், ஏனெனில் நீ எனது பேரரசரிடமிருந்து வந்தாய்!**
**ஆனால் என்ன சிறப்பான விருந்தினர் நீ! அரசனின் ஆணையை ஏற்று**
**அவர் பாதங்களின் தூசாக மாறினாய்!**
**எவருக்கும் தெரியாது நீ எங்கிருந்து, ஏன் வந்தாய்,**
**ஆனால் உன் வருகை நாங்கள் புறப்படுவதற்கு ஓர் எச்சரிக்கை!**
**நிர்மூலமாக்க நீ வந்ததோ இம்மண்ணுலகின் வாழ்க்கை!**
**நீ பிறப்பு இறப்புக்கு அப்பாற்பட்டு இப்போது இருக்கிறாய்!**
**நீ மன்னனிடமிருந்து என்ன செய்தி எடுத்து வந்தாய்!**
**அதன் பாரம் தாங்காமல் உன் உயிரை அங்கேயே துறந்தாய்!**
**ஓ இறைவனே! திரைக்குப் பின்னே இது என்ன**
**உனது விசித்திர விளையாட்டு!**

**நீ எப்போதும் எங்கும் வெளிப்பட்டிருந்தாலும், கண்ணிருந்தும் பார்வையில்லாத ஒருவருக்கு என்றுமே நீ ஒரு விடுகதை!**
**அரசவை வெண்புறாவே! நீ ஓர் இறை ஞானியாக மாறிவிட்டாய்!**
**மன்ஸில்-எ-மீமில் நீ புனிதமாகப் புதையுண்டாய்!**
**மேர்வான் உன் பாதங்களை வணங்கி முத்தமிடுவதை ஏற்றுக் கொள்வாய்!**

அடுத்த நாள், 1922, செப்டம்பர் 11ஆம் தேதி, மெஹர் பாபா தனது சீடர்கள் குஸ்தாஜி, டாக்டர் கனி, சதாஷிவ், ஆதி, ஸையத் ஸாஹேப் ஆகியோருடன் வடஇந்தியாவின் அஜ்மீர் (AJMER) நகருக்கு ரயிலில் புறப்பட்டுச் சென்றார். அங்கே 'எட்வர்ட் மெம்மோரியல் ஹோட்டலில்' (EDWARD MEMORIAL SERAI - HOTEL) தங்கி இருந்த வேளையில், மெஹர் பாபா வயிற்றுக் கடுப்பால் பெரிதும் அவதிப்பட்டார்.

செப்டம்பர் 14ஆம் நாள், முஸ்லிம் ஸுஃபி சத்குரு குவாஜா மொய்னுதீன் கிஸ்தியின் மசூதிக்குச் (KHWAJA SAHEB MU'INUDDIN CHISHTI) செல்லும் முன்னர், அனைத்து சீடர்களும், மெஹர் பாபாவின் கட்டளைப்படி 24 மணி நேரம் உபவாசம் கடைப்பிடித்தனர். இந்தியாவுக்கு ஸுஃபி பாரம்பரியத்தைக் கொண்டு வந்தவர் கிஸ்தி. அப்போது ஆயிரக்கணக்கான இந்துக்கள் அதைக் கடைப்பிடித்தனர். 12ஆம் நூற்றாண்டில் 'குதுப்-எ-இர்ஷத்' (QUTUB-E-IRSHAD - ஆன்மீகப் பரம்பரையின் தலைவர்) எனப் பேரும், புகழும் பெற்றவர். சையது ஸாஹேப், டாக்டர் கனி இருவரையும், மெஹர் பாபா சத்குரு கிஸ்தியின் மசூதியில் பிரார்த்தனை செய்ய அனுப்பி வைத்தார்.

மெஹர் பாபாவின் உடல் சீராகாத நிலையில், சீடர்களை சிறப்புமிக்க ஜெயின் தங்கக்கோயில் (JAIN GOLDEN TEMPLE), தவுலத் தோட்டம் (DAULAT GARDEN), அனா ஸாகர் ஏரி (ANA SAGAR LAKE) மற்றும் ஷாஜஹான் மசூதி (SHAH JAHAN MOSQUE) போன்ற இடங்களுக்குச் சென்று வருமாறு கூறினார்.

இரண்டு நாட்களுக்குப் பின்னர் அனைவரும் வியக்கத்தக்க வகையில் அஜ்மீர் 'தாராகார்' மலையில் (TARAGHAR HILL) எழுப்பப்பட்ட அற்புதமான மசூதியை தரிசனம் செய்ய சில சீடர்களை பாபா அனுப்பி வைத்தார்.

செப்டம்பர் 18 அன்று அஜ்மீருக்கு வடமேற்கு பகுதியில் அமைந்த, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புஷ்கர் (PUSHKAR - ராஜஸ்தான்) கோயிலுக்கு அனைவரையும் அனுப்பி வைத்தார். பாபாவின் மோசமான உடல் நிலையைக் கருத்தில் கொண்டு, சீடர்கள் அவரைத் தனியாக விட்டுச் செல்ல விரும்பவில்லை. "**நான் இங்குத் தனியாக இருந்தால், மாலை வேளைக்குள் சீராகி விடுவேன். நீங்கள் என்னைத் தனியாக விட்டுச் செல்ல விரும்பாததால், உங்கள் மகிழ்ச்சிக்குத் தடை வேண்டாம் என்ற எண்ணத்தில், நானும் வருகிறேன். ஆனால் நான் சொல்வதை நினைவில் கொள்ளுங்கள். என்னுடைய தற்போதைய மோசமான உடல்நிலை, மேலும் 15 நாட்கள் நீடிக்கும். அதற்கு நீங்களே காரணம்**" என்று பாபா விளக்கிக்

கூறி, உடன் சென்றார். எதுவும் சொல்லாமல், மிகவும் சிரமமான குதிரை வண்டி சவாரியை பாபா மேற்கொண்டார்.

புஷ்கரில் அமைந்த இந்து கோயில் அபூர்வமான அழகு நிறைந்தது. அங்கிருக்கும் ஏரி இந்தியாவிலுள்ள புனிதமான ஏரிகளில் ஒன்று. புராண கதைகளின் படி, பிரம்மன் இப்பூவுலகை உருவாக்கும் போது, இந்த இடத்தில் அவரது கையிலிருந்த தாமரை மலர் ஒன்றை அங்கு விழச் செய்தார். பலநூறு ஆண்டுகளில் அது இந்தியாவில் புகழ்பெற்ற ஒரு புனித ஸ்தலமாக உருவெடுத்தது. பிரம்ம தேவனுக்கான அரிய கோவில்களில் இதுவும் ஒன்று!

பாபா கேட்டுக் கொண்டதற்கிணங்கி, ஈரானிய மற்றும் முஸ்லிம் சீடர்கள், இந்து முறைப்படி, அந்தக் கோவிலுக்குச் சென்று, தொழுது பிரார்த்தனை செய்தனர். அவர்கள் அந்த ஏரியில் புனித நீராடி, **பாரப்பெட்** நதிக்கரையில் பிராமண குருக்களைப் போல நெற்றியில் சிகப்புத் திலகமிட்டு, மந்திரங்கள் ஓதி, தெய்வ வழிபாடு செய்துவிட்டு ஹோட்டலுக்குத் திரும்பி வந்தனர். அன்றிரவே அங்கிருந்து புறப்பட்டு செப்டம்பர் 19ஆம் நாள் மும்பை வந்து சேர்ந்தனர்.

மெஹர் பாபா சீடர்களுடன் அஜ்மீர் சென்ற போது, மும்பையில் ஸரோஷ், மோட்டார் வாகனம் பழுதுபார்த்து, சம்பாதித்த பத்து ரூபாயை மன்ஸிலில் சக நண்பர்களுடன் இனிப்புப் பண்டங்கள் வாங்கி செலவு செய்தார். பாபா திரும்பி வந்ததும், அவர்களின் அலட்சிய செயலைக் கண்டறிந்து எரிச்சலடைந்தார். ஸரோஷின் பெட்டி படுக்கைகளை வெளியே வீசி எறியுமாறு கட்டளையிட்டார். அவ்வாறே செய்ததும், பாபா, ஸரோஷை மன்ஸிலிலிருந்து உடனே வெளியேறுமாறு கேட்டுக் கொண்டார்.

ஸரோஷ், பாபாவிடம் மன்றாடி, “பாபா! உங்களுக்குக் கீழ்ப்படியாமல் இருந்தது நான் மட்டுமல்ல! குற்றவாளிகள் பலர்! என்னுடைய பெட்டி படுக்கைகளை இப்போது வீசி எறிந்தவர்களும் என்னுடன் இனிப்புகளை பகிர்ந்து கொண்டனர்! பாபா மேலும் கோபமடைந்து, ஸரோஷிடம் அவர்களின் பொருட்களையும் தூக்கி வெளியே வீசுமாறு கூற, அவரும் அப்படியே செய்தார்.

அப்போது பாபா, பெஹராம்ஜியைக் கண்டித்தார், “**நான் உங்களை இங்குப் பொறுப்பாக இருந்து அனைத்தையும் கவனிக்கச் சொன்னேன். இப்படித்தான் மேற்பார்வை செய்வதா? என்னுடைய கட்டளைகளை மீற நீங்கள் ஏன் இடமளித்தீர்கள்?**”

பெஹராம்ஜி தன்னைப் பாதுகாக்கும் நோக்கத்தில், “நான் அவர்களிடம் கூற முயற்சித்தேன். ஒருவரும் எனது பேச்சைக் கேட்கவில்லை. மேலும், நான் அந்த இனிப்புப் பண்டங்களில் பங்கெடுக்கவுமில்லை” என்றார்.

மன்ஸில்-எ-மீமில் நடந்த சம்பவத்தைக் குறித்து மெஹர் பாபா, அவர்களின் தவறுகளைக் கடுமையாக விமர்சித்தார்: “**என்னுடைய உத்தரவுகளை நீங்கள் மீறியது, நான் வெளியே இருந்த போது, என் உடல் நிலையைப் பெரிதும் பாதித்தது. நான் இத்தகைய மோசமான நிலையில்**

**இருப்பதை நீங்கள் பார்த்து மகிழ்ச்சியடைவீர்களா? நான் உண்ணாமல் இருக்க வேண்டிய நிலை! எனது வயிறு சரியில்லை! வயிற்றுப் போக்கால் பல நாட்கள் நான் அவதிப்படும் அதே வேளையில் நீங்கள், என் அனுமதியில்லாமல் இனிப்புப் பண்டங்களை உண்டு மகிழ்ந்தீர்கள்! இப்படித்தான் என்னை நீங்கள் நேசிப்பதா? இதுதான் உங்கள் பக்தியின் எடுத்துக்காட்டா?"**

சற்று நேரத்தில் பாபா அமைதியாகி, அனைவரையும் மன்னித்து, பெட்டி படுக்கைகளை மன்ஸிலில் எடுத்து வர அனுமதித்தார்.

மெஹர் பாபா ஏற்கனவே சொன்னது போல், அவர் உடல்நிலை பதினைந்து நாட்களில் சரியானது. பதினாறாவது நாள், மன்ஸிலில் நடந்த இசை நிகழ்ச்சியில் பாபா தனது இனியகுரலில் பாடி டோலக் அடிக்க, ஆதி சித்தார் வாசித்தார்.

அடுத்த நாள், செப்டம்பர் 28ஆம் தேதி, பாபா இந்த அறிவிப்பை மன்ஸிலில் விளம்பரம் செய்தார்:

**கீழே குறிப்பிடும் செயல்திட்ட அட்டவணை அக்டோபர் 1ஆம் தேதியிலிருந்து, கடவுளுக்குத் தெரிந்தவரையில் அமலில் இருக்கும்!**

1. **இரவு 9 மணிக்குப் படுக்கைக்குச் சென்று காலை 4 மணிக்கு விழிக்க வேண்டும்.**
2. **காலை 4 மணியிலிருந்து 5 மணி வரை - காலை கடன்களை முடித்து, நீராட வேண்டும்.**
3. **காலை 5 மணிலிருந்து 6 மணி வரை - மெய்மறந்து இறை பக்தியில் எப்படி இருக்க வேண்டும் என்று நான் ஒரு நாளைக்கு முன் விளக்குகிறேனோ அப்படி இருக்க வேண்டும்!**

**- மேர்வான்.**

அக்டோபர் முதல் நாளிலிருந்து புதிய அட்டவணை அமலுக்கு வந்தது. அதை மெஹர் பாபா அனைவருக்கும் விளக்கினார்:

**"இந்த அதிகாலை வேளையில், குறிப்பாக காலை 4 மணியிலிருந்து 5 மணிவரை, கண் விழித்திருக்க வேண்டும் என்பதே முக்கிய நோக்கம்! ஆன்மீக ரீதியில் பார்க்கும் போது, இது ஒரு நாளின் மிகவும் மதிப்புமிக்க, முக்கியமான நேரமாகும். சிறப்புப் பிரார்த்தனைகளும், உயர்ந்த யோகிகளின் பயிற்சிகளும் இவ்வேளையில்தான் நடைபெறும். உண்மையிலே, யோகிகளின் கண்ணோட்டத்தில் இவ்வேளையில் விழித்திருப்பது இன்றியமையாதது ஆகும்!**

**"நான் உங்களை ஏதாவது மதம் சம்பந்தப்பட்ட செயலில் அல்லது யோக பயிற்சியில் ஈடுபட கூறாவிடிலும், இக்கட்டளைகளோடு**

**எவ்விதமான தொடர்பு இல்லாத போதிலும், நீங்கள் இவ்வேளையில் விழித்திருக்க வேண்டும் என்பதுதான் எனது விருப்பம்.**

**“இந்த நேரத்தில்தான் ஹஸ்ரத் பாபாஜான் எனக்கு இறை உணர்வை அளித்தார். சத்குரு உபாஸனி மஹாராஜும், இதே வேளையில்தான் ஆழ்கடலிலிருந்து என்னை வெளியே கொண்டு வந்தார். மேலும் இதே நேரத்தில்தான் என்னுடைய சீடர்களும் இறை உணர்வை அடைவார்கள்.**

**“ஆனால், இப்போதைய கேள்வி என்னவெனில், இந்நேரத்தில் என்ன செய்வது? நிச்சயமாக, சோம்பி, சாய்ந்து கிடப்பதற்கு அல்ல, பேசி நேரத்தை வீணடிப்பதற்கும் அல்ல, எனவே நேரத்தை நல்வழியில் பயன்படுத்த, உங்கள் அனைத்து காலை கடன்களையும், தினசரி தேவைகளையும் முடித்து, குளிர்ந்த நீரில் நீராட வேண்டும்!**

**“காலை 5 மணியிலிருந்து 6 வரை, அனைவரும் பிரார்த்தனைகளில் - முஸ்லிம்கள் நமாஸ் படிப்பது, பார்சிகள் சத்ரா குஸ்தி அணிந்து பிரார்த்தனை செய்வது, மற்றும் இந்துக்கள் பூஜைகள் செய்து, அவரவர் மதக் கோட்பாடுகளுக்கு இணங்க இறைவனின் நாமத்தை தொடர்ந்து உச்சரிக்க வேண்டும் - அல்லா, ராம் அல்லது எஸ்தான்.**

**“இறை நாமத்தை உதடுகளும் நாவும் அசையாமல் மனதில் உச்சரித்தாலும், கண்களை மூடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். இது யோகிகளின் ஒருவித பயிற்சி ஆகும். ஒரு முறை அமர்ந்ததும் அதே நிலையில், காலை சிற்றுண்டி நேரம் 6 மணி வரை அமர்ந்திருக்க வேண்டும். எந்தத் தடையும் இல்லாமல், நேரத்தில் கவனம் செலுத்தாமல் இறை நாமத்தை மனதில் கொள்ளுங்கள்!”**

மெஹர் பாபா ஒவ்வொருவரிடமும் அவர்கள் உச்சரிக்கும் கடவுளின் பெயரையும், அமர்ந்திருக்கும் முறையையும் கேட்டார். அனைவரும் பதிலளித்த பின்பு, பாபா திட்டவட்டமாக, அவர்கள் உச்சரிக்கும் பெயரிலும், அமரும் விதத்திலும் அடுத்த பத்து மாதங்களுக்கு எந்த மாற்றமும் இருக்கக் கூடாது என்று கூறினார். இறுதியில் பாபா, **“இது நான் உங்களுக்கு வழங்கும் முதல் ஆன்மீக அறிவுறுத்தல். செயல்படுத்தத் தவறி விடாதீர்கள்”** என்று கூறினார்.

**‘இவ்விதமான பயிற்சி, இறைவனை வழிபடுவதன் ஒரு வடிவம்’** என்பதை பாபா எடுத்துரைத்தார். சில சீடர்கள், இவ்வாறு தியானத்தில் இருப்பது இறை அனுபவத்தை நல்கும் என உள்ளூர நம்பினர் - ஏனெனில், மெஹர் பாபா, அவர்களிடம், **“உங்களில் ஒவ்வொருவரும், எதிர்வரும் செப்டம்பர் மாதத்தில் வித்தியாசமான இறை அனுபவத்தை அடையப் பெறுவீர்கள்”** என்று சில தினங்களுக்கு முன்பு கூறினார்.

அக்டோபர் 2ஆம் தேதியிலிருந்து அனைவரும் புதிய வழக்கத்தைத் தொடங்கினர். பல வேடிக்கையான சம்பவங்கள் நிகழ்ந்தன. உதாரணமாக, டாக்டர் கனி மற்றும் சிலர், அதிகாலை வேளையில் குளிர்ந்த நீரில் நீராட சோம்பல்பட்டு, தண்ணீரை சுவற்றிலும், மேலும் கீழுமாக எறிந்து நீராடுவது

போல பாவனை செய்து, விசித்திரமான சத்தங்களை எழுப்பினர். இவ்விதமான சம்பவங்களை, பாபாவிடம் எடுத்துச் சொல்லி அனைவரும் சிரித்து மகிழ்ந்தனர்.

மேலும், மெஹர் பாபா, மன்ஸிலின் கொல்லைப்புறத்தை சரி செய்து, சமதளமாக்கி ஒரு சிறிய விளையாட்டு மைதானமாக்கும் எண்ணத்தில் அனைத்து சீடர்களும் அவரது கண்காணிப்பில் வேலை செய்ய வேண்டிய நிர்பந்தம். டாக்டர் கனியும் இதில் பங்கெடுத்தார். காலை நேரத்தில் இந்தக் கடுமையான வேலையிலிருந்து விடுபடும் எண்ணத்தில், கனி, பாடல் ஒன்றை எழுதி வேலையின் நடுவில் உரத்த குரலில் திரும்பத் திரும்பப் பாடினார்:

ஓ ஷிரின்! மலையைக் குடையும் வேலையை
இந்த ஃபர்ஹாதுக்குக் கொடுத்து, கொடுமைப் படுத்தாதே!
அவன் உன் காதலன் - சாதாரண வேலைக்காரன்
என்று ஒருபோதும் நினைக்காதே!

(ஃபர்ஹாத் ஒரு பாரசீக மன்னனின் பெயர்; அதன் அர்த்தம் - மகிழ்ச்சி)

முதலில், சுத்த சோம்பேறியான டாக்டர் கனி ஏன் இவ்வளவு உருக்கமாகவும், ஆர்வத்துடனும் பாடுகிறார் என்று எவருக்கும் புலப்படவில்லை. ஆனால் டாக்டர் கனி, அதைத் திரும்பத் திரும்ப நகைச்சுவையாகப் பாடியதைக் கேட்டு அனைவரும் வாய்விட்டுச் சிரித்தனர். பாபாவும் அடக்க முடியாமல் சிரித்துக் கொண்டே டாக்டர் கனியை அழைத்து, “**இந்த ஃபர்ஹாதின் முகம் மற்றும் அதன் அம்சங்களைப் பாருங்கள்! இவன் எனது காதலனா? எனக்கு என்ன அதிர்ஷ்டம்! இவன் தலை எவ்வளவு பெரியது பாருங்கள்!**” என்று சீடர்களிடம் கூறினார். அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தனர். எதுவாகிலும் அந்நாளிலிருந்து இதுபோன்ற கடுமையான வேலைகளை, பாபா அவருக்குத் தருவதில்லை.

மெஹர் பாபாவின் அனுமதியின்றி எவரும் மன்ஸிலுக்கு வெளியே செல்லவோ, வெளியிலிருந்து வரவோ முடியாது. பாபா கூறியதற்கு இணங்க, டாக்டர் கனி, அவர் சார்பில் கடிதம் ஒன்றை எழுதி, முன்ஷி ரஹிம் வழியாக மும்பை ‘எல்ஃபின்ஸ்டோன் கல்லூரி பேராசிரியர் அப்துல் காதருக்கு’ (PROFESSOR ABDUL KADAR OF MUMBAI ELPHINSTONE COLLEGE) அனுப்பி வைத்தார்.

முன்ஷி ரஹிம் உடனடியாக அக்கடிதத்தை, பேராசிரியரிடம் எடுத்துச் சென்றார். கடிதத்தைப் படித்ததும் வியப்பான ஒரு தோற்றம் அவர் முகத்தில் வெளிப்பட்டது. முன்ஷி ரஹிம் அதன் காரணத்தை வினவினார். அக்கடிதத்தில், ‘**அவரை அழைத்தாலன்றி மன்ஸில்-எ-மீமிற்கு வரவேண்டாம்**’ எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. உடனே, பேராசிரியர் அப்துல் காதர், இவ்வாறு விளக்கினார்: ‘மெஹர் பாபாவை நான் இன்று மாலை ஐந்து மணிக்கு மன்ஸில்-எ-மீம் சென்று சந்திக்க இருந்தேன். ஆனால் எப்படி அனுமதி வாங்குவது எனத் தெரியாமல், சிந்தனையில், மன்ஸில் வாயிலில் சென்று, பாபாவின் அனுமதி கிடைக்கும் வரை காத்திருக்கலாம் என்ற முடிவிலிருந்தேன். ஆனால் இப்போது

பாபாவின் பதிலை நீங்கள் கொண்டு வந்தீர்கள்! நான் எப்படிப் போக முடியும்?' முன்ஷி அவரை சமாதானப்படுத்தி, பாபா அழைப்பது வரை, பொறுமையாக இருக்கச் சொல்லி விடைபெற்றுச் சென்றார்.

மெஹர் பாபாவின் உடல்நிலை அவ்வப்போது விசித்திரமாகச் செயல்படும். காரணத்தை அவர் பெரும்பாலும் விளக்குவதில்லை. அக்டோபர் 2 அன்று பாபா வழக்கத்திற்கு மாறாக மிகவும் மகிழ்ச்சியான மனநிலையில் காணப்பட்டார். அன்றிரவு தூங்கச் செல்லும் முன்பு, டாக்டர் கனியை அழைத்துக் கூறினார்: "**எனக்குக் கடுமையான ஜுரம் உள்ளது**." டாக்டர் கனி, பாபாவை சோதித்த போது, பாபாவின் மார்பு, நெற்றி அனல் போலக் கொதித்ததை உணர்ந்தார். பாபா மறைமுகமாகக் கூறினார், "**நான் இரண்டாவது முறையாக இப்படி நோயால் அவதிப்படுகிறேன். முதலில் இருந்ததைவிட முற்றிலும் மாறுபட்டது**!" கால் மூட்டுகளில் அதிக வலி இருப்பதாகத் தெரிவித்தார். மனக் குழப்பத்தில் சம்பந்தம் இல்லாமல் பேசினார். டாக்டர் கனி, பாபாவின் கால்களை இதமாக வருடித் தந்தார். ஜன்னல்கள் திறந்து காற்றோட்டமாக இருந்தும் பாபா உஷ்ணமாக உணர்ந்தார். சற்று நேரத்தில் குளிர் எடுப்பதாக முறையிட்டார். டாக்டர் கனி, பாபாவைக் கம்பளியால் போர்த்திய போது, அவரைத் தனியாக விட்டு விடுமாறு கூறினார்.

காலையில் கீழ்காணும் அறிவிப்பு 'விளம்பரப் பலகையில்' வெளியிடப்பட்டிருந்தது.

**இரவெல்லாம் கடுமையான ஜுரம் என்னுடைய துணைவனாக இருந்தது. இவ்வாறு, தூக்கம் இல்லாத இரவுகள், கடந்த நோயால் ஏற்பட்ட பலவீனம், இன்றைய ஜுரம் - இம்மூன்றும் சேர்ந்த கொடுமையான வியாதி என்னைத் தாக்க ஆயத்தமாகி விட்டது**!

இப்படிக்கு
மேர்வான், அக்டோபர் 3, 1922

மறுநாள் காலை சிற்றுண்டி வேளையில், பாபா, '**இரவில் அவரது கண்கள் கலங்கி இருந்ததையும், குஸ்தாஜி இதற்கு சாட்சி என்பதையும்**' அனைவருக்கும் தெரிவித்தார். "**என் எதிரி கூட இதுபோன்ற நோயால் அவதிப்படக் கூடாது**!" என்று குறிப்பிட்டார்.

அவருடைய நோய் சம்பந்தமாக மெஹர் பாபா, சதாஷிவ் மற்றும் சிலர் முன்னிலையில் கூறியதாவது: "**கடந்த எட்டு வருடங்களில் இது மூன்றாவது முறையாக நான் நோய்வாய்ப்பட்டு, கண்கலங்கி கண்ணீர் சிந்தினேன். முதலில் எனது முதுகில் வந்த காயம், அடுத்ததாக அஜ்மீரில் அனுபவித்த வயிற்றுக் கோளாறு**!" இதை மீண்டும் மெஹர் பாபா விளக்கினார்.

"**எனது வட்டத்து சீடர்களுக்காக, இவ்வாறு இருபத்தெட்டு முறை நான் சாகவேண்டும். ஒவ்வொரு முறையும் கண்கலங்கிக் கதற வேண்டும். ஆனால், அதையடுத்து வரும் வியாதிகளின் தீவிரத்தன்மை, குறைந்து**

**கொண்டே வரும். எனக்கு இப்போது வந்த இந்த ஜுரம், சதாஷிவ் பாட்டீலுக்காக, ஏனெனில் அவர் அடிக்கடி ஜுரத்தால் அவதிப்படுகிறார். கடந்த இரண்டு வியாதிகளும் குஸ்தாஜி, பெஹ்ராம்ஜி இருவரையும் சம்பந்தப்பட்டவை. இரண்டாவது பிரிவில் உள்ளவர்களுக்காக, அதில் கனியும் ஓர் உறுப்பினர், நான் கஷ்டங்களை அனுபவிக்க உள்ளேன். இந்தப் பிரிவில் கனியின் எண் ஏழு. இது மிகவும் இன்றியமையாத எண் ஆகும். இறைநிலையை அடைந்த பிறகும் இது எப்போதும் சத்குருவோடுதான் இருக்கும். அடுத்த மூன்று நான்கு முறை வரும் வியாதிகள் சற்று கடுமையாக இருந்தாலும், பிறகு துன்பம் படிப்படியாகக் குறைந்து விடும்."**

இந்த விளக்கங்களைக் கேட்ட சில சீடர்கள், அவர்களுக்காக, பாபா கஷ்டங்களை எப்போது அனுபவிக்க நேரும் என்ற வியப்பில் ஆழ்ந்தனர்.

பின்னர், ஒரு நாள் மெஹர் பாபா உலக சுகங்களை இறை இன்பத்தோடு ஒப்பிட்டுப் பேசுகையில், **"கடல் போன்ற உலக சுகங்கள் அனைத்தும் நிழல் போன்றவை. அளவிலா பேரானந்தத்தின் ஒரு துளிக்குக் கூட நிகராகாது. இதனால்தான் ஒரு சத்குருவை இப்படிக் குறிப்பிடுகிறோம், சத்-சித்-ஆனந்த் - எல்லையில்லா அறிவு, எல்லையில்லா சக்தி மற்றும் எல்லையில்லா ஆனந்தம்."**

அடுத்த நாள், தேநீர் வேளைக்குப் பிறகு, மெஹர் பாபா, ராம்ஜுவுடன் சதுரங்கம் விளையாடினார். பொதுவாக கவனமின்றி விளையாடினாலும் இறுதியில் வெற்றி அடைந்தார். மன்ஸிலில் இருக்கும் சிறந்த சதுரங்க வீரர்களைப் பற்றிய பேச்சு எழுந்தது. பாபா அப்போது இப்படிக் குறிப்பிட்டார்: **"ஒருமுக நோக்குடன், முழு மனதோடு எந்த விளையாட்டு விளையாடினாலும், அவ்விளையாட்டின் வல்லுனர்களையும், தலை சிறந்த முதன்மையான வெற்றி வீரரையும் நான் வீழ்த்த முடியும்."**

டாக்டர் கனி உடனே மனதின் சக்தியை ஒருநிலைப் படுத்துவது என்றால் என்ன? என்று கேட்டதற்கு, மெஹர் பாபா இவ்வாறு விளக்கம் அளித்தார்:

**மனதிற்கு அடிமையாக இருப்பவன் சாதாரண மனிதன். யார் ஒருவன் மனதை வென்று, அதேவேளை, மனதால் ஆட்கொள்ளப்படாமல், இறை போதையில் மூழ்கி இருக்கிறானோ அவனை, 'மஜ்ஜூப்'** (இறைநிலையை அடைந்தவர்) **என்று ஸுஃபிகள் அழைக்கின்றனர்.**

**'இறைநிலை' எனும் இலக்கை அடையப்பெறும் தயார் நிலையில் இருக்கும் ஒரு துறவி** (வாலி), **உயர்மட்ட ஆன்மீக நிலையில் வாழ்வதோடு, அவர் மனதை ஓரளவுக்குத்தான் கட்டுப்படுத்த முடியும்.**

**முதலில் குறிப்பிட்ட சாதாரண மனிதன்,** (மனதிற்கு அடிமையானவன்) **உலக சிந்தனைகளில் மூழ்கி இருப்பவன். இரண்டாவது வகை, இறை சிந்தனையிலே இருப்பவன். அதாவது, மஜ்ஜூப், பரிபூரண**

**உண்மைப்பொருளை அடையப்பெற்ற நிலையில் இருப்பவன். மனக் கட்டுப்பாட்டின் மேல்நிலையை அடைந்த துறவி** (வாலி) **இறைநிலையை நோக்கி முன்னேறிக் கொண்டிருப்பவன். ஆனால் சத்குரு (குதுப் அல்லது ஸலிக்) ஒரு தனித்துவமான நிலையை அடைந்து, ஆனந்தத்தை அனுபவிப்பவர்.**

**ஒரு சத்குரு உலக விவகாரங்களில் தலையிட வேண்டிய தேவை மிக மிக அரிது. ஆனால் அவ்வப்போது வட்டத்து சீடர்களுக்காக ஈடுபடுவது உண்டு.**

**உதாரணமாக, மும்பையின் ஒரு குறிப்பிட்ட இடம், ஜார்ஜ் மன்னரின் ஆட்சியின் கீழ் இருந்தது. ஆனால் அவருக்கு அந்த இடத்தைப் பற்றியோ, அங்கு வாழும் மக்களைப் பற்றியோ எதுவும் தெரியாது. அப்படித் தெரிய விரும்பினால், மிகக் குறுகிய நேரத்தில் அனைத்து விபரங்களும் அவருக்குக் கிடைத்துவிடும்.**

**இதுபோல், ஒரு சத்குரு மனதின் சக்தியை ஒருநிலைப்படுத்தி, எதையும் அல்லது எவரைப் பற்றியும் அறிய விரும்பினால், மூலாதாரப்பொருளை அணுகி அறிந்துகொள்ள முடியும். ஆனால் அவர் அதை அரிதாகவே செய்கிறார். உலக விவகாரங்களில் அவர் பேச்சளவில் அல்லது செயலளவில் அதிக விருப்பம் காட்டுவது போலத் தோன்றினாலும், உண்மையிலே அது, முன் முயற்சியின்றி நிகழ்வதாகும். அத்தகைய அரிய சந்தர்ப்பங்களில், அவர் பிரயோகிக்கும் மனம், தெய்வத்தன்மையின்றி இருக்கும். அந்நேரத்தில், கிட்டத்தட்ட இயந்திரத்தனமாக - எதைப் பற்றியும் சிந்தனை செய்யாமல் - அவருக்கு எப்படித் தோன்றுகிறதோ அப்படியே செய்கிறார்.**

மெஹர் பாபா, சொற்பொழிவுகள் வழியாக மட்டுமல்லாமல் கவிதைகள் மூலமாகவும் ஆன்மீக விஷயங்களை சீடர்களுக்கு வெளிச்சமிட்டுக் காட்டினார். கீழ்க்குறிப்பிடும் கஸல் 1920ஆம் ஆண்டு மெஹர் பாபாவின் கைவண்ணத்தில் உருவானது. பல வருடங்களுக்குப் பின்னர் ஆதி ஈரானி அதை மொழிபெயர்த்தார்.

**இப்பூவுலகம் இருப்பது உனது நிரந்தர வாழ்வுக்காக அல்ல,**
**எனவே உனது பார்வையை இறைவன் பக்கம் திருப்பு!**
**இந்த நிலையற்ற உலகில் எவ்வளவு காலம் இருப்பாய்?**
**இது நன்மை, தீமைகளை அனுபவிக்கும்**
**சோதனைத் தளத்தின் அமைப்பு!**

**இறைவனைத் தொழுவதில் உனது முயற்சியை**
**ஒருபோதும் தளரவிடாதே!**
**ஒவ்வொரு மூச்சையும் உன் இறுதி மூச்சாகப்**
**பார்க்கத் தவறாதே!**
**நாளை என்ன, எது நடக்கும் என உனக்குத் தெரியாது!**

எனவே இன்றே அதற்காக உன்னை ஆயத்தப்படுத்து!

உலகின் பலவகையான நிலைமைகள் எதுவும் மாறவில்லை!
ஆனால் அற்புத பார்வையாளர்கள் இங்கே வராமலுமில்லை!
உலகப் பூங்காவை விட்டுச்சென்ற இசைக்குயில்கள் பல்லாயிரம்!
இன்னும் என்றென்றும் இவ்வுலகில் வருவதும் போவதும் ஏராளம்!

ஆத்மா, அந்த இறைப் பேருயிர் எப்போதும் ஒன்றே ஒன்று!
ஆனால் உடல்கள் பல்வகை, தந்தையின் புதல்வர்கள் போன்று!

அதோ அங்கே பார், அந்த அன்பின் பசும்புல்வெளி!
அழகழகான பல வித நிறங்களின் குதிரை சவாரி!

துன்பங்களால் எங்களுக்கு ஓய்வில்லை ஒருபோதும்!
இன்னல், கவலை அதில் அமைதி காத்து நன்றிகூறு எப்போதும்!

துயரத்தில் உள்ளடக்கம் எக்கணமும் தேவை!
அமைதியுடன் ஆனந்தமாக இருப்பதே முறை!

துணிமணிகளைத் தொடர்ந்து தூய்மை செய்வதில்
காலத்தை வீணாக்காதே!
மாறாக, இறை நினைவில் மனமாசுகளை சுத்திகரிப்பதே முறை!

மனித உருவில் வரும் ஒரே இறைவனின் பாதங்களில்
விழட்டும் உன் பார்வை!
நூற்றுக்கணக்கில் எந்நிமிடமும் அவன் பாதத்தில்
தியாகத்தின் சேவை!

தடையான மதுவகைகளை ஒருபோதும் அருந்தாதே!
மான மரியாதைக்குரிய வாழ்க்கை வாழ்வது சிறந்ததே!
இறையன்பின் தனித்தன்மை வாய்ந்த போதையில்
அதிகாலையில் இருப்பது உயர்ந்ததே!

இறைவன் ஒப்பற்றவர்; அனைத்திலும் ஒன்றானவர்;
அவரை உன் இதயத்தில் பார்!
அவர் கடவுளாக வெளிப்பட்டார்; கடவுளாக மறைந்திருக்கிறார்;
கடவுளாக உன் உள்ளேயும், வெளியேயும் அமைந்திருக்கிறார்!

மானிடனே! உனது தற்பெருமையால் தேவதூதனாகும்
தகுதியை இழந்தாய்!
உனது 'நான்' எனும் அகந்தையால் நீ சைத்தானாக மாறினாய்!

**ஓ ஹுமா! இவ்வுலக நாடகமேடையில், உன்னைப் போல்**
**எண்ணிலடங்கா நடிகர்கள் வந்து போவதை**
**நீ பார்க்காமலா இருப்பாய்?**

ஒரு முறை வழிப்போக்கன் ஒருவன் மன்ஸில்-எ-மீம்க்கு வந்து தனது பிரச்சினைகளைப் பட்டியலிட்டு பாபாவிடம் எடுத்துக் கூறினான். பாபாவைத் தலைவணங்கி, ஆசீர்வாதிக்குமாறு மன்றாடினான். அவன் சென்ற பிறகு பாபா அதைக் குறித்து இவ்வாறு கருத்து தெரிவித்தார்:

**“என்னைப் பார்க்க வருபவர்களில், ஏறத்தாழ அனைவரும், எப்பொழுதும் தங்களை ஆசீர்வதிக்க வேண்டுகின்றனர். இதுபோன்ற எளிய ஆத்மாக்களுக்கு, நிஜத்தில், இறை ஞானிகள் ஆசீர்வதிக்கவோ, சபிக்கவோ மாட்டார்கள் என்பது தெரியாது. இறை ஞானிகளை நாடி வருபவர்களின் உலக ஆசைகள் நிறைவேறுவது, இறை ஞானிகளின் மீது அவர்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையின் ஆழத்தைப் பொறுத்தது. மேலும் இறை ஞானிகளைச் சுற்றி நிறைந்திருக்கும் தெய்வீக சக்திகள் அவர்களின் பிரார்த்தனைகளுக்கு ஏற்ற பலனை நல்கும்.**

**“ஒரு சத்குரு, அவருடைய ஆன்மீக எல்லைக்குள் பணிபுரிகிறார். ஆன்மீகத் தளங்களில் இருக்கும் மேல்நிலை ஆத்மாக்களின் ஆசீர்வாத வார்த்தைகள் நற்பயனை விளைவிக்கும். உலக ஆசைகளுடன் சத்குருவை அணுகும்போது, ஒருவர் சத்குருவின் சாபத்தை வேண்டுவதே சிறந்தது. ஏனெனில் சத்குருவின் ஆசீர்வாதம் என்பது, ஒருவருடைய உலகத் தடங்களின் பிணைப்புகளை வேரோடு அழித்து, இறைநிலையை அடையச் செய்யும்.”**

மேலும் ஒரு ஸொராஸ்டிரியன், கொடாதத் ஈரானி (KHODADAD IRANI), ஆதிக்குத் தூரத்து உறவு, மெஹர் பாபாவைப் பற்றி, குல்மாய் மூலம் கேள்விப்பட்டு மன்ஸில்-எ-மீமுக்கு வந்தவரை பாபா அங்கே தங்க அனுமதித்தார். ஒரு நூல் ஆலையில் பணிபுரிந்த கொடாதத் சிறுவயதிலிருந்தே தொடர்ந்து ஆஸ்துமா நோயால் அவதிப்பட்டதால் பாபா அவருக்கு ‘ஆஸ்துமா’ (ASTHMA) என்ற புனைபெயரைச் சூட்டினார். சிறந்த மருத்துவ சிகிச்சைப் பெற்று, உணவில் முன்னெச்சரிக்கையாக இருந்தும், ஆஸ்துமா அவரை விட்டபாடில்லை. மன்ஸிலுக்கு வந்த சில நாட்களில் அவரை ‘ஆஸ்துமா’ என்ற பெயரில் அனைவரும் அழைக்க, நோய் இருந்த இடம் தெரியாமல் தானாகவே மறைந்தது, அனைவருக்கும் ஆச்சரியத்தை அளித்தது. மெஹர் பாபாவின் ஆணைப்படி குளிர்ந்த நீரில் காலையில் குளித்த பின்னரும் ஆஸ்துமா அவரை மறுபடியும் அணுகவே இல்லை.

அக்டோபர் 4ஆம் நாள் ஆஸ்துமா ஒரு சைக்கிள் வாங்கினார். பாபா அதை மன்ஸிலின் பின்புறம் உடற்பயிற்சிக்காக ஓட்டி, பின்னர் அவரிடம்

கொடுத்து, '**அதை வேறு எவரிடமும் பயன்படுத்தத் தரக்கூடாது**' என்று கூறினார்.

அதே நாள் மாலை உணவுக்குப் பிறகு, மெஹர் பாபா, 'யோகா', 'மனப்படிவங்கள்', 'முக்தி' என்ற தலைப்பில் விளக்கமளித்தார்:

**ஒரு யோகி, தனது தவ வலிமையால், சமாதி எனும் உயர்ந்த யோக நிலையை அடைந்தாலும், பரிபூரண இறைநிலையை அடைய முடியாது, ஏனெனில், அந்நிலையிலும் அவரது மனப்படிவங்கள் முழுமையாக நிர்மூலமாக்கப் பட்டிருக்காது. மனப்படிவங்கள் என்பது நல்ல அல்லது தீய செயலால் விளையும் மனப்பதிவுகள். சிந்தனைகள் கூட மனப்படிவங்களை உருவாக்கும். பேச்சு, கவனம், நினைவு, பார்வை, உண்பது, உறங்குவது, சொல்லப் போனால் நுட்பமான அசைவுகள் அனைத்தும் உருவாக்கும் எண்ணிலடங்கா மனப்படிவங்களை, ஒரு சத்குருவின் கருணையால் நிர்மூலமாவது வரை, மிகத்துல்லியமான முறையில் அனுபவிக்க வேண்டும். நமது நிகழ்கால வாழ்க்கையின் பல்வேறு அனுபவங்களான வேதனை, மகிழ்ச்சி, நேர்மை, களங்கம், இவை அனைத்தும் நமது முந்தைய மனப்படிவங்களின் விளைவாகும். நமது ஒவ்வொரு சுவாசம், கண்ணிமைகளை மூடித் திறத்தல் மற்றும் விரல்களின் அசைவு அனைத்திற்கும் முந்தைய மனப்படிவங்களே காரணம். கடந்த காலத்து மனப்பதிவுகளின் வெளிப்பாடு நமது நிகழ்கால வாழ்வில் பிரதிபலிக்கும். நமது நிகழ்கால வாழ்க்கை, மேலும்மேலும் மனப்படிவங்களை உருவாக்கிக் கொண்டே போகும். ஒரு சிறந்த வார்த்தை அல்லது செயலின், நன்மை பயக்கும் விளைவு, மனத்தளத்தில் ஆழமாக உறைந்திருக்கும்** (இதை ஒரு வட்டவடிவில் கற்பனை செய்து கொள்ளலாம்). **அதுபோல் ஒரு தீய வார்த்தை அல்லது செயலின் முடிவு நுண்ணிய வடிவில் இருக்கும். இப்படி, இக்காலத்தின் நற்செயல்கள், மகிழ்ச்சியான எதிர்காலத்தை உறுதி செய்யும். மேலும் இக்காலத்தின் தீய செயல்கள், ஒரு மோசமான எதிர்கால வாழ்வின் விளைவாக அமையும். செயல்களின் கட்டுப்பாடுகள் பின்னிப் பிணைந்து வேரூன்றி இருப்பதால் எளிதாக விடுவிக்க முடியாது.**

**நற்செயல்கள் ஒருவனை தங்க சங்கிலியாலும், தீய செயல்கள் இரும்பு சங்கிலியாலும் பிணைக்கும். ஆனால் இரண்டிலுமே சங்கிலி இருப்பதால் மனிதனுக்கு ஒருபோதும் விடுதலை இல்லை. யோகா மற்றும் அனுஷ்டானங்கள் அடுத்த பிறவியில் ஒரு நல்வாழ்வுக்கு வழிவகுக்கும். ஆனால் அதன் விளைவால் பிணைப்புகளிலிருந்து விடுபடவோ அல்லது முக்தி அடையவோ முடியாது. ஆகையால், இறைநிலையை அடைய ஒருவன் நற்குணம் அல்லது பாவம் இரண்டுமல்லாத நிலை - எவ்விதமான மனப்படிவங்களும் இல்லாத நிலையை அடையவேண்டும். ஒருவனுடைய கற்பலகை, வரவு செலவு கணக்கு இல்லாமல் முற்றிலும்**

**சுத்தமாக இருக்க வேண்டும். ஒரு சத்குருவின் கருணை இல்லாமல் இது சாத்தியமாகாது. ஆனால் சத்குரு இதைக் கண்மூடித் திறப்பதற்குள் செய்ய முடியும்.**

**ஒரு மனிதனின் மனதில், வைக்கோல் குவியல் போல நிறைந்திருக்கும் எண்ணிலடங்கா மனப்பதிவங்களை, தானாக அழிப்பது என்பது சாத்தியமாகாது. ஒரு சத்குருவின் உதவியின்றி, யோகா பயிற்சிகள் மூலம் அவற்றை அழிக்க முற்படுவது வேறு விதமான புதிய மனப்பதிவங்களை உருவாக்கும்.**

**இறைநிலையை அடைய மனப்பதிவங்கள் முற்றிலுமாக அகற்றப்பட வேண்டும். வைக்கோல் குவியலில் நெருப்பு வைக்க ஒரேயொரு தீக்குச்சி போதுமானது. இது ஒரே நிமிட வேலை. ஆனால் அந்தத் தீக்குச்சி சத்குருவிடமே உள்ளது. அதை அவர் தனது சீடர்களுக்காக உபயோகித்து, ஒரே வினாடிக்குள் அவர்களை இறைநிலையை அடையச் செய்ய முடியும். முற்பிறவியில், சத்குருவுடன் நெருங்கிய தொடர்பில் இல்லாதவர்கள் கூட, அவருடன் இப்பிறவியில் நேரடி தொடர்பில் வந்து, உடனிருந்தால் மிக்க பலனை அடையலாம்.**

அக்டோபர் 5ஆம் நாள் அதிகாலையில், மெஹர் பாபா மண்டலியிடம், ‘**மன்ஸிலின் பின்புறத்திலிருந்து வந்த சத்தத்தால் இரவெல்லாம் தூங்க முடியவில்லை**’ என்று முறையிட்டார். அந்த விசித்திரமான சத்தத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது பாபா, “**அது பளுவான உருளையால் பின்புற தரையை சமநிலை படுத்துவது போன்ற சத்தம்**” என்றார். அதன் பின்னர் அது ஓர் ஆவி என்பதை விளக்கினார்: “**நான் எங்குச் சென்றாலும் இந்த ஆவியும் என்னைப் பின்தொடரும். அர்ஜுன் ஸுப்பேக்கர், பூனாவில் இருந்தபோது குடிலுக்கு வெளியே எதிர்கொண்ட அதே ஆவி. உபாஸனி மஹாராஜ் அதை எனது கண்காணிப்பில் விட்டு வைத்துள்ளார். உங்களில் பலர் இதைப் பார்க்க நேரிடலாம். அப்போது அஞ்சத் தேவையில்லை. கண்டுகொள்ளாமல் சாதாரணமாக இருங்கள்.**”

ஒரு முறை, டாக்டர் கனி, பாபாவின் கால்களை அழுத்திக் கொண்டிருந்த வேளையில், பாபா ஆவிகளைப் பற்றி மேலும் விளக்கினார்:

“**என்னுடலை ஒருவர் தொட்டுக்கொண்டு இருக்கும் வேளையில் ஆவிகள் என்னை நெருங்காமல் விலகிச் சென்றுவிடும். அது எனக்கு ஓய்வெடுக்க சற்று உதவியாக இருக்கும். என்னுடைய தூக்கத்தை, சாதாரண மனிதர்களின் தூக்கத்தோடு ஒப்பிட முடியாது. அது உலகளாவிய மனதிற்கு, ஆன்மீகப் பணியிலிருந்து ஓய்வு தருவது போலாகும். ஓர் ஆவி நான் எங்குச் சென்றாலும், என்ன செய்தாலும் என்னைத் தொடர்ந்துவரும்.**”

சில இரவுகளில், பாபாவின் அறையிலிருந்து ‘அவர்கள் என்னை அடித்து துன்புறுத்துகிறார்கள்’ என்ற குரல் கேட்டதுண்டு. “**ஆனால் அது ஆவிகள் சம்பந்தப்பட்ட விஷயமல்ல. இதற்கு முன் நான் எடுத்துரைத்த விஷயங்கள்**

(அதை பாபா விளக்கியது இல்லை) - **அதாவது 'யோகிகள், சாதுக்கள், மஹாத்மாக்கள் மற்றும் கபட நாடகமாடும் போலி நபர்களால் வரும் சிரமங்கள்'** என்று விளக்கினார்.

அக்டோபர் மாதத்தில், மெஹர் பாபா, புதிதாக அச்சடிக்கப்பட்ட சத்குரு உபாஸனி மஹாராஜ் மற்றும் ஷிர்டி சாய் பாபா அவர்களின் புகைப்படங்களை, சதாஷிவ் வழியாக மஹாராஜுக்கு அனுப்பி வைத்தார். மேலும் பாபா, சதாஷிவிடம் '**மஹாராஜின் வாழ்க்கை வரலாறு உருது, மராட்டி மற்றும் குஜராத்தி மொழிகளில் அச்சடிக்கப்படுவதாகவும், அதற்குரிய செலவை உபாஸனி மஹாராஜ் ஏற்றுக்கொள்ள வேண்டும், மேலும் அதன் விற்பனையால் வரும் பணத்தை மஹாராஜ் பெற்றுக் கொள்ளலாம்**' என்ற வேண்டுதலையும் முன்வைக்குமாறு சொல்லி அனுப்பினார்.

இதைக் கேட்ட உபாஸனி மஹாராஜ் முகம் சுளித்து, அவமரியாதையுடன், பாபாவிடம் சென்று இவ்வாறு கூறச் சொன்னார்: "இந்த வரலாற்றை அச்சடிப்பதற்கான செலவை ஏற்க வேண்டியது நானல்ல, மேர்வான்! என்னுடைய வரலாற்றை அச்சடித்ததும், அதன் விற்பனையால் வரும் லாபத்தில் பாதிப் பணத்தை முன்கூட்டியே எனக்குத் தரவேண்டும். மீதியை அவன் வைத்துக் கொள்ளட்டும்! லாபத்தில் ஐம்பது சதவீதம் மேர்வானுக்கு வழங்குவது ஒரு சிறிய விஷயமல்ல!"

உலக விஷயங்களில் ஒரு சத்குருவின் ஆன்மீகப் பொறுப்பு, மற்றும் குருக்களின் இடையேயான உள் விவகாரங்கள் எதையும் எவரும் அறிய முடியாது. சத்குரு உபாஸனி மஹாராஜ், மெஹர் பாபா இருவருக்குமிடையே நடந்த பேச்சுப் பரிமாற்றத்தை, ஒரு தெய்வீக நகைச்சுவை என்றே எடுத்துக்கொள்ள வேண்டும்.

மஹாராஜின் பதிலைக்கேட்டு மெஹர் பாபா, வாழ்க்கை வரலாற்றுப் புத்தகத்தை வெளியிட முடிவு செய்தார்.

மெஹர் பாபா அஜ்மீரில் இருந்தபோது, ராம்ஜூ அப்துல்லா மற்றும் சில சீடர்களைத் தத்தமது இல்லங்களுக்கு அனுப்பி வைத்தார். ஒரு நாள், லோனவாலா ரயில் நிலையத்தில், ராம்ஜூ அவருடைய பழைய நண்பன் உஸ்மான் ஸாஹேபை சந்திக்க நேர்ந்தது - இவர்தான், ராம்ஜூவை முதன்முதலில் மெஹர் பாபாவிடம் அறிமுகம் செய்து வைத்தவர். ராம்ஜூ வாழ்த்துகள் கூறி உபசரித்த போதிலும், உஸ்மான் ஸாஹேப் பதிலுக்கு ஓர் ஈரடித்தொடரை எடுத்துரைத்து ராம்ஜூவை சீண்டிப் பார்க்க முயற்சித்தார்.

நிஜத்தில் இது நரகத்தின் சித்திரவதையைவிட மோசமானது!

இன்னொருவர் கால்களில் சொர்க்கத்தை நோக்கி நடந்து செல்வது!

1918ஆம் ஆண்டிலிருந்து ஏறக்குறைய மூன்று வருடங்கள் உஸ்மான் ஸாஹேப், மெஹர் பாபாவை சந்தித்து, அவருடைய தொடர்பில் இருந்தார். காலப்போக்கில், மாய உலகில் மறுபடியும் மூழ்கி, ஓர் ஈரானியை எவ்விதத்தில்

குருவாக ஏற்றுக்கொள்ள முடியும் என்ற தவறான எண்ணத்தைக் கொண்டிருந்தார்.

ராம்ஜு அப்துல்லா, மன்ஸில்-எ-மீம் திரும்பிச் சென்றதும், நடந்ததை மெஹர் பாபாவிற்கு எடுத்துரைக்க, அன்று மதிய உணவுக்குப் பிறகு, டாக்டர் கனி அந்த ஈரடித்தொடரை எடுத்துச் சொன்னபோது, மெஹர் பாபா அதற்கு விளக்கம் அளித்தார்:

**"உஸ்மான் ஸாஹேப், சொன்னது முற்றிலும் சரியானதே!"**

**"சொர்க்கத்தை ஒருவர் அவருடைய சொந்த முயற்சியால் அடையப்பெற வேண்டும். பிறருடைய ஆதரவு அல்லது உதவியால் அடையக் கூடாது. அதற்குரிய தகுதி இன்றியமையாதது. சொர்க்கம் என்பதும் மாய உலகின் ஒரு பிரிவாகும். அதை அடைவதால் மாயையின் பிணைப்பிலிருந்து விடுபட்டதாக ஆகிவிடாது!**

**"ஆனால், உரிய தகுதியைப் பெறாமல் அல்லது பிறர் உதவியால் சொர்க்கத்தில் நுழைவது என்பது நரகத்தின் நெருப்பில் எரிவதற்கு சமம் அல்லது அதைவிட இன்னும் மோசமானதாகும். சொர்க்கத்தில் அருமையான அனுபவங்களும், நரகத்தில் அதற்கு மாறாகவும் இருக்கும். எதுவாயினும், இரண்டு சூழ்நிலைகளிலும் தடையங்களின் பிணைப்பு இருப்பது உறுதி. சொர்க்கத்தில் தங்க சங்கிலியாலும், நரகத்தில் இரும்பு சங்கிலியாலும் கட்டுண்டு காணப்படும். ஆனால் இரண்டுமே பிணைப்புகள்தான்! ஒரு சங்கிலிக்கு பதிலாக இன்னொரு சங்கிலியால் கட்டுண்டு இருப்பதால் பிறர் உதவியை நாடுவதில் எந்தப் பலனும் இல்லை.**

**"எனவே, உஸ்மான் கூறியது நான் விளக்கியதற்கு இணங்க இருந்தால், அவரது கூற்று மிகவும் சரியானது. உஸ்மான் ஸாஹேப் என்னை அலட்சியப்படுத்தி, நீங்கள் என்னைப் பின்பற்றுவதை இகழ்ச்சியாகக் கூறியிருந்தால், அவருடைய முயற்சி படுதோல்வி அடைந்தது!**

**"என்னுடைய சீடர்களாகிய உங்களுக்கு, சொர்க்கம், நரகம் என்ற பேச்சுக்கு இடமேயில்லை. இறையின்பத்தை அனுபவப்பூர்வமாகக் கண்டறிய, நீங்கள் இரண்டையும் கடந்து, ஆன்மீகப் பாதையில் அடியெடுத்துச் செல்ல வேண்டும்.**

**நீங்கள் எதிர்பார்க்கும் சொர்க்கலோக அனுபவங்கள் மற்றும் நரகத்தின் சாபக்கேடுகள் எனும் கனவை விட, மிக உயர்ந்த ஒன்றை நான் உங்களுக்கு வழங்கியுள்ளேன். என்னுடன் இருப்பதன் மூலம் நீங்கள் உண்மைப்பொருளின் அனுபவத்தை அடையப் பெறும் நம்பிக்கையை நான் உங்களுக்கு அளித்துள்ளேன்; அதாவது பரமாத்மாவை** (எல்லையற்ற இறையுணர்வு) **அனுபவித்து, படைப்பின் ரகசியத்தை அறிந்து கொள்வது. இறையுணர்வை எய்திய ஒரு குருநாதரின் உதவியின்றி, இந்த இறை ஞானத்தை அடையப்பெறுவது சாத்தியமற்றது. ஒரு பரிபூரண குருநாதரின்**

**வழிகாட்டுதல் இல்லாமல், தனிப்பட்ட முயற்சிகள் எவ்வகையிலும் பலனளிக்காது. ஹபீஸ் கூறியது போல:**

**"வழிகாட்டி இல்லாமல் இறைநிலையை எய்தும்**
**அன்பின் பாதையில் செல்ல முயலாதே!"**
**"நூறுமுறை தோல்வியுற்றேன், நான் அவ்வாறு செய்தே!"**

**"ஒருவனுடைய குறிக்கோள் இறைநிலையை அடைவதாக இருக்கும் வேளையில், வாழ்வில் அவனுடைய ஒரே இலக்கு கடவுளைக் கண்டுகொள்வதாக இருக்குமானால், சொர்க்கம், நரகம் இவற்றைப் பொருட்படுத்துவானேன்? ஹ..பீஸ் கூறியதற்கு இணங்க:**

**"என் உயிர் தோழரை நான் இரண்டு**
**உலகங்களிலும் காணும் போது,**
**சொர்க்கம், நரகம், எழிலணங்குகள்** (தேவதைகள்) **எதுவும்**
**என்னைக் கலங்க வைக்காது."**

**"பாவம்! இந்த உஸ்மான், அவர் என்ன சொல்கிறார் என்று அவருக்கே தெரியாது. ரஸூல்-எ-குதா, தீர்க்கதரிசி முஹமது மட்டுமே அனைத்து முஸல்மான்களையும் சொர்க்கத்தை நோக்கி வழிநடத்த முடியும் என்ற பேச்சு, வறுமையின் இலக்கணம்;** ஆன்மீக அறிவிலியின் **விளக்கம். கடவுளைத் தேடிக் கண்டுகொள்வதற்கு பதிலாக, சொர்க்கத்தின் வாசலில் நுழைவதற்கான வாய்ப்பை, கடவுளிடமே விட்டுவிடுவது, அவருடைய உதவியற்ற நிலையைத்தான் குறிக்கும்;** மேலும், **சுய முயற்சியால் சொர்க்கத்தில் நுழைய முடியாவிடில் அது நரகமே என்று பிறருக்கு போதிப்பதும் கபடநாடகம்,"** என்று கூறி முடித்தார்.

அக்டோபர் 1922ஆம் ஆண்டு, பார்சி இனத்தைச் சார்ந்த புர்ஜர் ஹீர்ஜிபாய் (BURJOR HEERJIBHOY), மெஹர் பாபாவின் தொடர்பில் வந்தார். ஒரு முறை, பாபா அவருடைய வாழ்க்கையில் நடந்த உண்மை விவகாரங்களை மண்டலிக்கு எடுத்துக் கூறும்படி கேட்டுக்கொண்டார். அவ்வப்போது, பல மதம் சார்ந்த ஆதாரங்களை மேற்கோள் காட்டி, கண்கள் கலங்கியபடி அவர் கதையை விவரித்தார்:

"சில வருடங்களுக்கு முன்பு, நான் ஒரு பொறியியல் வல்லுநராகப் பணிபுரிந்து, நிறைய சம்பாதித்து வந்தேன். எப்படியோ, ஆன்மீக வழியில் தடுக்கி விழுந்து, உயர் திறனைப் பெற்று, விடா முயற்சியுடன், நடக்கவிருக்கும் சம்பவங்களை முன்கூட்டியே அறிந்து சொல்லும் ஆற்றலையும் அடையப் பெற்றேன். உண்மையைச் சொன்னால், என்னுடைய பிரார்த்தனை, வேண்டுதல்கள் அனைத்தும், ஏதோ தெரியாத ஒன்றிலிருந்து, உணர்வுபூர்வமான பதிலைத் தரும் வகையில் என்னைத் தூண்டின. காலப்போக்கில், நான் பெற்ற தெய்வீக சாதனைகளை, பங்குச்சந்தைகளிலும், சூதாட்ட முயற்சிகளிலும் துஷ்பிரயோகம் செய்யத் தொடங்கினேன்.

“முதன்முதலில், இந்த சூதாட்டம் மிகவும் லாபகரமாக இருந்தது. பொறியியல் வல்லுநராகப் பணிபுரிய வேண்டிய தேவையில்லை என்று எண்ணி, அவ்வேலையை விட்டுவிட்டு புதிய தொழிலில் முழு கவனத்தையும் செலுத்தினேன். அதிவிரைவில் (தேம்பிய வண்ணம் அழுதுகொண்டே தொடர்ந்தார்) அப்பட்டமான அதிர்ச்சி காத்திருந்தது - இறைவன் தந்த பரிசு என்னை விட்டு முற்றிலும் மறைந்தது!


“இப்போது, எவ்வளவோ முயன்றும் என்னால் அதைத் திரும்பப் பெற முடியவில்லை. இரவும் பகலும் அழுது புலம்பியும் இறைவனிடமிருந்து ஒரு பதிலுமில்லை. நான் பெற்ற செல்வ பலன்களை, சிறிதும் பொருட்படுத்தாமல் இருந்தாலும் - அவன் அரவணைப்பில் இருந்தபோது அடைந்த பேரானந்தத்தை என்னால் விவரிக்க இயலாது.

“இறைவன் அளித்த பெரும் பொருளான முன்னறிவுத் திறனை நான் இழந்தாலும், அதைப் பற்றிய உணர்வுபூர்வமான அகநிலையை இன்னமும் நான் அறிவேன். எனவே, மெஹர் பாபாவைப் பற்றிய அறிமுகமும், விளக்கங்களும் எனக்குத் தேவையில்லை. நான் இழந்ததை ஒரே வினாடியில் எனக்குத் திருப்பித்தர மெஹர் பாபாவால் முடியும் என்பதைத் திடமாக நம்புகிறேன். அவர் அவ்வளவு உன்னதமான நிலையில் இருப்பவர்!”

ஹீர்ஜிபாயின் வெளிப்படையான விளக்கம் பாபா மற்றும் அனைத்து சீடர்களையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

ஒரு நாள், நவல் தலாட்டி, பாபாவிற்கு உதவியாக இருக்கும் என்ற எண்ணத்தில், காக் ஸாஹேபிடம் இருந்த பழைய மோட்டார் காரை வாங்க சிபாரிசு செய்தார். நூறு ரூபாய்க்கு வாங்கி முன்னூறு ரூபாய் பழுதுபார்க்கச் செலவு செய்ய வேண்டியதாயிற்று. அக்டோபர் 5ஆம் நாள், பெஹராம்ஜி, குஸ்தாஜி, முன்ஷி ரஹிம் மூவரையும் மெஹர் பாபா அழைத்துக்கொண்டு, சோதனை ஓட்டத்திற்காக மும்பையிலுள்ள மலபார் மலைக்குச் சென்றார். திரும்பி வந்ததும் பாபா இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்: “**காரின் இயந்திரம் எழுப்பும் சத்தத்தில் ஒருவர் இவ்வளவு கத்திப் பேச வேண்டியதாக உள்ளது! இரண்டு முறை இயந்திரம் நின்று விட்டது; அதன் கர்ஜனையில் முன்ஷி ரஹிம் உரத்த குரலில் ஓட்டுனரிடம் கத்தி கத்திப் பேச வேண்டியதாயிற்று!**”


நவல் தலாட்டி மன்ஸிலுக்கு வந்ததும், மெஹர் பாபா வேடிக்கையாகக் கூறினார்: “**நீங்கள் சொன்னது முற்றிலும் சரிதான்; உண்மையிலே மிக அற்புதமான கார். நீங்கள் நிஜமாக ஓர் அதிசயமான வல்லுநர்தான்! ஹார்ன் உபயோகப்படுத்தாமல், அதிவேகமாக, நாங்கள் மலபார் மலையில் வண்டியை ஓட்டிச் சென்றோம் என்றால் நீங்கள் நம்பமாட்டீர்கள். இது உண்மை. வண்டியின் சத்தத்தில் வழிப்போக்கர்கள் விலகிக் கொடுத்து, இந்த மாதிரி வண்டியை ஓட்டும் முட்டாள் யாரென்று அறிய திரும்பித் திரும்பிப் பார்த்ததில் அவர்களின் கழுத்து சுளுக்கிக் கொண்டிருக்கும்.**”



கய்குஷ்ரு மாஸா,
ஸூனாமாசி,
கோர்ஷெத்



பெண்டு



தீனா & நவல் தலாட்டி



ஸோமா தேசாய்

ஒரு நாள் மதிய உணவுக்குப் பிறகு, டாக்டர் கனியை, மெஹர் பாபா அவரது கால்களை அழுத்தி விடுவதற்காக அழைத்தார். அவ்வேளையில் பாபா, **“கடவுள் உனக்குத் துணையாக இருக்கட்டும்”** என்று கூறினார். டாக்டர் கனி உடனே வாய்விட்டு சத்தமாக சிரிக்க, பாபா அதன் காரணத்தை வினவினார். டாக்டர் கனி, “சாதாரணமாக, உங்கள் வார்த்தைகளில் மறைந்திருக்கும் உள் அர்த்தங்களைப் புரிந்துகொள்வது மிகவும் கடினம். நேற்றுதான் சொன்னீர்கள், நான் தோற்றத்தில் நல்ல உடல் ஆரோக்கியத்துடனும், எனது கழுத்தில் சதைப்போட்டு திடகாத்திரமாகவும் இருக்கிறேன் என்று! இப்போது பாருங்கள், இன்று எனது கழுத்தில் சுளுக்குப் பிடித்துக் கொண்டது. வலியால் அவதிப்படுகிறேன்.” என்று சொன்னதைக் கேட்டு பாபா சிரித்தார்.

டாக்டர் கனிக்கு ஆச்சரியமான, ஆழமான விஷயங்களை அறிந்து, புரிந்துகொள்வதில் ஆர்வம் அதிகம். ஒரு முறை பாபாவிடம், “உலக அறிவு, கல்வி மற்றும் புத்திசாலித்தனம் - ஒருவன் இறைநிலையை அடைவதற்கு முன்னும் பின்னும் - இவைகளைப் பற்றி நீங்கள் எனக்குச் சொல்லியிருக்கிறீர்கள்!” என்று மேலும் விளக்கத்தை எதிர்நோக்கும் விதத்தில் கூறினார்.

மெஹர் பாபா தெளிவுற விளக்கினார்:

**“அறிவு இரண்டு வகை: ஒன்று, இப்பூவுலகுடன் தொடர்பான அறிவு, இரண்டு, இறைநிலையில் எய்தும் இறை ஞானம். ஒருவர் இறைநிலையை எய்திய பின்னர் - இவ்வுலகம் தொடர்பான பொருட்களைக் கையாளும்போது - அவருடைய சொல்லும், செயலும், இறைத்தன்மையைப் பிரதிபலிக்கும். எனவே, அவ்வாறான ஒருவரின் உரைகள் மற்றும் செயல்களில் ஒருவகையான இரகசியமும், பெருமையும் நிறைந்திருக்கும். ஆனால் சாதாரண மனிதர்கள், வழக்கமாக இதைக் காணத் தவறிவிடுவார்கள். உதாரணமாக, ஒரு கிராமத்து மனிதன், அவனது கையில் கிடைத்த மாணிக்க கல்லின் மதிப்பை அறியமாட்டான். அதேவேளை அணிகலன் செய்பவன் ஒருவன், அதன் மதிப்பை அறிந்து அதனைப் பொக்கிஷமாகக் காப்பான்.**

**“இறைநிலையை எய்திய ஒருவர், தெய்வீக ஞானத்தின் பலத்தால், அதை எந்நிலையிலும் சிறிதளவும் பிரயோகிக்காமல், உலக அறிவை நல்வழியில் பயன்படுத்த முடியும். எனவே, ஒரு சாதாரண மனிதன் மற்றும் இறை ஞானிகள் - இவர்களின் சொல்லுக்கும், செயலுக்கும் இடையே உள்ள வேறுபாடு மிகப்பெரியதாகும்.”**

அவ்வாறு உரையாடிக் கொண்டிருந்த போது, பாபா, டாக்டர் கனியிடம் சிறிது தேங்காய் எண்ணெயை எடுத்து வரச்சொல்லி, அவரே கனியின் கழுத்துப் பகுதியில் எண்ணெயிட்டுத் தடவி, “**இனிமேல் உனக்குக் கழுத்துச்சுளுக்கு என்ற பாதிப்பு வராது!**” என்றார்.

அதேநாள் மாலையில் சில சீடர்கள் மெஹர் பாபாவிடம், இறைநிலையை அடைந்த ஒருவரின் இயற்கை குணத்தில் எவ்விதமான

மாற்றங்கள் தோன்றும்? என வினவினர். நீண்ட நெடிய வாக்குவாதத்தைத் தொடர்ந்து, இறுதியில் பாபா, சத்குரு ஹ்ஃபீஸின் தனித்தன்மை மற்றும் குணநலன்களை எடுத்துக்காட்டாகக் கூறி விளக்கினார்:

**“ஒருவரின் இயல்பான குணம், அவர் இறைநிலையை அடைந்த பின்னரும் மாறாமல் அப்படியே, ஆனால் வேறுபட்ட விதத்தில் இருக்கும். சாதாரண மனித நிலையில், அவருடைய கோபம், சாபம், கடுஞ்சொற்கள் மற்றும் பழகும் விதம், அகந்தையின் பொருட்டு, தானாகவே வெளிப்படும். எங்கு அகந்தை இருக்கிறதோ அங்குக் கடவுள் இல்லை. எங்குக் கடவுள் இருக்கிறாரோ அங்கே அகந்தை இல்லை. இக்காரணத்தால், ஒரு சத்குருவின் சொற்களும் செயல்களும் அகங்காரமற்றதாக இருக்கும்.”**

**“சத்குருவின் தனிப்பட்ட குணமும், மனோபாவமும், இறைநிலையை அடைந்த பிறகும் மாறாமலிருக்கும். மேலும் எப்போதேனும், சில மனநிலையில் அதை வெளிப்படுத்தும் வேளையில், பிறருக்கு சிறந்த பலனை விளைவிக்கும்.”**

**இதுவே ஹ்ஃபீஸின் ஈரடி கவிதையின் பொருள்:**

**ஒரு சமயம் நான் பலவிதமான பொருட்களைக் காண ஏங்கினேன்!**
**ஆனால் உன்னைப் பார்த்ததும்,**
**நான் வேறு எதையும் காணும் ஆர்வமின்றி போனேன்!**

**“அதாவது பார்வை என்னும் இயல்பு இன்னமும் உள்ளது. முதலில், ஹ்ஃபீஸ் பலவித வேறுபட்ட பொருட்களைப் பார்க்க ஏங்கினாலும் இறை ஒளியைப் பார்த்த பின்பு, கடவுளை மட்டுமே பார்க்கும் ஆர்வத்தில் இருந்தார். அதாவது, பார்க்க வேண்டும் என்ற ஆசை இன்னமும் இருக்குமென்றாலும், அகந்தை அழிந்த பின்னர் அந்த ஆசையில் மாற்றம் ஏற்படும்.”**

**“ஒரு மனிதன் கோபத்தில் பிறரை அறையும் பழக்கம் உள்ளவன் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவனுடைய இயல்பான குணம், அவன் சாதுவான பின்னரும் அப்படியே இருக்கும். ஆனால், அதனால் வரும் மாற்றம் கற்பனைக்கு அப்பாற்பட்டது. இப்போதைய கோபத்திற்குப் பின்னால் எவ்வித சுயநலமும் இல்லை. இது இறைவனைச் சார்ந்த ஒரு சாதாரண உணர்ச்சி வேகம். இது தெய்வீக ஓட்டத்திலிருந்து வருவது. இதன் தொடர்பில் வருபவர்கள் பெரிதும் பயனடைவர்.”**

இவ்வாறு விளக்கம் அளித்த பிறகு, மெஹர் பாபா, சற்று ஓய்வெடுக்கும் எண்ணத்தில், முன்ஷி ரஹிமுடன் ஒரு மணி நேரம் சீட்டு விளையாடினார். அப்போது, திடீரென வருத்தத்துடன், இந்து மண்டலியை, மதிய உணவை முழுவதுமாக உண்ணாததால், குறை கூறுவது போலத் திட்டினார். கோபத்தில் பாபா, துரதிர்ஷ்டமான வார்த்தைகளை அர்ஜுன் ஸுப்பேக்கர் மீது வீசினார்: **“உனது குடும்பம் தொற்று நோயால் அழிந்துவிடும்!”** என்று பாபா கூறியதைக் கேட்டு அர்ஜுன் அதிர்ச்சியடைந்தார்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு, மண்டலியுடன் கிட்டி புள் விளையாடிக் கொண்டிருந்த வேளையில் மெஹர் பாபா, இப்படி ஒரு தொற்று நோய் பூனா நகரைத் தாக்கும் என்று முன்கூட்டியே அறிவித்தார். 1922, அக்டோபர் 7 அன்று பாபாவின் வார்த்தைகளுக்கு இணங்க, அர்ஜுன் ஸுப்பேக்கரின் மருமகன் இந்நோயால் காலமானதாகப் பூனாவிலிருந்து தொலைத்தந்தி வந்தது. இதுபோன்ற பேரிடர் வரும் என்பதை மெஹர் பாபா சில நாட்களுக்கு முன்பே குறிப்பால் உணர்த்தியதை அர்ஜுன் சோகமாக ஒப்புக் கொண்டார். என்ன செய்வது? முன்கூட்டியே அறிந்திருந்தாலும், தற்போதைய வேதனையை அது நிவர்த்தி செய்யமுடியுமா? சில காலங்களுக்கு முன்னர் அவர் மனைவியை இழந்தார். இப்போது இன்னும் ஓர் இழப்பு. மனைவியை இழந்தபோது, மெஹர் பாபாவின் அறிவுறுத்தலுக்கு இணங்கி அர்ஜுன் வருத்தத்தை வெளிப்படுத்தாமல், இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள அனுமதியும் கோராமல் அமைதியாக இருந்தார். ஆனால் இப்போதைய இழப்பு அவரைப் பெரிதும் பாதித்தது. இரண்டு நாட்களுக்காக பூனா சென்று வர அனுமதி கோரினார். பாபாவும் அதற்கு சம்மதம் தெரிவித்து அனுப்பி வைத்தார்.

மெஹர் பாபா அனைத்து இந்து மண்டலியையும் பின்னர் அழைத்து **"உங்கள் குடும்பத்தில் ஒருவரேனும் இக்கொடும் நோயால் உயிர் துறக்க நேரிடும்! உங்களில் எவரேனும் செல்ல விரும்பினால் இப்போதே செல்லலாம். இதற்குப் பின்னர் உங்கள் இல்லங்களுக்குச் செல்வதைப் பற்றிய எண்ணம் வரக்கூடாது"** என்று உறுதியாகத் தெரிவித்தார். அர்ஜுன் ஸுப்பேக்கரைத் தவிர அனைவரும் மன்ஸிலில் இருப்பதாகத் தெரிவித்தனர்.

மன்ஸில்-எ-மீமில் சூழ்நிலைகள் பதட்டமாக இருந்தன. இந்து மண்டலியுடன் பேசி ஒரு தீர்வுக்கு வந்த பின்பு, மெஹர் பாபா, குஸ்தாஜியை எதிர் கொண்டு அவர் உணவு உண்ணும் பழக்கமுறையைப் பற்றி வினவினார்: **"நான் கூறும் அளவுக்கு நீங்கள் ஏன் உணவு உண்பதில்லை? தொடர்ந்து, நீங்கள் ஏன் நான் சொல்வதற்குக் கீழ்ப்படிவதில்லை? கடவுளின் நிமித்தம், நேரத்தைப் பார்க்காமல் பசிக்கும் வேளையில் உடனே சாப்பிடுங்கள். நான் எதுவும் சொல்லவில்லை என்று குறை கூறாதீர்கள்."**

குஸ்தாஜி பதிலாக, "அதைத்தான் நானும் செய்கிறேன்! பசியை உண்டாக்கும் எண்ணத்தில் தாறுமாறாக மன்ஸிலில் நான் அங்குமிங்கும் அலைந்து திரிகிறேன். தினமும் காலையில் பத்து மணிக்கு நீங்கள் என்னை உண்ணுமாறு அறிவுறுத்திய ஒரு கிண்ணம் நெய் எனது பசியைக் கொன்றுவிடுகிறது. இடைப்பட்ட நேரங்களில் கூழும், களியும் சாப்பிட எனக்கு விருப்பமில்லை" என்று கூறினார்.

பாபா அவரைக் கண்டித்தார்: **"சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லாதீர்கள். இதுதான் எனக்கு வேதனையைத் தருகிறது. நான் சொல்வதை எப்படிச் செய்யலாம் என்பதே உங்கள் நோக்கமாக**

**இருக்கவேண்டும். நான் ஏதாவது சொல்லும்போது நீங்கள் அதைக் காதில் வாங்குவதில்லை. அதனால் தவறுக்கு மேல் தவறு செய்கிறீர்கள்.**"

குஸ்தாஜி உடனே எரிச்சலடைந்து, "உங்கள் விருப்பங்களுக்கு இணங்கி நான் அனைத்தும் செய்கிறேன் என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும்!" என்று பதில் அளித்தார், "என்னுடைய வயிற்றின் மாற்றங்களைப் பொறுத்து, சில சமயங்களில் நான் குறைவாகவும், சில நேரங்களில் அதிகமாகவும் சாப்பிடுகிறேன். என்னால் சாப்பிட இயலாததை ஏன் கட்டாயப் படுத்துகிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை. என் உடலுக்கு முடியாமல் போனால், காலையிலிருந்து இரவு வரை நான் மன்ஸிலில் செய்யும் சின்ன சின்ன சில்லறை வேலைகளை யார் செய்வார்?"

குஸ்தாஜியின் பதில் பாபாவை எரிச்சலடையச் செய்தது: "**நீங்கள் புரிந்து கொண்டது அவ்வளவுதான் என்பதை உங்கள் வார்த்தைகள் தெளிவு படுத்துகின்றன. நான் உங்களிடம் ஒன்றைச் செய்யச் சொல்லும் போது அதன் விளைவு மற்றும் தாக்கங்களை அறியாமலிருந்தால் நான் ஒரு சத்குருவாக இருக்க முடியாது. இந்நிலையில், என்னோடு இருப்பதால் எந்த பலனும் இருக்காது**!"

குஸ்தாஜி உடனே, "உபாஸனி மஹாராஜின் கட்டளைப்படி நான் உங்களிடம் வந்து, நீங்கள் கூறுவதையெல்லாம் கேட்டு, கீழ்ப்படிந்து நடந்து வருகிறேன். அதற்காகவே நான் உங்களுடன் இருக்கிறேன்!"

பாபா இந்த பதிலை விரும்பாமல் குஸ்தாஜியைக் கண்டித்தார்: "**என்னுடன் இருக்கும்போது, அதைத்தான் நீங்கள் செய்யவில்லை. மாறாக, என்னை உங்கள் விருப்பப்படி இருக்கச் சொல்கிறீர்கள். இப்போதிலிருந்து, நான் உங்களிடம் எதுவும் சொல்லமாட்டேன். அனைத்தையும் நீங்களே திட்டமிட்டுச் செயல் படுத்துங்கள்.**"

குஸ்தாஜி உடனே, "உண்மையிலே நிலைமை இப்படி இருக்குமெனத் தெரிந்திருந்தால், நான் உங்களிடம் வந்திருக்க மாட்டேன். என்னைச் சோதிப்பதே உங்கள் நோக்கமாக இருக்குமானால், அதுபோன்ற ஒரு தேவை எனக்கில்லை, ஏனெனில் ஷிர்டி சாய் பாபா மற்றும் உபாஸனி மஹாராஜ் இருவரிடமுமிருந்து நான் அளவிலா துன்பங்களை அனுபவித்துள்ளேன். நீங்கள் அனுபவமில்லா புதியவர்களை இப்பாதையில் சோதனை செய்யுங்கள். இத்தகைய சோதனைக்குள்ளாக வேண்டிய தேவை எதுவும் எனக்கு இல்லாத போதும், நான் இங்கே அனைவருடனும் இருந்து உதவி வருகிறேன். இப்போது, அனைத்தும் சீராகச் சென்று கொண்டிருக்கும் போது, இரண்டு மூன்று நாட்களுக்கு ஒரு முறை இப்படி ஏதாவது பிரச்சினையை முன்வைப்பது, நம்மிடையே விவாதத்தையும், கோபத்தையும் விளைவிக்கிறது. இந்த சூழ்நிலைகள் உற்சாகம் மற்றும் மன அமைதியைக் குலைக்கிறது" என முறையிட்டார்.

குஸ்தாஜியின் விவாதங்களைக் கேட்டு, மெஹர் பாபா ஆறுதல் கூறினார்: "**உங்களுக்கு என்னோடு இவ்வளவு நெருக்கமான தொடர்பு இருக்கும் நிலையில், நீங்கள் நிஜத்தில் எனது 'இருண்ட பக்கமாக'**

**இருக்கிறீர்கள். என்னுடைய கட்டளைகளும், செயல்களும் குறிப்பான நோக்கத்துடனும், அர்த்தமற்றும் இருப்பதாக நினைப்பது உங்களுக்குத் தகுமா? அனைத்து சீடர்களையும் ஒன்றிணைத்து என்னுடன் இருக்கச் செய்வது எவரையும் சோதனைக்குள் ஆக்குவதற்காக அல்ல. என்னுடைய இறை அனுபவத்திற்குப் பின்னரும், உபாஸனி மஹாராஜ் என்னைக் குப்பை கூளங்களில் அமரச் செய்தார். அதற்கு என்ன தேவை? அதை நான் எனக்கு வந்த சோதனையாகக் கருதியிருப்பேனா? நான் சொல்வதை மட்டுமே செய்யச் சொல்கிறேன். அவ்வாறு செய்வது என்னுடைய ஆன்மீகப் பணிக்கு உதவியாக இருக்கும்.**"

"நான், எப்பொழுதும், உங்கள் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய தயாராக உள்ளேன்" குஸ்தாஜி கூறினார், "மேலும், என்னுடைய தெளிவான மனசாட்சிக்கு இணங்கினாற் போல், உங்கள் கட்டளைகளுக்குத் தவறாமல் கீழ்ப்படிந்து வருகிறேன்."

இவ்வேளையில், மெஹர் பாபா இறுதியாகக் கூறினார்: "**என்னுடைய செயல்களைப் புரிந்துகொள்ள முயற்சிக்காதீர்கள். அதன் ஆழத்தை நீங்கள் கண்டறிய முடியாது. ஒரு கோப்பை விஷத்தைக் கொடுத்தால் கூடத் தயங்காமல் அருந்திவிடுங்கள். அவ்வாறு செய்வதால் நீங்கள் எனது ஆன்மீகப் பணியின் பளுவைக் குறைக்க இயலும்.**"

பாபாவின் வார்த்தைகளைக் கேட்டு குஸ்தாஜி அமைதியானார். ஆனால் மனம் படபடத்தது. பாபா அவரைத் தன் '**இருண்ட பக்கம்**' என்று குறிப்பிட்டதை மண்டலிக்கு ஒரு முறை விளக்கினார்: "**குஸ்தாஜி, பிற அனைவரையும் போல் அல்லாமல், இறைநிலையை எய்தும் முழுத் தகுதியையும் அடையப்பெற்றவர். அவரது முகத்திரையைக் கிழிப்பது மட்டுமே எஞ்சியுள்ளது.**" ஆனால் குஸ்தாஜி இதை இவ்வாறு உணர்ந்தார்: பாபாவின் 'இருண்ட பக்கம்' - அதாவது பாபாவின் 'நிழல்' என்று குறிப்பிட்டது - 'இறைவனை அடைவதற்கு முன்னர், இருளில் மீண்டும் ஆழமாக மூழ்கடிக்க வைக்கிறார்.'

இவ்விதமான கிளர்ச்சிக்குப் பிறகு, பாபா, டாக்டர் கனியின் அறைக்குச் சென்று, நடந்த சம்பவத்தைக் குறித்து அவர் என்ன நினைத்தார் என்பதை வினவினார். டாக்டர் கனி பதிலுக்கு, "ஒருவர் எவ்வளவுதான் நீண்டகாலமாக, ஆன்மீகப் பாதையில் அதீத கஷ்டங்களை எதிர்கொண்டாலும், மொத்தத்தில் அவர், இறை அனுபவம் எதுவுமில்லாத ஒரு சாதாரண மனிதனே! ஆகையால் அவருடைய சகிப்புத்தன்மை மற்றும் பொறுமைக்கு ஓர் எல்லையுண்டு. இன்று குஸ்தாஜி அவருடைய மனதைத் திறந்து உள்ளத்தின் உணர்வுகளை வார்த்தைகளால் கொட்டிவிட்டார்" என்றார்.

மெஹர் பாபா மேலும் விளக்கிக் கூறியதாவது: "**எனக்கு உதவுவதில் குஸ்தாஜி நேர்மையான முறையில் முயற்சித்தாலும், அவர் வழியிலே செயல்படுவதால், தவறு நிகழ்கிறது. எனது தனிப்பட்ட தேவைகளில் கவனம் செலுத்தி, இரவும் பகலும் என்னுடைய சௌகரியத்திற்காக**

**அயராது உழைக்கிறார். ஆனால், அனைவரும், அனைத்து சூழ்நிலைகளிலும் உள்ளடக்கத்துடன் கீழ்ப்படிய வேண்டியது அவசியம்"** என்று கூறி, அந்த சர்ச்சைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தார்.

அக்டோபர் 2ஆம் நாளிலிருந்து இறைவனின் நாமத்தை, அமைதியாக மனதில் தொடர்ந்து உச்சரிக்கும் பழக்கம் தொடங்கியது. சீடர்கள் 'எஸ்தான்', 'அல்லா' அல்லது 'ராம்' போன்ற நாமத்தை அவரவர் இருப்பிடத்தில், உரிய முறையில் அமர்ந்து, ஆழ் மனதில் உச்சரிக்கும் அவ்வேளையில், மெஹர் பாபா, அவரது அறையில் தனது தலையை தரையில் தொடர்ந்து அறைந்த வண்ணம் இருந்தார்!

சில நேரங்களில், மன்ஸிலில் பிறரிடம் பேசிக்கொண்டு இருக்கும்போது தனது கண்களை மேல்நோக்கிச் சுழற்றி - மூன்றாம் கண்வழியாகப் பார்ப்பது போல் - ஆழ்ந்த சுவாசத்தில், பார்வையைக் கீழ்நோக்கிச் செலுத்தி, தலையைக் கண்ணாடி ஜன்னல்கள் அல்லது கதவுகளில் அறைந்தார். ஒரு முறை அவ்வாறு செய்யும்போது ஜன்னல் கண்ணாடி சுக்குநூறாக சிதறியது. காயத்தை வெளியே தெரியாமல் கைக்குட்டையால் கட்டி மறைத்தார்.

ஏதாவது ஒரு வழியில், மெஹர் பாபா, உடல் நிலை சரியில்லாமல் அல்லது இவ்வாறு தலையை அறைவதன் மூலம் சிரமங்களை அனுபவித்தாலும், தனது செயல்பாடுகளை மின்னல் வேகத்தில், உற்சாகமான விழிப்புடன் செய்து வந்தார். அனைவரின் உடல் மற்றும் மன நலன்களைக் கண்காணித்து, சின்ன சின்ன விஷயங்களில் உன்னிப்பான கவனத்துடன் இருந்தார். அதீத சிரமங்களை சந்தித்தாலும், மண்டலியுடன் விளையாட்டுகளில் கலந்துகொண்டு அவர்களைவிட சுறுசுறுப்பாகவும், திடகாத்திரமாகவும், இருப்பதை எடுத்துக் காட்டினார்.

மெஹர் பாபாவின் அனுமதியுடன், சீடர்களில் ஒருவர் வஜிப்தர், மும்பையின் புறநகர்ப்பகுதியில் அமைந்த ஜுஹு என்ற இடத்திற்கு, அக்டோபர் 8ஆம் நாள் சுற்றுலா செல்லும் திட்டத்தில் ஒரு பங்களாவை வாடகைக்கு எடுத்தார். அன்று காலையில், பாபாவின் உடல் நிலை சீரில்லாமல் அவதிப்பட்டார். இருந்தாலும், பாபா, "**விடுமுறை நாட்களில் பள்ளி சிறுவர்கள் எவ்வளவு கோலாகலத்துடன் சுற்றுலா செல்வார்களோ அதுபோல நாமும் ஜுஹு சென்று வருவோம்**!" எனக் கூறினார்.

ஜுஹு சென்றதும், பாபா சிறிது ஓய்வுக்குப் பிறகு, மண்டலியுடன் தென்னைமரத் தோப்பில் ஹாக்கி விளையாடினர். அதற்குப் பிறகு, பிரம்மாண்டமான மதிய விருந்து, பூரி, உருளைக்கிழங்கு, மற்றும் இனிப்பு பண்டங்களுடன் வழங்கப்பட்டது. உணவிற்குப் பிறகு, பாபா வெப்பம் அதிகமாக இருந்ததால் அனைவரையும் பங்களாவுக்குள்ளே தங்குமாறு அறிவுறுத்தினார்.

மதியம் இரண்டு மணியளவில் பாபா, டாக்டர் கனியை அனுப்பி அனைவரும் என்ன செய்கிறார்கள் எனப் பார்த்து வரும்படி அனுப்பினார்.

அனைவரும் பங்களாவில் அங்குமிங்குமாக சோ:ஃபாக்களிலும் நாற்காலிகளிலும் அமர்ந்து நகைச்சுவையாகப் பேசியும் பாடிக்கொண்டும் இருந்தனர். '**சொகுசாக சோ:ஃபாக்களில் சாய்ந்து ஓய்வெடுப்பவர் யார்**' என்று டாக்டர் கனியிடம் பாபா கேட்க, அவர் ருஸ்தம், சதாஷிவ் இருவரையும் குறிப்பிட்டார். பாபா உடனே அனைவரையும் அழைத்து நெடுநேரம் கண்டித்து அறிவுரை வழங்கினார்:

**"என்னுடைய இந்தக் கஷ்டமான சூழ்நிலையிலும், நான் உங்கள் அனைவரையும், புத்துணர்வைத் தரும் ஒரு மாறுதலுக்காக, இங்கே அழைத்து வந்தேன். உங்களுக்காகவே நான் இந்தக் கஷ்டங்களுக்கு ஆளாகிறேன். ஆனால் நான் சிரமப்படும்போது நீங்கள் சுகமாக அனுபவிக்கிறீர்கள். நான் இந்த மன்ஸிலில் இருப்பதால் அப்படி என்ன வித்தியாசமாக எனக்கு நடந்துவிடும்? எனவே, நான் இவ்வாறு சிரமப்படுவதை, நீங்கள் பொருட்படுத்தாதது, எனக்கு வருத்தத்தைத் தருகிறது. இங்கே நான், அதீத வயிற்று வலியால் தரையில் புரண்டுக் கொண்டிருக்கிறேன். காலையிலிருந்து நான்கு முறை கழிவறைக்குச் சென்று வந்தேன். ஆனால் அதே வேளையில் நீங்கள் சோ:ஃபா நாற்காலிகளில் அநாகரிகமாக உருண்டு புரண்டு கொண்டிருக்கிறீர்கள்.**

**"நீங்கள், வசதியான குடும்பங்களில், எல்லாவிதமான சொகுசு மற்றும் சௌகரியங்களுக்குப் பழக்கப் பட்டவர்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால், இப்போது நான் கேட்டதற்கிணங்கி, நீங்கள் அனைத்து சுகங்களையும் துறந்த இவ்வேளையில், மனதைக் கட்டுப்படுத்தி, ஆன்மீக நோக்கத்தை அடையும் வழியை உடனே நினைவு கொள்ளவேண்டும்.**

**"இந்தத் தருணத்தில், நீங்கள் சிறையிலிருப்பதாக நினைத்துக் கொள்ளுங்கள். வேறு எதையும் கண்டு கொள்ளாதீர்கள். மேலும், நீங்கள் விட்டுவிட்டு வந்த எதையும் நினைத்து உங்கள் மனதை அலைபாய இடம் தராதீர்கள். இப்படி ஒரு சூழ்நிலை வந்தாலும், ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டாலும், மாய வலையில் மறுபடியும் சிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்.**

**"நீங்கள், எப்படியாகிலும், என்னுடன் இருக்கும்போது, ஆன்மீகப் பாதையில், இவ்விதமான கொடிய துயரங்களும், துன்பங்களும் அனுபவிக்க வேண்டாம். உங்கள் சுயவிருப்பு வெறுப்புகளுக்கு எதிராக சென்றால் போதுமானது! இதுவரையிலும் நீங்கள் விரும்பிய சிலவற்றைச் செய்யாமலும், நீங்கள் விரும்பாத சிலவற்றைச் செய்யவும் வேண்டும்!**

**"உதாரணமாக, பசிக்கும் போது நீங்கள் சாப்பிடுவது வழக்கம். ஆனால் எப்போது உங்களுக்கு சாப்பிட விருப்பமில்லையோ, அப்போது சாப்பிட வேண்டியதாகிறது. அதீத பசி எடுக்கும்போது நீங்கள் உணவைத் தொடக்கூடாது. மேலும், பகலில் நீங்கள் குட்டித் தூக்கம் போடுவது வழக்கம். இப்போது அதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அதுபோல், ஒருபோதும் நீங்கள் உடலால் உழைத்ததில்லை. ஆனால் இங்கே சில**

வேளைகளில் சுட்டெரிக்கும் வெயிலிலும் வேலை செய்யவேண்டியது வரும்.

“இவையெல்லாம் உங்கள் மனதிற்கு எதிராகச் செல்வதற்கு உதாரணம். இப்படியாக நீங்கள் உங்கள் மனதைக் கட்டுப்படுத்த, படிப்படியாகக் கற்றுக்கொள்வீர்கள்.

“புகழ்மிக்க இந்திய தலைவர்களான காந்தி, அலி சகோதரர்களைப் பாருங்கள்! தேசத்தின் மீதுள்ள பக்தி உணர்வாலும், அக்கறையாலும், வாழ்க்கையின் அனைத்து சுகங்களையும் துறந்து, நீண்ட காலம் சிறையில் அடைக்கப்பட்டார்கள். நாட்டு நலனுக்காகவும், உலக நன்மைக்காகவும், உலகம் என்பது வெறும் கனவான போதிலும், இந்தத் தலைவர்கள் அதீத கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள். ஆகையால், எல்லாவற்றிற்கும் மூலகாரணமான கடவுளை அடைய, எவ்வளவு அதிகமான கஷ்டங்களை அனுபவிக்க வேண்டும் என்பதை கற்பனை செய்து பாருங்கள். பெயரளவில் என்னுடன் இங்கிருக்கும் சிறைவாசம் என்பது பத்து மாதங்களுக்கு மட்டுமே! அதில் நீங்கள் உங்கள் மனக்கட்டளைக்கு எதிராகச் செயல்பட வேண்டும். கடவுளை அடைய, குறைந்த பட்சம் நீங்கள் இதையாவது செய்யலாம்.

“ஹ**ஃ**பீஸ் இதைக் குறித்து சிறப்பாகக் கூறியதாவது:

இயல்பான குணம், மனப்போக்கு மற்றும் சிந்தனைகளின் உறைவிடத்தைவிட்டு நீ வெளிவராத வரையில், உண்மைப்பொருளின் பாதையை அடையமுடியாது.

“கடவுளைத் தேடி மக்கள் உலகைத் துறந்து, பெரும் வேதனையால் தங்களை வருத்திக் கொள்கிறார்கள். ஆனால், நீங்கள் மிக எளிதாக, இங்கே, கடவுளை அடைய முடிவதால், உங்களுக்குக் கிட்டிய நல்வாய்ப்புக்கு நன்றி கூறுங்கள். இவ்வுலகில் வாழ்ந்தாலும், நீங்கள் என்னோடு இருப்பதால், மக்கள், உலக வாழ்வை நீங்கள் துறந்து விட்டதாக நினைக்கிறார்கள்.

“இந்த விசாலமான பிரபஞ்சம், அதன் கம்பீரம் மற்றும் அழகு, அத்தனையும் வெறும் கற்பனையே. இத்தனை கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சிகள் மற்றும் அறிவியல்திறன் இருந்தும், படைப்பு என்பது இன்னமும் தீர்வு காணப்படாத, பெரிய புதிர். மின்சாரம், நீராவி போன்ற கண்டுபிடிப்புகளுக்குப் பிறகும், மனித சமுதாயம் இயற்கை மற்றும் அதன் விளைவுகளுக்கெதிரில் உதவியற்றதாக இருக்கிறது.

“சிறந்த வீரர்கள், விஞ்ஞானிகள், மருத்துவர்கள் மற்றும் ஜோதிடர்கள் அனைவரும் இயற்கையின் நியதியான இறப்பிற்கு விதிவிலக்கல்ல. இவ்வுலகில் அனைவருமே திக்கற்ற அறிவிலிகளாகத் தவிக்கிறார்கள். உலக பந்தங்களுடன் பின்னிப் பிணைந்திருப்பது அனைத்துமே போலித்தனமானது. சுவாமி விவேகானந்தர் இதை இப்படி

**வர்ணிக்கிறார்: தாய், தந்தை, குழந்தை, மனைவி மற்றும் நண்பன் என்ற வெற்றுக் கனவு காண்பவன் உண்மைப்பொருளை அறியமாட்டான்!**

**"கடவுள் அனைவருக்காகவும், அனைத்துக்காகவும் இருப்பதால், அவதார புருஷர் அல்லது சத்குரு தோன்றுகிறார். இவர்களைத் தவிர இவ்வுலகில் வேறு எவரிடமும் உண்மையான அன்பு இல்லை. மஹாராஜ் என்னிடம் எவ்வளவு கவலை நிறைந்த ஆர்வம் காட்டுகிறார் என்பதைப் பாருங்கள். என்னுடைய ஆன்மீக சுமைகளைப் பகிர்ந்து கொள்ளும் நோக்கத்தில், என்னை ஸாக்கோரிக்கு வருமாறு எப்போதும் அழைப்பு விடுகிறார்."**

சீடர்களுடன் அப்போது நடந்த கூட்டத்தில் விவாதம், மதங்கள் பக்கமாகத் திரும்பியது. பாபா தொடர்ந்து அதை விளக்கினார்:

**"ஸொராஸ்டரின் புனிதமான தீபத்தை, அவரைப் பின்பற்றுபவர்கள், தாமாகவே ஒளியிழக்கச் செய்தார்கள். அவர், 'ஸுஃபி பாரம்பரியத்தின்' முதன்மையானவர். ஸொராஸ்டர், மறுபடியும் இவ்வுலகில் பிறந்து வருவார் என்றால், அவருடைய வேதத்தைக் கடைப்பிடிக்கும் இன்றைய மக்களின் கோட்பாடுகளைக் கண்டறிய சிரமப்படுவார். இது அனைத்து மதத்திற்கும் பொருந்தும். முஸ்லிம் முல்லாக்கள், இந்து பண்டிதர்கள், ஸொராஸ்டிர தஸ்தூர்கள் மற்றும் கிறிஸ்தவ பாதிரியார்கள் அவரவர் சுயநலத்திற்காக மதத்தின் நிஜத்தன்மையை சிதைத்து விட்டார்கள்."**

விவாதம் இவ்வாறு ஒரு மணிநேரம் தொடர்ந்தது. பூசாரி வர்க்கம் மதங்களை வியாபாரமாக மாற்றி, சடங்கு சம்பிரதாயங்களைச் செயல்படுத்தி, செல்வம் சம்பாதிக்கும் சம்பவங்களைப் பற்றியும் விவாதித்தனர்.

மாலை வேளையில் அனைவரும் பாபா கூறியபடி, வெளியே கிட்டிப்புள் விளையாடினர். பாபாவும் ஆரம்பத்தில் பங்கெடுத்து, அனைவரிடமும் விளையாட்டைத் தொடருமாறு கூறிவிட்டு உள்ளே சென்றார். ஒருமணி நேரத்திற்குப் பின்னர், அனைவரையும் உள்ளே அழைத்தார் பாபா. ஐந்து மணி நேரத்திற்கு முன்னர் உண்ட உணவை வாந்தி எடுத்தார். உணவு சிறிதளவும் ஜீரணமாகாமல் இருந்தது, மருத்துவ நிலைப்பாட்டின்படி டாக்டர் கனிக்கு ஆச்சரியத்தை அளித்தது.

அன்று மாலை மன்ஸில் திரும்புமாறு திட்டமிட்டு, பாபா களைப்பாக இருந்ததால் ரயிலில் பயணம் செய்யாமல், வாடகைக்காரில் குஸ்தாஜி, ஜால், ஸரோஷ், ருஸ்தம் ஆகியோருடன் புறப்பட்டார். பிற அனைவரும் தாமதமாக வந்து சேர்ந்தனர். அன்று பகலில் பன்னிரண்டு முறையும், இரவில் ஏழு முறையும் வயிற்று வலியால் பாபா பெரிதும் சிரமப்பட்டார். இருப்பினும், மறுநாள் நல்ல உடல் நலத்துடன், மகிழ்ச்சியாகக் காணப்பட்டார். இப்படி, புரிந்துகொள்ள முடியாத விசித்திரமான முறையில், ஏற்கனவே பாபா கூறியது போல 'நான்காவது' மரணத்தை சந்தித்து கடந்து சென்றார்.

இறை அனுபவத்தில் தீவிர ஆர்வம் கொண்டு, மன்ஸிலில் அனைத்து மண்டலியும், இறைவன் பெயரை உச்சரித்து, தியானத்தில் இருப்பதற்காக அதிகாலை நான்கு மணிக்கு எழுந்துவிடுவது வழக்கம். ஆனால், இவ்வாறு பல நாட்கள் கடந்தும், எந்தவிதமான இறை அனுபவமும் கிட்டாததால் அனைவரும் மனமுடைந்து, நம்பிக்கையை இழந்தனர். செப்டம்பர் மாத இறுதியில் 'அனுபவம்' கிடைக்கும் என்று மெஹர் பாபா எதிர்மறையாகக் கூறியதை அக்டோபர் வந்த பின்னரும் அடையாததால், பாபாவின் வார்த்தைகளை சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்பதை உணர்ந்தனர்.

அதிகாலையில் எழுந்து கொள்வது என்பது இப்போது பெரும் சிரமமாகத் தோன்றியது. பெஹராம்ஜியின் காலை நான்கு மணி அலாரத்திற்குப் பின்னரும் ஒவ்வொருவர் அறையிலும் சென்று தட்டியெழுப்ப வேண்டிய நிலை. சொல்லப் போனால், அனைவரையும் விழிக்க வைக்கும் பெஹராம்ஜியும் தூக்கத்தில் தள்ளாடி, கதவுகளில் முட்டி மோதி, படிக்கட்டுகளில் தடுக்கி விழுந்து, பாதித் தூக்கத்தில் குளியலறை வாயிலில் நின்று தூங்கினார். ஏனெனில் முப்பது பேருக்கு இரண்டு குளியலறைகளே இருந்தன.

இவ்வேளையில், மெஹர் பாபா மன்ஸிலில் சுகாதாரத்தை மிகவும் வலியுறுத்தினார். மண்டலியின் படுக்கை அறைகள், மேலும் குறிப்பாக சமையலறை, குளியலறைகள், கழிவறைகள் மற்றும் சாப்பாட்டு அறைகள் அனைத்தையும் சுத்தமாக வைக்க உத்தரவிட்டார். பாபாவும் அவருடைய தனிப்பட்ட பராமரிப்பு விவகாரங்களில் உன்னிப்பான கவனத்துடன் இருந்தார். தன்னுடைய துணிமணிகள், போர்வைகள், தலையணைகள் அனைத்தும் அப்பழுக்கற்ற தூய்மையுடன் இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்தினார். அவருடைய சமையலறை தனியாகப் பிரிக்கப்பட்டு, குஸ்தாஜி அங்கே சமையல் செய்து வந்தார். இது மன்ஸிலில் ஆரம்பத்திலிருந்த சூழ்நிலைக்கு நேர்மாறாக இருந்தது. அப்போது மெஹர் பாபா, குஸ்தாஜியுடன் மன்ஸிலுக்கு வெளியிலிருந்த கழிவுநீர் சாக்கடையை வாரத்தில் இரண்டு முறை சுத்தம் செய்வது வழக்கம். நாளடைவில் மற்றும் சில சீடர்களைத் தனது பணியில் பங்கெடுக்கச் செய்தார்.

மன்ஸில்-எ-மீம் சென்ற நாளிலிருந்து அனைவரும், தரை ஈரத்தன்மையுடன் குளிராக இருந்தாலும், தரையில் அமர்ந்தனர். ஆனால் அக்டோபர் மாதம் அனைவரையும் பாபா பாய் விரித்து அமரச் செய்தார். மண்பானையிலிருந்து நீர் எடுக்க உலோகத்தாலான அகப்பை அருகில் தொங்கவிடப்பட்டிருந்தது. அவரவர் கண்ணாடிக் குவளையால் பானையிலிருந்து நேரடியாக தண்ணீர் எடுக்கக்கூடாது. கழிவறை செல்லும்போது காலணியுடன் செல்லவேண்டும் என்ற ஒழுக்க விதிமுறைப்படி மர காலணிகள் அங்கே வைக்கப்பட்டன. சுகாதாரத்தில், இவ்வாறு, கண்டிப்பான மாற்றங்களைக் கொண்டு வந்தார். அனைத்திலும் சுத்தத்தைத் தவறாமல் கடைப்பிடிப்பது புதிய அணுகுமுறையாக இருந்தது.

மேலும் சுகாதாரத்தில் அடுத்தக்கட்ட நடவடிக்கையாக, மலேரியா காய்ச்சலைத் தடுக்க, ஒவ்வொருவரும் ஐம்பது கொசுக்களைக் கொன்று குவிக்க தீர்மானிக்கப்பட்டது. இது மன்ஸிலில் சில சுவாரஸ்யமான காட்சிகளைக் காணும் வாய்ப்பாக அமைந்தது. ஒவ்வொருவரும் மன்ஸிலில், அவரவர் பங்கை முடிக்கும் நோக்கத்தில் அனைத்து மூலை முடுக்குகளிலும், சுவர்களிலும் தாவி தாவி பாய்ந்து, பறக்கும் கொசுக்களை அடித்தனர். கடைசியில் கைகள் முழுவதும் இரத்தக்கறை படிந்து, மாமிசத்திற்காக விலங்குகளைக் கொல்லும் கூடத்திலிருந்து வரும் கொலைக்காரர்கள் போலக் காட்சி அளித்ததாக சிலர் வேடிக்கையாகப் பேசிக்கொண்டனர்.

அக்டோபர் 10ஆம் நாள் மதியம், மெஹர் பாபா, டாக்டர் கனியிடம் இரவு உணவு வேளையில், கொசுக்களைக் குறித்து நினைவு படுத்தக் கூறியிருந்தார். மாலையில், டாக்டர் கனி பாபாவிற்கு நினைவூட்ட முயன்ற போது, பாபா, அவர் உணவை உண்பதுவரை ஒரு வார்த்தையும் பேசக்கூடாது எனக் கூறிவிட்டார். பிறகு, பாபா அவரைத் திட்டினார்: "**நீ எனது கட்டளையைக் கடைப்பிடிப்பதில் தவறி விட்டாய். ஏனெனில், கொசுக்கள் விஷயத்தை நீ எனக்கு ஏழு மணிக்கு நினைவூட்டவில்லை!**"

டாக்டர் கனி பதிலளித்தார்: "நான் அதை மறக்கவில்லை. நான் ஒரு வார்த்தைச் சொல்வதற்கு முன்பே, நீங்கள் சாப்பிட்டு முடிப்பதுவரை பேசக்கூடாது எனக் கட்டளை இட்டீர்கள்!"

பாபா பதிலாக, "**ஆமாம்! நீ பேசக்கூடாது என்றுதான் நான் கூறினேன்! இருந்தாலும், சைகையால் எனக்குத் தெரிவித்திருக்க வேண்டும்!**" எதிர்பாராமல் நடந்தாலும் டாக்டர் கனி அவருடைய தவறை ஒப்புக்கொண்டார்.

மன்ஸில்-எ-மீமில் ஒரு நாள் அனைவரும் பந்து விளையாடினர். ஓர் அறையில் நான்கு சுவர்களிலும் சாய்ந்தபடி அமர்ந்திருந்து, ஒருவர் இன்னொருவர் தலையை இலக்காக வைத்து டென்னிஸ் பந்தை வீச, அதைக் கீழே விழாமல் தடுத்துப் பிடித்தால், அவர் இன்னொருவரை நோக்கி (பாபாவையும் சேர்த்து), அந்தப் பந்தைத் திருப்பி எறியும் வாய்ப்பைப் பெறுகிறார். அனைவருக்கும் அவரவர் சக்திக்கு நிகரான வேகத்தில், (கோப உணர்வோடு தீங்கிழைக்கும் எண்ணத்தில் செய்யாத வரை) பந்தை எறிய உரிமை உண்டு.

பாபாவும், டாக்டர் கனியும் சிறப்பான பந்து வீச்சாளர்கள். பாபா ஒரு பக்கம் பார்த்துக் கொண்டு, இன்னொரு பக்கம் வீசினார். டாக்டர் கனியின் இலக்கு வழக்கமாக சரியாக இருக்கும். ஆனால் பெஹராம்ஜி பந்தைத் தவறவிட்டு அடிக்குமேல் அடி வாங்கினார். இந்த விளையாட்டை அதி வேகத்தில், உற்சாகத்துடனும், அன்புள்ளம் படைத்த ஆனந்த கோஷத்துடனும் விளையாடினார்கள். அனைவரும் புத்துணர்வு பெற்று, பூரிப்படைந்தனர்.

விளையாடும் வேளையில் அனைவரின் முழு கவனமும் விளையாடுவதிலே இருந்தது.

இவ்விதமான செயல்பாடுகள், ஒரு குருநாதரின் ஆன்மீகப் பணியின் ஊடகமாக அமையும். மெஹர் பாபா, தான் ஈடுபடும் அனைத்து செயல்பாடுகளின் - விளையாட்டு, உரையாடல், சொற்பொழிவு, திரைப்படம் பார்ப்பது, கிரிக்கெட் விளையாட்டைப் பார்வையிடச் செல்வது, கோபத்தில் பிறரைக் கண்டிப்பது, அல்லது மண்டலியிடையே சண்டை சச்சரவுகளை உருவாக்குவது - மூலமாக உலகளாவிய ஆன்மீக உட்பணிகளை உன்னதமாகச் செய்து முடித்தார்.

அக்டோபர் 11 அன்று மதிய வேளையில் மெஹர் பாபா, ஆதி மற்றும் டாக்டர் கனியிடம் வெளியிலிருந்த சித்தாரை அதன் பெட்டகத்தில் வைக்குமாறு கூறினார். கடந்த நான்கு மாதங்களாக, சித்தார் வெளியே இருந்த போதிலும், பாபா, திடீரென, தனிப்பட்ட முறையில் கட்டளையிட்டது அனைவருக்கும் வியப்பாக இருந்தது.

ஆதி உடனே சித்தார் பெட்டகத்தைத் திறந்ததும் அதிலிருந்து துர்நாற்றம் வரவே, உள்ளே ஓர் எலி உயிரற்று இருந்ததைக் கண்டார். பாபா கூறியதன் காரணத்தை ஆதி இப்போதுதான் புரிந்து கொண்டார்.

சித்தார் பெட்டியில் எலி இருந்த செய்தியை ஆதி தெரிவித்த போது, பாபா, ராம்ஜூவிடம் அதைக் கிருமிநாசினியால் சுத்தம்செய்யக் கூறி, அவரும் கைகொடுத்து உதவினார். சரியான முறையில் சுத்தம் செய்யாவிடில் மன்ஸிலில் தொற்றுநோய் பரவும் வாய்ப்பை எடுத்துக் கூறினார் பாபா. டாக்டர் கனியிடம் கீழ்காணும் குறிப்பை எழுதி அறிவிப்பு பலகையில் வெளியிடுமாறு அறிவுறுத்தினார்.

**மிகவும் அவசரமான அறிவிப்பு:**

**சித்தார் பெட்டகத்தில் எலி ஒன்று உயிரற்று இருந்தது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. ஏற்கனவே கூறியது போல், அவரவர் அறைகளை அதி சுத்தமாக வைக்காவிடில் தீவிரமான தொற்றுநோய் மன்ஸிலில் பரவ வாய்ப்புள்ளது.**

**மேர்வான்**

**அக்டோபர் 11' 1922**

சற்று நேரத்தில் அந்த அறிவிப்பை நீக்கிவிட்டு கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

**கொப்புளங்கள், சிரங்கு போன்ற தோல்வியாதிகள் வந்தால் அயோடின் டிங்சரைப் போட்டுவிடுங்கள்.**

**மேர்வான்**

அன்று மாலை, டாக்டர் கனி, ஆதி, ராம்ஜூ மூவரும் மன்ஸிலின் முன் வாசற்படியில் அமர்ந்தபடி, மன்ஸிலில் அவர்களின் கஷ்டமான வாழ்க்கையைப் பற்றிக் குறைகூறிக் கொண்டிருந்தனர். முதலில் டாக்டர் கனி தன் மனதைத்

திறந்து, “மெஹர் நம்முடைய கஷ்டங்களை கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து வருகிறார். மாலை வேளையில் தேநீரை நிறுத்தி விட்டார். தூங்கும் நேரத்தையும் குறைத்து விட்டார். உணவு உண்ண விருப்பமில்லாத போதும் நம் வயிற்றில் திணிக்கிறார். காலையில் புதிதாகத் தயார் செய்த ரொட்டி கிடைப்பதில்லை. தினமும் குறைந்தது ஐம்பது கேடுகெட்ட கொசுக்களைக் கொல்ல வேண்டியதாகிறது. ஒவ்வொரு நாளும் புது புது கட்டளைகள். எப்போதுமே நம்மை ஏதாவது செய்ய சொல்லிக் கொண்டிருக்கிறார். சில கணமேனும் மூச்சுவிட முடியாத நிலை” என்று கூறினார்.

ராம்ஜூவும் ஆமாம் என்று தலையசைத்து, சிரமங்களை பாபா அள்ளித் திணிக்கிறார் என்பதை ஒப்புக் கொண்டார். மேலும் டாக்டர் கனி, “மெஹர் நம் மீது உள்ள பிடிப்பை இன்னும் இறுக்குகிறார். அதிகப்படியாக அது வளர்ந்து வருவதை நான் உணர்கிறேன்....” என்ற வாக்கியத்தை முடிக்கும் முன்பே ஆதிக்குத் திடீரென அழைப்பு வந்தது. சிறிது நேரத்தில் டாக்டர் கனி, ராம்ஜூ இருவரையும் பாபா அழைத்தார்.

பாபா, டாக்டர் கனியை வெகுவாகக் கண்டித்தார், “**நீ இங்கு ஒரு வேலையும் செய்வதில்லை. அதே வேளையில், பிறரை சுத்த சோம்பேறியாக இருக்கத் தூண்டுகிறாய்!**” உடனே ஆதி, ராம்ஜூ இருவரையும் அதட்டி, “**அடுத்த பத்து மாதங்களுக்கு நீங்கள் இருவரும் உங்களிடையே பேசக்கூடாது**” என்று கட்டளையிட்டார். இருவரையும் அங்கிருந்து திருப்பி அனுப்பும் முன்பு, பாபா, “**நான் இவ்வாறு கூறியதில் உங்கள் மனங்கள் காயப்பட்டு விட்டனவா?**” என வினவினார்.

ராம்ஜூவும், ஆதியும் ஆமாம் என்று கூற, டாக்டர் கனி “எனக்கு ஒன்றும் அப்படி இல்லை” என்றவர், மேலும் கேலியாக, “நான் அப்படி எதுவும் உணரவில்லை. மாறாக, உங்கள் புதிய கட்டளையைக் கடைப்பிடிப்பதில் நான் தவறிழைக்க நேரலாம் என்ற எண்ணம் என்னில் அலைமோதுகிறது” என்றார். டாக்டர் கனி கூறியது பாபாவிற்கு அவ்வளவு ரசிக்கும் படியாக இல்லை. மேலும் ராம்ஜூ, ஆதி இருவரும் சம்பந்தப்பட்ட கட்டளையை ரத்து செய்து, டாக்டர் கனி அடுத்த பத்து மாதங்கள் மன்ஸிலில் எவரிடமும் பேசக்கூடாது என்ற கட்டளையை அமல் படுத்தினார். கீழ் குறிப்பிட்ட அறிவுறுத்தலை விளம்பரப் பலகையில் எழுதுமாறு ராம்ஜூக்கு உத்தரவிட்டார்.

**தடை உத்தரவு:**

**மன்ஸிலில், இன்றிலிருந்து ஒரு தடை உத்தரவு அமலுக்கு வருகிறது - டாக்டர் கனியுடன் எவரும் பேசவோ, சைகையால், எழுத்தால் அல்லது வேறு ஏதாவது முறையில் எதையும் தெரியப்படுத்தவோ கூடாது.**

மேர்வான்

அக்டோபர் 11, 1922

மாலை உணவு வேளையில், மெஹர் பாபா, டாக்டர் கனியுடன் எவரும், எவ்விதமான தொடர்பும் வைத்துக் கொள்ளாமல், மேலும் அவர் இருப்பதைக் கண்டுகொள்ளாமல் இருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார். அவரை

அங்கிருக்கும் மர பொருட்களில் ஒன்றாகக் கருதும்படியும் எடுத்துக் கூறினார். சில நாட்கள், பாபா முற்றிலுமாக டாக்டர் கனியைப் பார்க்கவோ, அவரிடம் பேசவோ இல்லை. பின்னர் ஒரு நாள் குஸ்தாஜியை அனுப்பி இவ்வாறு கேட்கச் சொன்னார்: "**இப்போதாவது நீ செய்த தவறை உணர்ந்து, ஏதாவது வகையில் வருந்துகிறாயா?**" என்று.

இத்தனையும் நடந்த பின்பு, டாக்டர் கனி விரக்தியடைந்து குஸ்தாஜியிடம், "எனக்கு அப்படி வருத்தம் எதுவுமில்லை!" என்றார்.

மெஹர் பாபா மேலும் கோபமடைந்து டாக்டர் கனியைக் கடுமையாகத் திட்டினார், "**நான் நானாக இருந்தால், உண்மையைச் சொல்ல வைப்பேன்!**" என்று கூறி கீழே குறிப்பிட்டதை அறிவிப்புப் பலகையில் வெளியிட உத்தரவிட்டார்.

**கனியிடம் கொஞ்சமாவது வெட்கம் மிஞ்சியிருந்தால், உடனே மன்ஸிலை விட்டு வெளியேற வேண்டும்.**

- மேர்வான்.

மெஹர் பாபா மன்ஸில்-எ-மீமில் தங்கியிருந்த வேளையில், திருமணமாகி குடும்பம் நடத்தி வந்த சில சீடர்களின் குடும்பங்களுக்கு, பண உதவி செய்து வந்தார். அன்றிரவு அக்டோபர் 11ஆம் நாள், பணம் அஞ்சல் செய்த விபரம் குறித்து, சம்பந்தப்பட்ட சீடர்களை வினவினார். சிலர் இல்லை என பதிலளித்தனர்.

பண ஒப்புகை ரசீதுகள் அனைத்தும் டாக்டர் கனியிடம் இருந்தன. அவர் உடனே அதை எடுத்து வந்து, அஹமத் கான், கொண்டிராம் இருவரின் கைகளில் கொடுக்க, இவ்விதமான பரிமாற்றத்தைக் கண்டு பாபா, கோபமடைந்தது போலத் தோன்றியது; மூவரையும் உடனே மன்ஸிலிலிருந்து வெளியேற உத்தரவிட்டார்! கொண்டிராம் பயத்தில் நடுங்கினார். அஹமத் கான் பதட்டத்தில் வியர்த்துப் போனார். அதே வேளை டாக்டர் கனி எதிர்ப்பின்றி கட்டளையை ஏற்றுக்கொள்பவர் போல் அமைதியாக நின்றார். சற்று நேரத்தில் மெஹர் பாபா மூவரையும் அழைத்து, மன்னித்தார். மெதுவாக மறுபடியும் மன்ஸிலில் மகிழ்ச்சிகரமான சூழ்நிலைத் திரும்பியது.

அப்போது டாக்டர் கனியை அழைத்து பாபா அமைதியாக எடுத்துரைத்தார்: "**நீ பூனா சென்று அங்கேயே தங்குமாறு கட்டளையிடுகிறேன்; நிரந்தரமாக அல்ல; பெட்டி படுக்கைகளை உன் அறையிலே வைத்துக் கொள்ளலாம்; மாதத்தில் ஒரு நாள் இங்கு வந்து என்னுடன் இருக்கலாம். என்னுடன் உள்ள நெருக்கம் அப்படியே, பாதுகாப்பாக இருக்கும். உனக்காக செய்யவேண்டிய அனைத்தையும் நான் நிச்சயமாகச் செய்வேன்.**"

டாக்டர் கனி மன்றாடி வேண்டினார், "நான் உங்களின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும், ஆனால் பூனாவில் இருந்து கொண்டு, மாதத்தில் ஒரு நாள் மட்டும் உங்களுடன் இருப்பது எனக்கு அவ்வளவு மகிழ்ச்சி அளிப்பதாக இல்லை. நான் அங்கே என்ன செய்வேன் என்று புரியவில்லை."

பாபா உடனே, “**அப்படியானால் என்னுடைய கடைசி கட்டளை உன் மனதை வருந்த செய்து, எதையோ உணர்ந்திருக்கிறாய் என்றுதானே அர்த்தம்?**” என்றதும், டாக்டர் கனி அதை மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டு ஆமாம் என்று பதிலளித்தார். பாபா உடனே டாக்டர் கனியிடம் இதை விளம்பர பலகையில் அறிவிக்கக் கூறினார்.

**கனி, ஆரம்பத்திலிருந்தே மன சஞ்சலத்தில் இருந்ததை மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டதால், அவர் மன்னிக்கப்படுகிறார்.**

மேர்வான்

அக்டோபர் 11,1922.

மன்ஸில்-எ-மீமில் நிலவிய பதட்டமான சூழ்நிலை விலகியது. அனைவரும் நிம்மதியில் பெருமூச்சு விட்டனர். அதற்குப் பிறகு, பாபா டாக்டர் கனியிடம் இதை விளம்பரப் பலகையில் வெளியிடக் கூறினார்.

**நான் உங்களை வேண்டிக் கேட்கிறேன்; தீய எண்ணங்களுக்கு உங்கள் மனங்களில் இடம் கொடுத்து எதையும் பேச்சிலோ, செயலிலோ வெளிப்படுத்தாதீர்கள்!**

மேர்வான்

அவதார புருஷரின் அன்பு மற்றும் இரக்கத் தன்மையைப் புரிந்துகொள்வது கிட்டத்தட்ட சாத்தியமற்றது. அன்பால் தன்வசம் ஈர்க்கப்பட்ட அனைவரின் அகந்தையையும் சிதறடிக்க, உறை வாளைத் தயார் நிலையில் வைத்துள்ளார். இந்நிலை இவ்வாறு விளக்கப்படுகிறது:

ஆன்மீகப் பாதையில் அடியெடுத்து வைப்பது வாள் முனையில் நடப்பது போலாகும். அறிவாற்றலுக்கு அங்கு இடமே இல்லை.

அவதார புருஷரின் அறிவுறுத்தல்களைப் பொறுத்தவரையில், அதற்கான காரணங்களைத் தேடவோ அல்லது ஆழ்ந்து ஆராய வேண்டிய தேவையோ இல்லை. அனைவருக்கும் மிக்க பயனளிப்பதையே அவர் எப்பொழுதும் செய்கிறார். யார் ஒருவருக்கும் ஒருபோதும் தீங்கிழைக்க முடியாத ஒன்றுதான் அவருடைய ஒரே பலவீனம். ஒரு குருநாதர் அவருடைய பணியைச் செய்தாக வேண்டும். அவருடைய வெளிப்படையான செயல்பாடு என்னவெனில், தீவிரமான கண்டிப்பு. சொல்லப் போனால் அதுவே அவருடைய அளவுகடந்த இரக்கத் தன்மையுமாகும். சீடர்களின் அகந்தை எனும் பிடிவாதத் திரையைக் கிழித்தெறிவதன் மூலம், அவர்கள் மீது ஆசீர்வாதங்களைப் பொழிகிறார். ‘நான்’ எனும் அகங்காரப் பாறையை உடைத்து தூள்தூளாக்கி அல்லது அறியாமை எனும் கடினமான முகத்திரையைக் கிழித்தெறிவது, அதீத இடர்பாடுகளைத் தருவதாகும். மனதின் இறுமாப்பை நிர்மூலமாக்குவதே அவர் வேலை. இதுபோன்ற செயல், காயத்தின் வடுவை விட்டுச் சென்றாலும், இறுதியில், இன்னல்கள், எல்லையில்லா பேரின்பத்தை விளைவிக்கும்.

1922 அக்டோபர் 12 அன்று இறை நாமத்தை உச்சரிக்கும் வழக்கமான பிரார்த்தனைக்கு முன்பு, மெஹர் பாபா சீடர்களுக்கு இவ்வாறு விளக்கமளித்தார்:

**அகநிலை, புறநிலை என இரண்டு நிலைகள், மனத்திரையால் பிரிக்கப்பட்டுள்ளன. அகநிலையைத் தூய்மைப் படுத்துவது மனிதனின் கைகளிலில்லை. இதை ஒரு சத்குருவின் உதவியின்றி செய்யமுடியாது. ஆகையால், ஒரு சத்குருவின் சகவாசத்தில் வருவதுவரை, ஒருவர் அவரது புற உடலை, இயன்றவரை சுத்தமாக வைத்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும். இதைத்தான் அனைத்து மதங்களும் போதிக்கின்றன. ஒருவரின் மதக் கோட்பாடுகளை முழுமையாகக் கடைப்பிடிப்பது, ஒரு சத்குருவின் தொடர்பில் வருவதற்கான வாய்ப்பை நல்கும். புற உடலை சுத்தமாக வைப்பதில் கவனம் செலுத்தினால், சிறிதளவேனும் அகநிலை தூய்மையடையும். இவ்வாறு, இறைநிலையை அடைய இரண்டில் ஒன்றைக் கடைப்பிடிக்க வேண்டும். இடைநிலை என்று ஒன்றில்லை. அகநிலையைத் தூய்மை படுத்துவது ஒரு சத்குருவின் கைகளில் மட்டுமே இருப்பதால், அவரின் தொடர்பில் வராத வரையில், அவரவர் மத கொள்கைகளுக்கு ஏற்ப, இரண்டாவது சிறந்த முறையான புறநிலையைப் பேண வேண்டும். ஒவ்வொரு மதமும், புறநிலை செயல்களான வாசிப்பது, அமர்வது, நிற்பது, நீராடுவது, கை கால்களை கழுவி உடலை சுத்தமாக வைப்பது மற்றும் அதே வழியில் ஒருவரின் உணவு, உடைகளிலும் சுத்தம் கடைப்பிடிப்பது ஆகியவற்றை வலியுறுத்துகிறது. கண்களால் நல்லதையே காண்பதும், நாவாலும், உதடுகளாலும் பிரார்த்தனை மொழிவதும், காதுகளால் ஆன்மீக உரைகளைக் கேட்பதையும் மதம் உனக்குப் பரிந்துரைக்கிறது. இப்படி, அனைத்து மதங்களின் அடிப்படை சட்டதிட்டங்களும் கொள்கைகளும் புறநிலையையே குறிக்கின்றன என்பதால் அவதார புருஷர்கள், ஆரம்பத்திலிருந்தே இவற்றைக் கடைப்பிடிக்குமாறு வலியுறுத்தினார்கள். தீவிரமான யோக பயிற்சிகளில் ஈடுபடும் யோகி மற்றும் சித்தர்கள், நடுநிலை பாதையைப் பின்பற்றி பெரும்பாலும் தோல்வியை சந்திக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் தங்கள் குறிக்கோளை அடைய அகநிலை, புறநிலை இரண்டின் உதவியையும் நாடுகிறார்கள். தியானம் செய்யும் போது, ஆழ்ந்த மூச்சு பயிற்சி மூலம் மனதை ஊக்கப்படுத்த அவர்கள் அகநிலையைச் சார்ந்திருக்கிறார்கள். மேலும், அமர்தல், வாசித்தல் மற்றும் விரதமிருத்தல் மூலம் அவர்கள் புறநிலையைப் பயன்படுத்தவதால், பொதுவாகத் தோல்வியைத் தழுவுகிறார்கள். ஆகையால் உனது நற்பலன், உன்னை ஒரு சத்குருவின் சகவாசத்தில் கொண்டு வருவதுவரை, மதக்கோட்பாடுகளை செவ்வனே பின்பற்றுவது சாலச்சிறந்தது. ஒரு சத்குருவின் அருளால், ஒருவனின் அகநிலை தூய்மை அடையும்போது அவன் இறைநிலையை அடைகிறான். அதற்குப் பிறகு, புறநிலையில் கவனம் செலுத்தாமல், முழுமையாகப் புறக்கணிக்கிறான். துறவிகள் வெளித்தோற்றத்தில் தூய்மையின்றி**

**இருப்பதற்கு இதுவே காரணம். அவர்களின் அகநிலை தூய்மையாகத் திகழும் தருணத்தில், புற நிலையைப் பற்றிக் கண்டுகொள்வானேன்? எதுவாயினும் ஒரு நாள் இந்தப் புறநிலை அழியத்தான் போகிறது!**

ஒரு முறை மெஹர் பாபா, சாக்லெட் வாங்கி வரச்சொல்லி, அதை அனைத்து மண்டலிக்கும் பகிர்ந்தளித்தார். அனைவரிடமும் பாபா, அதன் சுவை எப்படி இருந்தது என்று கேட்க, அர்ஜுனைத் தவிர அனைவரும், மிகவும் சுவையாக இருந்ததாகக் கூறினர். சற்று நேரத்திற்குப் பிறகு, பாபா, "**இப்போது நீங்கள் சுவைத்து மகிழ்ந்த அந்த சுவை இன்னமும் நாவில் இருக்கிறதா?**" என்று வினவினார். இல்லை என அனைவரும் பதிலளிக்க, தொடர்ந்து பாபா விளக்கமளித்தார்:

**ஒரு நல்ல பொருளை அடையப் பெறும்போது, மனம் மகிழ்ச்சி அடைகிறது. ஆனால் உடனடியாக அது பழைய நிலைக்குத் திரும்பிவிடும். அதே மனம், கசப்பான ஆமணக்கு எண்ணையைத் திணிக்கும் போது எதிர்க்கிறது. ஆனால், குறுகிய நேரத்தில் மறுபடியும் பழைய சாதாரண நிலைக்குத் திரும்பும். இது எதை நிரூபிக்கிறது என்றால், இன்பம், துன்பம் இரண்டுமே இவ்வுலகில் குறுகிய காலமே நிலைத்திருக்கும் என்பதைத்தான். சற்று நேரத்திற்கு முன்பு, நீங்கள் சாக்லெட்டை ருசித்தீர்கள். ஆனால், அவ்வாறு ருசித்த சாக்லெட்டின் சுவை, உடனடியாக முடிந்துபோன ஒன்று. ஏனெனில் அதன் நறுமண சுவை நாவில் நீண்டநேரம் தங்கவில்லை. எல்லா உலக இன்ப துன்பங்களும் இப்படித்தான்.**

**உடலுறவு என்பது உலகில் உயர்ந்த, உணர்வுபூர்வமான சிற்றின்பமாகும். ஆனால் அது எவ்வளவு நேரம் நிலைக்கும்? ஒரு சில நிமிடங்களே! இப்படியான உயர்ந்த உலக இன்பங்களை உண்மையான இறை இன்பத்துடன் ஒப்பிட்டால், அதை எல்லையில்லா பேரின்ப கடல் துளியின் சாயல் என்றே கூறலாம்! இறைநிலையை அடைந்த பின்னர், ஆனந்தத்தை எப்போதும், எந்த நிமிடமும் உணர்ந்து அனுபவிக்க இயலும். இதிலிருந்து உலகமும் அதன் இன்பங்களும் வெறுமையே என்பதைக் கற்பனை செய்ய முடியும்!**

ஒரு நாள் மாலை வேளையில், மெஹர் பாபா, சத்குரு ஹஃபீஸின் ஈரடி கவிதை ஒன்றை மொழிந்து, அனைவருக்கும் அதன் பொருளை விளக்கினார். அன்று பாபா மிகவும் மகிழ்ச்சியான மனநிலையில் இருந்தார் - வியாழக்கிழமை, குருக்களின் தினமாதலால், சத்குரு உபாஸனி மஹாராஜின் ஆரத்தியை நிகழ்த்தி, பல மாதங்களுக்குப் பிறகு, முதல் முறையாக மெஹர் பாபா, அவரது பாதங்களைத் தொட்டு வணங்க, அனைவரையும் அனுமதித்தார்.

1922, அக்டோபர் 13 அன்று காலையில் டாக்டர் கனி, ஆதி இருவரையும் அழைத்து, பாபா, "**மனதில் எவ்வித பாரமும் இல்லாமல் மகிழ்ச்சியாக இருங்கள்**" என்று கூறி, அதன் பொருள் என்ன என்பதை விளக்கினார்:

**காரணம் எதுவோ விளைவும் அப்படியே. ஒன்றைத் தூண்டும் காரணம், பெரியதாகவும், முக்கியமானதாகவும் அல்லது சிறியதாகவும், முக்கியமற்றதாகவும் இருக்கலாம். ஆனால் விளைவு நிச்சயமாக காரணத்தைப் பொறுத்தே அமையும். இவ்வுலகின் இன்னல்கள் அனைத்தும் கற்பனையே! நம் அறியாமையின் சுய உருவாக்கமே! காரணமே இல்லாததால் அவற்றை நியாயப்படுத்த முடியாது. ஒன்றை விளைவிக்கக் காரணம் இல்லாத நிலையில், பிரதிபலன், இயற்கையாகவே போலியாகவும், பொருள் இயல்பில்லாததாகவும், அர்த்தமற்றும் இருக்கும்.**

**எனவே, கற்பனை ஒன்றைத் தவிர காரணம் வேறேதும் இல்லாததால், இவ்வுலகின் இன்பதுன்பங்களைப் பற்றி ஏன் கவலைப்படவேண்டும்? உங்களைச் சுற்றி நடப்பவற்றை வெறுமனே கவனித்துக் கொண்டு மனதை அமைதியாகவும், மகிழ்ச்சியாகவும் வைத்திருங்கள். ஹாஃபீஸின் வார்த்தைகளில்:**

**உலகின் இன்பதுன்பங்கள் இரண்டுமே கடந்துபோகும்.**
**எனவே, அமைதியாக இருப்பதே சிறந்தது எப்போதும்.**

1922 அக்டோபர் 14ஆம் நாள், மாலை உணவுக்குப் பிறகு, மெஹர் பாபா அனைத்து மண்டலியையும் அழைத்து, ஸாக்கோரிக்குச் செல்வது குறித்து விவாதித்தார்:

**என்னுடைய அல்லல்கள் தாங்கமுடியாத அளவில் உள்ளன. ஸாக்கோரிக்குச் செல்வதன் மூலம் உபாஸனி மஹாராஜ், நான் எனது தோளில் சுமக்கும் பளுவை சற்று குறைப்பார். ஆனால் அது அவரை உள்ளளவில் துன்புறுத்தும்.**

**அவ்வாறு மஹாராஜ் துன்பத்திற்கு உள்ளாகும் போது, அவர் என்னை அவதூறாகப் பேசி, அனைவர் மத்தியிலும் அவமானப்படுத்துவார். நான் உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன், உயர் நிலையில் இருக்கும் சாதுக்கள், மஹாத்மாக்கள் என்னைத் தாக்கி அவமதிப்பார்கள். ஏனெனில், ஆன்மீக உலகம், இன்றைய காலத்தில் எனக்கு எதிராக உள்ளது.**

**எனவே, மஹாராஜ் இவ்விஷயத்தைத் தன் வசம் எடுத்து, என்னை அவமதித்து, அறையவும் செய்யலாம். நான் ஸாக்கோரிக்குச் செல்லாமல் இங்கேயே இருப்பதாயின், அளவிலா துன்பங்களை அனுபவிக்க நேரிடும்!**

பெரும்பாலான சீடர்கள், பாபா, அன்றிரவே ஸாக்கோரிச் செல்வதற்கு ஒப்புக்கொண்டனர். மெஹர் பாபா அப்போது டாக்டர் கனியிடம், சுவாமி விவேகானந்தரின் புத்தகத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட பகுதியை வாசிக்குமாறு கூறினார்:

ஓர் உண்மையான குருநாதரால் மட்டுமே, ஆயிரம் மாணவர்களை ஒரே

நேரத்தில் அவரைப் போல மாற்ற முடியும். அவர் மாணவனின் நிலைக்கு இறங்கி வந்து, அவருடைய ஆன்மாவை மாணவனுள் இடம் பெயரச் செய்து, அவனது கண்களால் பார்த்து, காதுகளால் கேட்டு, அவனது மனதால் அனைத்தையும் புரிந்துகொள்வார்.

அப்படிப்பட்ட ஒரு குருநாதரால் மட்டுமே உண்மையாகக் கற்றுத்தர முடியும், வேறு எவராலும் முடியாது! இவ்வுலகின் அனைத்து எதிர்மறையான, நிலைகுலைந்த, உருப்படியில்லாத ஆசிரியர்களால் ஒருபோதும் நல்லது எதுவும் செய்ய முடியாது. விவேகானந்தரின் வார்த்தைகளுக்கு மெஹர் பாபா இவ்வாறு விளக்கம் அளித்தார்:

**ஓர் 'எம்.ஏ.' பட்டம் பெற்ற ஆசிரியர், குழந்தைகளுக்கு எழுத்துக்களைக் கற்றுத் தருகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவர் அந்தக் குழந்தைகளின் நிலைக்கு இறங்கி வந்து, அவர்களோடு இணைந்து வாசிக்க, எழுத மற்றும் திரும்பத் திரும்ப 'அ, ஆ, இ, ஈ' சொல்லித்தர வேண்டும். அப்போதுதான் அவரால் பாடத்தைக் கற்றுத் தந்து, அவர்களை, படிப்படியாகத் தனது நிலைக்குக் கொண்டு வரமுடியும். தான் அடைந்த உயர் நிலையிலிருந்து இறங்கி வராவிடில், அவருடைய முயற்சி அனைத்தும் பாழாகிவிடும். அதுபோல், ஒரு சத்குரு, சாதாரண மனிதனின் நிலைக்கு இறங்கி வந்து, உரிய காலத்தில் இறை ஞானத்தை, சக மனிதர்களுக்கும் வழங்குகிறார்.**

**முஹமது நபியின் வாழ்வில் நடந்த சம்பவத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அவரை எதிர்த்தவர்களால், சிறிதளவும் மனமிரக்கம் இல்லாமல், அவருடைய வாழ்வு அபாயத்திற்கு உள்ளானபோது, மெக்காவிலிருந்து மெதீனாவுக்கு ஓடி அகதியாகப் புகலிடமடைந்தார். அக்காலத்தின் மிகச்சிறந்த ஆன்மீக குருவாக இருந்த அவர், சாதாரண மனிதனைப் போல் இப்படி ஓர் இக்கட்டான சூழ்நிலையை எதிர்கொண்டார்.**

**சத்குரு மட்டுமே பிற ஒருவரைத் தன்னைப் போல மாற்ற முடியும் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. சிறிதளவும் தனது உடலைப் பற்றிய உணர்வின்றி, பேரானந்தத்தில் மூழ்கியிருக்கும் இறை ஞானிகளால் இதைச் செய்ய இயலாது. அவர்களே உலக உணர்வை மறந்த நிலையில் இருக்கும்போது, எப்படிப் பிறருக்கு இறை ஞானம் வழங்க முடியும்?**

மன்ஸில்-எ-மீம் மும்பையில், மெஹர் பாபா அவரது நிலைமையைப் பற்றி விளக்கினார்:

**"உங்களிடம் நான் பூனாவில் என்ன நடக்கும் என்று முன்பு கூறினேனோ, இப்போது அது மும்பையில் நடக்கிறது. ஒரு மாதத்திற்கு முன்பு, பூனாவில் நான், கண்கள் குழிக்குள் வீழும் அளவுக்கு அதீத துயரத்தை அனுபவிக்க வேண்டியது வரும் என்று கூறினேன். அது இங்கே மும்பையில் நடந்ததை நீங்கள் பார்த்தீர்கள். மேலும், வன்முறையில் தாக்கப்படுவேன் என்று கூறியதும் விரைவில் நிகழலாம். என்னுடைய**

**ஒவ்வொரு வார்த்தையும் உண்மையைப் பிரதிபலிக்கும்! ஆனால் எப்படி, எப்போது, எங்கு நடக்கும் என்பது எனக்கு மட்டுமே தெரியும். உங்களால் அதைப் புரிந்துகொள்ள முடியாது. அதுபோன்ற விஷயங்களைப் புரிந்துகொள்ளவும், பேசவும் சிறப்புமிக்க செவிகளும், வித்தியாசமான நாவும் தேவை."**

மெஹர் பாபா, அவர் உள்ளளவில் அனுபவிக்கும் இடர்பாடுகளைத் தொடர்ந்து விவரித்தார்:

**"இரண்டு மடங்கு துன்பங்களை நான் அனுபவிக்கிறேன்; ஏனெனில், என்னுடைய பொறுப்புகளை நான் இரண்டு பக்கங்களிலிருந்தும் - குறுகிய அளவில் பாபாஜானிடமிருந்தும், பெரிய அளவில் உபாஸனி மஹாராஜிடமிருந்தும் பெற்றுக்கொண்டேன். மஹாராஜுக்கு இது தெரியும் என்பதால், எனது பாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் எண்ணத்தில் என்னை ஸாக்கோரிக்குத் திரும்பத் திரும்ப அழைக்கிறார். நான் அங்குப் போகாத நிலையில், என்னுடைய துயரங்கள் இன்னும் அதிகமாகும். இப்படி, நான் இரண்டு தீப்பந்தங்களுக்கு இடையே மாட்டிக் கொண்டு தவிக்கிறேன்."**

மெஹர் பாபா, டாக்டர் கனியிடம் மன்ஸில்-எ-மீமில் அனைத்து சீடர்களும் கடைப்பிடிக்கும் ஆன்மீக நடைமுறைகளை காக் ஸாஹேப் மற்றும் அஸார் ஸாஹேப் இருவருக்கும் விளக்குமாறு கூறினார். டாக்டர் கனி விளக்கிய போது அஸார் ஸாஹேப், 'அதிகாலையில், குறிப்பிட்ட நேரத்தில் பிரார்த்தனை செய்வதற்கு என்ன தேவை இருக்கிறது?' என்று கேள்வி எழுப்பி, வெளிப்படையாக மறுத்தார். இது பாபாவை வருத்தத்தில் ஆழ்த்தியது. காக் ஸாஹேப், அஸார் ஸாஹேப் இருவரையும் மெஹர் பாபா கண்டித்து, '**அனைத்து முஸ்லிம் சீடர்களும் அவரவர் விருப்பப்படி எழுந்து கொண்டு அவர்கள் எண்ணப்படி எதுவும் செய்யலாம்**' என்று அறிவுறுத்தினார்.

மன்ஸில்-எ-மீமில் சற்று அமைதி திரும்பியபோது, மெஹர் பாபா முஸ்லிம் சீடர்களை அழைத்து இவ்வாறு குறிப்பிட்டார்: **"உங்களில் எவரேனும் ஷரியத்** (வெளிப்புற சடங்கு சம்பிரதாயங்கள்) **பற்றி என்னைவிட அதிகமாக அறிவீர்களா? என்னைத் தவிர ஓர் உண்மையான முஸ்லிமை நீங்கள் கண்டுகொள்ள இயலாது! வெளியளவில் நான் எப்படியோ அப்படியே! ஆனால் உள்ளளவில் நான் என்ன என்பதை உங்களில் எவரேனும் அறிவீர்களா?**

**"பிரார்த்தனை மற்றும் வழிபாட்டு முறைகள் அனைத்தும் இறைவனுக்காக மட்டுமே! ஆனால், நீங்கள் சமய சம்பிரதாயங்களில் ஆழமாக மூழ்கி, இறைவனை மறந்து பிரார்த்தனையை வழிபடுகிறீர்கள்!"**

இந்தப் பதட்டமான சூழ்நிலையில் காக் ஸாஹேப் கோபமாக அஸார் ஸாஹேபை, அவரே அனைத்திற்கும் காரணம் என்று குற்றம் சாட்டினார். இருவருக்குமிடையே கடுமையான வாக்குவாதம் நடந்தது. இறுதியில், என்னவாக இருந்தாலும், '**இருவரும் இணக்கமாக இருக்க வேண்டியது**

**அவசியம். இல்லையேல் மன்ஸிலை விட்டு வெளியே செல்ல வேண்டியதுதான்**' என்று பாபா குறிப்பிட்டார். சற்று நேரத்தில் இருவரும் அமைதியாயினர்.

1922, அக்டோபர் 14 இரவு, அனைத்து அறிவுரைகளையும் எடுத்துரைத்த பிறகு, மெஹர் பாபா, சதாஷிவ் பாட்டீலுடன் ஸாக்கோரிக்குப் புறப்பட்டுச் சென்றார். ஆனால் புறப்படும் முன்பு, காக், அஸார் இருவரிடமிருந்தும், 'எவ்வித விவாதத்திலும் ஈடுபடாமல், ஒருவரையொருவர் மனப்பூர்வமாக மன்னித்து, மஹாராஜின் வாழ்க்கை வரலாற்றை எழுதுவதில் தொடர்ந்து கவனம் செலுத்துவதாக' உறுதிமொழி வாங்கினார்.

அதிகாலையில் எழுந்து பிரார்த்தனை செய்யும் கட்டளை முஸ்லிம் சீடர்களுக்கு மறுபடியும் அமல் படுத்தப்பட்டது. பிரார்த்தனை விஷயத்தில் காக் ஸாஹேப், அஸார் ஸாஹேப் இருவருக்குமிடையே இருந்த கருத்து வேறுபாடுகளை முறியடிக்கும் நோக்கத்தில், பாபா இப்படியொரு நாடகத்தை வேண்டுமென்றே அரங்கேற்றியது போலத் தோன்றியது. இறுதியில் திடமான தனித்தன்மை படைத்த இருவருக்கும் இடையே இருந்த வெறுப்புணர்வு மறைந்து மகிழ்ச்சிகரமான சூழ்நிலை நிலவியது.

மெஹர் பாபா, சதாஷிவுடன் அக்டோபர் 15 அன்று ஸாக்கோரி வந்தடைந்தார். அதே நாள் தவுலத்மாய் தனது இரண்டு மகள்களுடன் - ஃபிரீனி, மெஹரா - அங்கே வருகை தந்தார். மஹாராஜின் பெண் சீடர்களில் ஒருவர் மூவரையும் அங்கு அமைந்த முக்கிய இடங்களைப் பார்வையிட அழைத்துச் சென்றபோது, மாடி படிக்கட்டிலிருந்து ஒருவர் இறங்கி வரும் காலடி ஓசையைக் கேட்டு "மேர்வான்ஜி, மஹாராஜின் நெருங்கிய சீடர் வருகிறார்" என்பதை அவர்களுக்கு எடுத்துச் சொன்னார். மெஹர் பாபா வேகமாக இறங்கி அனைவரையும் கடந்து சென்றபோது, மெஹரா, வெட்கத்தில் தலை குனிந்தாலும், முதல் முறையாக மெஹர் பாபாவைப் பார்க்கும் வாய்ப்பை அடையப்பெற்றார்.

வார்த்தைகள் எதுவும் பரிமாறாமல் இருந்தாலும், மௌனத்தில் இது ஓர் இன்றியமையா தருணமாகும். இதன் முக்கியத்துவம் நமது காலத்தைப் பெரிதும் நெகிழ வைக்கும் என்பது விதியாகும். மெஹராவின் இதயத்தை மெஹர் பாபாவின் முகத்தோற்றம் மின்னல் போலத் தாக்கி, இவ்வாறு பாடவைத்தது:

"இறுதியில், ஆமாம் இறுதியில்,
நான் எனது கடவுளைக் கண்டேன்."

மெஹராவின் தாயார், தவுலத்மாய், மெஹர் பாபாவை இதற்கு முன்னர் ஒரு முறை ஸாக்கோரிக்கு வந்தபோது சந்தித்தார். ஆனால் மெஹரா, ஃபிரீனி இருவருக்கும் மஹாராஜ் மற்றும் மெஹர் பாபாவைப் பற்றிய விபரங்கள் எதுவும் கூறியதில்லை.

அதற்குப் பிறகு, மெஹரா தனது தாயாருடன் மஹாராஜின் குடிலில் அமர்ந்திருந்த போது மெஹர் பாபா அங்கே வந்து, மஹாராஜை வணங்கி, அவர்

குடிலை, இந்துக்களின் பரிக்கிரம ரீதியில் மூன்று முறை சுற்றி வந்து, மஹாராஜ் கூறியது போல் அருகிலிருந்த மாமர நிழலில் காத்திருந்தார். மஹாராஜின் மீது மெஹர் பாபா காட்டிய இணையிலா பிரியம், மெஹராவின் இதயத்தை நெகிழச் செய்தது. இறை கீதம் மெஹராவின் உள்ளத்தை விழிக்கச் செய்து ஸாக்கோரியை நோக்கி ஈர்த்தது. அதேவேளை மெஹர் பாபா, இவ்வளவு தூரம் பயணம் செய்து மெஹராவை சந்திக்க வந்தார். மெஹராவின் கண்கள் கலங்க, இதய கீதம் இவ்வாறு ஒலித்தது:

இறை கீதமே! எவ்வளவு விநயமுள்ளவர் நீங்கள்!
எவ்வளவு வியக்கத்தக்க அழகு நீங்கள்!
அதைக் கேட்டு கீதம் இவ்வாறு பதிலளித்தது,
“நான் எப்போதும் உனக்காகவும், நீ எனக்காகவும் இருக்கிறோம். ஏனெனில் நான் பணிவானவன், என்னுடைய மெல்லிசை, கடினமான கல்லையும் கரைக்கும்!”

மெஹரா தன்னிச்சையாக மெஹர் பாபாவுடன் இருக்க ஏங்கினார். மேலும் நமது காலத்தின் குரல் இவ்வாறு முணுமுணுத்தது:

“பரிசுத்தமானவரே! விரைவில் நீங்கள் உங்கள்
இறைவனுடன் இணைவீர்கள்.
உங்கள் வாழ்க்கை எனும் வீணையால் தினமும் அவர்
இறை கீதத்தை இசைப்பீர்கள்!”

சத்குரு உபாஸனி மஹாராஜ் அவரது குடிலிலிருந்து வெளியே வந்து மாமரச் சோலையில் மெஹர் பாபாவுடன் அமர்ந்தார். இருவரும், பாபாவின் சீடர்களை எதிர்வரும் தீபாவளி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள அழைக்க வேண்டுமென முடிவு செய்தனர்.

பதினெட்டு மணிநேரம் ஸாக்கோரியில் தங்கிவிட்டு, மெஹர் பாபா உடனே மன்ஸில்-எ-மீம் புறப்பட்டுச் சென்றார்.

மெஹர் பாபாவின் ஸாக்கோரி விஜயம் இம்முறை மிகவும் சிறப்பு வாய்ந்ததாக அமைந்தது, ஏனெனில், இது மெஹர் பாபா, முதன்முதலாக மெஹராவைப் பார்க்கும் வாய்ப்பை வழங்கியது. நாளடைவில், மெஹரா, மெஹர் பாபாவின் முதன்மை பெண் சீடராகும் பாக்கியத்தை அடையப்பெற்றார். இந்தப் பயணத்தின் முக்கிய அம்சமே மெஹராவை சந்திப்பது தான்! மேலும், இந்தப் புனிதமான பயணம் மஹாராஜின் எஞ்சிய வாழ்க்கை காலத்தில், மெஹர் பாபாவின் கடைசி பயணமாகும். அடுத்தப் பத்தொன்பது வருடங்கள், 1941 வரை, இருவரும் சந்திக்கவில்லை.

குல்மாய், மெஹர் பாபாவின் மீது வைத்துள்ள உண்மையான நம்பிக்கையால், தனது கணவருடைய உறவினர்களின் பெரும் தொல்லைகளுக்கு ஆளாக வேண்டியதாயிற்று. தாங்கொணா சூழ்நிலையில், தனியாக ஒதுங்கி உபாஸனி மஹாராஜுக்கு ஒதுக்கப்பட்ட அறையில்

அழுதுகொண்டே பிரார்த்தனையில் ஈடுபட்டு வந்தார். ஒரு நாள் குல்மாயைக் கேலி செய்து கொடுமைப்படுத்திய அதேவேளை, மன்ஸில்-எ-மீமில் பாபா, ஆதி, குஸ்தாஜி இருவரையும் அழைத்து "**ஆதியின் தந்தையை நினைத்தால் எனக்குப் பெரும் கோபம் வருகிறது. குல்மாய் என்னைப் பார்க்க அடுத்த எட்டு நாட்களில் இங்கே வருவார்கள்**" என்று கூறினார். பாபா கூறியது போல, சரியாக எட்டாவது நாள் குல்மாய் மன்ஸில்-எ-மீம் வந்தார்.

ஒரு முறை, குல்மாய் மன்ஸில்-எ-மீமில் இருந்தபோது, பாபா குஸ்தாஜியை அழைத்து, கவிதை வடிவில் ஆனால் உறுதியாகக் குறிப்பிட்டார்:

"**அனைத்தையும் பார்த்து என் இதயம் அங்கலாய்க்கிறது.**"

குல்மாய், உடனே பாபா கூறியதன் அர்த்தம் என்ன என்று கேட்க, பாபா விளக்க மறுத்தார். அதற்குப் பிறகு, பாபா சமீபத்தில் ஒரு நாளைக் குறிப்பாக எடுத்துக்கூறி, அந்த நாளில் குல்மாய் என்ன செய்தார்கள் என்பதை அறிய விரும்பினார். குல்மாய், அன்று பாபாவின் புகைப்படத்தை உற்றுநோக்கி, நெடுநேரமாக அழுது கொண்டிருந்ததை நினைத்துப் பார்த்தார். பாபா உடனே குல்மாயிடம், "**அன்று நீங்கள் எனது புகைப்படத்தைப் பார்த்து, எனக்காக எவ்வளவு கண்ணீர் சிந்தினீர்கள்?**" என்று கேட்டதற்கு, குல்மாய் பதில் எதுவும் கூறாமல் தலையைக் குனிந்த வண்ணம் இருந்தார்.

குல்மாயின் மகன் ஆதி இடையே குறுக்கிட்டு, 'அதே நாள்தான் பாபா எங்களிடம் அவர் தந்தை மீது மிகுந்த கோபத்தில் இருப்பதாகக் கூறினார்' என்றார்.

பாபா புன்முறுவல் செய்து கொண்டே, "**உங்களை நான் ஆதியின் கண்களில் காண்கிறேன். அவன் ஒரு புகைப்படச் சட்டம் என்றால், உங்களை அதிலிருக்கும் படமாகப் பார்க்கிறேன்**" என்றார்.

அடுத்த நாள், தீர்க்கதரிசி முஹமது பெயரில் அனுஷ்டிக்கப்பட்ட ஒரு விசேஷநாள். முன்ஷி ரஹிம், பாபாவிற்கு ஓர் அழகான அலங்கார மேலாடையை அணிவதற்காக வழங்கினார். அதில் பாபா அற்புதமாகத் தோற்றமளித்தார். அவ்வேளையில் குஸ்தாஜி அணிந்திருந்த கிழிந்த சட்டையைக் குல்மாயிடம் காட்டி, அதைத் தைத்து சரி செய்யுமாறு கூறினார். ஆனால் குஸ்தாஜி அந்த உதவியை மறுத்தார். பாபா உடனே, '**அவர் சொல்வதைக் கருத்தில் கொள்ளாதீர்கள். நீங்கள் குஸ்தாஜிக்குச் செய்வது எனக்குச் செய்வதற்கு சமம்.**' என்றார்.

சிறிது நேரம் அமைதியாக இருந்து, மெஹர் பாபா, குல்மாயிடம், "**நான் இப்பொழுது என்ன செய்தேன் என்று உங்களுக்குத் தெரியுமா?**" என வினவினார்.

"நீங்கள் செய்வது எதுவும் என் அறிவுக்கு எட்டுவதில்லை" குல்மாய் பதிலளித்தார்.

"**இது எனது பணி; அதை எவரும் புரிந்துகொள்ள முடியாது**" என்று பாபா கூறினார்.

ஒரு முறை, மெஹர் பாபா மின்தொடர் இயக்கியில் விரல் வைத்து, குல்மாயிடம் இவ்வாறு கூறினார்: “**பாருங்கள்! இந்த விளக்கு, மின்சார கம்பி வழியாக மின்தொடர் இயக்கியோடு இணைக்கப்பட்டுள்ளது. நான் அதை அழுத்தினால் விளக்கு எரியும். அதுபோல, சத்குரு மின்தொடர் இயக்கியை அழுத்தினால், ஆன்மீகத் தாயார் பிரகாசத்தால் ஜொலிப்பார்! அதுவரை, நினைவில் கொள்ளுங்கள், நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும்.**”

இன்னொரு முறை, மெஹர் பாபா, தாயின் வயிற்றில் ஒன்பது மாதங்கள் கருவாக உருவெடுக்கும் குழந்தையை உதாரணம் காட்டி குறிப்பிட்டார், ‘**அக்குழந்தை முழு ஒன்பது மாத காலத்தைக் கடக்காவிட்டால் குறைமாத குழந்தையாகப் பிறந்து ஆரோக்கியமற்றதாக இருக்கும்.**’ மேலும் தொடர்ந்து, ‘**நானும் அதைப்போல கட்டுண்டு இருக்கிறேன். நான் விடுபட வேண்டும். உங்களையும் விடுவிக்க வேண்டும். அதுவரை, நான் துன்பங்களை அனுபவிப்பேன், நீங்களும் துன்பப்பட வேண்டியதுதான்**’

மெஹர் பாபா திரும்பி மன்ஸில்-எ-மீம் வந்ததும், இவ்வாறு ஓர் அறிக்கையை வெளியிட்டார்:

**கடந்த இரண்டு நாட்களில் எவரேனும், சிறியதாக அல்லது பெரியதாக, தெரிந்தோ, தெரியாமலோ, தவறுதலாக என்னுடைய கட்டளைகளை மீறியிருந்தால் இன்றிரவு எட்டு மணிக்கு முன்னர் அதை ஒப்புக்கொள்ள வேண்டும்.**

**மேர்வான்**

**அக்டோபர் 17, 1922**

பலரும் ஏதோ சிறிய தவறுகளை எடுத்துக் கூறினர். டாக்டர் கனி, உருது செய்தித்தாளில் அஸார் ஸாஹேப் வெளியிட்ட ஒரு கஸலைப் படித்ததாக ஒப்புக் கொண்டார். இருந்தாலும், அவருடைய வரம்பு மீறலுக்காக, டாக்டர் கனியை வெளியே அனுப்பி, விவேகானந்தர் எழுதிய ஒரு புத்தகத்தை வாங்கி வரக் கூறினார்.

குஸ்தாஜி, மன்ஸிலில் மெஹர் பாபா இல்லாதபோது, ருஸ்தம் ஈரானி, நவல் தலாட்டி இருவருக்கும் இடையே சூடான விவாதம் நடந்ததாக அறிவித்தார். மேக ராகத்தை உரிய சுருதியில் இசைக்கும்போது, மழை பொழியும் என்பது நவல் தலாட்டியின் உறுதியான கருத்து. ஆனால் ஆன்மீக சக்திகளால் மட்டுமே மழையை வரவழைக்க முடியும் என்று ருஸ்தம் ஆணித்தரமாக விவாதம் செய்தார்.

ருஸ்தம், நவல் தலாட்டி இருவரையும் சமாதானப்படுத்தி மெஹர் பாபா ‘ஒலி, பிரபஞ்சத்தின் ஒலி’ இவற்றைக் குறித்து விளக்கமளித்தார்:

**மேக ராகம்** (மழை இசை) **இசைக்கும்போது மழை பொழிவது உண்மை. அதற்கு, தெய்வீக சக்தி தேவையில்லை. மழை மேகங்கள்**

மோதுவதால் மழை வருமென்பது தெரிந்த உண்மை. ஒலி, அலைகளாகப் பயணம் செய்யும்; அது பயணிக்க, தேவையான நேரத்தை எடுக்கும் என்பதை விஞ்ஞானிகள் நிரூபித்துள்ளனர். ஒலி அலைகள் பயணம் செய்வதை, தூரத்தில் ஒருவர் துணியை அடித்துத் துவைக்கும்போது வரும் சத்தத்திலிருந்து புரிந்துகொள்ள முடியும். அவர் துணியைக் கல்லில் அடிக்கும் அதே வேளையில் ஒலி உடனடியாகக் கேட்காமல், சில வினாடிகளுக்குப் பிறகு கேட்கும்.

மேக ராகத்தை உரிய சுருதி மற்றும் அதிர்வோடு இசைக்கும் வேளையில், அது ஒலி அலைகளை உருவாக்கி, மேகங்களை அதிர வைப்பதன் விளைவாக மழை பொழியும். இது இயற்கையின் நியதி. இதில் மறுக்க என்ன இருக்கிறது?

இத்துடன் ஒப்பிடும்போது, வானொலி மற்றும் மின்னிணைப்பில்லா தந்திகளின் கண்டுபிடிப்பை ஏற்றுக் கொள்வது கடினம். எந்த ஓர் இணைப்பும் இல்லாமல் ஒலி அல்லது செய்தி, இரண்டு புள்ளிகளுக்கு இடையே, வெகு தூரம் பயணிக்கிறது!

குரல் என்றால் என்ன? அது எங்கிருந்து உருவாகிறது? வாயிலிருந்து வரும் ஒலியை ஒருவன் கேட்கும்போது, அதன் இருப்பிடம் எங்கேயோ இருக்கும். ஒலி, உண்மையிலே, பிரபஞ்சத்தில் வியாபித்திருக்கிறது. ஒலி, ஒளி - அனைத்தும் இறைவனே! ஒலி, ஒரு புள்ளியிலிருந்து வெளிப்படும். அந்த ‘உருவாக்கம்’ அல்லது ‘ஓம்’ எனும் புள்ளியிலிருந்து, பரிணாம வளர்ச்சி தொடங்குகிறது. நமது வாய், ஒலியை வெளிப்படுத்தும் வாசல். வாயிலிருந்து வெளிவரும் ஒலியானது, எங்கும் நிறைந்திருக்கும் பிரபஞ்சத்தின் ஒலியில் தொலைந்து போகிறது.

ஆயிரம் மைல்களுக்கு அப்பாலும், தந்தி ஒலி அலைகள் செல்லும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை எனும்போது, மேக ராகத்தை இசைக்கும் வேளையில் உருவாகும் ஒலி அலைகள், பூமியிலிருந்து இரண்டு மைல் உயரத்தில் இருக்கும் மழை மேகங்களைச் சென்றடைந்து, மழையைப் பொழியச் செய்வதில் என்ன அதிசயம் இருக்கிறது? இவ்வாறு ஒலி அலைகள் வழியாக மழை பொழிவது, ஆன்மீக அல்லது இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தியினால் அல்ல!

ஒலி அலைகள் பயணம் செய்து, விதவிதமான அதிர்வுகளை உருவாக்கும் காரணத்தால்தான், ஒருவர் புனித நூல்களின் அர்த்தங்களைப் புரிந்தாலும் புரியாவிட்டாலும், அந்நூற்களை வாய்விட்டு வாசிக்கவேண்டும் என்பது. ஸொராஸ்டிரிய மதத்தின் ‘ஸென்ட் அவஸ்தா’ அல்லது இந்துக்களின் ‘கீதை’ அல்லது முஸ்லிம்களின் ‘குரான்’ மேலும் இதர திருமறை நூல்களில் இவ்வாறு அமைக்கப்பட்டிருக்கும் வார்த்தைகளை உச்சரிக்கும்போது உருவாகும் ஒலி அலைகள், எங்கும் நிறைந்திருக்கும் ஒலியோடு இணைந்து, ஒருவரை ஆன்மீகப் பாதையில் வழி நடத்த உதவும்.

மெஹர் பாபா, டாக்டர் கனியின் முன்னிலையில், ராம்ஜு அப்துல்லாவிடம் இவ்வாறு கேட்டார்: “**கடவுளுக்குத் தாயார் உண்டா?**”

ராம்ஜு சற்று நேர சிந்தனைக்குப் பிறகு, தெரியாது என்று பதிலளித்தார். பாபா உடனே, “**குரானில் எடுத்துரைக்கப்பட்டுள்ள கதை உங்களுக்குத் தெரியாதா?**” என்று கேட்டார்.

இதற்கு, ஒரு தீர்வுகாணும் எண்ணத்தில், காக், அஸார் ஸாஹேப் இருவரும் அழைக்கப்பட்டனர். அஸார், 'ராம்ஜு சொல்வது சரியே! கடவுளுக்குத் தாய் தந்தையர் உள்ளனரா என்று எவரும் உறுதியாகச் சொல்ல முடியாது' எனக் கருத்து தெரிவித்தார்.

பாபா இகழ்ச்சியாக அஸாரிடம், “**உங்களுக்குத் தெரியாது என்றால், இது விஷயத்தில் நீங்கள் உறுதியாக இல்லையென்றால், கிறிஸ்தவர்கள் நம்பும் 'இறைவனின் மைந்தன்' என்ற கருத்தை ஏன் கேலியும், கிண்டலும் செய்கிறீர்கள்? எதுவாக இருந்தாலும் இவ்வளவு எளிதாக உங்கள் மதக்கோட்பாடுகளை நிராகரிக்கக் கூடாது. வெளியளவில் மதத்தைச் சார்ந்திருப்பது அவசியம்**” என்றார். மெஹர் பாபாவின் விவாதத்தின் அடிப்படையில், இறுதியாக அஸார் ஸாஹேப் ஏற்றுக்கொண்டார் - அதேவேளை, இந்த சம்பவம் காக் ஸாஹேபின் இதயத்தில் சத்தமின்றி நுழைந்தது.

மெஹர் பாபா, தொடர்ந்து, டாக்டர் கனியைக் கேட்டார், “**கடவுளுக்குக் குழந்தைகள் உள்ளனவா?**”

டாக்டர் கனி ஆமாம் என்று பதிலளித்த அதே வேளையில், பிறர் அனைவரும் இல்லை என்று மறுத்தனர். பாபா, கனியிடம் விளக்கிக் கூறுமாறு கேட்டுக் கொண்டார். “பாபா, உங்களைப் பொறுத்தவரையில் கடவுளுக்குத் தாய் தந்தையர் உண்டு என்றால், குழந்தைகளும் உள்ளனர் என்று எண்ணுவதில் என்ன தவறு?”

மெஹர் பாபா உடனே, “**தந்தை இருப்பதால் குழந்தைகளும் இருக்கவேண்டும் என்ற கண்டிப்பு எதுவுமில்லை! ஆனால் கடவுளுக்கு எண்ணிலடங்கா குழந்தைகள் உள்ளனர் என்பது மட்டும் உண்மை! அவரிடமிருந்து வெளிப்படும் பலதரப்பட்ட சக்திகள் அனைத்தும் அவருடைய குழந்தைகள் என்று கூறலாம். இந்துக்கள் இறைவனை 'தேவா' என்றும், அவரிடமிருக்கும் முப்பத்துமூன்று கோடி (330,000,000) சக்திகளை 'தேவர்கள் - தேவதைகள்' என்று நம்புகிறார்கள்.**”

அஸார் ஸாஹேப், பகலில் தூங்குவதைப் பார்த்து, பாபா கடிந்து கொண்டார். சிறிது நேரத்தில் அமைதியாகி, '**மூன்றாம் கண்**' என்றால் என்ன என்பதைப் பற்றி விளக்கினார்:

**நம்முடைய இரண்டு கண்களுடன் சேர்த்து, மூன்றாவதாக நம்முள்ளே இன்னுமொரு கண், இரு புருவங்களுக்கும் நடுவே அமைந்து, இதர இரண்டு கண்கள் வழியாகப் பார்க்க முடிகிறது - யோகிகள் இதனை**

**அறிவர். உயர் நிலையை அடைந்த உண்மையான யோகிகள், கபாலத்தில் இருக்கும் மூன்றாவது கண் வழியாகக் கடவுளைக்** (இவ்வுலகைப் படைத்தப் பிரம்மனை) **காண முடியும்.**

**சத்குரு, அவரது விருப்பத்திற்கு இணங்கினாற் போல, மூன்று விதமான பொருட்களைக் காண இயலும். அவரது வெளி கண்களால் பிரபஞ்சத்தையும் இப்பூவுலகையும் காணமுடியும். உள் கண்ணால் கடவுளைக் காணலாம். மூன்றாம் கண் எனும் மையத்தின் வழியாக அவரிடமிருந்தே உருவாகும் அனைத்தையும், எண்ணிலடங்கா வட்டவடிவில், அவர் தன் வெளி கண்களால் அனுபவப்பூர்வமாகக் காண்கிறார். அவ்வாறு பிரம்மத்தைக் காணும் யோகிகள் ஆயிரக்கணக்கில் இருக்கக்கூடும். ஆனால் சத்குருக்கள் ஒரு சிலரே ஆவர்.**

இவ்வாறு விளக்கம் அளித்த பிறகு, மெஹர் பாபா, உணவு உண்ணும் அறையின் அருகில் அப்படியே சாய்ந்த வண்ணம் தூங்குவது போலத் தோற்றமளித்தார். அதேவேளை, டாக்டர் கனி, பாபாவின் கால்களை அழுத்திக் கொண்டிருந்தார். மாலை ஆறு மணியளவில் விழித்ததும் - வழக்கத்திற்கு மாறான நீண்டநேர தூக்கத்தால் - விசித்திரமாக, அதிகாலை என்ற எண்ணத்தில் குஸ்தாஜியை அழைத்து, '**தேநீர் மற்றும் காலை சிற்றுண்டி தயாரா?**' என வினவினார். 'மாலைவேளை ஆகிவிட்டது, இரவு உணவு தயார்' என்று சீடர்கள் கூறியதைக் கேட்டு பாபா, "**இதுவரையிலும் இவ்வாறு நான் தூங்கியதில்லை. இந்தத் தூக்கத்தை நான் ஸாக்கோரியிலிருந்து கொண்டு வந்திருக்க வேண்டும்!**" என்றார்.

அடுத்த நாள் மாலையில், இரவு உணவுக்குப் பிறகு, பாபா அனைத்து மண்டலியையும் மன்ஸிலின் முன்னறையில் அழைத்து இவ்வாறு குறிப்பிட்டார்:

"**நவம்பர் 1ஆம் நாளிலிருந்து, நான், உள்ளளவில், ஆன்மீகப் பணியைத் தீவிரப்படுத்த உள்ளேன். என்னுடன் இருக்க விரும்பும் அனைவரும் அதிகாரப்பூர்வமான முத்திரை பதித்த ஒப்பந்த பத்திரத்தில் கையெழுத்திட வேண்டும். அனைவரும் இது விஷயத்தில் கவனமாக, சிந்தித்து முடிவெடுக்க வேண்டியது அவசியம். ஏனெனில் கையெழுத்துக்குப் பின்னர், எவ்விதமான சூழ்நிலையிலும், உங்கள் குடும்பங்களில் துரதிர்ஷ்டவசமான பேரிடர் நேர்ந்தாலும் - என்னுடைய பாதங்களை நழுவ விடாமல் உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டும். குடும்பத்தில் எவரேனும் உயிரிழந்தாலும், அல்லது படுகாயமடைந்த நிலையில் இருந்தாலும், இல்லையேல் துரதிர்ஷ்டத்தால் துன்பம் அனுபவித்தாலும், நீங்கள் எப்பொழுதும் என்னுடனே இருக்க வேண்டும்.**" பாபா, டாக்டர் கனியிடம் அனைவருக்காகவும் ஒப்பந்தத்தை வாசித்து விளக்குமாறு கேட்டுக்கொண்டார்.

**1922, அக்டோபர் 18, இப்பத்திரத்தில் கீழே கையெழுத்திட்டுள்ள நாங்கள், முழு உணர்வோடு, பூரண விருப்பத்துடன், எந்த சூழ்நிலையிலும், 1922, நவம்பர் 1ஆம் நாளிலிருந்து மெஹர் பாபாவை விட்டு விலகமாட்டோம் என்பதை இதன் மூலம் ஒப்புதல் அளிக்கிறோம். மேலும், நாங்கள் மெஹர் பாபாவுடன் - எங்கள் குடும்ப நிகழ்வுகளில் கவனம் செலுத்தாமல், குடும்பத்தில் நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள் அல்லது பெற்றோர்கள் உயிரிழந்தாலும், ஏதாவது வகையில் துன்பங்கள் எதிர் கொண்டாலும் - தொடர்ந்து உடனிருப்போம் என்றும் ஒப்புதல் வழங்குகிறோம். குறிப்பிடப்பட்ட காலக்கெடு நிறைவடைந்ததும், மெஹர் பாபா ஏற்கனவே கூறியது போல், 1923, ஜூன் 10ஆம் தேதிக்கு முன்னர், அவருடைய வாக்குறுதிகளை நிறைவேற்றுவார். ஏதாவது இக்கட்டான சூழ்நிலைகள் காரணமாக நாங்கள் மெஹர் பாபாவுடன் இணைந்திருக்க முடியாத தருணத்தில், அவர் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டிய கட்டாயம் இராது.**

இந்த ஒப்பந்தத்தை வாசித்து விளக்கிய பின்பு, மண்டலியின் கையெழுத்துக்காகக் கொடுக்கப்பட்டது. அஸார் ஸாஹேபைத் தவிர அனைவரும் கையெழுத்திட்டனர். அவரைக் கேட்டபோது, காரணம் எதுவும் கூறாமல் வெளிப்படையாக மறுத்து விட்டார். பாபா அவரைக் கண்டித்து மன்ஸிலிலிருந்து வெளியேறுமாறு கட்டளையிட்டார். மேலும், ஒரு முறை கையெழுத்திடாமல் வெளியே சென்றால் மீண்டும் மன்ஸிலில் வரமுடியாது என உறுதியாகக் கூறிவிட்டார். அத்துடன் அனைத்து சீடர்களும் அவரவர் அறைக்குச் சென்றபோது பாபா, அஸார் ஸாஹேபுடன் தனியாகப் பேசிக்கொண்டிருந்தார்.

அஸார் ஸாஹேப் பத்திரத்தில் கையெழுத்திட்ட பின்னர் இரவில் வெளியே சென்றுவிட்டார். ஆனால் கையெழுத்திடும் வேளையில் 'என்னால் முடிந்தவரையில் கடைப்பிடிப்பேன்' என்ற குறிப்பையும் எழுதியது, அவர் திரும்பிவரும் வாய்ப்பை மறைமுகமாக எடுத்துக் காட்டியது.

மண்டலி அனைவரும் அக்டோபர் 19 அன்று இரவில் மன்ஸிலிலிருந்து புறப்பட்டு ஸாக்கோரிக்குச் சென்றனர். காக் ஸாஹேப், டாக்டர் கனி இருவரும் பாபாவுடன் மன்ஸில்-எ-மீமில் இருந்தனர். அடுத்த நாள் காலையில் ஸாக்கோரி வந்ததும், மஹாராஜ் நீண்டநேரம் அவர்களுடன் அமர்ந்து பல கதைகள் மட்டுமின்றி உபதேசங்களும் வழங்கினார். முக்கியமாக, 'எந்த சூழ்நிலையிலும், இன்பம் துன்பம் இரண்டிலும், மெஹர் பாபாவைக் கெட்டியாகப் பற்றிக்கொள்ள வேண்டியது அவசியம்':

"மேர்வானின் கட்டளைகளை கவனமாகக் கேட்டு, கீழ்ப்படிய வேண்டும். அவ்வாறு செய்வது சிரமமாக இருந்தாலும், மகிழ்ச்சியுடன் அதைச் செய்ய முயல வேண்டும். ஒருவேளை, கஷ்டங்கள் உங்கள் பொறுமையின்

எல்லையைக் கடந்துவிட்டால், மேர்வானிடம் பணிவோடு எடுத்துச் சொல்லுங்கள். அவர் உங்கள் பாரத்தைக் குறைப்பார். சூழ்நிலைகள் உங்களுக்கு வசதியாகவோ, மாறாகவோ இருக்கலாம். ஆனால் மேர்வான் மீதுள்ள பிடியை மட்டும் தளர விடக்கூடாது. எக்காரணத்தைக் கொண்டும் அவரைவிட்டு விலகி விடாதீர்கள். ஒவ்வொரு நாளும் இறைவன், மேர்வான் வழியாக மேலும் மேலும் வெளிப்படுகிறார். எல்லா சூழ்நிலையிலும், ஏதாவது வழியில், எப்படியாவது அவரோடு இணைந்திருங்கள்.”

மெஹர் பாபாவின் கட்டளைகளுக்கு இணங்கி, அவருடைய மனநிறைவு மற்றும் பணியில் எப்போதும் கவனமுடன் இருக்கவேண்டும் என்பதை சத்குரு உபாஸனி மஹாராஜ் திடமாக வலியுறுத்தினார். அவரின் அறிவுரைகளுக்குப் பிறகு துர்கா பாய், மஹாராஜின் முக்கிய பெண் சீடர்களில் ஒருவர், சுவையான உணவு வகைகளைப் பரிமாறினார். சத்குரு உபாஸனி மஹாராஜின் மாபெரும் அற்புதமான அவையில், சீடர்கள் இரண்டு இனிய நாட்களைக் கழித்தனர். மெஹர் பாபா அவரை ‘**யோகிகளின் அரசன்**’ என்று குறிப்பிடுவது உண்டு.

மெஹர் பாபாவின் திட்டப்படி, சீடர்கள் அக்டோபர் 23 அன்று ஸாக்கோரியிலிருந்து புறப்பட்டு, ஹஸ்ரத் பாபாஜானை சந்திக்க பூனா வந்தனர். பாபாஜானை தரிசனம் செய்து, அவருடைய அன்பு மகனைப் பற்றிய கேள்விகளுக்கு விடையளித்து, பின்னர் உடனடியாக மும்பைக்குப் புறப்பட்டுச் சென்றனர். ஸாக்கோரியில் தங்கியிருந்த விபரம் மற்றும் பாபாஜானைப் பற்றிய விஷயங்களைக் கேட்டு பாபா பெருமிதம் அடைந்தார்.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை, மெஹர் பாபா ஏழைகளுக்குத் தானம் வழங்கும் ஒரு நிகழ்ச்சிக்காகத் திட்டமிட்டிருந்தார். ராம்ஜூ அப்துல்லா, டாக்டர் கனி இருவரையும் கடைவீதிக்கு அனுப்பி, நூறு காட்டன் சட்டைகளை வாங்கிவரக் கூறினார். இதர சீடர்களிடம் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள், கண்பார்வையற்றவர்கள், கைவிடப்பட்ட ஆதரவற்றவர்கள் அனைவரையும் கண்டுபிடித்து மன்ஸிலுக்கு அழைத்து வருமாறு உத்தரவிட்டார். சாதாரணமாக. மும்பையில் ஆயிரக்கணக்கான பிச்சைக்காரர்களைக் காணமுடியும். ஆனால் அன்று, ஞாயிற்றுக்கிழமை உண்மையிலேயே வறுமையான, உதவியற்ற ஏழைகளில் நூறு பேரைக் கூடக் கண்டு கொள்வது சிரமமாக இருந்தது.

சிறிது நேரத்தில், ருஸ்தம் முடமான ஒருவரை, கட்டை வண்டியில் வைத்து வழி முழுவதும் அவரை இழுத்து வந்தார். வழிப்போக்கர்கள், இவ்வளவு நன்றாக உடையணிந்த ஒருவர் இவ்வாறு செய்வதை உற்று நோக்கினர். பார்ப்போருக்கு எப்படித் தெரியும், ருஸ்தத்தின் சட்டை பையில் பணம் எதுவுமில்லை, மற்றும் கட்டை வண்டியும் இரவல் வாங்கியது என்று! ருஸ்தம் கௌரவமான, பணக்கார தோற்றத்தில் இருந்தாலும், அவரிடம் ஒரு நயா பைசா கூட இல்லை, ஏனெனில் வெளியே செல்லும்போது கையில் பணம் எதுவும் எடுத்துச் செல்லக்கூடாது என்பது மெஹர் பாபாவின் கட்டளை.

டாக்டர் கனி, மும்பை தாதர் மாவட்டத்தில் மூன்று மைல்கள் அலைந்தும் அவரால் ஒரே ஒரு கைவிடப்பட்ட ஏழையை மட்டுமே கண்டுகொள்ள முடிந்தது. வஜிப்தர் மும்பையின் பெண்டி பஜார் பகுதிக்குச் சென்று, ஒரு சில ஏழைகளைத் தேடிக் கண்டுபிடித்தும், பணம் எதுவும் கையில் இல்லாததால் அவர்களை மன்ஸிலுக்கு அழைத்து வருவது என்பது பெரிய பிரச்சினையாயிற்று! வஜிப்தர் மிகச்சிறந்த பிரபலமான கிரிக்கெட் வீரர் மட்டுமின்றி பிறரிடம் சாதுரியமாகப் பேசி, பழகி நம்பிக்கை தரக்கூடியவர். அவர் ஒரு பிச்சைக்காரனிடம் பேசி, வேண்டிய பணத்தை கடன் வாங்கி, மன்ஸிலுக்குச் சென்றபின், திரும்பி வருவதற்கும் சேர்த்து, பணத்தைத் தருவதாகக் கூறி மன்ஸிலுக்கு அழைத்து வந்தார். இவ்வாறு, பல ஏழைகளை வஜிப்தர் மன்ஸில்-எ-மீம்க்கு அழைத்து வர முடிந்தது.

ராம்ஜூ பைக்கலா (BYCULLA) பகுதியில் அலைந்து திரிந்து ஒரு பிச்சைக்கார கூட்டத்தைக் கண்டுபிடித்தார். அதிர்ஷ்டவசமாக அவருக்குப் பழக்கமான ஒரு நண்பரை எதிர்கொண்டு, அனைவரையும் மன்ஸில்-எ-மீம் அழைத்துவர தேவையான ஒரு ரூபாய் கேட்டு வாங்கினார். மெஹர் பாபாவின் கட்டளைகளால் மண்டலியில் ஒவ்வொருவரும் இவ்வாறு கஷ்டமான சூழ்நிலைகளை சந்திக்க நேர்ந்தது. இந்த ஆதரவற்ற ஏழைகளுக்கு மெஹர் பாபாவின் சீடர்கள் மீது, மற்றும் அவர்களின் நோக்கங்கள் மீது அவ்வளவு நம்பிக்கை வரவில்லை; போக்குவரத்துச் செலவுக்கே பணம் இல்லாத நிலையில், அவர்களால் இலவசமாக உணவும் உடையும் எப்படி வழங்க முடியும் என்று ஆச்சரியப்பட்டனர். சிலர், இவர்களின் சதித்திட்டத்தில் மாட்டி, கடைசியில், ஏதாவது புகலிடத்தில் கொண்டுத் தள்ளிவிடுவார்களோ என்ற அச்சத்தில் சந்தேகமும் அடைந்தனர். ஆனால் மன்ஸில்-எ-மீமில் நுழைந்த போது மெஹர் பாபா வழங்கிய அற்புதமான வரவேற்பைக் கண்டு அனைவரும் மெய்சிலிர்த்துப் போயினர். அவர்களுடைய சந்தேகம் அப்போதுதான் அகன்றது.

மன்ஸில்-எ-மீமில் இருநூறுக்கும் மேற்பட்ட ஏழைகள் வரவழைக்கப்பட்டனர். அவர்களில் பெரும்பாலான ஆதரவற்றவர்களை பாபா நீராட்டி, அனைவருக்கும் அவரது கைகளால் உணவு வழங்கினார். ஒவ்வொரு ஆண் அல்லது பெண் ஏழைக்கும் உடைகள் வழங்கி அவர்களில் மூவருக்கு மலர் மாலை அணிவித்தார். அவரது இரக்கமிக்க பார்வையால் அனைவரிடமும் அன்பு காட்டி, ஆசீர்வதித்து, திருப்பி அனுப்பி வைத்தார். ருஸ்தம் அந்த முடமான ஏழையை, மறுபடியும் கட்டை வண்டியில் ஏற்றி அழைத்துச் சென்றார். ஆனால் இப்போது அந்த ஏழையிடம் பெரியதொரு மாற்றம் தென்பட்டது - புதிய உடை, கழுத்தில் மலர் மாலை, முகத்தில் இனம் புரியாத மகிழ்ச்சி.

அனைவரும் திரும்பிச் சென்ற பின்னர் எஞ்சியிருந்த உணவை, சீடர்கள் உண்டு உபவாசத்தை நிறைவு செய்தனர். அன்று காலை 'ஏழை நிகழ்ச்சி' முடியும் வரை எவரும் உணவு உண்ணக்கூடாது என்று மெஹர் பாபா கூறியிருந்தார்.

இந்தியாவில் வெவ்வேறு கோயில் சந்நிதிகளில் விதவிதமான அற்புதங்கள் நிகழ்வது வழக்கம். மும்பை அருகில் கல்யாண் நகரில் 'மலங்க் ஷா' எனும் முஹமதிய சாதுவின் சந்நிதியில் அற்புதங்கள் நிகழ்வதாகக் கேள்விப்பட்டு மக்கள் இன்றும் வருவதுண்டு. மெஹர் பாபா மன்ஸில்-எ-மீமில் இருந்தபோது ஒரு முறை அங்குச் செல்ல திட்டமிட்டார்.

மெஹர் பாபா, பல சீடர்களுடன் அக்டோபர் 30 அன்று மும்பையிலிருந்து ரயிலில் பயணம் செய்தார். 'கல்யாண்' (KALYAN) ரயில் நிலையம் சென்றடைந்ததும், இரண்டு வாடகைக்காரில் மலங்க் கோட்டையை (MALANGGAD HILL) நோக்கிப் பயணம் செய்தனர். வழியில் பல தடங்கல்கள். இறுதியில் சமாதி இருக்குமிடத்தைக் கண்டுகொள்ள முடியாத நிலை.

மெஹர் பாபா அருகிலிருந்த ஒரு மர நிழலில் ஓய்வெடுக்கச் சென்று, சீடர்களிடம், மலங்க் ஷாவுக்காக (MALANG SHAH) எடுத்து வந்த பூக்களைத் தரையில் தூவி பூமேடை அமைத்து, பணிவுடன் அனைவரையும் வணங்கக் கோரினார். கடவுள் முன்னிலையில், அல்லாவின் நாமத்தில் மெஹர் பாபா அவரையும், சீடர்களையும் 'மலையேறி தனது திட்டத்தை நிறைவேற்ற முடியாததற்காக' மன்னித்தார். பாபா அனைவரிடமும் இதைப் பற்றி எதுவும் நினைவில் கொள்ளாமல் மறந்து விடும்படியாகக் கேட்டுக் கொண்டார். ஏதோ காரணங்களுக்காக வழியைத் தவறவிட்டதும் பாபாவின் விருப்பம்தான் என்று அனைவரும் உணர்ந்தனர்.

சத்குரு உபாஸனி மஹாராஜின் வாழ்க்கை வரலாறு, உருது மொழியில் வெளியிடும் பணி, இறுதி கட்டத்தை எட்டியது. 1922, நவம்பர் மாதத்தில் சுவரொட்டிகளும், விளம்பரத்துண்டு பிரசுரங்களும் அச்சடிக்கப்பட்டன. 'ஸர்கிள் & கம்பெனி' என்ற பெயரில் ஒரு வெளியீட்டு நிறுவனம் ருஸ்தத்தின் கீழ், சட்ட பாதுகாப்புடன் அமைக்கப்பட்டது. மெஹர் பாபா மன்ஸில்-எ-மீமில் இருந்த அனைத்து சீடர்களுக்கும், துண்டு பிரசுரங்கள் மற்றும் சுவரொட்டிகளை மும்பையிலுள்ள முக்கியமான இடங்களில் எப்படி விநியோகிப்பது என்பதைப் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார்.

நவம்பர் 3 அன்று சத்குரு உபாஸனி மஹாராஜின் புகைப்படம் அச்சடிக்கப்பட்ட சுவரொட்டிகளை, மிகப்பெரிய அளவில் முஹமதியர் வாழும் 'ஜும்மா மஸ்ஜித்' (JUMMA MASJID) பகுதியில் விளம்பரம் செய்து, துண்டு பிரசுரங்களை அங்கு வாழும் முஹமதியர்கள் மத்தியில் விநியோகம் செய்யுமாறு மெஹர் பாபா டாக்டர் கனியை அனுப்பி வைத்தார். டாக்டர் கனி, பெரும் தயக்கத்துடன், அஸ்பந்தியார் (ஸொராஸ்டிரியன்) மற்றும் அர்ஜுன் ஸுப்பேக்கர் (இந்து) அவர்களுடன் புறப்பட்டார். டாக்டர் கனி, முஸ்லிம் இனத்தைச் சார்ந்தவர், மெஹர் பாபாவுடன் வந்திணையும் முன்பு மசூதிகளுக்கு வழக்கமாகச் சென்று வந்தார். டாக்டர் கனிக்குப் பரிச்சயமான பல முஸ்லிம்

நண்பர்கள், இவ்வாறு கனி, ஓர் இந்து குருவின் சுவரொட்டிகளை விளம்பரம் செய்வதை மிகவும் கேலியாகப் பேசி, பரிகாசம் செய்தனர்.

அடுத்ததாக, மெஹர் பாபா, ராம்ஜு அப்துல்லாவை 'ஹாச்சி மொஹல்லா' (HACCHI MOHALLA) பகுதியில் அமைந்த 'ஜக்காரியா மஸ்ஜித்'துக்கு (JAKARIA MASJID) அதே விளம்பரத்திற்காக அனுப்பி வைத்தார். ராம்ஜுவும் முஸ்லிம் குடும்பத்தில் பிறந்து, வளர்ந்து அவ்விடத்தில் மிகவும் பிரபலமானவர். ஆகையால் வேறு எவரையேனும் அங்கே அனுப்பி வைக்க பாபாவிடம் கெஞ்சிக் கேட்க, பாபாவும் அதற்கிணங்கி, அப்துர் ரஹ்மான் எனும் சீடரை அங்கு அனுப்பி வைத்தார். ராம்ஜுவை மேலுமொரு முஸ்லிம்கள் வாழும் இடமான 'ஃபூல்கல்லி'க்கு (PHOOL GALI) அனுப்பினார். ராம்ஜு சுவரொட்டிகளை மசூதியின் சுவர், ஜன்னல்களில் ஒட்டிய பிறகு மசூதியிலிருந்து வெளியே வந்தவர்களுக்கு, துண்டு பிரசுரங்களையும் வழங்கினார். ராம்ஜுவும் அங்கு வாழ்ந்த முஸ்லிம் நண்பர்களின் கடுமையான கண்டனங்களிலிருந்து தப்ப முடியவில்லை.

உருது, பெர்ஸியன் மொழியிலிருந்து உருவானது. இந்தியாவில் வாழும் முஸ்லிம்கள் சாதாரணமாகப் பேசும் மொழி இது. இருந்தாலும், மன்ஸில்-எ-மீமில் வாழ்ந்த அனைத்து சீடர்களையும் 'ஏழையின் பாதுகாவலன்' என்ற இவ்வரலாற்றுப் புத்தகத்தை, மத சார்பின்றி நண்பர்கள் மற்றும் உறவினர்களிடையே விற்பனைச் செய்யுமாறு பாபா கேட்டுக் கொண்டார்.

ராம்ஜு அப்துல்லா, குறிப்பாக, இப்புத்தகத்தை விற்பனை செய்வதில் பெரும் சிரமத்தை சந்தித்தார். மும்பையில் வாழ்ந்த பெரும் பணக்கார உறவினர் ஒருவர், பல புத்தக பிரதிகளை வாங்குவார் என்ற நம்பிக்கையில் அணுகிய போது, "எவ்வளவு காலமாக இந்த விதமான ஆதரவற்ற நிலையில் வீடுவீடாகச் சென்று புத்தகங்கள் விற்பனை செய்கிறாய்?" என்று கேட்டார். ராம்ஜு, ஒரு காலத்தில் வெற்றிகரமான துணி வியாபாரியாக இருந்தவர், தடுமாற்றத்தில் விரைவாக வெளியேறினார். இருந்தாலும் இரண்டு பிரதிகள் மட்டுமே விற்க முடிந்தது.

ராம்ஜு, மஹாராஜின் வரலாற்றுப் புத்தகங்களை ஒரு நாள் தனது உறவினரின் திருமண விழாவில், அதன் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறி விற்க முயன்றார். அங்கு வந்த முஸ்லிம்கள் ராம்ஜுவை ஏளனம் செய்து, கலாட்டாவில் ஈடுபட்டு, "நீங்கள் ஓர் இந்து குருவைப் பற்றி முஸ்லிம்களுக்குச் சொல்கிறீர்கள்! நீங்கள் என்ன பைத்தியமா? இந்தக் குப்பையை நாங்கள் நிஜமாக வாங்குவோம் என்று நினைக்கிறீர்களா?" என்று கேட்டனர்.

இன்னொரு முறை, ராம்ஜு உறவினர் ஒருவரை சந்தித்து, இந்தப் புத்தகத்தின் ஆன்மீக முக்கியத்துவத்தை எடுத்துரைத்த போது, அது செவிடன் காதில் ஊதிய சங்காக ஒரு விளைவையும் ஏற்படுத்தவில்லை. ராம்ஜு, உடனே, இப்புத்தகத்திற்கு முன்னுரை எழுதியவர் டெல்லியில் வாழும், புகழ்பெற்ற 'ஸூஃபி பண்டிதர் குவாஜா ஹாஸன் நிஸாமி' (KHWAJA HASSAN NIZAMI) என்று கூறியதும், அந்த உறவினர், நிதானமிழந்து, ஏளனமாக, "யார்? குவாஜா

நிஸாமியா? முதல்தரமான ஏமாற்றுக்காரன். நிஸாமி வலியுறுத்தும் எதையும் நான் நிச்சயமாக வாங்கமாட்டேன்!" என்றதும், ராம்ஜூ அதிர்ச்சியில் திரும்பிச் சென்றார்.

ஒரு தருணத்தில், ருஸ்தமும் வஜிப்தரும் வழக்கறிஞர் ஒருவரை அணுகி 'ஏழையின் பாதுகாவலன்' பிரதி ஒன்றை அவரிடம் கொடுக்க, அவர் அதை சாதாரணமாகப் புரட்டிப் பார்த்துவிட்டு "என்னை, என்ன செய்யச் சொல்கிறீர்கள்?" என்று வினவினார்

ருஸ்தம் விளையாட்டாக, "நீங்கள் ஏன் நூறு பிரதிகள் வாங்கக் கூடாது? உங்களால் வாங்க முடியும்!" என்றதும் அந்த வழக்கறிஞர் சட்டைப் பையிலிருந்து முன்னூறு ரூபாய் எடுத்து ருஸ்தத்திடம் கொடுத்தார். அதற்குப் பின்னர் அவர்களுக்குத் தெரியவந்தது அந்த வழக்கறிஞர் ஆன்மீகத்தில் மிகவும் அக்கறை உள்ளவர் என்று!

பல நாட்களாக ருஸ்தம், வஜிப்தர் இருவரும் மும்பையில் பல்வேறு இடங்களில் அலைந்து திரிந்து, புத்தகத்தை விற்க முயற்சித்தனர். அருகில் உள்ளவர்கள் அளித்த தகவல்படி, இருவரும் ஒரு பெரிய செல்வந்தரை அவர் அலுவலகத்தில் சந்திக்கச் சென்ற போது, அவர் ஒரு சாதாரண மனிதனைப் போலத் தரையில் அமர்ந்திருந்தார். அவர் அணிந்திருந்த எளிய ஆடை அவர்களை அதிர்ச்சி அடைய செய்தது. ஆனால் இருவரையும் அவர் அன்புடன் வரவேற்று இறுதியில் ஏராளமான பிரதிகளை வாங்கினார்.

வஜிப்தர், ஒரு புகழ்பெற்ற கிரிக்கெட் வீரர், விளையாட்டு வேளையில், பார்வையாளர்கள் இருக்குமிடம் சென்று தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, புத்தகத்தை விற்க முயற்சித்தார். அவரை அறிந்தவர்கள் பலர், இவ்வளவு சிறந்த விளையாட்டு வீரர், இவ்வாறு அலைந்து, புத்தகங்களை விற்க வேண்டிய நிலையைக் கண்டு பரிதாபப்பட்டனர். அணி தலைவராக இருந்த போதும் விளையாட்டு இடை வேளைகளில் புத்தகங்களை விற்க முயற்சித்தார்.

ராம்ஜூ, ஒரு முறை தனது குடும்பத்திற்குப் பரிச்சயமான 'ரகசிய சேவை' அதிகாரி ஒருவரை சந்தித்து, புத்தகத்தை விற்க முயற்சித்தார். முதலில் அவர் ஆன்மீகத்தில் அதிக ஆர்வம் உள்ளவர் போல, பல விஷயங்களைக் குறித்துப் பேசினார். ஆனால் உரையாடலின் நடுவே அந்த அரசாங்க அதிகாரி, அவர் அவருடைய பணியைச் செய்ததாகவும், மன்ஸிலில் என்ன நடக்கிறது என்பதை அறிந்து கொள்ளும் எண்ணத்தில்தான் இவ்வாறு பேசியதாக உண்மையை ஒப்புக் கொண்டார். பதட்டமடைந்த ராம்ஜூவிடம் அவர் ஒளிவு மறைவின்றி இவ்வாறு கூறினார்: "பல வாரங்களாக மன்ஸில்-எ-மீம் வளாகத்தை அரசாங்க அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர். தொலைத்தந்தி, அலுவல்கள் அனைத்தும் அலசி ஆராயப்படுகின்றன. மேலும், அரசியல் மற்றும் குற்றவியல் நோக்கத்துடன் அங்கே ஒரு கூட்டம் இரகசியமாகச் செயல்பட்டு வருவதாகவும் சொல்லப்படுகிறது." ராம்ஜூ, உடனே மெஹர் பாபாவை பற்றிக் கூறி மன்ஸில்-எ-மீமில் நடக்கும் நிகழ்வுகளை விளக்கிக் கூறினார். இறுதியில்,

அந்த அதிகாரி இரண்டு பிரதிகளை வாங்கி ராம்ஜுவை ஆச்சரியத்தில் ஆழ்த்தினார்.

இவ்விதமான நடவடிக்கைகள் மூலம், மெஹர் பாபா மன்ஸில்-எ-மீமில் வாழ்ந்த சீடர்களை பல்வேறு அனுபவங்களுக்கு உட்படுத்தி, அலட்சியம், அவமானம், கேலி, கிண்டல் மற்றும் அவமதிப்பை எதிர்கொள்ளும் நிலையில் அடக்கமாகவும், உறுதிப்பாட்டுடனும் இருக்கும் சூழ்நிலைகளை உருவாக்கினார். சத்குரு உபாஸனி மஹாராஜின் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகங்களை விற்பதில் எவ்வளவோ கடினமான சூழ்நிலைகள் இருந்த போதிலும், இம்முயற்சி வழியாக மும்பையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் மெஹர் பாபா, உபாஸனி மஹாராஜ் இருவரையும் பற்றித் தெரிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றனர்.

இருப்பினும், அக்காலம் மிகவும் விசித்திரமான நிலைமையை சந்தித்தது. வெவ்வேறு சமுதாயத்தைச் சார்ந்தவர்கள், இவ்வாறு கடைவீதிகளில், உருது மொழியில் எழுதப்பட்ட ஒரு பிராமண சமுதாயத்தைச் சார்ந்த சத்குருவின் வாழ்க்கை வரலாற்று புத்தகத்தை விற்று விளம்பரப் படுத்துவது என்பது - அதுவும் அவரது குருநாதர் ஒரு முஹமதிய மதத்தை சார்ந்தவர் (ஷிர்டி சாய் பாபா) மேலும் அவர்களுடைய முக்கிய சீடர் ஸொராஸ்டிரிய மதவழி வந்தவர் (மெஹர் பாபா) - வரலாறு கண்டிராத ஒரு சம்பவமாக அமைந்தது.

1922, நவம்பர் 19 அன்று, நாஸிர் அஹமத் (NAZIR AHMED) என்பவர் மெஹர் பாபாவை சந்திக்க வந்தார். பாபாவை அவர் எப்படித் தெரிந்து கொண்டார் என்று கேட்டபோது, நாஸிர் அஹமத் இவ்வாறு பதிலளித்தார்:

“ஒரு நாள் நான் வீட்டுக்குத் திரும்பி வந்தபோது, என்னுடைய பணியாள் என்னிடம் எதிர்பாராத விருந்தினர் ஒருவர் எனக்காகக் காத்திருப்பதைத் தெரிவித்தார்; அவர் மதிப்பிற்குரிய ஒரு வயதான பெரியவர், பெயர் அப்துல் வஹித் (ABDUL VAHID) என்று தெரிந்து கொண்டேன். உரையாடலின் போது ‘நான் மெஹர் பாபாவைச் சென்று சந்திக்க வேண்டும்’ என்று சாதாரணமாகக் குறிப்பிட்டார். நான் அதற்கு ‘அவர் ஓர் ஈரானிய குரு எனக் கேள்விப்பட்டாலும், முஸ்லிம் குரு அல்லாததால் அவரை சந்திக்கத் தயங்கினேன்’ என்றேன்.

“அப்துல் வஹீத் அப்போது இவ்வாறு விளக்கம் அளித்தார்: ‘குருநாதர்களுக்கு மதம் கிடையாது. அந்த வகையில் நமது காலத்தில் அவர் முதலிடம் வகிப்பவர். இக்காலத்தில், முடிந்தவரை பல சாதுக்களை (வாலிகள்) உருவாக்கும் சிறப்புக் கடமையைப் பெற்றவராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் அவரின் அரவணைப்பு அனைவரையும் சாதுக்களாக மாற்றும் சக்திமிக்கது. நீங்கள் சென்று அவரை தரிசனம் செய்து, என்னுடைய வணக்கங்களைத் தெரிவியுங்கள்.’”

பதிலுக்கு மெஹர் பாபா புன்னகைத்து இவ்வாறு குறிப்பிட்டார்: “**அப்துல் வஹீத் ஆன்மீகத்தில் உயர் நிலையை எட்டியவர். அதே வேளை, நாஸிர் என்னுடைய ஆலோசனைக்கு செவிசாய்த்த அதிர்ஷ்டசாலி.**”

பலநாட்களாக மன்ஸில்-எ-மீமில் சீடர்களிடையே பதற்றம் நிலவியது. மெஹர் பாபா விளம்பரப் பலகையில் இவ்வாறு அறிவித்திருந்தார்:

**மன்ஸிலில் யாரோ ஒருவர் தீய செயல் ஒன்றைச் செய்துள்ளார்.**

-மேர்வான்

சீடர்கள், முதலில், அனைவருக்கும் இது ஒரு பொதுவான எச்சரிக்கை என்று எடுத்துக் கொண்டனர். எனினும், டிசம்பர் 4ஆம் நாள் வந்த அடுத்த அறிவிப்பு, மண்டலியின் அமைதியை இழக்கச் செய்தது.

**குற்றவாளி தன்னுடைய குற்றத்தை மூன்றே நாட்களில் என்னிடம் ஒப்புக்கொள்ளாவிடில், நான் மன்ஸிலை விட்டுச் சென்று விடுவேன்.**

-மேர்வான்.

சீடர்களிடையே சந்தேகம் நிலவவே, கேள்வி மேல் கேள்வி கேட்டு, ஒருவரையொருவர் குற்றம் சுமத்தினர். சட்டத்தை மீறியவர் யார் என்பதைக் கண்டுபிடிப்பதில் அனைவரும் எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. இரண்டு நாட்களுக்குப் பிறகு மேலும் ஓர் அறிக்கை வெளியிடப்பட்டது:

**குற்றவாளி தனது குற்றத்தை ஒப்புக்கொள்ள இன்னும் ஒரு நாளே எஞ்சியுள்ளது, இல்லையேல் நான் மன்ஸிலிலிருந்து சென்று விடுவேன்.**

--மேர்வான்.

**6 டிசம்பர் 1922**

மன்ஸில்-எ-மீமில் அனைவரும் கலக்கமடைந்த நிலையில் எதிர்கொள்ளவிருக்கும் விளைவுகளை எண்ணி அச்சத்தில் ஆழ்ந்தனர். மாலை நேரம் நெருங்கவே பதற்றம் அதிகரித்தது. பாபா அவருடைய அச்சுறுத்தலை நிறைவேற்றுவாரா? தானாகவே முன்வந்து தனது குற்றத்தை ஒப்புக்கொள்ளத் தயங்கும் அந்தப் போக்கிரி யார்? ஒருவனுடைய தவறுக்காக அனைவரும் தண்டிக்கப்படுவார்களா?

மன்ஸிலில் மனச்சோர்வால் இருள் மூடவே, குறிப்பிட்ட நேரம் நெருங்கியது. பாபா தனது அறையிலிருந்து புயல் வேகத்தில் வெளிவந்து, சிங்கம் போல மெஹபூபா மீது பாய்ந்தார். அப்போது மெஹபூபா மன்ஸிலில் பணியாளாகப் பணிபுரிந்து வந்தார். அவரைப் பற்றிப் பிடித்து, குற்றம் சாட்டினார் பாபா, “**நீ ஏதாவது தீய செயலில் ஈடுபட்டாயா?**” என்று கேட்டதும், மெஹபூபா பயத்தில் நடுங்கி, அப்படி எதுவும் செய்யவில்லை என்று பொய் கூறினார்.

“**என்ன? எதுவும் செய்யவில்லையா?**” பாபா கோபத்தில் வினவினார். “**என்னிடம் பொய் சொல்ல உனக்கு வெட்கமாக இல்லையா?**” இடம், நேரம், தவறு நடந்த சம்பவ சூழ்நிலைகள் மற்றும் சம்பந்தப்பட்ட பெண்ணின் பெயரையும் பாபா எடுத்துக் கூறியதும், மெஹபூபா உண்மையை ஒப்புக் கொண்டார். பாபா அனைத்தையும் கண்கூடாகப் பார்த்தது போலப் புட்டு புட்டு

வைத்தார். பாபா, மெஹபூபாவை மன்னித்தாலும், மன்ஸில்-எ-மீமில் வாழத் தடைவிதித்து, முன்ஷி ரஹிம் வீட்டிற்கு வேறு ஏதேனும் வேலை தேடிக் கொள்ளுமாறு கூறி அனுப்பி வைத்தார்.

நவல் தலாட்டி அப்போது உடல் நலமின்றி இருந்ததால், மெஹர் பாபா அவரை, அடிக்கடி அவரது இல்லத்தில் சந்தித்து வந்தார். நோயால் படுக்கையில் இருந்த வேளையில், ஷிர்டி சாய் பாபா அவரது கனவில் தோன்றி இவ்வாறு கூறினார்:

“எவ்வித கஷ்டங்களை நீ எதிர்கொண்டாலும், அவை அனைத்தையும் மெஹர் பாபா வேண்டுமென்றே உனக்கு வழங்கிள்ளார்.

“உனக்கும், உடனிருக்கும் பிறருக்கும், மெஹர் பாபா இளம் வயதாக இருப்பதால் யார் என்ற உண்மைத் தெரியாது. அவரை ரசூல்-எ-குதா (முஹமது) என்று அழைப்பதில் எந்தத் தவறுமில்லை.

“அவரை விட்டு விலகி விடாதீர்கள். மண்டலியில் பலர் அவரை விட்டுச் சென்று விடுவார்கள். பதினான்கு பேர் மட்டுமே உடனிருப்பர். ஆனால், மெஹர் பாபாவின் வட்டத்தில் நீ இருப்பதை உபாஸனி மஹாராஜும், நானும் பார்த்துக்கொள்வோம்.”

நவல், தான் கண்ட கனவால், மெஹர் பாபாவின் தெய்வீக தன்மை மற்றும் ஆன்மீக அதிகாரத்தின் மகிமையை ஆழமாக உணரமுடிந்தது.

1922 டிசம்பர் 22 அன்று, மெஹர் பாபா மண்டலியிடம் கண்டிப்புடன் கூறினார்: **“நான் உங்களுக்கு வழங்கிய பணிகளை நீங்கள் முழுமனதுடன் செய்யாதது மட்டுமின்றி, என்னுடைய கட்டளைகளில் கவனக்குறைவாக இருக்கிறீர்கள். இப்போது, உங்கள் அலட்சிய மனப்பான்மையால், நான் உணவு உண்ணவோ நீர் அருந்தவோ மாட்டேன்.”** இவ்வாறு வெளிப்படையாகக் கூறி வருத்தத்தில் வேறு எதுவும் கூறாமல் மாலை நான்கு மணிக்கு தனது அறைக்குள் சென்றுவிட்டார்.

அடுத்த நாள், கரும்பலகையில் பாபா இதை எழுதி அறிவிக்குமாறு அறிவுறுத்தினார்:

**‘உபாஸனி மஹாராஜின் வாழ்க்கை வரலாற்றுப் புத்தக பிரதிகளை நான் குறிப்பிட்ட எண்ணிக்கையில் டிசம்பர் 31ஆம் தேதிக்கு முன்பு விற்பனை செய்யாவிடில், விற்பனையில் தோல்வியுற்றவர் மன்ஸிலுக்கு வெளியே இருக்க வேண்டியது வரும்!’**

**‘நான் தனியாக ஒதுங்கி இருப்பதால், என்னுடைய சிறிய ஆணைகளை மீறலாம் என்று அர்த்தமாகாது!’**

**‘என்னுடைய ஆணைகளில் நீங்கள் எவ்வளவுக்கு எவ்வளவு கவனக்குறைவாக இருக்கிறீர்களோ, அந்த அளவுக்கு நான் உங்களிடமிருந்து விலகி இருப்பேன். ஆனால், என்னை நீங்கள் உங்களுடன் இணைந்து விளையாடி, உணவருந்தி, பேசி, பழகி,**

**உங்களோடு பணிபுரிவதை விரும்புவதானால் என்னுடைய கட்டளைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து உண்மையாகக் கீழ்ப்படிய வேண்டும்.**'

மேர்வான்

23 டிசம்பர் 1922.

1922, டிசம்பர் 24 காலை 11.00 மணிக்கு, மெஹர் பாபா மண்டலியில் குறிப்பாக, பதினான்கு பேரை அவரது அறையில் அழைத்துக் கூறினார்: "**நான் ஏகாந்தவாசம் இருப்பது ஆன்மீகக் காரணங்களுக்காக! மஹாராஜ், ஸாக்கோரியில் அவரை மூங்கில் கூண்டில் அடைத்து வைத்து, சிரமங்களை அனுபவிப்பது அவருடைய சீடர்களின் நன்மைக்காக! என்னுடைய உண்மையான ஆன்மீகப் பணி தொடங்கிய இவ்வேளையில், மண்டலியில் பலர் என்னைவிட்டு விலகிச் செல்வதை நீங்கள் கண்கூடாகக் காணலாம்.**" அந்தப் பதினான்கு சீடர்களும், மறுபடியும், எந்த சூழ்நிலையிலும் குறிப்பிட்ட காலம் வரையிலும் பாபாவுடன் இருப்பதாக வாக்குறுதி அளித்தனர்.

இவ்வேளையில், மெஹர் பாபாவும் அவரைப் பின்பற்றுபவர்களும் மும்பையில் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக, பூனாவில் ஒரு வதந்தி பரவியது. அவர் மக்களை ஏமாற்றி, கொள்ளையடிப்பதற்காக அங்குச் சென்றுள்ளார் எனவும் கூறிவந்தனர். மேலும், அப்பாவிகளை ஏமாற்றி அவர்கள் உடைமைகளைப் பறிக்கும் நோக்கத்தில் மன்ஸில்-எ-மீமை ஒரு வலையாக மெஹர் பாபாவும் அவருடைய ஆதரவாளர்களும் பயன்படுத்தி வருவதாக வதந்தியைப் பரப்பினர்.

இவ்வாறு, ஆரம்பத்திலிருந்தே எதிர்ப்புகள் தோன்றினாலும், பாபா அவற்றைக் கண்டு கொள்ளவில்லை. வெகு காலம் கடந்த பின்னரே சீடர்கள், எதிர்ப்பு என்பது மெஹர் பாபாவின் ஆன்மீகப் பணியில் ஒரு திட்டவட்டமான பகுதியாக, ஒரு முக்கியமான அம்சமாக விளங்கியதை உணர்ந்தனர். சில நேரங்களில், பாபா, எதிரிகள் மற்றும் விமர்சகர்களை அவரவர் மனதில் தோன்றுவதை அப்படியே எடுத்துக் கூறுமாறு ஊக்குவிப்பது உண்டு. மேலும், பாபா '**எதிர்ப்பு அவரது ஆன்மீகப் பணிகளுக்கு நன்மை பயப்பதாக அமையும்**' என்பதை அடிக்கடி குறிப்பிட்டார்.

1922 டிசம்பர் 27ஆம் நாள், பாபா, அனைத்து சீடர்களையும் தன் அறைக்கு அழைத்தார். உணவருந்தாமல் ஏகாந்தவாசம் தொடங்கி இன்று ஐந்தாவது நாள். '**அனுதினம் நடைமுறையில் இருக்கும் சில சிறிய கட்டளைகளைத் தளர்த்த விரும்புகிறீர்களா?**' என்று சீடர்களிடம் விசாரித்தார். நீண்ட நேர உரையாடலைத் தொடர்ந்து, ஆரம்பத்தில் குறிப்பிட்ட 28 உத்தரவுகளைத் தவிர, இதர அனைத்தும் நடைமுறையில் இருக்காது என முடிவெடுக்கப்பட்டது. அதுவரை, அவருடைய இதர கட்டளைகள் அனைத்தும் சொல்லளவில் அமலில் இருக்குமெனக் கூறி இவ்வாறு விளக்கினார்: "**இந்த 28**

**மற்றும் அதற்கு முன்னர் அறிவித்த ஏழு கட்டளைகளையும் காகிதத்தில் அச்சடித்து அனைவருக்கும் ஒவ்வொரு பிரதி வழங்கப்படும்.**" மேலும், "**இன்று மாலை நான் கீழே வந்து உங்களுடன் உணவு உண்ணுவேன். ஆனால் தினமும் ஒருவேளை மட்டுமே. இவ்வித அரை உபவாசம் நான் குறிப்பிடும் நாட்கள் வரைத் தொடரும்**" என்று கூறினார்.

1923 ஜனவரி 3ஆம் நாள், மறுபடியும் மெஹர் பாபா மண்டலி அனைவரையும் மேல் மாடியில் அவரது அறைக்கு அழைத்து, "**நாம் தினமும் மாலை வேளையில், குறைந்தது ஒரு மணி நேரமேனும் ஒதுக்கி, மன்ஸிலில் அவரவர் உள்விவகாரங்கள் மற்றும் பிரச்சினைகளைப் பற்றிப் பேசவேண்டும். மேலும் பொழுதுபோக்குக்காக, சிறிது நேரம் செலவிட வேண்டும்**" என்றதும், அதை அனைவரும் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். அதற்காக சில சட்டதிட்டங்கள் வகுக்கப்பட்டு அந்தக் கூட்டத்திற்கு 'கட்டா' சத்திரம் (GUTTA - மக்கள் மன்றம்) எனப் பெயரிடப்பட்டது.

ஒவ்வொரு அங்கத்தினரும் அவரவர் எண்ணத்தை வெளிப்படையாக எடுத்துரைத்து, அனைத்து விவகாரங்களிலும் சுதந்திரமாக வாக்களிக்க உரிமையளிக்கப்பட்டது. டாக்டர் கனி, செயலாளராக நியமிக்கப்பட்டு நடவடிக்கைகளைப் பதிவு செய்துவந்தார். அதே வேளையில் மெஹர் பாபா தலைவராக இருந்தார். பிற அங்கத்தினரின் கருத்துக்கள் எதுவாயினும், அச்சமின்றி ஆலோசனைகளைத் தெரிவிப்பதில் ஆட்சேபனை எதுவுமில்லை. குறுக்குப் பேச்சுக்கு இடமில்லை. ஒவ்வொரு பேச்சாளரும் தலைவரின் அனுமதியைப் பெற வேண்டியது அவசியம். சாதாரணமாக, மது போதையில் சத்திரத்தில் சத்தமிடும் நிலைமை போல் இங்கே இருக்கக்கூடாது என்ற எண்ணத்தில் பாபா கண்டிப்பாக இருந்தார். பேச விரும்பும் ஒவ்வொருவரும் பாபா முன் கையை உயர்த்த வேண்டும். இவ்வாறு, மெஹர் பாபா அலுவலகத்தின் அதிகாரபூர்வமான அமைப்பை மன்ஸிலில் நிறுவினார்.

மெஹர் பாபாவின் பள்ளிப் பருவ நண்பன் பெய்லி 'கட்டா' சத்திரத்தைப் பற்றி இவ்வாறு விளக்கினார்:

அனைத்து விதமான விவாதங்களும் 'கட்டா' சத்திரத்தில் இடம்பெற்றன. எவரேனும், ஏதேனும் கூறவிரும்பினால் - முக்கியமான, அல்லாத, உலக சமாச்சாரங்கள், அல்லது ஆன்மீக ரீதியான விஷயங்கள், நெருங்கியவர்கள் மற்றும் அல்லாதவர்களைப் பற்றி - எதுவாக இருந்தாலும், வெளிப்படையாக, சுதந்திரமாக, ஒளிவுமறைவின்றி தயக்கம், கூச்சம், அல்லது பயம் இவற்றிற்கு இடந்தராமல் குரல் கொடுக்க முடிந்தது.

அனைவருக்கும் பாபாவைப் பற்றிய விஷயங்களைப் பேசும் அளவுக்கு, பேச்சு சுதந்திரம் வழங்கப்பட்டது - பாபாவை எதிர்த்து, அவருடைய உத்தரவுகள், கருத்துக்கள் அல்லது அவரின் சொற்கள், செயல்கள் மன அளவில் எவரையேனும் காயப்படுத்தி இருந்தால், அதைக் குறையாக முறையிட உரிமை

வழங்கப்பட்டது. இப்படி அனைத்து பிரச்சினைகளுக்கும் **கட்டா** சத்திரத்தில் வெளிப்படையாகப் பேச இடம் கொடுக்கப்பட்டது.

உரையாடல்கள் பெரும்பாலும் சூடான விவாதங்களாக உருவெடுத்தன. எப்போதேனும், சூழ்நிலைகள் கட்டுப்பாட்டை மீறும் தருணத்தில், பாபா தலையிட்டு, பிரச்சினைகளை சரி செய்து, ஒழுங்கு முறையை நிலைநாட்டினார். இதர வேளைகளில், பாபா அமைதியாக அமர்ந்து, புன்முறுவலுடன், நடவடிக்கைகளை ரசித்துக் கொண்டிருந்தார். விவாதத்திற்குப் பின்பு, மெஹர் பாபா அவருடைய கருத்தைத் தெரிவிக்க, விவாதம் தொடரப்பட்டு, கடைசியில் பெரும்பாலோரின் முடிவுக்காக வாக்கெடுப்பு நடைபெற்றது. சில நேரங்களில் அந்த முடிவு பாபாவின் விருப்பத்திற்கு இணக்கமாக இல்லாவிடில் அவருடைய இறுதி முடிவை வெளிப்படுத்துவது வழக்கம். அனைவரும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

'கட்டா' சத்திரத்தில் இரண்டு விதிகள். அவற்றை, அனைவரும் எப்போதும் பின்பற்ற வேண்டிய கட்டாயம். முதலாவதாக, விவாதத்தின் போது உணர்ச்சி வசப்பட்டு சீற்றமடைந்தால், மக்கள் மன்றத்திற்குத் தகாத, தீய வார்த்தைகளை உபயோகிக்கக் கூடாது. பிறர் மனதைப் புண்படுத்தி, அவமதித்து, கீழ்ப்படுத்திப் பேசும் வார்த்தைகளை முற்றிலும் தவிர்க்க வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் விவாதங்கள் தீவிர திருப்பத்தை எட்டக்கூடாது. இதயத்தில் தவறான உணர்வின் எந்தத் தடயமும் இருக்கவோ அல்லது பிறரிடம் பகைமை உணர்வை வெளிப்படுத்தவோ கூடாது. இரண்டாவதாக, 'கட்டா' சத்திரத்தில் விவாதிக்கும் எந்த விஷயமும், எடுக்கும் எந்த முடிவும், மேலும் பரிமாறிக்கொண்ட எண்ணங்களும், கருத்துக்களும் மன்ஸிலுக்கு வெளியே எவருக்கும் தெரியக்கூடாது.

1923, ஜனவரி 13, சனிக்கிழமை, முந்தைய இரவு, தான் கண்ட ஒரு கனவை மெஹர் பாபா மண்டலிக்கு எடுத்துக் கூறினார்:

**"மண்டலியுடன் நான் ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தேன். எதிர் திசையிலிருந்து ஒரு நீண்ட ஊர்வலம் வந்து கொண்டிருந்தது. விசாரித்தபோது, அது ஹஸ்ரத் பாபாஜானின் இறுதி யாத்திரை என்று தெரிந்து கொண்டேன். ரயில் பூனா வந்தடைந்ததும் நான் இறங்கி சார் பாவ்டிக்குச் சென்றேன். அங்கே அவர்களை கீழே படுக்கவைத்து, சுற்றிலும் ஒரு பெரிய கும்பல் அவர் காலமாகிவிட்டதாகக் கதறி அழுது கொண்டிருந்தது. நான் எனது கைகளை அவர் முகம் மீது வீசவே, பாபாஜான் கண்களைத் திறந்து எழுந்தார்கள். அனைவரும் பாபாஜான் இறந்துவிட்டதாக நினைத்ததை அவரிடம் எடுத்துக் கூறியபோது, அவர், 'ஆமாம். அது சரிதான் - நான் நிஜத்தில் இறந்து விட்டேன்!' என்று கூறினார்."**

இதைக் கேட்டுக்கொண்டிருந்த அப்துர் ரஹ்மான் (ABDUR REHMAN) வாய்விட்டு சத்தமாக சிரித்தார். பாபா காரணம் வினவியபோது அவர் 'இதே கனவைத்தான் நேற்றிரவு நானும் கண்டேன்' என்றார்.

ஜனவரி 15 அன்று சீடர்களிடையே தற்போது வெளிப்படும் மனச்சோர்வைக் குறித்து மெஹர் பாபா விளக்கம் அளித்தார்:

**"சாதாரணமாக, ஒருவன் ஆன்மீகப் பாதையில் மூன்று கட்டங்களைக் கடந்தாக வேண்டும். முதல் கட்டமாக, இறைவனை அறிந்து, அனுபவப்பூர்வமாக அவரை அடையும் எண்ணத்தில், ஒருவனுக்கு மிகுந்த ஆர்வமும், ஆழ்ந்த ஏக்கமும், பிரகாசமான நம்பிக்கையும், இனிமையான எதிர்பார்ப்புகளையும் அளிக்கும். அதற்குப் பின்னர், இரண்டாவது கட்டமாக, வெறுப்பு, ஏமாற்றம், அக்கறையின்மை மற்றும் தொடர்ந்து துன்பம் விளையும். மூன்றாவதாக, கடைசி கட்டத்தில் இறையுணர்வை அடைவான். இப்போது, அனைத்து மண்டலியும் இரண்டாவது கட்டத்தில் இருக்கிறார்கள். இது நீண்ட காலம் நீடிக்கும். இதைத் தவிர்க்க முடியாது என்பதால் மகிழ்ச்சியுடன் பொறுமை காத்து, கடந்து செல்ல முயற்சி செய்யுங்கள். எக்காரணத்தைக் கொண்டும் என்னை விட்டுச் செல்லாதீர்கள்."**

மெஹர் பாபா, தினமும் ஒரு முறை உணவு உண்பதும், நீர் அருந்துவதும், இரவும் பகலும் வெறும் வயிற்றில் புகையிலையை மென்று கொண்டிருப்பதும் வழக்கமாகி விட்டது. மாலை வேளையில் பல வாளிகளில் வெந்நீர் நிரப்பி, நீராடி வந்தார். டாக்டர் கனி, குஸ்தாஜி இருவரும் இரவில் பாபா தூங்கும் அறையில் இருப்பதுண்டு. அவர்கள் குறிப்பிட்டது போல, மெஹர் பாபா படுக்கையில் புரண்டு புரண்டு இரவில் தூங்குவதே இல்லை. இவ்வித அசாதாரணமான பழக்கத்திலும், மெஹர் பாபா மன்ஸிலில் பிறரைவிட அதி சுறுசுறுப்பாகவும், விழிப்புடனும் இருந்து அனைத்தையும் கண்காணித்து வந்தார்.

டாக்டர் கனி, இரவில் பாபாவுடன் தனியாக இருக்கும்போது ஆன்மீக விஷயங்களை, துருவித் துருவிக் கேட்பதும், அல்லது மகிழ்ச்சிகரமான மனநிலையில் பாபா தென்படும் வேளையில், கேள்விமேல் கேள்வி எழுப்பி, ஆன்மீக விளக்கங்களை அறிந்து கொள்ளவும் தூண்டுதலாக இருந்தார்.

சில நேரங்களில், டாக்டர் கனி வேண்டுமென்றே உருது மற்றும் பெர்ஸியன் கவிதைகளை, பாபா அதற்கு விளக்கமளிப்பார் என்ற நம்பிக்கையில் எடுத்துரைத்தார். ஒரு பெர்ஸியன் ஈரடி கவிதைக்கு மெஹர் பாபா இவ்வாறு விளக்கமளித்தார்.

அன்பிற்குரியவர் இதயத்தில் அன்பு உதயமாகும்!
விளக்கு எரியாத வரையில் விட்டில் பூச்சி
எப்படி அதில் பைத்தியமாகும்?

பாபா அதை ‘தூண்டிலில் சிக்கிய இரை’யாக எடுத்து விளக்கினார்:

**ஒரு காதலன், காதலி இருப்பதாகக் கருத்தில் கொள்ளுங்கள். இருவரையும் இணைப்பது காதல். இறைவன் எங்கும் நிறைந்திருக்கும் அன்பாக இருந்தாலும், ஒரு விவாதத்தின் நிமித்தம், முதன்முதலில் கடவுள் தனது பக்தனுக்கு, துயரங்களைக் கொடுத்து நேசிக்கிறார் அல்லது தன்வசம் ஈர்க்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்தப் பக்தன் கடவுளின் பிரஸ்தாபத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளாமல், எதிர்த்து, கண்டனம் செய்கிறான். அவ்வாறு எதிர்க்கும் வேளையில், நிலைமை, தற்காலிகமாக சற்று சீரடையும். மறுபடியும் அவரை கடவுள் தன்பக்கம் இழுப்பார். ஆனால், கடவுளைக் காணும் ஆர்வத்தைத் தூண்டுமளவுக்கு அவன் இதயத்தில் அன்பை மலரச்செய்த அடுத்த கணமே காதலன் அலட்சியத்தை வெளிப்படுத்துவான். இவ்வாறு, ஈர்ப்பதும் விலகுவதுமாக நீண்ட நெடிய நேரம் விளையாடி, இறுதியில் இறைநிலையை அடைவதோடு முடிவடையும்.**

அக்கால சத்குரு ஹஃபீஸ் இதைத்தான் இப்படி விளக்குகிறார்:

**மயிரிழையின் ஒரு பக்கம் எனது கையில் இருக்க,**
**மறுபக்கம் எனது நண்பனின் கையில்!**
**பல்லாண்டுகளாக நடந்து கொண்டிருக்கிறது**
**எங்களின் இந்த இழுபறி சண்டை!**

**எந்த அளவுக்கு நீ என்னை நேசிப்பாயோ அந்த அளவுக்கு, சில நேரங்களில் நீ என்னை வெறுக்கவும் செய்வாய்! என் உள்ளன்பால் உன்னை என் வசம் ஈர்க்கும் தருவாயில், உன்னுடைய எதிர்ப்பு அல்லது நிராகரிப்பு, தடையாக இருக்கும். காலப்போக்கில், என் அன்புக்கு நிகரான தீவிரத்துடன் நீ என்னை நேசிப்பாய்! அப்போது, என் அன்பின் தீவிரத்தைத் தளர்த்தி அலட்சியமாக இருப்பேன்.**

**ஒரு குருநாதர் அவருடைய வட்டத்தில் இருக்கும் அனைவரையும் நேசிக்கிறார். சீடர்களுக்கு என்னுடனான தொடர்பு, அவர்கள் எனக்குச் செய்யும் சேவை மற்றும் எதிர்கொண்ட துயரங்களுக்குத் தகுந்தாற் போல, தக்க நேரத்தில், பாபாஜானும், மஹாராஜும் எனக்களித்த இறையன்பின் பொக்கிஷத்தை அவர்களுடன் பகிர்ந்து கொள்வேன். இறைநிலையை அடைய ஒருவருக்கு இருக்கும் ஆர்வம், ஏக்கம் இவற்றைவிட இறைநிலையை அளிப்பதில், அதிகமான ஆர்வம் இறைவனுக்கு இருக்கும் என்ற ஆச்சரியமான உண்மையை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.**

டாக்டர் கனி அல்லது ராம்ஜூ அப்துல்லா இருவரில் ஒருவர், இரவு 9 மணியிலிருந்து நள்ளிரவு வரை, அதற்குப் பிறகு காலை 4 மணி வரை அஸ்பந்தியார் அவர்களும் பாபாவின் அறையில் இரவு கண்காணிப்பாளராகப் பணிபுரிந்து வந்தனர். அஸ்பந்தியார் பகலெல்லாம் கடுமையாக உழைப்பதால்,

அவ்வப்போது கண்களை மூடித் தூங்கிவிடுவதுண்டு. அவ்வாறு தூங்கும்போது, மெஹர் பாபா, கையைத் தட்டி எழுப்பி விழிப்புடன் இருக்குமாறு எச்சரித்தார்.

1923, ஜனவரி இறுதியில், மெஹர் பாபா மற்றும் அவரது மண்டலியைப் பற்றிய அவதூறான விமர்சனங்கள் குஜராத்தி உள்ளூர் செய்தித்தாளில் வெளிவந்தன. சில நாட்களுக்கு முன்பு, சத்குரு உபாஸனி மஹாராஜைக் குறித்தும் அதே பத்திரிகையில் எழுதப்பட்டது. பொதுமக்கள், அதன் மூலம், மெஹர் பாபா மற்றும் அவரைப் பின்பற்றும் நம்பத்தகாத சீடர்கள் கூட்டத்திலிருந்து விலகி இருக்குமாறு எச்சரிக்கப்பட்டனர். செய்தி நிருபரின் விமர்சனங்களுக்கு சற்றும் செவி சாய்க்காமல், மெஹர் பாபா, அதைப் பற்றி எவ்விதமான மறுப்பும், பேச்சு அல்லது எழுத்து மூலமாக, தெரிவிக்கக்கூடாது என்று மண்டலியிடம் கூறிவிட்டார்.

இவ்விதமான எச்சரிக்கைக்குப் பின்னர், ஒரு சில தைரியசாலிகள் மட்டுமே மெஹர் பாபாவை சந்திக்கத் துணிந்து முன்வந்தனர். இவ்வாறு, ஒரு வழியில், உண்மையாகப் பின்பற்றும் பக்தர்கள் மட்டுமே பாபாவை நாடி வந்தது, அவருடைய ஆன்மீகப் பணிக்கு உதவியாக இருந்தது. அவர்கள், நன்மை தீமைகளை நன்கு ஆராய்ந்த பின்னரே தைரியமாக மெஹர் பாபாவை அணுகினர். உண்மையாகச் சொல்லப்போனால், ஒருவர், அவரிடம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

டாக்டர் கனி காலையில் நீண்ட நேரம் தூங்கும் பழக்கத்தைக் கடைப்பிடித்ததால், பாபாவுடன் மன்ஸிலின் பின்புறம் கிரிக்கெட் விளையாடச் செல்வதில்லை. பாபாவும் அவருக்கு விளையாட்டிலிருந்து விலக்களித்து, நீண்ட நேரம் தூங்க அனுமதி அளித்ததால், டாக்டர் கனி மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார். ஆனால் அது குறுகிய காலத்திற்கு மட்டுமே நிலைத்தது. டாக்டர் கனியின் அறை, பின்புற விளையாட்டு மைதானத்தை ஒட்டி, அவருடைய படுக்கை வெளிநோக்கி அமைந்த ஜன்னலின் கீழே இருந்தது. விளையாடும் போது பாபா, கிரிக்கெட் பந்தை, ஜன்னலை நோக்கி வேகமாக வீச, சில நேரங்களில் ஜன்னல் கண்ணாடி சுக்குநூறாக உடைந்தது. டாக்டர் கனி, அதிர்ச்சியில் பயந்து போய், உடைந்த கண்ணாடி வழியாக உற்று நோக்கினார்: “வேண்டுமென்றே இவ்வாறு பந்தை ஜன்னலில் வீசி, கண்ணாடியை உடைக்கும்போது, நான் எப்படித் தூங்க முடியும்?” என்று கோபமாகக் கத்தினார், “ஏதோ நோக்கத்தில் தான் இதைச் செய்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும்” என்றார்.

பாபா உடனே, “**இதற்கு ஒரே வழிதான் உள்ளது. காலையில் எழுந்து, எங்களோடு விளையாடிவிட்டு மதிய வேளையில் சற்று ஓய்வெடுப்பதுதான்!**” என்று கூறினார்.

மன்ஸில்-எ-மீமில் இருந்த ஒவ்வொரு சீடருக்கும், ஆன்மீகப் பாதையில் குருநாதருடன் பயணம் செய்யும் வேளையில் தூக்கம் போன்ற தனிப்பட்ட

சௌகரியங்களுக்கு இடமில்லை, தடைதான் மிஞ்சும் என்பதைக் கற்றுக் கொண்டனர். அன்புள்ளம் படைத்த பிரியமானவரின் பாதையில் அடியெடுத்து வைப்பது அவ்வளவு எளிதல்ல! வாசலில் நுழைந்த பின்பு தொடக்கத்திலிருந்து முடிவுவரை, கஷ்டங்களை அனுபவிக்க வேண்டும். ஆனால், அதே வேளையில் ஆனந்தத்தையும் அனுபவப்பூர்வமாக உணர முடியும். இத்தகைய சிரமங்களும், இறைவனை அடையும் ஏக்கத்தினால் வரும் வலியும் இல்லாத ஆன்மீக வாழ்க்கை, சீடர்களுக்கு வெறுமையாகவே இருக்கும்.

சீடர்களின் பலவீனங்களை ஆயுதமாகப் பயன்படுத்தி, அவருடைய நூதனமான முறையில், கோபம் வரும்வரை கேலியும் கிண்டலும் செய்து, இறுதியில் புன்முறுவலுடன், "**நீங்கள் தோல்வி அடைந்து விட்டீர்கள்!**" என்று குறிப்பிடுவதை வழக்கமான முறையாக பாபா கையாண்டார்.

இது ஒவ்வொரு சீடர்களுடனும் அடிக்கடி நடக்கும் ஒன்று! ஜனவரி 31 அன்று டாக்டர் கனி, இதுபோன்ற தூண்டுதலுக்கு இலக்காக விளங்கினார். அந்த நிகழ்வுக்குப் பிறகு, பாபா, டாக்டர் கனியை அவரது அறைக்கு அழைத்து இவ்வாறு விளக்கமளித்தார்:

**"ஒரு குருநாதர், அவரது நிறையான, அமைதியான அகநிலையில் இருக்கும்போது அல்லது உள்ளார்ந்த ஆன்மீகப் பணி வெற்றிகரமாக நிறைவடையும் தருவாயில், சில நேரங்களில், அவருடைய அகநிலையின் பேரின்பம் தானாகவே பொங்கி வெளிப்படும். அவருடைய அகநிலையின் பிரதிபலிப்பு, திடீரென எழுச்சி பெற்று மிகுந்த கோபமாக வெளிப்படும்; அது அவரது அகநிலையின் ஆனந்த அனுபவத்திற்கு எதிர்மாறாக இருக்கும்.**

**"வெளியளவில், அதன் விளைவு, வசைமொழியாகவும், உரத்த குரலில் கத்தி அறைவது போலவும் இருக்கும். ஆனால் யாரொருவர் ஒரு சத்குருவின், இதுபோன்ற அகந்தையை சிதறடிக்கும் ஆசிகளைப் பெறுகிறாரோ அவர் மிகவும் அதிர்ஷ்டசாலி ஆவார். ஏனெனில், இத்தகைய கடுமையான சொற்களால் திட்டுவதும், உடலளவில் துன்புறச் செய்வதும், அற்புதங்களை நிகழச் செய்து, கற்பனைக்கு எட்டாத பலனை விளைவிக்கும்.**

**"என்னுடைய சீடர்களாகிய உங்களோடு என் அணுகுமுறை முற்றிலும் மாறுபட்டிருக்கும். உங்களுக்கு என்னுடன் உள்ள தொடர்பு - உலகம் உருவான முதல் நாளிலிருந்தே - உறுதியாக, முன்னரே தீர்மானிக்கப்பட்ட ஒன்று; இப்பூவுலகின் எந்த ஒரு சக்தியும் அதை மாற்ற முடியாது. எனவே, திடீரெனக் கோபத்தை வெளிப்படுத்தி, அடித்து உதைப்பது போன்ற செயல்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விட்டேன். ஏனெனில், அவை உங்களைப் பொறுத்தவரையில் தேவையற்றது. ஆனால், ஒருவேளை அப்படி எதுவும் நடந்தால் நீங்கள் அதைப் பொருட்படுத்த வேண்டாம். அவ்வப்போது, என்னுடைய கடினமான வார்த்தைகளைத் தாங்கிக்கொள்ள முடியாவிட்டால் நம் இருவருக்கும் அது தொந்தரவாக இருக்கும். அப்படிப்பட்ட நிலையில் நான் பிறருடன் பழகுவதை**

**நிறுத்திவிட்டு, இரவும் பகலும், ஓர் அறையில் என்னை அடைத்து வைக்க வேண்டியதுதான்!**

**“நான் ஆன்மீகப் பணியில் ஈடுபட்டிருக்கும் அதே வேளையில், இறை இன்பத்தை உள்ளடக்கிய எனது கோப்பை, அடிக்கடி நிரம்பி வழியும். அதை நான் என்னருகில் இருக்கும் அதிர்ஷ்டசாலிகளுடன் பகிர்ந்துகொள்ள விரும்புவேன் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்!”**

1923 பிப்ரவரி 2ஆம் நாள், மெஹர் பாபாவின் ‘ஒரு நாள் - ஒருவேளை உணவு’ உபவாசம் 38ஆவது தினத்தை எட்டியது. அந்த நாள், குஸ்தாஜி, பாபா குறிப்பிட்ட இடத்தில் அவர் உணவை வைக்காததால், மெஹர் பாபா, எரிச்சலில் உணவை வீசி எறிந்தார். **“குஸ்தாஜியின் கவனக்குறைவு காரணமாக இன்றிரவு நான் உணவு உண்ணமாட்டேன்”** என்று அறிவித்தார். மாலையில் அவரது வழக்கமான குளியலையும் மறுத்து விட்டார்.

அதன் பின்னர், அன்றிரவு, குஸ்தாஜி, பாபாவின் அருகிலிருந்தபோது, மெஹர் பாபா, ஆறுதலாக, **“இது உங்கள் குற்றமல்ல! நான் 36 மணி நேரம் உபவாசம் இருக்க விரும்பினேன். அதனால்தான் இந்தப் புயல் வீசியது”** என்று கூறினார்.

39 மணி நேர உபவாசத்திற்குப் பிறகு, மறுநாள் காலை 9 மணிக்கு, பாபா, ஒரு டம்ளர் பழரசம் அருந்தினார். பிறகு கரும்பலகையில் இவ்வாறு ஒரு அறிவிப்பையும் வெளியிட்டார்:

**1923, பிப்ரவரி 15லிருந்து, நான் தேநீர், மோர், ஸோடா போன்ற திரவ பானங்களை மட்டுமே அருந்துவேன். பிப்ரவரி 11-15 வரை கீர்த்தனைகள் மற்றும் பஜனை பாடல்கள் நிகழ்ச்சி நடைபெறும். பிப்ரவரி 15ஆம் நாள் 500 நபர்களுக்கு உணவும், 100 ஏழைகளுக்கு உடையும் வழங்கப்படும்.**

**மேர்வான்.**

சீடர்களுடன், அன்று, மெஹர் பாபா உரையாடிக்கொண்டிருந்தபோது, இறை உணர்வு, சத்குரு மற்றும் அவதார புருஷர் பற்றி விளக்கம் அளித்தார்.

**“இறையுணர்வு ஒன்றே ஒன்று. சத்குருக்கள், மஜ்ஜுப்கள் இவர்களிடையே உள்ள வேறுபாடு என்னவெனில், சத்குருக்களுக்கு அவர்களின் சக்தியைப் பயன்படுத்த அதிகாரம் உண்டு. ஆனால் மஜ்ஜுப்களுக்கு அந்த அதிகாரம் இல்லை. ஒரு சத்குரு, பொறுப்பு மிக்க, தகுதி வாய்ந்த ஒருவரிடம் ஒப்படைப்பது ஆன்மீக சக்தியை அல்ல, அதை பயன்படுத்தத் தேவையான அதிகாரமாகும். ஏனெனில் அந்த சக்தி அவர்களிடம் ஏற்கனவே உள்ளது. ஒரு சத்குருவின் வாழ்நாட்களில், அவர் மிகப்பெரிய உலகளாவிய ஆன்மீகப் பணியில் ஈடுபட்டு, உலகுக்கு நன்மை புரிய முடியும். உடலைத் துறந்த பின்னர், அவர் நித்திய பேரின்பத்தை அனுபவித்தாலும், தனது சக்தியைப் பயன்படுத்த இயலாது.**

“ஒரு சத்குருவின் சமாதியில் ஆன்மீக சக்தி நிரம்பி வழியும். ஆனால் அவர் தனது உடலைத் துறந்த பின்பு, சத்குருவின் மீதான நம்பிக்கை ஒன்றுதான் ஒருவருக்கு அந்த சக்தியைப் பயன்படுத்த வழிவகுக்கும். இக்காரணத்தால்தான், மக்கள் சத்குருவின் சமாதியை வணங்கி பயனடைவர். ஆனால், அவர் மீதுள்ள நம்பிக்கையால் அடையும் அனைத்தும் இயற்கையாக உலகப் பொருட்களை மட்டுமே சார்ந்தது.

“இறைநிலையை அடைந்த குருநாதர், அவரது பௌதீக உடலைத் துறக்கும் வரை மட்டுமே, அகநிலைக்குரிய ஆன்மீக பயன்களை ஒருவரால் அடையப்பெற முடியும். உடலைத் துறந்த பின்னர், ஒரு சத்குரு அல்லது சாதுக்களின் சமாதியிலிருந்து ஆன்மீக நன்மைகளை அடைவது மிகவும் அரிது. தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில், ஆன்மீக நன்மைகளை அளிப்பவர் மற்றும் அடையப்பெறுபவரின் உலகளாவிய தொடர்பு துண்டிக்கப்படும் தருவாயில், குறிப்பாக இவ்விதமான நன்மையைப் பெறமுடியும். இதுபோன்ற நிகழ்வுகள் மிக அரிது! உடலைத் துறந்த ஒரு சாதுவிடமிருந்து அடையும் புறநிலையிலான உலக நன்மைகள் அவரவர் நம்பிக்கையின் அளவைப் பொறுத்து, சகஜமாக நிகழும்.”

“எதுவும் நமக்கு வெளியே இருப்பதில்லை! ஆன்மீகத் தளங்கள், சொர்க்கங்கள், பிரபஞ்சங்கள், பூமிகள், உயிரினங்கள் மற்றும் அனைத்து பொருட்களும் நம்முள்ளே உள்ளன. உள்ளே இல்லாத ஒன்றை குருநாதர் தனது பக்தனுக்கு அளிப்பதில்லை. உள்ளே மறைந்திருக்கும் ஆன்மீகப் பொக்கிஷத்தை, பக்தனின் உணர்வுபூர்வமான அறிவு எல்லைக்குள் கொண்டுவரும் ஊடகமாக அந்த குருநாதர் திகழ்வார்; நம்மில், ஏற்கனவே இருக்கும் பொக்கிஷத்தை நமக்குக் காண்பிப்பார். அவரின் கடமை என்பது அதிகாரத்தைக் குறிக்கும். இதனால்தான், தன்னுள் நிறைந்திருக்கும் எல்லையில்லா பேரானந்தத்தை அனுபவிக்கத் தடையாக இருக்கும் நிலையற்ற தன்னுடலைத் துறந்திட எப்போதும் ஆவலாயிருக்கிறார். ஆரம்பமில்லாத ஆரம்பத்திலிருந்தே, ஆதிகாலத்திலிருந்தே, அந்தந்த காலகட்டத்தில், திரும்பத் திரும்ப உலகின் ஒரே சத்குருவாக அவதார புருஷர் அவதரிக்கிறார்.

“முழுநிறைவான மானிட உருவில் கடைசியாக வந்த அந்த ஒரே சத்குரு, ரஸூல்-எ-குதா (முஹமது). மௌலானா நியாஸ் அஹமத் கூறுவது போல்: “என் உயிர் நண்பனின் பெயரும், பண்புகளும் ஒவ்வொரு காலகட்டத்திலும் வேறுபடும்; அவன் உருவம் மாறுபடும் - ஆனால் எப்போதும் ஒன்றாக இருப்பது அவன் முகத்தோற்றம் ஒன்றே!”

1923, பிப்ரவரி 4 அன்று காலை சிற்றுண்டி வேளையில் மெஹர் பாபா, குஸ்தாஜியிடம் இவ்வாறு வலியுறுத்திக் கூறினார், “**நான் உடல் நலமின்றி, உணர்வற்று இருந்தாலும் அல்லது நான் மிகவும் ஆபத்தான நிலையில் இருப்பது போலத் தோன்றினாலும், மேலும் எவ்வித உதவிக்காக நான்**

**மன்றாடினாலும், ஒருபோதும் மருத்துவரை அழைக்கக் கூடாது!**" குஸ்தாஜி அதற்குக் கீழ்ப்படிவதாக உறுதியளித்தார்.

மாலை 'கட்டா' சந்திப்பின் போது புது புது விஷயங்கள் எழுப்பப்பட்டன. வரவிருக்கும் பாபாவின் பிறந்தநாளன்று ஒரு நாடகம் அரங்கேற்ற திட்டமிடப்பட்டது. அர்ஜுன், ருஸ்தம், இன்னும் சிலர் அவரவர் திறமையை வெளிப்படுத்த முன்வந்து, குடிபோதையில் இருப்பவர் போல நடித்து அனைவரையும் மகிழ்வித்தனர்.

மாலை 5 மணியிலிருந்து 6 வரை, பல விளையாட்டுகள் விளையாடினர். அன்றிரவு கிளித்தட்டு விளையாட முடிவு செய்து, பாபா ஆரம்பத்தில் நல்ல மகிழ்ச்சிகரமான மனநிலையில் காணப்பட்டார். ஆனால் இரவு 9 மணிக்கு, விளையாட்டுத் தொடங்கும் வேளையில், உற்சாகமின்றி ஏதோ சிந்தனையில் கவலையுடன் இருப்பது போலத் தோன்றினாலும், பாபா விளையாட்டில் பங்கெடுத்தார். முதல் அரை மணிநேரம் விளையாட்டு மும்முரமாக நடைபெற்றது. திடீரென, பாபா முழு வேகத்தில் ஓடி விளையாடும்போது, பாபு சைக்கிள்வாலா மீது மோதியதில் அவரது இடதுகால் கட்டைவிரல் முறிந்தது. வலியால் சிரமப்பட்டு, நொண்டி நடைபோட்டு சாப்பாட்டு அறைக்குச் சென்றார்.

சற்று நேரத்தில் பாபாவின் முகம் வெளிறியது. உடல் பயங்கரமாக வியர்த்தது. அதற்குப் பிறகு பலமுறை வாந்தி எடுத்தார். அவருக்கு மட்டுமே தெரியும் அப்படி ஏன் இவ்வளவு கஷ்டங்கள் அனுபவிக்க வேண்டும் என்று! திரும்பத் திரும்ப பாபா இவ்வாறு கூறினார்: "**நான் சாகிறேன்!... ஓ கடவுளே, நான் சாகிறேன்!... நான் ஒன்று செய்ய நினைக்கிறேன், நடப்பதோ வேறொன்று!**" மன்ஸிலில் நிலவிய குதூகலமான சூழ்நிலை மாறி, பாபாவின் உடல்நிலை குறித்த கவலை தீவிரமடைந்தது.

பாபாவின் அசௌகரியத்தை சீர்படுத்தும் எண்ணத்தில் சீடர்கள் அவர்களுக்குத் தெரிந்த பல வழிமுறைகளைக் கையாண்டாலும், பாபா மருத்துவரை அழைக்குமாறு முணு முணுத்தார். அனைவரும் என்ன செய்வது என்று தவிக்கும் வேளையில், குஸ்தாஜியையும் சேர்த்து (அன்று காலையில் தான் பாபா குறிப்பாக அவரிடம் கூறியிருந்தார்) '**எக்காரணத்தைக் கொண்டும் மன்ஸிலில் மருத்துவரை அழைத்து வரக்கூடாது**' என்று பாபா திட்டவட்டமாகக் கூறியிருந்ததை மறந்து விட்டனர்.

ருஸ்தம், நெர்வஸ் இருவரும் உடனே எலும்பியல் மருத்துவரைத் தேடிச் சென்றனர். அதே வேளை, மன்ஸிலில் சிலர் பாபாவின் காலைத் தடவி, பனிக்கட்டித் துண்டுகளை நெற்றியில் வைத்தனர். திடீரென, பலத்த குளிர் காற்றில் உடல் நடுங்குவது போல, பாபாவின் உடல் படபடத்தது. உடல் வலியும், தசைச் சுளுக்கும் எலும்புகளை ஆட்டிப்படைத்தன. வலியால் துடித்தபோதும் பாபா, "**எனது கால் முறிந்தால் கூட பரவாயில்லை, உள் அதிர்ச்சி என் உயிர் மூச்சைத் தடுத்து, என்னைச் சித்திரவதைச் செய்கிறது. நான் மேற்கொண்ட கடுமையான உபவாசத்திற்குப் பின்னர், என் உடல்**

**இவ்விதமான அதிர்ச்சிகளைத் தாங்க முடியாது!"** மேலும், **"இப்படி நடக்குமென்று எனக்குத் தெரியும்! இது என்னுடைய உட்பணியின் ஓர் அம்சம், எதிர்பார்த்த திசையில் செல்லாமல், எழுச்சியடைந்து பலமடங்கு அதிகமான வேகத்தில் என்னைத் தாக்குகிறது"** என்றார்.

ஒரு மணி நேரத்திற்குப் பின்னர், உள் அதிர்ச்சியின் விளைவு சற்று குறைந்தது. கால் வலியைக் குறைக்க, சீடர்கள் பலவிதமான பரிகாரங்களைக் கையாண்டனர். அவர் அனுபவிக்கும் துயரங்கள் காயத்தின் விளைவு அல்ல என்பதை நிரூபிக்க, பாபா எழுந்து நின்று மன்ஸிலின் மதில் பக்கம் சீராக நடக்கவும் செய்தார்.

அவ்வேளையில் அங்கு அழைத்து வரப்பட்ட எலும்பு முறிவு மருத்துவ நிபுணரை பாபா சந்திக்க மறுத்துவிட்டார். நோயாளியைப் பார்க்காத போதும் மருத்துவருக்கு அவருடைய கட்டணமான 35 ரூபாயை வழங்கியது அவரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. மிகவும் அவசரமான நிலை, உடனே வரவேண்டும் என்ற பதற்றத்தில் ருஸ்தம், நெர்வஸ் இருவரும் மருத்துவரை அழைத்து வர, அப்போது அங்கு எல்லாம் சரியாகிவிட்ட சூழ்நிலையைக் கண்டு, ருஸ்தம், மிகுந்த தடுமாற்றத்தில், 'நோயாளி இப்போது நன்றாக உள்ளார், எந்த சிகிச்சையும் தேவையில்லை' என்று கூறினார்.

அதைக் கேட்ட மருத்துவர், "எதுவாயினும் நான் வந்து விட்டேன்; என்னுடைய கட்டணத்தையும் தந்து விட்டீர்கள்; எனவே, இப்போது நோயாளியை நான் ஒரு முறை பார்ப்பது நல்லது! அவருடைய வலி தற்காலிகமாகக் குறைந்து, சற்று நேரத்தில் மறுபடியும் அதிகமாகலாம். அது மட்டுமல்ல, எனது வருகை ரொம்ப முக்கியம், மிகவும் அவசியம் என்று நீங்கள் தானே கூறினீர்கள்!" என்று முறையிட்டார்.

ருஸ்தம் எப்படி சமாளிப்பது என்று தெரியாமல் தவித்தார். இறுதியில் ருஸ்தம் தர்மசங்கடமான நிலையில் மருத்துவரை அங்கிருந்து திரும்பிச் செல்லுமாறு வேண்டினார். பாபாவின் கால்களை வெந்நீரில் வைத்து, மஞ்சள்தூள் குழம்பால் பூசி, கட்டைவிரலில் கட்டிட்டனர்.

சிறிது நேரத்தில், மன்ஸில்-எ-மீமில் இருந்த பதட்டநிலை மாறி, எந்த ஒரு சம்பவமும் நடக்காதது போலத் தோற்றமளித்தது. பாபா மண்டலியிடம், **"இங்கு நடந்த விபத்தின் அர்த்தத்தை எவரேனும் யூகிக்க முடியுமா?"** என்று கேட்க, ஒவ்வொரு சீடரும் அவரவர் எண்ணத்தை வெளிப்படுத்தினர். ஆனால், எவருடைய யூகமும் சரியாக இல்லை.

அதற்குப் பிறகு, பாபா இவ்வாறு வெளிப்படையாக விளக்கமளித்தார்: **"அஸார் ஸாஹேபைப் பற்றி நான் அடிக்கடி கூறியது உங்களுக்கு நினைவிருக்கும்! அவர் மிகவும் துரதிர்ஷ்டசாலி, மனநிலை பாதிக்கப்படலாம் அல்லது பயங்கரமான மரணத்தை சந்திக்கலாம் என்று! இந்தக் காயமும், உள் அதிர்ச்சியும் அவரால்தான் வந்தது. அவர் சார்பில் நான் தலையிட முயற்சித்தேன், தோல்வியை சந்திக்க வேண்டியதாயிற்று! உங்களோடு ஒப்பிடுகையில் அஸார் ஸாஹேப் அதிர்ஷ்டம் இல்லாதவர்.**

**இன்னும் ஒரு வார காலத்தில் அவருடைய சோக செய்தியை நீங்கள் அறிவீர்கள்!"**

பாபா, அப்போது, ருஸ்தம், நெர்வஸ் இருவரையும் எதிர்கொண்டு, **"என்னுடைய கட்டளைகளை நீங்கள் ஏன் மீறினீர்கள்? மருத்துவரை ஏன் அழைத்து வந்தீர்கள்?"** என்று வினவினார்.

ருஸ்தம் எதிர்ப்புத் தெரிவித்து, "பாபா! ஆனால் நீங்கள் மிகுந்த வலியில் துடிதுடித்துப் போனீர்கள்! நீங்கள் 'சாகிறேன்' என்றும் கூறினீர்கள்!"

பாபா பதிலளித்தார்: **"நான் என் உயிரை இழந்தால் கூட என்னுடைய கட்டளைகளை மீறக்கூடாது! மருத்துவரால் என்ன செய்திருக்க முடியும்? என்னுடைய துன்பங்கள் அஸாருக்காக நான் செய்த உட்பணியால் விளைந்தவை! என்னுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, எந்த சூழ்நிலையிலும் அதைத் தவறாமல் கட்டிக்காப்பது இன்றியமையாதது! என்னுடைய ஆணைகளுக்குக் கீழ்ப்படிவதன் மூலம் மட்டுமே, என்னை நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கச் செய்யமுடியும்! மேலும் என்னை மகிழ்ச்சியாக வைப்பது ஒன்றே எனக்கு நீங்கள் செய்யும் மிகப்பெரிய சேவை!"**

அன்றிரவு, டாக்டர் கனி, பாபாவின் கால்களை அழுத்திக் கொண்டிருந்தபோது, பாபா அவரிடம் சரியாக இரவு 1.30 மணிக்கு ஓய்வெடுக்கச் செல்லுமாறு கேட்டுக்கொண்டார். டாக்டர் கனிக்கு துல்லியமாக 1.30 மணி என்பதை எப்படி அறிவது என்று புரியவில்லை. ஏனெனில் அறையில் கடிகாரம் கிடையாது. எப்படித் தெரிந்து கொள்வது என்று தவித்தார். சற்று நேரம் கழித்து, பாபா தூங்குவது போலத் தோன்றினாலும், ஒரு புறம் புரண்டு சாய்ந்த வண்ணம், நேரம் என்ன என்று கேட்டார். டாக்டர் கனி வெளியே சென்று பார்த்தபோது, நேரம் சரியாக இரவு 1.30 என்பதைத் தெரிந்து பெரிதும் ஆச்சரியமடைந்தார்.

ஒரு முறை, மெஹர் பாபா, 'கட்டா' சத்திர குழுவின் கூட்டத்தில், **"நமக்காக ஒரு 'நீதி வாக்கியம்' அமைக்க வேண்டும்"** என்று கூறினார். அனைவரும் அது தேவையான ஒன்று என ஒப்புக்கொள்ள, பல பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டு நிராகரிக்கவும் செய்தனர். இறுதியில், மெஹர் பாபா, தன்னிச்சையாக, '**சேவகத்தில் லாவகம்**' என்று முன்மொழிய, அனைவரும் ஆர்வத்துடன் ஏற்றுக்கொண்டனர். எனவே, மன்ஸில்-எ-மீமில் இந்த நீதி வாக்கியம் அதிகாரப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. நாளடைவில் '**சேவகத்தில் லாவகம்**' (MASTERY IN SERVITUDE) மெஹர் பாபாவின் ஆன்மீகப் பணியின் சின்னமாகத் திகழ்ந்தது.

பிப்ரவரி 8ஆம் நாள் இரவு டாக்டர் கனி 'கோஸ் அலி'யின் (GHOUS ALI) வாழ்க்கை புத்தகத்தின் ஒரு பகுதியை மெஹர் பாபாவிற்கு வாசித்தார் - அவர் ஷிர்டி சாய் பாபாவைப் போல் ஒரு (முஹமதிய) சத்குரு, கோஸ் இனத்தைச்

சார்ந்தவர். இவர், ஆன்மீகப் பணிக்காக உடல் உறுப்புகளைத் தனித்தனியாகப் பிரிக்கும் திறன் படைத்தவர்.

டாக்டர் கனி பாபாவிடம், இறைநிலையை அடையும் முன்னர், கோஸ் அலி, 19 சத்குருக்களின் (11 முஹமதிய மற்றும் 8 இந்து சத்குருக்கள்) தொடர்பில் வந்ததன் காரணம் என்ன? இத்தனை ஆன்மீக குருநாதர்களை சந்திக்க வேண்டியதன் தேவை என்ன? என்று வினவினார். பாபாவின் பதில்:

**“உண்மையிலே, இறை உணர்வை எப்பொழுதும் ஒரே ஒரு சத்குருவே வழங்குகிறார். ஆனால், சாதாரண உலக உணர்வு மற்றும் இறையறிவை அடைய, சில நேரங்களில் பிற சத்குருக்களையும் சந்திக்க வேண்டிய தேவை உருவாகும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இறையுணர்வை ஒருவருக்கு அளிக்கும் சத்குருவே அவரை உலக உணர்வுக்கும் கொண்டு வருவது வழக்கம்.”**

**“எனது விஷயத்தில், பாபாஜான் எனது முகத்திரையைக் கிழித்தெறிந்து, இறையுணர்வை எனக்கு வழங்கினார்கள். ஆனால், உலக உணர்வு மற்றும் இறை அறிவை அடைய, ஏழு வருடங்கள் நான் உபாஸனி மஹாராஜுடன் இருக்க வேண்டியதாயிற்று!”**

**“சாதாரண உலக உணர்வைத் திரும்பப் பெறும் தருணத்தில், நான் பிற சத்குருக்களின் தொடர்பில் வந்து அவர்களையும் சந்தித்தேன். இவ்வாறு, ஒருவருக்கு இறையுணர்வை அளிக்கும் அல்லது ஒருவரை ஆன்மீகப் பாதையில் வழி நடத்தும் ஒரு சத்குருவை முர்ஷித் அல்லது குருநாதர் என்றழைப்பர். அதேவேளையில், இறையுணர்வைப் பொறுத்தவரையில் அதை ஒரே ஒரு சத்குருவே வழங்குவார்.”**

மேலும் டாக்டர் கனி கேட்டார்: “ஒரு சாதுவை ஆன்மீக அதிகார எல்லைக்குள் ஏற்றுக் கொள்ளும் முன் ‘ஸனத்-எ-விலாயத்’ எனப்படும் அதிகாரப் பத்திரத்தில் கையெழுத்திட வேண்டியதன் தேவை என்ன?” அதற்கு மெஹர் பாபா இவ்வாறு விளக்கம் அளித்தார்:

**“ஓர் ஆவணம் அல்லது பத்திரத்தில் கையெழுத்திடுவது, ஆன்மீக அதிகாரத்தை வெளியளவில் பரிமாற்றம் செய்யும் வழிகளில் ஒன்று. ஸாக்கோரியில் நானிருந்த கடைசி நான்கு மாதங்களில், உபாஸனி மஹாராஜிடமிருந்து என்னுடைய அதிகாரத்தை அடைய, நானும் இவ்வாறு எழுதிக் கொடுத்தேன். என்னுடைய சீடர்களிடமிருந்து அரசாங்க பத்திரம் மற்றும் பிற உடன்பாட்டு பத்திரங்களில் கையெழுத்து வாங்கியது ஸனத்-எ-விலாயத் அளவுக்கு முக்கியத்துவம் இல்லாமல் இருந்தாலும், அதற்கு ஓர் ஆழமான அர்த்தமும் ஆன்மீக முக்கியத்துவமும் இல்லாமலில்லை.”**

**“ஒரு சத்குரு மற்றும் அவருடைய சீடர் இருவருக்குமிடையே நிகழும் ஆன்மீக அதிகார பரிமாற்றத்திற்கு, ஒரு திடமான பொருள், எப்போதுமே வெளியளவில் அதிகார சின்னமாகத் திகழும். முஹமதிய வாலி மற்றும் பீர்கள் இடையே இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்பாளர்களுக்கு ‘அங்கவஸ்திரம்’ என்கிற அடையாளப் பொருளாக**

**ஆடை, தொப்பி, தலைப்பாகை, மேலாடை போன்றவற்றைக் கொடுப்பது வழக்கம்.”**

1923 பிப்ரவரி 11ஆம் நாள், மஹா சிவராத்திரி பண்டிகைக்காக, பூனாவில் வாழும் இந்து பக்தர்கள் மும்பைக்கு அழைக்கப்பட்டனர். அவ்வேளையில், பூனாவில் தொற்றுநோய் பரவி இருந்ததால், அங்கிருந்து வரும் பக்தர்களுக்கு, தங்கும் வசதி மற்றும் தொற்றுநோய் பரவாமல் தடுப்பது பற்றி பாபா கவலை தெரிவித்தார்.

நீண்டநேர ஆலோனைக்குப் பிறகு, வருபவர்களை அருகாமையில் இருக்கும் கடற்கரைக்கு அனுப்பி, நீராடச்சொல்லி, உடைகளை சுத்தம் செய்யுமாறு முடிவெடுக்கப்பட்டது. மேலும், அவர்கள் கொண்டு வந்த பரிசுப் பொருட்கள், உணவு பண்டங்கள் அனைத்தையும் அப்புறப்படுத்திய பின்னரே மன்ஸிலுக்கு அழைத்து வரவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. என்றாலும், அன்றிரவு சதாஷிவ் பாட்டீல், காக் ஸாஹேப் இருவரும் வந்த போது, அவர்கள் அணிந்திருந்த உடையோடு வெந்நீரில் நீராடச் செய்த பின்னரே, பாபா அவர்களை உள்ளே அனுமதித்தார்.

பூனா மண்டலி அடுத்த நாள் காலையில் மும்பை வந்ததும், சௌபாட்டி கடற்கரைக்குச் சென்று, நீராடி, உடைகளை சுத்தம் செய்து வருமாறு அனுப்பி வைத்து, திரும்பி வந்த பிறகு மன்ஸில்-எ-மீமில் அனுமதிக்கப்பட்டனர்.

பிப்ரவரி 13 அன்று மன்ஸிலின் பின்புறத்தில் மஹாசிவராத்ரி மற்றும் மெஹர் பாபாவின் பிறந்தநாள் விழாவுக்காக மிகப்பெரிய பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. பஜனை பாடல்கள் இரவெல்லாம் தொடர்ந்து நடந்தன. அதேவேளை, மெஹர் பாபா, டாக்டர் கனிக்கு, பலவிதமான ஆன்மீகத் தத்துவங்களை மன்ஸிலின் மேலறையில் விளக்கிக் கொண்டிருந்தார்.

மெஹர் பாபாவின் இயற்கை, இயற்கை அல்லாத, மற்றும் இயற்கையைக் கடந்த (தெய்வீக தன்மையுள்ள) கோட்பாடுகளின் இடையேயான வித்தியாசத்தைப் பற்றிய விளக்கம்:

**“இயற்கையின் கொள்கைகளுக்கு இணங்கி செயல்படுவதால் - அதாவது அதற்கு எதிராக செயல்படாமல் - வரும் விளைவுகள் இயற்கையானது. ஆனால், இயற்கையின் கொள்கைகளைக் கடைப்பிடிக்காமல், அதற்கு எதிராகச் செல்வதால் வரும் விளைவுகள் இயற்கை அல்லாதது. இயற்கையின் வழியில் செயல்படும் போது, அதன் விளைவு இயற்கைக்கு மாறானதாக இருந்தால், அதை தெய்வீக தன்மையுள்ளது, இயற்கைக்கு அப்பாற்பட்டது என்று கூறலாம். உதாரணமாக, உணவை வாயால் உண்டு ஆசனவழி மூலம் வெளியேற்றுவது இயற்கை. ஆனால், வாயால் உண்ணும் உணவு மலமாக வெளியேறாமல் இருப்பது இயற்கையைக் கடந்த செயல். வாயால் உணவை உண்ணாமல், ஆசனவழியாக உணவை உண்பது என்பது இயற்கையில் நடவாத ஒன்று!”**

பிப்ரவரி 15 அன்று மும்பையில் வாழும் கண்பார்வையற்றவர் மற்றும் ஆதரவற்றவர்களை தேடி, அழைத்து வருமாறு மெஹர் பாபா உத்தரவிட்டார். ஆனால் இம்முறை ஏழைகள் என்பதில் பாபாவின் ‘நியமம்’ பொதுவாகத் தளர்த்தப்பட்டதால் அவர்களைத் தேடிக் கண்டு கொள்வதில் அவ்வளவு சிரமம் இல்லை. ஏழைகளுக்கு உணவளிக்கும் நிகழ்ச்சி, மாலை நான்கு மணி வரைத் தொடர்ந்தது. ஏறக்குறைய 800 பேருக்கு உணவளிக்கப்பட்டது. சீடர்கள், பாபா கூறியது போல், அவர்களின் 24 மணிநேர உபவாசத்தை இரவு ஒன்பது மணிக்கு நிறைவு செய்தனர். இருப்பினும், மெஹர் பாபா அவருடைய உபவாசத்தைத் தொடர்ந்து, மோர் மட்டுமே அருந்தி வந்தார்.

மன்ஸில்-எ-மீமில் தங்கியிருந்த பூனா மண்டலி மறுநாள் காலையில் திரும்பிச் சென்றனர்.

இவ்வேளையில், ஹைதராபாத்தில் வாழ்ந்து வந்த ஒரு முஸ்லிம் மால்வி அப்துல் வஹீத் (ABDUL WAHID), தனது நண்பர் ஒருவரைத் தேடி மும்பைக்கு வந்தவர், தாதரில் ஒரு மசூதியில் தங்கியிருந்தார். மசூதியில் தியானம் செய்யும் வேளையில், மன்ஸில்-எ-மீமிலிருந்து பிரகாசமான ஒளி வருவதை கவனித்து, அங்கே ஓர் ஆன்மீக ஞானி தங்கியிருப்பதைத் திடமாக உணர்ந்தார். மறுநாள், வழக்கம் போல தியானத்தில் அமர்ந்தபோது, மேலும் பிரகாசமான ஒளிக்கதிர்களைக் காண நேர்ந்தது; அவ்வொளியின் வெளிச்சத்தில் ‘மன்ஸில்-எ-மீம்’ என்று எழுதியிருந்ததையும் பார்க்க முடிந்தது.

அந்த நாள், பிப்ரவரி 16 அன்று, அவர் கண்ட காட்சியை உள்ளடக்க முடியாமல், மன்ஸிலுக்கு வெளியே வந்து மயங்கிய நிலையில், இரவெல்லாம் நடைபாதையில் எவரிடமும் எதுவும் பேசாமல் நின்றுகொண்டிருந்தார்.

அடுத்த நாள், மெஹர் பாபா, தெரியாத ஒருவர் மன்ஸிலுக்கு வெளியே நிற்பதைக் கண்டு, குஸ்தாஜியை அனுப்பி, வாசல் பக்கம் அமைதியாக நின்று கொண்டிருந்த அவரைப் பற்றி விசாரிக்கக் கூறி அனுப்பினார். வஹீத், தான் மசூதியில் தியானம் செய்யும்போது மன்ஸிலிலிருந்து வந்த ஒளியையும், அதனால் அவர் உணர்ந்த, விவரிக்க முடியாத ஆழமான அமைதியையும் எடுத்துக் கூறினார். பாபா உடனே அவரை முன்ஷி ரஹிம் இல்லத்திற்கு அனுப்பி வைத்து, உணவளித்து, மெஹர் பாபாவைப் பற்றிய விபரங்களை அறியச் செய்தார்.

மாலை உணவுக்குப் பிறகு நடந்த ‘கட்டா’ சத்திர கூட்டத்தில் சீடர்கள் இவ்வாறு கேள்வி எழுப்பினர்:

“மால்வி அப்துல் வஹீத் போன்ற வெளியே வாழும் பலர், எப்போதும் உங்களின் தெய்வீக அனுபவங்களையும், அற்புதமான ஒளிகளையும் காண்பதாக, நாங்கள் கேள்விப்படுகிறோம்! அதேவேளை, உங்கள் வட்டத்தின் உறுப்பினர்கள் என்று கூறும் எங்களை ஏன் இருட்டில் வைத்திருக்கிறீர்கள்?”

மெஹர் பாபா அதற்கு, சுருக்கமாக, ஆனால் திருப்திகரமான பதிலை

அளித்தார்:

**“ஒரு மண்ணெண்ணெய் விளக்கைத் தரையில் வைக்கும்போது என்ன நடக்கும்? வெளிச்சம் விளக்கைச் சுற்றிலும் பரவியிருக்கும். ஆனால், விளக்கை ஒட்டியிருக்கும் பகுதி எப்பொழுதும் இருளாகவே இருக்கும். அதுபோலவே என் அருகாமையில் இருக்கும் நீங்களும் இதுபோன்ற உயரிய அனுபவங்களையும், ஒளியையும் காண்பதில் என்ன பயனிருக்கிறது? ஒரு நாள், உங்களுக்கு உண்மையான ஒளியைக் காட்டி, உங்களை நிரந்தரமாக இருளிலிருந்து வெளியே கொண்டுவருவேன். நீங்கள் அதை அடையப்பெற வேண்டாமா?”**

மெஹர் பாபாவின் தாயார் ஷிரீன்மாய், பெரிய தாயார் டவ்லா மாசி, மற்றும் நாஜா, குல்மாய், மெஹராவின் தாயார் தவுலத்மாய் அனைவரும் பாபாவின் பிறந்தநாள் விழாவுக்காக மும்பைக்கு வந்தனர். மன்ஸிலின் மேல்மாடியில் அனைவரும் தங்க, பாபா அவரது அறையைக் காலி செய்துவிட்டு கீழே மண்டலியுடன் தங்கினார்.

மாலையில், டவ்லா மாசி தயார் செய்த உணவு அனைவருக்கும் போதிய அளவில் இல்லாததால் பாபா மிகவும் சீற்றமடைந்தார். டவ்லா மாசி மன்ஸிலுக்குக் கொண்டு வந்த ஊறுகாய் ஜாடிகள், மற்றும் அனைத்து தின்பண்டங்களையும் பாபா ரயில் தண்டவாளம் அருகே வீசி எறிந்தார். மேலும், டவ்லா மாசி சுத்தமான நெய்யில் திராட்சை, பாதாம் அனைத்தும் வறுத்து ரவை செய்து வைத்திருந்தார். அதற்காகப் பணம் கடன் வாங்கவும் செய்தார். இது ஒரு பெரிய குற்றம் என்று கூற இயலாது. அதேவேளை, வேண்டுமென்றே செய்ததும் இல்லை. ஆனாலும், டவ்லா மாசி, மெஹர் பாபாவின் தெய்வீக சீற்றத்திற்கு ஆளானார் என்பதை அனைவரும் புரிந்து கொண்டனர்.

சிறிது நேரத்தில், பாபா அங்கும் இங்கும் வேகமாகப் பாயும் வீர நடையின் கர்ஜனையைத் தவிர மன்ஸில்-எ-மீமில் கடுமையான அமைதி நிலவியது. அங்கிருந்த பெண்மணிகள் அச்சத்தில் மாயமாக மறைந்து கதவுகளை மூடிக் கொண்டனர். பாபா, இத்தனை நாட்கள் உபவாசம் இருந்த பின்னரும், அபார சக்தியுடன் புலியாகப் பாய்ந்தார். இறுதியில், ஒரு பூந்தொட்டியை டவ்லா மாசியை நோக்கி வீச, அவர் அஞ்சி ஓடி மறைந்தார். நல்ல வேளை, பூந்தொட்டி, திசைமாறி அருகிலிருந்த வேலியில் விழுந்து சிதறியது. குள்ளமாக, தடித்த உடலுடன் டவ்லா மாசி, வேலியைத் தாண்டி குதித்த காட்சியைக் கண்டதும் பாபாவின் மனநிலை, கோபம் வந்த அதே வேகத்தில் தணிந்து, புன்முறுவலுடன் டவ்லா மாசியையும், இதர பெண் மணிகளையும் அழைத்து, சற்று நேரத்திற்கு முன்னர் எதுவுமே நடக்காதது போல் அன்புடன் பேசினார்.

ஆனால், மெஹர் பாபாவின் இந்தத் திடீர் எழுச்சிக்கு காரணம் இல்லாமல் இல்லை. ஒரு வாரத்திற்கு முன்னர், அவருடைய கட்டை விரல் உடைந்த அன்று, அஸார் ஸாஹேப் எதிர்கொள்ள இருந்த துரதிர்ஷ்டவசமான

சோக சம்பவம் பற்றி மண்டலிக்கு எடுத்துக் கூறினார். டவ்லா மாசியிடம் கோபத்தில் கொட்டித்தீர்த்த அந்த நாள் தான் அஸார் ஸாஹேபின் கடிதம் வந்தது.

வாக்குறுதி அளித்த பின்னரும், அஸார் ஸாஹேப் 'வேறொரு தொடர்பை' விரும்புவதாக, அதாவது 'வேறொரு குருவை' நாடுவதாகக் கடிதம் எழுதி இருந்தார். மெஹர் பாபாவின் வெளியளவில் தோன்றிய சீற்றத்தின் வெளிப்பாடு, அஸார் ஸாஹேபின் நன்மைக்காக கூட இருக்கலாம். ஆனால் அது டவ்லா மாசி மூலமாகச் செயல்படுத்தப்பட்டது. எதுவாயினும், மெஹர் பாபாவின் இவ்வித கோபத்தைத் தாங்கிக் கொள்ளும் பக்குவத்தால் டவ்லா மாசி பெரிதும் பயனடைந்ததால் அது ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது.

இந்த சம்பவத்திற்குப் பிறகு, மெஹர் பாபா உடனே மாஸாஜியைப் பஜாருக்கு அனுப்பி, பிறந்தநாள் விழாவுக்கு வேண்டிய அனைத்தையும் வாங்கி வரச்சொல்லி, டவ்லா மாசியை மறுபடியும் உணவு தயார் செய்ய வைத்தார்.

மெஹர் பாபாவின் பிறந்தநாள், உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் எதிர்பார்க்கப்பட்டது. கோலாகலமாக நிகழ்ச்சிகள் பிப்ரவரி 19ஆம் நாள் நடத்த முடிவு செய்யப்பட்டிருந்தது. பொழுது விடிந்ததும் அழைக்கப்பட்ட பக்தர்கள் அனைவரும் மன்ஸிலுக்கு வந்தனர். மன்ஸிலைச் சுற்றியுள்ள இடங்களை அலங்கரித்து, பூந்தொட்டிகளும், இளஞ் செடிகொடிகளும் வீட்டில் தொங்கவிடப்பட்டன. சிறப்பான வெல்வெட் இருக்கை ஒன்றை முன்ஷி ரஹிம், பாபாவுக்காக அலங்காரம் செய்து வைத்திருந்தார்.

மெஹர் பாபா பந்தலில் நுழைந்து அனைவருடன் தரையில் அமர்ந்தார். ஏராளமான மலர்மாலைகள் அணிவித்து, நறுமண பூக்களை பாபாவின் முன்னால் மலைபோலக் குவித்து வைத்தனர். பாபா விரும்பாத போதிலும் நண்பர்கள், உறவினர்கள் மற்றும் பாபாவை அறிந்தவர்கள் அருமையான பரிசுகளை வழங்கினர். பாபா அவைகளை அங்கிருந்த மக்களுக்கு அள்ளி வழங்கினார்.

பாபா, அனைவருடனும் உணவில் பங்கெடுத்தார். இவ்வளவு சிறப்பான உணவை தயார் செய்த டவ்லா மாசியை, பாபா பெரிதும் பாராட்டினார். உணவுக்குப் பிறகு மூன்று கவாலி பாடகர்கள் பஜன் கீர்த்தனைகள் பாடி அனைவரையும் மகிழ்வித்தனர்.

அடுத்த நாள், மெஹர் பாபா, தவுலத்மாய் (மெஹராவின் தாயார்), குல்மாய், மற்றும் அவர்களின் மூத்த மகன் ருஸ்தம் மூவரையும் தனியாக சந்தித்தார். பாபா, தவுலத்மாயிடம், **"உங்கள் மகள் பிரோஜாவை (ஃபிரீனி) குல்மாய் மகன் ருஸ்தத்திற்கு மணம் செய்துவைக்க விருப்பமா?"** என்று கேட்டார். தவுலத்மாய் அதற்கு ஆமாம் என்று சம்மதம் தெரிவித்தார்.

அன்று மதிய வேளையில், ருஸ்தம், பிரோஜா இருவருக்கும் பாபா திருமணம் நிச்சயம் செய்து வைத்தது அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

அதற்குப் பிறகு, மெஹர் பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: “**ருஸ்தத்தின் திருமணத்திற்குப் பின்னர், ஏதாவது கிராமத்திற்குச் சென்று சிறிதுநாள் வாழலாம் என்று நினைக்கிறேன்.**”

அதைக்கேட்டு, குல்மாய் தனது எண்ணத்தை பரிந்துரைத்தார்: “அஹமதுநகருக்கு வெளியே அமைந்த, அரன்காவ்ம் கிராமத்திலிருக்கும், எங்களுக்குச் சொந்தமான இடத்திற்கு நீங்கள் ஏன் வரக்கூடாது?”

பாபா தன்னடக்கத்துடன் கேட்டார், “**நீங்கள் ஏன் இதைச் சொல்கிறீர்கள்?**”

குல்மாய், “நீங்கள் அங்கு வரவிருக்கும் செய்தியை கிலோரி ஷா என்கிற சாது ஒருவர் முன்கூட்டியே கூறியுள்ளார்” என்று பதிலளித்தார்.

குல்மாய் சொன்னதை ஒன்றும் அறியாதவர் போல பாவனை செய்து, ‘**அவர்கள் கூறியது எதுவும் புரியவில்லை**’ என்று பாபா கூறினார். குல்மாய் உடனே, நடந்த கதையை விளக்கமாக எடுத்துரைத்தார்:

சில வருடங்களுக்கு முன்னர், எனது கணவர் கய்குஷ்ரு (கான் ஸாஹேப்) அரன்காவ்ம் கிராமத்தின் அருகிலமைந்த ராணுவ முகாம்களுக்கு, ஒளிரும் விளக்குகள் விநியோகம் செய்வதற்கான ஒப்பந்தந்தைப் பெற்றிருந்தார். இது அஹமதுநகரிலிருந்து ஆறு கி.மீ. தொலைவிலிருந்தது. அவர் வியாபாரம் நிமித்தமாக எப்போதேனும் அங்கே சென்று வந்தார்.

முதல் உலகப் போர் முடிந்ததும், அந்த இடத்தை ஒருவர் இராணுவத்திடமிருந்து வாங்கினார். அந்நிலம் சாகுபடிக்கு ஏற்றதாக இல்லாததால், அவர் அதை விற்க முனைந்தார்; ஆனால் அந்தத் தரிசுநிலத்தை வாங்க எவரும் முன்வராததால், அந்நிலத்தின் சொந்தக்காரர், எனது கணவர் கய்குஷ்ருவை அணுக, அவர் தனது பங்குதாரர்களோடு ஆலோசனைச் செய்தார். அவர்களும் அதை, காட்டு நிலம் என்று வாங்க விரும்பவில்லை. எனது கணவர் எனது விருப்பத்தைக் கேட்டபோது, நானும் அது நகரத்திலிருந்து வெகுதூரத்தில் இருந்தது மட்டுமின்றி அங்கே ஒருபோதும் இடம்பெயர்ந்து செல்லமாட்டோம் என்பதால், என்ன செய்வது என்ற வியப்பில் ஆழ்ந்தேன்.

இருப்பினும், எதிர் காலத்தில் அந்த நிலம் ஏதாவது வழியில் பயன்படலாம் என்று நினைத்து, அதை எனது கணவர் வாங்கினார். சில கட்டிடங்கள் வெகு காலம் பராமரிக்கப்படாமல் இருந்ததால் பாழடைந்துபோனது. அதிலிருந்த பயனுள்ள பொருட்களை, கிராமத்தார் திருடிச் சென்றனர். கய்குஷ்ரு ஒரு கிராம தலைவரை நியமித்து, கம்பு போன்ற தானியங்களைப் பயிரிட்டு, அதைப் பார்வையிட நாங்கள் அவ்வப்போது சென்று வந்தோம்.

ஹஸ்ரத் மௌலானா கிலோரி ஷா என்றழைக்கப்பட்ட ஒரு முஹமதிய சாது, அஹமதுநகரில் வாழ்ந்து வந்தார். அவர் அவ்வப்போது எங்கள் இல்லத்திற்கு உணவுக்காக வருவதுண்டு. ஆனால், அவர் வழக்கமாக, தனிமையை நாடினார்; கூட்டத்தை விரும்பியதில்லை. அஹமதுநகரில் மாஸாஜி பணிபுரிந்து கொண்டிருந்த அவ்வேளையில் அந்த சாதுவிற்காக

ரொட்டியும், வெண்ணெயும் எடுத்துச் சென்றார். மேலும் சில நேரங்களில் அவரை நீராட வைப்பதும் உண்டு.”

கிலோரி ஷா அரன்காவ்மிற்கு சென்று, தன் இறுதி நாட்களை அங்கேயே கழிக்கவேண்டும் என்று அடிக்கடி குறிப்பிட்டு வந்தார். உயர் நிலையை அடைந்த ஒருவருக்கு இது தகுந்த இடமல்ல என்று நான் நினைத்து, ‘ஆனால் ஹஸ்ரத், யார் உங்களுக்கு அங்கே உணவு எடுத்து வருவது? மேலும், அந்தக் காட்டில் உங்களை யார் கவனிப்பது?’ என்று கேட்டேன். அதற்கு அவர் முகத்தை சுழித்துக்கொண்டு, ‘இந்த மக்களால் எனக்கு எந்த பயனுமில்லை; அவர்கள் உதவியும் எனக்குத் தேவையில்லை’ என்று கூறினார்.

அங்கே வாழ்ந்த சில வசதி வாய்ந்த கசாப்புக்கடைக்காரர்கள் அவருக்கு மரியாதைச் செலுத்தி, சிறிது நிலமும் வழங்கினர். எனினும், அவர் எங்கள் நிலத்தைத் தேர்ந்தெடுத்து, அங்கே குடியேறப்போவதாக அவர்களிடம் கூறினார். கிலோரி ஷா என்னிடம், ‘எனக்கு உங்கள் நிலத்தில் ஒரு சிறு பகுதியை வழங்கி, அதில் எனக்காக அறை ஒன்றைக் கட்டிக் கொடுங்கள்; அங்கே என்னை அழைத்துச் செல்லுங்கள். மேலும் உபாஸனி மஹாராஜ், மெஹர் பாபா இருவரையும் அழைத்து வாருங்கள். அவ்விடத்தை, அலைந்து திரியும் சாதுக்களின் இருப்பிடமாக மாற்றுங்கள்’ என்று கேட்டுக் கொண்டார். இது எனது கணவரின் உறவினரிடையே பதட்டத்தை உருவாக்கும் என்ற எண்ணத்தில், அவர் கூறியதை கவனிக்காதது போல நடந்து கொண்டேன்.

ஒரு வருடத்திற்குப் பின்னர், ஒரு நாள், நான் ஒரு பழைய வீட்டின் மதில் சுவற்றில் அமர்ந்திருந்ததாகக் கனவு கண்டேன். துணியால் மூடப்பட்டு ஒரு குழந்தை எனது மடியில் தவழ்ந்தது. ஒரு சிலர் என்னுடன் பேசிக்கொண்டிருந்தபோது நான் கீழ்நோக்கிப் பார்த்தேன். மூடப்பட்ட துணியிலிருந்து அக்குழந்தையின் கண்கள் என்னை உற்றுநோக்கியதை நான் கவனித்தேன். அப்போது, எழும்பி அமர்ந்த அக்குழந்தையின் முகத்தில் நான் சாதுவைப் பார்த்ததும், ‘இந்தக் குழந்தை ஹஸ்ரத் கிலோரி ஷா’ என்று கோஷமிட்டேன்.

“அம்மா! எனக்கு அந்த நிலத்தை தரமாட்டேன் என்கிறீர்கள்; நான் எங்கே ஓய்வெடுப்பேன்?” என்று இனிமையான குரலில் முறையிட்டார்.

உடனடியாக எனக்கு அரன்காவ்ம் நிலத்தைக் குறித்த ஞாபகம் வந்ததும், “சரி ஹஸ்ரத்! நான் உங்களுக்கு அதைத் தருகிறேன்” என்று வாக்குறுதி அளித்தேன். நான் அவ்வாறு சொல்லி முடித்ததும் எனது கனவு கலைந்தது.

சாது கிலோரி ஷா, சில வருடங்களாக அந்த அரன்காவ்ம் நிலத்தைக் கேட்டு வற்புறுத்திய விஷயத்தை எனது கணவருக்கு எடுத்துக்கூறி, நான் கண்ட கனவையும் விவரித்தேன். கய்குஷ்ரு அவரின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வதாக உறுதி அளித்தார்.

அடுத்த நாள் கிலோரி ஷா சில பக்தர்களுடன் அரன்காவ்ம் சென்றார். அங்கே ஒரு சிறுபகுதி நிலத்தைத் தேர்ந்தெடுத்து, ‘என்னுடைய சமாதியை இங்கே தயார் செய்யுங்கள்’ என்று அவர்களிடம் கூறினார்.

கிலோரி ஷாவின் இந்த அறிவிப்பு பக்தர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. ‘ஆனால், ஹஸ்ரத்! நகரத்திலிருந்து இவ்வளவு தூரம், சமாதியை தரிசனம் செய்வதற்காக இங்கே யார் வருவார்கள்? மேலும் இது வாழ்வதற்கு உகந்த இடமல்ல!’ என்று பக்தர்கள் மன்றாடினர்.

அப்போது அந்த சாது இவ்வாறு எடுத்துரைத்தார்:

‘நீங்கள் குழந்தைகளைப் போல் இருக்கிறீர்கள். உங்களுக்கு எதுவும் தெரியாது! குறுகிய காலத்தில் இவ்விடம் புனித யாத்திரை ஸ்தலமாக மாறும். ஒரு சிறந்த மனிதர் இங்கே வருவார். இந்த இடம் ஒரு நாள் உலக மக்களுக்குச் சொந்தமானதாக மாறும்! அப்போதுதான் உங்களுக்குப் புரியும் நான் ஏன் எனது சமாதியை இங்கே எழுப்பச் சொன்னேன் என்று!’

ஒரு நாள், நான் சாதுவுடன் அவர் தேர்ந்தெடுத்த இடத்தை பார்வையிடச் சென்றேன். கொத்தனார் ஒருவர் எங்களுடன் வந்து அவ்விடத்தை அளந்து, அந்த சாது கூறியதற்கிணங்க மாற்றங்களைச் செய்தார். அப்போது, சாது என்னை நோக்கி, ‘நான் என் உயிரைத் துறந்ததும், மேளதாளத்துடன் என்னை இங்கே எடுத்து வந்து அடக்கம் செய்யுங்கள்’ என்று கூறினார்.

‘உங்கள் முஹமதிய மதத்தை பின்பற்றுபவர்கள், ஒருபோதும் மேளதாளங்களை அனுமதிக்கமாட்டார்கள்’ என்று நான் மன்றாடினேன்.

அதற்கு சாது இவ்வாறு பதிலளித்தார்: ‘ஆமாம்! அது எனக்குத் தெரியும். நான் சொல்வதை செய்ய வேண்டுமாயின், நீங்கள் அவர்களைத் துரத்தியாக வேண்டும்! எனக்கு ஜாதி மதம் எதுவும் கிடையாது என்று அவர்களுக்குக் கூறுங்கள்.’

கிலோரி ஷா, அப்போது, முடிவாகக் கூறினார்: ‘மெஹர் பாபா விரைவில் இங்கு வரவிருக்கிறார். அவர் வருவதற்கு முன்னர் என்னுடைய சமாதி கட்டப்படவேண்டும். நடக்கவிருக்கும் அனைத்தும் அப்படியே நான் சொல்வது போலவே நடக்கும். நானும் அவருக்கு அவ்வண்ணமே வாக்குறுதி அளித்துள்ளேன்.’

மெஹர் பாபா, குல்மாய் கூறியதைக்கேட்டுப் பெருமகிழ்ச்சி அடைந்தார். மேலும் குல்மாய், அந்த சாதுவின் விருப்பங்களை நிறைவேற்றுவதில் எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை.

குல்மாய், அப்போது பாபாவிடம் அவர் எப்போது அரன்காவ்ம் வருவார் என விசாரித்தார். அதற்கு பாபா புன்முறுவலுடன் நேரடியாக பதிலளிக்காமல், “**நான் வரலாம், வராமலும் இருக்கலாம்.**” என்று கூறினார்.

குல்மாய் உடனே “நீங்கள் கண்டிப்பாக வரவேண்டும்” என்றார். “**பார்க்கலாம். இதற்கிடையில், கிலோரி ஷாவின் சமாதியை அவர் விருப்பப்படி கட்டிவிடுங்கள்**” என பாபா உத்தரவிட்டார்.

வெளியளவில் மெஹர் பாபா இதைத்தான் செய்தார். உள்ளளவில் அவருடைய ஆன்மீகப் பணி தொடர்ந்து, இயற்கை நிகழ்வுகளாக வெளிப்பட்டன. மன்ஸில்-எ-மீமில் தங்கியிருந்தபோது, அவருடைய அடுத்த கட்ட நடவடிக்கை மற்றும் இருப்பிடத்திற்கான அடிப்படை பணியைச் செய்து வந்தது எவருக்கும்

தெரியாது. குல்மாயுடன் நடந்த உரையாடல் மூலமே இது வெளிச்சத்திற்கு வந்தது.

உலக விவகாரங்களில் அவதார புருஷனின் தாக்கம் என்ன என்பதை எவரால் அறிய முடியும்? அவர் விருப்பமின்றி ஓர் அணுவும் அசையாது என்பதுதான் துல்லியமான உண்மை.

அனைத்து விருந்தினர்களும் அடுத்த நாள் விடைபெற்று தத்தமது இல்லங்களுக்குச் சென்றனர். மெஹர் பாபா, மண்டலியிடம் இவ்வாறு குறிப்பிட்டார்: "**நேற்று நீங்கள் அனைவரும் அளவுக்கு அதிகமாக உண்டதை நான் கவனித்தேன். நீங்கள் உண்டு புசித்த உயர்தர உணவு சரியாக ஜீரணிக்க வேண்டும். இல்லையேல் உடலுக்கு ஒத்துக் கொள்ளாது!**" அனைவரும் கடுமையான உடற் பயிற்சியைத்தான் பாபா குறிப்பிடுகிறார் என்ற எண்ணத்தில், உடல் கூனிக் குறுகிப் போனார்கள். மாறாக, "**இதற்கு ஒரே ஒரு பரிகாரம்தான் உதவும். இன்று நாம் அனைவரும் மிகையாக சிரிக்க வேண்டும்! மனம்விட்டு சிரித்தால் உண்ட உணவு ஜீரணமாகும்**" என்ற பாபாவின் நூதனமான யோசனை அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. பல துணுக்கு கதைகளைச் சொல்லி ஆரவாரம் செய்தனர். பாபாவும் அதில் பங்கெடுக்க, அனைவரும் சிரித்து மகிழ்ந்தனர்.

1923, பிப்ரவரி 20 அன்று அறிவிப்பு பலகையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது:

**தினமும் மதியம் 12 மணியிலிருந்து இரண்டு மணி வரை நான் உணவருந்த நேரம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு 24 மணிநேர உபவாசம் பலநாட்கள் தொடரும்.**

**-மேர்வான்**

ஆனால் அடுத்த நாள் மெஹர் பாபா உணவருந்தும் நேரத்தை மதியத்திலிருந்து மாலை 7:00 - 9:00 என மாற்றி, இரவு 9:00லிருந்து மறுநாள் மாலை 7:00 வரை உணவு மற்றும் நீர் எதுவும் உட்கொள்ளப் போவதில்லை என்று தெரிவித்தார்.

மெஹர் பாபா மறுபடியும், வீதிகளில் வாழும் ஆதரவற்ற ஏழைகளை மன்ஸிலுக்கு அழைத்துவர விரும்பினார். பிப்ரவரி 23 அன்று 200 முடமான, கண்பார்வையற்ற ஏழைகளுக்கு உணவளித்து, 50 பேருக்கு புதிய உடையும் வழங்கப்பட்டது.

பாபா, தினமும், மண்டலியின் மனங்களில், அவருடைய உத்தரவுகளுக்கு முழுமையாகக் கீழ்ப்படிதல் எவ்வளவு முக்கியம் என்பதை ஆழமாகப் பதியவைத்தார். மன்ஸிலில் வந்த ஆரம்ப நாட்களில், பாபா, மாறுபட்ட முறையில் பேசினார்: "**உங்கள் அனைவரையும், நெய்யை உண்ண வைத்து, கோட்டும் காலுறையும் அணிந்த வண்ணம், கடவுளை அடைய**

**வைப்பேன்!"** அதன் அர்த்தம் என்னவென்றால், உலகத்திலுள்ள அனைத்து வசதிகளையும் தரும் அதேநேரத்தில் இறைநிலையை அடையச் செய்வதாகவும் குறிப்பிட்டார். ஆனால், மன்ஸிலில் வாழ்ந்த கடைசி நாட்களில் நல்ல உணவும் உடையும் இல்லாத அதிருப்தியில் சீடர்கள், கடவுள் நிலையை அடைவது என்பது வெகுதூரம் என்று நினைத்தனர். மன்ஸில்-எ-மீம் அனுபவம் சீடர்களுக்கு ஓர் ஆரம்பம்தான். விரைவில் எதிர் கொள்ளவிருக்கும் கஷ்டங்களைப் பற்றி அவர்களுக்கு எதுவும் தெரியாது.

டவ்லா மாசி, சில தினங்களுக்கு முன்பு, சத்குரு உபாஸனி மஹாராஜை சந்திக்க ஸாக்கோரிக்குச் சென்றிருந்தார். பிப்ரவரி 24ஆம் நாள், பாபா மற்றும் மண்டலி முன்னிலையில் அவர் ஸாக்கோரியில் பார்த்ததை எடுத்துரைத்தார்:

"மஹாராஜ் மிகவும் பலவீனமாக உள்ளார். ஒரு சிறிய மூங்கில் கூண்டில் அவரை சிறை வைத்துள்ளார். கடந்த மூன்று மாதங்களில் ஒரு முறை கூட வெளியில் வராமல், உள்ளே அமர்ந்திருக்கிறார். மேர்வானின் பெயரை அடிக்கடி உச்சரிப்பதைக் கேட்கமுடிகிறது..... மேர்வானைப் பார்க்கத் துடிப்பதாகத் தோன்றுகிறது."

குல்மாயும் சமீபத்தில் ஸாக்கோரிக்குச் சென்றபோது, மஹாராஜ் புகார் கூறியதை எடுத்துரைத்தார்: "ஏன் என்னுடைய வாழ்க்கை வரலாற்றுப் புத்தகத்தை மேர்வான் வெளியிட வேண்டும்? அது என்னை, பிரச்சினைக்குள் தள்ளிவிடும். இது நல்லதல்ல! மக்கள் என்னைப் பற்றி அறிவதை நான் விரும்பவில்லை."

மேலும், மஹாராஜ் ஸாக்கோரியில் இருப்பவர்களைப் பற்றிப் புகார் கூறினார்:

"அவர்களிடம் எனக்கு ஆரத்தி நிகழ்த்த வேண்டாம் என்று கூறுங்கள். என்னை எவரும் வணங்கக் கூடாது! மேலும் நான் இந்தக் கூண்டிலேயே சமாதி இருந்து உயிரைத் துறக்கப் போகிறேன்!"

மஹாராஜ் கூறியதைக் கேட்டு குல்மாய் கவலையுடன் வினவினார், "நீங்கள் இவ்வாறு கூண்டில் இருப்பதன் நோக்கம்தான் என்ன?"

சீற்றமடைந்த மஹாராஜ் இப்படி பதிலளித்தார்: "இது உனக்காக! அனைத்து உலகுக்காக! நீ என்ன எதிர்பார்க்கிறாய்? இந்த உலகம் என்னிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறது? ஒருவருடைய கண்பார்வைக் குறையும்போது அவர் கண்ணாடி அணிய வேண்டும். ஆகையால், உலக நன்மைக்காக நான் ஒன்றும் செய்ய இயலாத நிலையில், இதைத்தான் செய்யவேண்டும்."

குல்மாய் அப்போது மன்றாடிக் கேட்டார், "எவ்வளவு காலம் இப்படி இந்தக் கூண்டில் இருப்பீர்கள்?"

மஹாராஜ் எதிர்மறையாக பதிலளித்தார், “நேரம் இன்னும் இருக்கிறது. கூண்டைவிட்டு வெளியில் வரும்போது நான் ஸாக்கோரியை விட்டுச் செல்வேன் அல்லது இப்பூவுடலைக் கைவிடுவேன்.”

இந்தக் கதைகளைக் கேட்டு மெஹர் பாபா சற்று நேரம் அமைதியாக இருந்து, அதற்குப் பிறகு, வெளியளவில் எதிர்மறையான கருத்துக்களை, அவருக்கே உரித்தான முறையில் சீடர்களுக்கு விளக்கினார்:

**வாழ்வதைவிடச் சாவது சிறந்தது;**

**சாவதைவிட அச்சம் சிறந்தது;**

**அச்சத்தைவிட நிறைவு சிறந்தது;**

**நிறைப்பதைவிடச் செய்வது சிறந்தது!**

சீடர்கள் இதைப் புரிந்துகொள்ள முடியாமல் தவித்தனர். பாபா, அவருடைய இணையற்ற வழியில் விளக்கம் அளித்தார்:

“‘**இறப்பு**’ **என்பது சாதாரண உடலின் இழப்பு அல்ல**, ‘**அகந்தையின் உண்மையான இறப்பு**’; அதாவது, **இறப்புக்கு முன்னர்** (அகந்தையை) **இழப்பது இறைவனை அடைய வழி வகுக்கும்**.”

**‘அச்சம்’ என்பதையும் அதன் இலக்கிய ரீதியில் பொருள் கொள்ளக்கூடாது. இறைநிலையை அடைந்த பின்னரும், தானடைந்த இறைநிலையில் இருப்பது அச்சத்தைத் தரும். இதுவே சாதாரண உலக உணர்வை அடைந்த ஒரு சத்குருவின் நிலை. அதை அடைவது சிரமமாக இருந்தாலும், ஆன்மீக ரீதியில் ஒரு மஜ்ஜூபின் நிலையைவிட மிக உன்னதமானது - மஜ்ஜூப், இறை போதையில், எப்பொழுதும் தெய்வீகக் கடலில் மூழ்கியிருப்பார். ‘நிறைவு’ என்பது மக்களின் இதயங்களை இறையறிவு எனும் மதுவால் நிறைப்பது!**

**‘செய்வது’ அல்லது உருவாக்குவது என்பது மிக உயர்ந்த சாதனை. அதாவது பிறரையும் உங்களைப் போல் உன்னதமானவனாக மாற்றுவது! உங்களுக்குச் செய்ததை, பிறருக்கும் செய்வது! பிறரையும் சக்தி, அறிவு, அதிகாரம், கடமை அனைத்திலும் உங்களைப் போல மாற்றுவது! இதுவே அனைத்திலும் உயர்ந்த, உன்னத நிலை, சத்குரு என்ற நிலை.**

**என்னுடைய வார்த்தைகளின் அர்த்தம் என்னவென்றால், கடவுள் நிலையை அடைந்து, கடவுளாக இருப்பது உலக வாழ்க்கை வாழ்வதை விட சிறந்தது. கடவுள் நிலையை அடைந்த பின்னர், உலக உணர்வையும் திரும்பப் பெறுவது, கடவுளாக, அவரோடு ஒன்றியிருப்பதை விட சிறந்தது. இறையன்பால் பிறர் உள்ளங்களை நிறைப்பது**, மனிதநேயம் **குறித்து அக்கறை கொள்ளாமல் இருப்பதை விட சிறந்தது. மேலும், பிறருக்கு இறையுணர்வை அளிப்பது அவர்கள் இதயங்களை இறையன்பால் நிறைப்பதை விட சிறந்தது!**

சத்குரு உபாஸனி மஹாராஜைப் பற்றி மேலும் தகவல்கள் வந்தன. ஷிரீன்மாயும் அவ்வப்போது மும்பை வருவதுண்டு. பிப்ரவரி 25ஆம் நாள்,

மெஹர் பாபா அவர் சார்பில் ஷிரீன்மாயை ஸாக்கோரிக்கு அனுப்பி வைத்தார். 27ஆம் தேதி, மெஹர் பாபாவின் விருப்பப்படி ஷிரீன்மாய் மன்ஸிலுக்கு திரும்பி வந்து அங்கு நடந்ததை மண்டலிக்கு எடுத்துரைத்தார்:

"ஸாக்கோரியில், மஹாராஜ் அவரை அடைத்து வைத்திருந்த கூண்டின் அருகில் நான் சென்றதும், மஹாராஜ், கம்பிகளின் இடைவெளி வழியாக, ஒரு கையால் என்னைப் பிடித்து, மறு கையால் வேகமாக அறைந்தார். எனது கை வளையல்கள் நொறுங்கின. இவ்வாறு, கடுமையாக நடந்து கொள்ளும் முறையை நான் இதுவரை எதிர்கொள்ளாததால், வருத்தத்தில் உடனே ஸாக்கோரியிலிருந்து புறப்படத் தயாரானேன். ஆனால் என்னை ஒரு நாள் அங்கே தங்க வைத்து, மஹாராஜ் நான்கு முறை என்னை அழைத்தார். அவர், என்னை அவதூறாகப் பேசியது மட்டுமின்றி மேர்வான், மற்றும் உங்களில் சிலரையும் சகட்டுமேனிக்கு திட்டி தீர்த்தார். எச்சரிக்கை கலந்த தொனியில் அவர், "உன் மகன், மேர்வான், சத்குருவைப் போல நடிக்கிறான்! ஒரு குருவைப் போல் ஆள்மாறாட்டம் செய்கிறான்!" என்றார்.

குல்மாய், அப்போது உபாஸனி மஹாராஜ் அவரிடமும் எச்சரித்துக் கூறியதை விளக்கினார்:

"மேர்வானிடம் இனிமேல் போகாதீர்கள்! உங்களைத் தவறான வழியில் திசை திருப்புவார்! நீங்கள், நோயுண்ட மரத்தின் இலைகளைப் போல் உதிர்ந்து விடுவீர்கள்! அதன் விளைவாக, கடைசியில் நீங்கள் என்னிடம்தான் வரவேண்டும். உங்களுக்காக, அவனிடமிருந்து விலகி இருங்கள்!"

இதைக் கேட்டு மெஹர் பாபா, மண்டலியிடம்: "**நீங்கள் இதிலிருந்து என்ன புரிந்து கொண்டீர்கள்?** சில **தினங்களுக்கு முன்புதான், உபாஸனி மஹாராஜ், டவ்லா மாசியிடம் என்னைப் பற்றிப் பெருமையாகப் பேசி, என் மீதுள்ள அன்பை வெளிப்படுத்தினார்.**"

சீடர்கள் உடனே, மெஹர் பாபா மன்ஸில்-எ-மீமுக்கு வந்த பின்னர், இதைப் பற்றி மறைமுகமாகத் தெரிவித்ததாகக் கூறினர். பாபா சிரித்துக்கொண்டே, "**இந்த விளையாட்டை நானே ஆரம்பித்தேன். மஹாராஜ், துர்காபாய் மற்றும் ஸாக்கோரியிலிருக்கும் எவரிடமும் எவ்விதமான தொடர்பும் எனக்கில்லை என்று நானே எழுதினேன். நானேதான், எனது தாயாரையும் அவரிடம் அனுப்பி வைத்தேன். இவ்வாறான நடவடிக்கைகளை மஹாராஜ் முன்னமே எடுத்திருக்க வேண்டும்! ஆனால், நான் எழுதிய கடிதம் அவரை இப்போது இவ்வாறு செய்யத் தூண்டியது.**

"**இப்போது நான் இந்த விளையாட்டை ஆரம்பித்ததால், இது என்னோடு முடிவடையாது! அனைத்தும் அவர் கைகளில்தான் உள்ளது! மஹாராஜ் மற்றும் இந்த முழு உலகமும் எனக்கு எதிராக வரும் என்று நான் தொடர்ந்து உங்களுக்குக் கூறியிருக்கிறேன். இது ஆரம்பம்தான். எனவே, ஆயத்தமாக இருங்கள். அனைத்தும் நான் கூறியது போலத் தலைகீழாக மாறும்.**"

இவ்வாறு மறைமுகமான முறையில் மெஹர் பாபா முடித்தார், **“ஒருவருட இடைவெளிக்குப் பின்னர் ஏப்ரல் இப்போது நெருங்குகிறது.”**

மாலை உணவுக்குப் பிறகு, மெஹர் பாபா கீழ்காணும் குறிப்பை, சத்குரு உபாஸனி மஹாராஜுக்கு எழுதி அனுப்புமாறு ஆதியிடம் கேட்டுக்கொண்டார்.

**‘ஸாக்கோரியில் அனைவர் முன்னிலையில் நீங்கள், மெஹர் பாபாவின் தாயாரிடம் கூறிய விஷயங்களை அவர் விரும்பவில்லை. அதிகமான வேலைப் பளுவால் தனது கடமையைச் செய்ய வெறுப்புடன் இருக்கிறார். அனைத்தையும் கைவிடும் எண்ணத்தில் இருக்கிறார்.’**

இக்கடிதத்தை மண்டலி முன்னிலையில் ஆதி வாசித்ததும், மெஹர் பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: **“எச்சரிக்கையாக இருங்கள்! எனக்கும் மஹாராஜுக்கும் இடையே இப்போது நடப்பதை, தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள். அல்லது எங்களின் இந்தக் கடுமையான வார்த்தைகள் உங்களைத் திசை திருப்பாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.”**

ஓர் இரகசிய விளையாட்டு விளையாடப்பட்டது. குருநாதர்களுக்கு மட்டுமே அதன் விளைவு என்ன என்பது வெளிச்சம்.

கூண்டுக் கம்பிகளினுள்ளே மர்மமாக மறைத்திருந்தது
அதுவே அவதார புருஷரின் தவச்சிறை யாக அமைந்தது.

மெஹர் பாபா, மஹாராஜுக்கு எழுதிய கடிதத்தைக் குறித்து மிகுந்த ஆவலுடன் காணப்பட்டார். அடுத்த நாள், ருஸ்தம் ஈரானியை ஸாக்கோரிக்கு அனுப்பி, கடிதத்தை நேரடியாகக் கொடுத்து, மஹாராஜின் பதிலைப் பெற விரும்பினார். ருஸ்தம் திரும்பி வந்து அங்கு நடந்ததை இவ்வாறு விளக்கினார்:

மார்ச் 1 அன்று மாலை நான் ஸாக்கோரிச் சென்றடைந்து, மஹாராஜை தரிசனம் செய்தேன். முன்புபோல் என்னிடம் நன்றாகப் பேசினார். மஹாராஜ் அவரை, மூங்கில் கூண்டில் அடைத்த நேரத்திலிருந்து, கோவில் மணியை இரவு பகலெல்லாம் தொடர்ந்து அடிக்குமாறு உத்தரவிட்டிருந்தார். நான் அங்குச் சென்ற அடுத்த நாள் காலை நான்கு மணிக்கு, பக்தர்கள் எவருமே அங்கு இல்லாததால் தொடர்ந்து இரண்டு மணிநேரம் கோவில் மணியை அடிக்குமாறு என்னைக் கேட்டுக்கொண்டார்.

அதற்குப் பிறகு, நான் மஹாராஜின் தரிசனத்திற்குச் சென்றபோது மஹாராஜின் மனநிலையில் மாற்றம் தென்பட்டது. அதி நுட்பமான முறையில் மஹாராஜ், மெஹர் பாபா மற்றும் மண்டலிக்கு எதிராகப் பேசினார். கூண்டினை நோக்கி அடுத்த அடி எடுத்து வைத்ததும், என்னைக் கண்டித்தது மட்டுமின்றி பாபா மற்றும் மண்டலியை கடுமையாகத் திட்டித் தீர்த்தார். நான் உடனே பின்வாங்கினேன்.

மும்பைக்குத் திரும்பும் முன்னர், கடைசி முறையாக நான் அவரிடம் சென்றபோது, மஹாராஜ் கோபத்தில் வெடித்தார். கடினமாகப் பழித்துப் பேசுகையில் அவர், ‘ஒவ்வொருவரும் அவரவர் வழியில் செல்லட்டும்.

மேர்வான் ஒரு சத்திய புருஷன் அல்ல - எவ்வகையிலும் நான் அவனுக்குப் பொறுப்பல்ல. அவன் வெறும் போலி!' என்றார்.

இந்தத் திடீர் எழுச்சிக்குப் பிறகு, நான் மஹாராஜிடம் வினவினேன்: 'உங்கள் ஆன்மீகப் பணிக்கும் மூங்கிலால் கட்டப்பட்ட இக்கூண்டிற்கும் என்ன சம்பந்தம்? உங்களை நீங்களே சிறை பிடித்து வைத்திருப்பது உங்கள் நன்மைக்காக என்பதை ஏற்றுக் கொள்கிறேன், ஆனால் நீங்கள் இப்படி அவதிப்படுவதை நாங்கள் காண விரும்பவில்லை. நீங்கள் வெளியே வந்து சுதந்திரமாக இருக்கவேண்டும்.'

அப்போது மஹாராஜ் என்னிடம் அந்தக் கூண்டை உடைக்கச் சொன்னார். உடனே நான் மூங்கில் கிளைகளுடன் போராடி ஒன்றை உடைத்தேன். மஹாராஜ் மேலும் கோபமுற்று, சாபமிட்டு அவரைத் தொடக்கூடாது என்று கட்டளையிட்டார். ஒரு தச்சனை வரவழைத்து உடைந்தது உடனே சரிசெய்யப்பட்டது.

மஹாராஜ், அப்போது அமைதியாக வினவினார், 'என்னுடைய கூண்டை நீ ஏன் உடைத்தாய்?'

'நீங்கள் தான் உடைக்க அனுமதித்தீர்கள்' என்று பதிலளித்தேன்.

மஹாராஜ் உடனே, 'மிக்க நன்று! அப்படியானால் நான் சொல்வதை நீ செய்வாயா?' எனக் கேட்டார்.

'நிச்சயமாக' என்றேன்.

அப்போது, அவர், 'அப்படியானால் பெரிய பாறாங்கல் ஒன்றை எடுத்து வந்து, உன் முழு வலிமையையும் சேர்த்து எனது தலை மீது அறைவாயா?' என்று கேட்டு, மெஹர் பாபா மற்றும் மண்டலி மீது தேர்ந்தெடுக்கப்பட்ட சொற்களால் வசைமாரி பொழிந்தார். அந்த நேரத்தில் தச்சன் கூண்டை சரிசெய்து கொண்டிருந்தார். நான் மும்பைக்குத் திரும்பிப் போவதாகச் சொல்வது வரை மஹாராஜ் திட்டிக் கொண்டிருந்தார்.

மெஹர் பாபா, அப்போது கருத்தார்ந்த குரலில் மண்டலியிடம் கேட்டார், **"இன்னமும் நீங்கள் இறுதிவரை என்னுடனிருக்க விரும்புகிறீர்களா? மஹாராஜ் கூறியதை நீங்கள் கேட்டீர்கள். அவர் என்னையும் எதிர்க்கத் தொடங்கிவிட்டார்"** டாக்டர் கனியைத் தவிர அனைவரும் அவர்கள் அளித்த வாக்குறுதியின்படி எந்த சூழ்நிலையிலும் மெஹர் பாபாவை விட்டு விலகுவதில்லை என்று பதிலளித்தனர்.

டாக்டர் கனி சற்று யோசனை செய்து பதிலளிப்பதாகக் கூறினார். பாபா, உடனே சீடர்களை எச்சரித்தார்: "**எந்த சந்தர்ப்ப சூழ்நிலையிலும் என்னுடனே இருக்க வேண்டும். மஹாராஜ், பாபாஜான் அவர்களின் வார்த்தைகள் விளைவிக்கும் தாக்கத்திற்கு இடம் கொடுக்காதீர்கள். என்னை இருவரும் பொது இடங்களில் கண்டனம் செய்ய நேரிடலாம்! ஆனால், இருவரும் என்னுடைய குருநாதர்கள்; இக்காலத்தில் வாழும் மிகப்பெரிய ஆன்மீக ஞானிகள் என்பதில் நீங்கள் உறுதியாக இருக்கவேண்டும். என்னுடைய,**

**இந்த அதிகாரப்பூர்வமான பிரகடனம், எந்த விதிவிலக்கும் இல்லாமல், எதிர் காலத்தில் எந்நேரமும் நிலைத்து நிற்கும்.**"

மெஹர் பாபா அப்போது டாக்டர் கனியின் பக்கம் திரும்பி, "**ஆமாம்! நீ என்ன தீர்மானித்தாய்?**" என்றார்.

டாக்டர் கனி பதிலாக, "நான் இறுதிவரை உங்களுடனே இருப்பேன். அதைப் பற்றி சிந்திக்க எதுவுமில்லை. வேண்டுமென்றே விளையாட்டாக அப்படிச் சொன்னேன்." கனியின் பதிலைக் கேட்டு அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தனர்.

மெஹர் பாபாவின் உபவாசம் 24 மணி நேரத்தில் ஒரு முறை உணவு என்பது நீடித்து 36 மணி நேரமாக மாறியது. 1923 மார்ச் 2ஆம் நாள் அறிவிப்புப் பலகையில் இவ்வாறு எழுதப் பட்டிருந்தது:

**இந்நேரத்திலிருந்து எவரும் வேண்டுமென்றே என் உடலை தொடக்கூடாது.**

-**மேர்வான்**

இந்த அறிவிப்பின் காரணத்தை எவராலும் புரிந்துகொள்ள முடியவில்லை. அனைவரும் தங்களிடையே இதைப் பற்றிப் பேசிக் கொண்டனர்.

இந்த சமயத்தில் பாபா, விஷ்ணுவை அஹமதுநகரிலிருந்து மும்பைக்கு அழைத்தார். மார்ச் 4ஆம் நாள் காலையில் கிரிக்கெட் விளையாடும்போது, ஆதி, விஷ்ணு இருவருக்குமிடையே ஒரு ராஜயுத்தம் நடந்தது. அதில் ஆதி, விஷ்ணுவை வேண்டுமென்றே தாக்கினார்.

அன்று மாலை பாபா அனைவரையும் அழைத்து, பெஹராம்ஜியிடம் விளையாட்டில் நடந்த கலகத்தைப் பற்றி விசாரித்தார். பெஹராம்ஜியும் நடந்ததை எடுத்துக்கூற, பாபா மண்டலியிடம், "**ஆதி 28 கட்டளைகளில் ஒன்றை மீறவில்லையா?**" என்று கேட்டார். சீடர்களில் பெரும்பாலோர் விளையாட்டிலிருந்த உற்சாகத்தைக் காரணம் காட்டி, ஆதிக்கு ஆதரவாகப் பேசினார்கள். பாபா, அதற்கு செவிமடுக்கத் தயாராக இல்லாமல், அனைவர் முன்னிலையிலும், ஆதி கட்டளையை மீறியதாகக் குற்றம்சாட்டி வெகுவாகத் திட்டினார்.

மெஹர் பாபா, அப்போது கோபத்தில் விஷ்ணு பக்கம் திரும்பி, "**நீ செய்த தவறை அனைவர் முன்னிலையிலும் ஒப்புக்கொள்!**" என்றார். சில நாட்களுக்கு முன்பு, விஷ்ணு பாபாவின் பாதங்களைத் தடவி விடும்போது பாலியல் சிந்தனைகள் வந்து தொந்தரவு செய்தன. பாபா, புதிய அறிவிப்பை வெளியிட்டப் பின்னரே விஷ்ணு தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். உடல், மனம் சம்பந்தப்பட்ட எந்த ஒரு சிந்தனை அல்லது செயலையும் பாபாவிடமிருந்து மறைக்க முடியாது என்பதை நன்கு புரிந்துகொண்டார். அப்போதுதான் இதர சீடர்களும் புதிய அறிவிப்பிற்கான காரணத்தை

புரிந்துகொள்ள முடிந்தது. மேலும் பாபா, விஷ்ணு வெளிப்படையாக ஒப்புக்கொண்டதால் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்.

மெஹர் பாபா, அனைவரையும் அனுப்பிவிட்டு ஆதியை மட்டும் அமரச் சொல்லி, அவரிடம், "**என்னுடைய செயல் முறையும் வார்த்தைகளும் உன் இதயத்தைக் காயப்படுத்தினவா?**" என்று கேட்க, 'ஆமாம், பெரிய அளவில்!' என்று ஆதி பதிலளித்தார். அவருக்கு ஆறுதலளிக்கும் முறையில் மெஹர் பாபா இவ்வாறு கூறினார்: "**நடந்த எதைப் பற்றியும் இனிமேல் கவலைப்படாதே! அவமதிப்புக்கான கட்டத்தைக் கடந்து செல்வது உனக்கு நன்மை பயக்கும். குற்றவாளியை இவ்வண்ணம் தலைகுனிய வைப்பது, குற்றத்தினால் உண்டான கறையை அகற்ற இது ஒரு வழி. சத்குரு ராமகிருஷ்ணா ஒரு முறை நெருங்கிய சீடர் விவேகானந்தாவை அவதூறான வார்த்தைகள் கூறி வெளியே அனுப்பினார். ஆனால் திரும்ப அழைத்து ஆறுதல் கூறினார். உன் மீது எனக்கிருக்கும் பிரியம்தான் உன்னைப் பிறர் முன்னிலையில் அவமானப் படுத்தக் காரணமாக இருந்தது. நான் விஷ்ணுவையும் அவ்வாறு நடத்தினேன். இருந்தும் அவன் என் அவமதிப்பைப் புறக்கணித்து அனைவர் முன்னிலையிலும் உண்மையைக் கூறினான்**" என்று கூறி ஆதியை அன்புடன் அரவணைத்தார் பாபா.

அடுத்த நாள், மெஹர் பாபா, டாக்டர் கனி இருவருக்குமிடையே, நீண்டநேர தூக்கத்தைக் குறித்து கடுமையான வாக்குவாதம் உருவானது. பாபா, டாக்டர் கனியை வெளியேறுமாறு கட்டளையிட்டார். ஆனால் கனி 'வெளியேறமாட்டேன்' எனக் கூறி பிடிவாதமாக மறுத்தார். பாபா, உடனே, "**இந்நேரத்திலிருந்து நீ எனது கட்டளைகளுக்கு இணங்குவாயா அல்லது உன் தூக்கத்தின் மீதுள்ள மோகத்தைப் பின்பற்றுவாயா?**" என்று கேட்க, டாக்டர் கனி சிரித்துக் கொண்டே நான் உங்கள் கட்டளைகளை முழுமையாக மதிப்பேன் என்றார். பாபாவும் புன்முறுவல் செய்து, "**வழக்கம்போல் இன்றும் நெடுநேரம் தூங்கியதால், இரவு கண்காணிப்பாளர் பணியை, இரவு இரண்டு மணிவரை செய்யவேண்டும்**" என்று கூறியதும், டாக்டர் கனி மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார்.

அவ்வப்போது, மாலை உணவுக்குப் பிறகு, கவிதை எழுதுவதில் சீடர்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்தினர் - ஆனால், அவர்கள் கவிதைகளில் எதுகை மோனை எதுவுமிருக்காது. மார்ச் 6ஆம் நாள், மெஹர் பாபா ஒரு நகைச்சுவையான கவிதை எழுதுவதில் மும்முரமாக இருந்தார். திடீரென பாபா, "**நான் உடனே கழிவறைக்குச் சென்றாக வேண்டும். ஆனால் கவிதையைப் பாதியில் விட்டுச்செல்ல நான் விரும்பவில்லை**" என்று கூறி சீடர்களில் எவரேனும் அவர் அருகிலிருந்து பாபா கூறுவதை எழுதிக் கொண்டால் சிறப்பாக இருக்கும் என்றார். டாக்டர் கனி, ஆதி இருவரும் விருப்பம் தெரிவித்தனர். அரை

மணி நேரம் இவ்வாறு அருவருப்பான சூழ்நிலையில் கவிதையின் உத்வேகம் அவர்களை வசீகரித்தது!

அனைவரும், இந்த விசித்திரமான நகைச்சுவையைப் பெரிதும் ரசித்தனர்.

இறைநிலையை அடைந்த ஒரு சத்குரு, ஏதேனும் நோக்கமில்லாமல் எதுவும் செய்வதில்லை. ஒருவரின் மிகப்பெரிய தவம் என்னவெனில், ஒரு சத்குருவின் விருப்பப்படி நடப்பது! அவருடைய சலன சித்தங்களை உணர்ந்து, புரிந்து அதற்கு இணங்கியிருப்பது!

ஒரு கண நேர சகவாசத்தில் ஒரு சத்குருவிடமிருந்து நாம் அடைவதும், அவருக்கு அளிப்பதும் ஆயிரம் ஆண்டுகள் தவமிருந்து, கடும் நோன்பு புரிந்தாலும் அதற்கு ஈடாகாது!

ஷிர்டி சாய் பாபா ஒரு முறை இவ்வாறு விளக்கம் அளித்தார்:

ஆன்மீக உள்தளங்களின் பிரதிநிதிகளை அவர் அவருடைய வழக்கமான 'லெண்டி' யாத்திரையின்போது சந்தித்தார். (சாய் பாபா, தினமும் காலைக் கடன்களை கழிக்கச் செல்லும்போது, மேளதாளங்களுடன் கூட்டமாக ஊர்வலம் செல்லும் நிகழ்ச்சியை 'லெண்டி யாத்திரை' என்று குறிப்பிடுவர்). சத்குரு மற்றும் அவதார புருஷர் கழிவறைக்குச் செல்லும் வேளையில், குறிப்பாக இப்பூவுலகம் சம்பந்தப்பட்ட ஆன்மீகப் பணிகளில் ஈடுபடுகின்றனர் என்று கூறப்படுகிறது!

1923, மார்ச் 7ஆம் நாள், ஏறக்குறைய ஏழு மாதங்கள் கடுமையான கட்டுப்பாட்டுடன் மன்ஸில்-எ-மீமில் வாழ்ந்த பிறகு, மெஹர் பாபா சிறிது நேரத்திற்காக வெளியே வந்து, சார்ணி சாலையிலமைந்த முன்ஷி ரஹிம் வீட்டிற்குச் சென்றார். அப்போது, அங்கு வாழ்ந்து வந்த ஸையத் ஸாஹேப் மிகுந்த மனச்சோர்வுடன் இருந்ததால், அவரை உற்சாகப்படுத்தி மகிழ்விக்க, மெஹர் பாபா சீடர்களுடன் அங்குச் சென்றார். சில மணி நேரங்களுக்குப் பிறகு பாபா மன்ஸில் திரும்பி வந்தபோது, உபாஸனி மஹாராஜின் மூன்று சீடர்கள் தூதுவராக வந்து மெஹர் பாபாவுக்காகக் காத்திருந்தனர்.

யஷ்வந்த் ராவ், கோபால் ராவ், திரிம்பக் மூவரும் மஹாராஜின் விருப்பத்தை அறிவுறுத்தி, மெஹர் பாபாவை இணங்கச் செய்து, ஸாக்கோரிக்குத் திரும்பி வருமாறு கேட்டுக்கொண்டனர். பாபா அதற்கு மறுப்புத் தெரிவித்ததால் அவர்களின் முயற்சி வீணாயிற்று! கடைசியில் பாபாவிடம் மன்றாடினர்: "நீங்கள் எங்களுடன் வரவில்லையென்றால், மஹாராஜ், துர்காபாயை அனுப்பி வைப்பார்!" அதற்கும் மெஹர் பாபா இணங்கவில்லை. அடுத்த நாளே மூவரும் ஸாக்கோரிக்குத் திரும்பிச் சென்றனர்.

சத்குரு உபாஸனி மஹாராஜ், மூவரையும் இந்த நோக்கத்தில் அனுப்பி வைத்தார்: "எப்படியாவது மேர்வானை ஸாக்கோரிக்கு அழைத்து வாருங்கள்.

இல்லையேல் நான் ஒருவேளை உணவைக் கூட நிறுத்திவிடுவேன்!" மஹாராஜின் மூன்று சீடர்களும் எவ்வளவோ முயன்றும் மெஹர் பாபாவின் மனம் மாறவில்லை. இது ஒரு கண்ணுக்குத் தெரியாத, புலனாகாத இழுபறி போராட்டமாக இருந்தது. ஆனால் அதே நேரம், இது அவர்களின் உலகளாவிய ஆன்மீகப் பணிக்கான ஊடகமாகவும் இருந்து, மெஹர் பாபாவின் அவதார புருஷன் என்ற உண்மையை நிலைநாட்ட உதவியாக அமைந்தது. சில நாட்களுக்குப் பின்னர் உபாஸனி மஹாராஜ், அவரது முக்கிய பெண்சீடரான துர்கா பாயையும் மன்ஸில்-எ-மீமுக்கு அனுப்பி வைத்தார். அவருடைய வேண்டுகோளையும் மெஹர் பாபா ஏற்றுக் கொள்ளவில்லை.

மெஹர் பாபாவின் பிறந்தநாள் விழாவுக்காக அமைக்கப்பட்டப் பந்தல் இன்னமும் அப்படியே இருந்ததால், அதை மேலும் அலங்கரித்து ருஸ்தம் - ஃபிரீனி இருவரின் திருமண நிச்சயதார்த்தம் நிகழ்ச்சிக்காக மன்ஸில்-எ-மீம் களைகட்டத் தொடங்கியது. இருநூறு சாப்பாட்டு மேசைகள் போடப்பட்டு, கோலாகலமான விருந்து அளிக்கப்பட்டது.

சாப்பாட்டு வேளையில் ஒரு நகைச்சுவையான சம்பவம் நடந்தது. ஒவ்வொரு தட்டிலும் கலை நுட்பத்துடன் கூடிய ஒரு சிறிய துண்டு பார்சோப், உணவுக்குப் பிறகு, கைகளை சுத்தம் செய்வதற்காக வைக்கப்பட்டிருந்தது. அது சாப்பாட்டின் இறுதியில் வாயிலிட்டு மென்று சாப்பிடும் 'மின்ட்' மாதிரி தோற்றமளித்தது. சாப்பாடு நிறைவடையும் நேரத்தில், பாபாவின் மண்டலியில் ஒருவர் அப்துர் ரஹ்மான் அந்தத் துண்டை, பாலாடைக்கட்டி என நினைத்து வாயிலிட்டார். உடனே, வாயிலிட்ட அதே வேகத்தில் வெளியே எடுத்து, ஒன்றும் நடக்காதது போல பாவனை செய்தார். ஆனால், நடந்ததை பிறர் கவனிக்காமலில்லை. சிரிப்புக்கு மத்தியில் இந்தச் செய்தி பாபாவின் காதுகளை எட்டியது. பாபா, அப்துர் ரஹ்மானை அழைத்துக் கேட்டார்: **"எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று உனக்குத் தெரியாதா? பார்சோப்பை நீ ஏன் சாப்பிட்டாய்?"**

தடுமாற்றத்துடன் அப்துர் ரஹ்மான் விளக்கினார், "சில நேரங்களில் விருந்து முடியும்போது ஒரு சிறிய துண்டு பால்கோவா அல்லது இனிப்பு வழங்குவது வழக்கம்.... நான் அதைப் பாலாடைக்கட்டி என நினைத்து வாயிலிட்டேன்."

உடனே, பாபா, அப்துர் ரஹ்மானை மேலும் அசௌகரியபடுத்தும் விதத்தில், மணி அடிக்கச் சொல்லி, அனைத்து மண்டலியையும் அழைத்து, அறிவிப்புப் பலகையில் எழுதியிருந்ததைப் படிக்கச் சொன்னார்.

**இன்றிலிருந்து அப்துர் ரஹ்மானை 'சீஸ்' என்று அழைக்க வேண்டும்**.

**மேர்வான், மார்ச் 9, 1923**

அனைவரும் அங்கிருந்து சென்ற பிறகு, மறுபடியும் மணி ஒலித்தது. மேல்மாடியில் பாபாவின் அறைக்கு மண்டலி சென்றதும், பாபா கரும்பலகையில் எழுதியிருந்ததை வாசிக்கச் சொன்னார்.

**'சீஸ்'** என்ற பெயர் **'பார்சோப்'**பாக மாற்றப்பட்டுள்ளது.

மண்டலியில் ஒருவர் இந்தப் பெயர் மாற்றத்தைப் பரிந்துரைத்தபோது பாபா அதற்கு ஒப்புதலளித்தார். இவருடன் இப்போது மன்ஸில்-எ-மீமில் அதிகாரப்பூர்வமாக ஐந்துபேருக்கு புனைபெயர் வழங்கப்பட்டுள்ளது - ஆஸ்துமா, பைதூல், நெர்வஸ், ஸ்லாம்சன், மற்றும் பார்சோப்.

குல்மாயின் பெரிய மகன் ருஸ்தம் மற்றும் தவுலத்மாயின் மூத்த மகள் ஃபிரீனிக்கும், நிச்சயதார்த்தம் மெஹர் பாபா முன்னிலையில் முறைப்படி நடந்து முடிந்தது. பாபா, ஃபிரீனியை அழைத்து, இனிமேல் ஸாக்கோரிக்குச் செல்லவேண்டாம் எனத் தடைவிதித்து, திருமணம் முடியும்வரை மும்பை, பரேலில் வாழ்ந்து வந்த குல்மாயின் தங்கையுடன் வாழ உத்தரவிட்டார். ருஸ்தம் - ஃபிரீனி இருவரின் நிச்சயதார்த்தம், தவுலத்மாயை மெஹர் பாபாவின் நெருக்கத்தில் கொண்டுவந்தது. மேலும் பாபாவின் மீதுள்ள அளப்பரிய பிரியத்தால் அனைத்தையும் பாபாவிற்கு அர்ப்பணம் செய்தார். மெஹர் பாபாவின் தலையீட்டால் ஒரு மகளுக்குத் திருமணம் நிச்சயமானது. இரண்டாவது மகள் மெஹரா, (அவர் அப்போது ஸாக்கோரியில் வாழ்ந்து வந்தார்) குறுகிய காலத்தில், மெஹர் பாபாவின் தெய்வீக ஒலியில் உருவாகும் அமுத கீதத்தோடு ஒன்றாக இணையவிருந்தார்.

சத்குரு உபாஸனி மஹாராஜின் வாழ்க்கை வரலாற்று புத்தகத்தை, பொதுமக்களிடையே வெளியிட்ட பிறகு, விமர்சகர்கள் பலர் ஒருசில ஆன்மீக ஞானிகளை எதிர்த்து, பெரிய பரபரப்பை ஏற்படுத்தினர். மார்ச் 14ஆம் நாள், மெஹர் பாபாவை எதிர்த்து மேலும் பல கட்டுரைகள் மும்பை செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டன. 'இன்ஸாப்' எனும் குஜராத்தி செய்தித்தாள், பொதுமக்களின் பிரதிநிதிகளை வேண்டிக் கேட்கிற அளவுக்கு இவ்வாறு குறிப்பிட்டிருந்தது: "ஊழல் பேர்வழியும், துர்மார்க்கமுமான மும்மூர்த்திகள் - மெஹர் பாபா, பாபாஜான், உபாஸனி மஹாராஜ் - இவர்களால் விரிக்கப்பட்ட வலையை துண்டுதுண்டாகக் கிழித்தெறிய, கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும்."

மெஹர் பாபா, எதுவாயினும், தனது சீடர்களிடம், அவரையும், அவருடைய குருநாதர்களையும், பாதுகாக்கும் நோக்கத்தில் எதுவும் செய்யக்கூடாது என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார். பத்திரிகை ஆசிரியர்களுக்கு மறுப்புச் செய்தி கொடுப்பதற்கும் தடை விதிக்கப்பட்டது.

இவ்வேளையில், மெஹர் பாபா, அவ்வப்போது அருகாமையில் இருந்த நாடகக் கொட்டகைகளுக்கு மண்டலியுடன் சென்றார். ஆனால் நாடகத்தின் இறுதி வரை பாபா அங்கிருந்தது மிக அரிது. பாபா, அவருடைய உள் ஆன்மீகப் பணிக்காகச் சென்று, அந்தப் பணி நிறைவடைந்ததும் - நாடகம் இடைப்பகுதியில் இருந்தாலும் சரி - இருக்கையிலிருந்து எழுந்து, உடனடியாகப் புறப்படுவது வழக்கம். மண்டலியும் வேறு வழிதெரியாமல், அபூர்வமாக கிடைக்கும் மகிழ்ச்சிகரமான சூழ்நிலையை விட்டுவிட்டு, முடிவு என்னாகுமோ என்ற எண்ணத்தில், பாபாவைப் பின்தொடர்ந்து சென்றனர். ஆனால், மார்ச் 19ஆம் தேதி, பாபா சீடர்களை ஒரு நகைச்சுவை நாடகம் பார்க்க அழைத்துச் சென்றபோது, கடைசியாக திரை மூடுவதுவரை அமர்ந்து, சீடர்களுக்கு எதிர்பாராத மனநிறைவை அளித்தார்.

ஐந்து நாட்களுக்குப் பிறகு, மார்ச் 24ஆம் தேதி, டாக்டர் கனி ஆறு நாள் விடுமுறையை முடித்துவிட்டு மன்ஸிலுக்கு சற்று தாமதமாக வந்தார். மன்ஸிலில் நுழையவிடாமல் தடுத்து, மெஹர் பாபா இந்தச் செய்தியை அனுப்பி வைத்தார்: "**ஆடைகளைக் களைந்து ஒரு காலில் உள்ளாடையுடன் நீரோடையின் அருகில் நிற்கவேண்டும்**." என்ன நடக்குமென்று தெரியாமல், பாபா கூறியது போலச் செய்தார்.

சில சீடர்கள் அவர் பின்னே மறைந்து, வாளிவாளியாக குளிர்நீரை எடுத்து டாக்டர் கனி மீது வீசினர். டாக்டர் கனி கூச்சலிட்டுக் கத்தினார், "பாபா, இந்த விறைப்பிலிருந்து என்னைக் காப்பாற்றுங்கள்! நான், உங்கள் எந்தக் கட்டளைகளையும் மீறவில்லை! எனக்கு உதவுங்கள்!" டாக்டர் கனியின் நிலைமையைக் கண்டு, பாபா மனம்விட்டு சிரித்து, இறுதியில் அவரை மன்னித்து உள்ளே அனுமதித்தார்.

மார்ச் 25 அன்று ஏதோ இனம் புரியாத காரணத்திற்காக, மெஹர் பாபா கடுமையான சீற்றத்தில், மன்ஸிலிலிருந்து வெளியேற விரும்பினார். சீடர்கள் மன்றாடினர், 'நீங்கள் செல்வதானால் நாங்களும் உங்களைப் பின்தொடருவோம்.' பாபா, பெரிதும் அமைதியின்றி காணப்பட்டார். மன்ஸிலின் பின்புறத்தில் சிறிதுநேரம் கீழே சாய்ந்து, எழுந்து ஒரு மணி நேரம் கடுமையான கோடை வெயிலில் நின்று கொண்டிருந்தார். ஒருவரை வெளியே அனுப்பி விக்டோரியா குதிரை வண்டி ஒன்றை வரவழைத்தார். இரண்டாவதாக ஒருவரை, மீண்டும் மூன்றாவதாக ஒரு நபரை வெளியே சென்று விக்டோரியாவை அழைத்து வரக் கூறினார். ஆக, மூன்று விக்டோரியா குதிரை வண்டிகள் வரிசையாக வந்து வாசலில் நின்றன. சீடர்கள் குழப்பத்தில் என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறினர். பாபாவும் விக்டோரியாவில் வெளியே சென்றபாடில்லை. இறுதியில் வாடகையைக் கொடுத்து வண்டிகளைத் திருப்பி அனுப்பி வைத்தனர். பாபா மீண்டும் மன்ஸிலை சுற்றியுள்ள மதில்மேல் ஏறி சாய்ந்து படுத்து ஓய்வெடுத்தார். இவ்வாறு வெளியில் நீண்ட நேரம் இருந்துவிட்டு, இறுதியாக

மன்ஸிலின் உள்ளே வந்து, அமைதியாக மேல்மாடியில் தனது அறைக்குள் சென்றார். அவருடைய செயல்கள் மண்டலிக்கு மர்மமாக இருந்தது.

அன்று மாலை, டாக்டர் கனி எண்ணிப்பார்க்க முடியாத அளவுக்குச் செய்த ஏதோ ஒன்று, பாபாவை மனவருத்தத்தில் ஆழ்த்தியது. டாக்டர் கனியைக் கடுமையாகக் கண்டித்து, '**நீ விரும்பினால் உன் இல்லத்திற்குச் சென்று, இரண்டு மாதங்கள் இருக்கலாம். இல்லையேல் இங்கே தங்கலாம். இங்கே தங்கினால், உன்னைப் பொருட்படுத்தாமல், உன்னிடம் எவ்வித தொடர்பும் வைத்துக்கொள்ள மாட்டேன்**' என்று கூறினார். டாக்டர் கனி இரண்டையும் விரும்பாமல் எந்த பதிலும் கூறாமல் இருந்தார். பாபா, அப்போது: "**நீ இங்கே இருக்கலாம்; ஆனால் ஆரம்பத்தில் அமல்படுத்திய முதல் ஏழு மற்றும் பொதுவான 28 கட்டளைகளைத் தவிர, நான் வேறு புதிய கட்டளைகள் தரமாட்டேன். மேலும், நீ என்னிடம் பேசவோ, எனக்கு எதுவும் எழுதவோ கூடாது! அது தவிர உன் விருப்பப்படி நீ எதுவேண்டுமானாலும் செய்யலாம். ஒரேயடியாக 24 மணிநேரம் தூங்க விரும்பினால் நீ தூங்கலாம்! எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை.**" அதன் பின்னர் இரவில், டாக்டர் கனியை அழைத்து அவரை மன்னித்தார். எதுவாயினும், அவரை நடத்திய முறைக்கு, உரிய காரணத்தை டாக்டர் கனியால் புரிந்துகொள்ள முடியவில்லை.

இந்நேரத்தில், மெஹர் பாபா எங்குச் சென்றாலும் மண்டலியும் அவரைப் பின்தொடர்ந்து செல்லவேண்டும் என்ற அவரது கட்டளை அமலில் இருந்தாலும், அவர் எப்போதேனும் இரண்டு கட்டளைகளைக் கொடுக்க நேர்ந்தால், முதல் கட்டளையை மட்டுமே பின்பற்றவேண்டும் என்பதை அனைவரும் புரிந்து கொண்டனர். ஒரு முறை, பாபா ஏதோ காரணமாக எரிச்சலூட்டும் மனநிலையில் இருந்தபோது, மன்ஸிலை விட்டு வெளியேறி ஸாக்கோரிக்குச் செல்ல இருப்பதாகக் கூறினார். தாதர் ரயில் நிலையத்தை நோக்கி நடந்தபோது, மண்டலியும் அவரைப் பின்தொடர்ந்து சென்றனர். பாபா, பின்னே திரும்பிப் பார்த்து அனைவரையும் மன்ஸிலுக்குச் செல்லுமாறு கூறினார். ஆனால், அவர்கள் திரும்பிச் செல்லாமல், பாபாவைத் தொடர்ந்து சென்றனர். பாபா அதையே மறுபடியும் கூற, சீடர்கள் செவியில் வாங்காதது போல, பாபாவின் பின்னால் சென்றனர். இம்முறை, பாபா அன்புடன் கூறினார், '**சரி! நாம் அனைவரும் மன்ஸிலுக்குத் திரும்பிச் செல்வோம்**' - இவ்வாறு, பாபாவுடன் செல்லும்போது எப்போதும் முதல் கட்டளையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்தினர்.

ருஸ்தம் - ஃபிரீனி இருவரின் திருமண நிச்சயதார்த்த விழாவில், குல்மாய் மறுபடியும் மெஹர் பாபாவை வேண்டிக் கேட்டுக்கொண்டார்: 'நீங்கள் அரன்காவ்மில் வந்து தங்குவது எங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பது போலாகும். உங்கள் முன்னிலையில் அஹமதுநகர் மட்டுமல்ல சுற்றியுள்ள

அனைத்து இடங்களும் தூய்மை பெற்று, பிரசித்தி அடையும்.' அப்போது, மெஹர் பாபா, குல்மாயின் அழைப்பை ஏற்றுக்கொண்டார். ஆனால் அங்கு நிரந்தரமாகத் தங்கப்போவதாக வாக்குறுதி எதுவும் அளிக்கவில்லை.

இரண்டு வாரங்கள் கடந்தன. சில சீடர்களை, தத்தமது இல்லத்திற்குத் திருப்பி அனுப்புவது குறித்து, முதன்முதலாக மெஹர் பாபா பேசினார்: **“இன்னும் சில நாட்களில், மன்ஸில்-எ-மீமை கலைத்துவிடத் தீர்மானித்துள்ளேன். மே மாதம் நடக்கவிருக்கும் ருஸ்தத்தின் திருமணம் முடிந்ததும், நான் அரன்காவ்ம் கிராமத்தில் தங்க உள்ளேன். ஆனால் முற்றிலும் ஒரு வித்தியாசமான முறையில், ஒரு சில சீடர்களுடன் அங்கே இருப்பேன்; மேலும், அவர்கள் கடுமையான இடர்பாடுகளை அனுபவிக்க நேரும்! அரன்காவ்ம் வாழ்க்கை இந்த வாழ்க்கையைவிட முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும். என்னுடன் வாழக்கூடியவர்கள் சாதாரண கூலி வேலைக்காரர்கள் போல் இருக்கவேண்டும்.”**

டாக்டர் கனி, உடனே துடுக்காக, “அப்படியானால் அதை நீங்கள் ஹைரன்காவ்ம் (துன்பங்கள் நிறைந்த கிராமம்) என்றல்லவா அழைக்க வேண்டும்!” என்று கூறினார்.

அவ்வாறு **‘அவரவர் இல்லத்திற்கு அனுப்பப்படும் அனைவரின் தொடர்பும் இப்போது இருப்பது போல் எப்போதும் அப்படியே இருக்கும். மேலும், எதிர் காலத்தில் யார் ஒருவரையும், எப்போது வேண்டுமானாலும் அழைக்கலாம்**' என்று மெஹர் பாபா விளக்கினார். **ஒவ்வொருவரும்** இந்நிலையிலும் அவருக்கு முழுமையான விசுவாசத்துடன் இருப்பதாக உறுதி அளித்தனர்.

மெஹர் பாபா திருப்பி அனுப்ப முடிவு செய்த அனைவருக்கும் இவ்வாறான குறிப்பு அனுப்பப்பட்டது:

ஏற்கனவே அமலில் இருக்கும் 7 சிறப்புக் கட்டளைகளில் 1,2,3,4 மற்றும் 7ஆவது கட்டளைகளைத் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும்.

1. **என்னுடைய ஆன்மீக வழிமுறைகளை அப்படியே பின்பற்ற வேண்டும்.**
2. **ஒருவர் இன்னொருவருடன் அல்லது குழுவிலுள்ள பிறருடன் அல்லது என் ஆணைப்படித் தொடர்பை வைக்க அல்லது முறிக்க வேண்டும்.**
3. **அடுத்த 12 மாதங்களுக்கு முற்றிலுமாக தவிர்க்க வேண்டியவை - மதுபானம் அல்லது போதைப்பொருள் அருந்துவது, மேலும் உடலுறவு, உன் மனைவியுடன், அதுவும் என் அனுமதி இருந்தால் மட்டுமே.**
4. **இந்த மன்ஸிலில் இருக்கும் அனைவருக்கும் ஏற்ப ஒவ்வொருவரும் உணவு உண்பது, பானம் அருந்துவது மற்றும்**

**உடை அணிவது அவசியம். எந்தத் தருணத்திலும் மீன், மாமிசம், முட்டை சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும்.**

7. **எந்த சூழ்நிலையிலும் எனது சகவாசத்தை விட்டு விலகக் கூடாது - முழு உலகமும் எனக்கு எதிராக இருந்தாலும் கூட, நான் உன்னை என்னிடமிருந்து விலக கட்டளை இட்டால் ஒழிய!**

**மேலும் அமலில் இருக்கும் 28 பொதுவான கட்டளைகளில் 1,9,13,14,18,19 மற்றும் 25ஆவது கட்டளைகளை தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும். மேல் குறிப்பிட்ட கட்டளைகள் கீழே வருமாறு:**

1. **தினமும் நீராட வேண்டும். எவரேனும் முடி திருத்தம் செய்து கொண்டால் மீண்டும் ஒரு முறை குளிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.**

9. **முழுத் திருப்தி அடையும் வரை உண்ணாமல் குறைவாக உண்பதில் பூரண தடை விதிக்கப்பட்டுள்ளது. பசி அடங்கும் அளவுக்கு உண்ண முடியாததன் காரணத்தையும், உண்ட பின்னர் அஜீரண கோளாறு இருந்தாலும் உடனே தெரியப்படுத்த வேண்டும்.**

13. **பொய், கீழ்த்தரமான வார்த்தைகள் மற்றும் ஒருவரையொருவர் பற்றிய தவறான உணர்வுகள்** (என்னுடைய கட்டளைகளை மீறும் அளவுக்கு) **அனுமதிக்கப்படமாட்டாது.**

14. **புத்தகங்கள், செய்தித்தாள்கள், பத்திரிகைகள் மற்றும் பிறரின் கடிதங்களை வாசிக்கக்கூடாது.**

18. **தூய்மையற்ற செயல்களைத் தவிர்க்க, பாலியல் சிந்தனைகள் அலைமோதும் வேளையில் எவரையும் தீண்டாதீர்கள். மேலும், அநாகரீகமான கதைகள் மற்றும் உரையாடல்களை தவிர்க்க வேண்டும்.**

19. **தாய் அல்லது சகோதரிகள் தவிர வேறு எந்தப் பெண்மணியையும் தொடக்கூடாது.**

25. **தூங்கச் செல்லும் முன்பு, காதுகளை ஒரு துண்டு துணி அல்லது பஞ்சினால் மூடிக்கொள்ள வேண்டும்.**

மார்ச் 31ஆம் நாள், ஏறக்குறைய அனைத்து மண்டலியையும் அவரவர் வீட்டிற்கு அனுப்பிவிட்டு, மெஹர் பாபா ஒரு சிலருடன் மன்ஸில்-எ-மீமில் இருந்தார்.

இதற்கிடையில், மெஹர் பாபா அவருடைய கட்டளைகளை மீறக்கூடாது என மீண்டும் மீண்டும் எச்சரித்து வந்தபோதும், காஷிநாத் எனும் சலவைத் தொழிலாளி பாபாவின் அறிவுறுத்தல்களைப் புறக்கணித்து வந்தார். பாபா இறுதியாக அவரை எச்சரித்தார்: “**நீ என் உத்தரவுகளை மீறினால், ஒரு குஷ்டரோகி ஆகிவிடுவாய்! இந்த விஷயத்தில் நான் அதி தீவிரமாக,**

**பெருங் கொடியவனாக இருக்கிறேன். என்னுடைய கட்டளைகளை அலட்சியம் செய்யக்கூடாது என்று கடைசி முறையாக எச்சரிக்கிறேன்! உன்னுடைய வழிகளை நீ மாற்றிக் கொள்வதானால் உன்னைப் பொன்னாக மாற்றிவிடுவேன்! என்னுடைய அறிவுரைகளைப் புறக்கணித்தால், நிச்சயமாக நீ குஷ்டரோகத்தால் அவதிப்பட வேண்டியது வரும்!"**

இருப்பினும், காஷிநாத், மெஹர் பாபாவின் தனிப்பட்ட கவனத்தைப் புறக்கணித்தார். அவருடைய குற்றங்களை எப்போதும் மன்னித்து வந்தாலும், மெஹர் பாபாவின் கடைசி எச்சரிக்கையைக் கூட, காஷிநாத் பொருட்படுத்தாமல் இருந்ததால் மெஹர் பாபா, அவருடைய சலவைத் தொழிலை நிறுத்திவிட்டார். இருந்தும், காஷிநாத் தனது தவறான நடத்தையைக் குறித்து பாபாவிற்கு எதுவும் தெரியாது என முட்டாள்தனமாக நம்பி வந்தார். (அவர் அங்குப் பணிபுரிந்து வந்த ஒரு பெண்மணியிடம் பாலியல் விவகாரங்களில் ஈடுபட்டிருந்தார்.) சிறிது காலத்திற்குப் பிறகு, மெஹர் பாபாவின் தொடர்பிலிருந்து விலகியபோது, அவர் முன்பு கூறியது போல, தொழு நோயால் பாதிக்கப்பட்டு பெரும் துன்பத்திற்கு ஆளானார்.

மன்ஸில்-எ-மீமிலிருந்து வெளியேறும் இரண்டு நாட்களுக்கு முன்னர் ஏப்ரல் 17ஆம் நாள், மெஹர் பாபா, நவல் மற்றும் தீனா தலாட்டி இருவரின் திருமணத்தை, சிறப்பாக நடத்திவைத்தார். பாபா, அவர்கள் வீட்டிற்கு, திருமணத்திற்கு சற்று முன்னதாக, குதிரை வண்டியில் சென்று, இருவரையும் வெளியே அழைத்து அன்புடன் ஆசீர்வதித்து, நிகழ்ச்சிகள் எதிலும் பங்கு கொள்ளாமல் மன்ஸில்-எ-மீமுக்குத் திரும்பிச் சென்றார்.

இத்துடன், மன்ஸில்-எ-மீம் வாழ்க்கை நிறைவுக்கு வந்தது.

மன்ஸில்-எ-மீம் வாழ்க்கையைக் குறித்து, சுருக்கமாகச் சொல்லப்போனால்:

- மும்பையில் தங்கியிருந்த பத்து மாதங்களுக்கு முன்பு, மண்டலியுடன் மெஹர் பாபாவிற்கு இருந்த ஈடுபாடு, நல்ல நண்பர்களிடையே இருக்கும் நட்பு போன்றது!
- அவரை குருநாதர் என்று ஏற்றுக் கொண்டவர்கள், அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டியதன் முக்கியத்துவத்தைத் தெரியாமல் இருந்தனர். மன்ஸில்-எ-மீமில் இந்த உறவு முற்றிலும் மாற்றம் கண்டது. சீடர்களுக்கு, மெஹர் பாபா கடவுள், குருநாதர் என்பதை ஆணித்தரமாக அறியவைத்தது மட்டுமின்றி, இறையுணர்வை அடைந்த ஒரு குருநாதருக்கும் சீடர்களுக்கும் இடையே உள்ள உறவு நிலைநாட்டப்பட்டது.
- பல வழிகளில், சீடர்கள், மெஹர் பாபாவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவது, அனைத்திற்கும் மேலானது என்பதைக் கற்றறிந்தனர். எப்போதும், அவருடைய ஆணைகள் எவ்வளவுதான் முக்கியமற்றதாகத்

தோன்றினாலும் ஒவ்வொரு வார்த்தைக்கும் கீழ்ப்படிவதன் அவசியத்தை அவரவர் மனதில் ஆழமாகப் பதியவைத்தார்.

- ஆன்மீக விஷயங்களில் மெஹர் பாபா ஆச்சரியமூட்டும் ஞானத்தை வழங்கினார். ஆதிகாலத்து ஆன்மீகப் புதையல்கள் இமயத்தில் மட்டுமே மறைந்திருப்பதாக சீடர்கள் கனவு கண்டாலும், ஆன்மீக வாழ்க்கை மற்றும் சத்தியத்திற்குப் புத்துணர்வு ஊட்டும் மொத்த உருவமாக மெஹர் பாபா திகழ்ந்தார் என்பதை அனைவரும் புரிந்து கொண்டனர். சீடர்களின் மனங்களில் கொழுந்து விட்டெரிந்த உற்சாகம் இமயமலை உச்சிக்கும் அப்பாற்பட்டது! மெஹர் பாபாவின் ஆன்மீக உட்பாதைகள், மற்றும் தெய்வீக அன்பைப் பற்றிய சொற்பொழிவுகளும், விளக்க உரைகளும் இந்து உள்ளுணர்வின் ஆதாரமான வேதாந்தம் (அதாவது தியானத்தால் உண்மையையும் பரம்பொருளையும் காணலாம் என்ற நம்பிக்கை) மற்றும் இஸ்லாமிய ஸுஃபி பரம்பரை அமைப்பை தெள்ளத் தெளிவாக்கி, ஒவ்வொரு கணமும் சீடர்களின் அறிவொளியை மேலும் மேலும் தெளிவுறச் செய்தன.
- மன்ஸில்-எ-மீமில் வாழ்ந்த சீடர்கள் தங்கள் இல்லங்களிலிருந்து விலகி குடும்பங்களோடு எவ்வித பிணைப்பும் வைத்துக் கொள்ளாமல் இருந்தனர். இதுவரையிலும் நடந்திராத அளவுக்கு, வேறு வேறு மதம் மற்றும் சமுதாயங்களைச் சார்ந்தவர்கள் ஒன்றாக இணைந்து வாழும் வாய்ப்பைப் பெற்றனர்.
- மெஹர் பாபாவின் தோழமையுணர்வு, சீடர்களின் தனிப்பட்ட வேறுபாடுகள், பாரபட்சங்கள், விருப்பு வெறுப்புகளைக் களைந்து, பொதுநல நன்மை மற்றும் வளர்ச்சியைக் கருத்தில் கொள்ள பெரும் தூண்டுதலாக இருந்தது. இந்த வட்ட உருவாக்கக் கட்டத்தில், மெஹர் பாபா, அனைவரையும் கடுமையான பிற்கால பயிற்சிக்காக ஆயத்தப் படுத்தினார். மெஹர் பாபாவுடன் வாழ்ந்த சீடர்களுக்கு, மன்ஸில்-எ-மீம் ஒரு சிறப்பான பயிற்சி மையமாக அமைந்தது.



கவலை

வேண்டாம்,

**Don’t Worry;**

**Be Happy.**

மகிழ்ச்சியாக

இருங்கள்.



-அவதார் மெஹர் பாபா